# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

# ONLINE PROGRAMMES

## முதுகலை தமிழ் (எம்.ஏ.)

### இரண்டாமாண்டு - நான்காம் பருவம்

### தாள்: 205143

# தமிழக வரலாறும் பண்பாடும்

**Author:**

**DR. S. SENTHAMIZHPAVAI,** *Professor & Director, Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi - 630003.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. S. Raja Ram,** *Professor, Department of Tamil, Alagappa University, Karaikudi - 630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi 1100 44
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE12-02/Printing of Course Materials/2020 Dated 30.01.2020 Copies 1000**

## பிரிவு 1: வரலாறு – எல்லைகள்

**கூறு 1** : தமிழகத்தின் இயற்கை அமைப்பு - தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகள் - பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப்பிரிவுகள்.

**கூறு 2** : வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய தமிழகம் - பழங்கற்காலம் - இடைக்கற்காலம் - புதிய கற்காலம் - இரும்புக் காலம்.

**கூறு 3** : தமிழகத்தின் தொன்மை - குமரிக் கண்டம் - சங்ககாலச் சேர - சோழ - பாண்டியர் வரலாறு - சங்க காலச் சமூக நிலை - பெண்டிர் நிலை - கல்வி நிலை.

**கூறு 4** : பண்டைய தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் உள்ள தொடர்பு - பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள்

## பிரிவு 2: களப்பிரர், பல்லவர், சேரர், சோழர், பாண்டியர்,

**கூறு 5** : களப்பிரர் வரலாறு - பல்லவர் தோற்றமும் வரலாறும் - பல்லவர் வீழ்ச்சி - பல்லவர் - ஆட்சிமுறை - கல்வி நிலை - கலைத்தொண்டு - சேரர் தொன்மை - சேரர் வரலாறு.

**கூறு 6** : சோழப் பேரரசின் தோற்றமும் வளர்ச்சியும் - விசயாலயன் முதல் மூன்றாம் இராசேந்திரன் வரை - சோழர்களின் ஆட்சிமுறை - பண்பாட்டு நிலை - கலை வளர்ச்சி - சோழர்களின் கடல் வணிகம்.

**கூறு 7** : முதல் பாண்டியப் பேரரசு - இரண்டாம் பாண்டியப் பேரரசு - பாண்டியர்களின் ஆட்சியியலும் மக்கள் வாழ்வும் - பாண்டியர்களின் வீழ்ச்சியும் இசுலாமியர் வருகையும் - வெளிநாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாடு.

## பிரிவு 3: விசயநகர மரபினர், நாயக்கர், மராட்டியர், ஆங்கிலேயர்

**கூறு 8** : விசயநகர மன்னர்கள் - நாயக்க மன்னர்கள் வரலாறு - நாயக்கர்களின் பாளையப்பட்டு ஆட்சிமுறை - நாயக்கர் வளர்த்த கலையும் இலக்கியமும் தமிழகத்தில் மராட்டியர் ஆட்சி

**கூறு 9** : ஆங்கிலேயர் ஆட்சி தமிழகத்தில் வேரூன்றல் - ஆங்கிலேயர் ஆட்சியில் சமூகநிலை - கல்வி நிலை - பொருளாதார நிலை - ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்த புலித்தேவன் - கட்டபொம்மன் - மருது சகோதரர்கள் - வேலூர்க்கலகம்.

**கூறு 10** : இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களின் பங்கு - ஒத்துழையாமை இயக்கம், உப்புசத்தியாக்கிரகம் - வெள்ளையனே வெளியேறு இயக்கம் - காங்கிரசு - நீதிக்கட்சி - சுயமரியாதை - போன்ற இயக்கங்களின் விடுதலைப் போராட்டப் பணி.

## பிரிவு 4: தமிழகச் சமயங்கள், கலை, நாகரிகம் பண்பாடு

**கூறு 11** : தமிழ்ப் பண்பாட்டில் சமணம் - பௌத்தம் - இசுலாம் - கிறித்தவம் ஆகியவற்றின் பங்களிப்பு

**கூறு 12** : தமிழகக் கலைகள் - கட்டடக்கலை - சிற்பக்கலை - இசைக்கலை - ஓவியக்கலை - மருத்துவக் கலை - நாடகக் கலை.

**கூறு 13 :** நாகரிகம் பண்பாடு விளக்கம் - தமிழர்களின் அற வாழ்வியல் - விருந்தோம்பல் பண்பாடு

**கூறு 14 :** ஆற்றங்கரைப் பண்பாடு - வைகை - காவிரி - பொருநை ஆற்று நாகரிகங்கள்.

## பிரிவு 1: வரலாறு - எல்லைகள்

### கூறு-1 தமிழகத்தின் இயற்கை அமைப்பு, தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகள், பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப்பிரிவுகள்

1.1 முன்னுரை
1.2 குறிக்கோள்கள்
1.3 தமிழகத்தின் இயற்கை அமைப்பு
 1.3.1 தமிழ்நாட்டின் எல்லைகள்
  1.3.1.1 ஆறுகள்
  1.3.1.2 பருவக்காற்றுகள்
  1.3.1.3 மலைத்தொடர்கள்
 1.3.2 போக்குவரத்துடன் கொண்ட தொடர்பு
 1.3.3 அரசியல் அமைப்புடன் கொண்ட தொடர்பு
 1.3.4 சமுதாய வாழ்க்கைமுறையுடன் கொண்ட தொடர்பு
  1.3.4.1 குறிஞ்சி
  1.3.4.2 முல்லை
  1.3.4.3 மருதம்
  1.3.4.4 நெய்தல்
  1.3.4.5 பாலை
 1.3.5 இலக்கியப்படைப்புகளுடன் கொண்ட தொடர்பு
 1.3.6 சமய வழிபாட்டுடன் கொண்ட தொடர்பு
 1.3.7 கலையுடன் கொண்ட தொடர்பு
1:4 தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகள்
 1.4.1 தொல் பொருட் சான்றுகள்
 1.4.2 செப்பேடுகள்
 1.4.3 இலக்கியங்கள்

1.4.4 வெளிநாட்டார் குறிப்புகள்
1:5 பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப் பிரிவுகள்
1:6 தொகுத்துக் காண்போம்
1:7 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**கூறு-2 வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய தமிழகம், பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம்**

2.1 முன்னுரை
2.2 குறிக்கோள்கள்
2.3 வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்
2.4 பழங்கற்காலம்
2.5 இடைக்கற்காலம்
2.6 புதிய கற்காலம்
2.7 இரும்புக்காலம்
2.8 தொகுத்துக் காண்போம்
2.9 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**கூறு-3 தமிழகத்தின் தொன்மை, குமரிக் கண்டம், சங்ககாலச் சேர, சோழ, பாண்டியர் வரலாறு - சங்க காலச் சமூக நிலை, பெண்டிர் நிலை, கல்வி நிலை**

3.1 முன்னுரை
3.2 குறிக்கோள்கள்
3.3 குமரிக்கண்டம்
3.3.1 குமரிக்கண்டம் பற்றி ஆய்வு நடத்தியவர்கள்
3.3.2 குமரிக்கண்டம் இருந்தமையை அறுதியிடும் சான்றுகள்
3.3.3 குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்ட காலம்
3.4 சங்ககாலச் சேர, சோழ, பாண்டியர்
3.4.1 சேரர்
3.4.2 சோழர்
3.4.3 பாண்டியர்
3.5 சங்ககாலச் சமூக நிலை
3.6 சங்ககாலப் பெண்டிர் நிலை
3.6.1 மகளிர் காதல் வாழ்க்கை
3.6.2 இல்லற வாழ்க்கை
3.6.3 பரத்தை நிலை
3.6.4 கைம்மை மகளிர் நிலை
3.6.5 அரசியலில் மகளிர் நிலை
3.7 சங்ககாலக் கல்வி நிலை
3.8 தொகுத்துக் காண்போம்
3.9 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

## கூறு-4 பண்டைய தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் உள்ள தொடர்பு, பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள்

4.1 முன்னுரை
4.2 குறிக்கோள்கள்
4.3 பண்டைய தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் இருந்த தொடர்பு
4.4 பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள்
    4.4.1 அயல்நாட்டுத் தொடர்பை நிறுவும் அகப்புறச் சான்றுகள்
    4.4.2 அகச்சான்றுகள்
    4.4.3 தமிழகம் சுமேரியாவுடன் கொண்ட வாணிகத்தொடர்பு
    4.4.4 எகிப்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு
    4.4.5 அரேபியாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு
    4.4.6 பாபிலோனியாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு
    4.4.7 கிரேக்கத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு
    4.4.8 உரோமத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு
    4.4.9 சீனாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு
    4.4.10 வடநாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பு
    4.4.11 பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம்
4.5 தொகுத்துக் காண்போம்
4.6 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

## பிரிவு 2:களப்பிரர், பல்லவர், சேரர், சோழர், பாண்டியர்

## கூறு-5 களப்பிரர் வரலாறு - பல்லவர் தோற்றமும் வரலாறும் - பல்லவர் வீழ்ச்சி - பல்லவர் - ஆட்சிமுறை - கல்வி நிலை - கலைத்தொண்டு - சேரர் தொன்மை - சேரர் வரலாறு

5.1 முன்னுரை
5.2 குறிக்கோள்கள்
5.3 களப்பிரர் வரலாறு
    5.3.1 களப்பிரரைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்கள்
    5.3.2 களப்பிரர் யார்?
    5.3.3 கங்கர் இனமே களப்பிரர் இனம்
    5.3.4 முத்தரையர் இனமே களப்பிரர் இனம்
    5.3.5 களப்பாளர் இனமே களப்பிரர் இனம்
    5.3.6 வேங்கடரமணன் கருத்து
    5.3.7 களப்பிரர் வெளிநாட்டவரா?
    5.3.8 களப்பிரர் காலம்
    5.3.9 களப்பிரர் ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மை, தீமை
5.4 பல்லவர் தோற்றம்
    5.4.1 முற்காலப் பல்லவர்கள்
    5.4.2 இடைக்காலப் பல்லவர்கள்
    5.4.3 பிற்காலப் பல்லவர்கள்

5.4.4 முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668)
5.5 பல்லவர் வீழ்ச்சிக்கான காரணங்கள்
5.6 பல்லவர் - பாண்டியர் போர்
5.7 பல்லவர் - சோழர் போர்
5.8 பல்லவர் ஆட்சி முறை
5.9 பல்லவர் காலக் கல்வி நிலை
5.10 பல்லவர்கள் கலைக்குச் செய்த தொண்டு
5.10.1 கட்டடக்கலை
5.10.2 சிற்பக்கலை
5.10.3 ஓவியக்கலை
5.10.4 இசைக்கலை
5.10.5 நடனக்கலை
5.10.6 நாடகக்கலை
5.11 சேரர்களின் வரலாறு
5.11.1 இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
5.11.2 செங்குட்டுவன்
5.12 தொகுத்துக் காண்போம்
5.13 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**கூறு: 6 சோழப் பேரரசின் தோற்றமும் வளர்ச்சியும் - விசயாலயன் முதல் மூன்றாம் இராசேந்திரன் வரை – சோழர்களின் ஆட்சி முறை- பண்பாட்டு நிலை – கலை வளர்ச்சி – சோழர்களின் கடல் வணிகம்**

6.1 முன்னுரை
6.2 குறிக்கோள்கள்
6.3 பிற்காலச் சோழப் பேரரசின் தோற்றம்
6.3.1 திருப்புறம்பியம் போர்
6.3.2 விளைவுகள்
6.4 பிற்காலச் சோழப் பேரரசு வரலாறு
6.4.1 விஜயாலயன்
6.4.2 ஆதித்தன்(871-907)
6.4.3 முதல் பராந்தகன்(906-952)
6.4.4 கண்டராதித்தன்
6.4.5 அரிஞ்சயன்(956-957)
6.4.6 சுந்தர சோழன் என்ற இரண்டாம் பராந்தகன் (956-973)
6.4.7 உத்தமசோழன்(970-985)
6.4.8 இராசராசன்
6.4.9 இராசேந்திரன்(1012-1044)
6.4.10 முதலாம் இராசாதிராசன் (1018-1054)
6.4.11 இரண்டாம் இராசேந்திரன்(1051-1063)
6.4.12 வீரராசேந்திரன்(1063-1070)
6.4.13 முதலாம் குலோத்துங்கன் (1070-1120)
6.4.14 விக்கிரம சோழன் (1118-1135)

6.5 இரண்டாம் குலோத்துங்கன்(1113-1150)
6.6 இரண்டாம் இராசராசன்(1146-1163)
6.6.1 இரண்டாம் இராசாதிராசன்(1163-1178)
6.7 மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218)
6.7.1 மூன்றாம் இராசராசன் (1218-1256)
6.8 மூன்றாம் இராசேந்திரன்(1246-1279)
6.9 முதல் இராசராசசோழனின் தனிச் சிறப்பு
6.9.1 இராசராசனின் சமயப் பொறை
6.10 இராசேந்திரன்
6.10.1 தனிச் சிறப்புக்கள்
6.10.2 இராசேந்திரன் புரிந்த போர்கள்
6.11 சோழப் பேரரசின் வீழ்ச்சியும், பாண்டியர் எழுச்சியும்
6.12 பாண்டியர் எழுச்சி
6.13 சோழர் ஆட்சிமுறை
6.13.1 ஆட்சிப் பிரிவுகள்
6.13.2 நீதி வழங்கும் முறை
6.13.3 ஊராட்சிமுறை
6.14 வாரியங்கள்
6.14.1 குடவோலை முறை
6.15 சோழர்களின் பண்பாட்டு நிலை
6.15.1 திருமணம்
6.15.2 பழக்க வழக்கங்கள்
6.17.3 வலங்கை இடங்கை
6.18 சோழர்களின் கட்டடக் கலை வளர்ச்சி
6.19 சோழர்களின் கடல் கடந்த வணிகம்

**கூறு - 7 முதல் பாண்டியப் பேரரசு - இரண்டாம் பாண்டியப் பேரரசு –பாண்டியர்களின் வீழ்ச்சியும் இசுலாமியர் வருகையும் - வெளிநாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாடு**

7.1 முன்னுரை
7.2 குறிக்கோள்கள்
7.3 முதல் பாண்டியப் பேரரசு
7.3.1 பாண்டியன் கடுங்கோன்
7.3.2 அவனி சூளாமணி
7.3.3 சேந்தன் செழியன் (கி.பி.620-642)
7.3.4 அரிகேசரி மாறவர்மன் (கூன்பாண்டியன்)
7.3.5 கோச்சடை ரணதீரன்
7.3.6 மாறவர்மன் இராசசிம்மன் (அரிகேசரி பராங்குச மாறவர்மன்)
7.3.7 முதலாம் வரகுணன் (கி.பி.768-815)
7.3.8 சடையன் மாறன் (சீமார சீவல்லபன் கி.பி.815-867)
7.3.9 இரண்டாம் வரகுணபாண்டியன்
7.3.10 பராந்தக வீரநாராயணன்
7:4 இரண்டாம் பாண்டியப் பேரரசு

7.4.1 முதலாம் மாறவர்ம சுந்தரபாண்டியன் (கி.பி.1246-1238)
7.4.2 இரண்டாம் மாறவர்ம சுந்தர பாண்டியன் (1238-1251)
7.4.3 முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் (1261-1268)
7.4.4 மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268 முதல்1310 வரை)
7:5 பாண்டியர்களின் ஆட்சியியலும் மக்கள் வாழ்வும்
7.6 பாண்டியர்களின் வீழ்ச்சி - இசுலாமியர் வருகை
7.7 வெளிநாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாடு
7.8 தொகுத்துக் காண்போம்
7.9 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**பிரிவு 3: விசயநகர மரபினர், நாயக்கர், மராட்டியர், ஆங்கிலேயர்**

**கூறு:8 விசயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள், வரலாறு நாயக்கர்களின் பாளையப்பட்டு ஆட்சிமுறை, நாயக்கர் வளர்த்த கலையும் இலக்கியமும் தமிழகத்தில் மராட்டியர் ஆட்சி**

8:1 முன்னுரை
8.2 குறிக்கோள்கள்
8.3 தமிழகத்தில் விசயநகரத்தின் ஆதிக்கம்
8.4 தமிழகத்தின் குமார கம்பணனின் ஆட்சி
8.4.1 ஓட்டர்களின் குறுக்கீடும் - பிற தாக்குதல்களும்
8.4.2 கலை இலக்கியம்
8.5 மதுரை நாயக்கர்கள்
8.5.1 ஆட்சிமுறை
8.5.2 விசுவநாதரின் பணிகள்
8.5.3 தளவாய் அரியநாத முதலியார்:
8.5.4 முதலாம் கிருட்ணப்பர் (1564-1572)
8.5.5 வீரப்பநாயக்கர்(1573-95)
8.5.6 இரண்டாம் கிருட்ணப்பர் (1595-1601)
8.5.7 முத்து கிருட்ணப்பர் (1601-1609)
8.5.8 முதலாம் முத்து வீரப்பர்(1609-1623)
8.5.9 திருமலை நாயக்கர்(1623-1659)
8.5.10 திருவாங்கூர்ப் படையெடுப்பு
8.5.11 மூக்கறுப்புப்போர்
8.5.12 சேதுபதிகளுடனான தொடர்பு
8.5.13 ஐரோப்பியர்களுடனான உறவு
8.5.14 உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்
8.5.15 கலைப் பணிகள்
8.5.16 சமயம்
8.5.17 இரண்டாம் முத்துவீரப்பர் (1659)
8.6 நாயக்கர்களின் பாளையப்பட்டு ஆட்சிமுறை:
8.6.1 தல ஆட்சி
8.6.2 நீதி நிர்வாகம்
8.7 நாயக்கர் வளர்த்த கலையும் இலக்கியமும்
8.8 தமிழகத்தில் மாராட்டியர் ஆட்சி

8.8.1 சிவாசியின் படையெடுப்பு
8.8.2 வெங்காசியின் ஆட்சி (1675-1684)
8.8.3 சாசி(1684-1712)
8.8.4 முதலாம் சரபோசி மன்னர்(1712-1728)
8.8.5 துக்காசி
8.8.6 பிரதாபசிங் (1739-1763)
8.8.7 துல்சாசி(1763-1787)
8.8.8 அமர்சிங்கனும்(1767-1798) சரபோசியும்
8.8.9 உரிமைப் போட்டி
8.9 இரண்டாம் சரபோசியின் ஆட்சி(1798-1833)
8.9.1 சரபோசியின் சாதனைகள்
8.9.2 சிவாசியும் (1833-1855) மராட்டியராட்சியின் முடிவும்
8.10 தொகுத்துக் காண்போம்
8.11 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**கூறு - 9 ஆங்கிலேயர் ஆட்சி தமிழகத்தில் வேரூன்றல் – ஆங்கிலேயர் ஆட்சியில் சமூகநிலை – கல்வி நிலை, பொருளாதார நிலை – ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்த புலித்தேவன், கட்டபொம்மன் - மருது சகோதரர்கள் - வேலூர்க்கலகம்.**

9:1 முன்னுரை
9:2 குறிக்கோள்கள்
9.3 ஆங்கிலேயர் ஆட்சி தமிழகத்தில் வேரூன்றல்
9.3.1 நஞ்சராசன் படையெடுப்பு
9.3.2 மூன்றாம் கர்னாடகப் போர்
9.3.3 ஆற்காடு தஞ்சை அரசுகளுடன் ஆங்கிலேயர் கையாண்ட கொள்கை
9.4 ஆங்கிலேயர் ஆட்சியில் சமூகநிலை - கல்வி நிலை - பொருளாதார நிலை
9.4.1 சமுதாயத் துறை
9.4.2 கல்வித்துறை
9.4.3 பொருளாதாரத்துறை
9.5 ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்த புலித்தேவன்
9.6 வீரபாண்டிய கட்ட பொம்மன்
9.6.1 மக்காலேயின் படையெடுப்பு
9.6.2 அக்னு படையெடுப்பு
9.6.3 தூக்கிலிடப்படுதல்
9.7 மருதுபாண்டியர்
9.7.1 கூட்டிணைப்பு
9.7.2 ஆங்கிலேயருடன் போரில் ஈடுபடுதல்
9.7.3 திருச்சிராப்பள்ளி அறிக்கை
9.7.4 அறிக்கையின் விளைவுகள்
9.7.5 ஆங்கிலேயரின் சூழ்ச்சி
9.7.6 மருது பாண்டியரின் முடிவு
9.8 வேலூர்க் கலகம், (1806)

9.9 தொகுத்துக் காண்போம்
9.10 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**கூறு-10 இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களின் பங்கு ஒத்துழையாமை இயக்கம் - உப்புச்சத்தியாகிரகம் - வெள்ளையனே வெளியேறு இயக்கம் காங்கிரசு – நீதிக்கட்சி – சுயமரியாதை – திராவிட இயக்கங்களின் விடுதலைப் போராட்டப் பணி**

10:1 முன்னுரை
10.2 குறிக்கோள்கள்
10.3 இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு
10.3.1 விடுதலைப் போரில் தமிழகக் கலைஞர்களின் பங்கு
10.4 வேதாரண்யம் உப்புச்சத்தியாகிரகம்
10.5 ஒத்துழையாமை இயக்கம்
10.6 தமிழகத்தில் உப்புச் சத்தியாகிரகம்
10.6.1 தாரன் போட்ட தடையுத்தரவு
10.6.3 சோழலிங்கபுரத்தில் சத்தியாகிரகம்
10.7 வெள்ளையனே வெளியேறு இயக்கம் - காங்கிரசு
10.8 நீதிக்கட்சி
10.8.1 ஆட்சிப் பொறுப்பில் நீதிக்கட்சி
10.8.2 நீதிக்கட்சியினரின் சாதனைகள்
10.8.3 நீதிக்கட்சியின் வீழ்ச்சி
10.9 சுயமரியாதை இயக்கம் தோற்றம்
10.10.1 தமிழகத்தில் சுயாட்சி இயக்க காலம்
10.10.2 சத்தியாக்கிரக இயக்க காலம்
10.11 தொகுத்துக் காண்போம்
10.12 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**பிரிவு 4: தமிழகச் சமயங்கள், கலை, நாகரிகம், பண்பாடு**

**கூறு:11 தமிழ்ப் பண்பாட்டில் சமணம், பௌத்தம், இசுலாம் கிறித்தவம்**

11.1 முன்னுரை
11.2 குறிக்கோள்கள்
11.3 சமணரின் தமிழ்த்தொண்டு
11.4 தமிழ்ப் பண்பாட்டில் பௌத்தம்
11.5 தமிழ்ப் பண்பாட்டில் இசுலாம் சமயம்
11.6 கிறித்தவ சமயத்தின் பண்பாட்டுக் கொடை
11.6.1 வீரமாமுனிவர்
11.6.2 சீகன் பால்கு
11:7 தொகுத்துக் காண்போம்
11:8 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**கூறு:12 தமிழகக் கலைகள்**

12:1 முன்னுரை
12.2 குறிக்கோள்கள்
12.3 தமிழகக் கலைகள்
12.4 கட்டடக் கலை
 12.4.1 மரக்கோயில்கள்
 12.4.2 செங்கல் கட்டடங்கள்
 12.4.3 குகைக் கோயில்கள்
 12.4.4 கற்றளிகள்
 12.4.5 மூன்றுவகைப் பிரிவுகள்
 12.4.6 மாடக் கோயில்கள்
 12.4.7 கோயில் அமைப்பும் உறுப்புகளும்
12.5 கோயிலின் வகைகள்
 12.5.1 ஆலக்கோயில்
 12.5.2 இளங்கோயில்
 12.5.3 கரக்கோயில்
 12.5.4 ஞாழற் கோயில்
 12.5.5 கொகுடிக் கோயில்
 12.5.6 மணிக்கோயில்
 12.5.7 வைணவக் கோயில்
12.6 சிற்பக் கலை
 12.6.1 இரண்டு வகைச் சிற்பம்
 12.6.2 பௌத்த சமணச் சிற்பங்கள்
12.7 இசைக்கலை
 12.7.1 இசைப்பாணர்
 12.7.2 சில இசை நூல்கள்
 12.7.3 பஞ்ச பாரதீயம்
 12.7.4 இசை நுணுக்கம்
 12.7.5 பஞ்ச மரபு
 12.7.6 இந்திர காளியம்
12.8 ஓவியக்கலை
 12.8.1 ஓவியக் கலையின் பழைமை
 12.8.2 சுவர் ஓவியம்
 12.8.3 பல்லவர், சோழர்கால ஓவியங்கள்
 12.8.4 தென்னிந்திய ஓவியம்
 12.8.5 சித்தன்னவாசல் ஓவியம்
 12.8.6 கயிலாசநாதர் ஓவியம்
 12.8.7 பனமலை ஓவியம்
 12.8.8 நாயக்கர் காலத்து ஓவியம்
12.9 மருத்துவக் கலை

12.9.1 சோழர் காலம்

12.9.2 மருத்துவ அறிஞர்களும் மருத்துவ நூல்களும்

12.10 நாடகக்கலை

12.11 தொகுத்துக் காண்போம்

12.12 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**கூறு-13 நாகரிகம் பண்பாடு விளக்கம் - தமிழர்களின் அற வாழ்வியல் - விருந்தோம்பல் பண்பாடு**

13.1 முன்னுரை

13.2 குறிக்கோள்கள்

13.3 நாகரிகம் விளக்கம்

13.3.1 பண்பாடு என்னும் சொல் விளக்கம்

13.4 தமிழர்களின் அற வாழ்வியல்

13.4.1 தமிழ் இலக்கியத்தில் அறம்

13.4.2 அறத்தின் வரைவிலக்கணம்

13.5 விருந்தோம்பல்

13.6 தொகுத்துக் காண்போம்

13.7 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

**கூறு-14 ஆற்றங்கரைப் பண்பாடு - வைகை - காவிரி – பொருநை ஆற்று நாகரிகங்கள்**

14:1 முன்னுரை

14:2 குறிக்கோள்கள்

14.3 ஆற்றங்கரைப் பண்பாடு

14.4 வைகைக் கரை நாகரிகம்

14.4.3 இலக்கியங்களில் வைகை

14.4.5 கடவுளாக ஆறுகள்

14.4.6 வைகைக் கரையில் விழாக்களும், சடங்குகளும்

14.4.7 புனலாட்டுவிழா

14.4.8 வைகைக்கு ஆராதனை

14.4.9 பழங்காலக் காசுகள்

14.5 காவிரியாறு

14.4.3 இலக்கியங்களில் காவிரி

14.6 பொருநை ஆறு

14.6.1 இலக்கியங்களில் பொருநை

14.6.2 பாரதியும் பொருநையும்

14:7 தொகுத்துக் காண்போம்

14:8 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

## முன்னுரை

உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வரலாறு உண்டு. மக்கள் சமூகத்தைப் பற்றிய செய்திகள் வரலாற்று நூல்களில் இடம் பெறும். அண்மைக்காலம் வரையில் மன்னர்களைப் பற்றிய செய்திகள் மட்டும் வரலாற்று நூல்களில் இடம் பெற்று வந்தன. மன்னரின் கல்வி,

கலைத்திறன் அவர்களுடைய விருப்பு வெறுப்புகள், அவர்கள் புரிந்து கொண்ட திருமணங்கள், நிகழ்த்திய போர்கள், கண்ட வெற்றி தோல்விகள் ஆகியவற்றையே வரலாற்று ஆசியர்கள் தம் நூல்களில் குறிப்பிடுவது வழக்கமாக இருந்து வந்தது.

காலச் சுழற்சியில் ‘வரலாறு’ என்ற சொல்லுக்குப் புதிய விளக்கங்கள் எழுந்தன. மக்கள் சமூகத்தின் வரலாற்றில் அரசர்களும் அரசியலும் இடம்பெறும் பங்கு சிறிதளவு தான். ஆகையால் அரசாங்க வரலாறு மட்டுமின்றி மக்களின் வாழ்க்கை வரலாறும் வெளிவரத் தொடங்கின.

நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடுகள் முதலியவற்றைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ள வரலாற்று ஆய்வாளர்களிடம் ஆவல் மேலிட்டு வருகின்றது. அவ்விதத்தில் ஒரு நாட்டுக் குடிமக்களின் வாழ்க்கை இயல்புகள், சமூகத்தில் காணப்படும் மக்களினப் பிரிவுகள், மொழி வளர்ச்சி, அரசியல் ஆக்கம், மக்களுடைய ஒழுகலாறுகள், சமயங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கூறும் வரலாறுகள் இன்று பல எழுதப்பட்டுள்ளன. அவ்வகையில் தமிழர் தம் வரலாற்றினையும் அவர்தம் சீர்மிகு பண்பாட்டினையும் அறியச் செய்யவே தமிழக வரலாறும் பண்பாடும் என்னும் பாடம் அமைகின்றது.

# கூறு:1

## தமிழகத்தின் இயற்கை அமைப்பு - தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகள் - பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப்பிரிவுகள்

குறிப்பு

### 1:1 முன்னுரை

உலகம் தோன்றிய காலந்தொட்டு இன்று வரை இயற்கையின் சீற்றங்கள் பலவற்றைத் தாங்கிக்கொண்டு தொல்பழ நிலமாய்த் தொடர்ந்து காட்சியளிப்பது நம் தமிழ்ப் பெரும் நிலமே. இப்பெரு நிலம் தமிழகம் என்றே வழங்குகிறது. தமிழகம், தமிழ்நாடு என்ற இப்பெயர்கள் தமிழ்மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதியைக் குறிப்பதாகவே அமைந்தன. தமிழ்மக்கள் மிகுதியாகப் பரவியுள்ள நிலமே தமிழ்நாடு. இத் தமிழ்நாடு மொழி அடிப்படையில் ஒன்றாகக் கருதப்பட்டாலும் ஆட்சி அடிப்படையில் பல் பிரிவுகளைக் கொண்டே இயங்கி வந்துள்ளது. சேர, சோழ, பாண்டியர் என்ற முப்பெரு வேந்தர்களும் குறுநில மன்னர்களும், வள்ளல்களும் தனித் தனிப் பகுதிகளை ஆட்சி செய்த வந்த போதிலும் அவர்கள் மூவேந்தரின் ஆட்சியின் அளவிற்கும் வரையறைக்கும் உட்பட்டே ஆண்டு வந்திருக்கின்றனர். மொழி அளவில் தமிழகத்தின் எல்லை ஒன்றாகவும், ஆட்சி அளவில் தமிழகத்தின் எல்லை வேறாகவும் அமைந்திருந்தமை சுட்டத்தக்கது.

### 1:2 குறிக்கோள்கள்

- தமிழகத்தின் இயற்கை அமைப்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- தமிழக வரலாற்றை அறிவதற்குரிய சான்றுகள் பற்றி அறிந்து கொள்வீர்கள்
- பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப்பிரிவுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

### 1.3 தமிழகத்தின் இயற்கை அமைப்பு

இயற்கை என்பது தட்பவெப்பம், காற்று, மலை, மழை, ஆற்றுப்படுகை போன்ற அனைத்தையும் குறிக்கும். இவ்வியற்கையே மக்களின் வாழ்க்கை முறைகளைக் கட்டமைக்கின்றது. அவ்வகையில் தமிழகத்தின் இயற்கை அமைப்பு தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இயற்கை வளமும் தட்பவெப்பம், காற்று, மலை, மழை, ஆற்றுப்படுகை போன்ற இயற்கைச் சூழலும் மக்களின் வாழ்க்கை இயல்புகளை மாற்றும் ஆற்றல் வாய்ந்தவை. நாட்டின் அரசியல் அமைப்பு, மக்களின் சமுதாய வாழ்க்கை முறை, உணவு வகைகள்,

தொழில்கள், சமய வழிபாட்டு நெறிகள், அவர்தம் கலைப்பாங்கு, இலக்கியப் படைப்புக்கள் ஆகியனவும் இயற்கையமைப்பைத் தழுவியே அமைகின்றன. மக்களின் இயல்பு அவர்கள் வாழும் இடங்களுக்கு ஏற்ப அமைகிறது என அரிஸ்டாட்டில் கோபினோபோடின், மாண்டஸ்கியூ ஆகியோர் குறிப்பிடுவர். தமிழக இயற்கையமைப்பை வரலாற்றுடன் இயைபுபடுத்திக் காட்டியவர்களுள் நீலகண்ட சாத்திரி, கேகே பிள்ளை, அ.மு.பரமசிவானந்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள், ஆவர்.

குறிப்பு

## 1.3.1 தமிழ்நாட்டின் எல்லைகள்:

தலைச்சங்க காலத்தில் தமிழகம் குமரிக்கண்டத்தை உள்ளிட்ட பெரும் நிலப்பரப்பாக விளங்கியது என்பர். குமரியாற்றைக் கடல் கொள்ளுமுன் தெற்கு எல்லையாகக் கடல் அமையவில்லை.

தொல்காப்பியம் என்னும் நூலின் சிறப்புப் பாயிரத்தில்

**வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்**

எனத் தமிழகத்தின் எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாயிரத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் மேற்கும் கிழக்கும் கடலாதலின் எல்லை கூறாராயினார் எனக் குறிப்பிடுதல் கொண்டு தெற்கில் நிலப்பரப்பே அமைந்திருந்தது என ஊகிக்க முடிகிறது.

**தென்குமரி வடபெருங்கல்**
**குணகட கடலா எல்லை**

எனப் புறநானூறும் மதுரைக் காஞ்சியும் தமிழகத்தின் எல்லைகளைச் சுட்டி நிற்கின்றன.

காலப்போக்கில் தெற்கில் அமைந்திருந்த குமரிமலை கடல் கொள்ளப்பட்டதாக அறிகிறோம்.

**பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**

எனக் குமரிமலை கடல் கொள்ளப் பெற்றதைச் சிலப்பதிகாரம் உரைக்கிறது. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிக்கவந்த இளங்கோவடிகள்

**நெடியோன் குன்றமும் தொடியோள் பவ்வமும்- (சிலப்பதிகாரம்)**
எனத் தெற்கில் கடலை எல்லையாகக் குறிப்பிடுகின்றார்.

சேரநாட்டுத் தமிழ்மொழி மலையாள மொழியாக உருத்திரிந்தது. அதன் பின்னர் கி.பி.12ஆம் நூற்றாண்டில் எழுந்த நன்னூலில் தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாகக் குடநாட்டைக் குறிப்பிடுகின்றது.

**குணகடல் குமரி குடகம் வேங்கடம்**
**என நான்குஎல்லை –நன்னூல் சிறப்புப்பாயிரம்**

கேரளத்தை உள்ளடக்கி நின்ற தமிழகம் மேலும் குறுகிவிட்டதை நன்னூலின் இப்பாயிர வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

இங்ஙனம் தமிழக எல்லை, வடக்கே வேங்கட மலை தொடங்கித் தெற்கே குமரி வரை இருந்தது. என்பதை தொல்காப்பியப் பனம்பாரனார் தொடங்கி, அண்மைக் காலப் பாரதி பாடல் வரை தொடர்ந்து பேசப்பட்டுள்ளது. தென்குமரி எதுவரையில் இருந்தது என்பது பற்றிய கருந்து வேறுபாடு ஒரு பக்கம் இருப்பினும், குமரி என்னும் பெயர் தெற்கு எல்லைப் பகுதிகளாக இருந்தது என்பதில் ஒருமித்த கருத்தே உள்ளது. கிழக்கேயும், மேற்கேயும் கடல்கள் இருந்தன. மேற்குக் கடற்கரையோரக் கரையில் இருக்கும் இன்றைய கேரளம் அன்று சேரநாடு எனத் தமிழ்நாட்டின் முப்பெரும் நாடுகளுள் ஒன்றாக விளங்கிற்று. மலையாளக் காடுகளும், கடற்கரை ஓரமும், வயல்வெளிகளும் பல நூறு ஆண்டுகளாக இருந்து வந்துள்ளன. தமிழர், மலைப் பகுதியைக் குறிஞ்சி எனவும், காட்டுப் பகுதியை முல்லை எனவும், கடற்கரைப் பகுதியை நெய்தல் எனவும், வயல் வெளிப் பகுதியை மருதம் எனவும் குறித்து வந்துள்ளனர்.

தமிழ்நாட்டைச் செந்தமிழ் நாடு, கொடுந் தமிழ்நாடு எனப் பிரிக்கின்ற பாகுபாடு இருந்து வந்துள்ளது. மூத்த நூலாசிரியரான தொல்காப்பியர் 'செந்தமிழ் சேர் பன்னிரு நிலம்' எனக் குறிப்பிடுகிறார். பன்னிரு நிலங்களாவன: பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு. அருவாநாடு, கற்காநாடு, வடஅருவா நாடு, மலாடு, சீத நாடு, மலை நாடு, புனல் நாடு, பூழிநாடு, வேண் நாடு இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள பூழி நாடு, குட நாடு, குட்ட நாடு, புனல் நாடு, வேண் நாடு ஆகியன இன்று கேரளத்தில் உள்ளன.

மேற்குக் கடற்கரையில் முசிறி, தொண்டி ஆகியனவும், கிழக்குக் கடற்கரையில் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை ஆகியனவும் பெரும் துறைமுக நகரங்களாக அன்று விளங்கியுள்ளன. மேற்குக் கடற்கரையின் பகுதிகள் இயற்கைத் துறைமுக அமைப்புக்கு வாய்ப்பாக இருந்தன. பிற்காலத்தில் தமிழர் கடல் வாணிபம் மேற்கொள்வதற்கு இந்நிலவியல் அமைப்பு மிகப் பெரும் உதவியாக இருந்திருத்தல் வேண்டும்.

## 1.3.2 நில இயல்பு விளக்கம்

குறிப்பு

தமிழகத்தின் மேற்குப் பகுதி நீண்ட மலைத் தொடர்களால் ஆனது. கிழக்குப் பகுதியும் கிழக்குத் தொடர்ச்சி மலையால் விட்டுவிட்டு அமைந்து உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மூவாயிரம் அடியில் இருந்து எண்ணாயிரம் அடி வரை உயரத்தை உடையது. நீலகிரி வரையிலும் தொட்டுச் செல்லும் இப்பகுதி பெரிய அளவு மழையைப் பெறுகின்றது. இதில் பேரளவு நீர் மேற்குக் கடலில் கலந்து விடுகிறது. கிழக்குக் கடற்கரையின் ஓரப் பகுதி அந்த அளவு உயர்ந்த மலைத் தொடர்ச்சியைப் பெறாமையால் பெரும்மழையைப் பெறுவது இல்லை. தமிழகம் கிழக்கு மேற்காக மலைகளால் சூழப்பட்டுக் குமரியை நோக்கிக் குவிந்து தலைகீழ் முக்கோண அமைப்பை நினைவூட்டுகிறது. மலைகளும், மலைகளில் இருந்து உற்பத்தியாகி வரும் ஆறுகளும் குறுக்கிடும் ஆறுகளால் ஏற்படும் நிலப் பிரிவுகளும் எல்லைகளும் இப்பகுதிகளில் பல்வேறு இனக் குழுக்களும் அரசுகளும் அமையக் காரணங்கள் ஆகிவிட்டன. இந்த இயற்கை அளித்த பிரிவுகள் குறுநில, பெருநில மன்னர்கள் பலர் வேறு வேறு பகுதிகளில் தனித்தனியே ஆட்சி செய்ய வாய்ப்பு அளித்தன. பின்னால் இப்பகுதிகள் தமிழ் மண்டலம் எனும் தனித்தன்மையை இழந்து பலவேறு கிளை மொழி மண்டலமாகவும் பழக்க வழக்க மண்டலங்களாகவும் பிரிவதற்குத் தென் இந்திய இயற்கை அமைப்பும் ஒரு காரணமாக இருந்தது எனலாம்.

### 1.3.1.1 ஆறுகள்

தமிழ்நாட்டு ஆறுகளுள் காவிரி, வையை, தாமிரவருணி, தென்பெண்ணை, பாலாறு, செய்யாறு ஆகியன குறிப்பிடத்தக்கவை. மதுரையை வையை வளப்படுத்துகிறது. தஞ்சையைக் காவிரி வளப்படுத்துகிறது.

தலையாய ஆறுகள் அனைத்தும் மேற்கு மலைத் தொடரில் தோன்றி கிழக்கு நோக்கிப் பாய்கின்றன. அவை கிழக்கு மலைத்தொடரை அறுத்துக்கொண்டு வங்கக்கடலில் கலக்கின்றன.

அரபிக்கடலில் விழும் ஆறுகள் நீளம் இல்லாதவை. வங்கக் கடலில் விழும் ஆறுகள் தட்டையான படுகைகளை உடையவை. அரபிக்கடலில் விழும் ஆறுகள் ‘ஓடைகளையும் சிற்றாறுகளையும் போலக் காட்சி தருபவை; வங்கக்கடலில் விழும் ஆறுகள் அகலமான பள்ளத்தாக்குகள் வழியாகச் செல்பவை.

### 1.3.1.2 பருவக்காற்றுகள்

தென்மேற்குப் பருவக்காற்று வடகிழக்குப் பருவக்காற்று ஆகிய இரு பருவக்காற்றுகள் தமிழகத்திற்கு மழைவளம் தருபவை. சூன் முதல்

அக்டோபர் வரை தென்மேற்குப் பருவக்காற்று வீசுகிறது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்று வீசுகிறது.



குறிப்பு

#### 1.3.1.3 மலைத்தொடர்கள்

மேற்கு மலைத்தொடர் மேற்குக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது; 80 கிலோ மீட்டர் நீளமுடையது. இங்குள்ள கணவாய்களுள் பாலக்காட்டு கணவாய், ஆரல்வாய்மொழிக் கணவாய், செங்கோட்டைக் கணவாய் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

கிழக்கு மலைத்தொடர் மேற்குக் மலைத்தொடர் போன்ற உயரம் உடையது அன்று; வனவளம் உடையதும் அன்று; கிழக்கு மலைத்தொடரும் மேற்கு மலைத்தொடரும் நீலகிரியில் சந்திக்கின்றன.

தென்மேற்குப் பருவக்காற்று அரபிக்கடல் வழியாக வீசுகிறது. அக்காற்றின் குறுக்கே மேற்குமலைத்தொடர் நிற்கிறது. ஆதலின் “ஈரக்காற்றுத் தடுக்கப்பட்ட செங்குத்தான மேற்குப் பக்கம்” மிகுந்த மழை பெய்கிறது. கிழக்குப்பக்கம் மழை குறைந்துவிடுகிறது. இவ்வியற்கை அமைப்பால் இருமருங்கும் வளரும் இயற்கைத் தாவரங்கள் முற்றிலும் மாறுபடுகின்றன. மேற்கே பெய்யும் மிகுந்த மழையால் அங்கு பசுமை மாறாக்காடுகள் வளர்கின்றன. கருங்காலி, கோங்கு, தென்னை, தேக்கு, மூங்கில் ஆகிய பயன்தரும் மரங்கள் வளர்கின்றன.

இவ்வளம் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை வளத்தை வளர்க்கிறது. மழைவளம் குறைந்த தக்காணப் பீடபூமியில் இலையுதிர் மரங்கள் மிகுதியாக உள்ளன. ஆதலின் அங்கு மிகுந்த வாழ்க்கை வளமும் இல்லை. மக்களும் இல்லை.

### 1.3.2 போக்குவரத்துடன் கொண்ட தொடர்பு

கிழக்கு மலைத்தொடர் பல இடங்களில் தொடர்பு அறுந்துள்ளது. ஆதலின் கடற்கரைக்கும் பீடபூமிக்கும் இடையில் போக்குவரவிற்கு அவை பெருந்தடையாக இல்லை.

உயர்ந்த மலைகளுக்கு அருகில் உள்ள பாறைகளில் ஆறுகள் விரைந்து ஓடுகின்றன. அச்சூழலில் அவை போக்குவரவிற்குப் பயன்படுவதில்லை. ஆண்டுதோறும் வெள்ளம் பெருகியோடும் ஆறுகள் ஆழமான கடல் கழிகளை உருவாக்குகின்றன. அவை போக்குவரவிற்கு நல்ல வழிகளாக உள்ளன.

“நீரடி மணல்திட்டு உள்ள” ஆறுகளின் கழிமுகங்கள் கப்பல் தங்கும் துறைமுகமாகப் பயன்படுவதில்லை. “சேற்றுப் படிவு இல்லாத’ ஆறுகளின் கழிமுகங்கள் சிறந்த துறைமுகங்களாக விளங்குகின்றன. இயற்கையமைப்பு அளிக்கும் வசதியும் வசதியின்மையும் மக்களின்

வாழ்க்கையில் நேரடியான தாக்கத்தை உண்டாக்குவதை இவை விளக்கி நிற்கின்றன.



## 1.3.3 அரசியல் அமைப்புடன் கொண்ட தொடர்பு

தமிழகம் கிரேக்கத்தைப் போன்று குன்றுகள் நிறைந்த நாடாக அமைந்துள்ளது. குன்றுகளும், மலைகளும் குறுக்கிட்டு பகுத்துள்ள இந்நிலப்பரப்பை ஆண்ட அரசர்கள் பெரும்பாலும் குறுநிலமன்னர்களாக அமைந்திருந்தனர். அவர்களது ஆட்சிப் பரப்பும் குறிப்பிட்ட குன்றை மையமாகக் கொண்டு அமைந்திருந்தது. பாண்டிய நாட்டில் பழனி மலையைப் பேகன் ஆண்டான்; பறம்பு மலையைப் பாரி ஆண்டான். கோடை மலையை வேட்டுவன் ஆண்டான்; பொதிகை மலையை ஆய் ஆண்டான். சோழ நாட்டில் குதிரை மலையை அதியமானும் கொல்லிமலையை ஓரியும் தோட்டி மலையைப் பெருநள்ளியும் ஆண்டு வந்தனர். தமிழகம் சேர, சோழ பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது எனப் பொதுவாகக் கூறப்படினும் இந்நிலப்பரப்பு முழுவதும் ஒரேகாலத்தில் வலிமைமிக்க மூவேந்தர்களால் ஆளப்பட்டதாகச் சான்று இல்லை. “பழந்தமிழர்கள் ஒன்றுபடாமல் தனித்தனி அரசியல் மூகங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்ததற்கு நாட்டின் இயற்கையமைப்பே காரணம்” என்பர்.

கடல் சார்ந்த பகுதிகளை ஆண்ட மன்னர்கள் வாணிகத்தில் ஈடுபட்டனர். கடல் கொள்ளை புரிவதில் குறும்பர்கள் ஈடுபட்டனர். ஆதலின் அம்மன்னர்கள் கப்பற்படையை ஏற்படுத்தி அவர்களை வெருட்டினர். செங்குட்டுவன் ‘கடல் பிறக்கோட்டிய’ என்ற அடைகொடுத்து அழைக்கப்படுதல் இங்கு நினைவு கூரத்தக்கது. மன்னர்கள் கடல் வாணிகத்தில் ஈடுபடவும் கப்பற்படை ஏற்படுத்தவும் அவர்களுக்கு அமைந்த கடல்சார்ந்த இயற்கை அமைப்பே காரணம் என்பது தெளிவு.

வஞ்சி மன்னர்கள் மருதநில மன்னர்களுடன் போர் புரிந்தபோது தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் வயல் குளங்களின் ஊடே ஓடவிட்டு பாழ்படுத்தியதாகப் புறநானூறும்(பாடல் எண்.15,16,215, 288,341) பதிற்றுப்பத்தும் (பாடல் எண்.25,26,32) குறிப்பிடுகின்றன. வயல்வளம் காக்கக்கருதிய மருதநில மன்னர்கள் அங்கு மதில்களைக் கட்டினர். மதில் பற்றிய பேச்சு உழிஞை (மருதநிலப்) பகுதிப் பாடல்களிலேயே முதன் முதலில் காணப்படுவது இங்கு நோக்கத்தக்கது.

## 1.3.4 சமுதாய வாழ்க்கைமுறையுடன் கொண்ட தொடர்பு

பழந்தமிழ் மக்கள் இயற்கையமைப்பிற்கேற்பத் தங்கள் வாழ்க்கை முறைகளை வகுத்திருந்தனர். தொல்காப்பியப் பொருளதிகாரம் குறிப்பிடும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப்பகுதிகள் இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டு

பகுக்கப்பட்டனவேயாகும். மக்களின் உணவு வகைகள் தொழில்கள் உணர்வுகள் ஆகியனவும் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிக்கேற்ப அமைந்திருத்தலைத் தொல்காப்பியமும் நம்பியகப் பொருளும் வரையறை செய்கின்றன.

### 1.3.4.1 குறிஞ்சி:

மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி எனப்பட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் குறவர்கள் எனப்பட்டனர். மலைப்பகுதி பயிர் செய்தற்கு ஏற்ற பகுதி இல்லை. ஆதலின் மலையில் கிட்டும் தேனும் தினையும் பழமும் கிழங்கும் அவர்களுக்கு உணவாக அமைந்தன. அவர்கள் உடலும் உள்ளமும் உறுதிமிக்கவர்களாக இருந்தமைக்கு அவர்கள் வாழ்ந்த இயற்கையமைப்பு ஒரு காரணம்.

### 1.3.4.2 முல்லை:

காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை எனப்பட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் ஆயர் எனப்பட்டனர் காட்டின் பசுமை வளம் பசுக்களை வளர்க்குமாறு அவர்களைத் தூண்டியது. நிலையான குடியிருப்புக்கு அச்சூழல் வழிவகுத்தது. மக்களின் சமுதாய வாழ்க்கை முல்லையில்தான் முதலில் மலர்ந்தது எனலாம். அவர்கள் தங்களுக்குள் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்கத் தலைப்பட்டனர். அவன் கோன் என அழைக்கப்பட்டிருக்கலாம். அரசுமுறை பற்றிய குறிப்புக்கள் குறிஞ்சிக்குப் புறனாக அமைந்த வெட்சிப் பாடல்களில் காணப்படவில்லை என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. அரசமைப்பு நாற்படைப் பகுப்பு பற்றிய குறிப்புகள் முல்லைக்குப் புறனாகிய வஞ்சிப் பாடல்களிலேயே முதன்முதலில் பேசப்படுதல் காண்கிறாம். முல்லையில் சமுதாய அமைப்பும் அரசமைப்பும் தோன்றியமைக்கு அதன் இயற்கைச் சூழல் ஒரு காரணம்.

### 1.3.4.3 மருதம்:

வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதம் எனப்பட்டது. அங்கு வாழ்ந்தவர்கள் உழவர் எனப்பட்டனர். இந்நிலப்பகுதி பெரிதும் நீர்வளமிக்க ஆற்றுப்படுகைகளை ஒட்டியும், குளம் குட்டைகளை அடுத்தும் அமைந்திருந்தது. உழவு அம்மக்களின் தொழிலாக அமைந்தது. நெல் அவர்களின் உணவாக அமைந்தது. இவ்வசதியால் மக்கள் குடியேற்றம் அங்கு அதிகமாதல் இயல்பாகிறது. முல்லை நிலத்தை விடச் செம்மையான சமுதாய வாழ்க்கை மருத நிலத்தில் அமைந்து விளங்கியது. உலகின் பழம்பெரும் நாகரிகங்கள் எல்லாம் ‘ஆற்றங்கரை நாகரிங்களாக விளங்கியமைக்கு வயல்வளம் மிக்க மருத நில இயற்கைச்சூழல் ஒரு காரணம்.

### 1.3.4.4 நெய்தல்:

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் எனப்பட்டது. அங்கு வாழ்ந்தவர்கள் பரதவர்கள் எனப்பட்டனர். கடல் மீன் அவர்களுக்கு உணவாக அமைந்தது. கடலில் மீன் பிடிப்பதும் கடல்நீரில் உப்பு விளைவிப்பதும் அவர்களின் தொழில்களாக அமைந்தன. கடல் பகுதியில் வாழ்ந்த செல்வர்களுக்குக் கடல் வாணிகம் பொருளீட்டித் தந்தது. பெருநகர அமைப்புக்கள் கடற்கரைப் பகுதியில், கால்கொண்டன. வஞ்சி, கொற்கை, முசிறி, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகரங்களின் கடல் வாணிகச் சிறப்பு தமிழ் இலக்கியங்களில் பேசப்படுதல் காண்கிறோம். இலவங்கம், சந்தனம், மிளகு முத்து போன்ற அரிய பொருள்களை அவை ஏற்றுமதி செய்தன. இயற்கை வரலாறு, 'செங்கடல் பயணக் கையேடு', 'பெரிப்புளூஸ்' ஆகிய அயல்நாட்டு நூல்களில் இந்நகரங்கள் பேசப்பெற்றுள்ளன. கடற்கரைப் பகுதியில் பெருநகரங்கள் கால்கொண்டமைக்கும். அயல்நாட்டுடன் அவை வாணிகத் தொடர்பு கொண்டமைக்கு நெய்தல் நில இயற்கையமைப்பு முழுமுதல் காரணம் ஆகும்

### 1.3.4.5 பாலை:

முல்லையும் குறிஞ்சியும் வறண்டு போனால் அவை பாலை என்னும் நிலமாகும் எனச் சிலப்பதிகாரம் பாலைக்கு இலக்கணம் வகுக்கிறது. இங்கு வாழ்ந்தவர்கள் எயினர் எனப்பட்டனர். அவர்களின் தொழில் வழிப்பறி செய்தல் ஆகும். ஆளற்ற அப்பாலை நில அமைப்பு கொள்ளையிட அவர்களுக்குத் துணைநின்றது. அவர்களுக்கெனத்தனி உணவு வகைகள் வகுக்கப்படவில்லை. கொள்ளையிட்ட பொருள்களே உணவாக அமைந்தன. பாலையில் சுயதொழில் செய்ய வாய்ப்பு இல்லை. பிற வாழும் முறைகள் காணப்படவில்லை. ஆதலின் அறம் திரிந்த சிந்தனை கொண்டு ஆறு அலைக்க அவர்களைத் தூண்டி நின்றது பாலையின் இயற்கையமைப்பே ஆகும்.

ஒரு நாட்டின் இயற்கையமைப்பு மக்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்துவதோடு அமையாது மாற்றியும் அமைக்கின்றது. தாவரங்கள் தோன்ற முடியாத நிலப்பரப்பு அப்பகுதி வாழ் மக்களைப் புலால் உணவு உண்ணுமாறு கட்டாயப்படுத்துகிறது. நிலநடுக்கோட்டில் வாழும் மக்களை மெல்லிய பருத்தியாடை உடைகளை உடுத்துமாறும் குளிர்நிலப் பகுதியில் வாழும் மக்களைக் கனமான கம்பளி உடைகளை உடுத்துமாறும் இயற்கையமைப்பு கட்டாயப்படுத்துகிறது.

## 1.3.5 இலக்கியப்படைப்புகளுடன் கொண்ட தொடர்பு

இயற்கையமைப்பின் அடிப்படையில் பகுக்கப்பட்ட அகத் திணைகளை முதல், கரு, உரி என மூவகைப்படுத்துதல் மரபு. இவற்றுள்

உரிப்பொருள் என்பது வாழும் இடத்திற்கும் எழும் உணர்வுகளுக்கும் இடையே உள்ள இயைபை விளக்கி நிற்பதாகும். மலைசார்ந்த பகுதியில் கிடைக்கும் தனிமைச்சூழல் குறிஞ்சிக்குரியது. ஆதலின் அதற்குப் புணர்தல் உணர்வு உரிமையாக்கப்பட்டது. மழைபொழிந்து நீரும்நிழலும் மிகுந்து குளுமை தரும் இன்பச்சூழல் முல்லைக்குரியது. ஆதலில் தலைவனை எதிர்பார்த்து ஆற்றி ‘இருத்தல்’ அதற்கு உரிமையாக்கப்பட்டது. இதைப் போன்றே ஒவ்வொரு திணைக்குரிய உரிப்பொருளும் அதாவது உணர்வுகளும் அதன் இயற்கையமைப்பை ஒட்டியே அமைதல் காண்கிறோம். இவ்வுணர்வுகளே அவ்வத்திணை இலக்கியங்களின் படைப்பிற்கு அடிப்படையாக அமைந்தமையைச் சங்க இலக்கியங்கள் விளக்கி நிற்கின்றன.

## 1.3.6 சமய வழிபாட்டுடன் கொண்ட தொடர்பு

நிலத்தின் தன்மைக்கேற்ப வழிபாட்டு நெறிகளும் சமய நம்பிக்கைகளும் அமைந்திருக்கக் காண்கிறோம். மலைசார்ந்த பகுதியில் வாழ்ந்தவர்களைப் புறத்திணை வெட்சியர் என அழைக்கும். போர்க்குரிய கடவுளாகக் கொற்றவையை அவர்கள் வழிபட்டனர். அவர்களது வழிபாட்டில் புறச்சடங்குகள் மிகுந்திருந்தன. ஆடல் பாடல்களைக் கொண்ட கூத்துக்களும் வெறியாட்டுக்களும் சிறப்பிடம் பெற்றன. பலரும் கூடி வழிபடும் பொதுவழிபாட்டு முறை பின்பற்றப்பட்டது. சங்க இலக்கியங்களில் கொற்றவையைப் பற்றிப் பேசும் இடங்களில் எல்லாம் வழிபாட்டுச் சடங்குகளே பேசப்படுகின்றன. கொற்றவையின் இறைத்தன்மையைக் குறிப்பிட்டு வணங்கியதாகவோ வாழ்த்தியதாகவோ காணப்படவில்லை. இதைப் போன்றே தன்னைத்தானே நரபலியிட்டுக்கொள்ளும் வழக்கம் பாலைநிலப்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே மட்டும் காட்டப்படுவது நினைவுகூரத்தக்கது. “போரில் வெற்றியுடன் ஈடுபட்டிருந்த அரைநாகரிக முரட்டு வகுப்பினரிடையே தெய்வங்களும் முரட்டு தெய்வங்களாக இருந்தன . அத்தெய்வங்களின் பலிபீடங்கள் உயிர்க்கொலைக்குரிய குருதிக் காடாய் விளங்கின.

## 1.3.7 கலையுடன் கொண்ட தொடர்பு

நில அமைப்பிற்கேற்ப கலையும் கலையின் நோக்கமும் மாறுபட்டு அமைந்தமையைக் காணமுடிகிறது.. வெட்சியில் வரும் வெறியாட்டுக்கூத்தும் வள்ளிக்கூத்தும் இறைஉறவு கருதி அமைந்திருந்தன. தும்பையிலும் வாகையிலும் வரும் வாளோர் ஆடும் அமலை, தேர்முன்குரவை, தேர்ப்பின் குரவை ஆகிய கலைத்துறைகள் போர் வெற்றியோடு தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. பாடாணில் வரும் ஆற்றுப்படை என்னும் கலைத்துறை பரிசில் பெறும் நோக்கம் கொண்டு விளங்கியது. மேலைச் செய்திகளின் வழி,

ஒரு நாட்டின் வளத்திற்கும் வறட்சிக்கும் அதன் இயற்கையமைப்பே வித்திடுகிறது. இயற்கை வளத்திற்கேற்பவே மக்களின் வாழ்க்கை வளமும் அமைகிறது. பண்டைத்தமிழகம் பல குறுநிலமன்னர்களால் ஆளப்பட்டமைக்கு குன்றுகள் நிறைந்த அதன் நில அமைப்புக் காரணம். பழந்தமிழர் அகவாழ்க்கையும், புறவாழ்க்கையும் நிலத்தை மையமாகக் கொண்டே பகுக்கப்பட்டிருந்தன அம்மக்களின் உணவையும் தொழிலையும் நெறிப்படுத்தும் ஆற்றல் அந்நில அமைப்பு பெற்றிருந்தது. வேறுபட்ட மன உணர்வுகள் எழ மக்களின் வாழ்க்கைச் சூழல்கள் அடிப்படையிட்டுத் தந்தன. வழிபாட்டு நெறிகளில் பலியிடல் போன்ற வன்முறைகளை அல்லது பூவிடல் போன்ற மென்முறைகளை நில அமைப்பே நெறிப்படுத்தியது என்பது புலனாகும்.

இவற்றால் வரலாற்றின் அங்கங்களாகிய அரசியல், சமுதாயம், சமயம், கலை, இலக்கியம் ஆகிய ஐந்தனுடனும் இயற்கையமைப்பு கொண்ட செறிவான தொடர்பு புலனாகும்.

## 1:4 தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகள்

ஒரு நாட்டின் வரலாற்றை வரைவதற்குச் சான்றுகள் அல்லது ஆதாரங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளைத் தொல் பொருட் சான்றுகள், இலக்கியச் சான்றுகள் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

தொல்பொருட்சான்றுகளைக் கல்வெட்டுகள், நிலத்தின் மேல்பரப்பில் கிடைத்துள்ள சான்றுகள், நிலத்தின் கீழ்பரப்பில் அகழ்ந்து எடுக்கப்பட்ட சான்றுகள், நாணயங்கள், என்று நான்காக வகைப்படுத்தலாம்.

இலக்கியச் சான்றுகளை இருவகைப் படுத்தலாம். அவைகள் முறையே,

(அ) நம் நாட்டு இலக்கியச் சான்றுகள்
(ஆ) பிற நாட்டு இலக்கியச் சான்றுகள் என்பனவாகும்.

## 1.4.1 தொல் பொருட் சான்றுகள்

**கல்வெட்டுகள்:** தமிழக வரலாற்றினை வரைவதற்குக் கல்வெட்டுக்கள் பெரிதும் பயன்படுகின்றன. எண்ணற்ற செய்திகளை அவைகள் தருவதால் வரலாறு வலிவும் பொலிவும் பெற்றுத் திகழ்கிறது: கே.ஏ.நீலகண்ட சாத்திரி தன்னுடைய ‘தென்னிந்திய வரலாறு’ என்ற நூலில் “கல்வெட்டுக்களே, இந்திய வரலாற்றிற்கு, குறிப்பாகத் தென்னிந்திய

வரலாற்றிற்கான வளமிக்க நம்பகமான சான்றுகளாகும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.





(1) அசோகருடைய கல்வெட்டுகளிலிருந்து பண்டைக்காலத்தில் சோழர்கள், பாண்டியர்கள், சத்தியப்புத்திரர்கள், கேரளபுத்திரர்கள் ஆகியோர் சுதந்திர மன்னர்களாக இருந்தனர் என்பது பெறப்படுகிறது. புத்த மதத்தினைப் பரப்ப அசோகர் நல்லெண்ணக் குழுக்களை இந்நாடுகளுக்கு அனுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(2) காரவேலரின் (கலிங்க நாடு) ஹதிகும்பா கல்வெட்டில் தமிழக மூவேந்தர் பற்றி அறிய முடிகிறது.

(3) கி.பி.7 அல்லது 8 நூற்றாண்டைச் சார்ந்தது என்று கருதப்படும் குடுமியான் மலை இசைக் கல்வெட்டுகளிலிருந்து முதலாம் மகேந்திர வர்மனின் இசை ஈடுபாடு, இன்ன பிறவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

(4) தமிழக வரலாற்றினை வரையப் பெரிதும் பயன்படும் மற்றொரு கல்வெட்டு திருக்கோவிலூர் கல்வெட்டாகும். கபிலர் தன்னைத் தீயிட்டு அழித்து கொண்ட செய்தியினைத் தெரிந்து கொள்ள இது உதவுகிறது. அவர் இறப்பதற்கு முன் பாரி மகளிர் இருவருக்கும் திருக்கோவலூர் மன்னன் மலையமானுக்கு மணம் நடத்திவைத்த செய்தியும் தெரிய வருகிறது.

(5) சோழர்கள் வரலாற்றினை அறிய அம்மன்னர்கள் காலக் கல்வெட்டுகளும் அவர்களது செப்பேடுகளும் பயன்படுகின்றன. முதலாம் இராசேந்திரனின் மால்பாடிக் கல்வெட்டுக்கள், தஞ்சை இராசராசேசுவரர் கோயிலின் மதிற்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள், வீரராசேந்திரரின் திருமுக்கூடல் கல்வெட்டுகள், மூன்றாம் இராசேந்திரரின் திருவேதிபுரம் கல்வெட்டுகள், திருவிடைவாயில் கல்வெட்டு ஆகியவைகளிலிருந்து வரலாற்றுக்குரிய பல செய்திகள் கிடைத்துள்ளன. அத்துடன் இராட்டிரகூடர் கல்வெட்டுகள் கீழை மேலைச் சாளுக்கியர்களின் கல்வெட்டுகள் சோழர் வரலாற்றினை அறியத்துணைபுரிகின்றன.

## 1.4.2 செப்பேடுகள்

செப்பேடுகள் வரலாற்றிற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. அவை பெரும்பாலும் நீளமானவை. அவற்றில் முக்கியமானவை:

(1) **லெயிடன் செப்பேடு:** இது இராசராசனுடைய 21ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த பட்டயமாகும். டச்சுக்காரர்கள் இதை

அவர்களது லெயிடன் நகரத்துப் பொருட்காட்சியில் வைத்துள்ளனர். எனவே இது அப் பெயர் பெற்றது.

(2) **திருவாலங்காட்டுச் செப்பேடு** முதலாம் இராசேந்திரன் காலத்தில் எழுதப்பட்டதாகும்.

(3) **கரந்தைச் செப்பேடும்** முதலாம் இராசேந்திரன் காலத்தில் எழுதப்பட்டதாகும்.

(4) **சாரலாச் செப்பேடு** வீரராசேந்திரன் காலத்தில் எழுதப்பட்டது.

இவற்றோடு விஜய நகர அரசர்களது செப்பேடுகளும் ஆய்மன்னன் கருநந்தடக்கனின் பார்த்திவ சேகரபுரச் செப்பேடுகளும் வரலாற்று உண்மைகளை உணர்த்துகின்றன.

## 1.4.3 இலக்கியங்கள்:

வரலாற்றினை வரைவதற்குப் பெரிதும் பயன்படுபவை இலக்கியங்களே ஆகும். குறிப்பாகவும் சிறப்பாகவும் சங்ககால இலக்கியங்கள் பெரியதோர் துணை புரிகின்றன.

**(அ) நம் நாட்டு இலக்கியங்கள்:** சங்க காலம் பற்றிய அறிவதற்கு

(1) தொல்காப்பியம்
(2) எட்டுத்தொகை
(3) பத்துப்பாட்டு
(4) பதினெண் கீழ்க்கணக்கு
(5) சிலப்பதிகாரம்
(6) மணிமேகலை

போன்ற நூல்கள் துணைபுரிகின்றன.

சங்க நூல்களில் காணும் சொல்லாட்சி, தெளிவும் ஆற்றலும் வாய்ந்தது. அந்தந்த காலகட்டத்தின் அரசியல் நிலைமை, சமூக, பொருளாதார, சமய நிலைமைகளை அவ்வக்கால இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சோழர்கால வரலாறு தெளிவாக எழுதப்படுவதற்கு இலக்கியங்களே காரணமாகும். சேக்கிழார், நம்பி ஆண்டார் நம்பி, புத்தமித்தரர் ஆகியோரின் படைப்புகள் நல்லதோர் வரலாற்றுச் செய்திகளைத் தந்துள்ளன. கலம்பகம், உலா, பரணி, கோவை போன்ற சிற்றிலக்கியங்களில் கூட வரலாற்று நிகழ்ச்சிகள் பல உள. செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி மூலம் கலிங்கப்போர் பற்றி நன்கு தெரிந்து கொள்கிறோம். ஒட்டக் கூத்தரின் பிள்ளைத் தமிழும் பல நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கிறது. கங்காதேவியின் 'மதுரா விசயம்' என்னும் வட மொழி நூல். முதலாம் புக்கரின் மகனான குமார கம்பணர்

மதுரையின் மீது படையெடுத்தது பற்றியும் சுல்தானியர்கள் வெற்றி கொள்ளப்பட்டதையும் தெரிவிக்கிறது.



**குறிப்பு**

வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தைப் பற்றி இலக்கியங்கள் வாயிலாக சில செய்திகளை அறிய முடிகிறது.

1. காத்தயாயனர் என்ற சமசுகிருத இலக்கண வல்லுநர் சேர, சோழ, பாண்டிய அரசுகளைப் பற்றித் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். அது கி.மு.நான்காம் நூற்றாண்டாகும்.

2. சந்திரகுப்த மௌரியரின் அமைச்சரான கௌடில்யர் என்பவர் எழுதிய 'அர்த்தசாத்திரத்தில்' தமிழகம் பற்றிச் சில குறிப்புகளைத் தந்துள்ளார்.

3. சந்திர குப்தமௌரியர் அரண்மனையில் வந்து தங்கியிருந்த மெகஸ்தனீஸ் தன் நூலான 'இண்டிகாவில்' மூவேந்தர்களில் பாண்டியர் பற்றிய அரிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

4. டாலமி என்பார் எழுதிய நிலநூலிலும், பெரிப்ளூஸ் என்ற நூலிலும் தமிழகத்தின் பண்டைய வணிகம் பற்றிய செய்திகளையும் காவிரிப்பூம்பட்டினம் போன்ற துறைமுகங்கள் பற்றியும் தெரிந்து கொள்கிறோம்

5. இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு இதிகாசங்களும் தென்னக ஊர்கள் மக்களது பண்பாடு, அரசியல் பற்றி நன்கு விளக்குகின்றன.

6. தீபவம்சம், மகாவம்சம் என்ற இலங்கை வரலாற்றைக் கூறும் பாலி மொழியிலான நூல்கள் தமிழகம் பற்றிய சில முக்கியச் செய்திகளை நமக்குத் தருகின்றன.

## 1.4.4 வெளிநாட்டார் குறிப்புகள்

மெகஸ்தனீஸின் இண்டிகாவில் தமிழகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக பாண்டிய நாடு பற்றி சில விவரங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. பெரிப்ளூஸ் என்னும் நூல், டாலமி எழுதிய 'நிலவியல்' என்னும், நூல் சில வரலாற்று உண்மைகளைத் தருகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தின் கவின்மிகு வணிகச் செய்திகளை இவைகள் மூலம் அறிய முடிகிறது.

சீனப் பயணிகளான பாஹியான், யுவான்சுவாங் குறிப்புக்களிலிருந்து தமிழகம் பற்றிய விவரங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

விஜய நகர மன்னர் காலத்தில் தென்னிந்தியாவிற்கு வருகை தந்த இத்தாலி நாட்டு நிகாலோ கோண்டி, பாரசீகத் தூதுவர் அப்துர் ரசாக், உருசிய வணிகர் அதானிசியஸ் நிகஷன், பாரசீகப் பயணி

பொஷ்டா, இத்தாலியக் கனவான் லுடோவிசோ டிவர்த்தபோ, போர்த்துகீசிய மொழிபெயர்ப்பாளர் டியூபர்டேபார்போசா, அதே நாட்டு வரலாற்றுப் பதிவாளர்கள் டாமினிகோ பேயஸ், பெர்னாவோ நூனிஸ் ஆகியோரின் குறிப்புகள் மக்கள் வாழ்க்கையை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. கர்னல் மக்கின்ஸரியின் 'காவில்கள்' என்ற கிராம நிர்வாகச் சான்றுகள் தமிழகக் கிராமங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

குறிப்பு

## 1:5 பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப் பிரிவுகள்

கி.பி 12-ஆம் நூற்றாண்டின் தமிழகம் 12 பகுப்பில் இருந்தது. அவை

| | |
|---|---|
| 1. பாண்டியநாடு | 7. பன்றிநாடு |
| 2. குட்டநாடு | 8. அருவாநாடு |
| 3. குடநாடு | 9. வடஅருவாநாடு |
| 4. கற்காநாடு | 10. சீதநாடு |
| 5. வேணாடு | 11. மலாடு |
| 6. பூழிநாடு | 12. புனல்நாடு |

ஆகும். அவை கீழ்க்கண்ட ஆறு பகுதிகளுக்குள் அடங்கியிருந்ததைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| 1. பாண்டியநாடு | - | தற்கால மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்கள். |
| 2. சேர நாடு | - | கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, தஞ்சை, நாகை மாவட்டங்கள், சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதி |
| 3. சோழ நாடு | - | கோடிக் கரைக்குக் கிழக்கிலும், கடலுக்கு மேற்கிலும், வெள்ளாற்றிற்கு வடக்கிலும் உள்ள பகுதி. |
| 4. தொண்டை நாடு | - | செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருப்பதி வரையுள்ள சித்தூர் மாவட்டப்பகுதி |
| 5. கொங்கு நாடு | - | தலைமலை, பழனி, வெள்ளியங்கிரி ஆகிய பகுதிகள் |

6. வேளிர் நாடு - வேளிர் எனப்படும் சிற்றரசர்களின் பகுதிகளான பறம்புமலை,தகடூர், திருக்கோவிலூர்,ஆயக்குடிநாஞ்சில்,மோகூர், குதிரைமலை, செங்கண்மாமிழலை ஆகும்.



**குறிப்பு**

## 1:6 தொகுத்துக் காண்போம்

1. தமிழகத்தின் இயற்கை அமைப்பு மற்றும் மக்கள் வாழ்வியல் குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.

2. ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு தொல் பொருட் சான்றுகளாகிய இலக்கியங்கள், நாணயங்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள் உதவும் என்பதை அறிந்து கொண்டீர்கள்.

3. பண்டைத் தமிழக நாட்டுப் பிரிவுகள், எல்லைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 1:7 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

- பண்டைத் தமிழகத்தின் எல்லைகள் யாவை?
- ஐவகை நிலங்கள் குறித்து விளக்குக?
- வரலாற்றை அறியக் கல்வெட்டுகள் எங்ஙனம் துணை புரிகின்றன?
- பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகள் யாவை?

## 1.8 மேலும் அறிந்துகொள்ள

கே.கே.பிள்ளை - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்
வே.தி.செல்லம் - தமிழக வரலாறும் பண்பாடும்

கணியன் பாலன் - பழந்தமிழக வரலாறு

# கூறு:2
# வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய தமிழகம்

## 2.1 முன்னுரை

உலகில் முதன் முதலில் மக்களினம் தோன்றியது தென்னிந்தியாவில் தான் என்றும் அவ்வினமே தமிழ் நாட்டின் ஆதிகுடிகள் என்றும் அம்மக்கள் தோன்றிய இடமே குமரிக்கண்டம் என்றும் அழைக்கப்பட்டது.

## 2:2 குறிக்கோள்கள்

1. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தமிழகம் இருந்தமையைத் தெரிந்து கொள்வீர்கள்.
2. தமிழர் தொன்மையைப் பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதியகற்காலம் ஆகியவற்றின் வழி அறிந்து கொள்வீர்கள்.

குறிப்பு

## 2:3 வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தமிழகம்

உலகில் முதன்முதல் மக்களினம் தோன்றியது தென்னிந்தியாவில் தான் என்று சில புவியியல், மானிடவியல் வல்லுநர் கருதுகின்றனர். இவர்களுடைய கருத்துக்குச் சார்பாகப் போதிய சான்றுகள் இன்னும் கிடைத்தில. எனினும் இந்தியத் துணைக் கண்டத்தைப் பற்றியவரையில் தென்னிந்தியாவிற்றான் முதன்முதல் மக்களினம் தோன்றிற்று என்பதில் ஐயமேதுமில்லை.

பலகோடி யாண்டுகட்கு முன்னர் உண்டான மிகப் பழைய கற்பாறைப் படிவுகள் தென்னிந்தியாவில்தான் காணப்படுகின்றன. இப் பகுதியில் காடுகளும், மலைகளும் செறிந்து கிடக்கின்றன. எனவே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இங்கும் மக்கள் தோன்றி வாழ்வதற்கு நல்வாய்ப்புகள் உண்டு. தொலைதூரம் தேடியலையாமலேயே அவர்கள் இங்கு தமக்கு வேண்டிய உணவைப் பெறலாம். இக் காடுகளில் காய்களும், கனிகளும், கொட்டைகளும், கிழங்குகளும், கிடைத்தன. ஆதி மனிதன் ஆங்காங்குக் கிடைத்த உணவுப் பண்டங்களைப் பொறுக்கித்தின்று வயிறு பிழைத்தான். பிறகுதான் அவன் வேட்டையாடக் கற்றுக்கொண்டான். எனவே, மனிதன் வேட்டையாடிப் பிழைக்கக் கற்றுக்கொண்ட ஒரு காலத்துக்கும் முற்பட்ட காலத்தில் ஆதிமனிதன் தென்னிந்தியாவில் தோன்றி வாழ்க்கையை நடத்தி வந்தான் என்று கொள்ளலாம்.

விந்தியமலைத் தொடருக்கு வடக்கே பரந்து கிடக்கும் கங்கையாற்று வெளியும், இமயமலைத் தொடரும் முன்னொரு காலத்தில் கடலுக்குள் மூழ்கிக் கிடந்தன. இமயமலைத் தொடரில் ஆங்காங்கு கடல் வாழ் உயிர்களின் எலும்புகள் காணப்படுவதே இதற்குப் போதிய சான்றாகும். வடஇந்தியா கடலுக்குள் மூழ்கிக் கிடந்த அக்காலத்தில் தென்னிந்தியாவானது காடும் மலையும் செறிந்து மக்களினமும் ஏனைய உயிர் வகைகளும் வாழ்வதற்கு ஏற்ற இடமாக விளங்கிற்று. கங்கை வெளியும், இமயமும் கடலினின்றும் மேலெறியப்பெற்ற புவியியல் நிகழ்ச்சி இற்றைக்கு ஐந்துகோடி ஆண்டுகட்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டும் என்று புவியியலாளர் கருதுவர்.



தென்னிந்தியாவுக்குத் தெற்கில் அமைந்திருந்த லெமூரியா விற்றான் முதன்முதல் மக்களினம் தோன்றிற்று எனவும், அவ் வினமே

தமிழ்நாட்டின் ஆதி குடிகள் எனவும் லெமூரிக் கொள்கையினர் கருதுவர். லெமூரியக் கண்டத்தில் வாழ்ந்து வந்த மக்களின் வழிவந்தவர்கள் இப்போது தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களிடம் இனவொற்றுமை, மக்கள் உடல்கூறு ஒற்றுமை, மொழி அமைப்பு ஒற்றுமை ஆகியவை பல காணப்படுகின்றன. நியூசிலாந்தில் வாழும் ஆதி குடிகளான மேலோரி மக்களும், இத் தீவைச் சுற்றிலும் சிதறுண்டு கிடக்கும் சிறுசிறு தீவுகளில் வாழும் மக்களும் பேசும் மொழிகளுக்கும் தமிழுக்கும் ஒரு தொடர்பு உண்டு. இஃதன்றி, தென்னிந்திய மக்களுள் சில குலத்தினரும், மரபினரும் வழிபாட்டுச் சின்னங்களையும் அவர்களுள் கள்ளர்கள் என்பார் எய்யும் 'பூமாரங்' என்னும் மீண்டு வரும் வேட்டைக் கத்தியையும் இந்தோனேசியாவிலும் பாலினீ சியாவிலும் வாழும் ஆதி குடிகளிடம் காணலாம். மேலும் போர்னியா தீவின் ஆதி குடிமக்களான டையாக்குகளும், ஆனைமலையின் பழங்குடிகளான காடர்களும் மரமேறும் முறை ஒரேவிதமாக உள்ளது. இக் காடர்களும் தென்னிந்திய ஆதிகுடிகளுள் மற்றோர் இனத்தவரான மலை வேடர்களும் தம் முன்பற்களைத் துணித்துக்கொள்ளும் வழக்கத்தைக் கைக்கொள்கின்றனர். மலேசிய நாட்டினரான ஜுகுள்களும் இப் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். மற்றும் தென்னாப்பிரிக்க வாசிகளான நீக்கிரோவர்களின் சாயையைத் தென்னிந்திய ஆதி குடிகள் சிலரிடம் காணமுடிகிறது. பண்டைக் காலத்தில் இந் நீக்கிரோவர்களுக்கும் தென்னிந்தியருக்கும் தென்கிழக்கு ஆசியத் தீவினருக்குமிடையே இனக்கலப்பும் ஏற்பட்டிருக்கவேண்டும். லெமூரியாக் கண்டம் இருந்ததற்கும் அக் கண்டத்தில் வாழ்ந்த ஆதிமக்கள் வழி வந்தவர்களே தமிழர்கள் என்பதற்கும் மேலே கொடுத்த சான்றுகள் ஆதரவாகக் காட்டப்படுகின்றன. எனினும் தமிழ் மக்கள் லெமூரிய ஆதிகுடிகளின் நேர்வழி வந்தவர்கள்தாமா என்ற ஐயப்பாடு நிகழாமல் இல்லை. இங்குநாம் கருத்திற் கொள்ளவேண்டிய தொன்றுண்டு. ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது கங்கைவெளி யுயர்ந்து லெமூரியா மூழ்கிப் போகும்போது, உலகின்மேல் எங்கும் மனித இனமே தோன்றவில்லை. அது தோன்றியதே சில நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான். எனவே ஐந்துகோடி ஆண்டுகட்கு முன்பு லெமூரியர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதும், அவர்களே தமிழர்கட்கு முன்னோர்களாவார்கள் என்பதும் ஆராயத்தக்கது.

தமிழர் தமிழகத்திலேயே பிறந்த ஆதி குடிகள் என்பது லெமூரியக் கொள்கையினரின் முடிபு. இவர்கள் மேலும் ஒன்று கூறுவர். தமிழ் மக்களில் சிலர் நாட்டைவிட்டு வெளியேறிப் படர்ந்து சென்று மத்தியதரைக் கடற் பகுதியில் குடியேறிப் பின்பு பல பழம் நாகரிகங்களை வளர்த்தனர் என்றும் இவர்கள் கூறுகின்றனர். இக் கொள்கைக்குப் பேராதரவு கொடுத்தவர் பேராசிரியர் பி.டி.சீனிவாச அய்யங்கார் ஆவர்.

தமிழர்கள் தமிழகத்தின் சொந்த குடிகள் என்ற கொள்கைக்கு விஞ்ஞான முறையிலான தகுந்த சான்றுகள் இன்னும் கிடைத்தில. பழங் கற்காலத் தமிழன் எந்த மனித இனத்தைச் சார்ந்தவன் என்று ஊகித்தறிவதற்குச் சான்றாக அக் காலத்திய மனித எலும்புக்கூடு ஒன்றும் இதுவரையில் கிடைக்கவில்லை. புதைபொருள் ஆராய்ச்சித்துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளின் மூலம் வருங்காலத்தில் புதிய சான்றுகள் ஏதேனும் வெளியாகக்கூடும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மக்களுடைய இன வேறுபாடுகள், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப்பற்றி ஆராயும் போது சிறப்பாக நாம் மூன்று துறைகளில் கருத்தூன்றவேண்டும்.

1. தமிழரின் உடல் தோற்றம்

2. புதைபொருள் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தும் பாண்டவகைகள், கருவிகள் ஆகியவற்றின் அமைப்பு, இத் துறைகளில் நம் கருத்தைச் செலுத்தி ஆதித் தமிழரின் வரலாற்றுக் கூறுபாடுகளை நாம் ஆராயவேண்டும்.

3. அவர்களுடைய மொழியும் மொழிப் பிரிவுகளும்

வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆராய்ச்சியில் மக்கள் இன வரலாற்றை மூன்று பிரிவுகளாக வகுத்து அவர்களைப் பற்றிய குறிப்புகளைத் தொகுத்தல் மரபு, பழங்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற் புதைவு காலம் என்பன அவை.

## 2.4 வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்

மனிதன் முதலில் தோன்றிய இடங்களில் தென் இந்தியா ஒன்று எனச் சில நிலநூலாரும் மானிட நூல் வல்லாரும் கருதுகின்றனர். தென்னிந்தியாவில் அதிலும் சிறப்பாக ஒரிசா, மைசூர், ஆந்திரா, சென்னை ஆகிய இடங்களில் அதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அதில் சென்னையும் ஒன்று என்பதால் வரலாற்றுக்கு முன்பே அங்கு மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பது நன்கு புலனாகிறது. தமிழ் நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறிஞர்கள் மூன்று வகைகளாகப் பிரிந்துள்ளனர். அவை

(1) பழங் கற்காலம்

(2) புதிய கற்காலம்

(3) இரும்புக் காலம் ஆகும்.

## 2.5 பழங்கற்காலம் (கி.மு.35,000 முதல் கி.மு. 10,000 வரை)



**குறிப்பு**

புதைபொருள் ஆராய்ச்சிகள் மூலம் பழங் கற்காலத் தமிழக மக்களைப் பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன. 1863-இல் புரூஸ் பூட் என்பவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் பல்லாவரத்துக்கருகில் நடத்திய அகழ்வாராய்ச்சியின் போது கற்களினாலான கோடாரிகள், உளிகள், கரண்டிகள், கத்திகள் முதலியன கிடைத்துள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் இன்னும் சில பகுதிகளிலும், வடஆர்க்காடு மாவட்டத்திலும், வடமதுரையிலும் சென்னைக் கருகிலும் பழங்கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. இக்கற்கருவிகள் மிகவும் கரடு முரடாகவும், செம்மையாகச் செதுக்கப்படாமலும் இருக்கின்றன. எனவே இக்கருவிகளைக் கைத்திறனுடனோ, நுட்ப அறிவுடனோ பழங்கற்காலத் தமிழக மக்கள் உருவாக்கவில்லை. கற்களாலான கருவிகளையும், ஆயுதங்களையும் தவிர மரத்தினால் செய்த ஈட்டிகளையும் தடிகளையும் கூடப் பழங்கற்கால மக்கள் பயன்படுத்தி வந்தனர்.

பழங்கற்கால மக்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல் நாடோடியாக அலைந்து திரியும் வாழ்க்கையே நடத்தி வந்தனர். பெரும்பாலும் சமவெளிகளிலேயே அவர்கள் வாழ்ந்தனர். சிலசமயங்களில் காட்டு மிருகங்களுக்குப் பயந்து மலைக் குகைகளிலும் பதுங்கி வாழ்ந்தனர். இயற்கையாகக் கிடைத்த காய்கனிகளையும் பருப்புகளையும் உண்டு வாழ்ந்த அவர்களுக்கு உழவுத் தொழில் தெரியாது. மிருகங்களை வேட்டையாடக் கற்றிருந்தனர். இறந்தவர்களின் உடல்களைப் புதைக்கும் வழக்கம் அவர்களிடம் இல்லை. விலங்குகள் போலப் பகலில் உணவு தேடி உண்பதும் பழகிய இடத்தில் இராத் தங்குவதுமே அவர்களின் இயல்பாயிருந்தது.

## 2.6 இடைக் கற்காலம்

உலக வரலாற்றில் பழங்க கற்காலத்தை முற்பகுதியென்றும் பிற்பகுதியென்றும் பிரித்துள்ளது போன்று, தமிழ்நாட்டுப் பழங்கற்காலத்தையும் பிரிக்க இயலுமா என்பது குறித்துப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனாலும் பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்குமிடையே இடைக் கற்காலம் ஒன்று நிகழ்ந்திருக்கலாம் என்று தெரிகிறது. இடைக் கற்காலத்து மக்கள் மிகச் சிறிய கற்கருவிகளைச் செதுக்கிக் கொண்டனர். சிக்கிமுக்கிக் கல், செர்ட்டு, அகேட் போன்ற கற்களிலும் தங்களுக்குத் தேவையான கருவிகளைச் செதுக்கிக் கொண்டனர். திருநெல்வேலி, தூத்துக்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் இடைக் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மக்கள், மான், பன்றி, ஆடு, எலி ஆகியவற்றை வேட்டையாடி உண்டு வாழ்ந்தனர். இறந்தவர்களின்

உடல்களை மண்ணில் புதைக்கும் வழக்கம் இடைக் கற்காலத்து முற்பகுதியிலேயே தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது.



## 2:7 புதிய கற்காலம் (கி.மு.8000 முதல் கி.மு.6000 வரை)

**குறிப்பு**

புதிய கற்காலம் பற்றிய செய்திகளை அறியும் முன்னர் பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையே நிலவிய காலத்தை மெகாலிதிக் காலம் எனக் குறிப்பிடுகின்றனர். இக்காலத்தில் பயன்படுத்திய கற்கள் மிகச் சிறிய அளவுடையதாகும். அவை பளிங்கு கற்கள் போன்றனவாகும்.

இக்கால மக்கள் தொழில் வேட்டையாடுவதாகும். அம்மக்கள் வேட்டையில் பிடித்த ஆடுகள், மாடுகள், எலிகள் முதலிய பிராணிகளை உணவாகக் கொண்டனர். மக்கள் இறந்த பின், அவர்களைப் புதைக்கும் வழக்கத்தை இக்காலத்தில் மேற் கொண்டனர்.

புதிய கற்காலத்தில் மக்கள் பயன்படுத்திய கற்களால் ஆன ஆயுதங்கள் சிறு கற்களால் ஆனவை. அவைகள் பழைய கற்காலத்தை விடச் செப்பனிடப்பட்டவை செம்மையானவை. அம்மக்கள் பயன்படுத்திய கூர்மையான படைக் கலங்கள், கருவிகள், 'டிராப்' எனப்படும் ஒருவிதக் கற்களிலிருந்து உருவாக்கப்பட்டவையாகும். திருநெல்வேலி, சேலம், மலபார்க்கரை, ஆகிய இடங்களில் தோண்டிய புதை பொருள்களிலிருந்து இதைத் தெரிந்து கொள்கிறோம்.

இக்காலம் எப்போது நிகழ்ந்திருக்கும் என்பதைப் பற்றி ஆராய்ந்து கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தன்னுடைய கருத்தினை வெளியிட்டுள்ளார். அதன்படி அது கி.மு.8000க்கும் 6000க்கும் இடைப்பட்டதாகும்.

இக்காலத்தை அடுத்தே மட்பாண்டங்கள் பயன் படுத்தப்பட்டன. இதன்மூலம் காலத்துக்குக் காலம் நாகரிகத் தொடர்ச்சி ஏற்பட்டதைக் காணலாம். அதன் பின் பெருங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. பெருங்கற்களால் நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்லறைகளில் பெருங்கற்கள் வைத்துக் கட்டப்பட்டன சில சமயங்களில் தாழியில் அடக்கம் செய்தனர். இவ்வகைத் தாழிகளை திருநெல்வேலி, செங்கற்பட்டு மாவட்டங்களில் காணலாம். இந்தத் தாழிகள் பெரும்பாலும் கருங்கல் கொண்ட மேட்டுப் பகுதிகளிலும், நீர்ப்பாசன ஏரிகளை அடுத்தும், விவசாயிகளின் இல்லங்கள் அதாவது குடியிருப்புகளை அடுத்தும் காணப்படுகின்றன.

## 2.8 இரும்புக்காலம் (கி.மு.2000 முதல் 1200 வரை)



புதிய கற்கால மனிதன் படிப்படியாக வளர்ச்சியுற்று உலோக காலத்தை அடைந்தான் என்பது வெள்ளிடை மலையாகும். இரும்புக்

காலத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆதிச்ச நல்லூர் கண்டுபிடிப்பு எடுத்துக் காட்டுகிறது. இரும்புக்காலத்தில் பாறையில் குடைந்த குகைகள் சென்னைக்கு அருகில் பெரம்பூரிலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் காணியம், பூண்டி, சிறுமுகை ஆகிய சிற்றூர்களிலும் காணப்பெறுகின்றன.

ஆதிச்ச நல்லூரில் கண்டிபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் சிறப்பு மிக்கதாகும். அங்குள்ள குழிகளில் காணப்பட்டவைகள் மக்கள் உடம்பின் முழு எலும்புக் கூடுகள், நேர்த்தியான மண் பாண்டங்கள், பொன் அணிகலங்கள், வெண்கல உருப்படிகள், இரும்பு ஆயுதங்கள், அரிசி, உமி, தவிடு முதலியன ஆகும். அதுமட்டுமில்லாமல் இரும்பு மண்வெட்டிகளும், சூலாதயுங்களும் பொன்னால் செய்த தலைக் கட்டுகளும் பொன் வாய்மூடிகளும் கண்டு எடுத்தனர். மேலும் திரிசூலம், அல்லது வேல் போன்ற இறைவனது ஆயுதம், சேவல் பொறித்த கொடியும் கண்டெடுக்கப்பட்டன. இதிலிருந்து ஆதிச்ச நல்லூர் மக்கள் வேலன் அல்லது முருகன் வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர் என்பது நன்கு போதரும். அரிசி, உமி, காணப்பட்டதன் மூலம் அம் மக்களுக்கு நெல் பயிரிடும் முறை தெரிந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

தமிழகப் பண்பாட்டினை ஒழுங்கான முறையில் தெரிந்து கொள்வதற்கு தென்னார்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு முதலிய மாவட்டங்களில் கண்டு எடுக்கப்பட்டவை மிகவும் பயன் தரத்தக்கவையாகும். செங்கற்பட்டு மாவட்டத்தில் சானூர், அமிர்தலிங்கம், குன்றத்தூர் என்ற ஊர்களிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செங்க மேட்டிலும், பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்காமேடு ஆகிய இடங்களிலும் தோண்டி எடுக்கப்பட்ட பொருள்கள் அக்கால மக்கள் பற்றிய நல்லதோர் சான்றுகளைத் தருகின்றன.

## 2:9 தொகுத்துக் காண்போம்

1. வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
2. புதிய கற்காலம், பழங்கற்காலம், இடைக்கற்காலம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்

## 2:10 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. பழங்கற்காலம் என்றால் என்ன?
2. இரும்புக் காலம் என்பது யாது?

## 2.11 மேலும் அறிந்துகொள்ள



முனைவர் அ.இராமசாமி - தொன்மைத் தமிழர் நாகரிக வரலாறு

க.ப.அறவாணன் - தமிழ்மக்கள் வரலாறு



## கூறு-3

## தமிழகத்தின் தொன்மை, குமரிக் கண்டம் , சங்ககாலச் சேர, சோழ, பாண்டியர் வரலாறு - சங்க காலச் சமூக நிலை, பெண்டிர் நிலை, கல்வி நிலை

## 3.1 முன்னுரை

உலகில் மனித இனம் முதன் முதலில் லெமூரியாக் கண்டத்தில் தோன்றியமை கடல் கோளல் அழிந்துபட்டமை அதன் வளர் நிலை சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகிறது. சங்க காலத்தின் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்களின் வரலாறு, மக்கள் கல்வியில் மேம்பட்டிருந்தமை ஆகியவை இப்பாடப்பகுதியில் விளக்கப்பெறும்.

## 3.2 குறிக்கோள்கள்

1. தமிழகத்தின் தொன்மை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்

2. உலகில் மனித இனம் தோன்றிய கண்டம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்

3. சங்க காலச் சமூகம், பெண்டிர் நிலை, கல்வி நிலை, பற்றி அறிந்து கொள்வீர்கள்

தமிழகத்தின் தொன்மை பற்றி ஆராய்ந்த மண்ணியல் வல்லுநர்களும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் வட இந்தியாவில் காணப்படுவது போல எரிகுழம்பு எழுந்து படிந்தமைக்கோ, நில நடுக்கங்கள் ஏற்பட்டமைக்கோ அறிகுறிகள் ஒன்றும், தென்னிந்தியாவில் காணப்படவில்லை. ஆதலின் உலகம் தோன்றிய காலத்தில் குழம்பாக இருந்த மண் முதலில் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னிந்தியாவாகும். இவ்விடத்தில் மனிதன் தோன்றியிருக்கலாம்' என்று கருதுகின்றனர்.



மண்ணியல் ஆராய்ச்சியின் பயனாகத் தமிழகத்தின் வரலாறு வரலாற்றுக்கதிர்கள் சென்று ஒளி வீச முடியாத தொல் பழங்காலத்தில்

தொடங்குவதாக அறிகின்றோம் ''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய'' முதுபெரும் நாடு தமிழகம் என்னும் தமிழ்ச் சான்றோர் கருத்தை வரலாற்றாராய்ச்சியாளர்கள் புறக்கணித்தல் இயலாது.



வேறு பல இடங்களிலிருந்து தமிழ் மக்கள் இங்கு குடியேறியவர்கள் என்ற கருத்தை மறுத்து, தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழக மக்கள் தமிழகத்திலேயே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த ஆதிமக்களே ஆவர் என இன்றைய ஆராய்ச்சியாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். தமிழகத்தில் உள்ள ஆறுகள், அருவிகள், குன்றுகள், நகர்கள், குக்கிராமங்கள் அனைத்திற்கும் வழங்கும் தூய தமிழ்ப் பெயர்கள் தமிழ் மக்களின் பிறந்தகம் தமிழகமே ஆகும் என்ற உண்மையை வலியுத்தும் சான்றுகள் ஆகும் என்றுரைப்பர். ஜான் ஈவான்ஸ் என்ற மேனாட்டு அறிஞர். தமிழகத்தின் தொன்மை பற்றிப் பேசுங்கால் ''மனித இனமே, தென்னிந்தியாவிலிருந்தே தோன்றியிருத்தல் வேண்டும். மக்கள், உலகம் முழுவதும், இங்கிருந்தே பரவியிருத்தல் வேண்டும்'' எனக் கூறுகிறார். டாக்டர்.கிரியர்ஸன் டாக்டர்.பர்குஸன் போன்ற ஆராய்ச்சியாளர்களும் இககருத்தையே ஆதரித்து மொழிகின்றனர்.

## 3.3 குமரிக்கண்டம்

குமரிமுனைக்குத் தெற்கே ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது எனக் கருதப்படுகிறது. உலக மக்கள் இனம் முதன் முதலில் அங்குதான் தோன்றியது எனப் புவியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனை 'லெமூரியாக் கொள்கை' என்ற பெயரால் அவர்கள் அழைப்பர் அந்நிலப்பரப்பிற்கு 'லெமூரியாக் கண்டம்' அல்லது 'குமரிக் கண்டம்' எனப்பெயர் சூட்டுவர்.

### 3.3.1 குமரிக்கண்டம் பற்றி ஆய்வு நடத்தியவர்கள்

குமரிக்கண்டம் பற்றி ஆய்வு நடத்தியவர்களுள் முதன்மையானவர்கள் வால்டர்ராலே, ஹெக்கல், சர் ஹோல்டர்ன்ஸ், சர்ஜான் ஈவான்ஸ், ஸ்காட், எலியட் ஆகியோர் ஆவர். குமரி இன மக்கள் இப்போது தென்இந்தியா, இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து ஆகியவற்றில் வாழ்வதாக இவர்கள் கணிப்பர். தங்கள் கூற்றை அரண்செய் இவ்விரு மக்களின் உடல் மொழி அமைப்பில் காணப்படும் ஒற்றுமைகளை இவர்கள் நிரல்படுத்துவர்.

### 3.3.2 குமரிக்கண்டம் இருந்தமையை அறுதியிடும் சான்றுகள்

1. குமரிக்கண்டம் பற்றிய குறிப்பு புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகிறது.

2. பாண்டியனின் தலைநகராய் இருந்த கபாடபுரம் மணி முத்துக்களால் அணிசெய்யப் பெற்றுச் சிறப்புடன் விளங்கியதாக வால்மீகி இராமாயத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு

3. இலங்கை இந்தியாவிலிருந்து ஒரு ஆற்றினால் பிரிக்கப்பட்டிருந்ததாக மெகஸ்தனிசு சுட்டிச் செல்வர். மக்கள் இனம் தோன்றிய இடம் இன்று இந்துமாக் கடலுக்குள் அமிழ்ந்து கிடக்கிறது என 1900-இல் வெளியான 'மனித அறிவியல்' என்ற திங்களேடு சுட்டுகிறது.

4. தலைச்சங்கம் நடைபெற்ற தென்மதுரையும் இடைச்சங்கம் நடைபெற்ற கபாடபுரமும் குமரிக் கண்டத்திலேயே இருந்தன என்பர் புலவர் கோவிந்தன்.

குமரிக் கண்டம் இருந்தமை பற்றி இச்சான்றுகள் சுட்டிச் சொல்லினும் அதன் எல்லைப் பரப்புப் பற்றியோ மறைந்த காலம் பற்றியோ அவற்றில் குறிப்புகள் இல்லை.

### 3.3.3 குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்ட காலம்

குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்ட செய்தி

**ப.்.றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள** (சிலப்:119-120)

எனச் சிலப்பதிகாரத்தில் சுட்டப்பட்டுள்ளது.

மாடலன் குமரியாற்றில் நீராடியது பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஆனால் நூலின் இறுதியில் வைத்து எழுதப்படும் பாயிரத்தில் குமரி என்பது கடலாகக் குறிக்கப்படுகிறது. இவ்விடைப்பட்ட காலப்பகுதியில் குமரியாறு கடல்கொள்ளப்பட்டிருக்க வாய்ப்புண்டு.

## 3.4 சங்ககாலச் சேர, சோழ, பாண்டியர்

### 3.4.1 சேரர்

சங்க இலக்கியத்தில் முந்நூற்றுக்கு மேற்பட்ட மன்னர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் அவர்களுடைய அரசியல் வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுதுவதற்கான குறிப்புகள், சங்க நூல்களில் கிடைக்கவில்லை சேரர் வரலாற்றில் முதல் மன்னனாக அறியப்படுபவன் உதியஞ்சேரல் என்னும் சேர மன்னனாவான். பாரதப் போரில் கலந்து கொண்ட கௌரவ, பாண்டவ சேனைகளுக்குப் பெருஞ்சோறு வழங்கினான் இம்மன்னன் என்று தமிழ் இலக்கியங்களில் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இப்போது மறைந்துள்ள பதிற்றுப்பத்தின் முதற்பத்தின் பாட்டுடைத்தலைவன் இவனே என்று கருத இடமுண்டு. இவன் மகன் இமயவரம்பன் இரண்டாம் பத்துக்குப்

குறிப்பு

பாட்டுடைத் தலைவனாக விளங்குகின்றான். இவன் அரபிக்கடலில் கடற்கொள்ளை நடத்தி வந்த கடம்பர்களை வென்று அவர்களுடைய காவல்மரமான கடம்பை அறுத்து வெற்றிக்கொடி நாட்டினான்.

சேர மன்னருள் மிகவும் சீருடனும், சிறப்புடனும் திகழ்பவன் சேரன் செங்குட்டுவன் ஆவான். இவன் இமயவரம்பனுக்கு இரண்டாம் மனைவியின்பால் பிறந்தவன். இவன் சோழன் கிள்ளிவளவனுக்கு போர்த்துணை நல்கி அவனுக்கு முடிசூட்டுவித்தான். சேரர்கள் பரம்பரையில் வந்த மற்றொரு வேந்தன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்பவன். சதகன்னர்களை முறியடித்தவன் இவன் என்பர். செல்வக்கடுங்கோ வாழியாதன் என்ற மற்றொரு சேர மன்னனைப் பற்றிக் கபிலர் பாடிய பாடல் பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இவன் மகன் பெயர் பெருஞ்சேரல் இரும்பொறை என்பதாகும். தகடூர் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் சோழ, பாண்டிய மன்னரை முறியடித்து வரலாற்றுப் புகழ்மிக்க வெற்றியொன்றைக் கெண்டான். இவனுடைய போர்த்திறனை வியந்து ‘தகடூர் யாத்திரை’ என்னும் ஒரு நூலை ஒரு புலவர் பாடினார். பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்துத் தலைவன் இளஞ்சேரல் இரும்பொறை என்பவன். இவன் கோப்பெருஞ்சோழனையும், பழையன் மாறன் என்ற பாண்டியனையும், விச்சி என்ற குறுநில மன்னனையும் போரில் வென்றான்.

## 3.4.2 சோழர்

சங்க இலக்கியங்களுள் மிகவும் பழையது என்று கருதப்படும் புறநானூற்றுள் பல சோழ மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இச்சோழ மன்னர்களுள் தலைசிறந்து விளங்குபவன் சோழன் கரிகால்பெருவளத்தான் ஆவான். இவன் பொருநராற்றுப்படைக்கும், பட்டினப் பாலைக்கும் பாட்டுடைத்தலைவனாகக் காட்சி தருகிறான். இவனுடைய தந்தை சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேளிர் மகளை மணம் செய்தான். கரிகாற் சோழனுடைய அம்மான் இரும்பிடர்த்தலையார். கரிகாலன் இளமையில் தீயில் சிக்கி உயிர் பிழைத்தான். வெண்ணி என்னும் ஊரில் நிகழ்ந்த ஒரு போரில் சோழன் கரிகாலன் சேரன் பெருஞ்சேரலாதனையும், பாண்டியன் ஒருவனையும் பதினொரு வேளிரையும் ஒருங்கே தோல்வியுறச் செய்தான். இமயம் வரையில் படையெடுத்துச் சென்று தன்னை எதிர்த்து நின்ற மன்னர் அனைவரையும் வணக்கி இமயத்தில் புலி இலச்சினையைப் பொறித்துத் திரும்பினான்.

இதன்பின் சோழ நாட்டில், அரசுரிமைப் போர்கள் நடைபெற்றன. நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் அரசுரிமைப் போராட்டம் நெடுநாள் நடந்து வந்தது. கோவூர்கிழார் என்ற புலவர் இவ்விருவரிடையே சந்து செய்வித்தார். சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சோழன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி, சோழன்

குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் எனப் பல சோழ மன்னர்கள் சங்ககாலத்தில் அரசுபுரிந்து புலவர் பெருமக்களின் பாக்களில் புகழுடம்பு பெற்றுள்ளனர். சோழ வேந்தர்களில் மிகுதியான புகழ் பெற்று விளங்குபவன் சோழன் கோச்செங்கணான் என்பவன் ஆவான். பொய்கையார் என்ற புலவர் 'களவழி நாற்பது' என்ற அரியதொரு நூலைச் செங்கணான் மீது பாடினார். எண்தோள் ஈசற்கு எழுபது மாடக்கோயில் சமைத்தவன். சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் நாயன்மார் வரிசையில் கோச் செங்கணானும் சேர்க்கப்பட்டிருப்பது அவனுடைய பெருமைக்குச் சான்றாகும்.

### 3.4.3 பாண்டியர்

சங்ககாலப் பாண்டிய மன்னர்களுள் காலத்தால் மிகவும் முற்பட்டவன் வடிவலம்ப நின்ற பாண்டியன் என்பான். இவனுடைய அரசவையில் தான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது. இவன் வழியில் வந்தவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவன். வேள்விக்குடிச் செப்பேடுகளால் புகழ்பெறும் இம்மன்னன் வேதியருக்குப் பல யாக சாலைகள் அமைத்துக் கொடுத்தான். இவனே பல வேள்விகளைச் செய்வித்தான் என்றும் கூறுவர்.

மதுரைக் காஞ்சிக்கும், நெடுநல்வாடைக்கும் பாட்டுடைத்தலைவனாக விளங்குபவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். நெடுஞ்செழியன் மிக இளமையிலேயே அரசு கட்டில் ஏறினான். தன்னை எதிர்த்து வந்த ஏழு மன்னர்களை தலையாலங்கானம் என்ற இடத்தில் முறியடித்தான். இந்நெடுஞ்செழியன் பெற்ற வெற்றியைச் சின்னமனூர்ச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

பாண்டியன் கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி என்ற மன்னன் கடைச்சங்கப் பாண்டிய மன்னருள் இறுதியாய் வாழ்ந்தவனாவான். இவன் தன் பகைவன் வேங்கைமார்பனை வென்று அவனுடைய கானப்பேரரணைக் கைப்பற்றினான். எட்டுத்தொகையுள் அகநானூற்றைத் தொகுப்பித்தவன் இம்மன்னனாவான். இவனுடைய அரசவையில் தான் திருக்குறள் அரங்கேற்றம் செய்யப்பட்டதாகக் கருதுகின்றனர்.

மேலே குறிப்பிட்ட பாண்டியரே அன்றி வேறு சில பாண்டிய மன்னர்களின் பெயர்களும் எட்டுத்தொகை நூலுள் காணப்படுகின்றன. சங்க காலத்துப் பாண்டிய மன்னருள் பன்னிருவர் சிறந்த தமிழ்ப் புலவர்களாக விளங்கினர் என்பது பாராட்டத் தக்கதாகும்.

## 3.5 சங்ககாலச் சமூக நிலை

**இயற்கைப் பிரிவுகள்:** சங்ககால மக்களின் சமுதாய அமைப்பு ஐவகை நிலங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. அவைகளாவன

(1) குறிஞ்சி (மலைப் பகுதி) - குறவர் வாழ்ந்து வந்தனர்.

(2) முல்லை (காட்டுப் பகுதி) - ஆயர் உறைந்திருந்தனர்.

(3) மருதம் (வயல் பகுதி) - உழவர் வாழ்க்கை நடத்தினர்.

(4) நெய்தல் (கடற் பகுதி) - பரதவர் வாழ்ந்தனர்.

(5) பாலை (வறண்ட நிலப் பகுதி) – ஆறலைகள்வர்

அவர்களது தொழில்கள் முறையே வேட்டையாடுதல், ஆடு மாடுகளை மேய்த்தல், பயிர்த் தொழில் செய்தல், மீன் பிடித்தல், ஆறலைத்தல் (வழிப்பறிசெய்தல்) ஆகும். இவ்வாறு தொழில்களின் அடிப்படையில் சமுதாயப் பிரிவுகள் ஏற்பட்டன.

சங்கச் சமூகத்தில் சாதிப் பிரிவுகள் இல்லை. தொழில்கள் அடிப்படையிலேயே மக்கள் பாகுபடுத்தப்பட்டனர்.

ஆரியர் புது செல்வாக்கினை ஏற்படுத்தியதால் மாற்றம் ஏற்பட்டது.

தொல்காப்பியர். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என நான்கு வகைப் பிரிவுகளைக் குறிப்பிட்டுள்ளார். ஆரியர் வருகையால் இத்தகு பகுப்பு ஏற்பட்டது.

**பொழுதுபோக்கு:**

அக்கால மக்கள் ஏறுதழுவுதல், விலங்குப் போர், பறவைகளை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பது, பந்தாட்டம், பகடையாட்டம் முதலியவைகளைப் பொழுது போக்கு விளையாட்டுகளாக மேற் கொண்டனர். போர்ப்பயிற்சி செய்வதற்காக ஒவ்வொரு சிற்றூரிலும் 'போரவை' என்னும் 'முரண்களரிப் பயிலகம் இருந்தது.

## 3.6 சங்ககாலப் பெண்டிர் நிலை

சங்க காலத்தில் மகளிர்க்கு மிக உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருந்தது. காதல், இல்லறம், கல்வி, கலை, விழாக்கள், பொழுதுபோக்குகள், ஆடையணிகள் ஆகிய அனைத்திலும் பெண்கள் சமபங்கு பெற்று முழு உரிமையுடன் வாழ்ந்தனர்.



**குறிப்பு**

### 3.6.1 மகளிர் காதல் வாழ்க்கை

பெண்களுக்குத் தங்கு தடையற்ற விடுதலை உரிமை அளிக்கப்பட்டிந்தது. மணம் ஆகும் முன்னரே காதல் புரிதல், காதலித்த ஆடவனுடன் உடன்போக்குக் கொண்டு வாழ்தல், பின்னர் மீண்டு வந்து பெற்றோருடன் கூடி வாழ்தல் ஆகியன வழக்கில் இருந்தன. இவை தகாதவையாகக் கருதப்படவில்லை. தடை செய்யப்படவும் இல்லை.

### 3.6.2 இல்லற வாழ்க்கை

அகவாழ்வில் மனைக்கு விளக்கமாக மனைவி புகழப்பட்டாள். மனைவியின் உயிராகக் கணவன் மதிக்கப்பட்டான்.

'நல்லோள் கணவன் இவன் என்னப்

பல்லோர் கூற' வேண்டும் என ஆடவர் விரும்பினர்.

'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' எனக் கொள்வதை மகளிர் விரும்பினர்.

'இம்மைமாறி மறுமை யாயினும்

நீயாகியர் என் கணவனை

யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே' - (குறுந்தொகை - 49)

என்பது கணவன் மனைவி உறவில் இருந்த அன்பின் தூய்மையையும் உறவின் செறிவையும் விளக்குவனவாகும்.

### 3.6.3 பரத்தை நிலை

ஆடவர் பரத்தையிற் பிரிவு கொள்ளும் பழக்கம் சங்க காலச் சமுதாயத்தில் காணப்பட்டது. பரத்தையிற் பிரிவை மையமாகக் கொண்டு எழுந்த பாடல்கள் சங்க இலக்கியத்தில் நூற்றுக் கணக்கில் உள்ளன.

சங்க இலக்கியம் குறிப்பிடும் காமக்கிழத்தியர் போன்ற பெண்கள், குழந்தைப் பேறு கொண்டதற்குச் சான்று இல்லை. வண்டின் குணம் கொண்டு இக்காமக் கிழத்தியர் ஒரு தலைவனை விடுத்து மற்றொரு தலைவனிடம் உறவு கொண்டதாகவும் செய்திகள் இல்லை. 'ஆடலும் பாடலும் பயின்று, அழகும் இளமையும் காட்டி இன்பமும் பொருளும் வௌவுவோர்' என இளம்பூரணர் பரத்தைக்குப் பொது இலக்கணம் வகுப்பர். சங்க காலக் காமக் கிழத்தியர் இளம்பூரணர் கூற்றின்படி

ஆடலும், பாடலும் பயின்றவர்கள், ஆனால் அழகும், இளமையும் காட்டி இன்பமும் பொருளும் வெளவியோர் அல்லர்.



## 3.6.4 கைம்மை மகளிர் நிலை

போர்க்களத்தில் இறந்த கணவனுக்காகக் கைம்மை நோன்பு கொள்ளும் மகளிரைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. போர்க்களத்தில் இறந்துபட்ட கணவனுடன் மனைவியும் தீக்குளித்தமை பற்றிப் புறநானூறு குறிப்பிடுகிறது. கணவனை இழந்த பின்னர் மகளிர் மறுமணம் செய்து கொண்டதற்குச் சான்று இல்லை. மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்து கொள்ளும் வழக்காறும் காணப்படவில்லை. கணவனை இழந்ததற்கு அடையாளமாகப் பெண்ணின் கூந்தல் களையப்பட்டது. வளைகள் அகற்றப்பட்டன. அணிகள் களையப்பட்டன. எளிய உணவுகள் தரப்பட்டன. விருந்தோம்பும் தகுதி மறுக்கப்பட்டது.

## 3.6.5 அரசியலில் மகளிர் நிலை

சங்க காலத்தில் மகளிர் ஆட்சி புரிந்ததாகவோ, அமைச்சராக இருந்ததாகவோ சான்று இல்லை. படைத்துறையிலும் அவர்கள் பங்கேற்கவில்லை. ஆனால் புலவராக விளங்கி அரசர் மனத்திலும், அரசியலிலும் செல்வாக்குப் பெற்று விளங்கினர். ஔவையார் அதியமானின் பொருட்டுத் தொண்டைமானிடம் தூது சென்றமை, நீண்ட நாள் வாழத் துணை நிற்கும் நெல்லிக் கனியைத் தான் உண்ணாது அதியமான் ஔவைக்கு அளித்தமை, ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் தன்னைப் பாடிய காக்கை பாடினியாருக்கு ஒன்பது காப்பொன்னும் நூறாயிரம் கழஞ்சும்' கொடுத்தமை ஆகிய நிகழ்ச்சிகள் பெண்பாற்புலவர்கள் அரசியலில் பெற்றிருந்த செல்வாக்கை விளக்கி நிற்கின்றன.

சங்ககால மகளிர் போரிடவில்லையே தவிர மற உணர்வில் ஈடு இணையற்று விளங்கித் தம் மக்களை மறப்போர் புரியத் தூண்டி நின்றமையைக் காண்கிறோம். 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்' என மகனுக்கு ஒரு தாய் நினைவூட்டுகிறாள். தன் கணவன் போரில் வென்று திரும்ப வேண்டும் என வேண்டி ஒரு மனைவி நடுகல்லைத் தொழுது நிற்கிறாள். போரில் தன் தந்தையையும் கணவனையும், உடன்இழந்த பின்னரும் போர்ப்பறை கேட்டு,

ஒருமகன் அல்லது இல்லோள்

செருமுகம் நோக்கிச் செல்கென (புறநானூறு - 279)

விடுத்து நிற்கிறாள் ஒரு பெண். தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகு காட்டியிருந்தால் அவனுக்குப் பாலூட்டி வளர்த்த மார்பை அறுத்து எறிவேன் என வஞ்சினம் கூறி, அவன் மார்பில் புண்பட்டு

இறந்து கிடப்பதைக் கண்டவுடன் ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்த தாயைப் புறநானூறு புகழ்ந்து நிற்கிறது.



## 3.7 சங்ககாலக் கல்வி நிலை



தனி மனிதனுடைய வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் உயர்த்துவது கல்வியாகும். இக்கல்வியின் இன்றியமையாமையைத் தமிழர் நன்குணர்ந்திருந்தனர்.

சங்க நாளில் ஏறத்தாழ ஐந்நூறு புலவர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்களில் அரசர் பலர். பெண்டிரும் பலராவார். குறவர் குடிப்பிறந்த குறயெயினியும், இளவெயினியும், குயவர் குடிப் பிறந்த வெண்ணிக் குயத்தியும் சிறந்த புலவர்களாக விளங்கியுள்ளனர் அத்துணைப் பழங்காலத்தில் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு புலவர்கள் இருந்திருப்பரோ என ஐயம் ஏற்படுகிறது. பெண்பாற் புலவர்தம் எண்ணிக்கை 30 என்பர்.

அரசு பள்ளிகளை நடத்தியதாக அறிய முடியவில்லை. எல்லாம் தனியார் நடத்திய திண்ணைப் பள்ளிகளே எனலாம். மரத்தடியும் ஆசிரியர் வீடும், ஊர் அம்பலமும் பள்ளிகளாக விளங்கின. நக்கீரரின் தந்தை மதுரையில் பெரிய ஆசிரியராக அறியப்பட்டார். மதுரையாசிரியர் நல்லந்துவனார். மதுரைப் பாலாசிரியர் என்று புலவர் சுட்டப்பட்டுள்ளனர். மதுரைப் பாலாசிரியர் சேந்தங் கொற்றனார். மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார், மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார் என்போர் சிறுவர்கட்குக் கற்பித்த ஆசிரியர் என்று கருத இடமுண்டு. கிடங்கில் குலபதி நக்கண்ணனார் என்பவர் பேரெண்ணிக்கை கொண்ட மாணாக்கர்க்குக் கல்வி அளித்தவர் போலும். பேராசிரியர், கணக்காயர் என்போர் உயர் கல்வியாசிரியர் என்று கருதத் தக்கோராவர்.

இவ்வாசிரியர்கள் எண்ணும் எழுத்தும் கற்பித்தனர். எண்ணென்பது கணக்கையும் எழுத்தென்பது மற்றவற்றையும் குறித்தது. வாயினால் வகுத்த பக்கம், கையினால் வகுத்த பக்கம் என்று தொல்காப்பியர் ஏட்டுக் கல்வியையும் தொழிற் கல்வியையும் தனித்தனியே பிரித்துக் காட்டுகின்றார். பனையோலையே அன்று ஏடாகப் பயன்பட்டது. எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதினர். எனவே இன்றைய தாட் கடை போல் அன்று ஓலைக்கடை வைத்திருந்தனர். அவர்களில் ஒருவர் பெரும் புலவர் ஓலைக்கடையத்தனார் என்றே அவர் குறிப்பிடப்பட்டார். சுவடியும், உணவும், எழுத்தாணியும், உடையும், அளித்தலைச் சிறந்த அறமென்று ஏலாதிச் செய்யுள் ஒன்று(63) குறிப்பிடுதல் காணலாம். கல்வி ஒரு கால எல்லையுள் அடங்குவதன்று என்றும் அது எல்லையற்ற பரப்புடையது என்றும் வாழ்நாள் முழுவதும் ஒருவன் கற்க வேண்டும் என்றும் புலவர்கள் வற்புறுத்தினர்.

'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்றும் 'மக்களைக் கல்லா வளரவிடல் தீது' என்றும் புலவர்கள் கூறியுள்ளனர். கல்வி சாதி வேறுபாட்டைக் களையக்கூடிய கருவி என்று கருதினர். பாண்டியன் ஒருவன் கல்வியை வற்புறுத்திப் பாடிய செய்யுள் ஒன்று புறத்தில் உள்ளது(183). ஆசிரியர்க்கு உற்றவிடத்தில் உதவியும், மிக்க பொருள் கொடுத்தும், பின்னிற்றலை முனியாமலும் கற்க வேண்டும் என்றும், அங்ஙனம் கற்றவனைத் தாய் பிறரினும் மிகுதியாக விரும்புவாள் என்றும், வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலொருவன் கற்பின் மேற்பாலொருவனும் அவன்கண்படுவான் என்றும் கல்வியின் சிறப்பு குறிப்பிடப்பெற்றுள்ளது .

திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி முதலிய பல அதிகாரங்களில் கல்வியின் பெருமையை வற்புறுத்துகின்றார். கற்றவனுக்கு யாதும் ஊர் என்பது அவர் கருத்து. ஐயமும் திரிபுமின்றிக் கற்று கற்ற, வழியில் ஒழுகுதல் வேண்டுமென்றும், எண்ணும் எழுத்தும் இருகண்கள் என்றும், கற்றோர்க்கு இருப்பதே கண் என்றும் ஏனையோர்க்கு இருப்பது புண்ணென்றும், கல்லாதவர் விலங்குக்குச் சமமானவர்கள் என்றும் கூறுவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகநூல்கள் தவிர நீதி நூல்கள் அனைத்தும் கல்வி பற்றிய பல செய்திகளைக் கூறுகின்றன. நாலடியார் 'நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் கல்வி யழகே அழகு'(1); என்கிறது. கடை நிலத்திற் பிறந்தவர் எனினும் கற்றறிந்தவரைத் தலை நிலத்து வைப்பர் என்றும் கூறுகிறது(3).

நான்மணிக்கடிகை 'தனக்குப்பாழ் கற்றறிவில்லா உடம்பு'(22) என்றும், 'கற்றலின் வாய்த்த பிறப்பில்லை'(31) என்றும், 'கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றவன் இளமை பாராட்டும் உலகு'(65) என்றும், 'கற்றோரிடம் கழிவிரக்கம் இல்லை'(10)என்றும், 'கற்றான் தளரின் எழுந்திருக்கும்'(74) என்றும், 'கல்லாமை குலனையும் குடியையும் கொல்லும்'என்றும்(82), கல்லா ஒருவனுக்கு அவன் சொல்லே கூற்றாக அமையும்' (84), 'இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம்' (93), 'மக்களைக் கல்லாமல் வளரவிடுவது தீது' (94) என்றும் குறித்துள்ளது.

இனியவை நாற்பது 'பிச்சை புக்காயினும் கற்றல் மிக வினிதே' (1), 'பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய கற்றலின் காழ் இனிய தில்' (41) என்றும் கூறியுள்ளது. திரிகடுகமோ கல்லாதவர்க்கு இனமாய் ஒழுகுதல் அறியாமை(3) என்றும், கணக்காயர் இல்லாத ஊரால் நன்மை இல்லை(10) நல்ல மாணாக்கன் என்பவன் கேட்டதை மறத்தலாகாது(12) என்றும் குறிப்பிடுகிறது. மேலும், கல்லாதவன் என்று இகழப்படுதல் எல்லார்க்கும் இன்னாதது(20) என்றும், சீலம் இனிதுடைய ஆசான் உலகம் எனப்படுவான்(26), கற்றாரைக் கைவிட்டு வாழ்தல் நரகம் புகும் வழி(99) என்றும் குறிப்பிடுகிறது.

குறிப்பு

சிறுபஞ்சமூலம் என்னும் நூல், அரசன், ஆரியன், தாய், தந்தை, தம்முன் என்னும் ஐவரையும் ஐங்குரவர் என்று பாராட்டிக் கூறுகிறது(16). மேலும் இந்நூல் மாணாக்கனாவான் நடந்து கொள்ள வேண்டிய முறையை

**"நின்றக்கால் நிற்க அடக்கத்தாலென்றும்**
**இருந்தக்கால் ஏவாமை ஏகார் - பெருந்தக்கார்**
**சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக மீட்டும்**
**வினாவற்க சொல்லொழிந்தக் கால்"(74)**

என்று அழகுறக் கூறுதல் காணலாம்.

பழமொழியென்னும் நூலும் கல்வியின் பெருமையைப் பெரிதும் வற்புறுத்துகிறது. இளமைக் காலத்தில் கல்லாதவன் மூப்பிற் கற்பான் என்று கொள்ள முடியுமா? என்று கேட்கிறது. இந்நூல்(1) மனிதன் எவ்வளவு கற்பினும் முழுமையடைய முடியாதென்றும் கற்றொறும் அறியாமை மேலும் இருந்து கொண்டே இருக்குமென்றும் அதனால் ஒருவன் கற்றவனானாலும் தான் கல்லாதவன் என்றே நினைய வேண்டும் என்றும் கூறுகிறார்(2). ஆற்றவும் கற்றவர் அறிவுடையார்; அவர் செல்லாத நாடில்லை அந்நாடு அவர்க்கு வேற்று நாடாகாது: அவருடையதே என்று கூறி, 'ஆற்றுணா வேண்டுவதில்' என்ற பழமொழியினைக் கூறுகிறார்(4). கற்றலின் கேட்டலே நன்றென்றும் கூறுகிறார்(5). குலவிச்சைக் கல்லாமல் பாகம்படும்(6),பாம்பறியும் பாம்பின் கால் என்பது போலப் புலமை மிக்கவரைச் சரியாக உணர்தல் அத்தகையோர்க்கே சாலும் என்கிறார்(7). கல்லாமையின் இழிவினையும் இந்நூல் அதிகாரம்(2) கூறியுள்ளது. மேற்காட்டிய சான்றுகளால் தமிழர் கல்வியின் பெருமை, கற்பவரின் இயல்பு, கற்றார் ஒழுக வேண்டிய முறை ஆகியவை பற்றிய தெளிந்த அறிவுடையோராய் விளங்கினர் என்பதை அறிய இயலும்.

இத்தகு கல்வியை அளித்தல் தந்தையின் தலையாய கடமையென்பதனை வள்ளுவர்

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்" (திருக்குறள் 67)**

என்று வலியுறுத்துகின்றார்.

கல்வியென்பது வாழ்நாள் முழுவதும் தொடர்வதோடன்றிப் பிறவிதொறும் தொடர்ந்து பலனளிக்க வல்லது என்றும் கருதினார் வள்ளுவர்.அதனால் தான் "என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்று வினாத் தொடுத்த வள்ளுவர்.

**“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து” (திருக்குறள்-398)** என்கிறார்.

கல்வியென்பது இன்று உத்தியோகம் பெறுவதற்கு என்று கருதப்படுகிறது. ஆனால் பண்டைத் தமிழர் அது பண்பாட்டை வளர்த்து வீடுபேறளிக்கும் மருந்து என்றே கருதினர்.

**“இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாம்உளராக் கேடின்றால்**
**எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து” (நாலடி.132)**
**“கற்றிண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றிண்டு வாரா நெறி” ( திருக்குறள்-356)**
**“கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்” (திருக்குறள்-2)**

என்பவை இதற்குச் சான்று.

எண்ணும் எழுத்துமே அன்று கற்பிக்கப்பட்டன என முன்பே கூறினோம். கி.பி.7-ம் நூற்றாண்டினரான அப்பர் பெருமான் கூட

**“எண் அவன் காண் எழுத்தவன் காண்**
**இன்பக் கேள்வி இசையவன் காண்” (ஆறாம் திருமுறை.485)**

என்றார். அன்று எண்ணூல்கள் இருந்தன. ஒன்று முதல் கோடி ஈறாக எண்ண அறிந்திருந்தனர். அது மட்டுமின்றி எண்ணிலடங்காத பேரெண்ணினைக் குறிக்கத் தாமரை, ஆம்பல், வெள்ளம் என்னும் சொற்களைக் கையாண்டுள்ளனர். ‘அடையடுப் பறியா அருவியாம்பல்’, என்று கபிலர் பதிற்றுப்பத்தில் குறிப்பிடுதல் காணலாம். இவ்வாறே பின்னங்களும் வழக்கிலிருந்தன. ‘காணி(பழமொழி 32) முந்திரி (பழமொழி 346) என்னும் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**“முந்திரிமேல் காணி மிகுவதேல் கீழ்தன்னை**
**இந்திரனா எண்ணிவிடும்” (நாலடி.கீழமை6)**

இங்ஙனமே ‘இம்மி’ (நாலடி.94) என்னும் சிற்றளவும் குறிக்கப்பட்டுள்ளது.

அளவுகளில் நாழி, தூணி (புறம், 189, நற்றி.16) பதக்கு (தொல்) என்னும் அளவுகள் அறியப்பட்டிருந்தன. சிலம்பில் காதம், காவதம்

என்பனவும், மணிமேகலையில் யோசனையும் குறிக்கப்பட்டுள்ளமை காணலாம்.



**குறிப்பு**

எண்ணும் எழுத்தும் தவிர, வானியல், மருத்துவம், இசை, ஓவியம், சிற்பம், நாட்டியம் முதலியவை பற்றிய கல்வியும் பண்டு சிறந்திருந்தது. 'ஓவியச்செந்நூல்' பற்றி மணிமேகலை கூறுகின்றது. இங்ஙனமே கட்டட நூல் பற்றி நெடுநல்வாடை 'நூலறி புலவர்" என்று பேசியுள்ளது. இசை நூல் பற்றித் தொல்காப்பியம் "யாழின் மறை' என்று குறிப்பிட்டுள்ளது. அன்று கற்றறிந்தார் கூடிச் சிந்திக்க வாய்ப்பிருந்தது. சங்கம் அதற்காக அமைந்ததேயாகும். பட்டி மண்டபங்கள் வைத்து அறிஞர்கள் பல பொருள்களைப் பற்றி வாதிட்டதற்குச் சான்றுகள் உண்டு.

**"பல்கேள்வித் துறைபோகிய**
**தொல்லாணை நல்லாசிரியர்**
**உறம்குறித்தெடுத்த உருகெழு கொடியும்" - பட்டினப்.169-71**

என்பது சான்று.

சமண, பௌத்த மதத்தினர் தம் தங்குமிடத்தைப் பள்ளிகள் என்பர். அங்கு வைத்துக் கல்வியளித்தனர். இதனாலேயே பள்ளி என்னும் சொல் கல்வி நிலையத்தைக் குறிப்பதாயிற்று.

உயர்கல்வி வீட்டிலிருந்து பிரிந்து சென்று அங்கேயே தங்கிப் படிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. உயர்கல்விக்கான பிரிவை மூன்றாண்டாக வரையறை செய்வர் தொல்காப்பியர்.

எழுத்தும் எண்ணும் படிப்பது துவக்க நிலைக் கல்வியாகியது. இரண்டும் வாய்பாடாகவே படித்து மனப்பாடம் செய்துகொண்டனர். பனையோலையை எழுதப் பயன்படுத்தினர். இந்த ஓலை இதழ்கள் சேர்த்துக் கட்டிய சுவடி ஏட்டுச் சுவடி அல்லது நூல் எனப்பட்டது.

## 3.8 தொகுத்துக் காண்போம்

1. தமிழகத்தின் தொன்மை குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்
2. புவியியல் வல்லுநர்கள் குறிப்பிட்ட குமரிக்கண்டம் பற்றி அறிந்து கொண்டீர்கள்
3. சங்க கால மக்களின் சமுதாய நிலை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 3.9 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. குமரிக் கண்டம் பற்றி விவரிக்க.

2. பண்டைய மக்களின் கல்வி நிலை குறித்து விளக்குக.

## 3.10 மேலும் அறித்துகொள்ள

முனைவர் கோ.தங்கவேலு - தாய்நில வரலாறு.(தொகுதி-1)
ம.சோ.விக்டர் - குமரிக்கண்டம்



குறிப்பு

# கூறு-4

# பண்டைய தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் உள்ள தொடர்பு, பண்டையத் தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள்

## 4.1 முன்னுரை

பண்டைய நகர நாகரிகத்தை சிந்துவெளி நாகரிகம் எனவும் அழைப்பர். தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு என்பதைச் சிந்துவெளிப் பானைக் குறியீடுகளும் மெகாலித்திய காலகட்டத்து பானைக் குறியீடுகளும் புலப்படுத்துகின்றன. பண்டையத் தமிழ்ர் அயல்நாட்டுடன் வாணிபத்தில் தொடர்பில் சிறந்து விளங்கினர். வாணிபத் தொடர்பில் மிளகு மிக உயர்ந்த பொருளாக விளங்கியது. இதில் பண்டமாற்று முறை சிறந்திருந்தது.

## 4.2 குறிக்கோள்கள்

1. சிந்துவெளி நாகரிகம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
2. பண்டைய தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்துக்கும் இருந்த தொடர்பைத் தெரிந்து கொள்வீர்கள்.
3. தமிழர்களின் வணிகப் பண்பு குறித்துத் தெரிந்து கொள்வீர்கள்.

## 4.3 பண்டையத் தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் இருந்த தொடர்பு

இந்தியத் தொல்நகர் நாகரிகம் சிந்துவெளி நாகரிகம் என அறியப்படுகின்றது. இதற்கும் தென்னகத்துமிருந்த உறவை அடியில் காணலாம். பண்டைய இந்திய வரலாற்றில் உருவாகிய சில தடுமாற்றங்களைப் போன்று இந்தப் பண்டைய இந்திய நாகரிகத்திலும் மயக்கம் உருவாக்கினர். காரணம் 18-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் தவறான கோணத்திலிருந்து பண்டை இந்திய பாரம்பரியத்தை நோக்கிய பாரம்பரிய வியப்பாளர்களாகிய வில்லியம் சோன்சு,

கோல்புருக்கு முதலியோரும், பேரரசுக்கோட்பாட்டு இந்திய வரலாற்று வரைவினர்களாகிய சேம்கமில்லும் அவருடைய வாரிசுகளும் தடம்புரண்டு பண்டைய இந்தியாவை ஒரு பாரம்பரியம் என்ற முடிவுக்கு வந்தனர். எழுத்தில்லாது, இலக்கியமில்லாது, நாடோடி மேய்ப்பர்களாக இந்தியாவில் முதலில் பண்பாட்டைத் தோற்றுவித்தவர்கள் என்றனர். 1922-ல் மொகஞ்சதாரோ, அரப்பா நகர நாகரிகத்தைக் கண்டுபிடித்ததும் வியந்தனர். பண்பாட்டுப் பாலைவனத்தில் நகர நாகரிகமா என்று மூக்கில் விரல் வைத்தனர். சுமேரிய நகர நாகரித்தின் விரிவாக்கம் எனக்கூறி மனநிறைவு கொண்டோருமுளர்; சிந்துவெளியில் பண்டை இந்திய திராவிடப் பாரம்பரியத்தைக் கண்டதும் இதைச் சிந்துவெளிக்குச் சொந்தமான ஒரு தனிப்பட்ட நாகரிகம் என்றனர். இதன் முழு வடிவம் அரப்பா நகரில் கண்டதால் சிந்துவெளி நாகரிகத்தைப் பின்னர் அரப்பா நாகரிகம் என்றனர் ஆரியா வருகைக்கு முந்திய பரந்த இந்திய திராவிடப் பாரம்பரியத்தின் சிதைவுற்ற பகுதிகளே என்று அன்று அறிந்தார்களில்லை.

ஆய்வு தொடர்ந்தது: நகரங்கள் பல வெளிவந்தன குசராத்துக்கு மேற்கில் கடலடியில் துவரை நகரைச் சில ஆண்டுகளுக்குமுன் கண்டனர். இந் நாகரிகத்தின் எச்சங்களைத் தீபகற்பம் முழுவதும் கண்டனர். பழைய முடிவுகள் தப்பானவை என ஆய்வாளர்கள் தடுமாறுகின்றனர். இந்தப் பண்டைய இந்திய நாகரிகம் துணைக்கண்டம் முழுவதுக்கும் சொந்தமானது; இந்திய பாரம்பரிய வளர்ச்சியில் மெகாலித்தியப் பண்பாட்டுக்கு முந்தியது, உயர்ந்தது: சிறந்தது என்ற கணிப்புக்கு மெல்ல மெல்ல வந்துகொண்டிருக்கின்றனர். மெகாலித்திய நாகரிகம் கடைச்சங்க கால நாகரிகத்தில் இணைந்தது எனத் துணியலாம். தமிழகத்தில் பண்டைய இந்திய நகர நாகரிகத் தொடர்புகள், சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கின.

1. புதுவை வரலாற்றுக்கழகம் விழுப்புரத்துக்கருகில் கீழ்வாலையில் கண்ட இரத குடைக்கல் ஓவியங்களும் எழுத்துக்களும் அரிய பல சான்றுகளைத் தருகின்றன. அதில் சிகப்பு நிறத்தில் ஓவியங்களும் எழுத்துக்களும் உள்ளன. இங்குள்ள எழுத்துக்கள் சிந்துவெளியிலிருந்த அரப்பா, மொகஞ்சதாரோ நகரங்களிலும் குசராத்து மாநிலத்து லோதால் நகரிலும், இராசத்தான் மாநிலத்து காளிபங்கன் நகரிலும் கிடைத்த எழுத்து மாதிரி உள்ளன. இந்தப் பண்டைய இந்திய நகர நாகரிகத்தையும் அரிய பண்பாட்டையும் படைத்த மக்களோடு இனத்தொடர்பும் பண்பாட்டுத் தொடர்பும் உடைய மக்கள் தமிழகத்திலும் வாழ்ந்திருந்தனர் என்பதைக் கீழ்வாலை ஆதாரங்கள் விளக்கிக் கொண்டிருக்கின்றன. இவை போன்ற ஆதாரங்கள் தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறையினரின் கைக்கு வந்த வண்ணமுள்ளன.

2. பண்டைத் தென்னகத்து எழுத்துகள், மட்பாண்டக் குறியீடுகள் ஆகியவற்றுக்கும் பண்டைய சிந்துவெளி எழுத்துக்கும் நெருக்கமான தொடர்பிருப்பதை மெகாலித்திய காலகட்டப் பானைக்குறியீடுகளையும்,

சிந்துவெளிப் பானைக் குறியீடுகளையும் ஒப்பிட்டு பி.பி. இலால் (இந்திய தொல் ஆய்வுத்துறை இயக்குநர்) என்பவர் நிரூபித்துள்ளார்.



**குறிப்பு**

சிந்துவெளி நாகரிகத்தின் சிதைவுக்குப் பின்னர், பொருளாதார வாழ்வு வேளாண்மைக்குத் திரும்பியது. இலக்கியமும், எழுத்துக் கலையும் வணிகர் மற்றும் மேல்குடியினரிலிருந்து சாமானியர் வசம் சென்றது. இப்பெரும் மாறுதலின் கருத்து ஒலி எழுத்தாக மாறியது. இந்த உருமாற்ற காலத்தின் துவக்கத்தில் இரண்டு வகை பானையோடுகளிலும், இலங்கை ஆனைக்கோட்டை முத்திரையிலும் தொல்லாய்வினர் இதை வெளிக் கொணர்ந்தனர். இந்த உருமாற்ற வளர்ச்சியின் கடைசி எல்லையில் வடபுலத்தில் அசோகரின் பிராமி எழுத்துக்களாகவும் பரிணமித்திருந்தன. தென்னகத்தில் குமரி முதல் தக்காணம் வரை எழுதப் பயன்பட்ட தாமிழியும், வடபுலத்தில் பயன்பட்ட பிராமியும் சிந்துவெளி எழுத்தோவியங்களின் வாரிசுகளாக வளர்ந்த இரட்டையர்களேயாம் என்பதை இப்போது நிரூபித்த வண்ணமுள்ளனர்.

3. சிந்துவெளியில் கிடைத்த எலும்புக்கூடுகளில் பெரும்பாலனவையும் தாமிரபரணி ஆற்றங்கரை ஆதிச்சநல்லூரில் கிடைத்த எலும்புக்கூடுகளும் தமிழகத்தின் வடக்கிலும் தக்காணத்தின் தெற்கிலும் தொல்லாய்வினர் கண்டெடுத்த எலும்புக்கூடுகளும் ஒரே மக்கள் இனத்தைச் சார்ந்தவையாக உள்ளன.

4. இறந்தோரைத் தெற்கு வடக்காகப் புதைக்கும் பழக்கம் சிந்துவெளிக்கும் பண்டையத் தமிழகத்துக்கும் பொதுவான நடைமுறையாக இருந்திருக்கிறது.

5. உருண்டை வடிவான ஈமத்தாழிகள் சிந்துவெளிக்கும் தமிழகத்துக்கும் பொதுவான தொழில்நுட்ப முறையில் இருந்திருக்கின்றன.

6. சிந்துளி நகரில் கண்ட பண்டைய கிணறுகளுக்கும் பாலாற்றுப் படுகையிலும் காவிரிப் படுகையிலும் கண்ட பண்டைக்கால கிணறுகளுக்கும் வேறுபாடில்லை.

7. பண்டைய தமிழக மக்கள் பயன்படுத்திய திண்ணமும் நீளமும்அகலமும் கூடிய செங்கற்கள் சிந்துவெளிச் செங்கற்கள் மாதிரியிலிருந்தன.

8. சக்தி, சிவன் இலிங்கவழிபாட்டு ஆதாரங்களாக ஆதிச்ச நல்லூர், திருக்காம்புலியூர் முதலிய இடங்களில் கிடைத்தவை கலைப்பண்பிலும் சமய நெறியிலும் சிந்துவெளியுடன் உள்ள நெருக்கமான உறவை நிரூபிக்கின்றன.

இவை போன்ற பல சான்றுகள் தமிழகத்துப் பண்பாட்டுக்கும் சிந்துவெளிப் பண்பாட்டுக்கு மிருந்த நெருக்கமான உறவை விளக்கிக் கொண்டிருப்பதுடன் பண்டைய இந்தியா முழுவதிலும் ஒரு

அனைத்திந்தியப் பண்பாடும் பாரம்பரியமும் வளர்ந்து நிறைவு பெற்றிருந்தமையை நிரூபிக்கின்றன.

## 4.4 பண்டைத் தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள்

தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பை, தொடர்பு கொண்ட நாடுகளின் அடிப்படையில் மேலை நாடுகளுடன் கொண்ட தொடர்பு, கீழை நாடுகளுடன் கொண்ட தொடர்பு என இருவகையாகப் பகுக்கலாம். தமிழகத்துடன் வாணிகத் தொடர்பு கொண்ட மேலை நாடுகளுள் கிரேக்கம், உரோமம், எகிப்து, பாபிலோனியா, அரேபியா, சுமேரியா ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கீழைநாடுகளுள் சீனம், மலேசியா, சாவகம், வடபோர்னியா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சேரநாட்டுத் துறைமுகங்களுள் முசிறியும், சோழநாட்டுத் துறைமுகங்களுள் காவிரிப்பூம்பட்டினமும் பாண்டியநாட்டுத் துறைமுகங்களுள் கொற்கையும் அயல்நாட்டு வாணிகத் தொடர்பில் சிறந்த பங்கேற்றன. முசிறியில் மிளகும், கொற்கையில் முத்தும், காவிரிபூம்பட்டினத்தில் துகிலும் அகிலும் சந்தனமும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுள் குறிப்பிடத்தக்கவை. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் நான்கில் மூன்று பங்கு மிளகு என்பர் டாக்டர் வித்தியானந்தன். அயல்நாடுகளில் இம்மிளகு உணவைப் பாதுகாக்கவும் மருந்து செய்யவும் பயன்படுத்தப்பட்டது. கிரேக்க வல்லுநர் கிப்பாகிரேட்டசு மிளகை, ‘இந்திய மருந்து’, என்ற பெயரால் அழைப்பர்.

### 4.4.1 அயல்நாட்டுத் தொடர்பை நிறுவும் அகப்புறச் சான்றுகள்

புறச் சான்றுகள்: ஹெரோடோடஸ் என்ற கிரேக்க வரலாற்றாசிரியரும் ஹிப்பாக்கிரேட்டசு என்ற கிரேக்க மருத்துவ வல்லுநரும் ஸ்டிராபோ என்ற உரோமப் புவியில் ஆசிரியரும் பழந்தமிழகம் கிரேக்க உரோமத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பைப் குறிப்பிடுகின்றனர்.

பிற்காலத் தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பை அரேபிய வரலாற்று ஆசிரியரான வாசப்,வெனிஸ் பயணியான மார்க்கோபோலோ மூர்ப்பயணியான இபின்பதூதா ஆகியோர் எடுத்துரைக்கின்றனர்.

‘எரித்திரியக் கடலின் பெரிப்புளுசு’ என்ற வரலாற்று நூல் ஸ்காப் என்பவரால் கி.பி.60-இல் எழுதப்பட்டது. இந்நூல் தமிழகத்தின் வாணிகச் சிறப்பை விளக்கி உரைக்கின்றது.

இந்நூலில் காவிரிப்பூம்பட்டினம், குமரி, கொற்கை, தொண்டி, நாகப்பட்டினம், புதுச்சேரி, முசிறி, ஆகியவை தமிழகத் துறைமுகங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. பட்டு, மிளகு, முத்து, இரத்தினம் யானைத்தந்தங்கள் ஆகியவை முசிறியில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன எனவும் அந்நூல் குறிப்பிடுகிறது. பாண்டிய நாட்டில் முத்துக்குளிக்கும் தொழிலை ஆயுள் தண்டனை பெற்ற குற்றவாளிகள் மேற்கொண்டிருந்தனர் எனப் எரித்திரியக் கடலின் பெரிப்புளுசு, செங்கடல் செலவு என்ற நூல்கள் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியங்களிலோ, பிறதமிழ் இலக்கியங்களிலோ இக்குறிப்பு இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கொல்கி எனத் தமிழகத் துறைமுகப்பட்டினம் ஒன்றைப் பெரிப்புளுசு குறிப்பிடுகிறது. சங்க நூல்கள் சுட்டும் கொற்கையே இது என்பர் ஸோ.ஃப்.

கி.பி.140-இல் வாழ்ந்த தாலமி சோழநாட்டின் உள்நாட்டுப் பட்டணங்களாக மாகூர், கர்மாரம்' ஆகிய நகரங்களைக் குறிப்பிடுவர். அவை முறையே பழையன் ஆண்ட மோகூரும் கரிகாலன் சோழப் பேரரசுடன இணைத்த கழுமலமும் ஆக இருக்கலாம் என்பர் சிவராசப்பிள்ளை கரூரா என்ற நகரைச் சேரநாட்டின் தலைநகராகத் தாலமி குறிப்பிடுவர். அது குறிப்பிடும் காபேரிசு சோழரது துறைமுகப்பட்டினமான காவிரிப் பூம்பட்டினமாக இருக்கலாம் என்பர் டாக்டர் பெர்னல்.

கவி, தோகை என்ற தமிழச் சொற்கள் ஹீப்ரு மொழியில் கபி, துகி, என மருவி வழங்கப்படுகின்றன. இஞ்சிவேர், கருவாப்பட்டை ஆகிய சொற்கள் ஜிஞ்சிபர், கற்பியன் எனத்திரிந்து வழங்கப்படுகின்றன. தமிழகத்திற்கும் மேற்காசியாவிற்கும், இடைப்பட்ட வாணிக வளத்தை இச்சொல் பரிமாற்றங்கள் அரண் செய்கின்றன.

## 4.4.2 அகச்சான்றுகள்

தமிழ் இலக்கியங்களில் பெருங்கடலில் ஓடும் கலம் நாவாய் எனவும், பெருங்கப்பல்கள் வங்கம் எனவும் அழைக்கப்பட்டுள. கலங்கள் கரைசேரத் துணையாகக் கடற்கரைப் பட்டினங்களில் கலங்கரை விளக்கம் நிறுவப்பட்டிருந்தமை பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. ஏற்றுமதி, இறக்குமதிக்கெனக் குவிக்கப்பட்டுள்ள பொருள்கள் அரசு பண்டகசாலையில் முத்திரையிட்ட பின்னரே வெளிச்செல்ல அனுமதிக்கப் பெற்றமை பற்றிப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. ஏற்றுமதிக்கெனக் குவிந்துகிடந்த பொருள்களுக்குத் தீர்வை விதிப்பதற்கெனத் தனி அலுவலர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைச் சேமித்து வைக்கக் காப்பகங்கள் அரசு பொறுப்பில் இயங்கின.

பூம்புகாரில் விற்பனைக்கு வைத்திருந்த பொருள்களை அடியார்க்கு நல்லார் தம் உரையில் சுட்டிக்காட்டுகிறார். அவற்றுள் அகில், ஆரம்,

கர்ப்பூரம், துகில், வாசனைப் பொருள்கள் ஆகிய பொருள்குவியல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தமிழகம் ஏற்றுமதி செய்த வணிகப் பொருள்களின் பட்டியலில் அகில், அரிசி, ஆடைகள், ஆரம், இஞ்சி, இலவங்கம், ஏலம், கருங்காலி, மயில், மிளகு, முத்து ஆகியன சிறப்பிடம் பெற்றிருந்தன. தமிழகக் கப்பல்கள் பொருளை விற்றுப் பொன்னுடன் திரும்பி வருதலை,

**பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடு ஆர நன்கு இழிதரும்**
**ஆடியல் பெருநாவாய் (மதுரைக்காஞ்சி-81-83)**

என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. யவனக் கப்பல்கள் பொன்னொடு வந்து மிளகொடு திரும்பிச் செல்லுதலை.

**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
**வளங்கெழு முசிறி (அகநானூறு -149)**

என அகநானூறு குறிப்பிடுகிறது. தமிழக வணிகர்கள் அறநெறி பிழையாமல் வாணிகம் செய்தனர் எனப் பட்டினப்பாலை சுட்டுகிறது.

**நடுவுநின்ற நன்நெஞ்சினர்**
**வடுவு அஞ்சிவாய்மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்புநாடிக்**
**கொள்வதூஉம் மிகைகொளாது**
**கொடுப்பதூஉம் குறைபடாது**
**பல்பண்டம் பகர்ந்துவீசும் (பட்டினப்பாலை 206-210)**

நடுவுநிலைமை, பொய்யாமை, குறைந்த ஆதாயம், குற்றம் செய்ய அஞ்சுதல் ஆகிய நேரிய உணர்வுகள் வாணிகத்திற்கு அடிப்படையாக விளங்கியமையை இதன்வழி அறியமுடிகிறது.

கிரேக்கர்களையும் உரோமர்களையும் தமிழ் இலக்கியங்கள் யவனர் எனப் பெயரிட்டு அழைக்கக் காண்கிறோம். அவர்களுக்கெனத் தனி இருப்பிடங்கள் தமிழகத்தில் இருந்தன. அது 'யவனச் சேரி' எனச் சிலம்பில் அழைக்கப்படுகிறது. தமிழ் மன்னர்கள் அவர்களைக் காவல் துறையில் ஈடுபடுத்தியதை

**கடிமதில் வாயில் காவலில் சிறந்த**
**அடல் வாள் யவனர் - (சிலப்பதிகாரம் 14:66-67)**

எனச் சிலப்பதிகாரம் பகர்கிறது.

**வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் -(முல்லைப்பாட்டு -61)**

எனயவன உடல் வலிமை முல்லைப்பாட்டில் புகழப்படுகிறது. யவனர் செய்த நன்கலன்களைப் பற்றிப் புறநானூறும்(56) அவர்கள் செய்த மகரவீணை, பாவை விளக்கு, நகைகள் ஆகியன பற்றிப் பெருங்கதையும் குறிப்பிடுகின்றன. யவனத் தச்சர்கள் தமிழகத்தில் பணிபுரிந்ததை மணிமேகலை எடுத்துரைக்கிறது.

**'பழைய ஏற்பாட்டில்' தமிழ்ச்சொற்கள்**

தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பு மிகவும் பழமையுடையது. கி.மு1490-இலேயே இறைவழிபாட்டில் ஏலக்காய் பயன்படுத்தப்பட்ட செய்தியை பழைய ஏற்பாடு சுட்டுகிறது. கி.மு.1000இல் தென் அரேபிய நாட்டு ஷீபா, இஸ்ரேல் நாட்டு மன்னன் சாலமனுக்கு ஏலம், இலவங்கம் ஆகிய நறுமணப்பொருட்களைக் கையுறையாகத் தந்ததாக அந்நூல் மேலும் குறிப்பிடுகிறது. சாலமனுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சந்தனமரம், தந்தம், பொன், வெள்ளி வாலில்லாக்குரங்கு ஆகியன தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டதாக அறிகிறோம்.

## 4.4.3 தமிழகம் சுமேரியாவுடன் கொண்ட வாணிகத்தொடர்பு

சுமேரியாவின் தலைநகரமான 'உர்' என்ற இடத்தில் சந்திரனுக்குக் கட்டப்பட்ட கோவிலின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அச்சிதைவுகளில் தமிழகத்தின் தேக்கு மரத்துண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதன் வயதைக் கி.மு.4000 என மதிப்பிடுவர் சாய்ஸ்.

## 4.4.4 எகிப்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு

தமிழ்நாட்டுப் பொருள்களின் இறக்குமதிக் களங்களாக எகிப்தின் அலெக்சாண்டிரியா, சோமாலிலாந்து ஆகியன விளங்கின. எகிப்திலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதியான பொருள்களுள் பொன் இழைகளால் ஆன ஆடைகள், கண்ணாடிப்பொருள்கள், அத்தர் ஆகியன குறிப்பிடத்தக்கவை. தமிழகத்திலிருந்து சென்ற அரிசி, கருங்காலி, தந்தம், நறுமணப்பொருள்கள், நூலாடை ஆகியன எகிப்து அரசர்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டன. எகிப்தில் உள்ள கி.மு.15-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் இலவங்கப்பட்டை குறிக்கப்பட்டுள்ளது. எகிப்தில் உள்ள 'மெம்பிஸ்' இன் புதைப்பொருள் சிதைவுகளில் இந்தியரின் ஓவியங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதைக் கந்தையாபிள்ளை சுட்டிக் காட்டுவர்.

சுமேரியாவுடன் கொண்ட தொடர்பு போன்றே தமிழகம் எகிப்துடன் கொண்ட தொடர்பும் மிகப் பழமையானது. தமிழகமும் எகிப்தும் கொண்ட வாணிகத் தொடர்பின் பழமை பற்றிப் பெரிப்புளுசு நூலின் பதிப்பாசிரியர் ஸ்காப் தனது பதிப்புரையில் கிரேக்க மக்கள் அநாகரிகத்திலிருந்து விழித்து எழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பே, எகிப்தும் தமிழகமும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது.

குறிப்பு

## 4.4.5 அரேபியாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு

அரேபியர் தமிழகத்திலிருந்து இஞ்சி, இலவங்கம், ஏலம், குரங்கு, சந்தனம், தந்தம், தேக்கு, பூந்துகில், மிளகு, முத்து ஆகியனவற்றை ஏடன் துறைமுகத்தில் பெற்று ஆப்பிரிக்காவுக்கு விற்பனை செய்ததாக அறிகிறோம். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சிரியா, எகிப்து, பார்சியா ஆகிய நாடுகளை அரேபியர் வென்றபோது அரேபியருடன் தமிழகம் கொண்ட வாணிகத் தொடர்பு புத்துயிர் பெற்றது. அரபுநாட்டுக் குதிரைகள் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டன். தமிழகம் ஆண்டுதோறும் அரேபியாவிலிருந்து 10,000 குதிரைகளை வாங்கியதாக வாசப் குறிப்பிடுவர். “குதிரை வளர்க்கும் கலையை தமிழர்கள் அறியாததால் இவ்வாணிகத்தால் தமிழகத்திற்குப் பெரும் இழப்பு நேரிட்டது” என மார்க்கோபோலாவும் வாசப்பும் குறிப்பிடுகின்றனர்.

## 4.4.6 பாபிலோனியாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு

அரிசி, சந்தனம், மயில் போன்றவை தமிழகத்தில் இருந்து பாபிலோனியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டன. இப்பொருள்கள் அம்மொழியில் தூய திராவிடமொழிப் பெயரைக் கொண்டுள்ளமை காண்கிறோம். “கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் பாபிலோனில் கடல் வழியாக இறக்குமதியான புதிய பொருள் ஒவ்வொன்றும் வடமொழியில்லாத் திராவிடப் பெயரையே பெற்றுள்ளன”. என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரத்தக்கது பாபிலோனியர் தமிழ் வாணிகருடன் கொண்டிருந்த பற்றுவரவுகள் அந்நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளமை களிமண் ஏடுகளில் குறிக்கப்பட்டுள்ளன. கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழர் கடை ஒன்றன் முகவரி பாபிலோனியக் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளதைச் சீனிவாச ஐயங்கார் ‘இந்திய வரலாறு’ என்ற நூலில் எடுத்துரைப்பர்.

## 4.4.7 கிரேக்கத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு

கி.மு.538இல் பாபிலோனியாவுக்கும் கிரேக்கத்திற்கும் இடையே போர் நடைபெற்றது. இப்போரில் கிரேக்கம் வெற்றி பெற்றது. பாபிலோனியா நகரம் அழிக்கப்பட்டது. இது கிரேக்கம் தமிழகத்துடன்

நேரடியாக வாணிகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியது. பர்சியா வளைகுடா வழியாகப் பாபிலோனியர் நடத்திய வாணிகத்தைக் கிரேக்கர்கள் செங்கடல் வழியாக நடத்தலாயினர். கப்பல்கள் செங்கடலில் இருந்து சேரநாடு வந்து சேர 40 நாட்கள் ஆகின என டாக்டர் ஹுசேன் குறிப்பிடுவர்.

கிறித்துவுக்கு முற்பட்ட முதல் ஐந்து நூற்றாண்டுகளில் தமிழகம் ஐரோப்பாவுடனான வாணிகத்தில் கிரேக்கம் சிறந்த பங்கேற்றது. சேரநாட்டுக் கடற்கரையை நோக்கி வீசும் தென்மேற்குப் பருவக்காற்றின் தன்மைகளை ஹிப்பாலஸ் என்ற கிரேக்க மாலுமி கி.பி48-இல் கண்டறிந்த பின் இவ்வாணிகம் பெருகியது. இவ்வாணிகக் காற்றின் செவ்வியைத் தமிழ் மன்னர்களும் அறிந்து வைத்திருந்தனர் என்பதை

**நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**

**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக (புறநானூறு-66)**

என்ற புறநானூற்றுப் பாடலால் உணரலாம். கிரேக்கர்களும் அரேபியரும் அனுப்பிய பொருள்களை ஏந்திக் கொண்டு கணக்கற்ற கப்பல்கள் முசிறித் துறைமுகத்தில் வந்து நின்றதாகப் பெரிப்புளூசு என்ற நூல் குறிப்பிடுகிறது. இவ்வாணிகப் பெருக்கத்தால் அரிசி, இஞ்சி போன்ற தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் இடம்பெறலாயின.

## 4.4.8 உரோமத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு

தமிழகம் ஏற்றுமதி செய்த பொருள்களின் பெருமைகளை உரோமர்கள் கிரேக்கர்களின் வாயிலாக முன்னரே அறிந்து வைத்திருந்தனர் எனினும் கிமு முதல் நூற்றாண்டுவரை உரோமம் தமிழகத்துடன் கொண்ட வாணிக உறவு பெருகவில்லை. கிமு.30ல் மத்தியதரைக்கடலைச் சார்ந்த நாடுகள் உரோமப் பேரரசர் அகஸ்டசின் ஆட்சியின் கீழ் வந்தன. இவ்வெற்றியின் காரணமாக உரோமர்கள் தமிழகத்துடன் நேரடியாக வாணிகம் செய்யத் தொடங்கினர்.

இருவர் அடங்கிய பாண்டியநாட்டின் தூதுக்குழு ஒன்று பரிசு பொருள்களுடன் அகஸ்டசின் முடிசூட்டு விழாவிற்கு உரோமம் சென்றதாக அகஸ்டசின் குறிப்பால் அறிகிறோம். உரோமப் பேரரசுடன் நடைபெற்ற வாணிகத்தில் மிளகும் முத்தும் முதலிடம் பெற்றன. மிளகு உரேமர்களால் 'யவனப்பிரியா' என அழைக்கப்பட்டது. மிளகின் இறக்குமதியில் உரோமர்களுக்கு இருந்த ஈடுபாட்டை இது புலப்படுத்தி நிற்கிறது.

நறுமணப் பொருள், மெல்லிய ஆடைகள், தந்தம், கிளி, குரங்கு, மயில், வேட்டை நாய்கள் ஆகியனவும் தமிழகத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாணிகத்தால் ஆண்டுக்கு நூறாயிரம் உரோமப் பொன் நாணயங்கள் தமிழகம் வந்தன. கணக்கிறந்த பொன் தமிழகம்

குறிப்பு

செல்வதைத் தடுக்க உரோமப் பேரரசு சட்டம் இயற்றியதாகக் கூறப்படுகிறது. இச்சட்டத்தைக் கொண்டு வந்தவன் கி.பி.68-இல் மறைந்த நீரோ மன்னன் ஆவான்.

"உரோமபுரி அரசிகளும் செல்வப் பெண்மணிகளும் முத்துக்களைப் பெருமளவில் அணிவதால் பெரும்பொருள் தமிழகம் செல்கிறது" எனவும் "உரோம நாட்டுச் செல்வம் வற்றி வருகிறது" எனவும் கி.பி.16-இல் 'திபெரியசு' செனட் சபைக்கு எழுதினார் "உரோமப் பெண்கள் அழகு செய்யப்படுகின்ற வாசனைப் பொருள்கள் தமிழகத்திலிருந்து வருகிறது. இதனால் செல்வம் வீணாக்கப்படுகிறது" என தசித்தசுவும், பிளைனியும் குறிப்பிடுகின்றனர். பொன் பெறுமான முத்துக்களால் தன்னை அணி செய்திருந்தான்" எனப் பிளைனி குறிப்பிடுகிறார். 120 மரக்கலங்கள் தமிழக உரோம வாணிகத்தில் ஈடுபட்டிருந்ததை நேரில் கண்டதாக ஸ்டிராபோர்டு குறிப்பிடுகிறார்.

அரிக்கமேடு, கருவூர், மதுரை, வெள்ளாமூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள உரோம நாணயங்கள் தமிழகம் உரோமத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பை அரண் செய்கின்றன எனலாம். இந்தியாவில் கிடைக்கப்பெற்றுள்ள 68 வகை உரோம நாணயங்களுள் பெரும்பாலானவை தமிழகத்தில்தான் கிட்டியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. உரோம வரலாற்று ஏடுகளில் தொண்டி, முசிறி, குமரி, கொற்கை, நாகப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், புதுச்சேரி ஆகிய தமிழகத் துறைமுகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது.

## 4.4.9 சீனாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு

தமிழகம் சீனத்துடன் மேற்கொண்டிருந்த வாணிகத் தொடர்பு மிகப்பழமையானது. கி.மு.ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்து சீனத்தில் இறக்குமதியான பொருள்கள் பற்றிச் சீனநாட்டு வரலாறுகள் குறிப்பிடக் காண்கிறோம்.

கி.பி.10,11 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்திற்கும் சீனாவுக்கும் இடையே நடைபெற்ற வாணிக உறவு வளம்பெற்றது. சீனத்திலிருந்து ஈயம், செம்பு, நறுமணப்பிசின், பவளம், சீனக் கண்ணாடி, சீனக் களிமண், சீனக்கற்கண்டு, சீனக்காரம், சீனக்கிழங்கு, சீனப்பட்டாடை ஆகிய பொருள்கள் தமிழகத்திற்கு இறக்குமதியாயின. மிளகு முத்து, நீலம், பாக்கு ஆகியன ஏற்றுமதியாயின சீனம் என்ற சொல்லுடன் இணைந்து வரும் தமிழ்ச் சொற்கள் தமிழகத்திற்கும் சீனாவுக்கும் இடைப்பட்ட வாணிகத் தொடர்பை நன்கு விளக்கி நிற்றல் காண்கிறோம். "தமிழகத்தில் இருந்து எகிப்திற்கு ஒரு கப்பல் மிளகு சென்றால் சீனத்திற்கு 100 கப்பல்கள் மிளகு செல்லும்" எனும் மார்க்க போலோவின் குறிப்பு இங்கு நோக்கத்தக்கது. முதலாம் இராசராசன் கி.பி.1015-இல்

சீனாவிற்கு வாணிகத் தூதுக்குழு அனுப்பியதாக அறிகிறோம். தமிழகத்தில் இருந்து பொருள்களின் இறக்குமதி மிகக் கண்ட சீன அரசு அதனைக் கட்டுப்படுத்த இறக்குமதி வரி விதித்தது குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழகத்திலிருந்து சீனாவிற்குப் பட்டு வழிச்சாலை இருந்தை அன்மை ஆய்வுகள் விளக்குகின்றன.

## 4.4.10 வடநாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பு

சுமேரியா, எகிப்து, கிரேக்கம் அரேபியா, பாபிலோனியா, உரோமம், சீனம் ஆகிய நாட்டுடன் கொண்ட வாணிக உறவு போன்றே வடநாட்டுடன் தமிழகம் கொண்ட வாணிக உறவும் பழமையானதாகும். சந்திரகுப்தமௌரியனின் கருவூலத்திற்குத் தமிழகத்தில் இருந்து இரத்தினங்கள் சேரநாட்டு வைடூரியங்கள், பாண்டியநாட்டு மெல்லாடைகள் அனுப்பப்பட்டதாகச் சாணக்கியரின் அர்த்தசாத்திரம் சுட்டுகிறது பாண்டிய நாட்டு முத்துக்கள் மெகஸ்தனிசால் புகழப்படுகின்றன.

## 4.4.11 பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம்

தமிழகம் அயல்நாடுகளுடன் கொண்ட வாணிகத் தொடர்பு பண்பாட்டுத் தொடர்பாகவும் கீழைநாடுகளில் மலர்ந்து நிற்கக் காண்கிறோம். இத்தொடர்பு சமயத்தில் ஏற்படுத்திய தாக்கம் பெரியது.

பர்மாவிலுள்ள பாகன் என்ற ஊரில் தமிழ்க்கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பர்மாவிலுள்ள கோவில்கள் தென் இந்தியச் சிற்பிகளால் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பர் ஸ்காட்.

மலேசியாவில் உள்ள 'வியோங்ஸ்நா' வில் திருமாலின் நின்றகோலச்சிலை ஒன்று உள்ளது. கடாரத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள சிதைவுப் பொருள்களுள், சிவன் கோவிலின் சிதைந்த பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் அமைப்பு முறை பல்லவரின் கட்டடக்கலையுடன் ஒருமைப்பாடு கொண்டுள்ளது என்பர் குவாரிட்ஜ் வெல்ஸ். மூன்றாம் நந்திவர்மன் கி.பி.826-50-இல் தமிழகத்தில் ஆட்சி செய்தவன். அவனது புனைபெயரால் அவனி நாரண ஏரி ஒன்று மலேசியாவில் அமைக்கப்பட்டுள்ள செய்தியைத் தாகூபாக் கல்வெட்டுச் சுட்டுகிறது. மலாய் மொழியில் இணை, இலை, உறுதிமொழி, மலை, வண்ணான் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள் தமிழ்மொழிச் சொற்களின் திரிபுகளே என்பர் மொழியியல் ஆய்வாளர்கள் மலேசியா என்ற சொல்லின் வேர்ச்சொல்லே மலை என்ற தமிழ்ச் சொல்லிருந்து பிறந்ததாகும்.

சுமித்திராவில் உள்ள ஸிம்பிரிங் என்ற இனமக்களின் மொழியில் சோழா், பாண்டியா், பல்லவா், தெக்காணம், மலையாளம் ஆகிய சொற்கள் வழக்கில் உள்ளன.

மணிமேகலையில் ஜாவா, சாவகம் எனவும் சாவகத்தீவகம் எனவும் வழங்கப்படுதல் காண்கிறோம். சீனப்பயணி பாஹியான் கி.பி.414-இல் அங்குப் பயணம் செய்தார். அப்போது ஜாவாவில் அந்தணர் சமயம் உயர்நிலையில் இருந்ததாக அவர் குறிப்பிடுகிறார். கி.பி.712-இல் அங்குச் சிவலிங்க வழிபாடு நடைபெற்றமை பற்றியும், கி.பி.760-இல் அகத்தியர் கோவில் இருந்தமை பற்றியும் ஜாவாவில் உள்ள கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

**குறிப்பு**

## 4.5 தொகுத்துக் காண்போம்

- சிந்துவெளி நாகரிகம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- பண்டைய தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்துக்கும் இருந்த தொடர்பைத் தெரிந்து கொண்டீர்கள்.
- தமிழர்களின் வணிகப் பண்பு குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.

## 4.6 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. சிந்து வெளி நாகரிகத்தின் தனிச் சிறப்புகள் யாவை?
2. தமிழர்களின் அயல் நாட்டு வணிகத் தொடர்பு பற்றி விளக்குக?

## 4.7 மேலும் அறிந்துகொள்ள்

கே.கே.பிள்ளை - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்.

ஆ.இராமகிருட்டிணன் - தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்.

# பிரிவு 2

# களப்பிரர், பல்லவர், சேரர், சோழர், பாண்டியர்,

## கூறு:5

## களப்பிரர் வரலாறு, பல்லவர் தோற்றமும் வரலாறும், பல்லவர் வீழ்ச்சி – ஆட்சி முறை, கல்வி நிலை, கலை, சேரர் தொன்மை, சேரர் வரலாறு

### 5:1 முன்னுரை

களப்பிரர் குறித்தும் கி.பி.-3 முதல் கி.பி.-6 வரை உள்ள தமிழகச் சூழல், அரசர்கள் ஆட்சிமுறை பற்றி அறிய இக் கூறு துணைநிற்கும்.

### 5:2 குறிக்கோள்கள்

1. களப்பிரர் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
2. பல்லவர் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
3. பல்லவர் காலக் கல்வி நிலை பற்றி அறிந்து கொள்வீர்கள்.
4. சேரர்களின் தொன்மை பற்றி அறிந்து கொள்வீர்கள்.

### 5.3 களப்பிரர் வரலாறு

களப்பிரர் யார்? எங்கிருந்து வந்தவர்கள் எப்போது தமிழகத்தில் நுழைந்தார்கள். அவர்கள் ஆட்சியின் தன்மை என்ன என்ற ஆய்வு இன்னும் முடியவில்லை. கி.பி.250 முதல் 550 வரையிலான சங்கம் மருவிய காலத்தைத் தமிழகத்தின் இருண்ட காலம் என அழைப்பது மரபு. இக்காலத் தமிழகத்தைக் களப்பிரர் என்னும் இனத்தவர்கள் ஆண்டனர். இக்களப்பிரர்கள் தமிழகத்திற்கு வரக் காரணமாக இருந்த வரலாற்றுப் பின்புலம் இவர்தம் வழித் தோன்றல்களின் வரலாறு, மரபு முறைகள் ஆகியவை பற்றிய தொடர்ச்சியான செய்திகள் களப்பிரரைப் பற்றிப் பேசும் ஆதாரங்களில் காணமுடியவில்லை. களப்பிரர்கள் ஆண்ட இக்காலம் தமிழகத்தின் இருண்ட காலம் என அழைக்கப்படுகிறது.

## 5.3.1 களப்பிரரைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்கள்

களப்பிரைப் பற்றிய குறிப்புகள் காசக்குடிச் செப்பேடுகள், கூரம் செப்பேடுகள், கொற்றமங்கலச் செப்பேடுகள், தளவாய்புரச் செப்பேடுகள் ஆகிய செப்பேடுகளில் காணப்படுகின்றன. திருப்புகலூர்க் கல்வெட்டுகள், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள் ஆகிய கல்வெட்டுகளிலும், தமிழ் நாவலர் சரிதை. விநயவிநிச்சயம், அபிதம்மாவதாரம் ஆகிய நூல்களிலும் களப்பிரரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

களப்பிரர் யார் என்பது பற்றிப் பல்லவர் வரலாறு என்ற நூலில் டாக்டர் இராசமாணிக்கமும், 'தமிழகம் வரலாறும் பண்பாடும்' என்ற நூலில் வி.டி.செல்வமும் பல ஆய்வாளர்களின் கருத்தைத் தொகுத்துத் தந்துள்ளனர். களப்பிரர் காலத் தமிழக நிலை பற்றித் "தமிழ் இலக்கிய வரலாறு கி.பி.250-600" என்று நூலில் சதாசிவ பண்டாரத்தார் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்.

## 5.3.2 களப்பிரர் யார்

தமிழகத்தின் வடக்கில் காளத்தி மலையில் வாழ்ந்த களவர் என்ற இனமே களப்பிரர் இனம் எனக் கூறுவர் டாக்டர் இராசமாணிக்கம். களவர் என்ற இனப் பெயரே கன்னடத்தில் களபரு எனவும், வடமொழியில் களப்ரா எனவும் தமிழில் களப்பிரர் எனவும் உருமாறியது என்பது அவர் கணிப்பு. மைசூர் மாநிலத்தில் உள்ள பேலூர்க் கல்வெட்டில் களபோரா என்ற இனம் குறிக்கப்பட்டுள்ளமை. இக்கருத்தை அரண் செய்வதாக உள்ளது.

## 5.3.3 கங்கர் இனமே களப்பிரர் இனம்

களப்பிரரை மேற்குக் கங்கர்களுடன் தொடர்புபடுத்துவர் ஒரு சாரார். பாண்டியர்கள் பலவீனம் அடைந்த போது தமிழகத்திற்குள் நுழைந்த கங்கர்களே களப்பிரர் எனப்பட்டனர் என்பது. இவர்கள் கணிப்பு. இங்ஙனம் இவர்கள் கருதுவதற்குக் காரணம் களப்பிரரும் கங்கரும் யானைச் சின்னம் கொண்டிருந்தமையாகும். ஆனால் பிற்காலத்தில் வலிமை பெற்ற மேற்குக் கங்கரைக் காலத்தால் முற்பட்ட களப்பிரருடன் பொருந்திப் பார்ப்பது பொருந்தாது என்பர் வி.டி. செல்வம்.

## 5.3.4 முத்தரையர் இனமே களப்பிரர் இனம்

தமிழகத்தின் வட பகுதியில் வாழ்ந்த முத்தரையரைக் களப்பிர இனத்தவர் எனக் குறிப்பிடுவர் கோபிநாதராவ். காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவில் கல்வெட்டில் சுவரன் மாறன் என்ற முத்தரையன் 'களவர கள்வன்' எனக்' குறிக்கப்பட்டுள்ளமையை இவர் ஆதாரமாகக்

காட்டுவார். களப்பிரர்கள் வேங்கடத்தைச் சார்ந்தவர்கள் என்பர் டாக்டர் எஸ்.கே. ஐயங்கார்.



குறிப்பு

## 5.3.5 களப்பாளர் இனமே களப்பிரர் இனம்

யாப்பருக்கலக்காரிகை என்னும் நூலில் "அச்சுதன் என்னும் அரசன் கயல், வில், புலிச்சின்னங்களைக் கொண்ட மூவேந்தரை வென்று கடல் சூழந்த உலகம் முழுவதையும் ஆண்டான்" என்ற குறிப்பு உள்ளது. யாப்பருங்கல விருத்தியிலும் இம்மன்னன் குறிப்பிடப்படுகிறான். தமிழ் நாவலர் சரிதையும் அச்சுதக் களப்பாளன் என்னும் அரசன் முடியுடை மூவேந்தரையும் வென்று சிறைப்படுத்தியமையைக் குறிப்பிடுகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான கூற்றுவ நாயனாரைக் 'களப்பாளன் ஆகிய கூற்றுவன்' எனக் குறிப்பிடுவர் நம்பியாண்டார் நம்பி. தொண்டை நாட்டில் களந்தை என்னுமிடத்தில் ஆண்டு வந்த கூற்றுவ நாயனார் சோழ நாட்டைக் கைப்பற்றினார். சிதம்பரத்தில் வீராபிடேகம் செய்துகொள்ள விரும்பினார். நாயனார் களப்பிரர் என்பதால் சிதம்பரம் கோயில் அர்ச்சகர்கள் இவருக்கு முடிசூட்ட மறுத்தனர். இவர் சிவபக்தன் என்பதால் சிவபெருமானின் கட்டளையின் பேரில் கூற்றுவ நாயனாருக்கு முடிசூட்டப்பட்டது என்னும் செய்திகள் பெரிய புராணத்தில் உள்ளன. புகாரைத் தலைநராகக் கொண்டு அச்சுத விக்கிரந்தன் என்னும் களப்பிர அரசன் ஆண்ட போது இந்நூலைத் தொடங்கி எழுதி முடித்தேன் எனப் புத்ததத்தர் 'விநயவிநிச்சயம்' என்னும் பாலி மொழி நூல் இறுதியில் குறிப்பிடுவது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

புத்ததத்தர் குறிப்பிட்ட அச்சுதன் என்னும் களப்பிரனும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் அச்சுதக் களப்பாளனும் ஒன்று என்பர் இராசமாணிக்கம். இவ்வூகம் பொருத்தமானதாக இல்லை என மறுப்பர் கே.கே.பிள்ளை.

## 5.3.6 வேங்கடரமணன் கருத்து

கருநாடக கல்வெட்டுக்களில் கவிகுலன், கலிதேவன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. களப்பிரரைக் கவியரசர்கள் என வேள்விக்குடிச் செப்பேட்டிலும், செந்தலைக் கல்வெட்டிலும் அழைக்கும் மரபு காணப்படுகிறது. இவ்விரண்டையும் ஒன்றுபடுத்திப் பார்த்து களப்பிரர் கருநாடகப் பகுதியில் இருந்து தமிழகத்திற்குக் குடிபெயர்ந்தவர்கள் எனக் கருதுவர் வெங்கட ரமணன், கருநாடக மன்னன் ஒருவன் பாண்டிய நாட்டை ஆண்டது பற்றியும், அவனது காலத்தில் சைவம் அழிந்து சமணம் செழித்தது பற்றியும் பெரிய புராணமும், கல்லாடமும் சுட்டுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

குறிப்பு

## 5.3.7 களப்பிரர் வெளிநாட்டவரா?

தமிழகத்திற்கு வெளியே ஆண்ட வேற்றரசா் பட்டயங்களில் களப்பிரா்கள் குறிக்கப்படவில்லை. ஆதலின் களப்பிரா்கள் தென்னிந்தியரே என்பா் டாக்டா் இராசமாணிக்கம் "வராகமிகிரா் தொகுத்த தென்னிந்திய அரசா்களின் நிரலில் களப்பிரா் இடம் பெறவில்லை. ஆதலின் இவா்கள் தென்னாட்டவா் அல்லா்'' என்பா் ஒரு சாரார். களப்பிரா்கள் தொடக்கத்தில் பௌத்தராகவும் பின்னா் சமணராகவும் விளங்கியவா்கள். பாலி, பிரகிருதம் ஆகிய மொழிகளைப் பேணியவா்கள். ஆதலின் இவா்கள் தமிழரா, தென்னிந்தியரா என்பதில் ஐயப்பாடு தோன்றினும் இந்தியா்களே என்பதில் ஐயமில்லை.

## 5.3.8 களப்பிரா் காலம்

சங்க இலக்கியங்களில் களப்பிரா் பற்றிய நேரடியான குறிப்பு காணப்படவில்லை. களப்பிரா் ஆட்சிக் காலத்தில் தனது நூலைத் தொடங்கி எழுதி முடித்ததாகக் குறிப்பிடும் புத்தததத்தா் வாழ்ந்த காலம் கி.பி.450 ஆகும்.

களப்பிரா்களின் அழிவிற்குக் காரணமாக விளங்கியவா்கள் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னனும், சிம்மவிட்ணு என்ற பல்லவ மன்னனும் ஆவா். சிம்மவிட்ணுவை "களப்பிரரை முறியடித்த பெருவீரா்" எனக் காசக்குடிச் செப்பேடும், வேலூா்ப் பாளையப் பட்டயமும் குறிப்பிடுகின்றன. 'கடுங்கோன் வாழந்த காலம் கி.பி.590 ஆகும். சிம்மவிட்ணு வாழ்ந்த காலம் கி.பி.575 ஆகும். இவற்றால் களப்பிரா்கள் சங்க காலத்திற்குப் பிற்பட்டவா்கள் என்பது புலனாகிறது. களப்பிரா்கள் தமிழ்நாட்டில் கி.பி 250 முதல் கி.பி 600 வரை ஆதிக்கம் பெற்றிருந்தனா் என்று கூறலாம்.

களப்பிரா் படையெடுப்பால் தமிழ் நாட்டில் சோழரின் ஆட்சி வீழ்ச்சியுற்றது. சேரா்களும் அரசியல் செல்வாக்கு இழந்தனா். பாண்டியா்கள் மட்டுமே களப்பிரரை எதிா்க்கும் ஆற்றல் பெற்றிருந்தனா். கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பாண்டியரும் பல்லவரும் களப்பிரரை முறியடித்துத் தமிழ்நாட்டை அவா்கள் ஆட்சியிலிருந்துவிடுவித்தனா். சோழா்கள் தங்கள் நாட்டை களப்பிரரிடமிருந்து மீட்டதாகக் குறிப்பு இல்லை. ஆங்காங்கு சிற்சில இடங்களில் பதுங்கியிருந்த களப்பிரரைப் பிற மன்னா்கள் ஒடுக்கிய பின் களப்பிரா் என்பார் வரலாற்றை விட்டகன்றனா் என்பார் பேராசிரியா் சுப்பிரமணியன்.

## 5.3.9 களப்பிரா் ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மை, தீமை

களப்பிரா்களால் கடைப்பிடிக்கப்பட்ட சமயம் சமணமாகும். இச்சமண மதத்தின் கொள்கைகளாகக் கொல்லாமை, புலால்

உண்ணாமை, பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டாமை, சாதிப் பாகுபாடு இன்மை போன்ற அறங்கள் அம்மதத்தினரால் பெரிதும் வற்புறுத்தப்பட்டன. இறவாத புகழுடைய நூல்கள் பல எழுதப்பட்டன. திருமந்திரம், அற்புதத் திருவந்தாதி போன்ற சமய நூல்களும், நாண்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி, பழமொழிநானூறு ஆகிய அற நூல்களும், ஐந்திணை ஐம்பது , ஐந்திணை எழுபது, கார் நாற்பது, களவழி நாற்பது போன்ற திணை நூல்களும், மூவேந்தர்களைப் பற்றிய முத்தொள்ளாயிரமும் இக்கால கட்டத்தில் தோன்றின. அரசால் ஒதுக்கப்பட்ட பொது மக்களின் அரசியல், மொழி, சமய பண்பாட்டு நிலைகளை ஒளியூட்டுதற்கு இலக்கியங்கள் செய்த முயற்சியை நம்மால் அறியமுடிகிறது.

பொதுமக்களின் தாய்மொழியாகிய தமிழ் மொழியின் வளர்ச்சியில் அரசு ஈடுபாடு காட்டவில்லை. தண்டி, பாரவி, ஆகிய வடமொழிப் புலவர்கள் சிம்மவிட்ணுவின் அரசவைப் புலவர்களாக விளங்கியமை போன்று களப்பிரர் காலத்தில் எந்தத் தமிழ்ப் புலவரும் ஆதரிக்கப்பட்டமைக்குச் சான்று இல்லை. தமிழை வளர்த்து நின்ற கடைச்சங்கம் களப்பிரர் வருகையால் அழிவுற்றதாக வேள்விக்குடிச் செப்பேடு குறிப்பிடுகிறது. மேலும் புறச்சமங்களின் பூரிப்பால் தமிழகச் சமயங்களின் நிலை தடம் புரண்டது. பிறமொழிச் செல்வாக்கால் தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சி திசை மாறியது. இவை அரசியல், சமயம், மொழி, இலக்கியம் ஆகியவற்றில் மட்டுமின்றிப் பண்பாட்டிலும் பெரும் மாற்றத்தை விளைவித்தன.

சங்க கால நாகரிகத்திற்கும், அதற்குப் பிற்பட்ட பல்லவர் காலத்துப் பண்பாட்டிற்கும் இடையே மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. மக்களின் வாழ்க்கை முறை பெரிதும் மாறுபாடு அடைந்தது. சங்க காலத்தில் மக்கள் சமயச் சார்பற்ற மனதுடன் வாழ்ந்தனர். வாணிகம், உலகியல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தனர். களப்பிரர் ஆட்சியில் அத்தகைய வாழ்க்கை முறையை மறந்து சமயம், மறு உலகு போன்றவற்றில் கவனம் செலுத்தலாயினர். மக்களிடையே தன்னம்பிக்கை, வீரம் போன்றவை குறைந்து சமயம், தத்துவம் போன்றவை முக்கியத்துவம் பெறலாயின. தமிழகத்தின் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் களப்பிரர்கள் பகைவர்களாய் இருந்தனர்.

நாடெங்கும் சமணப் பள்ளிகளும், பௌத்த விகாரங்களும் அமைக்கப்பட்டு வந்தன. இக்காரணங்களால் வைதீக சமயம் தன் செல்வாக்கை இழந்து வந்தது.

## 5.4 பல்லவர் தோற்றம்

பல்லவர்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய கருத்துக்கள் ஓர் இலக்கினை அடைய இயலாத நிலையில் இருப்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அவர்கள் தோற்றம் பற்றிய கோட்பாடுகள் புரியாத

புதிராகவே இன்றளவும் இருக்கின்றன. இருப்பினும் அவர்கள் தமிழ்ச் குடிகளா அல்லது தமிழகம் போந்த குடிகளா என்பது குறித்துள்ள கருத்துக்களை ஈண்டு நோக்குவோம்.

குறிப்பு

(1) ஒரு சாரார் பல்லவர்களை அயல் நாட்டினர் என்று கூறுகின்றனர். அவர்களில் பேராசிரியர் வின்சென்ட் ஸ்மித், ஏ.எல். ரைஸ், லூீவிஸ், வெங்கைய்யா முதலியோர் அதில் அடங்குவர். இவர்கள் அனைவரும் ஒரு சேர பல்லவர்கள் இந்தியாவில் தோன்றியவர்கள் அல்ல என்று கூறுகின்றனர். பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த பாத்தியர்கள் அல்லது பல்லவர்களே தொண்டை

மண்டலத்தைக் கைப்பற்றி அரசு புரிந்த பல்லவர்களாயினர் என்பது அவர்களது கருத்தாம். இரு சொற்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமை மட்டுமே இதற்குச் சான்றாக உள்ளது இதைத் தவிர வேறு எதுவும் அடிப்படை இல்லை.

(2) இரண்டாம் நந்திவர்மன் பல்லவ அரசனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, யானைத் தலையின் உச்சிவட்டத்தோல் போன்ற வடிவமுடைய முடியை அவன் சூடிக்கொண்டான் அந்தமுடி கிரேக்க மன்னனான டெமிட்ரியஸ் அணிந்துகொண்ட முடியை நினைவூட்டுவதால் பல்லவர்களும் டெமிட்ரியசைப் போல் வெளிநாட்டினர்கள் என்று நினைக்க இடம் உண்டு.

(3) டாக்டர். கே.பி. ஜெயஸ்வால் என்பவர் பல்லவர்கள் வாகாடக மரபின் வழிவந்தவர்கள் எனக் கூறியுள்ளார். வாகாடக மரபினர் பாரத்வாஜ கோத்திரப் பிரிவைச் சேர்ந்தவர்கள். பல்லவர்களும் அதே பிரிவைச் சார்ந்தவர்களாகுவர் என்று குறிப்பிடுகின்றார்.

(4) தாலகுண்டா கல்வெட்டின்படி பல்லவர்கள் சத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

(5) பல்லவர்கள் இந்தியக் குலமரபில் வளர்ந்த வட இந்தியர் மரபினர் வழியில் தோன்றியவர்கள். அதன்பின் அவர்கள் தென்னிந்தியாவிற்கு வந்து குடியேறி தென் இந்தியப் பண்பாடுகளைப் பின்பற்றினர் எனப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகின்றார்.

(6) பேராசிரியர் சத்திய நாதய்யர் பல்லவர்கள் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடுகின்றார்.அவர் தரும் ஆதாரங்கள் பின்வருமாறு

(i) 'புலிந்தர்கள்' என அசோகர் கல்வெட்டுக் கூறியுள்ளதின். ஒரு பிரிவினர் பாலடர்கள் ஆவர். பாலடர்களும், பல்லவர்களும் ஓரினம் எனலாம்.

(ii) ‘பல்லவர்கள்’ எனும் சொல்லின் தமிழ்வடிவம் ‘தொண்டையார்’ ஆகும்.

(iii) புலியூர், புலியூர்க் கோட்டம் என்பவை தொண்டை மண்டலத்தில் உள்ளவை. இவைகள் பல்லவ அடைமொழிகளாகவும் பெயர்களாகவும் உள்ளன.

(iv) சாதவாகனப் பேரரசின் கீழ் முதலில் இருந்து, பின் தன்னுரிமை பெற்று, கி.பி.3 ஆம் நூற்றாண்டின் இறுதியில் காஞ்சியைக் கைப்பற்றினார்கள்.

(7) ஆந்திர சாதவாகனர்களின் கீழ் உரிமை பெற்று ஆட்சி செய்தவர்கள் பல்லவர்கள் எனும் கருத்தினை ஆர். கோபாலன், சி.மீனாட்சி, தி.வி.மகாலிங்கம் போன்றவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

(8) மணிபல்லவத் தீவிலிருந்து வந்த இளந்திரையனின் வாரிசுகளே பல்லவர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

(9) பல்லவர்கள் தொண்டை மண்டலத்திலேயே தோன்றியவர்கள் என்ற கொள்கைக்கும் போதிய சான்றுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. மோரிய மன்னன் அசோகனின் குடி மக்களுள் புலிந்தர் என்றோர் இனத்தவரும் இருந்தனரென அப்பேரரசனின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சாதவாகனரின் ஆட்சி கி.பி.225-இல் வீழ்ச்சியுற்றது. அவர்களுக்குப் பின்னர் காஞ்சிபுரத்தில் பல்லவரே முழு ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர். அம் மொழிகளிலேயே சாசனங்களையும் பொறித்து வைத்தனர். ஆகவே, பல்லவர்கள், சாதவாகனரின். குலத்தைச் சார்ந்தவர்கள் என ஊகிக்கவும் இடமுண்டு.

## 5.4.1 முற்காலப் பல்லவர்கள்

சிம்ம விஷ்ணுவுக்கு முன்பு பல்லவ மரபின் வரலாறு தக்கசான்றுகளுடன் அதிகம் கிடைக்கவில்லை. முதல் மன்னர் **பப்பர்** என்பர் ஆவர். அவருக்குப் பின் பதவியேற்றவர் **சிவஸ்கந்தவர்மர்** ஆவர். அவர் பிராகிருத மொழியில் இரு செய்யுட் பட்டயங்களை வெளியிட்டுள்ளார். அவரைப் பற்றிய செய்திகளை இப்பட்டயங்களிலிருந்து அறிய முடிகிறது. அவருக்குப் பின் **விஜயஸ்கந்த வர்மர்** பதவி ஏற்றார். அவரது மனைவி சாரு தேவியால் அளிக்கப்பட்ட கோயிலுக்கான கொடை பற்றி செப்புப் பட்டயம் உரைக்கின்றது. இவ்வகையில் 16 பேர் அரசு புரிந்தனர். இம்மன்னர்களில் ஒருவரான விஷ்ணு கோயர் சமுத்திரகுப்தரால் தோற்கடிக்கப்பட்டார். இவர்களில் சிலர் பௌத்த சமயத்தையும், சிலர் சமண சமயத்தையும் ஆதரித்தனர்.

## 5.4.2 இடைக்காலப் பல்லவர்கள்

வடமொழிப் பட்டயங்களால் அறியப்படுபவர்கள் இடைக் காலப் பல்லவர் ஆவர். இவர்களின் காலம் 4,5,6 ஆம் நூற்றாண்டுகளாகக் கருதப்படுகின்றது. இவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் குமார விஷ்ணு, கந்தவர்மன், வீரவர்மன், இரண்டாம் கந்தவர்மன், சிம்மவர்மன் போன்றோராவர். முதற் குமார விஷ்ணு தன்னை மகாராசாதிராசன் என்று அழைத்துக் கொண்டான். அவன் பரத்வாச மரபைச் சார்ந்தவன் என்று ஓமகோடு பட்டயம் கூறுகின்றது. வீரவர்மன் சிறந்த வெற்றி வீரனாகக் கருதப்படுகிறான். இவன் சூட்டு நாகர் மகளை மணந்தவன். **இரண்டாம் கந்தவர்மன்** சிறந்த சமயத் தொண்டுகள் செய்தவன். இவன் ஆலயங்களுக்கும், அந்தணர்களுக்கும் கிராமங்களைத் தானமாக வழங்கினான். சிம்மவர்மன் பெரும் வெற்றி வீரன். இவன் முக்கடலுக் கிடைப்பட்ட பூமியை வென்றவன் என்று வசந்தா பட்டயம் கூறுகின்றது. இவன் காலத்தில் கடம்பர்கள் வலிமை பெற்றனர். பல்லவர்கட்குட்பட்ட வாணர்கள் கட்ம்பர்களுக்குப் பணிந்தனர். இதனால் பல்லவர் அரசியலில் புதுத் திருப்பம் ஏற்பட்டது.

## 5.4.3 பிற்காலப் பல்லவர்கள்

தொண்டை மண்டலத்தில் வாழ்ந்து பின்னர் தமிழகத்திலும் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்ட இவர்களை மகா பல்லவர் என்பர். இவர்கள் ஏழு எட்டாம் நூற்றாண்டினர். இவர்களைப் பற்றிய செய்திகள் கிரந்த, தமிழ்ப் பட்டயங்களில் காணப்படுகின்றன. இக்காலத்துப் பல்லவர்கள் செப்புப் பட்டயங்களையும், கல்வெட்டுக்களையும் பெருமளவில் வெளியிட்டனர். இவர்கள் சிம்ம விஷ்ணுவின் வழி வந்தவர்கள். சிம்ம விஷ்ணு, சிம்ம வர்மனின் புதல்வனாவான். பல்லவர்களின் கல்வெட்டுச் சாசனம் நீங்கலாக இவர்கள் காலத்துப் பல்லவ நாட்டைச் சுற்றி வாழ்ந்த சாளுக்கியர், கடம்பர், கங்கர், இராட்டிர கூடர், பாண்டியர், முத்தரையர் கல்வெட்டுக்களின் வாயிலாகவும் பல்லவர் வரலாறு அறியப் படுகிறது. மேலும், சைவத் திருமுறைகள், நாலாயிரத்திவ்ய பிரபந்தம், மத்த விலாசப் பிரகசனம், நந்திக் கலம்பகம், பெரிய புராணம், மகாவம்சம் போன்ற பல நூல்கள் பிற்காலப் பல்லவர்களை அறிவதற்குச் சான்றாக அமைந்துள்ளன. இவர் காலப் பட்டயங்களின் வாயிலாக இன்னவருக்குப் பின் இன்னவர் பட்டம் பெற்றனர் என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது. சிம்ம விஷ்ணு காலம் முதல் ஏறக்குறைய 150 ஆண்டுகள் ஒரே பரம்பரை அரசர் ஆண்டு வந்திருக்கின்றனர்.

இதில் பீமவர்மன் காலத்திற்குப் பின் ஆண்டவர்கள் பற்றித் சரிவரத் தெரியவில்லை. சிம்ம விஷ்ணுவுக்குப் பிறகு அவன் மகன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.600-659) பட்டத்துக்கு வந்தான். இவனுக்கு விசித்திரசித்தன் என்றொரு விருதுப் பெயருமுண்டு. பல்லவர்

பரம்பரையிலேயே புகழ் ஏணியில் ஏறி நின்ற முதல் மன்னவன் மகேந்திரன் தான். ஒரே பாறையைக் குடைந்து கோயில்கள் அமைக்கும் சிற்ப மரபானது தமிழகத்தில் முதன் முதலில் மகேந்திரவர்மனால் தான் தோற்றுவிக்கப்பட்டது.



குறிப்பு

செங்கலின்றி, மரமின்றி, உலோகமன்றி, காரையின்றிப் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய தெய்வங்களுக்கு விசித்திரசித்தன் இக்கோயிலை ஆக்கினான் என்று இவனுடைய மண்டகப்பட்டு கல்வெட்டு வியந்து கூறுகிறது. மகேந்திரவர்மன் மகேந்திரவாடி ஏரியைக் கட்டி உழவுக்கு உதவினான். சிற்பத்திலும் ஓவியத்திலும் மட்டுமன்றி இசையிலும் இவ்வேந்தன் வல்லுநனாக ஈடுபாடு கொண்டு பிறகு சைவ சமயத்தை தழுவினான்.

## 5.4.4 முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668)

மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் முதலாம் நரசிம்மவர்மன் அரியணை ஏறினான். போரிலும் புகழிலும் தன் தந்தையினும் நரசிம்மவர்மன் மேம்பட்டு விளங்கினான. சளுக்கியரின் மேல் அவன் பல வெற்றிகளைக் கொண்டான். மணிமங்கலத்தில் ஒரு முறையும் வாதாபியில் இருமுறையும் அவன் சளுக்க மன்னன் இரண்டாம் புலிகேசியின் மேல் போர் தொடுத்து மாபெரும் வெற்றி பெற்றான். இரண்டாம் வாதாபிப் போர் வரலாற்று புகழ் பெற்றதாகும். அப்போரை நடத்தி வெற்றி வாகை சூடி வந்த படைத் தலைவர் பரஞ்சோதியே பிறகு சிறுத் தொண்ட நாயனாராகத் திருத் தொண்டத் தொகையில் இடம் பெற்றார்.

முதலாம் நரசிம்மவர்மனிடம் மாபெரும் கடற்படை ஒன்று இருந்தது. அதன் துணையைக் கொண்டு இருமுறை இலங்கையின் மேல் படையெடுத்து வெற்றி கண்டான். இவன் தன் நண்பன் மானவர்மன் என்ற சிங்கள மன்னனுக்கு இலங்கையின் அரசுரிமையை வழங்கினான். இந்நரசிம்மவர்மன் சிவனிடத்தில் பெரிதும் ஈடுபாடுடையவன். மாமல்லபுரத்து சிற்பங்களைப் படைத்துத் தமிழகத்து வரலாற்றில் அழியாத புகழிடத்தை தேடிக் கொண்ட இம்மன்னன் காலத்தில் தான் சீன யாத்திரிகச் யுவான்-சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்திருந்தார்.

முதலாம் நரசிம்மவர்மனுக்குப் பின்னர் அவன் மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் பல்லவ அரசனாக முடிசூட்டிக் கொண்டான். இவன் ஈராண்டுகளே அரசாண்டான். இவன் வருணாசிரம தருமத்தை நிலை நாட்டினான். எனவும் கடிகைகளை வளர்த்தான் எனவும் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. பரமேசுவரவர்மன் சிறந்த சிவத் தொண்டன். காஞ்சிபுரத்துக்கு அண்மையில் கூரம் என்ற இடத்தில் சிவன் கோயில் ஒன்று எழுப்பினான்.

பரமேசுவரவா்மனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் நரசிம்மவா்மன் இராசசிம்மன் மணிமுடிசூட்டிக் கொண்டான். காஞ்சிபுரத்தில் இவன் எழுப்பிய கோயில் கைலாசநாதா் கோயிலாகும். திருத் தொண்டத் தொகையில் கழற்சிங்க நாயனாராகச் சோ்க்கப் பட்டுள்ள மன்னன் இந் நரசிம்மவா்ம பல்லவா் தான்.

இராசசிம்மனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் பரமேசுவரவா்மன் (கி.பி.722-730) பட்டமேற்றான். இவன் நீண்ட நாள் அரசாட்சியில் நீடித்திருக்கவில்லை. இவனுடைய ஆட்சியின் இறுதியாண்டுகளில் சாளுக்கியா்கள் இவன் மீது போா் தொடுத்தனா். இப்போரில் பரமேசுவரவா்மன் இறந்த பிறகு நாட்டில் அரசுரிமைக் குழப்பம் ஏற்பட்டது. தோற்றோடிய நந்திவா்மன் ஓய்ந்திருக்கவில்லை. உதயசந்திரன் என்ற திறம்மிக்க படைத் தலைவன் ஒருவன் துணை கொண்டு காஞ்சிபுரத்தையும், பல்லவ அரசையும் மீட்டுக் கொண்டான்.

இரண்டாம் நந்திவா்மன் வைணவ சமயத்தைப் பின் பற்றினான். திருமங்கையாழ்வாா் இவன் காலத்தில் வாழ்ந்தவா். நந்திவா்மனுடைய படைத் தலைவனான உதயசந்திரன் விண்ணப்பம் செய்து ஒரு கிராமத்தின் பெயரை மாற்றி அதற்கு உதயசந்திரமங்கலம் என்று பெயரிட்டு, அக்கிராமத்தை நூற்றெட்டுப் பிராமணருக்குத் தானமாக கொடுத்தான் என்று உதயேந்திரம் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

இரண்டாம் நந்திவா்மனுக்குப் பின் அவன் மகன் தந்திவா்மன் மணி முடிசூட்டிக் கொண்டான். (கி.பி. 796-846) நந்திவா்மன் இறந்த பிறகு பல்லவ வரலாற்றில் ஒரு திருப்பம் காணப்படுகிறது. வடக்கில் இராஷ்டிரகூடரில் செல்வாக்கு உயா்ந்து வந்து கொண்டிருந்தது. பல்லவருக்கு அவருடன் நல்லுறவு கிடையாது. தெற்கே விசயாலயன் பரம்பரை தொடங்கிவிட்டது. பல்லவ அரசின் பண்டைய புகழ் மங்கத் தொடங்கியது. தந்திவா்மனின் மனைவி அக்கள நிம்மடி என்பவள் வயிற்றில் பிறந்தவன் மூன்றாம் நந்திவா்மன். தந்திவா்மனுக்கு பிறகு இவனே அரியணை ஏறினான். (கி.பி.846-869). இம்மன்னன் இராஷ்டிரகூட இளவரசி சங்கர என்பவளை மணந்திருந்தான். இவள் வயிற்றில் பிறந்தவன் தான் அடுத்த பல்லவ மன்னனாக இருந்த நிருபதுங்கன் என்பவன். நிருபதுங்கனின் தந்தை நந்திவா்மன் சிறந்த போா்த் திறம் படைத்தவன். நந்திக் கலம்பகத்தில் தெள்ளாறெறிந்த நந்திவா்மன் எனப் பாராட்டப் பெற்றான்.

மூன்றாம் நந்திவா்மனையடுத்து அவன் மூத்த மகன் நிருபதுங்கன் முடிசூட்டிக் கொண்டான் இவனுடைய மாற்றாந்தாய் வயிற்றுப் பிறந்த அபராஜிதன் நிருபதுங்கவா்மன் மேல் அரசுரிமைப் போா் தொடுத்து திருப்புறம்பயம் என்ற இடத்தில் வெற்றி கண்டான். இப்போரில் அபராஜிதவா்மனுக்கு கங்கரும், சோழரும் துணை நின்றனா்.

குறிப்பு

அபராஜிதனின் இறுதிக் காலத்தில் சோழ மன்னராகிய ஆதித்த சோழன் அபராஜிதன் மீது போர் தொடுத்து வெற்றி பெற்றான். அபராஜிதன் தன் இறுதியாண்டுகளில் அடைந்த இன்னல்களைப் பயன்படுத்திக் கொண்டு நிருபதுங்கன் தன் அரசியற் செல்வாக்கை வளர்த்துக் கொண்டான். நிருபதுங்கனுக்குப் பிறகு பட்டமேற்ற கம்பவர்மனைப் பற்றிப் போதுமான விளக்கம் கிடைக்கவில்லை. இதன் பின் பல்லவ அரசானது சிறுசிறு தலைவர்களின் கைக்குமாறி இறுதியில் (கி.பி.949) தன் நிலை தடுமாறி மறைந்து போயிற்று.

## 5.5 பல்லவர் வீழ்ச்சிக்கான காரணங்கள்

பல்லவர்கள் தமிழகத்தை எவ்வகையான செங்கோல் பிறழ்ச்சியுமின்றி ஆட்சி புரிந்தனர். பிற அரசுகளின் வரலாற்றில் யார் அரசேற்பது என்ற உள்நாட்டுப் போரால் அரசுகள் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. அத்தகைய அரசுரிமைப் போர் பல்லவராட்சியில் நிகழவில்லை. நிகழ இருந்த ஒரு சமயத்து, அமைச்சர்களும் ஊர்ப் பெருமக்களும் கூடி இரண்டாம் நந்திவர்மனைத் தேர்ந்தெடுத்து அமைதி குலையாதவாறு காத்தனர். பல்லவ அரசு நிலையாக இருந்தமையால் அமைதியாக விளங்கியது. எனவே எல்லாக் கலைகளும் இங்கு தழைத்தன. அவ்வரசு ஒன்றே தெக்கண அரசுகளுக்கும் தென்னாட்டு அரசர்களுக்கும் இடையே இருந்து வடநாட்டுப் பண்பையும் தமிழகப் பண்பையும் இணைத்து வளர்ந்தது. பல்லவ அரசு ஆட்சிக் குறைவில் அழியவில்லை. அரசர்கள் செய்த தவறுகளால் அழியவில்லை, மிக்க வன்மை வாய்ந்த அரசுகள் தோன்றிய காரணத்தால் வலிமைக் குறைவால் அழிந்தன.

பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இடையே இருந்த பகையே, பல்லவர் சிதைவுக்குக் காரணமாகும். கலை வன்மையும் போர் வன்மையும் மிக்க முதலாம் நரசிம்மவர்மன் காலத்திலேயே பல்லவர் - சாளுக்கியர் போர் துவங்கிவிட்டது. அவன் வாதாபியை அழித்து வெற்றி பெற்றான். அன்றிச் சாளுக்கியரை வேரோடு அழிக்கவில்லை. இதற்கீடாகச் சாளுக்கியர் பல்லவ நாட்டின் மேல் படையெடுத்து வந்து அழிவு செய்தனர். ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகள் இப்போர் நடைபெற்றது. தக்காணத்தில் சாளுக்கியரின் வீறும் தாக்குதலும் குறைந்த காலத்தில், இராஷ்டிரகூடர்கள் மேலோங்கினர். இதனால், பல்லவர்கள் இராட்டிரகூடர் எதிர்ப்பைத் தாக்குப்பிடிக்க நேர்ந்தது. சாளுக்கியர் தாக்குதலால் தளர்ந்திருந்த பல்லவர்கள் இராட்டிரகூடர் எதிர்ப்பையும் தாங்காது நலிவெய்தினர்.

## 5.6 பல்லவர் - பாண்டியர் போர்

கொங்கு நாட்டை ஆளுவதில் பல்லவர்கள்-பாண்டியர்கள் இருவருக்கிடையே அடிக்கடி போர் ஏற்பட்டது. இதனால் தென் தமிழ்

நாடு முழுமையும் ஆண்ட பாண்டியர்கள், பல்லவரைத் தாக்கி வெற்றி பெறக் காலத்தை எதிர் நோக்கியிருந்தனர். பல்லவ நாட்டின் உள் நுழைந்தும் பாண்டியர் தாக்கி மீண்டனர். இதனால் பல்லவர்களால் பாண்டியர் எதிர்ப்பை முறியடிக்க இயலவில்லை.



## 5.7 பல்லவர் - சோழர் போர்

சாளுக்கியர், இராட்டிரக்கூடர், பாண்டியர் ஆகிய மூவரும் பல்லவரின் மேலாண்மையை அடக்கி ஒடுக்க முயன்ற நிலையில் பிற்காலச் சோழர்களும் தலைதூக்கினர் சோழர்களின் திறமையையும் மனப் போக்கையும் உணராமல் பல்லவர்கள் தங்கள் தலைவிதியை முடிவு செய்யும் பொறுப்பைச் சோழர்களிடமே விட்டுவிட்டனர். சோழர் மதியே பல்லவர் விதியை மாற்றிவிட்டது. திருப்புறம்பியம் போரில், ஆதித்த சோழன் உதவியை நாடிய அபராஜிதன் அப்போரில் வென்றான். எனினும் துணைக்கு வந்த கங்க மன்னன் பிருதிவீபதி மாண்டான். பின்னர் நடைபெற்ற போரில், ஆதித்த சோழன் அபராஜிதனை வாளால் வெட்டிக் கொன்றான். பல்லவர் மீண்டும் மேலாண்மையை பெற்றனர். ஆனால் பாண்டியர் ஓய்சளார் தலையீட்டினால் அது தடுக்கப்பட்டது. இங்ஙனம் பல்லவப் பேரரசு மற்ற பேரரசுகளின் தோற்றத்தால் அழிந்தது.

## 5.8 பல்லவர் ஆட்சி முறை:

பல்லவர்கள் ஆட்சிமுறை பிற்கால ஆட்சி முறைகளில் காணப்பட்ட சிறப்பியல்புகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து விளங்கியது எனலாம். தாங்கள் பின்பற்றிய சமயத்திற்குத் தனிச் சலுகைகள் தந்தனர் எனினும் அச்சமயத்தைப் பிறர் மீது சுமத்த முயலவில்லை. வழி வழி வந்த மரபுகளை நடை முறைக் கோட்பாடுகளாகக் கொண்டு அரசின் தலையீடின்றி ஊரவைகள் செயல்பட்டன சமய நெறிக்கும், கலைப் படைப்பிற்கும் ஆட்சி முறைமைக்கும் பல்லவர் காலம் சிறந்து நின்றது.

பல்லவரின் அரசியல் முறைகளைச் சாதவாகனாரின் அரசியல் முறையுடனும் கௌடில்யரின் அர்த்த சாத்திரக் கோட்பாடுகளுடனும் ஒப்பிட்டு நோக்குவர் கே.கே.பிள்ளை.

பல்லவர் கால ஆட்சிமுறையை அறிய அக்காலத்தில் எழுந்த கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் துணை நிற்கின்றன. மேலும் 'பல்லவர் கால ஆட்சிமுறையும் சமுதாய வாழ்வும்' என்ற நூலில் டாக்டர் மீனாட்சியும் 'பல்லவர் வரலாறு' என்ற நூலில் டாக்டர் இராசமாணிக்கமும் தென்னிந்திய வரலாறு – I என்ற நூலில் நீலகண்ட சாத்திரியும், தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும் என்ற நூலில் கே.கே.பிள்ளையும் விரித்துரைத்துள்ளனர்.

## 5.9 பல்லவர் காலக் கல்வி நிலை



இந்தியாவிலேயே மிகச் சிறந்த நகரங்களாக விளங்கியவை ஏழு என்பர். அதில் ஒன்று காஞ்சி. காஞ்சியில் இந்தியப் புகழ்பெற்ற வடமொழிக்கல்லூரி ஒன்று இருந்தது. இங்கு இலக்கணம் தருக்கம், வேதம் முதலிய பலதுறைக் கல்வி அளிக்கப்பட்டது. இங்குப் படித்துச் சிறந்தவர் நாளந்தாப் பல்கலைக்கழகத் தலைவராயும் பேராசிரியருமாய் இருந்தனர். எனவே தான் 'கல்வியில் கரையிலா காஞ்சிமாநகர்' என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் குறிப்பிடுகிறார். பல்லவராட்சியில் கல்வி வளர்ச்சியடைந்தமையை இது சுட்டும். கல்லூரி அக்காலத்தில் 'கடிகா' என்றழைக்கப்பட்டது.

புதுச்சேரிக்கு அருகிலுள்ள பாகூர் என்னுமிடத்தில் ஒரு வடமொழிக் கல்லூரி இருந்தது. இக்கல்லூரி நடைபெற மூன்று சிற்றூர்கள் நிருபதுங்கவர்மனால் விடப்பட்டன. கோயிலோடு தொடர்புடைய மடங்களிலும் வடமொழிக் கல்வி வழங்கப்பட்டது. முன்னோர்கள் அம்மடங்களுக்குத் தனி மானியங்கள் வழங்கினர். பல்லவ வேந்தர் இவ்வாறு பல வழிகளிலும் வடமொழிக் கல்வியை வளர்த்தனர்.

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் பௌத்தர்கள் நாகப்பட்டினத்தில் தங்கியிருந்தனர் ஆயாகவிபாகம் என்னும் சமணநூல் பாலி மொழியிலிருந்து வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. பௌத்தரும் சமணரும் பாலிமொழியிலும், வடமொழியிலும் வல்லவராவர். இவர்கள் தமிழ்க்கல்வியும் பயின்று தமிழில் பல்நூல்களைச் செய்தனர். தமிழகத்தில் தமிழில் தொடக்க நிலைக் கல்வியும், உயர் நிலைக் கல்வியும் நல்ல முறையில் கற்பிக்கப்பட்டன. பெண்களும் கல்வி கற்றனர். பல்லவர்காலக் கல்வி பற்றி யுவான்சுவாங் அவர்கள் குறித்துள்ளார்.

பல்லவ மன்னர்கள் வடமொழிப் புலமையில் சிறந்து விளங்கினர். சிறந்த வடமொழிப் புலவரான பாரவி தண்டி ஆகிய இருவரும் பல்லவ நாட்டில் வாழ்ந்தவராவர். முதலாம் மகேந்திரவர்மன் மத்த விலாசப் பிரகசனம் என்னும் நாடகத்தை வடமொழியில் எழுதினார். பல்லவர்களில் கடைசி மன்னரான அபராஜிதன் தமிழ்ப்பாடல்கள் இயற்றும் வல்லமை உடையவனாக இருந்தான். இதனைத் திருத்தணியிலிருந்து கிடைத்துள்ள.

**'திருந்து திருத் தணியில் செஞ்சடை ஈசர்க்கு**<br>**கருங்கல்லால் கற்றளியா நிற்க – விரும்பிய**<br>**நற்கலைகளெல்லாம் நவின்றசீர் நம்பி அப்பி**<br>**பொற்பமைய செய்தான் புரிந்து'**

என்ற பாடற்கல்வெட்டு புலப்படுத்தும். மன்னன் மட்டுமன்றித் தண்டி என்பவர் காவியதர்சம் என்னும் அணியிலக்கண நூலையும் இயற்றினார். எனவே, மன்னர்களும், புலவர்களும் கல்வியில் சிறந்து விளங்கினர் என்பது புலனாகிறது.

பல்லவர் காலத்தில் பல் சமய இலக்கியங்கள் படைக்கப்பட்டன. சைவத் திருமுறைகளும், வைணவப் பிரபந்தங்களும் அவற்றுள் முக்கியமானவை. திருநாவுக்கரசர் ஏறத்தாழ மூவாயிரம் பாடல்கள் பாடியுள்ளார். திருஞான சம்பந்தரும் அங்ஙனமே பாடியுள்ளார். திருமூலர் மூவாயிரம் பாக்களைப் பாடினார். சுந்தரர் 1000 பாடல்களைப் பாடியுள்ளார். கி.பி.9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான காரைக்கால் அம்மையார் சில சிறுநூல்கள் பாடியுள்ளார். ஐயடிகள் காடவர்கோன் என்ற பல்லவ மன்னர் "சேத்திர வெண்பா" என்னும் நூலைப் பாடியுள்ளார். வைணவ ஆழ்வார்கள் நாலாயிரம் பாக்கள் பாடினார். மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிப் பாடப்பட்ட நந்திக் கலம்பகம் என்ற நூல் பல்வர் காலத்து எழுந்த நூல்களுள் சிறந்த தொன்றாகும். இதில் பல வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. இந்நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இவரது அவைக்களப் புலவரான பெருந்தேவர் என்பார் பாரத வெண்பா என்ற நூலைப் பாடியுள்ளார். பொன் வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா ஆகிய நூல்கள் இக்காலத்தனவேயாகும்.

## 5.10 பல்லவர்கள் கலைக்குச் செய்த தொண்டு

தமிழக வரலாற்றில் அரிய கலைப்படைப்புகளின் பொற்காலமாகத் திகழ்வது பல்லவர் காலம் ஆகும். மலைகளையும் பாறைகளையும் நினைவில் நிற்கும் கலைச்சின்னங்களாக மாற்றியவர்கள் பல்லவர்கள். சிம்மவிட்ணு, முதல்மகேந்திரவர்மன், முதல் நரசிம்மவர்மன், இரண்டாம் இராசசிம்மன் ஆகிய பல்லவ மன்னர்கள் கலைப்படைப்புகளை உருவாக்குவதற்கு எனத் தங்களை அர்ப்பணித்து நின்றமை காண்கிறோம். மாமல்லபுரம், காஞ்சி கைலாசநாதர் கோவில், வைகுந்தப்பெருமாள் கோவில், சித்தன்ன வாசல் போன்ற புகழ்பெற்ற கலைக்கோவில்களும், மகேந்திர வாடி, மலையடிப்பட்டி, மாமண்டூர், சீயமங்கலம், தளவானூர், திருச்சி, வல்லம் ஆகிய இடங்களில் அமைந்த குடவரைக் கோவில்களும் தோன்றிய காலம் இது எனின் பல்லவர்கள் கலைக்குச் செய்த அருந்தொண்டு கூறாதே அமையும். பல்லவர்காலக் கலைகளைக் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை என ஆறுவகைப்படுத்தலாம்.

கலைத்துறைக்கு அருந்தொண்டு ஆற்றிய பல்லவ மன்னர்களுள் முதல் மகேந்திரவர்மனும் முதல் நரசிம்மவர்மனும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

## 5.10.1 கட்டடக்கலை

பிற்காலப் பல்லவர்கள் கட்டிய கோவில்களில் இடம் பெற்றுள்ள மண்டபங்கள், கல்கட்டிட அமைப்புக்கள் ஆகியவற்றில் பல்லவர் தம் கட்டடக்கலைத் திறனைக் காண முடிகிறது. மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோவில், ஈசுவரன் கோவில், முகுந்தன் கோவில் காஞ்சி கைலாசநாதர் கோவில், வைகுந்தப் பெருமாள் கோவில் ஆகியன பல்லவர்காலக் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.



## 5.10.2 சிற்பக்கலை

சிற்பக்கலைக்கு முதல் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோர் செய்த தொண்டுகள் அளப்பரியன. இவர்களின் படைப்புக்களைத் தவிர இரண்டாம் பரமேசுவரவர்மனின் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலும் பல்லவர்காலச் சிற்பக் கலையில் குறிப்பிடத்தக்கதாகும்.

**காஞ்சி கைலாசநாதர் கோவில்**

‘கட்டடக்கலையின் மிகப்பெரிய படைப்பு” எனவும் “பல்லவக் கலையின் கொடுமுடி” எனவும் புகழப்படுவது காஞ்சி கைலாசநாதர் கோவில் ஆகும். இக்கோவிலின் திருச்சுற்று முழுவதும் சிற்பக்கலைக் கூடமாகத் திகழ்கின்றது. இக்கோவிலில் காணப்படும் சிற்பங்களுள் சிவன் உமை, நான்முகன்-நாமகள் திருமால்-திருமகள் ஆகியோரது திருமணக் காட்சிகள், பாற்கடல் கடையப்படும் காட்சி, சிவன் அமர்ந்திருந்த கயிலையை இராவணன் பெயர்க்கும் காட்சி, சிவன் நால்வர்க்கும் அறம் உரைத்தல், சிவனைத் திருமால் வழிபடுதல் ஆகியவை குறிப்பிடத்தக்கன. எட்டுக் கைகளுடன் சிவன் நடமிடுவதைக் குறிக்கும் பலவகைச் சிற்ப உருவங்கள் இக்கோவிலில் இடம்பெறல் காண்கிறோம்.

**காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவில் அமைப்பு**

பல்லவ வரலாற்றின் பெரும்பகுதியை விளக்கி நிற்கும் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளமை. காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோவிலில் காணப்படும் தனிச்சிறப்பாகும். இக்கோவில் உறுப்புகளைக் சுற்றாலை மண்டபம், கருவறை, முகமண்டபம் என மூவகைப்படுத்தலாம்.

**சுற்றாலை மண்டபம்**

மதில்பகுதியில், கற்றாலை மண்டபம் உள்ளது. சிங்க உருவங்கள் செதுக்கப்பட்ட தூண்கள் இம்மண்டபத்தை அணிசெய்கின்றன. பல்லவர்கால அரசியல் நிகழ்ச்சிகள் பலவும் கல்வெட்டுக்களாக இம்மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. கருவறையும் விமானமும்: கருவறை 90 அடி பக்கம் உடைய சதுரவடிவில்

அமைந்தது. கருவறை மீது விமானம் அமைந்துள்ளது. இதுவும் சதுரவடிவ அமைப்புடையதாகும். நான்கு மாடிகள் கொண்டு அமைக்கப்பட்ட இதன் கண் ஒவ்வொரு மாடியைச் சுற்றிலும் ஒரு நடை வழியும் வலம் வழியும், வலம் வருவதற்கு ஏற்ற இடைவெளியும் உள்ளன. கருவறையைச் சுற்றி 58 சிறுகோவில்கள் உள்ளன. வெளிப்புற மதில்சுவரைச் சிற்ப வேலைப்பாடுகள் அணிசெய்கின்றன. பல்லவக் கட்டடக்கலையின் முதிர்ச்சி பெற்ற படைப்புக் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவில் என்பர் நீலகண்ட சாத்திரி.

## 5.10.3 ஓவியக்கலை

சித்தன்ன வாசலிலும், குடுமியாமலை, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் அமைந்த கோவில்களிலும் உள்ள ஓவியங்கள் பல்லவர்கால ஓவியக்கலைத் திறனை விளக்கி நிற்கும் சிறந்த எடுத்துக்காட்டுகள். இங்குக் கோவில்சுவர்கள். தூண்கள், மண்டபங்களின் உட்புறச்சுவர்கள் ஆகிய இடங்களில் வண்ண ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளமை காண்கிறோம்.

**சித்தன்னவாசல்**

பல்லவர்கால ஓவியக்கலைத் திறனை விளக்கி நிற்கும் ஒப்பற்ற ஓவியக் கலைக்கூடம் சித்தன்னவாசல். திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே 20 கல் தொலைவில் உள்ள இவ்விடம் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்தது.

சித்தன்ன வாசல் ஓவியங்களை மூவகைப்படுத்துவர் டாக்டர் இராசமாணிக்கம் 1)நடனமாதர் ஓவியங்கள் 2) அரசன் அரசி ஓவியங்கள் 3) கூரையிலும் தூண்களிலும் உள்ள ஓவியங்கள்

முன்மண்டபத் தூண்கள் இரண்டில் நடனமாடும் மாதர் இருவரது ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் காணப்படும் தலை ஒப்பனையும் அணிகலன்களும் பல்லவர்காலப் பெண்களின் அணிவகைகளை அறியத் துணை நிற்கின்றன.

மண்டபத்தின் வலப்புறத் தூணில் அரசன் அரசியரின் தலைகள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. ஆதிவராகர் கோவிலில் உள்ள முதல் மகேந்திரவர்மனின் உருவத்துடன் இவ்வரசனின் உருவம் ஒன்றுபட்டு விளங்குகின்றமையைக் காண்கிறோம்.

கூரையில் அமைந்த ஓவியம் ஒரு தாமரைக்குளமாகும். மீன்கள், அன்னங்கள், யானைகள், எருமைகள் ஆகியவற்றின் இடையே தாமரை மலர்கள் மலர்ந்து விளங்கும் காட்சி இதில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

இவ்வோவியங்களைத் தவிர சித்தன்னவாசலின் முன் மண்டபத்தின் இருபுறமும் உள்ள மாடங்களில், யோகநிலையில அமா்ந்த சமணத் தீா்த்தங்கரரின் சிலையும் உள்ளது.



## 5.10.4 இசைக்கலை

ஆழ்வாா் நாயன்மாா்களின் சமயப் பாடல்களின் வாயிலாக இசைக்கலை வெள்ளமெனப் பெருகி ஓடியகாலம் பல்லவா் காலம். தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன் என்றும், ஈசன் இணையடி நீழலை மாசில்லா வீணை ஒலியுடன் ஒப்பிடும் அப்பரின் பாடல்கள் அடியாா்கள் இசையில் கொண்ட ஈடுபாட்டை விளக்கி நிற்கும் "பண்ணியல் பாடல் அறாத ஆவூா்", "மாதா் மைந்தா் இசைபாடும் பூம்புகாா்" போன்ற தேவாரத் தொடா்கள் பண்ணும் இசையும் செழித்து நின்ற சூழலை விளக்கும்.

பல்லவ மன்னா்களுள் இராசசிம்மனும் முதல் மகேந்திரவா்மனும் இசைவல்லாளா்கள். வாத்ய வித்யாதரன், வீணாதரன் எனும் இராசசிம்மனின் புனைபெயா்களும், சங்கீரண சாதி மகேந்திரனின் புனைபெயரும் அவனது குடுமியாமலை இசைக் கல்வெட்டும் அவா்தம் இசைப்புலமையை விளக்கி நிற்கின்றன.

அடியாா்கள் இறைவனை இசைவடிவில் கண்டு நின்றனா். இசையால் விளைந்த பயனாகக் கருதி வழிபட்டனா். "இயலவன் இசையவன் பண்ணவன்" எனவும் "ஏழிசையாய் இசைப் பயனாய் விளங்குபவன் எனவும் இறைவன் பாராட்டப்பட்டான்.

## 5.10.5 நடனக்கலை

இராசசிம்மனுடைய கைலாசநாதா் கோவிலில் சிவன் ஆடிய எண்வகை நடனநிலைகளும், வைகுந்தப் பெருமாள் கோவில், சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் இடம் பெற்றுள்ள பெண்களின் நடனக்காட்சிகளும், பல்லவா்கால நடனக்கலைத் திறனுக்கு உயரிய எடுத்துக்காட்டுகள்.

## 5.10.6 நாடகக்கலை

மன்னா்கள் நாடகக்கலைக்கு ஊக்கம் அளித்தது மட்டுமன்றித் தாமே நாடகக்கலை வல்லுநராகவும் விளங்கியமை காண்கிறோம். முதல் மகேந்திரவா்மன் மத்தவிலாசபிரகசனம் என்னும் நாடகநூலை வடமொழியில் இயற்றினான். இராசசிம்மனும் வடமொழி நாடகம் ஒன்று எழுதியதாக அறிகிறோம்.

தமிழக வரலாற்றில் கலைப்படைப்புக்களின் பொற்காலமாகத் திகழும் பல்லவா் காலம் தனக்கெனத் தனித்தன்மைகள் சிலவற்றைக்

கொண்டு விளங்குகின்றது. கலைப்படைப்பிற்குப் பாறைகளையும் மலைகளையும் பயன்படுத்தத் தொடங்கிய காலம் இதுவேயாகும். சமயப் பரப்புதலுக்கு இசையைத் தனிப்பெரும் கருவியாகக் கையாளத் தொடங்கிய காலமும் இதுவே எனலாம். குகைகளைக் குடைந்து குடைவரைக் கோவில்கள் அமைதல், தனிப்பெரும் பாறைகளை ஒற்றைக்கல் கோவில்களாக உருவாக்குதல் போன்ற சிற்பக்கலை உத்திகள் முதன் முதலில் இக்காலத்தே தான் பின்பற்றப்பட்டன. இதற்கு முன் இவை கையாளப்படவில்லை வாதாபியில் இருந்து நரசிம்மனால் பிள்ளையார் கோவில் படைப்புகளும் இக்காலத்தே தான் கால்கொண்டன.

## 5.11 சேரர்களின் வரலாறு

தமிழ் நாட்டை ஆண்ட மூன்று முக்கியமான மன்னர் பரம்பரையினர் சேரர், சோழர், பாண்டியர் ஆவர். இவருள் சேரமன்னர் பரம்பரையே முதலில் தோன்றியது என்பர். இதற்கு சேர, சோழ, பாண்டியர் என்று வழக்கில் கூறுவதில் சேரர் முதலிடம் வகிப்பதும், தொல்காப்பியர் சேரருக்குரிய பனம் பூமாலையையே முதலில் குறிப்பிட்டுப் பின்னர் பாண்டியருக்குரிய வேப்ப மாலையையும், சோழருக்குரிய ஆத்தி மாலையையும் குறிப்பிடுவதும், சமவெளி நாடுகளான சோழ, பாண்டிய நாடுகளைக் காட்டிலும் மலைநாடான சேரநாடே பழைமையானதாக இருக்கலாம் என்பதும் சான்றாக எடுத்துக்காட்டப்படுகிறது. ஆனால் பண்டைய தமிழர் அரசு பாண்டியர் அரசுதான் என்றும் கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் பாண்டியர் அரசே இருந்ததெனவும் கூறப்படுகிறது. எப்படியிருப்பினும் சேர, சோழ,பாண்டிய அரசுகள் வரலாற்றுக் காலத்துக்கு முன்னரே தோன்றியதாகத்தான் கொள்ள வேண்டியுள்ளது.

சங்க இலக்கியத்தில் கூறப்படுகின்ற 300-க்கும் மேற்பட்ட மன்னர்களின் அரசியல் வரலாற்றைத் தொடர்ந்து எழுதுவதற்குத் தேவையான குறிப்புகள் கிடைக்கவில்லை. பதிற்றுப்பத்து என்ற நூலில் சேர மன்னர்களின் மூன்று பரம்பரையினரைப் பற்றி ஓரளவு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உதயஞ்சேரல் என்ற சேரமன்னன்தான், தற்போது மறைந்துவிட்டதாகக் கருதப்படும் பதிற்றுப்பத்தில் முதற்பத்தின் பாட்டுடைத் தலைவனாவான். பாரதப்போரில் கலந்துகொண்ட பாண்டவ, கௌரவப் படைகளுக்குச் சோறு வழங்கியவன் இவன்தானா என்பது குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இவன் வேளிர் குடியைச் சேர்ந்த வெளியன் வேண்மாள் நற்சோணை என்பவளை மணந்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்தவனே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.

## 5.11.1 இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

இரண்டாம் பத்தின் தலைவனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கி.பி. 27முதல் 85ஆம் ஆண்டு வரை 58ஆண்டுகள் ஆட்சி செய்ததாக, பேராசிரியர் என்.சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். இவன் ஆரிய மன்னர்களை வென்று, சேரர் கொடியான விற்கொடியை இமயத்தில் பறக்கவிட்டான். இவன் கடற்கொள்ளைக்காரர்களை அடக்கியதுடன், யவனர்களையும் பல போர்களில் தோற்கடித்தான். இவன் சோழன் மகளான மணக்கிள்ளி என்ற நற்சோணையை மணந்துகொண்டான். இவர்களுக்குக் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், இளங்கோ என்ற இரண்டு ஆண்மக்கள் பிறந்தனர். ஒரு நாள் இமயவரம்பன் அரசவையில், முன்யோசனை இல்லாச் சோதிடர் ஒருவர், இமயவரம்பனுக்குப் பின் அவனது இரண்டாவது மகனே பட்டத்துக்கு வருவான் எனக் கூறியதும். இளங்கோ தன் அண்ணனுக்குப் பட்டத்தைவிட்டுக் கொடுத்துத் துறவிக்கோலம் பூண்டார். அவரே பின்னாளில் சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் ஆவார். இமயவரம்பன் வேற்பரடக்கிய பெருவிரற்கிள்ளி என்ற சோழனை எதிர்த்துப் போரிட்டபோது, இரண்டு மன்னர்களும் இறந்து போனதாகவும், இருவருடைய மனைவிமார்களும் போர்க்களத்திலேயே உடன்கட்டை ஏறியதாகவும் கூறப்படுகிறது.

இமயவரம்பன் இறந்தபின்பு அவனுடைய தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பட்டத்துக்கு வந்தான். அவன் கி.பி.85 முதல் 110 வரை 25 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இமயவரம்பனுக்குப் பின் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஆட்சிக்கு வந்ததற்கான காரணம் தெறியவில்லை. இவன் பல போர்களில் வெற்றிபெற்றதாகச் செய்திகள் கூறப்படுகின்றன. இறுதியில் அவன் துறவு மேற்கொண்டு அரியணையில் இருந்து இறங்கியதாகத் தெரிகிறது.

வேளாவிக் கோமான் என்ற பதுமனின் இரண்டாவது மகளான தேவியையும் இமயவரம்பன் மணந்திருந்தான். தேவியின் மூலம் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுக் சேரலாதன் என்ற இரண்டு ஆண் மக்களும் இமயவரம்பனுக்கு உண்டு. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் கி.பி110 முதல் 135 வரை 25 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனுக்கு எதிரிகள் நிறைய இருந்தனர் என்றும், அவர்களை அவன் தோற்கடித்தான் எனவும் கூறப்படுகிறது. இவனுடைய பெரும் எதிரியான நன்னனை எதிர்த்துப் போரிட்டு மாபெரும் வெற்றியடைந்தான்.

## 5.11.2 செங்குட்டுவன்

செங்குட்டுவன் கி.பி 135 முதல் 190 வரை 53 ஆண்டுகள் ஆட்சி செய்தான். கடற்கொள்ளைக்காரர்களை அடக்கியதால் கடற்பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று அழைக்கப்பட்டான்.

கரிகாற்சோழன் இறந்தபின், சோழநாட்டில் ஏற்பட்ட குழப்பத்தை அடக்கி, கரிகாலன் மகன் கிள்ளிவளவனுக்கு முடிசூட்டுவித்தான். வடநாட்டின் மேல் படையெடுத்துச் சென்று ஆரிய மன்னர்களை வென்று, இமயத்திலிருந்து கல் எடுத்துவந்து கண்ணகிக்கு சிலை அமைத்து, தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பத்தனித் தெய்வ வழிபாட்டைப் பரப்பினான். இவன் இளங்கோ வேண்மாள் என்பவளை மணந்து குட்டுவன் சேரல் என்ற மகனைப் பெற்றெடுத்தான். பரணர் என்பவரிடம் கல்வி பயிலச் சென்ற குட்டுவன் சேரல், அவனுடைய தந்தைக்குப்பின் அரியணை ஏறாத காரணம் தெரியவில்லை.

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் தம்பியான ஆடு கோட்பாட்டுச் சேரலாதன், செங்குட்டுவனுக்குப் பின் அரியணை ஏறியதாகத் தெரிகிறது. இவன் 38 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனுடைய நாட்டிலிருந்து கொள்ளைக்காரர்கள் கடத்திச் சென்ற ஆடுகளை மீட்டு வந்ததனால் இவனுக்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. இவன் குட்ட நாட்டின் மேல் படையெடுத்து வந்த சதகர்னிகளை முறியடித்தான்.

அத்துவன் சேரல் இரும்பொறையின் மகனான செல்வக் கடுங்கோவாழியாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இரண்டாம் மனைவியான தேவியின் சகோதரியை மணந்தவனாவான். பொறையர் பரம்பரையைச் சேர்ந்த செல்வக் கடுங்கோவாழியாதன் கி.பி.175 முதல் 200 வரை 25 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனும் போர்களில் பல வெற்றிகளைப் பெற்றதாகக் கூறப்படுகிறது. இவன் ஏழாம்பத்தின் பாட்டுடைத் தலைவனாவான்.

செல்வக் கடுங்கோவின் மகனான பெருஞ்சேரல் இரும்பொறை கி.பி.200 முதல் 217 வரை 17 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்று போற்றப் பெற்றான். இவன் வேண்மாள் அந்துவன் செள்ளை என்பவரை மணந்து இளஞ்செழியன், இரும்பொறை என்ற ஆண்மகனைப் பெற்றெடுத்தான். இறுதியில் இவன் துறவு மேற்கொண்டு அரியணையிலிருந்து இறங்கியதாகத் தெரிகிறது.

இளஞ்சேரல் இரும்பொறை கி.பி.217 முதல் 233 வரை 16 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் கோப்பெருஞ் சோழனையும் இளம்பழையன்மாறன் என்ற பாண்டியனையும் தோற்கடித்துப் பெருவெற்றி பெற்றான். இவன் எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் ஆவான்.

இவர்கள் தவிர தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனுடன் போரிட்டுத் தோற்ற யானைக் கட்சேய்மாந்தரஞ் சேரல், இரும்பொறையைப் பற்றியும், சோழன் செங்கணானுடன் போரிட்டுத்

தோற்ற கணைக்கால் இரும்பொறையைப் பற்றியும் சங்க இலக்கியங்களில் செய்திகள் கிடைக்கின்றன.

சேரர்களுக்கு வஞ்சி தலைநகரமாக விளங்கினாலும், தொண்டியைத் தலைநகரமாகக் கொண்டும் சில சேரர்கள் ஆண்டதாகத் தெரிகிறது. ஒரே நேரத்தில் இரண்டு அல்லது மூன்று சேரர்கள் ஆட்சி செய்ததாகவும் தெரிகிறது. சேரர் தலைநகரான வஞ்சி, மலையாளக் கடற்கரையில் உள்ள திருவஞ்சிக்குளம் என்றும் தமிழகத்திலுள்ள கரூர் என்றும் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன.

## 5.12 தொகுத்துக் காண்போம்:

1. களப்பிரர் குறித்தும் களப்பிரர் ஆட்சியில் தமிழகம் பெற்ற நன்மை தீமை ஆகியவை குறித்தும் அறிந்து கொண்டீர்கள்.
2. பல்லவர்களின் கலைத் தொண்டு குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
3. சேர மன்னர்களின் வரலாறு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 5.13 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. களப்பிரர்கள் குறிப்பு வரைக.
2. பல்லவர்களின் ஆட்சிமுறையை விவரிக்க?
3. பல்லவர்களின் கலைப்பணி குறித்து விளக்குக?

## 5.14 மேலும் அறிந்துகொள்ள

மா.இராசமாணிக்கனார் - பல்லவர் வரலாறு

ஔவை சு. துரைசாமிபிள்ளை - சேர மன்னர் வரலாறு

## கூறு: 6

# சோழப் பேரரசின் தோற்றமும் வளர்ச்சியும் - விசயாலயன் முதல் மூன்றாம் இராசேந்திரன் வரை – சோழர்களின் ஆட்சி முறை- பண்பாட்டு நிலை – கலை வளர்ச்சி – சோழர்களின் கடல் வணிகம்

குறிப்பு

## 6:1 முன்னுரை:

காவிரியை மையமாகக் கொண்டு சோழர்களுடைய ஆட்சி விளங்கியமையால் ‘காவிரி வள நாடர்’ எனவும் ‘பொன்னி வளநாடர்’ என்றும் அழைக்கப் பெற்று தமிழ் நாட்டு வரலாற்றிலே பெரும் புகழை ஈட்டியவர்கள் சோழர்கள். சோழர் வரலாற்றில் இராசராசனுக்கு எனத் தனிச்சிறப்பு உண்டு. மெய்க்கீர்த்தி என்னும் முறையை உருவாக்கியவன் இம்மன்னனே.

## 6:2 குறிக்கோள்கள்

1. பிற்காலச் சோழர்களின் வரலாற்றைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
2. முதல் இராசராச சோழனின் தனிச்சிறப்புகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
3. இராசேந்திரனின் போர் வெற்றிகள் குறித்துத் தெரிந்து கொள்வீர்கள்.
4. குடவோலை முறை பற்றி அறிந்து கொள்வீர்கள்.

## 6.3 பிற்காலச் சோழப் பேரரசின் தோற்றம்

சோழர் காலத்து வரலாற்றை அறியக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பெரிதும் துணை புரிகின்றன. 1965ஆம் ஆண்டு வரை மத்திய அரசு கல்வெட்டுப் பிரிவினரால் படியெடுக்கப்பட்ட 36,066 கல்வெட்டுக்களில் தமிழகத்திலிருந்து மட்டும் கிடைத்தவை 21,500. இதுவரையிலும் சுமார் 8000 கல்வெட்டுகளே அச்சேறியுள்ளன. அச்சான எட்டாயிரம் கல்வெட்டுக்களில் 30இராசராசன் காலத்தவை என்றால் சோழர் காலச் சிறப்பினை உணரலாம். சோழன் என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பது பற்றி அறிய இயலவில்லை. சோழர் குல முறையை அறிஞர்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கின்றனர்.

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள்
2. வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்தவர்கள்

3. பிற்காலச் சோழர்கள்

சோழர்களுடைய குல முறையைக் கலிங்கத்துப்பரணி, "இராச பாரம்பரியம்" என்ற தலைப்பில் கூறுகிறது. ஒட்டக்கூத்தரின் விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா ஆகிய மூவருலாவிலும் சோழர் குலமுறை கூறப் பெற்றுள்ளது.

*தமிழக வரலாறும் பண்பாடும்*

**குறிப்பு**

உறையூருக்கு அண்மையில் குறுநில மன்னனாக இருந்த விசயாலயன் பல்லவர், பாண்டியர்களுக்கிடையே நடந்த போரில் பல்லவருக்குத் துணை நின்றான். போரில் விசயாலயன் வெற்றி பெற்றான். தஞ்சாவூரைக் கைப்பற்றி தன் ஆட்சிக்கு ஆக்கத்தையும் விரிவையும் தேடிக் கொண்டான். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே ஈடிணையற்ற பெரும் புகழை ஈட்டிக்கொண்டு சோழப் பேரரசுப் பரம்பரையைத் தொடங்கி வைத்தவன் விசயாலயச் சோழன் ஆவான்.

## 6.3.1 திருப்புறம்பியம் போர்

மூன்றாம் நந்திவர்மன் கி.பி.869 ஆம் ஆண்டில் இறந்தார். அவருக்குப் பின் நிருபதுங்கனுக்கும் அவனுடைய ஒன்றுவிட்ட சகோதரன் அபராஜிதனுக்கும் வாரிசு உரிமைப் போர் ஏற்பட்டது. அபராஜிதன் பல்லவ நாட்டின் மன்னனாக விரும்பியது தான் அதற்குக் காரணமாகும். இருவரும் துணையைத் தேடினர். நிருபதுங்கனுக்கு வரகுணன் ஆதரவு நல்கினான். இப்பதவிப் போட்டியின் இறுதியில் அபராஜிதன் வெற்றி பெற்றான். இதனால் பாண்டிய அரசன் இரண்டாம் வரகுணன் சோழ நாட்டின் மேல் படையெடுத்து விஜயாலயன் செல்வாக்கை அடக்க முற்பட்டான். பல்லவர்கள் வரகுணனை அவ்வாறு செய்யும்படி பணித்தார்கள். வரகுணனும் அதற்கு இணங்கிச் சோழ நாட்டின் மீது படையெடுத்தான். தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரியாற்றின் வடகரையிலுள்ள இடவை என்னும் இடம் வரை எதிர்ப்பில்லாமல் சென்ற பாண்டியன் அதன் பின் மேலும் வடக்கே சென்று பெண்ணையாற்றின் கரையில் அரசூர் என்னும் இடத்தில் தன் பாசறையை அமைத்தான். பின்னர் அங்கேயே சில காலம் நிருபதுங்கனின் துணைக்காகத் தங்கினான்.

நிருபதுங்கனின் படைகளும் அபராஜிதன் படைகளும் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருப்புறம்பியம் என்னும் இடத்தில் கி.பி885 ஆம் ஆண்டில் மோதிக் கொண்டன. அப்போரில் முதலாம் பிருதிவிபதி உயிரிழந்தான். எனினும் அவன் தன் நண்பன் அபராஜிதனுக்கு வெற்றி தேடித் தந்துவிட்டான். அத்துடன் நிருபதுங்கன் ஆட்சி முடிவு பெற்று அபராஜிதன் ஆட்சி தொடங்கியது.

## 6.3.2 விளைவுகள்

திருப்புறம்பியம் போர் தமிழக வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது. இப் போரில் கங்க- பல்லவ- சோழ கூட்டணிப் படைகள் பாண்டியர்களை முறியடித்தன. இப்போர் உடன் பிறந்தோர்க்கு இடையே நடந்த போராகும். இதில் உண்மையிலேயே பயனடைந்தவன் சோழன் முதலாம் ஆதித்தன் ஆவான்.

**குறிப்பு**

1) அபராஜிதனுக்கு முதலாம் ஆதித்தன் பாண்டிய நாட்டின் சில பகுதிகளை அபராஜிதன் முதலாம் ஆதித்தனுக்குக் கொடுத்தான் ஆதரவு நல்கியதால்.

2) தோல்வியடைந்த வரகுணன் வாழ்க்கையில் பற்றிழந்து மாணிக்கவாசகர் என்ற சைவ நாயன்மாருடன் சேர்ந்து துறவியாய் மாறினான்.

3)வரகுணன் சகோதரன் வீரநாராயணன் எதிர்ப்பின்றி மதுரை மன்னானான்.

4) அபராஜிதன் தன் நன்றிக் கடனை செய்த பின், ஆதித்தன் அவனுடைய மேலாதிக்கத்தில் சிற்றரசனாக இருக்க விரும்பவில்லை. ஆகவே, நன்கு திட்டமிட்டு, ஆயத்தம் செய்து, பின்னர் தொண்டை மண்டலத்தின் மீது ஆதித்தன் படையெடுத்து பல்லவ நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான்.

5) திருப்புறம்பியம் போரின் விளைவாக பல்லவர் ஆதிக்கம் தொண்டை நாட்டில் மறைந்தது.

6) இப்போரில் கொண்ட வெற்றியினால் சோழ அரசன் முதல் ஆதித்தன் தொண்டைமண்டலம், சோழ மண்டலம் முதலிய பகுதிகளுக்கும் அரசனானான்.

7) நிருபதுங்கனும் சுமார் 879 ஆம் ஆண்டில் இறந்து போனான். அதனால் எதிர்ப்பேதும் இல்லாததால் சோழ எல்லை தெற்கில் காவிரி ஆற்றிலிருந்து வடக்கில் இராஷ்டிரகூடரின் தென் பகுதி வரை பரவியிருந்தது.

8) பெரும் உதவி செய்த கங்க மன்னன் முதலாம் பிரிதிவிபதி உயிரிழந்த பின்னர் அவனது பேரன் இரண்டாம் பிரிதிவிபதி விரைவிலேயே ஆதித்தனுடைய மேலாதிக்கத்தை ஏற்க நேர்ந்தது.

## 6.4 பிற்காலச் சோழப் பேரரசு வரலாறு

சங்க காலத்திற்குப் பிறகு களப்பிரர் படையெடுப்பால் சோழர்களின் ஆட்சி முடிவுற்றது. 600 ஆண்டுகளுக்குப் பிறகு சோழர்களின் எழுச்சி மீண்டும் ஏற்பட்டது.

### 6.4.1 விஜயாலயன்(850-875)

முத்தரையர்களைத் தோற்கடித்துத் தஞ்சையைக் கைப்பற்றினான். தஞ்சையில் கோட்டையை எழுப்பி, சோழர்களின் தலைநகராக்கினான். தஞ்சையில் நிசும்ப சூதனிக்குக் கோயில் எழுப்பினான். தஞ்சை கொண்ட பரகேசரி என்ற பட்டம் பூண்டனன். சோழப் பேரரசை நிலை நிறுத்தியவன்.

### 6.4.2 ஆதித்தன்(871-907)

திருப்புறம்பியம் போரில் பல்லவன் அபராஜிதனுக்குத் துணையாக நின்றான். பின்னர் நடந்த போரில் யானை மேல் வந்த அபராஜிதனைக் கொன்றான். சோழப் பேரரசை வடக்கே காளத்தி வரை விரிவுபடுத்தினான். காவிரியின் இரு கரைகளிலும் கோயில்களை எழுப்பினான். தில்லையம்பலத்துக்குப் பொன் வேய்ந்தான். காளத்தியில் இயற்கை எய்தினான்.

### 6.4.3 முதல் பராந்தகன்(906-952)

பாண்டியன் இராசசிம்மனைத் தோற்கடித்து மதுரையைக் கைப்பற்றினான். ஈழத்தின் மீது படையெடுத்தான். இவன் காலத்தில் இராட்டிரகூட மன்னன் சோழ நாட்டின் மீது படையெடுத்தான். தக்கோலம் என்ற இடத்தில் இராட்டிரகூட மன்னன் கிருட்டிணனுடன் நடந்த போரில் இவனின் மகன் இராஜாதித்தன் உயிர் துறந்தான். பராந்தகன் தில்லைக் கோயிலுக்குப் பொன் வேய்ந்தான். புகழ் வாய்ந்த உத்திரமேரூர் ஊராட்சிமுறைக் கல்வெட்டு இவன் காலத்தியது. தந்தையின் நினைவாக “ஆதித்தேசுவரம் அல்லது கோதண்ட ராமேசுவரம்” என்ற கோயிலை எழுப்பினான். மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டம் இவனுக்கு உண்டு.

### 6.4.4 கண்டராதித்தன்

மதுரை மீது படையெடுத்து வெற்றி கண்டான். சைவப் பற்று நிரம்பியவன். “திருவிசைப்பா” என்ற நூலை இயற்றியவன் பட்டத்தரசி “செம்பியன் மாதேவி”.

## 6.4.5 அரிஞ்சயன்(956-957)

சிறந்த வீரன். ஆற்றூர் என்ற இடத்தில் இறந்ததால் ஆற்றூர்த் துஞ்சிய தேவர் என்று அழைக்கப்பட்டான். முதலாம் இராஜராஜன் இவனுக்கொரு பள்ளிப்படை அமைத்தான்.

## 6.4.6 சுந்தர சோழன் என்ற இரண்டாம் பராந்தகன் (956-973)

இவன் சேவூர் போரில் வீர பாண்டியனைத் தோற்கடித்தான். அரிஞ்சயனின் பட்டத்தரசியான வைதும்ப அரசியின் மகன். மதுரை கொண்ட இராஜகேசரி என்றழைக்கப்பட்டான்.

## 6.4.7 உத்தமசோழன்(970-985)

கண்டராதித்தன் மகன், இராஜராஜன் இவனுக்காக அரியணை ஏறாதிருந்தான். மதுராந்தகன் என்ற பட்டம் பெற்றவன். இவனுக்குப் பல பட்டத்தரசிகளும் மதுராந்தக கண்டராதித்தயன் என்ற மகனும் இருந்தனர்.

## 6.4.8 இராசராசன்

சோழ மன்னர்களில் தலைசிறந்தவன். காந்தளூர்ச் சாலை கலமறுத்தான். சிவபாத சேகரன் மும்முடிச் சோழன் என்ற பட்டப் பெயர்கள் பெற்றவன். பாண்டி நாட்டையும், இலங்கையையும் கைப்பற்றினான். குடகு மலை நாடு, தடிகைபாடி, நுளம்பாடி ஆகிய நாடுகளை வென்றான். கங்கரையும், கலிங்கரையும், மேலைச் சாளுக்கிய மன்னன் சத்திவர்மனுக்கு உதவினான். கடல் கடந்து முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தை வென்றான். இவன் தன் மகளான குந்தவையைக் கீழைச் சாளுக்கிய மன்னன் விமலாதித்தனுக்கு மணமுடித்து வைத்தான். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினான். இவன் காலத்தில் கடாரத்தரசன் ஸ்ரீமாற விஜயதுங்கவர்மன் என்பான். நாகபட்டினத்தில் “சூடாமணி விஹாரம் என்ற சமணப் பள்ளியை அமைத்தான். தில்லைப் பகுதியிலிருந்த தேவாரத் திருப்பதிகங்களை மீட்டவன். சிறந்த கல்வெட்டுக்களைப் பொறித்தவன்.

## 6.4.9 இராசேந்திரன்(1012-1044)

இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப் பாக்கை, மண்ணைக் கடக்கம் ஆகிய இடங்களை வென்றான். இலங்கை மன்னன் மகிந்தனைத் தோற்கடித்தான். அங்கு பாண்டிய மன்னன்விட்டு வந்த முடியைக் கைப்பற்றினான். கேரள நாட்டையும் கடலைக் கடந்து பல தீவுகளையும் கைப்பற்றினான். பாண்டி நாட்டை வென்று அங்கு தன் மகனுக்கு சோழ பாண்டியன் என்ற பட்டமளித்தான். மேலைச் சாளுக்கிய ஜயசிம்மனைப்

போரில் வென்றான். கங்கை வரை படையெடுத்து வாகை சூடினான். கடல் கடந்து கடாரத்தின் மீது படையெடுத்து அந்நாட்டரசன் சங்கராம விஜயோத்துங்கனை வென்று பட்டத்து யானை, தோரணம் ஆகியவற்றைக் கொணர்ந்தான். முடிகொண்ட சோழன், பண்டித சோழன் ஆகிய பட்டப்பெயர்களும் இவனுக்கு உண்டு. மதுராந்தகன் என்பது இவன்றன் இயற்பெயராகும். கங்கா நதியும் கடாரமும் கைக் கொண்டு சிங்காதனத்திலிருந்த செம்பியன் எனப் பாடப் பெற்றவன்.

## 6.4.10 முதலாம் இராசாதிராசன் (1018-1054)

கல்யாணபுரத்தை எரித்தவன். விஜயராஜேந்திரன் என்ற பட்டம் பூண்டான். அங்கிருந்து துவாரபாலகர் சிலைகளைக் கொண்டு வந்தான். இலங்கை அரசனை முடி இழக்கச் செய்தான். மேலைச் சாளுக்கிய மன்னனான சோமேசுவரனுடன் கொப்பம் என்னுமிடத்தில் போரிட்டு உயிர் துறந்தான் வாழ்நாள் முழுவதும் போரில் கழித்தவன்.

## 6.4.11 இரண்டாம் இராசேந்திரன்(1051-1063)

கொப்பம் போர்க்களத்தில் தன் தமையன் இராஜாதிராஜன் இறந்துவிடவே. அப்போர்க்களத்திலேயே முடி சூட்டிக் கொண்டான். கொப்பத்தில் தோற்றோடிய சோமேசுவரனை முடக்காறு என்னுமிடத்தில் தோற்கடித்தான். ஈழத்தின் மீது படையெடுத்து பெரும் பகுதியைக் கைப்பற்றினான்.

## 6.4.12 வீரராசேந்திரன்(1063-1070)

மேலைச் சாளுக்கிய மன்னனை ஐந்து முறை தோற்கடித்தான். பொத்தப்பி வேந்தனையும் சேர பாண்டியரையும் வெற்றி கொண்டான்.

கூடல் சங்கமம் என்ற இடத்தில் சோமேசுவரனைத் தோற்கடித்துத் துங்கபத்திரை ஆற்றங்கரையில் வெற்றித் தூண் நாட்டினான். ஈழ நாட்டு மன்னன் விஜயபாகுடன் போர் புரிந்து வென்றான். தன்னிடம் அடைக்கலம் அடைந்த கடார வேந்தனுக்கு உதவினான்.

கி.பி. 1070-இல் இவ்வுலகை நீத்தான். இவனுடைய மகனான அதிராசேந்திரன் அரசுக் கட்டில் ஏறினான். அரியணை ஏறிய பின்பு ஒரு மாத காலமே இவன் ஆட்சி புரிந்தான். விசயாலயச் சோழனின் நேர்பரம்பரை இவனுடன் முடிவடைந்தது. இதனால் நாட்டில் அரசுரிமைக் கிளர்ச்சி ஏற்பட்டது. சளுக்க நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த குலோத்துங்கன் சோழ நாட்டு மன்னனானான். இவன் இராசராச சோழனின் கொள்ளுப் பேரனாவான்.

குறிப்பு

## 6.4.13 முதலாம் குலோத்துங்கன் (1070-1120)

இம்மன்னன் வட கலிங்க நாட்டு அனந்தவர்மனைப் போரில் வென்றான். மேலைச் சாளுக்கிய மன்னன் ஆறாம் விக்கிரமாதித்தனோடு போர் புரிந்தான். கி.பி.1077-இல் தூதுக்குழு ஒன்றைச் சீன நாட்டிற்கு அனுப்பினான். கி.பி.1090-இல் கடாரத்தரசன் வேண்டுகோளின்படி நாகைப்பட்டினத்தில் இராசராசப் பள்ளி, இராசேந்திர சோழப் பெரும் பள்ளி ஆகிய பௌத்தக் கோயில்களுக்கு இறையிலியாக நிலம் வழங்கினான். இவனுக்கு சுங்கம் தவிர்த்த சோழன் என்ற பட்டப் பெயர் உண்டு. இவனது கலிங்கத்து வெற்றியை சயங்கொண்டார் பரணி பாடியுள்ளார்.

## 6.4.14 விக்கிரம சோழன் (1118-1135)

தில்லைக் கோயிலுக்குப் பொன் வேய்ந்தவன். ஒட்டக்கூத்தர் இவன் மீது உலா பாடியுள்ளார்.

## 6.5 இரண்டாம் குலோத்துங்கன்(1113-1150)

தில்லையில் சிற்றிலம்பத்திற்குப் பொன் வேய்ந்தான். ஒட்டக்கூத்தர் இவன் மீது பிள்ளைத் தமிழ் பாடினார். இவனுக்கு அநபாயன், அபயன், திருநீற்றுச் சோழன் எனப் பல பட்டங்கள் இருந்தன.

## 6.6 இரண்டாம் இராசராசன்(1146-1163)

"தக்கயாகப்பரணி" இவனை வஞ்சியும் மதுரையும் கொண்டான் எனக் குறிக்கிறது. காவிரிக்கு, மலியமலை பக்கத்தில் வழிகண்டு நாட்டில் நீர்வளம் பெருகச் செய்தவன் இவனென்பர். கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தாராசுரத்தில் சிவனுக்கு ஐராவதேசுவரர் என்னும் பெயரில் பெருங்கோயில் எடுப்பித்தான். இவன் தமிழ்மொழி, வடமொழி ஆகிய இரண்டிலும் வல்லவனாயிருந்தான். "முத்தமிழுக்குத் தலைவன்" என்ற பட்டமும் பெற்றவன்.

## 6.6.1 இரண்டாம் இராசாதிராசன்(1163-1178)

இவன் பாண்டிய நாட்டில் நடைபெற்ற தாயத்தார் போரில் பராக்கிரம பாண்டியனுக்கு எதிராகக் குலசேகரனை ஆதரித்தவன். தன்னிடம் அடைக்கலம் புகுந்த ஈழநாட்டு மன்னன் ஸ்ரீ வல்லபனுக்கு உதவினான். மதுரையும் ஈழமும் கொண்ட இராசகேசரி என்ற பட்டம் பெற்றவன்.

## 6.7 மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218)

பாண்டிய நாட்டிற்குப் படை எடுத்துச் சென்று, வீர பாண்டியனைத் தோற்கடித்தான். விக்கிரமனைப் பாண்டிய நாட்டு மன்னனாக்கினான். கொங்கு நாட்டின் மீது படை எடுத்துச் சென்று வென்று கருவூரில் “சோழ கேரளனென” முடி சூட்டிக் கொண்டான். 1190-இல் பாண்டிய மன்னன் குலசேகரனை மட்டியூர், கழிக்கோட்டை ஆகிய இடங்களில் வெற்றி கண்டான். இவனுக்கு திரிபுவன வீரதேவன் என்ற பட்டப் பெயரும் உண்டு. திருவிடை மருதூர் பக்கத்தில் திரிபுவன வீரேசுவரம்” என்ற கோயிலைக் கட்டினான். தில்லையில் பொன் வேய்ந்தான். நேமிநாதம், வச்சணந்தி மாலை, நன்னூல் போன்ற நூல்கள் இவன் காலத்தில் இயற்றப்பட்டன.

### 6.7.1 மூன்றாம் இராசராசன் (1218-1256)

இவன் காலத்தில் பாண்டிய நாட்டு மன்னன் மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து தஞ்சையையும் உறையூரையும் தகர்த்தான் பல்லவச் சிற்றரசனான கோப்பெருஞ்சிங்கனால், சேந்த மங்கலம் என்னுமிடத்தில் சிறை வைக்கப்பட்டான். போசள மன்னன் சோமேசுவரனால் சிறைவிடுவிக்கப்பட்டான்.

## 6.8 மூன்றாம் இராசேந்திரன்(1246-1279)

மாறவர்மன் சுந்தரபாண்டியனை வென்றான். சம்புவராயர்களைத் தோற்கடித்தான். தில்லை நடராசரை குல தெய்வமாகக் கொண்டவன். இவன் காலத்தில் பாண்டிய நாட்டில் சடாவர்ம சுந்தரபாண்டியன் பட்டமெய்தினான். மிகப் பெரியதொரு படையைத் திரட்டிக் கொண்டு சோழன் மீது போர் தொடுத்தான். இப்போரில் சோழர்கள் தோல்வியடைந்தனர். இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் எழுப்பிய வெற்றிக் கோட்டைகள் சரிந்தன. சோழப் பேரரசு சிதறுண்டது. பாண்டிய நாட்டுக்குத் திறை செலுத்துமளவுக்கு அதன் ஆதிக்கம் குன்றிவிட்டது.

## 6.9 முதல் இராசராச சோழனின் தனிச் சிறப்பு

பிற்காலச் சோழப் பேரரசுக்கு அடிகோலிய பெருமை விசயாலயனுக்கு உரியது எனின் அதற்கு வலுவான அடிப்படை இட்டுத் தந்த பெருமை இராசராசனுக்கு உரியதாகும். சுந்தர சோழனாகிய இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மாதேவிக்கும் சதய நாளில் பிறந்தவன் இவன். கி.பி.985 முதல் 1014 வரை சோழப் பேரரசை ஆண்டவன். இவனது அரசு கிருஷ்ணா ஆறு முதல் இலங்கை வரை பரவி இருந்தது. இவனது இயற்பெயர் அருண்மொழிவர்மன். இட்டுக்

கொண்ட புனை பெயர் இராசராசன். இப்பெயர் இவனது மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் முதன்முதலாகக் காணப்படுகிறது. சோழர்கள் மாறி மாறிப் புனைந்து கொள்ளும் இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களுள் இராசகேசரி என்பது இவன் புனைந்து கொண்ட பட்டம்.

சோழர் வரலாற்றில் இராசராசனுக்கு எனத் தனிச்சிறப்புகள் பல உள. மெய்க்கீர்த்தி என்ற பெயரில் கல்வெட்டுகளில் வரலாற்று நிகழ்ச்சிகளை நிரல்படப் பொறிக்கும் வழக்கத்தை உருவாக்கியவன். அவனது ஆட்சியின் போது பெற்ற போர்வெற்றிகளை முறைப்படுத்தி மெய்க்கீர்த்தியில் தந்து அவனது வழி வந்தோர்க்கும் வரலாற்றை அறிய முயல்வோர்க்கும் தெளிவான வழியைக் காட்டியவன். மெய்க்கீர்த்தியின் தொடக்கத்தை கொண்டே அரசனை இனம் கண்டு கொள்ளுமாறு குறிப்பிட்ட தொடருடன் அதைத் தொடங்கி அவற்றில் ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்தினான். "திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி இவனுக்குரியது.

தென்னிந்தியக் கட்டடக்கலையின் "மிகத் தூய்மையான சின்னம்" எனப் புகழப்படும் தஞ்சைப் பெரிய கோவிலை அதன்நிழல் தரையில் படாமல் அமையுமாறு உருவாக்கிய பேரரசன். இக்கோயிலின் விமானத்தில் உள்ள கல்வெட்டு இக்கோயிலுக்குக் கொடை கொடுத்தவர்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. இதில் இராசராசனே, ''நாம் எடுப்பித்த இத்திருக்கற்றளிக்கு நாங்கொடுத்தனவும் நம்அக்கன் கொடுத்தனவும் நம் பெண்டுகள் கொடுத்தளவும் மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் வெட்டுக'' எனத் திருவாய் மொழிந்தருளியிருக்கிறார்.

நாடு முழுவதும் உள்ள நிலங்களை விளைநிலங்கள், தரிசு நிலங்கள், இறையிலிநிலங்கள் எனத் தரம் வாரியாகப் பிரித்துத் துல்லியமாக அளந்து, அதற்கேற்ப வரிவிதிக்க ஏற்பாடு செய்தான். நம்பியாண்டார் நம்பி மூலம் தேவாரப் பாக்களை முறைப் படுத்தித் திருமுறைகளாகத் தொகுத்தவன்; திருமுறைகள் ஓதுவதற்குக் கோயில்தோறும் ஓதுவார்களை நியமித்தவன். அயல்நாட்டு வாணிபத்தை வளர்க்கும் நோக்குடன் சீனாவிற்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பியவன்.

**சிறப்புப் பெயர்கள்**

அபயகுலசேகரன், அழகிய சோழன், இராசமார்த்தாண்டன், சிங்களாந்தகன், சிவபாத சேகரன், சோழ குல சுந்தரன், திருமுறை கண்ட சோழன், நிகரிலி சோழன்,நித்யா விநோதன், மும்முடிச் சோழன், ஜனநாதன், சத்திரிய சிகாமணி ஆகிய பெயர்கள் இராசராசனின் சிறப்புப் பெயர்களாகும். இவனுக்குப் பல மனைவியர் இருந்தனர். இதில் லோகமாதேவி பட்டத்து அரசியாகத் திகழ்ந்தாள்.

**இராசராசன் புரிந்த போர்கள்**

இராட்டிரகூடப் படையெடுப்பின் விளைவுகளிலிருந்து மீண்டும் கொண்டிருந்த சோழ அரசை உறுதிமிக்க கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து பேரரசாக மாற்ற இராசராசன் நிகழ்த்திய போர்கள் பல. பெருவுடையார் கோவில் கல்வெட்டில் இவன் பெற்ற போர் வெற்றிகள் பின்வருமாறு நிரல்படுத்தப்பட்டுள்ளன.

**"திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்**
**தனக்கே உரிமை பூண்டமை மனக் கொளக்**
**காந்தளூர்ச் சாலை கலமறுத்து அருளி**
**வேங்கை நாடும் கங்கை பாடியும்**
**தடிகை பாடியும் நுளம்ப பாடியும்**
**குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்**
**முரட்டெழில் சிங்களர் ஈழ மண்டலமும்**
**இரட்ட பாடி ஏழரை இலக்கமும்**
**முந்நீர் பழந்தீவு பன்னீ ராயிரமும்**
**திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட"**

என்பது அவனது மெய்க்கீர்த்தியாகும்

## 6.9.1 இராசராசனின் சமயப் பொறை

இராசராசன் சைவசமய ஈடுபாடு உடையவன். இவனது புனை பெயர்களுள் ஒன்று சிவபாத சேகரன் என்பதாகும். எனினும் இந்தியாவின் சமயப் பொறை கொண்டு எல்லாச் சமயங்களையும் சமமாக நடத்தியவன். பெங்களூர் மாவட்டத்தில் உள்ள மணலூரிலும், தலைக் காட்டுக்கு அண்மையிலும் திருமாலுக்குக் கோயில் கட்டியுள்ளான். நாகப்பட்டினத்தில் அவனது பொருளுதவியுடன் புத்த விகாரம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவை இராசராசனது சமயப் பொறையை விளக்கி நிற்கும் சான்றுகள்.

## 6.10 இராசேந்திரன்

எல்லைப் பரப்பிலும் ஆட்சித்திறனிலும் இந்து அரசுகளுள் மிகப் பெரியதாகவும் மிகவும் மதிக்கப் பெற்றதாகவும் அமைந்து விளங்கிய சோழப் பேரரசை ஆண்ட பெருமை முதல் இராசேந்திரனுக்கு உரியது. கி.பி.1012இல் இளவரசு பட்டம் ஏந்திய இவன் கி.பி.1014-இல் சோழப் பேரரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 1044 வரை ஆட்சி புரிந்தான்.



**குறிப்பு**

இராசராசனது ஒரே மகனாகிய இவனுடைய மெய்க்கீர்த்தி திருமன்னி வளர இருநில மடந்தையும்" எனத் தொடங்கும்.



## 6.10.1 தனிச் சிறப்புக்கள்

இராசராசன் புரிந்த போர்களுள் பெரும்பாலானவற்றிற்குத் தலைமை தாங்கி நின்று அவனுக்கு வெற்றியையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தவன். வடநாட்டையும், வெளி நாட்டையும் ஒருங்கே வெற்றி கொண்ட பிற்காலத் தமிழ் மன்னர்களுள் இராசேந்திரனைத் தவிர வேறு யாரும் இல்லை. இவன் கையாண்ட போர் உத்திகளுள் தலையாயது வேகமும் கடுமையுமாகத் தாக்குதலும், பகைவரை விரைந்து பணிய வைக்கும் நோக்கம் கொண்டது இது ஆதலின் போரின் போது சூறையாடுவதும், எரியூட்டுதலும் நடைபெறவில்லை. தஞ்சைப் பெரிய கோவிலுக்கு நிகராகக் கலை நுணுக்கம் கொண்ட கங்கை கொண்ட சோழேச்சுரம் திருக்கோயில் இவனது அரிய கலைப்படைப்பு ஆகும்.

## 6.10.2 இராசேந்திரன் புரிந்த போர்கள்

இராசேந்திரன் தொடுத்த போர்களையும் பெற்ற வெற்றிகளையும் பற்றி அவனது ஆறாவது ஆட்சியாண்டில் எழுந்த திருவாலங்காட்டுச் செப்பேடுகள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. அக்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு இராசேந்திரன் பெற்ற வெற்றிகளை மூவகைப்படுத்துவர்.

1) இராசேந்திரன் இளவரசனாக இருந்து நடத்தியவை

2) அரசனாக இருந்து நடத்தியவை

3) இவனது காலத்தில் இளவரசனாக விளங்கிய இராசாதிராசன் நடத்தியவை

## 6.11 சோழப் பேரரசின் வீழ்ச்சியும், பாண்டியர் எழுச்சியும்

கி.பி.9 ஆம் நூற்றாண்டில் விஜயாலயனால் தோற்றுவிக்கப்பட்ட சோழப் பேரரசு கி.பி.13 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் தன்னிலை குலைந்தது. சோழர்களுக்குத் திறை செலுத்தி வந்த பாண்டியர்களும், ஈழமன்னர்களும் ஏற்றம் பெற்றனர்.

உலகம் நிலையாமைக் கோட்பாட்டின் வழி நிற்பது. இந்த மண்ணில் தோன்றிய எதுவும் நிலையா. எனவே முடி மன்னரெல்லாம் பிடிசாம்பில் ஆவது போல அவர்தம் அரசும் வீழ்ந்துபடத்தான் செய்யும். பழுத்த இலை உதிர்வது போலத்தான் இதுவும் என்ற போதிலும் குறிப்பிடத்தகுந்த வேறுபல காரணங்களும் வீழச்சிக்குக் காரணமாக அமைந்தன.

## 6.12 பாண்டியர் எழுச்சி

மூன்றாம் இராசராசன் இளவரசுப் பட்டம் பெற்ற ஆண்டில் கி.பி.1216-ல் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டிய நாட்டில் முடிசூடப் பெற்றான். பெரும் வீரனாகிய, இவன் சோழர்களுக்கு அடங்கித் திறை செலுத்த விரும்பவில்லை. எனவே, வாய்ப்பினை எதிர்பார்த்திருந்த பாண்டியன் சோழ மண்டலத்தின் மீது படையெடுத்து வந்து சோழ மன்னனைப் போரில் வென்று நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். இப்போரில் சோழரின் பழைய தலைநகரங்களாகிய தஞ்சாவூரும் உறையூரும் பாண்டியர் நாட்டு வீரர்களால் கொளுத்தப்பட்டன. பல கட்டிடங்களும், நீர் நிலைகளும் அழிக்கப்பட்டன. இப்போர் நிகழ்ச்சியால் தோல்வியுற்று இராசராசன் தன் உரிமைச் சுற்றத்தினருடன் தலைநகரைவிட்டு நீங்கி வேங்கடஞ் சென்று மறைந்து வாழும் நிலைமை எய்தினான்.

## 6.13 சோழர் ஆட்சிமுறை

சோழர்கள் சிறந்ததோர் ஆட்சிமுறையினை நடத்தினர். தன்னாட்சி பெற்ற கிராமமே அரசின் பிரிவாக விளங்கிற்று. பல கிராமங்கள் ஒன்றாக இணைந்த பகுதிகள் கூற்றம். நாடு, கோட்டம் என்ற பல பெயர்களில் பல இடங்களில் அழைக்கப்பட்டன.

### 6.13.1 ஆட்சிப் பிரிவுகள்

மாநிலங்கள் மண்டலங்கள் என அழைக்கப்பட்டன. மாநிலங்களின் எண்ணிக்கை சில அரசர்களின் காலத்தில் ஆறாகவும் சிலர் காலத்தில் எட்டாகவும் இருந்தன. மண்டலங்கள் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை நாடுகள் என அழைக்கப்பட்டன. நாட்டினுடைய கட்டுப்பாட்டினுள் கூற்றங்கள் என அழைக்கப்பட்ட கிராம ஒன்றியங்கள் இருந்தன.

### 6.13.2 நீதி வழங்கும் முறை

மக்களுக்கு நீதி வழங்கும் பொறுப்பானது ஊர்ச்சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வழக்குகளை விசாரிக்கவும், தீர்ப்பு வழங்கவும் விதிகளும், முறைகளும் வகுக்கப்பட்டிருந்தன. கரணத்தான் துணையுடன் நீதி மன்றங்கள் செயல்படும். நடைமுறைப் பழக்க வழக்கங்கள், ஆவணங்கள், சாட்சிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டன. குற்றங்களைப் பெரும்பாலும் கிராம நீதி மன்றங்கள் விசாரித்துத் தீர்ப்புக் கூறின. குற்றங்களுக்குத் தண்டனையாகக் குற்றவாளியின் உடைமைகளைப் பறிமுதல் செய்வது வழக்கம். திருடு, பொய் கையொப்பம், விபச்சாரம் ஆகியவை கொடுங்குற்றங்களாகக்

கருதப்பட்டன. குற்றவாளிகள் கோயில்களுக்கு இவ்வளவு பொருள் கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்புகள் வழங்கப்பட்டன.



## 6.13.3 ஊராட்சிமுறை



ஊராட்சி முறை சோழர்களின் ஆட்சிக் காலத்தில் மிகவும் சிறப்புப் பெற்று விளங்கியது. ஊர்தோறும் நிலை பெற்றிருந்த ஊராட்சி மன்றங்கள் தன்னலமற்ற தொண்டு ஆற்றின. அவை பொறுப்புணர்ச்சியுடனும் அறநெறி பிறழாமலும், நடுவு நிலைமை குன்றாமலும் ஒழுங்காகத் தம் கடமைகளை நிறைவேற்றி வந்தன. பொது மக்கள் அம்மன்றங்களின்பால் பெருமதிப்பும், நம்பிக்கையும் வைத்து அவற்றின் முடிவுகளை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிந்து நடந்து வந்தனர். அமைதியைப் பாதுகாத்தல், நீதி வழங்குதல் அறநிலையங்களைப் பாதுகாத்தல் போன்ற பல சிறப்பான பணிகளை அவை ஆற்றி வந்தன. இதற்கு ஏராளமான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இவ்வாறு சோழர்கள் ஆட்சி சிறப்புடையதாகத் திகழ்ந்தமைக்கும் எல்லா நலன்களும் பெற்று மக்கள் வாழ்ந்து வந்தமைக்கும், ஊர்தோறும் நிலைபெற்றிருந்த ஊராட்சி அமைப்புகளே முதல் காரணம் எனலாம்.

## 6.14 வாரியங்கள்

கிராமத்தில் அலுவல்களை நிறைவேற்றக் கிராம சபையால் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாரியங்கள் இருந்தன. செங்கல்பட்டு மாவட்ட உத்திரமேரூர்க் கல்வெட்டுகள் வாரியங்களின் அமைப்பு, பணி ஆகியவற்றை விளக்குகின்றன. இவை பராந்தக சோழனது ஆணையின்படி உத்திரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் தாமே தமக்கு அமைத்துக் கொண்ட விதிகளாகும்.

சோழர் காலப் பிற கிராமங்களில் இருந்த சபைகள், வாரியங்கள் ஆகியவற்றின் பணிகள் உத்திரமேரூர்க் கிராம சபைகள் வாரியங்களை ஒத்ததாகவே இருக்க வேண்டும்.

கிராம அவைகள் மக்கள் ஆட்சியில் பெரும் பங்கு கொண்டன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பெரும் அவையும், வாரியங்களும் இருந்தன. இவ்வாரியங்கள் கிராமத்தினுடைய நிதி, நீதி, பொதுப் பணிகள், வரி விதிப்பு, பஞ்சம் ஆகியவற்றை மூலப்படு உடையார் என்னும் சமயப் பணிக்குழுவினர் கவனித்தனர்.

## 6.14.1 குடவோலை முறை

இக்காலத்தைப் போலவே அக்காலத்திலும் வாக்குப் பதிவு முறை ஒன்று கையாளப்பட்டது. அம்முறைக்குக் “குடவோலை முறை”

குறிப்பு

என்று பெயர். வாரிய உறுப்பினர்கள் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு சதுர்வேதி மங்கலமும், ஊரும், நகரமும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியும் "குடும்பு" எனப்பட்டது. ஒவ்வொரு குடும்பிற்கும் ஒவ்வோர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உத்திரமேரூரில் முப்பது குடும்பங்களும் செந்தலையில் அறுபது குடும்பங்களும் இருந்தன. வாரிய உறுப்பினராயிருக்கத் தகுதி உடையவர் பெயர்களைத் தனித்தனி ஓலைகளில் எழுதி அக்குடும்பின் பெயர் வரையப் பெற்ற ஓலை ஒன்றைச் சேர்த்துக் கட்டிக் குடத்திலிடுவர்.முப்பது குடும்புக்கு முப்பது கட்டுக்கள் இருக்கும். ஒன்றும் அறியாச் சிறுவர்களைக் கொண்டு ஒரு குடும்பிற்குரிய ஓலைக் கட்டை அவிழ்த்துக் குடத்தில் கொட்டி ஓர் ஓலையை எடுக்கச் செய்வர். அவ்வாறு எடுக்கப்பட்ட ஓலையில் உள்ள பெயரினரே ஒரு குடும்பின் பிரதிநிதி. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டோர் அடங்கிய வாரியங்கள் பின்னர் அமைக்கப்படும்.

## 6.15 சோழர்களின் பண்பாட்டு நிலை

மக்களின் பண்பட்ட வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது. சமூகப்பழக்கவழக்கம், நம்பிக்கை, சமயம், கலை, இலக்கியம், போன்றவை ஆகும்.

### 6.15.1 திருமணம்

மன்னர்களிடம் பலதார மணம் உண்டு. பொது மக்களிடம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறை இருந்தது. மணமகன் வீட்டார் பெண்ணைத்தேடி நாடி அவளது வீட்டிற்கு வர வேண்டும்: மணமகன் பெண்ணுக்குப் பரியம் போட வேண்டும் வரதட்சினை வழங்குதல் தமிழர் மரபன்று. பெண்களுக்கு நிலங்கள் கொடையாக அளித்தனர். திருமணச் சடங்குகளை அந்தணர் செய்தனர். பெண்ணின் பெற்றோர் மணமகனுக்குத் தம் பெண்ணை தாரைவார்த்துக் கொடுப்பது வழக்கம்.

### 6.15.2 பழக்க வழக்கங்கள்

சங்க காலத்துப் பழக்க வழக்கங்கள் இக்காலத்திலும் தொடர்ந்தன. கார்த்திகை மாதம் கார்த்திகை நாள் அன்று குன்றின் மேல் விளக்கு வைத்தனர். ஆற்றில் வெள்ளம் பெருகும் போது முரசு கொட்டி முன் அறிவிப்புச் செய்தனர். இரவு உணவு உண்டபின் சிறிது நடந்து செல்வர்: குழந்தை பிறந்தபின் மண் பொட்டிட்டுக் குளிப்பாட்டுவர். பிறந்த சாதகங்கள் கணிப்பது உண்டு. பெண்கள் பிணங்களுடன் சுடுகாடு செல்வது வழக்கம். விருந்தினர் வீட்டுக்கு வந்தவுடன் வெற்றிலை பாக்கு வழங்கும் பழக்கம் உண்டு.

**உணவு, உடை, அணிகலன்கள்**

பாற்சோறு, அக்கார அடிசில், புளியங் கறி என்று பலவகையான சோறுகள் சமைக்கப்பட்டன. சோற்றுடன் தயிரைக் கலந்து உண்டனர். அரிசி, சோளம், தினை, அவரை, வரகு, எள், கம்பு முதலியவற்றைப் பயன்படுத்தினர். மா, பலா, வாழைக் கனிகள் உண்டனர். கிழங்கு, தேன், பன்றி, முள்ளம் பன்றி ஆகியவற்றின் இறைச்சியை உண்டனர். மெல்லிய துணி, முயல் இரத்தம் போன்ற செவ்வண்ணப்பட்டு, எலி மயிர் ஆடைகள் போன்றவைகளை அணிந்தனர். வாசனைக் குழம்புகள் பூசினர். மலரால் அலங்கரித்தனர்.

**அடிமை முறை**

சோழர் காலத்தில் அடிமை முறை நாட்டில் இருந்தது. தனிப்பட்டவர்களுக்கு அடிமை ஆதல் இல்லை. கோவிலுக்கு அடிமை ஆயினர் கோயில் பணியின் பொருட்டு சிலர் அவர்களுடைய குடும்பத்துடன் விற்கப்பட்டனர்.

**பொழுது போக்குகள்**

இசை கேட்டல், நாடகம் பார்த்தல், கோழிச் சண்டை, ஆட்டுச் சண்டை காணுதல், ஏறு தழுவுதல் முதலியன பொழுது போக்குகளாகும். பெண்டிர் பந்தாடியும் ஊஞ்சலாடியும், இசை முழங்கியும் பொழுது போக்கினர். நாட்டியத்துக்குப் பாடிய பெண்கள், “தோரிய மடந்தையர்” எனப்பட்டனர் யானைகளை அடக்குதல் ஏறு தழுவுதல் மற்போர், விற்போர், வாட்போர் முதலிய வீர விளையாட்டுகள் நடைபெற்றன.

**நாள் பார்த்தல்**

நாளும் கோளும் பார்த்தல், சகுனம் பார்த்தல், தும்மினால் நூற்றாண்டு வாழ்க என்று வாழ்த்துவது கார்த்திகையில் குன்றில் விளக்கிடுதல், பாலைக் கொண்டு நீல மணியின் தூய்மை அறிதல் முதலிய பழக்கங்கள் குறித்தும் அறிய முடிகிறது. மரக்கட்டையாலான செருப்பு அணிதல், குடை பிடித்தல் முதலிய பழக்கங்கள் இருந்தன திருமணங்களில் அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், தீ வலம் வருதல், தாலி கட்டுதல் முதலான சடங்குகள் உண்டு.

**பெண்டிர் நிலை**

சோழர் காலத்தில் பெண்கள் எவ்விதமான கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். கற்பொழுக்கம் பெண்களுக்கு அணிகலனாக் கருதப்பட்டது. பெண்கள் சொத்துரிமை பெற்றிருந்தனர். மகளிர்க்கு நிலங்களைச் சீதனமாகக் கொடுக்கும் வழக்கம் காணப்பட்டது. மன்னரும் செல்வரும் பல மனைவியரை மணந்தனர். ஆனால் பல மனைவியரைக் கொள்ளும் பழக்கம் குடிமக்களிடம்

காணப்படவில்லை. சோழர் காலத்திலும் பெண்கள் உடன்கட்டை ஏற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் அரசிகள் சிலர் தன் கணவனுடன் உடன்கட்டை ஏறினர் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஒரு பெண் கணவனை இழந்தவள், தானாகவே உடன்கட்டை ஏறுவதாகவும், தன் கணவனுக்குப் பின் உயிருடன் இருந்தால் தன் சக்களத்தியாருக்குத் தான் அடிமை செய்ய வேண்டி வரும் என்றும் தான் தன் கணவனுடன் உடன்கட்டை ஏறுவதை யாரும் தடுக்கக்கூடாது என்றும், சுற்றியிருப்பவர்கள் தன்னைக் கயிற்றால் பிணித்து நெருப்பில் எறித்துவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதாக ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

அரசர்களுடைய அலுவல்களில் பட்டத்தரசியாரும் பங்கு கொண்டனர். அரசிகள் தனிப்பட்ட முறையில் எழுப்புவதும் கோயில்களில் திருப்பணி செய்வதும் ஆகிய பொது நலன்களில் ஈடுபட்டிருந்தனர். கண்டராதித்தன் மனைவியும், உத்தம சோழனின் அன்னையுமான செம்பியன் மாதேவியார், கோனரிராசபுரம் என வழங்கும் திருநல்லத்தில் உள்ள திருக்கோயிலைத் தம் கணவர் பெயரால் கண்டராதித்தன் என்ற கற்றளியாகப் புதுப்பித்தார். பல கோயில்களுக்கு விளக்குகள் வைத்தார். இவர் கோயில் புதுப்பிக்கும் முன்பு அக்கோயிலில் காணப்பட்ட கல்வெட்டுச் சாசனங்கள் அனைத்துக்கும் புதிய படி ஒன்று எடுத்து அமைப்பது அவர் வழக்கம். இருபத்தாறு சாசனங்களுக்கு இவர் படி எடுத்துள்ளார். அவர் படி எடுத்த கல்வெட்டுகளில் “ஸ்வஸ்தி ஸ்ரீ: இதுவும் ஒரு பழங் கற்படி” என்ற சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கும். அதற்குச் சான்று தென்னற்காடு மாவட்டம் உடையார்குடி கோயில் மகாதேவரைத் திங்கள் தோறும் சங்கராந்தி தினத்தன்று ஆயிரம் குடம் நீராட்டுவிக்க அரிஞ்சய பராந்தக தேவர் ஆச்சாரியர் உடைய பிராட்டியர் வீமன் குந்தவையார் நிலம் கொண்டுவிட்டார். சிறிய வேளார் தேவி இராசாதிச்சி என்பவளும் அவளுடைய மகள் குஞ்சர மல்லியும் ஒரு கோயிலில் இரண்டு விளக்கு எரிக்க இருபத்தைந்து ஈழக்காசுகள் அளித்தார்கள். முதலாம் இராசராச சோழனின் உடன் பிறந்தாளான குந்தவைப் பிராட்டியார் சிவன் கோயில், திருமால் கோயில், சமணக் கோயில் என மூன்று கோயில்கள் எழுப்பினார். கவரடியார்களும், அரண்மனையில் அடிசிற் தொழில் புரிந்த பெண்டிரும் அறக்கட்டளைகள் நிறுவி வந்துள்ளனர்.

சோழர்கள் காலத்தில் பரதத்திலும் இசையிலும் வல்ல தளிச்சேரிப் பெண்டுகள் பலர் திருக்கோயில்களில் பணிபுரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய கலைகளில் தேர்ச்சி பெற்றுச் சிறப்பெய்தியிருந்த பலரைத் தமிழகத்திலுள்ள பல ஊர்களிலிருந்து வரவழைத்து தஞ்சை இராசராசேச்சுரத்தைச் சூழ்ந்துள்ள தெருக்களில் முதல் இராசராச சோழன் குடியேற்றிய செய்தி அன்னோர் பெயர்களுடன் அக்கோயிலில் எழுதப் பெற்றிருத்தலை இன்றுங் காணலாம்.

திருக்கோயிலில் பணிபுரிந்த இம்மகளிரில் சிலர் தாம் விரும்பியவரை மணந்து வாழ்ந்த செய்தியும் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

குறிப்பு

சோழ மன்னர்கள் இசையிலும், நாட்டியத்திலும் வல்ல பதியிலார்க்குத் தலைக் கோல் என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளனர். அப்பட்டம் பெற்ற கணிகையர் தலைக்கோலி என்று அந்நாளில் வழங்கப் பெற்றனர். இவர்களுக்கென இறையலி நிலங்கள் மானியமாக அளிக்கப்பட்டிருந்தன.

## 6.16.1 மருத்துவம்

சோழ நாட்டில் மருத்துவத்துறை நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது மருந்து, அறுவை சிகிச்சை மூலம் நோய் குணமாக்கப்பட்டது. வாதம், பித்தம், சிலேட்டுமம் என்ற மூன்றுநாடிகளை அறிந்திருந்தனர். எண்ணாயிரம் (தென்னார்க் காடு) என்ற இடத்தில் மருத்துவ சாலை ஒன்றிருந்தது. முக்கூடலிலும் ஒன்று செயல்பட்டது.

## 6.17 கல்வி நிலை

சோழர் காலத்தில் அந்தணர்கள் செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கினர். ஆதலால் ஆரிய பழக்க வழக்கத்தைப் பாராட்டிக் கூறும் சாத்திரங்களும் புராணங்களும் எழுந்தன. அவற்றைப் பிராமணர் பயில்வதற்கென அரசர்கள் பல கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொடுத்தனர். கிராமத்து மக்களுக்கு கல்வி பயிற்சியளிக்கப்பட்டதா, கல்வியளிக்கப்பட்டிருந்தால் அதன் தரமும் பயிற்றப்பட்ட முறையும் எத்தகையன என்ற கேள்விகளுககு விடை காண முடியவில்லை. ஊர்ப் பொது மக்கள் பிழையற எழுதும் அளவுக்குக் கல்வியறிவு பெறவில்லை என்று ஊகிக்க வேண்டியுள்ளது. அரசர் ஆணைகளையும், பிற ஆவணங்களையும் அழிவின்றிக் கல்லில் பொறிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த கல் தச்சர்கள் பொறித்த கல்வெட்டுகளில் நூற்றுக்கணக்கான எழுத்துப் பிழைகளைக் காண்கிறோம். ஒரு சில வரிகளைக் கூடப்பிழையின்றி எழுதும் அடிப்படையான இலக்கண அறிவை அவர்கள் பெற்றிருக்கவில்லை எனத் தெரிகிறது.

கல்லுக்கும் கதைக்கும் உயிர்களை ஊட்டிய சிற்பிகளும், ஓவியர்களும் கட்டடக் கலைஞர்களும் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். இந்த நுண்ணறிவை அவர்கள் பள்ளிகளில் இருந்து கற்றனரா அன்றி ஆசானிடமிருந்து நேர்முகமாகப் பெற்றனரா என்று அறிந்து கொள்வதற்குப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. சயங்கொண்டாரும், ஒட்டக்கூத்தரும், சேக்கிழாரும், கம்பரும், புகழேந்தியும் வாழ்ந்திருந்த காலத்துத் தமிழ் மக்கள் அவர்களுடைய இலக்கியப் படைப்புகளைப் பயின்று பயன் பெற்றனரா அன்றி அரசவையினர் மட்டும் அவற்றைப் படிக்கக் கேட்டு வந்தனரா அன்றிப்

பிரமதேயங்களிலும் அவை பயிலப்பட்டனவா என்றும் திட்டவட்டமாக அறிய முடியவில்லை.



மன்னர்கள் நிறுவிய பள்ளிகள் யாவும் பிராமணருக்கு மட்டும் வடமொழிப் பயிற்சியளித்து வந்தன. தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி வளரவில்லை. அப்பள்ளிகளில் புராணங்கள், இதிகாசங்கள், சிவதருமம், சோமசித்தாந்தம், இராமாநுச பாடியம், பிரபாகரின் மீமாமிசை, வியாகரணம் ஆகிய வடமொழி இலக்கிய இலக்கணங்களைப் பிராமணர்கள் பயின்று வந்தனர். வடஆற்காடு மாவட்டத்தில் போளூர் தாலுக்காவில் காமப்பல்லூர் என்ற கிராமத்தில் வேதப் பயிற்சி பள்ளி ஒன்று நடைபெற்றது. செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆணியூர் என்ற "பட்டவிருத்திகள்" நிறுவப்பட்டன. தென்னாற்காட்டில் எண்ணாயிரம் என்ற ஊரில் முதலாம் இராசேந்திரன் காலத்தில் வேத மீமாமிச பள்ளி ஒன்று நடைபெற்று வந்தது. அதில் 340 பிராமண மாணவர்கள் பயிற்சி பெற்று வந்தனர். 14 ஆசிரியர் வேதாந்தம் பயிற்றி வந்தனர். அவர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு கலம் நான்கு மரக்கால் நெல் ஊதியமாகப் பெற்றார்கள்.

புதுவையை அடுத்துள்ள திரிபுவனியிலும், திருவாடுதுறையிலும், பெருவேளூரிலும், திருவொற்றியூரிலும் பிராமணருக்காக வேத வியாகரணப் பள்ளிகள் நடைபெற்று வந்தன.

பெரும்பாலும் சமயச் சார்புடைய இலக்கியங்கள் தமிழிலும், வடமொழியிலும் இயற்றப்பட்டன. கலை, இலக்கியம், கல்வி அனைத்தும் சமயச் சார்புடையதாக இருந்தது. இராமாயணம், பெரிய புராணம், நளவெண்பா, இரட்டை மணி மாலைகள், திருத்தொண்டர் திருவந்தாதி, சிவஞான சித்தியார், உண்மை நெறி விளக்கம் போன்ற தத்துவ நூல்கள் எழுந்தது இக்காலமேயாகும்.

பவணந்தி அடிகளின் நன்னூல், இறையனார் களவியல் அல்லது இறையனார் அகப்பொருள், யாப்பருங்கல விருத்தி, தண்டி அலங்காரம், நேமிநாதம், வீரசோழியம், சூடாமணி நிகண்டு, பிங்கலம் முதலிய இலக்கண நூல்களும் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணமும் தோன்றியது சோழர்கள் காலத்தில் தான்.

பேராசிரியர் சேனாவரையர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்கள் வாழ்ந்தது இக்காலமேயாகும். தமிழைப் போலவே வடமொழியில் வடமொழி நிகண்டு, முகுந்த பாலா, கிருஷ்ணகாணாமிர்தம் முதலான பல நூல்கள் எழுந்தன. வடமொழி ஏற்றம் பெறப் பெற தமிழ் மொழியின் சிறப்பு குன்றத் தொடங்கியது. மன்னர்களும் வடமொழி மீது காட்டிய ஈடுபாட்டைத் தமிழின் மீது காட்டத் தவறினர் என்பர் வரலாற்றாசிரியர்கள்.

## 6.17.1 நிலவுரிமை

நிலம் நான்கு வித உரிமையுடையதாக இருந்தது. நிலங்களை கோயிலுக்குச் சொந்தமான தேவத்தான நிலங்கள், பிராமணர்களுக்குச் சொந்தமான பிரம்மதேய நிலங்கள், தனிப்பட்டவர் நிலங்கள் அரசனுக்குரிய நிலங்கள் என நால்வகையாகப் பிரிக்கலாம். நில விற்பனைச் செய்திகள் நிலத்தில் பொது உடமையும், தனி உடமையும் இருந்ததைக் காட்டுகின்றன.

## 6.17.2 சாதிப் பாகுபாடு

சோழர் காலத்தில் குலப்பிரிவுகள் நூற்றுக் கணக்கில் மலிந்துவிட்டன. மக்களிடையே புதுப்புதுச் சாதிகள் தோன்றியதுமில்லாமல் வலங்கைச் சாதியினர் என்றும், இடங்கை சாதியினர் என்றும் இரு பிரிவுகள் புதிதாகத் தோன்றின.

தமிழ்ச் சமுதாயத்தில் இக்காலத்தில் பாாப்பனர்களின் செல்வாக்கு எல்லை மீறி ஓங்கியிருந்தது. அயலிடங்களிலிருந்து அலை அலையாகப் பார்ப்பனர்கள் கிராமங்களையும் ஊர்களையும் கொடையாக வழங்கினர். மக்களிடையே இவர்கள் வருகையால் குல வேறுபாடுகள் பெருகின. கருவறைகளில் வடமொழி முழக்கம் கேட்டது. வந்தேறிகள் தமிழர்களைச் சூத்திரர் என்று முத்திரையிட்டு ஒதுக்கி வைத்தனர். வேறு குலத்தவர்களான கம்மாளர். கைக்கோளர், அகம்படியார் ஆகியோருக்குச் சில சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டன.

## 6.17.3 வலங்கை இடங்கை

சோழர் காலத்தியச் சமுதாயத்தில் வலங்கை, இடங்கை பிரிவு பற்றிய ஆதாரங்களை மக்கன்சி என்பவர் கண்டுபிடித்தார். கரிகாலனே இவ்விரு பிரிவினர்களைத் தோற்றுவித்தவர் என்று கூறுகின்றனர். மன்னருக்கு வலப்புறம் நின்றவர்கள் வலங்கையினர் எனவும், இடப்புறம் நின்றவர்கள் இடங்கையினர் எனவும் பூசல்கள் நிகழ்ந்தன. கோவில் இடித்தல், கொள்ளை, தீ வைப்பு முதலிய நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. இடங்கையினர் நிலை தாழ்ந்தே இருந்தது. இடங்கையினர் பெரும்பாலும் வணிகர்களாகவும், தொழிலாளர்களாகவும் பிழைப்பை நடத்தியிருக்க வேண்டும். இவ்விரு பிரிவினருமே பிராமணர்களையும் வேளாளர்களையும் எதிர்த்துப் போராடினர்.

## 6.18 சோழர்களின் கட்டடக் கலை வளர்ச்சி

சைவ சமய வரலாற்றிலும், கோயில் கட்டடக் கலை வரலாற்றிலும் சோழர் காலம் பொற்காலம் என்று கருதப்பட்டது. சோழர்களின் கோயில் கட்டடக் கலையினை முற்காலச் சோழர் கட்டடக்

கலை, பிற்காலச் சோழர் கட்டடக்கலை என இருவகையாக வரலாற்றறிஞர்கள் பிரித்துரைக்கின்றனர். சோழர்காலக் கலைகளைப் பல்லவர் காலக் கலைவளர்ச்சியின் அடுத்த படிநிலை எனக் கொள்ளலாம்.



சோழர் காலக் கலைகளும் கோவில் பணிகளும் பற்றி “சோழர் கலைப் பாணி” என்ற நூலில் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியமும் “சோழர் கோவில் பணிகள்” என்ற நூலில் சோமசுந்தரமும் ஆய்வு நடத்தியுள்ளனர்.

## 6.18.1 முற்காலச் சோழர் காலம்

சோழர் காலக் கோவில்களுள் பத்தாம் நூற்றாண்டு வரையில் கட்டப்பட்டவை அமைப்பில் சிறியவை. நார்த்தாமலையில் உள்ள விசயாலய சோழீச்சரம், கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோயில், கும்பகோணம் நாகேசுவரசாமி கோயில் ஆகியவற்றில் முற்காலச் சோழர் கலைப் பாணியினைக் காணலாம். கருவறையின் மேலுள்ள விமானம் ஒன்று முதல் ஐந்து தளங்களுடன், சதுர அல்லது வட்ட வடிவத்துடன் கூடியதாக அமைந்துள்ளது. சோழர்காலக் கோவில்களுள். தலைசிறந்ததாக மதிக்கப்படுவது முதல் இராசராசன் அமைத்த தஞ்சைப் பெரிய கோயில் ஆகும். திராவிடக் கலை முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட தலைசிறந்த கலைக் கருவூலம் என இது புகழப்படுகிறது.

கோவிலின் நிழல் தரையில் படாதவாறு கலை நுட்பத்தோடு இது கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தி மண்டபம், விமானம் ஆகிய உறுப்புக்களை உடையது. கோவிலைச் சுற்றி இருமதில் சுவர்கள் அமைந்துள்ளன. இரண்டிலும் கோபுர வாயில்கள் அமைந்துள்ளன. திருச்சுற்றுகளில் பரிவார தெய்வங்களுக்கெனச் சிறு கோயில்கள் அமைக்கும் முறை பற்றி எறும்பூர் கடம்பவனேசுவரர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. கருவறையில் மட்டுமின்றி, அர்த்த மண்டபங்களிலும் தேவகோஷ்டங்கள் அமைக்கும் முறை செம்பியன் மாதேவி காலத்தில் தோன்றியது.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் எழுந்த ஆலயங்கள் பெரியன. விமானங்கள் கோபுரங்களை விட உயரமாக அமைக்கப்பட்டன. சோழர் கட்டடக் கலையின் சிறப்புக்கூறு விமானமே ஆகும். சோழர்களின் கட்டடக் கலை வளர்ச்சி என்கின்ற பொழுது சில முடிவுகளைக் கூறலாம்.

பல்லவர் காலக் கோவில்கள் போன்று சோழர் காலக் கோவில்கள் சுவர் முழுவதும் சிற்பங்கள் நிறைந்து காணப்படவில்லை. மாறாக அவற்றின் சுற்றுப்புறச் சுவர்கள் எளிமையும், வெற்றிடமும் கொண்டு விளங்கின. விஜயாலயன், ஆதித்தன் போன்ற முற்காலச்

சோழர்களின் கோவில்களில் அம்பிகைக்கு எனத் தனிக் கோவில்கள் அமைக்கப்படவில்லை. முதல் இராசேந்திரன் அமைத்த கங்கை கொண்ட சோழேச்சுரத்தில் அம்மனுக்கு எனத் தனிக் கோவில் அமைக்கப்பட்டுள்ளமை காண்கிறோம்.

பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னர்க் கட்டப்பட்ட கோவில்கள் அளவில் சிறியவை. முதல் இராசராசன் காலத்தும் அதற்குப் பின்னும் கட்டப்பட்ட கோவில்கள் அளவில் பெரியவை. அரசர்களின் பொருள் வசதியும் ஆட்சிப்பரப்பும் இவ்வேறுபாட்டிற்கும் அடிப்படைக் காரணங்களாகலாம். கோவில்களில் திருச்சுற்று மாளிகை அமைத்தமை. கோவில்களின் வெண்கலப் பதுமைகளை நிறுவியமை, பல்லவர் காலத்தில் 375 கோவில்களை கொண்டு விளங்கிய தமிழகத்தில் சோழர் காலத்தில் 3000 கோவில்களை உருவாக்கியமை இவை சோழர் காலக் கட்டடக் கலையின் வளர்ச்சி நிலைகள்.

திருக்கோயில்கள் மட்டுமின்றி மன்னனும் மக்களும் வசித்த நகரங்களும் மிகப் பெரியதாக அமைந்தன. திட்டமிட்டு அமைக்கப் பெற்ற இந்நகரங்களில் குடிமக்கள் வாழும் இடங்கள் வேறாகவும், அங்காடித் தெருக்கள் வேறாகவும் நிறுவப்பட்டிருந்தன. இன்ன இடத்தில் இன்ன வகையான வீடுகள் தரம் கட்டலாம் என்றும் இன்ன இடத்தில் இன்னவர்கள் இத்தனை மாடிகளுடன் தான் வீடுக் கட்ட வேண்டுமென்றும் கட்டடங்கள் கட்டுவதற்கு சுட்டசெங்கல்லைத்தான் கட்ட வேண்டுமென்றும் ஒழுங்கு முறை விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

தஞ்சை மாநகரானது உள்ளாலை என்றும், புறம்பாடி என்றும் இரு பிரிவுகளாக அமைந்திருந்தது. உள்ளாலையில் மன்னரின் அரண்மனைகள் ஏனைய சில குடியிருப்புகள் இருந்தன. புறம்பாடியில் திரிபுவன மாதேவிப் பேரங்காடி, கொங்கு வோளார் அங்காடி, இராசராச பிரம்ம மகா ராசன் பேரங்காடி என்ற பெயருடைய கடைத் தெருக்கள் இருந்தன.

## 6.18.2 இசை

சோழர்கள் காலத்தில் இசையையும் கூத்தையும் விளக்கிய பல நூல்கள் வழங்கி வந்தன. வாய்ப்பாட்டுக்குக் குழலும், யாழும், வீணையும் பக்க மேளங்களாக இருந்தன. சிலப்பதிகாரம், மணிமேகலையில் கூறப்பட்டுள்ள யாழ் வகைகளும், பண் வகைகளும் தொடர்ந்து பயிற்சியில் இருந்து வந்தன.கூத்தாடி முதிர்ந்த பெண்களும், பின்பாட்டுப் பாடிய பெண்களும் “தோரிய மடந்தையர்” என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். இசைப் புலவர்கள் பாடும்போது “தே தா” என்று ஆளத்தி செய்வார்கள். வீணை வாசிக்கத் தொடங்குவதற்கு முன்பு அதற்கு மலர் மாலை சூட்டுவார்கள். முழவுக்கு இருபுறமும் மணிபூசினர்.

நாட்டிய அரங்கினில் தாமாகவே திறந்து மூடிக் கொள்ளும் எந்திர எழினிகள் (திரைகள்) கட்டப்பட்டிருந்தன.



பண் வரிசையில் தொகுக்கப்பட்டுள்ள சைவத் திருமுறைகள் சோழர்கள் இசை நுட்பத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். கலிங்கத்துப்பரணி குறிப்பிடும் குலோத்துங்கன் இசைத் தமிழ் நூல் சோழ மன்னர்கள் இசை மீது கொண்ட ஈடுபாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இசை, கூத்து ஆகிய கலைகளில் சிறந்து விளங்கிய தேவரடியார்கள் கோவில் பணிக்காகவும், விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் கோவில்தோறும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

திருக்கோயில்களில் பாட்டுப் பாடுவதற்குப் பாணர்கள் அமர்த்தப்பட்டனர். கூத்தையும் தேவரடியார்கள் தொடர்ந்து வளர்த்து வந்து அவற்றுக்குப் புதுப் பொலிவூட்டினர்.

கோயில்களில் மார்கழி தோறும் திருவெம்பாவை ஓதப்பட்டு வந்தது. அதற்கெனவே தேவரடியார்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். வைணவத் திருப்பாடல்களான திருப்பள்ளியெழுச்சியும், திருவாய்மொழியும் பாராயணம் செய்யப்பட்டன. ஓதுவார்களுக்கு “திருப்பாட்டு ஓதும் மகேசுரர்” என்ற பெயர் வழங்கப்பட்டது.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் பதினாறு குருடர்கள் திருவாமாத்தூர் கோயிலில் தேவாரம் பாடி வந்தனர் என்றும் அவர்களுக்கு கண்காட்டுவார் ஒருவர் அமர்த்தப்பட்டிருந்தனர் என்றும் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் திருப்பதிக விண்ணப்பம் செய்ய 48 பிடாரர்களையும், அவர்களுடைய பாட்டுக்கு நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனையும் முதலாம் இராசராசன் நியமித்திருந்தான்.

## 6.19 சோழர்களின் கடல் கடந்த வணிகம்

சோழ மன்னர்களின் கடல் கடந்த வெற்றி முதலாம் பராந்தகனிலிருந்து தொடங்குகிறது. பராந்தகன் நாற்பத்தெட்டு ஆண்டு காலம் சோழ நாட்டை ஆட்சி புரிந்தான். இவன் தன்னுடைய மூன்றாம் ஆட்சி ஆண்டில் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். பாண்டிய நாட்டு மன்னன் இராசசிம்மன் பரராந்தகனிடம் தோற்று இலங்கைக்கு ஓடினான். அங்ஙனம் செல்லும் பொழுது மணி முடியையும் செங்கோலையும் எடுத்துச் சென்று ஈழ மன்னன் நான்காம் உதயன் என்பானிடம் ஒப்படைத்திருந்தான். இதனையறிந்த பராந்தகன் மணிமுடியையும் செங்கோலையும் கொடுத்தனுப்பும்படி தூது ஒன்று அனுப்பினான். அக்கட்டளைக்கு உதயன் மறுக்கவே ஈழ நாட்டின் மீது பராந்தகன் படையெடுத்தான். அவனுடைய படை பலத்துக்கு அஞ்சி உதயன் ரோகணம் என்ற இடத்துக்கு ஓடிப் போய்விட்டான். போகும் பொழுது பாண்டிய நாட்டு மணிமுடியையும், செங்கோலையும் உடன்

கொண்டு போனதால் வெற்றி பெற்றும் பராந்தகனின் நோக்கம் நிறைவேறாமல் போனது.

பராந்தகனுக்குப் பிறகு முப்பது ஆண்டுகள் வரை முதலாம் இராசராசன் அரசுக்கட்டில் ஏறிய வரை சோழ அரசில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. அதனால் கடல் கடந்த படையெடுப்புகள் எதுவும் நிகழவில்லை.

குறிப்பு

## 6.19.1 முதல் இராசராசன்

பிற்காலச் சோழப் பேரரசுக்கு வலுவான அடிப்படை இட்டுத் தந்த பெருமைக்குரியவன் மாமன்னன் இராசராசன் ஆவான். தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டில் இவன் பெற்ற போர் வெற்றிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில்,

**“முரட்டெழில் சிங்களா் ஈழ மண்டலமும்**
**இரட்ட பாடி ஏழரை இலக்கமும்**
**முந்நீா்ப் பழந்தீவு பன்னீ ராயிரமும்**
**திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட”**

என்ற பகுதி இராசராசனுடைய அயல்நாட்டு வெற்றியைக் குறிப்பிடும்.

## 6.19.2 இலங்கைப் படையெடுப்பு

இராசராசன் கி.பி.993-இல் வெளியிடப்பட்ட கல்வெட்டில் ஈழத்தை வென்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இராசராசன் இலங்கை மீது கொண்ட வெற்றியை இராமன், இராவணன் மீது கொண்ட வெற்றியுடன் திருவாலங்காட்டுச் செப்பேடு ஒப்பிட்டுக் கூறுகின்றது.

இப்போரில் ஆயிரம் ஆண்டுகளாக இலங்கையின் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் அழிக்கப்பட்டது. பொலனருவா அதன் தலைநகராக்கப்பட்டு அது சனநாத மங்கலம் எனப் பெயரிடப்பட்டது. இலங்கையின் வடபகுதி மும்முடிச் சோழமண்டலம் எனப் பெயரிடப்பட்டு சோழ மண்டலத்துடன் இணைக்கப்பட்டது. இவ்வெற்றியின் நினைவாக இலங்கையின் புதிய தலைநகரில் சிவன் கோவில் ஒன்று இராசராசனால் எழுப்பப்பட்டது. ஈழ நாடு தவிர மாலத் தீவுகள் என்று இன்று அழைக்கப்படும் முந்நீா்ப் பழந்தீவு பன்னீராயிரம் ஆகியவை இராசராசன் கைப்பற்றிய பிற பகுதிகள் ஆகும்.

## 6.19.3 இராசேந்திரனின் அயல்நாட்டு வெற்றி

இராசராசனால் தோற்கடிக்கப்பட்ட ஐந்தாம் மகிந்தன் தான் இழந்த ஈழத்தை மீண்டும் கைப்பற்ற எடுத்த முயற்சி இராசேந்திரன்

இலங்கை மீது போர் தொடுக்கக் காரணமாயிற்று. கி.பி1017-ல் இப்போர் நடைபெற்றதாக இலங்கையின் வரலாறு கூறும் மகாவம்சம் சுட்டுகிறது. இப்படையெடுப்பின் விளைவாக ஈழ நாடு முழுவதும் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது. பாண்டியர்களின் மணிமுடி மட்டுமின்றி ஈழ மன்னனின் மணிமுடியும் அவனது பட்டத்தரசியின் மணிமுடியும் பறித்துக் கொணரப்பட்டன. இலங்கை சோழ மண்டலங்களுள் ஒன்றாக இணைக்கப்பட்டது.

## 6.19.4 கடாரம் கொண்டமை

"ஆழ்கடலின் அரவணைப்பில் பாதுகாப்புப் பெற்று ஆற்றலுடன்" விளங்கிய கடாரத்தின் மீது இராசேந்திரன் கொண்ட வெற்றி, சோழர் வரலாற்றில் மட்டுமின்றித் தமிழக வரலாற்றில் தனிச் சிறப்பு உடையது. கடாரத்தின் மீது இராசேந்திரன் கொண்ட வெற்றி அவனது பதின்மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது. மலாய் தீபகற்பத்தின் பகுதிகளாகக் கருதப்படும் ஸ்ரீவிசயம் பண்ணை, மலையூர், மாயிருடிங்கம் இலங்கா சோகம், தலைத் தக்கோளம், மாடலிங்கம், இலாமுரிதேசம், மானக்கவாரம் ஆகிய இடங்களையும் கடாரத்துடன் சேர்த்து வெற்றி கொண்டான் இராசேந்திரன் என்பர் ஆர்.சந்திரநாத ஐயர். இவ்வெற்றியினை அவனது மெய்க்கீர்த்திகளில் ஒன்று

**"அயல்கடல் நடுவுள் பலகலம் செலுத்திச் சங்கிராம**
**விசயோத்துங்கவர்மன் ஆகிய கடாரத்து அரசனை**
**வாகையம் பொருகடல் கும்பக் கரியொடும்**
**அகப்படுத்து, உரிமையின் பிறக்கிய பருநிதிப் பிறக்கமும்**
**ஆர்த்து அவன் அகம் நகர்ப் போர்த் தொழில் வாசலில்**
**விச்சாதிரத் தோரணமும், மொய்த்து ஒளிர்புனை**
**மணிப்புதவமும், கனமணிக் கதவமும் தொடுகடல்**
**காவல் கடுமுரண் கிடாரமும் மாப்பொரு தண்டால்"**

என்று அவனது கடல் வெற்றியைக் குறிப்பிடுகின்றது.

## 6.19.5 முதலாம் இராசாதிராசன்

இவன் அரியணை ஏறியவுடன் சிங்களத்தில் சோழரின் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சிகள் எழுந்தன. இராசாதிராசன் மிகவும் கடுமையான போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு இக்கிளர்ச்சிகள் அனைத்தையும் அவ்வப்போது ஒடுக்கினான். சிங்கள மன்னன் விக்கிரபாகு போரில் புண்பட்டு மாண்டான் அவனுடைய மணிமுடியை

இராசாதிராசன் கைப்பற்றிக் கொண்டான். அம்மன்னனின் அன்னையின் மூக்கையும் சோழர்கள் அறுத்துவிட்டனர்.



முதலாம் இராசாதிராசனுக்குப் பிறகு அவனுடைய பேரனான வீரராசேந்திரன் காலத்தில் இலங்கையில் மீண்டும் கிளர்ச்சி ஏற்பட்டது. வீரராசேந்திரன் படையொன்றை அனுப்பி அக்கிளர்ச்சியை ஒடுக்கினான். அவன் தானும் கடல் கடந்து படை செலுத்திக் கடாரத்தை வென்று தன்னுடன் நட்புறவு பூண்டிருந்த மன்னன் ஒருவனை கடாரத்தின் அரியணை மேல் ஏற்றுவித்தான். இவனுக்குப் பின் முதலாம் குலோத்துங்க சோழன் கடாரத்தை வென்றான் என அவனுடைய மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன. எனினும் அவன் கடாரத்து வேந்தனோடு நட்புறவு கொண்டு விளங்கியதை நாகபட்டினத்தில் நடைபெற்று வந்த பௌத்த விகாரைக்கு முன்பே கொடையாக அளிக்கப்பட்டிருந்த கிராமத்தை இறையிலி கிராமமாக மாற்றிக் கொடுத்தான் என்ற செய்தியின் மூலம் அறிய முடிகின்றது. வீரராசேந்திரனோடு சோழர்களது கடல் கடந்த வெற்றி முடிவடைந்தது.

## 6.20 தொகுத்துக் காண்போம்

1. சோழப் பேரரசின் வரலாற்றைத் தெரிந்து கொண்டீர்கள்.
2. சோழர்களின் ஆட்சி முறை குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்
3. சோழர்களின் ஊராட்சி முறை, வாரியங்கள் பற்றி அறிந்து கொண்டீர்கள்.
4. சோழர்களின் பண்பாட்டு நிலை பற்றி அறிந்து கொண்டீர்கள்.

## 6.21 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. முதல் இராசராச சோழனின் சிறப்பு பெயர் பற்றி விளக்குக?
2. இராசராச சோழனின் மெய்க்கீர்த்தி பற்றி விளக்குக?
3. இராசேந்திரன் புரிந்தபோர்கள் குறித்து விளக்குக?
4. சோழர் ஆட்சி முறையில் நில வருவாய், நீதி வழங்கும் முறை பற்றி விளக்குக?

## 6.22 மேலும் அறிந்துகொள்ள

தி.வை.சதாசிவ பண்டாரத்தார் - தமிழக வரலாற்று வரிசை-2 பிற்காலச் சோழர் சரித்திரம்

முனைவர் கோ.தங்கவேலு - தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வரலாறு (தொகுதி 2)

ரொமிலா தாப்பர் - முற்கால இந்தியா

# கூறு:7

## முதல் பாண்டியப் பேரரசு - இரண்டாம் பாண்டியப் பேரரசு – பாண்டியர்களின் வீழ்ச்சியும் இசுலாமியர் வருகையும் வெளிநாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாடு

### 7:1 முன்னுரை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கு உரியது. களப்பிரர்களைப் புறங்கண்டதுடன் சிற்றரசர்கள் பலரையும் பணியவைத்து தமிழகத்தில் தொடர்ச்சியான ஆட்சி முறையை நல்கியவர்கள் பாண்டிய மன்னர்கள்.

### 7:2 குறிக்கோள்கள்

- அரிகேசரி மாறவர்மன் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- மாறவர்மன் இராசசிம்மன் தென்னகத்தில் பெற்ற வெற்றிகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- வெளிநாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாடு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- பாண்டிய நாட்டு மக்கள் வேளாண்மைக்கு அதிக கவனம் செலுத்தியமை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

### 7.3 முதல் பாண்டியப் பேரரசு

கி.பி.525-ல் பாண்டியன் கடுங்கோண் களப்பாளர் ஆதிக்கத்தை முறியடித்ததுடன் பாண்டியர்களின் வலிமை மீட்கப்பட்டது. வரலாற்றில் முதல் பாண்டியப் பேரரசு தோற்றம் பெற்றது.

### 7.3.1 பாண்டியன் கடுங்கோன்

கி.பி 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டிய மன்னன் கடுங்கோன் தெற்கிலிருந்து களப்பாளர்களைத் தாக்கினான். அயலார்களை விரட்டினான். கி.பி. 575-இல் பாண்டியர் நாட்டைமீட்டான். பாண்டியர்களின் ஆட்சியைப் புதுப்பித்தான். இக்கடுங்கோன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வழி வந்தவர் என்று வேள்விக்குடிச் சாசனம் எடுத்து இயம்புகின்றது.

கடுங்கோன் மாவீரனாக விளங்கினான். களப்பாளர்களைப் புறங்கண்டதுடன் சிற்றரசர்கள் பலரையும் பணியவைத்துப் பேரரசனானான். களப்பாளரை வென்ற கடுங்கோன் வைதீகப் பிராமணர்களுக்கு

நிலதானங்கள் வழங்கி 'மானம் போ்த்த தானை வேந்தன்' என்று போற்றப்பட்டான்.



## 7.3.2 அவனி சூளாமணி



கடுங்கோன் துவக்கிய பணியை அவனுடைய புதல்வன் அவனிசூளாமணி கி.பி.600 அளவில் தொடர்ந்து நடத்தினான். இவனுடைய சாதனைகள் குறிப்பிடத்தக்கவை அல்ல. எனினும் மாறவர்மன் என்ற பாண்டியர் குலப்பெயரை ஏற்றவன் இவன் ஆவன்.

## 7.3.3 சேந்தன் செழியன் (கி.பி.620-642)

மாறவர்மன் அவனிசூளாமணிக்குப் பின் அவனுடைய புதல்வன் சேந்தன் செழியன் கி.பி.620-இல் பாண்டிய மன்னனானான். இவன் விருதுப் பெயர்கள் பல ஏற்றிருந்தான் என்று வேள்விக்குடி செப்பேடு காட்டுகின்றது. அவற்றுள் செங்கோல்வேந்தன், வானவன் என்பவை குறிப்பிடத்தக்கன.

இவன் சேரர்களை வென்றதால் வானவன் என்று பெயர் பெற்றான். இவன் காலத்தில் வடக்கில் இருந்த பல்லவர்களால் பாண்டியர்களுக்குத் தொல்லை ஏற்பட்டது. சிம்மவிட்டுணு காலத்திலேயே பல்லவர்கள் காவிரியைத் தாண்டி புதுக்கோட்டைச் சீமையில் புகுந்திருந்தனர். மகேந்திரன் காலத்தில் புலிகேசி பல்லவர் நாட்டின் மீது படையெடுத்துப் பல்லவனைப் புறம் கண்டு, காவிரிக் கரையை அடைந்து, தென்னாட்டு மன்னர்களை மகிழவைத்தான் என்று சாளுக்கிய ஆதாரங்களால் அறியலாம். சாளுக்கியப் படையெடுப்பில் மாட்டிக்கொண்ட பல்லவர்களின் தொல்லை தளர்த்தப்பட்டிருந்தது. வலிமை பெற்றுக் கொண்டிருந்த பாண்டியர்கள் சேந்தன் செழியன் காலத்தில் வடக்கில் விரிவடையத் தொடங்கியதைப் பல்லவவேந்தன் நரசிம்மன் விரும்பவில்லை. எனவே பல்லவர் பாண்டியர் போட்டி வலுப்பெற்றது.

இவனுடைய ஆட்சிக் காலத்தின் இறுதியில் சீனப்பயணி வருகைதந்துள்ளார். பாண்டியர் நாடு பஞ்சத்தின் கொடுமையில் சிக்கியிருந்தது என்றும், பாண்டிய நாட்டை ஆண்டு வந்த மன்னன் அப்போது மடிந்தான் என்றும் தனது பயணக் குறிப்பில் காட்டியுள்ளார். யுவான் சுவாங் இறந்ததாகக் குறிப்பிடும் மன்னன் சேந்தன் செழியனாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## 7.3.4 அரிகேசரி மாறவர்மன் (கூன்பாண்டியன்)

இவன் சேந்தன் செழியனின் புதல்வன், கி.பி.642-இல் பாண்டிய நாட்டரசனானான். பஞ்சம், பிணி போன்ற கொடுமைகளுக்கிடையில் பதவி ஏற்ற அரிகேசரி வைதீகர்களைப் பேணிப் பட்டயங்கள்விடுத்துப்

பெருமைபெற்று, பல பெயர்களைத் தாங்கி உள்ளான். வேள்விக்குடி சாசனத்திலும், சிறிய சின்னமனூர்ப் பட்டயங்களில் அரிகேசரி மாறவர்மன் என்றும், பெரிய சின்னமனூர்ப் பட்டயங்களில் அரிகேசரி பராங்குசன் என்றும் குறிக்கப்பெற்றுள்ளான். திருவிளையாடல் புராணத்தில் கூன்பாண்டியன் என்றும், சுந்தரபாண்டியன் என்றும் சுட்டப் பெறுகின்றான்.

வெற்றி வீரனாக விளங்கிய இம்மன்னன் சேரரையும் பிற குறுநில மன்னர்களையும் அடக்கி வலிமைபெற்றான். பாண்டியநாட்டின் தெற்கே வலிமை பெற்றிருந்த பகைவர்களை ஒடுக்கினான். வடக்கே காவிரிக் கரையிலிருந்த சோழர் மீது வெற்றி கண்டு உறையூரைப் பிடித்தான். பின்னர் மண உறவு கொண்டான். பாண்டியர்களின் வலிமையை மேலும் பெருக்கினான். வடக்கில் வலிமையைபெற்றுக் கொண்டிருந்த பல்லவர்களை முறியடிக்கவே பாண்டியர் சோழர் நட்பு பெருக்கப்பட்டது. பல்லவ வேந்தன் சாளுக்கியர்களுக்கெதிராகப் போராடிக்கொண்டிருந்தான். இதனைப் பயன்படுத்தி அரிகேசரி மாறவர்மன் பல்லவர் நாட்டில் புகுந்தான் சங்கரமங்கை எனும் இடத்தில் பல்லவர்களைப் புறம் கண்டான். ஆனால் சாளுக்கியர்மீது வெற்றி கண்டு நாடு திரும்பிய நரசிம்மனின் கவனம் தென்திசையில் திரும்பியது பாண்டியர்களைச் சந்தித்தான் பாண்டியர் பல்லவர் போட்டியும் போராட்டங்களும் தொடர்ந்தன.

அரிகேசரி மாறவர்மன், திருஞான சம்பந்தர், பரஞ்சோதி முனிவர் ஆகியவர்களுடைய சமகாலத்தவன். தென்னகத்தில் இந்து சமயம் மறுமலர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இப்பாண்டிய வேந்தன் சமணனாகவும், சமணத்தை ஆதரித்தவனாகவும் இருந்தான். ஆனால் விரைவில் திருஞானசம்பந்தரால் சைவத்தில் புகுந்த மன்னன் அறப்பணிகள் பல செய்தான். இரணிய கர்ப்பம், துலாபாரம் போன்ற வேள்விகளை நடத்தினான். வேதியர்களைப் பாராட்டிப் போற்றினான். ஆனால் பிற சமயத்தாரைத் துன்புறுத்தினான். சமணத்தை வெறுத்தான். இவன் காலத்தில் எண்ணாயிரம் என்ற ஊரில் சமணர்கள் கழுவேற்றப்பட்டனர்.

இக்காலத்துப் பாண்டியர்கள் வாணிபத்தால் வளம் பெற்றிருந்தனர். முத்துக் குளித்தல் முக்கியத் தொழிலாக இருந்தது. அண்டைத் தீவுகளில் கிட்டிய முத்தையும் இந்நாட்டவர் கொணர்ந்து வாணிபம் செய்தனர். இவன் மங்கலபுரத்தை நகரமாக்கினான் என்று வைகைக் கல்வெட்டு உணர்த்துகின்றது.

## 7.3.5 கோச்சடை ரணதீரன்

அரிகேசரி மாறவர்மனுக்குப்பின் அவனுடைய புதல்வன் கோச்சடையன் பாண்டிய மன்னனானான். பாண்டியர்கள் தென்னாட்டில் ஆதிக்கம் செலுத்த, சேரர், ஆய்மன்னர், கருநாடர், சோழர் போன்றோருடன் பேராட வேண்டியிருந்தது. கோச்சடையன் முன்னோர்

வழியில் சென்றான். சேரர்களை வென்றான். ஆய்மன்னர்களைப் பணியச் செய்தான். சோழர்களையும், கருநாடர்களையும் கொங்கர்களையும் வென்றான். வானவன், செம்பியன், சோழன், மதுரைக்கருநாடன், கொங்கர் கோமான் என்றெல்லாம் சிறப்புப் பெயர்களைப் பெற்றான்.

குறிப்பு

இவன் காலத்துப் பல்லவ மன்னனாகிய முதலாம் பரமேசுவரவர்மன் மீது வெற்றிகண்டான். சாளுக்கிய விக்கிரமாதித்தன் பாண்டிய நாட்டையும் விட்டானில்லை. உறையூரில் முகாமிட்டுக் கொண்டு பாண்டிய நாட்டையும் தாக்கினான்.

கோச்சடையன், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் ஆகியவரின் காலத்தவன்.

## 7.3.6 மாறவர்மன் இராசசிம்மன் (அரிகேசரி பராங்குச மாறவர்மன்)

கோச்சடையனுடைய புதல்வனாகிய இவன் மாறவர்மன் என்ற பட்டப் பெயருடன் பாண்டிய நாட்டையாண்டான். கி.பி.730 முதல் 768 வரை ஆட்சி செலுத்திய இம்மன்னன் முதலாம் இராசசிம்மன் என்று அழைக்கப்பட்டான்.

மாறவர்மன் தந்தையைப் போன்று தென்னகத்தில் பல வெற்றிகள் கண்டான். இவன் ஆட்சிக் காலத்தில் வடக்கே பல்லவர் நாட்டில் இரண்டாம் பரமேசுவரவர்மனின் இறப்பை முன்னிட்டு காதிகைப் பிராமணர்களும், உயர் அதிகாரிகளும் நந்திவர்ம பல்லவனை அரசனாக்க முயன்றதால் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. அரசிருக்கைக்காகச் சித்திராமயனும் நந்திவர்ம பல்லவமல்லனும் போட்டியிட்டனர். இப்போட்டிகளின் போது பாண்டிய வேந்தன் முதலாம் இராசசிம்மன் நந்திவர்மனுக்கு எதிராகச் சித்திராமயனுக்கு உதவினான். ஆனால் நந்திவர்மன் இதையெல்லாம் முறியடித்துக்கொண்டு பல்லவ நாட்டைக் கைப்பற்றி வலிமையான ஆட்சி நடத்தினான். எனவே பல்லவர்களுக்கும் பாண்டியன் தலைமையிலான தென்னாட்டரசர்களுக்கும் பகைமுற்றிக் கடும் மோதல் ஏற்பட்டது.

இவர்கள் புதுக்கோட்டைச் சீமையில் போர்க்களங்களில் சந்தித்தனர். பல்லவ வேந்தனுக்கு வெற்றி கிட்டியதை அவன் பட்டயமும் திருமங்கை ஆழ்வார் பதிகமும் காட்டுகின்றன. குடமூக்கின் (கும்பகோணம்) அருகாமையில் உள்ள நந்திக் கிராமத்தில் பல்லவமல்லன் தோற்கடிக்கப்பட்டுச் சிறைப்பிடிக்கப்பட்டான். ஆனால் அவனுடைய சிற்றரசனும் தளபதியுமான உதயச்சந்திரனின் திறமையால் காப்பற்றப்பட்டான். நந்திக் கிராமத்தில் பெரும் வெற்றிகண்ட அரிகேசரி மாறவர்மன் பல்லவர் நாட்டிலும், மாளவ நாட்டிலும் வெற்றி கண்டு அந்நாட்டிளவரசியை மணந்தான்; அங்கிருந்து பாண்டிக் கொடுமுடிக்குச்

சென்றான். கங்கர் நாட்டிலும் சாளுக்கியர் நாட்டிலும் புகுந்து வெற்றி கண்டான். கங்கர் நாட்டுடன் மணஉறவு ஏற்படுத்திக் கொண்டான்.



இவ்வாறு வெற்றிமேல் வெற்றிகண்ட முதலாம் இராசசிம்மன் பாண்டியப் பேரரசை வடக்கில் காவிரிப்படுகைவரை விரிவுபடுத்தினான். தனது செல்வாக்கை மேற்குக் கங்கர் நாடுவரை நிலைநாட்டினான். பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் பகை வளர்க்கப்பட்டது. இவன் ஆட்சியின் இறுதியில் நந்திவர்ம பல்லவன் பாண்டியர்களின் வலிமையைக் குறைக்க போரைத் துவக்கினான்.

முதலாம் இராசசிம்மன் காலத்தில் பாண்டிய மண்டலத்தில் இந்து சமயம் செல்வாக்குப் பெற்றது. இந்து சமயப் பெரியோர்கள் பாராட்டப்பெற்றனர். துலாபாரம், இரணியகர்ப்பம், போன்ற வேள்விகளை நடத்திப் பிராமணர்களைப் பாராட்டினான். வேதங்கள் கற்றிருந்த குருமார் மரபினர் மன்னனின் உதவி பெற்று மகிழ்ந்தனர்.

## 7.3.7 முதலாம் வரகுணன் (கி.பி.768-815)

சாசனங்கள்விடுத்துப் பெருமைபெற்ற, மன்னன் நெடுஞ்சடையன் சடிலபராந்தகன், வரகுணமகாராசா, மாறன்சடையன், நெடுஞ்சடையன் போன்ற பல பெயர்களை அணியாக வைத்திருந்தான் என்று சாசனங்கள் காட்டுகின்றன. பராங்குச மாறவர்மனுக்குக் கங்க நாட்டிளவரசி பூசுந்தரி வழித்தோன்றியவன் சடிலபராந்தகன். இவன் பட்டத்துக்கு வரும்போது பாண்டியநாடு பரந்த பேரரசாக விளங்கியது. வடக்கே தஞ்சை முதல் திருச்சிவட்டத்திலும், வடமேற்கில் சேலம் கோயமுத்தூர் வரையிலும் பரவியிருந்த பாண்டியநாடு தெற்கே கடலை எல்லையாகக் கொண்டிருந்தது. இருந்தாலும், பல்லவர் பாண்டியர் போட்டி வலுப்பெற்றிருந்த நேரத்தில் அரசிருக்கையைப் பெற்றவுடன் வலிமையைப் பெருக்கி வெற்றிகண்டு, வீரம் காட்டி நின்ற நந்திவர்ம பல்லவ மல்லனைச் சந்திக்க நேர்ந்தது. பல்லவர்களின் ஆதிக்க வெறியால் இவன் ஆட்சி, போராட்டத்தில் துவங்கியது. தொடர்ந்து சுமார் கால் நூற்றாண்டுக் காலம் தனது பொழுதைப் போராட்டத்தில் கழித்தான் எனலாம்.

மேற்கிலிருந்து சேரர்களும் கிழக்கிலிருந்து பல்லவர்களும் தாக்கியதால் பாண்டியர்க்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. எனினும் பல்லவர் விரட்டியடிக்கப்பட்டனர். முத்தரையர்களைப் பணிய வைத்தான். காவிரிக்கரையில் புகளியூரில் அதியமானைத் தோற்கடித்தான். கொங்கு நாட்டரசனைத் தோற்கடித்து யானைப் படையுடன் சிறைப்பிடித்தான். ஆய்மன்னனையும், அவனுடைய உறவினன் ஆனைமலை நாட்டரசனையும் வென்று ஆரியூர் கோட்டையைத் தகர்த்தான். வேணாட்டின் மீது வெற்றி

கண்டான். வேணாட்டுக்குச் சொந்தமான விழிஞத்தைத் தாக்கினான் அங்கிருந்த படைத்தளத்தை அழித்தான்.





வடக்கிலும் தெற்கிலும் வெற்றிகண்ட சடிலபராந்தக நெடுஞ்சடையனுடைய நாடு வடக்கில் காவிரிக்கரையிலிருந்து கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் கடல்களை எல்லையாகக் கொண்டிருந்தது என்று கழுகுமலைச் சாசனமும், ஏர்வாடி சாசனமும் காட்டுகின்றன. ஆனால் வேணாடு முழுமையாகப் பணிய வைக்கப்படவில்லை என்று திருவனந்தபுரம் பொருட்காட்சிச்சாலை சாசனம் உணர்த்துகின்றது.

வெற்றிகள் தந்த பொருட்களும் செல்வங்களும் பாண்டிய மன்னனைச் செல்வந்தராக்கின. அச்செல்வங்கள் அறப்பணிக்குவித்திட்டன. கொங்கு நாட்டில் காஞ்சிப் பேரூரில் குன்றனையதோர் ஆலயத்தை விஷ்ணுவுக்கு எழுப்பினான். மதுரைக்குக் கிழக்கே ஆனைமலையில் தனது ஆசானபதி மாரங்காரியின் கண்காணிப்பில் விட்டுணுவுக்குக் கோயில் அமைத்தான். ஆலயங்களின் சுற்றுப்புறங்களில் வேதியர் குலத்தாருக்கு அக்கிரகாரங்களை எழுப்பித் தானமாக வழங்கினான் என்று திருச்சி, அம்பாசமுத்திரம் கல்வெட்டுகள் காட்டுகின்றன. சிவாலயங்களை இவன் புறக்கணித்திலன் என்பதைத் திருச்செந்தூர்க் கல்வெட்டால் உணரலாம். இவன் கொடைவள்ளலாக விளங்கினான் என்பதற்கு மேலும் பல சாசனங்கள் சான்றாக நிற்கின்றன.

நெடுஞ்சடையனின் ஆட்சி நீண்ட காலம் நடைபெற்றது. கிபி.767 முதல் 815 வரை 48 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான் என்று இவன் வரலாற்றை ஆய்ந்த ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவனுடைய ஏர்வாடி சாசனம் இவன் ஆட்சியின் 43-வது ஆண்டில் இயற்றப்பட்டதாகும். எனவே கி.பி 803-க்குப் பின்னரும் இவனுடைய ஆட்சி நீடித்திருந்தது.

தன் ஆட்சியின் முற்பகுதியில் அன்றைய தமிழகம் முழுவதிலும் வெற்றிநடை போட்டுப் புகழும் பெருமையு மடைந்த சடிலபராந்தக நெடுஞ்சடையன் பிற்பகுதியில் ஆக்கப்பணியிலும், அறப்பணியிலும் ஈடுபட்டான். அறநிலையங்களுக்கும், வேதியர் வகுப்பினருக்கும் வாரி வழங்கினான். கொடைகள் வழங்கும் பொருட்டு இட்ட கட்டளைகள் சாசனங்களாகவும், கல்வெட்டுகளாகவும் இன்று காட்சியளிக்கின்றன. கிடைக்கப்பெற்ற பாண்டிய மன்னர்களின் சாசனங்களுள் மிகப் பழமையானது இவனுடைய சாசனங்களே. தான் ஆட்சிக்கு வந்த மூன்றாவது ஆண்டிலேயே சாசனமியற்றினான். அதுவே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வேள்விக்குடிச் சாசனமாகும். 17-ஆம் ஆட்சியாண்டில் சீவரமங்கலத்துச் சாசனமிட்டான்.

சங்ககாலத்து முதுகுடுமிப்பெருவழுதியால் கொற்கைக்கிழான் நற்கொற்றனுக்கு இறையிலியாகக் கொடுக்கப்பெற்றது. களப்பாளர் ஆட்சியில் மறுக்கப்பட்ட வேள்விக்குடி கிராமத்தைக் கொற்கைக் கிழான் நற்கொற்றன் வழியில் தோன்றிய நரசிங்கனுக்கு

மீண்டும் பிரமதேய தானமாகக் கொடுக்க இம்மன்னன் இட்ட சாசனமே வேள்விக்குடிச் செப்பேடுகளாகும். இதில் பாண்டியர்களைப் பற்றிய விரிவான வரலாற்றுச் செய்திகள் கிடைக்கின்றன. இவன் ஆனைமலை, திருச்சி, அம்பாசமுத்திரம், திருச்செந்தூர், கழுகுமலை, ஏர்வாடி போன்ற பல சாசனங்களை இயற்றினான். இவை இவனுடைய சாதனைகளையும் வரலாற்றையும் விளக்குகின்றன.

முதலாம் வரகுணன் சமயப்பணியிலும், கலைப்பணியிலும் ஆர்வம் காட்டியுள்ளான். சைவம் தழைத்திருந்த மதுரையில் அமைச்சன் காரணமாக வைணவத்தையும் பேணி இந்துசமயத்தின் பொது நிலைக்களனாய் விளங்கினான். மதுரைக்கருகாமையில் ஆனைமலையில் பெருமாளுக்குக் கோயில் எழுப்பினான். திருப்பரங்குன்றத்தில் சிவனுக்குக் கோயில் குடைவித்த இவன் கழுகுமலையில் வெட்டுவான் கோயிலைக் குடையச் செய்துள்ளான்.

இவன் வாழ்ந்த காலகட்டத்தில் வேதியர்கள் உயர் பதவிகளைத் தாங்குபவர்களாக விளங்கியதால், இவனுடைய உயர் அதிகாரிகளும் வேதியர் குலத்தில் உதித்தவர்களேயாம். அமைச்சுக் கட்டிலில் வீற்றிருந்த மாறன்காரி களக்குடியில் தோன்றிய வேதியராவார். இவர் வைணவராகவிருந்தார். இவருக்குப்பின் அமைச்சர் பதவியை எட்டிப் பிடித்த மாறன் எயினன் இவருடைய தம்பியாவார். படைத்தளபதியாக விளங்கிய சாத்தன் கணபதியும் களக்குடி வேதியக் குடும்பத்தில் தோன்றியவரேயாம். ஏனாதி விருது பெற்ற சாத்தினஞ்சாத்தன் கணபதியின் தம்பியாவார். அரசனின் மகாசாமந்தராக விளங்கிய மூர்த்தி எயினன் களக்காட்டில் வேதியக் குடும்பத்தில் உதித்தவராவார்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் படிப்படியாகக் குடியேறிய வைதீகர்கள் அரசியலில் ஊடுருவி கி.பி.5ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஆட்சியாளர்களையும் குருமார்களையும் இணைத்த நிலையான ஆளும் மேல்குடிப் பிரிவை சமூகத்தில் உருவாக்கினர் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். இக்காலகட்டத்தில் ஊர்களின் பெயர்கள் சமற்கிருத மயமாக்கப்பட்டன என்பதற்கு மாறன்காரி பிறந்த களக்குடி கரவந்தபுர மாக்கப்பட்டுள்ளது சான்றாகும்.

## 7.3.8 சடையன் மாறன் (சீமார சீவல்லபன் கி.பி.815-867)

சடையன்மாறன் சீமார சீவல்லபன் என்று அறியப்பட்டான். இவன் முதலாம் வரகுண பாண்டியனின் புதல்வனாவான். மாறவர்மன் என்ற பட்டப்பெயரை வைத்திருந்த இம்மன்னனுக்கு ஏகவீரன், அவனிசேகரன் போன்ற சிறப்புப் பெயர்கள் இருந்தன. இவனுடைய வெற்றிகளைச் சின்னமனூர்ச் செப்பேடுகள் விளக்குகின்றன. சோழர்களையும், பல்லவர்களையும், கங்கர்களையும், கலிங்கர்களையும் வென்றான். இதனால் காவிரிப்படுகை பாண்டியர்களுக்குட்பட்டது என்பதை

இவன் கல்வெட்டு காட்டும். இவன் சேரர்களை விழிஞத்தில் வென்றான். கடல்கடந்து ஈழத்துக்குச் சென்றான். முதலாம் சேனனை முழுமையாகத் தோற்கடித்துத் துரத்தினான். நகரங்களைக் கொள்ளையிட்டான். புத்த விகாரங்களைச் சூறையாடினான் தன்னைப் பணிந்த சேனனை அரசிருக்கையில் அமர்த்திவிட்டு நாடு திரும்பினான் என்று மகாவம்சம் காட்டுகின்றது.



## 7.3.9 இரண்டாம் வரகுணபாண்டியன்

சீமார சீவல்லபன் இறக்கும்போது பாண்டியர் நிலை சீர்குலைந்திருந்தது. ஈழநாட்டார் தலையீட்டால் மதுரையில் மாயப்பாண்டியன் ஆட்சியைப் பெற்றிருந்தான். வடக்கில் பல்லவர்களும் சோழர்களும் வலிமை பெற்றுப் பாண்டியர் நாட்டின் வடக்குப் பகுதிகளைக் கைப்பற்றியிருந்தனர்.

பல்லவர் நாட்டில் மூன்றாம் நந்திவர்மனுக்குப் பின் அவனுடைய புதல்வன் நிருபதுங்கன் அரசனானான். சீமார சீவல்லபனின் மூத்தமகன் இரண்டாம் வரகுணன் நிருபதுங்கனுடைய உதவியுடன் மாயப்பாண்டியனின் ஆட்சியை ஒழித்துப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான். இவன் காலத்தில் பாண்டியர்களும் பல்லவர்களும் துவக்கத்தில் நல்லுறவை வைத்திருந்தனர். ஆனால் விரைவில் நிலை மாறியது. நிருபதுங்கனை அவனுடைய உறவினன் அபராசிதன் சோழர் உதவியுடன் எதிர்த்தான். நிருதுங்கனுக்கு வரகுண பாண்டியன் உதவினான். கி.பி895-ல் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்ற திருப்புறம்பியம் போரில் நிருபதுங்கனையும் வரகுண பாண்டியனையும் அபராசிதன் தோற்கடித்தான். இம்முடிவு தென்னக வரலாற்றில் புதுத் திருப்பத்தை ஏற்படுத்தியது. பாண்டியர்கள் வடக்குப் பகுதிகளைவிட்டு வெளியேறினர். சோழர்கள் முன்னேறினர். பல்லவர்கள் நடுங்கினர். பாண்டியர்களின் வலிமை இறுதியாக ஒடுக்கப்பட்டது.

இரண்டாம் வரகுணனின் அறப்பணிகளைத் திருச்செந்தூர்க் கல்வெட்டு புலப்படுத்துகிறது.

## 7.3.10 பராந்தக வீரநாராயணன்

வரகுணனின் ஆட்சியின் இறுதியில் அரசிருக்கைப் போட்டிகளால் குழப்பம் ஏற்பட்டது. இவனுடைய நதம்பி பராந்தக வீரபாண்டியன் ஆட்சியைப் பெற்றான். வேணாட்டின் மீதும் கொங்குநாட்டின் மீதும் வெற்றிகண்ட இம்மன்னனே தளவாய்புரம் சாசனத்தை இயற்றியவன். இவன் ஆலயங்களுக்குத் தேவதான கிராமங்களையும், வேதியர் குலத்தாருக்கு அக்கிராமங்களையும் தானமாகக் கொடுத்தான்.



பராந்தக வீரபாண்டியனுக்குச் சேரநாட்டிளவரசி வானவன் மாதேவிக்குத் தோன்றிய மாறவர்மன் மூன்றாம் இராசசிம்மன் என்ற

பெயரில் பட்டம் பெற்றான். சின்னமனூர்ப் பெரிய சாசனங்களை இயற்றிய இம்மன்னன் தஞ்சை, கொடும்பாளூர் மன்னர்களை வென்றான்.

சமணத்தைத் தழுவிய இப்பாண்டிய மன்னன் சமணப்பள்ளிகளுக்கு உதவினான். கொடைகள் வழங்கி ஆதரித்தான். இவன் காலத்தில் பாண்டி நாட்டில் சமணம் தழைத்திருந்தமையை இவை காட்டுகின்றன.

வடக்கில் வலிமை பெற்றிருந்த சோழர்கள் அதிகார நெரிசலை ஏற்படுத்தினர். எனவே மூன்றாம் இராசசிம்மன் இலங்கை வேந்தன் காசப்பனின் துணையுடன் சோழர்களை வேலூரில் எதிர்த்துத் தோற்றான். எனவே சோழர்கள் முன்னேறி மதுரையைக் கைப்பற்றினர். இராட்டிரர்களின் தொல்லையால் சோழராட்சி நீடிக்கவில்லை. சோழர்கள் வடக்கில் இராட்டிரர்களுடன் மாட்டிக் கொண்டதைப் பயன்படுத்தி மூன்றாம் இராசசிம்மனின் புதல்வன் வீரபாண்டியன் சோழர்களைத் தோற்கடித்தான். “சோழன் தலைகொண்ட கோவீரபாண்டியனாக” மதுரையில் தன்னாட்சி ஏற்படுத்தினான். இவன் காலம் முதல் சோழர் பாண்டியர் மோதல் வலுவடைந்தது. சுந்தரசோழனால் தோற்கடிக்கப்பட்டான். சுந்தரசோழனின் புதல்வன் ஆதித்த சோழனால் கொல்லப்பட்டான். இவனுடைய இறப்புடன் பாண்டியர்களின் முதல் பேரரசின் வரலாறு முடிந்தது. சோழர் மேலாதிக்கத்தின் கீழ் பாண்டிய நாடு வந்தது.

## 7:4 இரண்டாம் பாண்டியப் பேரரசு

கி.பி.11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்கள் சோழர்களின் இசைவுடன் ஆட்சியைப் புதுப்பித்தனர் என்றாலும் 12ஆம் நூற்றாண்டின் இறுதிவரை அவர்கள் சோழர்களின் அடிமைத்தளையில் மண்டிக்கிடந்தனர். கி.பி.13ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் சோழர்கள் விரைந்து வீழ்ந்தனர். பாண்டிய நாட்டில் சடையவர்ம குலசேகரன், முதலாம் பாண்டியன் முதலியோர் பாண்டியர்களின் வலிமையைப் பெருக்கிப் பரந்த நாட்டைப் படைத்தனர்.

### 7.4.1 முதலாம் மாறவர்ம சுந்தரபாண்டியன் (கி.பி.1246-1238)

இவன் சடையவர்ம குலசேகரனின் தம்பியாவான். இரண்டாம் பாண்டியப் பேரரசின் எழுச்சிக்கு இவன் முக்கியக் காரணமாக இருந்தான். சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கன் வயோதிக நிலையிலிருந்தான். அவனுக்குத் துணை நின்ற புதல்வன் மூன்றாம் இராசராசன் திறமையற்றிருந்தான். இதைப் பயன்படுத்திக் கொண்டு மாறவர்ம சுந்தரபாண்டியன் சோழ நாட்டின் மீது போர்தொடுத்தான். உறையூரும் தஞ்சையும் தீக்கிரையாயின. மூன்றாம் குலோத்துங்கனும், மூன்றாம் இராசராசனும் சிறைப்பட்டனர். சோழ நாட்டில் பாண்டியர் ஆதிக்கம்

பரவியது. போசளர் துணையுடன் சோழர் விடுதலை பெற்றனர். பாண்டியர்க்குத் திறை செலுத்தவும் உடன்பட்டனர். மீண்டும்



மூன்றாம் இராசராசன் பாண்டியர்க்குத் திறை செலுத்த மறுத்ததால் சோழ நாட்டின்மீது படையெடுத்து மூன்றாம் இராசராசனை விரட்டியடித்தான். இம்முறையும் போசளர் தலையீட்டின் பேரில் சோழ அரசு இராசராசனுக்குக் கிட்டியது.



## 7.4.2 இரண்டாம் மாறவர்ம சுந்தர பாண்டியன் (1238-1251)

இவன் காலத்தில் தென்னக அரசியலில் திருப்பம் கண்டது. சோழன் இராசேந்திரன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். இப்பொழுது போசளர்க்கும் சோழர்க்கும் பகை ஏற்பட்டது. போசளர்கள் பாண்டியர் பக்கமிருந்து உதவினர்.

## 7.4.3 முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் (1261-1268)

இது தமிழக வரலாற்றில் மிக முக்கியமான காலமாகும். அணையப்போகும் விளக்கொளி போன்று சோழர் மூன்றாம் இராசேந்திரன் தலைமையில் இழந்த புகழை ஓரளவு மீட்டனர். பாண்டியர்கள் தோற்கடிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டனர். போசளர்கள் பாண்டியர் அரசியலில் தலையிட்டுப் பாண்டியர்களைத் தற்காத்துச் சோழர் மீது வெற்றிகண்டு தங்களாதிக்கத்தைத் திருச்சிராப்பள்ளிக்கு அடுத்துள்ள கண்ணனூரிலிருந்து நிலைநாட்டிக் கொண்டிருந்தனர். தமிழகத்தின் வடக்கில் துளுநாட்டுச் சோடர்களும் காதியர்களும் அதிகார நெரிசல் ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். காகாத்திய அரசன் கணபதி என்பவன் தமிழகத்தின் வடக்கில் படையெடுத்துக் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டான். இது சோழர்களுக்குப் பெரும் அடியாகவும், பாண்டியர்களுக்கு வாய்ப்பாகவும் அமைந்தது.

இத்தகைய அரசியல் சூழ்நிலையில் முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் பாண்டிய வேந்தனானான். அவன் போரில் மாபெரும் வெற்றி வீரனானான். தென்னக அரசியல் வானில் உலாவிய சக்திகள் அனைத்தையும் அடிபணியச் செய்த இவன் மூன்றாம் இராசேந்திர சோழன்மீது வெற்றிகண்டு, சோழப் பேரரசுக்கு இறுதியாக முற்றுப்புள்ளியிட்டான். தமிழகத்தையும் தமிழகத்துக்கப்பால் உள்ள பகுதிகளையும் வென்று பாண்டிய அரசைப் பேரரசாக்கினான். பாண்டியர் புகழைத் தூண்டிப் பேரொளியாக்கினான்.

இவன் முதலில் சேரநாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். சேரமன்னன் வீரரவி உதயமார்த்தாண்டனைத் தோற்கடித்துக், கொன்று சேரவம்சத்தை அழித்தவனானான். இவ்வமயம் சோழநாட்டை வீரம் படைத்த மூன்றாம் இராசேந்திரன் ஆண்டு வந்தான். அவனுக்கு வடக்கில் காகதியர்கள் அபாயச் சங்கொலி எழுப்பினர். காஞ்சி மண்டலத்தைக்

கைப்பற்றிக்கொண்டனர். இதனைப் பயன்படுத்திக் கொண்டு சடையவர்ம சுந்தரபாண்டியன் பெரியதோர் படையைத் திரட்டிக்கொண்டு சோழநாட்டின்மீது பாய்ந்தான். இராசேந்திரன் மீது வெற்றி செலுத்தும் நிலைக்குச் சோழர்கள் தாழ்த்தப்பட்டனர். போசளர்கள் திருச்சிராப்பள்ளி பக்கத்திலிருந்த கண்ணனூர் கொப்பத்தை இருக்கையாக வைத்து தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டதை வெற்றிப் பாதையில் விரைந்து கொண்டிருந்த சடையவர்மர் கைப்பற்ற எண்ணினான். கண்ணனூரை முற்றுகையிட்டான். போசள மன்னன் சோமேசுவரன் வீர மரணமடைந்தான். போசளர்கள் காவிரிநாட்டைவிட்டு ஓடினர். பாண்டியர் படை கோப்பெருஞ்சிங்கனின் சேந்தமங்கலத்தை நோக்கிச் சென்றது. போரில் வெற்றி கண்டது. காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் பணிந்தான். திறை செலுத்தவும் உடன்பட்டான். பாண்டியவேந்தன் கோப்பெருஞ்சிங்கனைச் சிற்றரசனாக ஏற்று நட்புடன் ஆட்சி புரியச் செய்தான்.

முதலாம் சடையவர்ம சுந்தர பாண்டியன் சிதம்பரத்துக்குச் சென்று வெற்றிவிழா எடுத்தான். அங்கிருந்த நடராசப் பெருமானுக்குத் தனது வணக்கத்தைச் செலுத்திவிட்டுத் திருவரங்கத்துக்குச் சென்று, அங்கே வேள்வி நடத்தித் துலாபார தானம் செய்தான். சடையவர்ம சுந்தரபாண்டியன் கடல் கடந்து ஈழ நாட்டின் மீது படை செலுத்தினான்; வெற்றி கண்டான். இதன் விளைவாக ஈழத்தின் வடக்குப் பகுதி பாண்டியர்க்குக் கிட்டியது.

இவ்வாறு பாண்டிய நாட்டு அரியணையேறிய ஆறே ஆண்டுகளில் சடையவர்ம சுந்தரபாண்டியன் சேரர், சோழர், காடவர், போசளர், சிங்களவர் ஆகியோர் மீது வெற்றி கண்டு பாண்டியர்களின் மேலாதிக்கத்தைத் தென்னகம் எங்கும் நிலைநாட்டினான். இத்துடன் அவனுடைய வெற்றிப் பயணப் படையை வடக்கில் செலுத்தினான். தெலுங்கு சோடர்களைத் தோற்கடித்து அவர்களுடைய மன்னன் கண்ட கோபாலனைக் கொன்றான். காஞ்சியிலிருந்து காகாதியர் ஆதிக்கத்தை ஒழித்தான். காகதிய மன்னன் கணபதியின் மேல் வெற்றி கண்டான். நெல்லூரையும் கைப்பற்றினான். நெல்லூரில் வெற்றிவிழாக் கொண்டாடினான்.

முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் வெற்றிகள் பல கண்டு. நாடுகள் பல கைப்பற்றிப் பாண்டியப் பேரரசினை நிறுவினான். தென்னகத்தில் அவன் காலத்தில் ஈடு இணையற்றவனாக விளங்கினான். 'எம்மண்டலமும் கொண்டருளியவர்', 'எல்லாம் தலையான பெருமாள்' என்பன போன்ற பல விருதுப் பெயர்களை ஏற்றுப் பாண்டிய நாட்டை ஆண்டு பெருமைப்பட்டான் என்று அவனுடைய கல்வெட்டுகள் காட்டுகின்றன. இத்தகைய வெற்றி வீரனாகிய சடையவர்ம சுந்தரபாண்டியன் அறப்பணிகளில் ஈடுபட்டு வள்ளலாக விளங்கினான். சிதம்பரம் கோயிலுக்குப் பொன் கூரை வேய்ந்தான். அங்கே

பொன்னம்பலம் ஒன்றைக் கட்டினான். சீரங்கம் கோயிலுக்கும் பொன் கூரை வேய்ந்தான். இதனால் "பொன் வேய்ந்த பெருமாள்" என்று பாராட்டப்பட்டான். சீரங்கத்துக்குச் சென்று முடிசூட்டுவிழா எடுத்ததோடு. இவன் செய்த திருப்பணிகளும் நிவந்தங்களும் பலவாகும். சீரங்கக் கோயில் ஒழுகும், அங்குள்ள சமஸ்கிருதக் கல்வெட்டும் இவற்றை விளக்கி நிற்கின்றன. இம்மன்னனுடைய அறப்பணிகள் பலவாகும். கோயில்களில் தான் பிறந்த நாளில் விழா எடுக்கச் செய்தான். சேர நாட்டு வெற்றியைப் பாராட்டித் திருவானைக்காவல் திருக்கோயிலுக்கு மூன்று ஊர்கள் நிவந்தமாகக் கொடுத்து அங்கே 'சேரனை வென்றான்' விழா எடுக்கச் செய்தான். இவன் சமணப்பள்ளிகளுக்கும் கொடையளித்தான் என்றால் அ∴து இவனுடைய சமயப் பொறைக்கு விளக்கமாகும்.

நாடுகள் பல வென்ற மாமன்னன், மண்டலங்கள் யாவையும் கொண்ட பெருமாளாகிறான். இணையற்ற வீரனாக விளங்கிப் பேரரசனாக முடிசூட்டிக் கொண்ட மன்னன் "எல்லாம் தலையான பெருமாள்" என்று பெயர் பெற்று அப்பெயரில் நாணயமும் அச்சிட்டான். சிற்றரசர்களின் பணிவைப் பெற்று அவர்கள் அளித்த திறையைப் பெற்று, மகிழ்ந்து, பாண்டிய நாட்டினைப் பாண்டியப் பேரரசாக்கிய பெருமை முதலாம் சடையவர்ம சுந்தர பாண்டியனுக்குச் சென்றது. தான் இறப்பதற்குச் சற்று முன்னரே மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினான்.

சடையவர்ம சுந்தரபாண்டியன் காலத்தில் அவனுடன் வேறு நால்வர் பாண்டிய நாட்டை ஆண்டனர் என்று வெளிநாட்டுப் பயணிகள் கூறுகின்றனர். அரசர்குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்று கருத இடமுண்டு.

## 7.4.4 மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268 முதல்1310 வரை)

முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியனை அடுத்து மாறவர்மன் குலசேகர பாண்டியன் பாண்டியப் பேரரசனாக முடிசூட்டிக் கொண்டாள். இவனுடைய முன்னோர் காலத்திலேயே பாண்டியநாடு பாண்டிய சேரநாடு, கொங்குநாடு, சோழநாடு, தொண்டைநாடு, ஈழநாடு ஆகியவற்றில் படைசெலுத்தும் நிலை ஏற்பட்டது. மாறவர்மன் குலசேகர பாண்டியன் "எம்மண்டலமும் கொண்டருளிய, கொல்லம் கொண்டான்" என்ற விருதுகளை ஏற்றுள்ளான்.

மாறவர்ம குலசேகரன் ஆட்சிக்கு வந்து சிறிது காலத்தில் சேரநாட்டின் மீது படையெடுத்து வெற்றி கண்டான். கொல்லத்தைக் கைப்பற்றினான். எனவேதான் "கொல்லம் கொண்டான்" எனப்பட்டான். இவன் சோழ மன்னன் மூன்றாம் இராசேந்திரன் மீதும் போசளர்கள் மீதும் வெற்றி கண்டான். இவன் காலத்தில் ஈழநாட்டில் குழப்பம் ஏற்பட்டது.

அதனைப் பயன்படுத்திக் கொண்டு இவனும் இவன் தம்பிமார்களும் ஆரிய சக்கரவர்த்தி என்பாரின் தலைமையில் சிங்களத்துக்குப் படையை அனுப்பினர். பாண்டியர்கள் சிங்களத்தின் மீது வெற்றி கண்டனர். பலவிடங்களை அழித்துப் பொருட்களைக் கவர்ந்தனர். கிட்டிய பொருட்களுடன் புத்தபெருமானின் நினைவுச் சின்னமான பல்லையும் எடுத்துக்கொண்டு மதுரை அடைந்தனர். ஈழ நாட்டு மன்னன் மூன்றாம் பராக்கிரமபாகு மதுரைக்கு வந்து தனது பணிவைத் தெரிவித்துப் புத்த பெருமானின் புனிதச் சின்னத்தைப் பெற்றுச் சென்றான். இந்நிகழ்ச்சிகள் கி.பி.1284-க்குமுன் நிகழ்ந்தன என்று கூறப்படுகின்றது. மாறவர்மன் குலசேகரனின் 20ஆம் ஆட்சியாண்டில் இயற்றப்பட்ட சேரன்மாதேவி கல்வெட்டில் இவன் மலைநாடு, சோழநாடு இரு கொங்குநாடுகள், ஈழநாடு, தொண்டை நாடு என்பனவற்றை வென்றான்

மாறவர்ம குலசேகரன் ஒரு பேரரசனாகவே கோலோச்சினான். வெளிநாட்டுப் பயணிகள் தமிழகத்தில் அன்று பாண்டியப் பேரரசினையே கண்டனர். அரசன் நாட்டினைப் பிரதிநிதிகளை வைத்து ஆண்டான். மார்க்கோபோலோ எனும் வெளிநாட்டுப் பயணி இக்காலத்தில் பாண்டிய நாட்டில் பயணம் செய்தார். அவர் பாண்டிய நாட்டைச் சுற்றிப் பார்த்துத் தம் குறிப்பில் அன்று காயல்பட்டினம் சிறந்த துறைமுகமாக விளங்கியது. பிற நாட்டுக் கலங்கள் அங்கே வந்து சென்றன. வணிகர்களுடைய ஆரவாரமிருந்தது. வணிகர்களிடத்தும், பிறநாட்டு மக்களிடத்தும் மன்னன் அன்போடு நடந்து கொண்டான். “பாண்டி நாட்டுக்குச் செல்ல அயல்நாட்டார் விரும்பினர் என்று பல செய்திகளை எழுதி வைத்துள்ளார்.

பாண்டிய நாட்டில் ஐவர் ஆண்டனர் என்றும், குலசேகர பாண்டியன் மூத்தவன் என்றும், தன் தலைநகரில் செல்வத்தைக் குவித்திருந்தான் என்றும் அறிகிறோம். மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் இசுலாமியப் பயணி ‘வாசப்’ என்பவரும் பாண்டிய நாட்டின்மீது புகழ்மாலை சூட்டினார்.

குலசேகர பாண்டியனின் ஆட்சி 40 ஆண்டுகளுக்குமேல் நீடித்தது; நாடும் வளம் கொழித்தது; அயலார்கள் படையெப்பு அன்று எழவில்லை; மன்னனோ நோயற்றவன். அவன் அவையில் அரபு வணிகர்கள் இடம்பெற்றனர். அவனுடைய கருவூலத்தில் பொன்னும், மணியும் முத்தும் குவிந்திருந்தன.

## 7:5 பாண்டியர்களின் ஆட்சியியலும் மக்கள் வாழ்வும்

பருவமழையை நம்பும் வேளாண்மை நாடாகிய பாண்டிய நாட்டில் வைகையும், தாமிரபரணியும் நீர்வளமளித்த ஆறுகளாக விளங்கின. செயற்கையாக நீர்த் தேக்கங்களை உருவாக்கி வேளாண்மைக்கு ஊக்கமளித்தனர். எனவே நாட்டில் மக்கள் வேளாண்மைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தனர். வேளாண்மை

நீங்கலாக நாட்டுவளம், கடல்வளம், தொழில்வளம் முதலியவையும் வாணிப வளர்ச்சியும் நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தின.



## 7.5.1 நிலமும் நில உரிமையும்



பெரும்பாலான மக்கள் ஊர்களிலும், சிறுபான்மையினர் கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்தனர். மேட்டுப்பகுதிகளில் ஊர்கள் அதிகமாகப் பரவிக் கிடந்தன. மழையை நம்பிய புஞ்சைப் பயிர் அவர்களுக்கு அடிப்படைத் தொழிலாகியது. ஆற்றுப்படுகைகளில் செல்வக்குடியினர் வாழ்ந்த ஊர்களும் வேதியர்க்கு மன்னர்கள் தானமாக வழங்கிய கிராமங்களுமிருந்தன. நில உரிமை முக்கியமாக மூன்று வகைப்பட்டன. தலைமுறை தலைமுறையாக உழுதுவந்த செழிப்பான நிலங்கள் பரம்பரையாக அனுபவித்து வந்த மக்கள் பெயரில் பதிவாயின. இந்த நிலங்கள் வெள்ளான் வகை எனப்பட்டன. இந்த நிலங்களை உரிமையாளர்கள் நேராகவும், பிற உழவர்கள் மூலமாகவும் பயிரிட்டனர். பிற தொழில்களில் ஈடுபட்டவர்கள் பயன்படுத்திய நிலம் 'சீவிதம்' காயர் விருத்தி' போன்ற இனம் எனப்பட்டன. கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் (வேதியர்) இறையிலியாகவிடப்பட்ட நிலம் முறையே தேவதானம், பிரமதேயம் எனப்பட்டன. இவை இறையிலி நிலங்களாகும். இம்மூன்று முறை நீங்கலாக கோயில்களுக்காகவும், அரசுக்காகவும் ஊழியம் செய்யும் தொழில் நிபுணர்களுக்கு விடப்பட்ட நிலங்கள் ஊழியமான்யம் எனப்பட்டன.

வேளாண்மை நாட்டில் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவது அரசின் கடமையாகும். சமூகத்தின் பொறுப்பும் அதற்கிருந்ததால் ஊர்களும் கிராமங்களும் கூட தத்தம் பங்கினையாற்றியுள்ளன. பிற அரசர்களைப் போன்று பாண்டியர்களும் நீர்ப்பாசனப் பணிகளில் அக்கறை காட்டினர். ஏரிகளும் வாய்க்கால்களும் வெட்டப்பட்டன; மதகுகள் அமைக்கப்பட்டன. சிற்றூர்களுக்கும் மன்னர்களின் பெயர்கள் வைக்குமளவுக்குக் கவனம் செலுத்தினர். ஆறுகள் இல்லாத இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பகுதிகளில் குளங்கள் வெட்டியுள்ளனர். அரசர்களும் அதிகாரிகளும், ஊராரும், சபையோரும் குளங்கள் வெட்டினர் என்று சாசனங்கள் காட்டுகின்றன.

## 7.5.2 நில மீட்பு

வேளாண்மையில் கவனம் செலுத்திய மன்னர்கள் நில மீட்புப் பணி செய்ய உதவியுள்ளனர். காடுகளையும் கரம்பு நிலங்களையும் அவ்வப்போது பயிர் நிலங்களாக மாற்றும் முயற்சி நடைபெற்றுள்ளது.

## 7.5.3 தொழில்கள்



சாதாரண மக்கள் வேளாண்மையுடன் பிற தொழில்களிலும் ஈடுபட்டனர். நெசவு, செக்காலை எண்ணை உற்பத்தி, கரும்புச்சாறு பனஞ்சாறாகியவற்றிலிருந்து வெல்ல உற்பத்தி, உப்பு உற்பத்தி, மீன் பிடித்தல், முத்துக் குளித்தல் முதலியவை முக்கியத் தொழில்களாகும்.

மதுரையிலும் பிற நகரங்களிலும் மெல்லிய பருத்தி ஆடைகளும் பட்டாடைகளும் உற்பத்தி செய்தனர். இதனை வெளிநாட்டினர் மிகவும் விரும்பினர். கைக்கோலர்கள் பெரும்பாலும் நெசவில் ஈடுபட்டிருந்தனர். நெசவாளர்களிடம் பஞ்சப்பீலி, தறியிறை போன்ற வரிகளை விதித்து அரசின் வருவாயை வளர்த்தனர். கோயில்களுக்கும் படையினருக்கும் தீவட்டி முதலியவற்றுக்காகவும் அதிகப்படியான எண்ணெய் தேவைப்பட்டது. அன்றாட வாழ்வுக்கும் மருந்துகளுக்கும் பலவித எண்ணெய் தேவைப்பட்டது. இதனைக் குடிசைத் தொழிலாக எண்ணெய் வணிகர்களும், செக்கு ஆலை வைத்தவர்களும் உற்பத்தி செய்தனர். இவற்றைத் தலையில் சுமந்து விற்றனர். கடலோரங்களில் உப்பளங்கள் அமைக்கவும், உப்பு உற்பத்தி செய்யவும் வசதி இருந்ததால் தேவைக்கான உப்பு உற்பத்தி செய்யப் பட்டது. பாண்டிய நாட்டு முத்துக்கள் காலம்காலமாகப் புகழ்பெற்று விளங்குகின்றன. பாண்டி நாட்டில் கொற்கைக்கரையில் முத்துக்குளிக்கும் தொழில் மையம் கொண்டிருந்தது. படகுகளில் கடலில் சென்று தங்கி, முத்துச் சிப்பி எடுப்பர். இது கோடை காலத்தில் நடைபெறும் கடலில் மூழ்கிச் சிப்பி எடுப்பவர்களும், படகில் செல்வோரும் உற்பத்தியைப் பகிர்ந்து கொள்ளுவர். மன்னனுக்கும் ஒரு பங்கு உண்டு. இத் தொழில் நடைபெறும் காலத்தில் பக்கத்து ஊர் மக்களும் வணிகர்களும் குழுமுவர். பெறப்பட்ட பலவகையான முத்துக்களை வணிகர்கள் பெற்றுப் பல நாடுகளுக்கும் அனுப்பி வைத்தனர். கடலின் குழந்தைகளான பரதவர்கள் மீன் பிடிப்பதை முக்கியத் தொழிலாகக் கொண்டனர். ஆழ்கடலில் மீன் பிடிக்கும் வசதியும் பழக்கமும் அவர்களுக்கில்லை. மீனவர்கள் கொண்டு வரும் மீன்களை மீனவ ஏழைப்பெண்களும், வணிகர்களும் பெற்றுவிற்று இலாபமடைந்தனர். அழுகும் பொருளாதலின் கருவாடாக்கி உள்நாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பி வைத்தனர். பரதவர்கள் வலிமை வாய்ந்தவர்களாக விளங்கியதால் கி.பி ஏழாம் நூற்றாண்டில் பாண்டியர்களை எதிர்த்துப் பேராடியுள்ளனர்.

ஆற்றுப்படுகைகளில் கரும்பும், தென் மண்டல மேட்டு நிலங்களில் பனையும் வளருகின்ற புவியியல் சூழ்நிலை இருந்ததால் வெல்ல உற்பத்தி செய்யப்பட்டது. இதுவும் குடிசைத் தொழிலாக நடைபெற்றது. இவை நீங்கலாகத் தச்சு வேலைத் தொழில்கள், இரும்பு வேலைத் தொழில்கள், மட்பாண்டம் உற்பத்தி செய்தல் போன்ற பல

தொழில்களில் ஈடுபட்ட தொழிலாளர்களும் தத்தம் தொழில்களைச் செய்தனர்.



## 7.5.4 வாணிபம்



இயற்கை வளமும் செயற்கைத்திறனும் உற்பத்தியைப் பெருக்கி வாணிபத்தை வளர்க்கத் தூண்டின. உள்நாட்டு வாணிபமும், அயல்நாட்டு வாணிபமும் செழித்தன. பருத்தி ஆடைகளும், பட்டாடைகளும், பல்வகை நவமணிகளும் இரத்தினங்களும், சந்தனம், சவ்வாது போன்ற நறுமணப் பொருட்களும், இஞ்சி, ஏலம், இலவங்கம், மிளகு போன்ற கறிவகைப் பொருட்களும், இயற்கை வழங்கிய மருந்துப் பொருட்களும், பழக்கப்பட்ட யானைகளும், குதிரைகளும் முக்கிய வாணிபப் பொருட்களாயின.

வாணிபத்தில் சிறந்து விளங்கியவர்கள் நகரத்தார்களாவர். வணிகர்கள் குழுக்களாக அமைந்து உள்நாட்டு வாணிபத்திலும், அயல்நாட்டு வாணிபங்களிலும் ஈடுபட்டிருந்தனர். வணிகர்களின் தொடர்பு சேர, சோழ, பாண்டிய, மகத, கோசல, சௌராட்டிர, குறும்ப, கம்போஜ, இலாட முதலிய உள்நாடுகளுடனும், சிங்களம், மலேயா, சீனா, அரேபியா, ஐரோப்பா முதலிய நாடுகளுடனும் இருந்தது. எனவே இடைக்காலத் தமிழகம் அயல்நாட்டுப் பணிகளைக் கவர்ந்தது.

வாணிபச் சாத்துக்கள் சங்ககாலம் தொட்டே செயல்பட்டன இடைக்காலத்துக்கு முன்னிருந்த வாணிபச் சங்கங்களின் பணிகளைத் 'தாமிழி' கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. இடைக்காலப் பாண்டிய நாட்டில் பலவகையான வாணிபச் சங்கங்களிருந்தன. அவை மணிக்கிராமம், அஞ்சு வண்ணத்தார், குதிரை வணிகர்கள், நானா தேசிகள் போன்றவைகளாகும். முத்து வணிகர்களின் சேர்க்கை மணிக்கிராமம் எனவும், கீழக் கடற்கரை, குறிப்பாகக் காயல்பட்டினத்து முசுலீம் வணிகர்களின் சேர்க்கை அஞ்சு வண்ணம் எனவும், குதிரை வாணிபத்திலிருந்த முசுலீம்களும், குதிரைச் செட்டிகளும் சேர்ந்த குதிரை வாணிபச் சேர்க்கை குதிரை வணிகர்கள் எனவும், அயல்நாட்டு வணிகர்கள் நானா தேசிகள் எனவும் அறியப்பட்டன. சோவர், ஏடன் முதலிய நகரங்களுடனும் தொடர்புடையவர்களாக விளங்கியவர்கள் நானாதேசிகளாவர். பாண்டி நாட்டில் காயல்பட்டினம் நானாதேசிகளின் முக்கிய முகாமாக விளங்கியது.

காயல்பட்டினம் வழியாக அயல்நாட்டு வணிகர்கள் பாண்டி நாட்டை அடைந்தனர். காயலில் அயல்நாட்டு கலங்கள் குழுமிக் கிடந்தன. அதிகாரத்தைப் பரப்பி ஆடம்பரத்தை விரும்பிய குப்ளாக்கான் சீனாவுக்கும் தமிழகத்துக்குமிடையேயான வாணித் தொடர்பைப் பெருக்கினான். இதனால் பாண்டியநாடு வழியாக நானாதேசிகள் தமிழகத்தில் அலை அலையாக வந்தனர். மார்க்கோபோலோவின் தந்தை அப்பல்லோபோலோ தலைசிறந்த அயல் நாட்டு வணிகராக விளங்கியுள்ளார். மார்க்கோபோலோ, வாசப் முதலியோரின் குறிப்புகள்

அயல்நாட்டு வாணிபத்துக்கும் உள்நாட்டு வாணிபத்துக்கும் சிறந்த விளக்கங்களாகவுள்ளன.



குறிப்பு

## 7.6 பாண்டியர்களின் வீழ்ச்சி இசுலாமியர் வருகையும்

மாறவர்ம குலசேகரனின் வெற்றிகரமான ஆட்சி இறுதியில் குழப்பத்திலும் துன்பத்திலும் முடிவுற்றது. குலசேகரனுக்குச் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என இருபுதல்வர்களிருந்தனர். 'வாசப்' குறிப்புப் படி சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் மகன் வீரபாண்டியன் மற்றொரு மனைவியின் மகன். வீரபாண்டியன் திறமை மிக்கவனாதலின் பதவி அவனை நாடவிருந்தது. இதையறிந்து வெகுண்ட சுந்தரபாண்டியன் தந்தையைக் கொல்லும் பாவச் செயலுக்கடிமையானான். தந்தையைக் கொன்றுவிட்டு மதுரையில் முடிசூட்டிக் கொண்டான். ஏமாற்றமும் ஆத்திரமுமடைந்த வீரபாண்டியன் கொதிந்தெழுந்து மக்களின் துணையுடன் சுந்தரபாண்டியனைத் தோற்கடித்துத் துரத்தினான். உடன்பிறப்புகளுக்கிடையே தோன்றிய பகையே பாண்டிய நாட்டின் குழப்பத்துக்குக் காரணம் என முசுலீம் ஆசிரியரான அமீர்குசுரு குறிப்பிட்டுள்ளார்.

இக்காலத்தில் அலாவுதீன் கில்சியின் தளபதி மாலிக்காபூர் தென்திசைப் படையெடுப்பிலீடுபட்டுப் போசளர்களின் தலைநகரான துவாரசமுத்திரத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தான். மதுரையில் நிலவிய அரசியல் குழப்பம் அவனுக்கு இனிப்பான செய்தியாகியது. நாடிழந்த சுந்தரபாண்டியன் மாலிக்காபூரின் துணையை நாடித் தமிழகத்துக்கு அயலார் படையெடுப்பை வரவழைத்ளனதான் அறிகிறோம். மாலிக்காபூர் வீரபாண்டியனைத் துரத்தித் துரத்திப் படையைச் செலுத்தியுள்ளான். வீரபாண்டியன் மாலிக்காபூரிடம் நேரில் மாட்டிக் கொள்ளாது காடுகளில் ஒளிந்தும் மறைந்தும் முசுலீம் படையினரைத் தாக்கியுள்ளான். சுந்தரபாண்டியனும் மதுரையைவிட்டு வெளியேறினான். அனாதையாகிய மதுரையை உறவினன் விக்கிரம பாண்டியன் காப்பாற்ற முயன்று மடிந்தான். இந்நிலையில் விக்கிரம பாண்டியனின் மருமகனும் வேணாட்டின் அதிபதியுமாகிய இரவிவர்ம குலசேகரன் வேகவதி ஆற்றங்கரை வரை முசுலீம் படையைத் துரத்திவிட்டு 1311-இல் மும்மண்டலங்களின் அதிபதியாக முடிசூட்டிக் கொண்டான். அவன் 'கொல்லத்தின் அதிபன்', 'கூபக நாட்டின் அடிகள் என்ற பட்டப் பெயர்களையும் வைத்திருந்தான் என்று பூந்தமல்லி கல்வெட்டு உரைக்கின்றது. இரவிவர்மனின் ஆட்சி சிறிது காலமே நீடித்தது. வீரபாண்டியனும் சுந்தரபாண்டியனும் கி.பி1317-இல் உடன்பாட்டில் வந்தனர் என்றாலும், 1311க்குப்பின் படிப்படியாக மதுரையில் அயலார் ஆட்சி வேரூன்றியது பாண்டியர் சிற்றரசர்களாயினர்.

இதுவரையில் கூறியவற்றால் இசுலாம் சமயம் பிற சமயங்கள் போலவே கலை, சமயம், இலக்கியம், மருத்துவம் போன்ற

பல துறைகளிலும் தன் அடிச்சுவட்டைப் பதித்துள்ளது என்று உணரலாம்.



**இசுலாமியர் எழுச்சி**

கி.பி.12-ம் நூற்றாண்டின் டெல்லியில் சுல்தானிய ஆட்சி தொடங்கியது. கில்ஜி வம்சத்தில் தோன்றிய அலாவுதீன் கில்ஜிக்குத் தென்னிந்தியாவிலும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் முதன் முதலாகத் தோன்றியது. அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவன் மாலிக்கபூர் தென்னகத்தில் படையெடுப்பு மேற்கொண்டான். அலாவுதீன் கில்ஜி இறந்ததும் மாலிக்கபூர் அவனது மக்களைச் சிறையில் அடைத்து விட்டு அரியணை ஏறினான். எனினும் 35 நாட்களில் அவன் கொல்லப்பட்டான். அலாவுதினின் மகன் முபாரக்ஷா அடுத்த டெல்லி சுல்தான் ஆனான். அவனது படைத்தலைவன் குஸ்ருகான் தலைமையில் கி.பி.1317-ல் முஸ்லீம் படை தமிழகம் நோக்கி வந்தது. இதன்பின் டெல்லியில் நடைபெற்ற அரசியல் கலகத்தின் விளைவாகக் கில்ஜி வம்சம் முடிவடைந்தது. துக்ளக் வம்சம் ஆட்சி செய்யத் தொடங்கியது. தென்னக இந்து அரசுகளை ஒழித்து இஸ்லாம் சமயத்தைப் பரப்பும் நோக்கமுடன் கி.பி.1321-ல் முகமது பின் துக்ளக் தென்னகம் நோக்கிப் படையெடுத்தான். முஸ்லீம் படை மதுரை மீது தாக்குதல் நடத்தி அதன் அரசனாகிய பராக்கிரம பாண்டியனைக் கைது செய்தது. மதுரை முஸ்லீம் ஆட்சிக்குள் அடங்கிய ஒரு மண்டலமாக்கப்பட்டது. முஸ்லீம் அரசு சார்பாளர் அங்கு நியமிக்கப்பட்டார்.

இவரைத் தொடர்ந்து சுல்தான் ஜலாலுதீன் அசன்ஷாவும், அவனை அடுத்து அலாவுதீன் உதாஜியும், அதற்கடுத்து கியாசுதீனும் பொறுப்பேற்றனர். முஸ்லீம்களின் ஆட்சி கி.பி.1378 வரை மதுரையில் நடைபெற்றது. கி.பி.1362-ல் விசயநகரப் பேரரசான குமாரகம்பணன் மதுரையைத் தாக்கி அங்கு ஆட்சி புரிந்த முஸ்லீம் சார்பாளன் முபாரக்ஷாவைத் தோற்கடித்தான். எனினும் கி.பி.1378 வரை மதுரையில் முஸ்லீம் ஆட்சி நடைபெற்றதாக அறிகிறோம். கி.பி.1378-ல் இரண்டாம் புக்கனின் படையெடுப்பு மதுரையில் இருந்த முஸ்லீம் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

கி.பி.1330 முதல் 1378 வரை தமிழகத்தில் நடைபெற்ற இஸ்லாமிய ஆட்சியில் இந்துக் கோயில்களைப் பாழ்படுத்துவதும் கூட்டமான மத மாற்றமும் அன்றா நிகழ்ச்சிகளாக இருந்தன. குமாரகம்பணின் மனைவி கங்கா தேவி எழுதிய மதுராவிஜயம் என்ற நூல் அக்காலத் தமிழகத்தின் நிலையை பின்வருமாறு எடுத்துரைக்கிறது.

“கோவிலின் கதவு கரையான்களின் உணவாகிவிட்டது. வேள்விப் புகையும், வேத முழக்கமும் பரவியிருந்த அக்ரஹாரங்களில் எல்லாம் முஸ்லீம்கள் மாட்டிறைச்சி சுடும் நாற்றப்புகை நிரம்பிவிட்டது. தென்னை மரங்கள் இருந்த தோப்புகளில் எல்லாம் இப்போது மனிதத் தலைகளைத்

தாங்கிய கம்பங்கள் நின்றிருந்தன". இந்துக் கோயில்களின் நிழல்களுக்குக் கூட வரி விதிக்கப் பட்டதாகத் திருக்காளக்குடிக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இஸ்லாமிய ஆட்சியினர் தமிழக ஆட்சியாளரை மட்டும் மாற்ற முயலாது இந்து சமயத்தையும், பழம் பண்பாட்டையும் மாற்ற முயன்றனர். இது பழைய மரபுகளைக் காக்கும் புதிய இயக்கங்கள் தோன்றக் காரணமாக விளங்கியது.



**குறிப்பு**

## 7.7 வெளிநாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாடு

மத்திய காலத் தமிழகத்தில் கடல் வாணிபம் தழைத்துக் கொண்டிருந்தது. சங்க காலத்தின் இறுதியில் யவன வாணிபக் குறிப்பேட்டு எழுத்தாளர்களைப் போன்று, மத்திய காலத்தில் பல பயண எழுத்தாளர்களும், தூதர்களும் தமிழகத்துக்கு வருகை தந்துள்ளனர். பாண்டிய நாடு வழியாகப் பயணம் செய்த அவர்கள் பாண்டிய அரசர்களைப் பற்றியும், பாண்டிய நாட்டு மக்களைப் பற்றியும், அவர்களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றியும் விரிவான விவரங்களைத் தந்துள்ளனர். மார்க்கோபோலோவும், வாசபும் அவர்களுள் முக்கியமானவர்களாவார்கள்.

மாறவர்ம குலசேகரன் காலத்தில் மார்க்கோபோலோ பாண்டிய நாட்டுக்கு வந்தார். அவருடைய குறிப்பின்படி மாறவர்ம குலசேகரனின் ஆட்சி 40 ஆண்டுகள் நீடித்திருந்தன. அவ்வாட்சி வளமிக்கதாக இருந்தது; அரசின் கருவூலத்தில் 1200 கோடிப் பொன் சேமிக்கப்பட்டிருந்தது. அரசன் விலை உயர்ந்த அணிகளை அணிந்திருந்தான். மன்னனுக்கு மனைவியர் பலர் இருந்தனர். அவன் நீதி வழுவாது ஆட்சி செலுத்தி வந்தான். அவனுடைய பிரதிநிதிகள் பலர் பாண்டிய நாட்டில் ஆண்டு வந்தனர். மன்னனுடைய அவையில் அரபு நாட்டுத் தூதர் இடம் பெற்றிருந்தனர். (வாசப் என்ற பயணி சுந்தர பாண்டியனின் குடும்ப வரலாற்றையும் புதல்வர்களுடைய போட்டியையும் விளக்கமாக விவரித்துள்ளனர்.

அன்று காயல் சிறந்த துறைமுகமாக விளங்கியது. ஆர்மஸ், ஏடன் முதலிய துறைமுகப் பட்டினங்களிலிருந்து குதிரைகளேற்றி வந்த கப்பல்கள் காயலில் குழுமிக் கிடந்தன; அங்கே வணிகக் கூட்டத்தின் ஆரவாரமிருந்தது. வணிகர்களுக்கு மன்னனின் ஆதரவிருந்தது. வெளிநாட்டு வணிகர்கள் வருவதை மன்னர்கள் விரும்பினார்கள். அவர்களை வரவேற்று உதவினார்கள். எனவே காயலுக்கு வருவதை வணிகர்கள் விரும்பினார்கள். அவர்களை வரவேற்று உதவினார்கள். மாறவர்ம குலசேகரன் காலத்தில் காயலுக்கு வருகை தந்த இசுலாமியப் பயணி வாசபும் காயலின் வாணிப ஆரவாரத்துக்குப் புகழுரை வழங்கியுள்ளார். மலைகள் போன்ற கப்பல்கள் கடல்மேல் காற்றெனும் சிறகுகளை விரித்துப் பாண்டிய நாட்டுக்கு வந்து கொண்டே இருந்தன. சீனம், கேண்டேன், இந்து, சிந்து ஆகியவிடங்களிலிருந்து அரிய

பண்டங்களேற்றி வந்து குவித்தன. பாரசீக வளைகுடாமேல் உள்ள தீவுகள், துருக்கி, ஈராக்கு, சூறசான், ஐரோப்பிய நாடுகள் முதலியவற்றில் காணும் செல்வங்கள் பாண்டி நாட்டிலிருந்து பெற்றவைகள் என்பர்.

பயணிகளின் குறிப்புக்கள் சுவையான சமூகப் பழக்க வழக்கங்களைத் தருகின்றன. அரசன் தன்னுடைய கட்டான உடலில் எண்ணெய் மெழுகும் வழக்கை வைத்திருந்தான். மக்கள் உருவ வழிபாடு செய்தனர். வீடு முழுவதும் சாணம் பூசினர். அரசன் முதல் சாதாரண மக்கள் வரை அனைவரும் தரையில் அமருவர். அதைப் பெருமையாகக் கருதினர். எளிய ஆடையயை விரும்புகின்ற மக்கள் மேலாடை அணிவதில்லை. பாண்டிய நாடு முழுவதையும் தேடினாலும் தையற்காரனைக் காணமுடியாது. இரவில் தூங்கப் பிரம்புக் கட்டிலைப் பயன்படுத்தியவர்களுமிருந்தனர்.

மன்னன் மாலை அணிந்திருந்தான். அம்மாலை விலை உயர்ந்த கற்களாலானவை. அவன் காலையிலும் மாலையிலும் தவறாது கடவுளுக்குப் பூசை செய்தான். நாட்டு மக்கள் நீரில் குளித்து உடலைத் தூய்மையாக வைத்தனர். வலக்கையையே பயன்படுத்தி உண்டனர். நீர் பருகும்போது பாத்திரத்தை மேலே தூக்கி உதடுபடாமல் நீர் பருகினர். அயலார்களுக்குப் பாத்திரத்தில் நீர் கொடுப்பதில்லை. அவர்கள் இரு கைகளையும் சேர்த்துக் கோப்பை போல் வைத்து நீர் குடித்தனர். மக்களிடத்தில் வெற்றிலை பாக்கிடும் பழக்கமிருந்தது.

குற்றம் செய்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். மரண தண்டனை பெற்றவர்கள் தாமாக முன்வந்து தெய்வத்துக்குப் பலியாவது ஏற்கப்பட்டது. பெண்கள் மதிப்புடன் நடத்தப்பட்டனர். ஏழைப் பெண்கள் கூலி வேலை செய்தனர். ஆயர் குடியிலுள்ள பெண்கள் மோர், தயிர், வெண்ணெய் ஆகியவற்றைத் தலையில் சுமந்து கொண்டுவிற்றனர். பெண்கள் வயல்களில் நாற்று நட்டனர். மீனவப் பெண்கள் ஆண்கள் கொண்டுவந்த மீனைத் தலையில் சுமந்து விற்றனர். அரசுப் பணிகளில் பெண்கள் இடம் பெறவில்லை. பாண்டியநாட்டு மக்கள் சகுனம் பார்ப்பவர்களாகவும் சோதிடர்களை அணுகுபவர்களாகவுமிருந்தனர். கணவன் இறந்த பிரிவாற்றாமையால் உடன் இறக்கும் மகளிருமிருந்தனர்.

கோயில்களில் தொண்டாற்றும் பணிப் பெண்களும் கோயிலில் ஆடல் பாடலில் ஈடுபட்ட பெண்களுமிருந்தனர். பெற்றோர் தமக்குப் பிடித்தமான கடவுளரின் பணிக்காகத் தம் பெண் மக்களைக் கோயில்களுக்குப் பொட்டுக் கட்டிவிடும் வழக்கமிருந்தது. மடத்தில் வாழும் துறவிகள் தெய்வங்களுக்கு விழா எடுக்கும்போது ஆடல்பாடல்களில் தேறின தேவர் அடியார்களை அழைப்பது ஒரு சிறந்த வழக்கமாகியது.

## 7:9 தொகுத்துக் காண்போம்



1. முதலாம் பாண்டியப் பேரரசர்களின் பெயர்கள், வரலாறு அவர்கள் பெற்ற வெற்றிகள் குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
2. இரண்டாம் பாண்டியப் பேரரசு மன்னர்களின் பெயர்கள் வரலாறு, கொடை, வெற்றிகள் குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
3. வெளிநாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாட்டின் பொருளாதாரம், வளர்ச்சி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 7.8 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. முதல் பாண்டியப் பேரரசின் தோற்றம் வளர்ச்சி குறித்து எழுதுக.
2. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பற்றி விளக்குக.
3. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் பெற்ற வெற்றிகள் குறித்துக் கட்டுரை வரைக.
4. பாண்டியர்களின் வீழ்ச்சிக்கான காரணம் குறித்து வரைக.

## 7.9 மேலும் அறிந்துகொள்ள

கே.வி.இராமன் - பாண்டியர் வரலாறு

கு.சேதுராமன் - தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு

# கூறு:8

# விசயநகர மன்னர்கள் - நாயக்க மன்னர்கள் - வரலாறு நாயக்கர்களின் பாளையப்பட்டு ஆட்சிமுறை, நாயக்கர் வளர்த்த கலையும் இலக்கியமும் தமிழகத்தில் மராட்டியர் ஆட்சி

## 8:1 முன்னுரை

வட இந்தியாவில் இசுலாமியர் ஆதிக்கம் நிலை கண்டது. இதன் விளைவாக மக்கள் பலரும் இசுலாமியராக மாறத்தலைப் பட்டனர். இசுலாமைத் தழுவி சுல்தானின் நன்மதிப்பைப் பெற்றிருந்த அரிகரர்

புக்கர் தம் சமயத்தைக் காக்க விசயநகரத்தில் ஆட்சியைத் தொடங்கினர். அதனால் இந்து சமயம் மறுமலர்ச்சி பெற்றது.



## 8:2 குறிக்கோள்கள்

குறிப்பு

- விசய நகர மன்னர்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- நாயக்க மன்னர்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- நாயக்கர்கள் வளர்த்த கலை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- தமிழகத்தை ஆண்ட மராட்டியர் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 8.3 தமிழகத்தில் விசயநகரத்தின் ஆதிக்கம்

**விசயநகரத்தின் தோற்றம்:**

வட இந்தியாவில் வெற்றிகண்ட முசுலீம் ஆதிக்கம் விந்திய மலையைத் தாண்டி வழிந்தது. அலாவுதீன் காலத்தில் மாலிக்காபூர் தக்காணத்திலும் தமிழகத்திலும் படையெடுத்து வெற்றி நடையிட்டான். வடக்கிலிருந்து முன்னேறி மோதிக்கொண்டிருந்த முசுலீம் படையெடுப்பாளர்களுக்கு எதிராகத் தக்காணத்தில் யாதவ குலத்து இராமச்சந்திரனும், காகதீயக் குலத்து இரண்டாம் பிரதாபருத்திரத்தேவரும் வீரத்துடன் போராடி நின்றனர். இதற்கு மாறவர்மன் குலசேகரபாண்டியனும் துணை நின்றான். இரண்டாம் பிரதாபருத்திரத் தேவர் கி.பி.1132-இல் தோல்வியுற்றவுடன் முசுலீம்கள் தக்காணத்திலும் தமிழகத்திலும் முன்னேறி வெற்றி கண்டனர். பாராந்தகப் பாண்டியன் சிறை பிடிக்கப்பட்டு டில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டான். மாபார் (மதுரையின் வடக்கு) துக்ளக் பேரரசின் 23ஆவது மாநிலமாகியது.

புதிய படையெடுப்பாளர்கள் எதிரில் கண்டவற்றைத் தரைமட்டமாக்கினர். நாட்டு மக்கள் வெட்டி வீழத்தப்பட்டனர் என்று முசுலீம் எழுத்தாளர்கள் குறித்துள்ளனர். தென்னை மரங்கள் அகற்றப்பட்டுக் கழுமரங்கள் நடப்பட்டன. வேள்விப்புகை கண்ட அக்கிரகாரங்கள் மாமிசம் வறுக்கும் புகையை எழுப்பின இந்நிலையில் பிரதாபருத்திரனின் மறைவுக்குப் பின் அவனுடைய நிர்வாகப் பணியாளர்களாக இருந்து சுயாட்சி ஏற்படுத்திய நாயக்கர்களில் சிலரும், போசளர்களும் கொதித்து எழுந்தனர். தென்னகத்தை முசுலீம்களிடத்திலிருந்து மீட்க முயன்றனர். வாராங்கலை ஆண்ட காபாய நாயக்கனும், போசள மன்னன் மூன்றாம் வல்லாளனும் சிறிது வெற்றி கண்டனர். தமிழகத்தில் தொண்டை மண்டலத்தை மீட்டனர். திருவண்ணாமலையில் படையை நிலைபெறச் செய்தனர். திருச்சி, கண்ணனூர் குப்பத்தை மீட்கும் நிலையில் வல்லாளன் கொல்லப்பட்டான்(1341). வைக்கோல் திணிக்கப்பட்ட அவன் உடல் 1342-இல் மதுரை மதிற்சுவரில் தொங்கவிடப்பட்டது. வீரவல்லாளனைப்

போன்று கம்பிலி தேசத்தில் கம்பிலிதேவன் முசுலீம்களுக்கு எதிராகப் போராடித் தோற்று உயிரையும் நாட்டையும் இழந்தான். காகதீயா்களின் வீழ்ச்சிக்குப் பின் கம்பிலியில் அதிகாரிகளாக இருந்த. அரிகரனும் புக்கனும் கம்பிலிதேவனின் உறவினா்கள் 1327-இல் சிறைபிடிக்கப்பட்டு டில்லிக்குக் கொண்டு கொல்லப்பட்டனா். அவா்கள் அங்கே இசுலாமைத் தழுவி, சுல்தானுக்கு நம்பிக்கையுடைய அதிகாரிகளாக மாறினா்.

குறிப்பு

கம்பிலி முசுலீம் ஆட்சியில் நசுங்கியது. அடக்குமுறைகளைப் பொறுக்க முடியாத மக்கள் கொதித்து எழுந்தனர். வரி கொடுக்காது. முசுலீம் ஆட்சியைப் புறக்கணித்தனா். மக்களின் கொதிப்பையும் குமுறலையும் கண்ட ஆளுநா் நிலைமையை டில்லிக்கு எழுதினாா். நிலைமையைச் சரிக்கட்டும் வழிதேடிக் கம்பிலியில் முன்னாள் கருவூல அதிகாரிகளாக விளங்கிய அரிகரன், புக்கன் ஆகியவா்களை டில்லியிலிருந்து கம்பிலியின் நிா்வாகத்துக்கு அனுப்பினா்; முசுலீம் ஆட்சி அங்கே தொடா்ந்தது.

இசுலாமைத் தழுவி, சுல்தானின் நன்மதிப்பைப் பெற்றிருந்த அரிகரனுக்கும், புக்கனுக்கும் நல்லகாலம் பிறந்தது. அமைதி ஏற்படுத்துவா் என்ற நம்பிக்கையில் சுல்தான் அவா்களைக் கம்பிலிக்கு அனுப்பினான். கம்பிலியை அடைந்த அவா்களுக்கு வித்யாதரணியரின் பின்பலம் கிடைத்தது. அவா்களும் அதைப் பயன்படுத்தி இசுலாமைக் கைவிட்டனா். வித்யாதரணியரின் ஆசிபெற்று மதம் மாறினா். இந்து சமயக் காவலா்களானாா்கள். மக்களின் பின்பலத்தைப் பெற்று ஆனைகுந்திக்கு எதிரில் துங்கபத்திரைக் கரையில் வெற்றி நகரம் அமைத்து 1336-இல் விசயநகர அரசை நிறுவினா். குககாத்திய பிரதாபருத்திரனின் நிா்வாக முறையைத் தழுவி விசயநகரத்தை ஆண்டனா்.

## 8.4 தமிழகத்தில் விரிவடைதல்

விசயநகரில் அரிகரரின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது போசள மன்னை மூன்றாம் வல்லாளன் கா்நாடகத்திலும் தமிழகத்திலும் முசுலீம்கள் மீது வெற்றி கண்டு கொண்டிருந்தான். தொண்டைமண்டலத்தை மீட்டுச் சம்புவராயா்களின் பொறுப்பில்விட்டான். திருவண்ணாமலையில் துணை இருக்கை வைத்துப் படையை நிலைபெறச் செய்தான். அவன் 1341-இல் கண்ணனூரில் மடிந்ததும், அரிகரன் போசளா் பகுதிகளைக் கைப்பற்றி முன்னேறினான். விசயநகரம் விரிவடைந்தது. அரிகரன் தக்காணத்தின் தெற்கிலும், தமிழகத்தின் வடக்கிலும் அதிகார விரிவாக்கம் நடத்தினான்.

அரிகரனின் தம்பியும் துணையரசனுமாகிய புக்கன் முசுலீம்களுக்கு எதிராகத் தமிழத்தில் படைசெலுத்தியுள்ளான். புக்கனின் புதல்வன் குமாரகம்பணன் விடுபாடு அகற்றும் பொறுப்பை ஏற்றிருந்தான். கம்பணனின் படை முசுலீம் நாட்டுமக்களைப் பேணிய

இராசநாராயண சம்புவராயனை கி.பி.1363-அளவில் தோற்கடிதத்து. கம்பணனுக்கு மாரப்ப நாயக்கரின் உதவி கிட்டியது. மதுரை சுல்தான்களை அகற்றக் கடும் போர் நிகழ்த்தப்பட்டது. கம்பணன் மதுரை சுல்தான் முபாரக்சாவை போர்க்களத்தில் நேருக்கு நேர் சந்தித்தான். குதிரை மீதிருந்து திறமையாகப் போராடிய அவன் முபாரக் சாவின் தலையை வெட்டி எடுத்தான். இதன்பின் சுல்தானின் உறவினன். அலாவுதீன் சிக்கந்தர்சா மதுரையைவிட்டு வெளியேறினான். வேறு பகுதியில் சுல்தானிய ஆட்சியைத் தொடர்ந்தான். மதுரை தற்காலிகமாக மீட்கப்பட்டது.

## 8.5 தமிழகத்தில் குமார கம்பணனின் ஆட்சி

தென் மண்டலத்தில் விசய நகரத்தின் மகா மண்டலேசுவரனாகக் குமார கம்பணன் விளங்கினான். சோமப்ப நாயக்கர்களை மகாபிரதானியாகப் பெற்றிருந்தான். காஞ்சி துணை இருக்கையாக்கப்பட்டது. சுல்தானிய ஆட்சிக்குப்பின் பதவியில் அமர்ந்த குமாரகம்பணன் இந்து ஆலயங்களை வழிபாட்டுக்கு மீட்பதில் அதிகம் கவனம் செலுத்தியுள்ளான். ஆலயப் பணியாளர்களுக்கும், பிராமணர்களுக்கும் உண்டியும் உறையுளும் வழங்கி வசதி செய்தான். தன்னுடைய சொந்தச் சார்பில் ஆலயங்களுக்குக் கொடை வழங்கினான் என்று தமிழகத்தில் கிட்டிய சாசனங்களால் அறிகின்றோம். ஆலயப் பணியாளர்களிடமிருந்து போட்டி அகற்றுதல், பழைய பணியாளர்களை அகற்றிவிட்டுப் புதிய பணியாளர்களை நியமித்தல் போன்ற ஆலய நிர்வாகத் திருத்தப் பணிகளும் செய்துள்ளான். ஆலயக் கட்டாயப் பணியாளர்களாகக் கைகோளர்களைப் பயன்படுத்தியுள்ளான். கி.பி.1374க்கு முன் கம்பணன் தந்தையின் வாழ்நாளிலேயே இறந்துவிட்டதால் குமாரகம்பணனின் ஆட்சி இடையில் முடிவுற நேர்ந்தது.

கி.பி.1378-இல் இரண்டாம் புக்கன் மதுரைமீது படையெடுத்து அலாவுதீன் சிக்கந்தரைத் தோற்கடித்து, மதுரையில் முசுலீம் ஆட்சியை இறுதியாக ஒழித்தான். 1377 முதல் 1404 வரை விசய நகரத்தை ஆண்ட இரண்டாம் அரிகரனின் காலத்தில் விசயநகரம் விரிவடைந்தது. அவன் நாட்டைப் பல மண்டலங்களாகப் பிரித்தான். தமிழகத்திலிருந்து விசயநகரப் பிராந்தியம் வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை மண்டலாதிபதியாகவிருந்தான். அவன் இராமேசுவரத்தில் துலாபார விழா எடுத்தான்.

இரண்டாம் தேவராயர் காலத்தில் விரிவான படையெடுப்பு நடைபெற்றது. வடக்கிலும், தமிழகத்திலும் கேரளத்திலும் இலங்கையிலும் அவன் வெற்றி கண்டான் என்று அப்துல் இரசாக் கூறுகின்றார். இலங்கைப் படையெடுப்பு மதுரையில் இருந்த இலக்கண்ண தண்டநாயக்கன் உதவியுடன் நடைபெற்றது. தமிழகம் முழுவதும் விசயநகரத்தின்கீழ் வந்தது.

தேவராயர் காலத்தில் நிர்வாக முறையில் படிப்படியான மாறுதல் தோன்றியது. விடுபாடு முதலிய அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் மண்டலாதிபதிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். இம்முறை மாறியது விரைவில் குறுநிலப் பகுதிகளில் நாயக்கர்கள் என்ற ஒருவகைப் படைமானிய நிர்வாகிகள் அமர்த்தப்பட்டனர். 1403முதல் 1446 வரை இலக்கண்ண நாயக்கரும் மாடண்ண நாயக்கரும் விசயநகரத்தின் சார்பில் மதுரையில் ஆட்சிப்பொறுப்பிலிருந்தனர்.



குறிப்பு

## 8.5.1 ஒட்டர்களின் குறுக்கீடும் பிற தாக்குதல்களும்

இரண்டாம் தேவராயர் காலத்தில் ஒட்டர்கள் (கலிங்கர்) விசயநகரத்தைத் தாக்கினார். ஆனால் இது முறியடிக்கப்பட்டது. எனினும் ஒட்டர்கள் ஓயவில்லை. கபிலேசுவர கசபதி விசயநகரத்துக்குச் சொந்தமான இடங்களைக் கைப்பற்றிக் கொண்டிருந்தான். 1463-இல் அவன் காஞ்சி, திருச்சி, திருவாரூர் ஆகியவிடங்களில் படையெடுத்து முன்னேறினான். ஒட்டர்கள் திருச்சி முதல் கங்கை வரை ஆதிக்கம் செலுத்தினர். ஆனால் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டையாகிய பகுதிகளைத் திருமலைத் தேவன் என்ற மண்டலாதிபன் சுதந்திரம் பெற்று ஆண்டான். திருக்கோயிலூர் வட்டம், ஒட்டர் ஆதிக்கத்தில் இருந்தது. விசயநகரத்தில் உள் பூசல்களும், அரசுரிமைப் போட்டிகளும், அரசுகளின் முறைகேடுகளும் மலிந்து நடுவண் அரசு சிதைவுப் பாதையை நோக்கியது. அவ்வமயம் சலுவகோல திம்மா, சலுவ நரசிம்மா போன்ற ஆளுநர்களுடன் தமிழகத்தை ஆண்ட திருமலை தேவமகாராசனும் பேரரசுக்குத் துணை நின்று சிதைவைத் தவிர்த்தனர். ஒட்டர்களின் படையெடுப்பைத் தொடர்ந்து தமிழகத்தின் வடக்கில் வாணர்கள் வலிமை பெற்றுப் புவனேக வீரன் சமரகோலாகலன் தலைமையில் காஞ்சியை 1369-இல் கைப்பற்றினார்கள். விசயநகரத்தின் தென்மண்டலத்தின் ஒரு பகுதி ஒட்டர்கள் வாணர்கள் முதலியோர் குறுக்கீட்டுக் குள்ளாகியது. எனவே சந்திரகிரி ஆளுநர் சலுவ நரசிம்மன் வாணர்களைத் தோற்கடித்துப் பணியவைத்தான். சலுவ நரசிம்மன் தமிழகத்தின் வடக்கில் ஆளுநராக இருந்தான். (1452 முதல் 1485வரை) இவனுடைய ஆளுநர் பதவிக் காலத்தில் பாமினி சுல்தான் மூன்றாம் முகமது கர்நாடகப் பகுதியைத் தாக்கி காஞ்சி வரை முன்னேறினான். காஞ்சி தரைமட்டமானது. பெரும் செல்வங்களுடன் திரும்பிய முசுலீம் படையை நரசிம்மனின் படை மறித்துப்பொருட்களை மீட்டது. 1485க்குப் பின் அரசியல் சூதாட்டங்களில் வெற்றிகண்டு விசயநகர ஆட்சியைப் பெற்றான். அவனுக்கு நரசநாயக்கனின் அரியபணி கிட்டியது. இந்த நரசநாயக்கன் சாளுவ நரசிம்மனுக்குப் பின் கிருஷ்ணதேவராயனுக்குத் தளபதியாகச் செயல்பட்டான்.

இந்தச் சாலுவ நரசிம்மன் காலத்தில் தமிழகம் ஒட்டர் ஆதிக்கத்திலிருந்தும், வாணர் ஆதிக்கத்திலிருந்தும் மீட்கப்பட்டது. பாமினி சுல்தான் மூன்றாம் முகமதின் தமிழகம் மீதான

படையெடுப்பையும் சந்தித்தது. அவனுக்கு நரசநாயக்கனின் தந்தை ஈசுவர நாயக்கனின் உதவியுமிருந்தது.



1491-இல் சலுவ நரசிம்மன் இறந்ததும் அவனுடைய அமைச்சன் நரசநாயக்கன் பதில் ஆளுநர் பதவிக்கு உயர்ந்தான். சலுவ நரசிம்மன் ஆட்சிக் காலத்தில் தென் மண்டலத்தின் நிலை கெட்டது. 'கிளர்ச்சிகள் தலைதூக்கின. வாணர்கள் பணிய மறுத்தனர். தென்காசிப் பாண்டியர்களும் திறை செலுத்துவதை நிறுத்தினர். திருச்சிப்பகுதியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திருவரங்கத்து வைணவர்களுக்குப் பாதகமாக நடந்தான். கோயில் சொத்துக்களைச் சென்னப்ப நாயக்கனுக்குக் கொடுத்ததுடன் கோயில் வருவாயில் பங்கும் பெற்றான். அவன் சீரங்கத்து வைணவர்களை எதிர்த்தான் என்றும், திருவானைக்காவல் சைவர்களுக்குத் துணை நின்றான் என்றும் கோவில் ஒழுகு காட்டுகின்றது. எனவே கந்தாடை இராமானுசம் நரசநாயகனுக்குப் புகார் கொடுத்தான். நரச நாயக்கன் தமிழகத்தில் வெற்றிஉலா நடத்தினான். கோனேரிராசன் அவனை எதிர்த்துப் போரிட்டான். ஆனால் தோல்விகண்டு சிறைக்குச் சென்றான். சீரங்கத்துக் கோயில் நிலங்கள் கோயிலுக்குத் திரும்பக் கிட்டின. வைணவர் குறைகள் அகற்றப்பட்டன. அதன் பின்னர் நரசநாயக்கன் காவிரியைத் தாண்டிச் சென்றான். அங்கே வாணர்கள் விரிவடைந்திருந்தனர். அவர்களும் ஒடுக்கப்பட்டனர். மதுரையில் பணிய மறுத்த மன்னனின் கொட்டத்தை அடக்கினான். தென்காசிப் பாண்டியர்களின் பணிவும் கிட்டியது. தமிழகம் வரவேண்டும் என்ற அவனுடைய எண்ணம் நிறைவேறியது. சோழ பாண்டிய மன்னர்கள் குறுநில மன்னர்களாக விசய நகரத்துக்குப் பணிவு காட்டி வந்தனர் என்றாலும் அவர்கள் மன்னர்களாக மதிக்கப்படவில்லை. அவர்கள் ஆளுநர் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

நரசநாயக்கன் 1503-இல் மறைந்தான். அவனுடைய புதல்வன் இம்மடி நரசநாயக்கன் தன் தந்தைக்குப்பின் பதில் ஆளுநர் பதவியை ஏற்றான். 1505-இல் அரச பதவியை எட்டினான். வீர நரசிம்மன் என்ற பெயரில் ஆண்டான். இவன் காலத்தில் சீரங்கம், சிதம்பரம், கும்பகோணம், இராமேசுவரம் முதலிய ஆலயங்களுக்குத் தானங்கள் வழங்கினான்.

வீர நரசிம்மன் 1509-ல் மறைந்ததும் கிருட்டிண தேவராயன் விசயநகரப் பேரரசன் ஆனான். விசயநகரத்தில் தோன்றிக் கொண்டிருந்த அரசியல் சூதாட்டங்களின் விளைவாகத் தமிழகத்தில் அன்று கலகங்களும் நாயக்க தானங்களில் சுயாட்சி இயக்கங்களும் மலிந்து கொண்டிருந்தன. எனவே கிருட்டிணதேவராயன் தமிழகத்தில் படையெடுக்க வேண்டி வந்தது. கர்நாடக ராசர்கள் சவுசுத்தார சரிதம் என்ற நூலின்படி' (நாராயணக் கோன் இயற்றியது) வையப்பநாயக்கன், கிருஷ்ணப்ப நாயக்கன், விசயராகவ நாயக்கன், வெங்கடாத்திரி நாயக்கன் ஆகிய நாலு தலைவர்கள் வேலூர், செஞ்சி முதலிய

இடங்கள் வழியாகப் படைசெலுத்தி வந்தனர். தொண்டை மண்டலத்து நாயக்கர்களையும் பணியவைத்து விசயநகரத்தின் மேலாதிக்கத்தை ஏற்கச் செய்தனர். காவிரிக்குத் தெற்கிலிருந்த தென் மண்டலத்தையும் மண்டலேசுவரரின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தனர். செஞ்சியில் வையப்ப நாயக்கனும், தஞ்சையில் விசயராகவ நாயக்கனும் தெற்கில் வெங்கடப்ப நாயக்கனும் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டனர். இதன் விளைவாக விசயநகரப் பேரரசின் தென்பிராந்தியமாகிய தமிழகம் (1) சந்திரகிரி ராச்சியம், (2) படைவீடு ராச்சியம் (இராசகம்பீர ராச்சியம்) (3) திருவதிகை ராச்சியம் (4) சோழ ராச்சியம் (5) பாண்டிய ராச்சியம் என்ற ஐந்து அரசியல் பிரிவுகளால் ஆளப்பட்டது. மதுரை மண்டலத்துக்குத் தெற்கில் பாண்டியர்கள் தென்காசியிலும், திருவடிகள் வேணாட்டிலும் விசய நகரத்துக்கு உட்பட்டு ஆண்டனர் நாயக்கர்களுக்கும் மண்டலாதிபதிகளுக்கும் மேலாக அரசப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். தமிழகத்தில் வீரநரசிங்க நாயக்கன் (செல்லப்பா) 1510 முதல் மகரமண்டலாதிபராகச் செயலாற்றினான். இவன் பேரரசரின் பாரட்டுதலையும் பெற்றான். காஞ்சீசுவரர் என்றும் சுவாமி செல்லப்பா என்றும் புகழப்பட்ட இவனுடைய பெயரில் திருப்பத்தூர் வட்டத்தில் நாராயணமங்கலமும், காரையூரும் செல்லப்புரம் என்று பெயரிடப்பட்டு அங்குள்ள சிவாலயத்துக்கு நிவந்தமாக அளிக்கப்பட்டது. கிருட்டிண தேவராயனின் மறைவுக்குப்பின் அச்சுதராயன் அரசு கட்டிலேறச் செல்லப்பா துணை நின்றான். ஆனால் வெகு விரைவில் பரமக்குடி தும்பிச்சி நாயக்கருடனும், வேணாட்டடிகளுடனும் சேர்ந்து சூழ்ச்சியில் ஒடுக்க அச்சுதராயன் தயங்காததால் செல்லப்பா வேணாட்டில் அடைக்கலம் பெற்றான். இதே காலத்தில் வேணாட்டு வீரமார்த்தாண்டன் திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டதால் சீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் அச்சுதராயனிடத்தில் முறையிட்டான் தனக்கு எதிராகக் கிளம்பிய மகாமண்டலேசுவரனையும், நாயக்கர்களையும், வேணாட்டடிகளையும் தண்டிக்கும் பொருட்டு அச்சுதராயரின் தலைமையில் பேரரசுப் படை தமிழகத்தில் பாய்ந்து முன்னேறியது சீரங்கம் வந்ததும் அச்சுதராயர் அங்கே இருக்கை பெற்றான். தளபதி திருமலையின் தலைமையில் அப்படை மதுரையைத் தாண்டி முன்னேறியது. வேணாட்டுப் படையைத் திருநெல்வேலியின் தாமிரபணிக் கருகில் சந்தித்து அங்கே நடைபெற்ற போரில் புலிபூதலவீரன் தோற்றுச் சரணடைந்தான் செல்லப்பாவையும் ஒப்படைத்தான். அச்சுதராயன் செல்லப்பாவை மன்னித்தான்.

1542-ல் அச்சுதராயன் மறைந்த பின்னர் சதாவசிராயன் பதவிக்குக் கொண்டு வரப்பட்டான். அவனுடைய பகர ஆளுநர் இராமராயர் அவன் சிறுவயது என்பதால் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருந்தார். நாயக்கத் தலங்கள் சுயாட்சிப் பகுதிகளாயின. தென் மண்டலத்தில் போர்த்துக்கீசியர்களின் தொல்லை இருந்தது. வேணாட்டடிகள் கிறித்தவர்களுக்குச் சலுகை காட்டி வந்தான். இவற்றை இராமராயர் விரும்பவில்லை. விசய நகரத்தின் மேலாதிக்கத்தைப் புறக்கணித்த

நாயக்கர்களையும் வேணாட்டடிகளையும் கட்டுப்படுத்தவும் போர்த்துகீசியர்களின் தொல்லையை ஒழிக்கவும் வித்தலராயன், சின்னத்திம்மன் ஆகியவர்களின் தலைமையில் படை அனுப்பப்பட்டது. அப்படை தென்னகத்தில் படை எடுத்துச் சென்றது. தூத்துக்குடியில் புன்னக்காயலில் இருந்த போர்த்துக்கீசியர்களின் மீது வெற்றிகண்டது. மதமாற்றம் பெற்ற பரதவர்களுக்கு இடமளிக்க வேணாட்டுத் திருவடிகளின் மீது படையெடுத்தான். சுசீந்திரம் கோட்டாறு முதலிய இடங்களைக் கைப்பற்றினான். வேணாட்டுத் திருவடிகள் சரணடைந்தான். இதன் பின்னர் வித்தலராயன் தென் மண்டலங்களின் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டான். அன்று விசுவநாத நாயக்கனின் பொறுப்பில் மதுரை இருந்தது. தமிழகத்து மண்டலாதிபதிகளும், நாயக்கர்களும், பாண்டியர்களும், வேணாட்டடிகளும் விசய நகரத்தின் ஆதிக்கத்தை ஏற்று நடந்தனர்.

1565-இல் தலைக்கோட்டையில் விசயநகரப்படை கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டது. இராமராயர் கைது செய்யப்பட்டு அவருடைய தலை துண்டிக்கப்பட்டது. ஆனால் அவருடைய தம்பி திருமலை தப்பித்துக் கொண்டான். அவன் சதாசிவ இராயனைக் காப்பாற்றினான். அரண்மனைப் பொக்கிசத்துடன் பெனுகோடா என்ற இடத்தில் பதுங்கினர். அங்கிருந்து கொண்டு பேரரசைச் சிதையாது காக்கப் பெரு முயற்சி எடுத்தனர். எனினும் ஆறு ஆண்டு காலம் குழப்பநிலை நிலவியது. சதாசிவராயனுக்குப் பின் திருமலை அரசன் ஆனான். அவனுக்கு நாயக்கர்களின் துணையும் இருந்தது. அவன் சிதைந்து கொண்டிருந்த பேரரசைப் பேண, நிர்வாக முறையைச் சீர்திருத்தினான். பேரரசை மூன்றாகப் பிரித்து அவனுடைய புதல்வர்களை அரசப் பிரதிநிதிகளாக நியமித்தான். சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்ட தென் பிராந்தியத்துக்கு அவனுடைய புதல்வன் வெங்கடன் அரசப் பிரதிநிதி ஆனான். தென்பிராந்தியத்தில் செஞ்சி, சோழநாடு (தஞ்சை), பாண்டிய நாடு (மதுரை) ஆகிய மண்டலங்கள் உட்பட்டன, என்றாலும் விசயநகரத்தின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு செஞ்சியிலும், தஞ்சையிலும், மதுரையிலும் ஆண்ட நாயக்கர்கள் தத்தம் நாட்டில் சுயாட்சி பெற்ற மன்னர்களாக மாறினர். பேரரசன் திருமலைக்குப்பின் பேரரசு பங்கிடப்பட்டு வேலூரில் வெங்கடபதி ஆட்சிக்கு வந்தான். இதற்குப்பின் அரசிருக்கைப் போட்டி தலைதூக்கியது. கி.பி.1616-ல் தோப்பூர் போரில் மேலும் பலவீனமடைந்த பேரரசின் போட்டியை நாயக்கர்கள் பயன்படுத்தினர். மூன்றாம் சீரங்கன் காலத்தில் விசயநகர ஆட்சி முடிவுக்கு வந்தது.

## 8.5.2 கலை இலக்கியம்

விசயநகர அரசு இசுலாமைத் தடுப்பதற்கெனத் தோன்றியதாகும். இந்து சமயத்தைப் பேணவும் காக்கவும் கோயில்கள் எழுப்பவும் அறப்பணிகள் செய்யவும் அக்கறை காட்டியது. சீரங்கம், சிதம்பரம்,

காஞ்சி, கும்பகோணம், மதுரை, இராமேசுவரம் முதலிய ஆலயங்கள் சீரமைக்கப்பெற்றுத் தானங்களையும் பெற்றன. கட்டடப்பணியுடன் கலைப் பணியும் வளர்ந்தது. மதுரை சிறந்த கட்டடக்கலைக்கு விளக்கமளித்தது.



வேதாந்த தேசிகரின் விளக்கநூல்கள் இக்காலத்தில் தோன்றின. சங்கரரின் வழிநின்ற அத்வைதிகளும், ஆகமங்களைப் போற்றும் பாகதர்களும் இருந்தனர். வைணவர்களிடையே வடகலை தென்கலை பாகுபாடு திட்டவட்டமாக ஏற்பட்டது. வேதத்தின் வழிநின்றவர்கள். வடகலையினர். தமிழ்ப் பிரபந்தங்களைப் போற்றக்கூடியவர்கள் தென்கலையினரு மாயினர். இத்தகைய சமயப்பற்று அறப்பணியுடன் ஆலயப் பணிகளுக்கும், கலைத் தொண்டுக்கும் இலக்கியப் படைப்புக்கும் ஊக்கமளித்தது.

விசயநகர அரசர்களின் ஆட்சி ஒரு தெலுங்கு நாட்டார் ஆட்சியாக விளங்கியது. அவர்களுடைய ஆட்சியில் தெலுங்கு இலக்கியம் வளம் பெற்றது.

தமிழகத்தில் விசயநகர ஆட்சி பாதுகாவலை அளித்தது. அதனால் அமைதி நிலவியது. எனவே கலையும் இலக்கியமும் வளர்ச்சி அடைந்தன. சிற்றம்பல நாடிகள் என்ற புலவரும், இரட்டைப் புலவர்களும் காளமேகப் புலவரும் இக்காலத்தில் (15ஆம்நூற்றாண்டில்) வாழ்ந்தனர். 16-ஆம் நூற்றாண்டின் துவக்கம் தலைவர்கள் பெரிதும் பாராட்டப்பட்ட காலம். கிருஷ்ண தேவராயர் புலவராகவும் புரவலராகவும் இருந்த காலமது. தமிழகத்தில் பல்வேறு புலவர்கள் தோன்றினர். திருமலைநாதர் சிதம்பரத்தில் வாழ்ந்தார். சிதம்பர புராணத்தையும், மதுரைச் சொக்கநாதர் உலாவையும் அவர் படைத்தார். செவ்வைச்சூடுவார் என்ற புலவர் பாகவதத்தைப் பாடினார். சிவப்பிரகாசம் என்ற தத்துவ நூலை இயற்றிய சிவப்பிரகாசர் திருவாரூரில் வாழ்ந்தார். இக்காலத்தில் தலபுராணங்கள் பெருகின. ஆரிதாசர் என்ற அதிகாரி இருசமய விளக்கம் என்னும் நூலை இயற்றினார். காஞ்சியில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் கச்சிக் கலம்பத்தைப் பாடினார்.

## 8.6 மதுரை நாயக்கர்கள்

மதுரை நாயக்கர்கள் பற்றிய வரலாற்றினை நெல்சன் என்பவர் எழுதிய மதுரை வரலாற்றிலிருந்து நன்கு அறிந்து கொள்ளலாம். இவர்களது ஆட்சிக்காலம் 1529 முதல் 1736 ஆம் ஆண்டுவரை நீடித்திருந்தது என்று பேராசிரியர் சத்திய நாதய்யர் கருதுகின்றார்.

(1) **விசுவநாத நாயக்கர் (1529 1564)**

கிருஷ்ண தேவராயரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரிகளில் ஒருவர்தான் நாகமநாயக்கர். அவரது மைந்தன் விசுவநாத நாயக்கர் ஆவர். தந்தையைப் போல் தனயனும் திறமையானவர். எதையும் சிந்தித்துச் செயல்படும் மனப்போக்கு கொண்டவர். இவர் தென்னாட்டின் ஆளுநராக்கப்பட்டார். அவரது கீழ்ப்படிதல், ஆற்றல் இவற்றை கண்டு ராயர் அவருக்கு 'பாண்டிய நாட்டின் தலைவன்' என்றும் தென்னக முடியின் தலைவன்' என்றும் பட்டம் அளித்தார்.

**வெற்றிகள்:**

(1) விசுவநாதர் ஐந்து பாண்டியர்களை முறியடித்தார்.

(2) கம்பம், கடலூர்ப் போரில் விசுவநாதரின் தளபதி ராம பத்ர நாயக்கர் பெருவெற்றி பெற்றார். அந்தப் பகுதிகளின் தலைவர்கள் படுதோல்வி அடைந்தனர்.

**எல்லை:**

இவரது ஆட்சியில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, கோவை, சேலம் பகுதிகளும், திருவாங்கூர் பகுதியும் அடங்கியிருந்தன.

## 8.6.1 ஆட்சிமுறை

**(i) பாளையங்களின் தோற்றம்**

இவரது நிர்வாக முறைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு பாளையங்களின் தோற்றமாகும். பாளையப்பட்டு ஆட்சி முறையினை முதன் முதலில் தமிழகத்தில் கொண்டுவந்தவர் விசுவநாதன். இவர் தமிழகத்தில் 72 பாளையங்களை ஏற்படுத்தினார். இதன் தலைவர்கள் பாளையக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பாதுகாப்பு, படை முதலியவற்றைப் பராமரித்து வந்தனர். நிதி சார்பான அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். வருவாயில் மூன்றில் ஒரு பங்கினைத் திறையாகச் செலுத்தினர். மைய அரசு வெளியார் தாக்குதலுக்கு உள்ளாகும் போது தமது படைகளை அனுப்பினர்.

## 8.7 விசுவநாதரின் பணிகள்

(1) நாட்டில் அமைதி, ஒழுங்கு முதலியவற்றை நிலைநாட்டினார்.

(2) பொருளாதாரச் சீர் குலைவினைப் போக்க வேளாண்மையில் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டார்.

(3) காடுகள் அழிக்கப்பட்டு விளை நிலங்களாக மாற்றப்பட்டன: பாழடைந்த நிலங்கள் பயிரிடக் கூடிய நிலங்களாக மாற்றப்பட்டன.
(4) நீர்ப்பாசன முறைக்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இதனால் நாடு வளமும் நலமும் பெற்றது.
(5) மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் செப்பனிடப்பட்டது.

### 8.7.1 தளவாய் அரியநாத முதலியார்:

விசுவநாதரின் வெற்றிகளுக்கும் அவரது பெருமைக்கும் பெரிதும் துணைநின்றவர் தளவாய் அரியாத முதலியாரவார். இவர் விஸ்வநாதரின் தந்தை காலத்திலேயே பணியாற்றியவர். மதுரைக்கும், மதுரை நாயக்கரின் மேன்மைக்கும் தான் இறக்கும் வரை அயராது பாடுபட்டவர் அரியநாதர் என்றால் அது மிகையாகாது.

### 8.7.2 தளவாய் என்பதன் விளக்கம்

தளவாய் என்பவர் அமைச்சர் பதவியினையும் தளபதி பதவினையும் ஒருங்கே பெற்ற அதிகாரியாவார். அவர் சிவில் நிர்வாகம், இராணுவ நிர்வாகம் ஆகிய இரண்டிற்கும் தலைவர் ஆவார். அரியநாதமுதலியார் என்பவர் முதல் தளவாயாக விசுவநாதன் காலத்தில் திகழ்ந்தார்.

அரியநாத முதலியார் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள மெய்ப்பேடு என்ற ஊரில் தொண்டை மண்டல வேளாளர் குடும்பத்தில் பிறந்தார். அவர் பிறந்த ஆண்டு 1515 ஆகும். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்பதற்கு ஏற்பத் தன் உழைப்பால் உயர்ந்தவர். இவர் தளவாய், பிரதானி போன்ற உயர்ந்த பதவிகளைப் பெற்றவர். ஏழைக்குடும்பத்தில் தோன்றினாலும் நல்ல பதவிகளைப் பெற்றுப் புகழ் அடைந்தார். முதன் முதலில் கிருஷ்ணதேவராயரால் பாராட்டுகளைப் பெற்ற இவர் அரசாங்கக் கணக்கராகவும் பொறுப்பேற்றார்.

### 8.7.3 நாகமருடன் மோதல்

கிருஷ்ண தேவராயரின் சார்பில் நாகமர் என்பவர் மதுரையின் ஆளுநராக இருந்தார். அவர் பேரரசர் கிருஷ்ண தேவராயருக்கு மாறாகச் செயல்பட முற்பட்டார். அவரைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் வேண்டிய அரியநாதர் 1529இல் மதுரைக்கு அனுப்பப்பட்டார். அவர் விசுவநாதர் தலைமையில் அங்கு சென்றார். நாகமர் தோற்கடிக்கப்பட்டு விஜயநகரத்திற்குக் கைதியாக அனுப்பப்பட்டார். விசுவநாதர் மதுரையில் நாயக்க அரசு ஏற்படுத்தினார். அப்போது அரியநாதர் தளவாய் ஆனார்.

அரியநாதர் மதுரை வரலாற்றில் மங்காப் புகழ் பெற்றவர் ஆவார்.



## 8.7.4 முதலாம் கிருட்ணப்பர் (1564-1572)

**குறிப்பு**

இவர் 1564 ஆம் ஆண்டில் அரியணை ஏறினார். இவரது காலத்தில் பாளையக்காரர்கள் கலகம் ஏற்பட்டது. முகமதியரை எதிர்த்துப் போரிடுமாறு இவர் அரியநாதனை அனுப்பினார். பாளையக்காரர்களின் தலைவனான தும்பிச்சி நாயக்கர் கொல்லப்பட்டார். பெரிய கிருட்டிணப்பரின் மகனான சின்ன கேசவன் கண்டிபடையெடுப்பில் புத்தளம் போரில் கண்டி அரசனைத் தோற்கடித்தான்.

முதலாம் கிருட்ணப்பர் திறமைமிகு போர் வீரர். இவர் அநுபவம் மிக்க ஆட்சியாளர். மக்கள் நலம் பேணும் பண்பாளர். பல கோயில் திருப்பணிகள் செய்தவர்.

## 8.7.5 வீரப்பநாயக்கர்(1573-95)

இவர் கிருட்ணப்பரின் மூத்த மகனாவார். இவரது காலத்தில் பாணர் வழிவந்த வாணாராயர் என்ற மானாமதுரை சிற்றரசன் கலகம் செய்தான். வீரப்பர் இதை அடக்கினார். பொதுவாக இவரது ஆட்சிக்காலம் அமைதியான காலமாகும். திருச்சி கோட்டை விரிவாக்கப்பட்டது. அருப்புக் கோட்டையில் புதுக்கோட்டை எழுப்பப்பட்டது. சிதம்பரம், மதுரைக் கோயில்கள் வெளியிப்பட்டன.

## 8.7.6 இரண்டாம் கிருட்ணப்பர் (1595-1601)

இவரது காலத்தில் தான் முதல் தளவாய் அரியநாதர் மரணம் அடைந்தார். அப்போது பாண்டியர் செல்வாக்குப் பெற முற்பட்டனர்.

## 8.7.7 முத்து கிருட்ணப்பர் (1601-1609)

இவரது காலத்தில் சேதுபதிகளின் நாடு சீரமைக்கப்பட்டது. மறவர் நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தைத் தீர்க்க சடையத்தேவர் உடையான் சேதுபதி அனுப்பப்பட்டார். கிருத்துவ சமயப்பரப்பாளர்கள் நன்கு ஏற்றம் பெற்றனர்.

## 8.7.8 முதலாம் முத்து வீரப்பர்(1609-1623)

இவர் முத்து கிருட்ணப்பரின் மகனாவார். இவர் தோப்பூர் போரில் ஈடுபட்டு தோல்வி அடைய நேரிட்டது. இவர் முழு சமய மாற்றத்தை ஆதரிக்கவில்லை.

## 8.7.9 திருமலை நாயக்கர்(1623-1659)



மதுரை நாயக்கர்களில் தலை சிறந்தவர் திருமலை நாயக்கரே ஆவார். இவரது முப்பதாண்டு கால ஆட்சியினால் இவர் பேரும் புகழும் எய்தினார். இவர் தன் பேராற்றலினாலும் தீவிர கலைப்பணிகளாலும், பக்தியினாலும் தமிழக வரலாற்றில் தன்னிகரில்லாத் தனியிடத்தைப் பெற்றுள்ளார்

இவர் மதுரையை ஆட்சிசெய்தபொழுது விஜயநகர அரசுப் பேரரசர் இரண்டாம் வேங்கடர் இறந்து மூன்றாம் ஸ்ரீரங்கர் அரியணை ஏறினார். திருமலை அவருக்குக் கப்பம் கட்டுவதை நிறுத்தலானார். இதனால் ஆத்திரமடைந்த திருமலை தஞ்சாவூர், செஞ்சி நாயக்கர் உதவியுடன் அவரை எதிர்த்தார். கோணல்புத்தி கொண்ட தஞ்சை நாயக்கர் விஜயராகவர் திருமலையின் திட்டங்களை ஸ்ரீரங்கருக்கு அறிவித்துவிட்டார். ஸ்ரீரங்கருக்கு எதிராகப் போர்புரியும் காலம் கனிந்து வரும் நேரத்தில் காலை வாரிவிட்டதால் திருமலை கோல்கொண்டா சுல்தான் மீர்ஜும்மாவின் துணையினை நாடினார். அவரது படைகள் பேரரசின் எல்லைகளைத் தாக்கலாயின. அவைகளின் வேலூர்த் தாக்குதல் முதலாவதாகும். இதையறிந்த ஸ்ரீரங்கர் அங்கு விரைந்தார். இறுதியில் முடியாது போகவே அவர் மைசூரில் தஞ்சம் புகுந்தார்.

வேலூர் வெற்றிக்குப்பின் கோல்கொண்டா சுல்தான் தன் படைகளைச் செஞ்சியின் பக்கம் ஏவி முற்றுகையிடச் செய்தார். இதைக் கண்டு பீதியடைந்த திருமலை கோல்கொண்டாவிற்கு எதிராக பீஜப்பூர் சுல்தானை உதவிசெய்யுமாறு அழைத்தார். முற்றுகை தொடர்ந்து நடைபெற்றது. மதுரைப் படையால் எவ்வித வெற்றியினையும் பெற இயலவில்லை. செஞ்சியைப் பீஜப்பூர் கைப்பற்றிக் கொண்ட பின்னர் அது மதுரை, தஞ்சாவூர் பகுதிகளைத் தாக்க முற்பட்டது. எதையும் தாங்கும் இதயம் கொண்ட திருமலை கள்ளர்கள் உதவியுடன் பீஜப்பூர் படைகளைத் துரத்தியடித்தார்.

இச்சூழ்நிலையில் ஸ்ரீரங்கர் 1652இல் மீண்டும் வேலூரைக் கைப்பற்றத் திட்டமிட்டார். திருமலை மீண்டும் பீஜப்பூர் சுல்தானின் உதவியினை நாடினார். அதே சமயத்தில் கோல்கொண்டா சுல்தானும் தன் படையுடன் வந்து சந்திரகிரியைக் கைப்பற்றிக்கொண்டார். அதனால் ஸ்ரீரங்கர் 1658 இல் மைசூருக்கு மீண்டும் ஓடினார். அங்கு அவர் 1672 இல் இறந்து பட்டார். ஸ்ரீரங்கனின் மரணத்துடன் விஜயநகரப் பேரரசும் மறைந்துவிட்டது.

நெல்சன் எனபவர் முதன் முதலில் மதுரை நாயக்கர்களில் திருமலை முழுமையான சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் எனப் பேரரசருக்கு எதிராகப் போராடினார் என்று கூறுகின்றார். இக்கூற்றினைப் பேராசிரியர்கள் அய்யங்காரும், சத்திநாதய்யரும் ஒப்புக் கொள்கின்றனர்.

## 8.8 மைசூருடன் போர்

திருமலை நாயக்கர் ஆட்சியில் மதுரைக்கும் மைசூருக்கும் ஏற்பட்ட போரைப்பற்றி மெக்கன்சியின் கைப்பிரதிகள் நன்கு எடுத்துரைக்கின்றன. மதுரையின் வளர்ச்சிகண்டு பொறாமை கொண்ட மைசூர் மன்னன் சாமராங் உடையார் தமது தளபதி நந்திராஜா தலைமையிலான படையினை மதுரையைத் தாக்க ஏவினார். அப்படை திண்டுக்கல்லில் முற்றுகையிட்டது. இதைக் கண்ட திருமலை, தன் தளவாய் இராமப்பையன் தலைமையில் படை ஒன்றை அனுப்பினார். அவருடன் கன்னி வாடியின் பாளையக்காரனான ரங்கண்ண நாயக்கரும் சேர்ந்து கொண்டார், அவை மைசூர்ப் படைகளை விரட்டியடித்தன.

### 8.8.1 திருவாங்கூர்ப் படையெடுப்பு

திருவாங்கூர் வித்தலராயர் படையெடுப்பிற்குப்பின் மதுரையின்கீழ் திறை செலுத்தும் நாடாக இருந்து வந்தது. திருமலையின் காலத்தில் திருவாங்கூர் மன்னரான கேரளவர்மன் திறை செலுத்த மறுத்தார். இதனால் கோபம் கொண்ட திருமலை அதன் மீது படைகளை ஏவினார். தளபதி இராமப்பையன் தலைமையேற்றுச் சென்றார். அவர் கேரளவர்மரைத் தோற்கடித்து, திறை செலுத்துமாறு பணியவைத்தார்.

### 8.8.2 மூக்கறுப்புப்போர்

இரண்டாவது முறையாக மைசூர் மன்னர் திருமலையைப் பழிவாங்க அவர் மீது போர் தொடுத்தார். அப்படை சத்திய மங்கலத்தைக் கைப்பற்றிய பின் மதுரையை முற்றுகையிட்டது. திருமலை சேதுபதிரகுநாதர் உதவியுடன் அப்படைகளை விரட்டியடித்தார். அப்போது மைசூர் வீரர்கள் பாண்டிய நாட்டில் பல ஆண், பெண், சிறியவர், பெரியவர் ஆகியோரை எவ்விதப் பாகுபாடும் இல்லாமல் மூக்கறுத்து அவமானப்படுத்தினர். இதனால் கோபம் கொண்ட திருமலை தன் தம்பிகுமார முத்துவை மைசூருக்கு ஏவினார். அவர் பெரும் படையுடன் அங்கு சென்று தன் கைகளில் சிக்கிய மைசூர்காரர்களின் மூக்குகளை அறுத்தனர். மதுரைப் படைகள் நஞ்சக்கூடு வரையிலும் முன்னேறிச் சென்று மூக்கறுப்புச் செய்தது. இவ்வாறு பழிக்குப்பழி வாங்கப்பட்டது. இது வரலாற்றில் ' கறுப்புப் போர் எனக் குறிப்பிடப் பெறுகிறது.

### 8.8.3 சேதுபதிகளுடனான தொடர்பு

மதுரைக்கு அடங்கிய சிற்றரசர்களாகவே இராமநாதபுர ஆட்சியாளர்களான சேதுபதிகள் வாழ்ந்து வந்தனர். திருமலையின் காலத்தவரான இரண்டாம் சடையப்பத் தேவர் என்ற 'தளவாய்சேதுபதி' திறை செலுத்த மறுத்தார். தளவாயின் முறையற்ற தம்பியாகிய

'தம்பி' மறவர் நாட்டுத் தலைவராக அதாவது சேதுபதியாக விழைந்தார். இதை ஆதரித்த திருமலை ராமப்பையன் தலைமையில் படையொன்றை அனுப்பினார். மறவருடன் ஏற்பட்ட போரில் முதலில் தோல்வி ஏற்பட்டாலும் பின்னர் போர்த்துக்கீசிரியர் உதவியுடன் சேதுபதியினைத் தோற்கடித்தார். இப்போரில் இராமப்பையன் இறந்துவிட்டார். தம்பி இராமநாதபுரத்து மன்னர் ஆனார் எனினும் அங்கு அமைதி ஏற்படவில்லை. அதனால் சிறையிலிருந்த சடையப்பத் தேவர் விடுதலை செய்யப்பட்டு சேதுபதியாக்கப்பட்டார்.

சின்னாட்கள் சென்று தம்பி சடையப்பத்தேவரை கொன்றுவிட்டான். இது 1655இல் நடைபெற்றது. அப்போது சேதுபதிக்கு மூவர் போட்டியிட்டனர். அவர்கள் முறையே தம்பி ரகுநாதர் (சடையப்பத் தேவரின் மருமகன்), அவரது தம்பி சேதுபதியானார். இவர் திருமலைக்கு மைசூர் போரில் படை, பொருள் உதவி செய்துள்ளார். இந்த உதவிக்காக அவர் 'திருமலை சேதுபதி' என்ற பட்டம் பெற்றார். மீண்டும் திறை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டார்.

## 8.9 ஐரோப்பியர்களுடனான உறவு

ஐரோப்பிய வணிக சங்கங்களில் திருமலை தலையிடவில்லை. எனினும் போர்ச்சுகீசியருக்கும் டச்சுக்காரருக்கும் வணிகப்போட்டி ஏற்பட்டது. திருமலை இதில் போர்ச்சுகீசியர்களுக்கு சில சலுகைகள் வழங்கினார் அவர்கள் சார்பாக அவர் டச்சுக்காரர்களை காயல்பட்டினத்திலிருந்து விரட்டினார். அவர்கள் திருச்செந்தூரில் தங்கள் வலிமையான படைத்தளம் ஒன்றை நிறுவிக் கொண்டனர். பின்னர் அவர்கள் தூத்துக்குடியையும் போர்ச்சுகீசியரிடமிருந்து மீட்டனர்

### 8.9.1 உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்:

திருமலை நாயக்கர் மதுரையின் பெருமைக்கு மணி மகுடம் வைத்தாற்போல பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

திருமலை நாயக்கர் தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றினார். நாட்டின் மையத்தில் இல்லாததால் அவர் அவ்வாறு செய்தார் எனலாம். நாட்டின் நல்லாட்சி, பாதுகாப்பு, இன்ன பிறவற்றைக் கருதியே அவ்வாறு செய்தார்.

### 8.9.2 கலைப் பணிகள்

(1) திருமலை நாயக்கரின் பணிகளில் தலையாயது அவரது

கலைப்பணிகளேயாகும். அதற்கு எடுத்துக் காட்டாக நாயக்கர் மகால் உள்ளது. அதன்அற்புத வேலைப்பாடுகள் கொண்ட வளைவுகள், கூடங்கள், மிகப் பெரிய தூண்கள் காண்போரைக் கவர்வனவாகும்.

(2) தெப்பக்குளம் அவரது மற்றொரு கலைப் பணியாகும். இதன் நீளம் 1000 அடி. அதன் மையத்தில் விமானத்தோடு மண்டபமும் உள்ளது.

(3) மற்றொரு கலைப்பணி மீனாட்சியம்மன் கோயில், அழகர் கோயில் வசந்த மண்டபங்களாகும்.

(4) மீனாட்சியம்மன் கோயில் வசந்த மண்டபத்திற்கு எதிரில் இராய கோபுரம் ஒன்று கட்ட முற்பட்டார். அது முதல் தளத்துடன் நின்றுவிட்டது.

(5) மதுரையினைப் பல்வளமும் நலமும் உள்ள நன் நகராக மாற்றியமைத்தார்.

### 8.9.3 சமயம்

திருமலை இந்து சமயத்தில் தளராத நம்பிக்கை உள்ளவராய்த் திகழ்ந்தார். அதனால் சித்திரைத் திருவிழா, தெப்பத் திருவிழா, தேர்த்திருவிழா போன்றவைகளை சிறப்புற நடத்தினார். கோயில்கள் பல கட்டப்பட்டன. பல புதுப்பிக்கப்பட்டன. எல்லாச் சமயங்களையும் நன்கு நடத்தினார். கிருத்துவ சமயப் பரப்பாளர்கள் பலர் அங்கு இருந்தனர். அவர்களில் முக்கியமானவர் ராபாட்-டி-நொபிலி என்பவராவார். கோயில்களில் நாட்டியம் நடைபெற்றது. பதிகங்கள் பாடும் தேவதாசிகள் இருந்தனர்.

### 8.9.4 இரண்டாம் முத்துவீரப்பர் (1659)

திருமலை இறந்தபின் அவரது மகன் முத்து வீரப்பர் 1659 ஆம் ஆண்டில் மதுரை நாயக்கரானார். இவரது காலத்தில் முகமதியர் தாக்குதல் அதிகமிருந்தது.

## 8.10 நாயக்கர்களின் பாளையப்பட்டு ஆட்சிமுறை:

விசயநகர ஆட்சியின் விளைவால் ஒருவகைப் படைமானிய முறை தமிழகத்திலும் ஏற்பட்டது. அதன் வழியில் தோன்றியதே பாளையப்பட்டு முறையாகும். விசுவநாதரும் அரியநாதரும் நாயக்கர் நாட்டில் புதிய நிர்வாக முறையைச் சீர்ப்படுத்தினர். வட்டாரங்களில் உள்ளவர்களிடத்தில் அப்பிரதேசத்தின் (பாளையம்) நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தனர். அவ்வாறு நாட்டை 72 பாளையங்களாகப் பிரித்தனர். பாளையக்காரர்களுக்குப் பாளையங்கள் மீது கிட்டத்தட்ட முழு நிர்வாக உரிமை வழங்கப்பட்டது. அமைதி காப்பதும் நீதி வழங்குவதும் வரி வசூலிப்பதும் அவர்களுடைய முக்கியப் பணிகளாயின. வசூலித்த வரியில் 1/3 பங்கை மத்திய அரசுக்கு அனுப்பினர். 1/3 பங்கைப்

பாளையப்பட்டின் நிர்வாகச் செலவுக்கு எடுத்தனர். 1/3 பங்கு வருவாயைச் சொந்தச் செலவுக்குப் பயன்படுத்தினர். படையைப் பராமரித்து மன்னருக்குத் தேவைப்படும் போது படை அளித்து உதவினர். இம்முறை நாயக்கருக்குப் பெரிய வலிமையை அளித்தது.



## 8.10.1 தல ஆட்சி

நாயக்கர் காலத்தில் நிர்வாகத்துக்கு நாயக்கராட்சிப் பிரதேசம் பாளையங்களாகவும், 'மாகாணா' அல்லது நாடு என்ற பகுதிகளாகவும் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. இவை சீமை என்ற பெயரையும் பெற்றிருந்தன. கிராமங்கள் பல பெயர்களில் அறியப்பட்டன. அவை கிராமம், மங்கலம், சமுத்திரம், குடி, ஊர், புரம், குலம், குறிச்சி, பட்டி என்பன கிராமங்களில் (ஊர்களில்) மக்களால் மதிக்கப்பட்ட நீதி நிர்வாக அதிகாரிகள் இருவர் இருந்தனர். அதிக அளவு சுயாட்சியும் இருந்தது என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் கருதுகின்றார். கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முசுலீம் படையெடுப்பாலும் விசயநகர அரசர்கள் வகுத்த படைமானிய நிர்வாகத்தாலும் தமிழகத்தில் தல சுயாட்சி ஒழிந்து கொண்டிருந்தது எனத் துணியலாம் கிராமங்களில் காவல்,நீதி நிர்வாகம் ஆகியவற்றைக் கர்ணம், மணியக்காரன், தலையாரி முதலிய கிராம அதிகாரிகள் நிர்வகித்தனர். கிராமத்தின் வரிக்கணக்கு, நிலக் கணக்கு போன்றவற்றைக் கர்ணம் பராமரித்தார். கிராமத்தின் எல்லை, நிலப்பரப்பு, தோட்டங்கள், தோப்புகள், இறையிலி நிலங்கள், காடு, இடுகாடு, சுடுகாடு, குளம், கிணறு, வாய்க்கால் முதலியவற்றின் கணக்கும் பதிவும்; வரி வருவாய்க் கணக்குப் பதிவும் கர்ணத்தின் பொறுப்பில் இருந்தன. மணியக்காரர் கர்ணத்தின் துணையுடன் வரி வசூலித்தார். கிராமங்களில் வசூலிக்கப்பட்ட வரிகள் சாவடிகளில் செலுத்தப்பட்டன. சாவடி அரசு அலுவலகமாக விளங்கியது. ஊர்க்காவல் தலையாரியிடமிருந்தது. அவர்கள் மூவரும் அரசு அதிகாரிகளாவார்கள். அரசுக் காவல், நாடு காவல், தேசக் காவல், தலக் காவல் என்ற முறைகளும் தமிழகத்திலிருந்தன.

## 8.10.2 வரி வசூல்

கிராம வருவாய்த் துறை அதிகாரிகள், வரி வசூலித்துச் சாவடிகளில் செலுத்தினர். இப்பணம் மாகாண அதிகாரியிடம் சேர்க்கப்பட்டது. மாகாண அதிகாரியிடமிருந்து பிரதானியின் பொறுப்பிலிருந்த கருவூலத்தில் சேர்ந்தது. விசயநகர ஆட்சிக் காலம் முதல் வரி பணமாக வசூலிக்கும் வழக்கிருந்தது. நாயக்கர் காலத்தில் உற்பத்தியான தானியத்தில் பாதியை வரியாக வசூலித்தனர் வரி மிகக் கடினமான சுமை மட்டுமல்ல: உற்பத்தியில் பெருமளவு வரியாகச் செலுத்த வேண்டியிருந்ததால் அது மக்களுக்குப் பேரிழப்பாகியது: வரிவசூல் கெடுபிடி பெரும் துன்பமான

சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருந்தது. வரிக் கொடுமையும் அதனால் அச்சமும் பீதியும் மக்களிடம் குடிகொண்டிருந்தன.



## 8.10.3 நீதி நிர்வாகம்



நீதி வழங்க வேண்டியது மன்னனுடைய கடமை, அப்பணியைப் பெருந்தன்மையுடைய நீதிபதிகளிடத்து மட்டும் ஒப்படைக்க வேண்டும் என்பது கிருட்டிண தேவராயனின் அறிவுரை. அந்த வழியில் தோன்றிய நாயக்கர்களும் நீதி நிர்வாகத்தைப் புறக்கணிக்கவில்லை. மன்னனும், தளவாயும், பிரதானியும் தலைநகரில் நீதி வழங்கினர். பாளையப்பட்டுக்களில் பாளையக்காரர்களே நீதி வழங்கும் பணியைச் செய்தனர். கிராமங்களில் இருவர் நீதி நடுவர்களாகவிருந்தனர் என்று ஜான் நியூக்காபின் குறிப்பால் அறியலாம். வழக்காறு, ஆவணம், சாட்சி (Precedent, Record, Witness) ஆகியவற்றின் அடிப்படையில் நீதி வழங்கினர் என்பதைச் ஸ்ரீவில்லிபுத்தூர் சாசனம் (கி.பி. 1577) உணர்த்துகின்றது. நீதி வழங்குவதில் சோதனை முறையும் (Ordeal) இருந்தது. பிற்காலத்து நீதிமன்ற அமைப்பும், நடைமுறைகளும் அன்று இடம் பெறவில்லை. ஆகவே அடிமட்டத்தில் நீதி சென்று சேரத் தயங்கியது அல்லது மறுத்தது.

## 8.10.4 கல்வி நிர்வாகம்

நாயக்கர் காலத்திலும் தர்மசாத்திரம் வகுத்த சமூகநீதி அடிப்படையிலான சமற்கிருதக் கல்வியை ஆலயம் வழியாக அரசு பேணிக்காத்தது. இந்தச் சமூக அடிப்படை விதிமுறைகளிலிருந்து விலகியவர்கள் தண்டிக்கப்பட்டனர். சமற்கிருதம் பயிற்று மொழியாகவும், பிராமணர் ஆசிரியர்களாகவும், பிராமண இளைஞர்கள் மாணவர்களாகவும் விளங்கினர். ஆசிரியர்களுக்கு நிலமானியமும், மாணவர்களுக்கு இலவச உண்டியும் உறையுளும் கிட்டின. இதுவும் மானிய நிலம் வழிப் பெற்றதாகும். திருமலை காலத்திலும், சொக்கநாதர் காலத்திலும் தெலுங்கு இலக்கியக் கல்வி நிலையங்களும் உதவி பெற்றன. சைவ மடங்கள் தமிழ்க்கல்வியும், சித்தாந்தக் கல்வியும் வழங்கின. ஏனையோருள் வசதியுடையோர் திண்ணைப் பள்ளிகளை நம்பிக் கல்விபெற்றனர்.

## 8.11 நாயக்கர் வளர்த்த கலையும் இலக்கியமும்:

### 8.11.1 கட்டடக்கலை

தமிழகத்தில் முசுலீம் ஆட்சியைத் தொடர்ந்து விசயநகரத்து ஆட்சியும், அதைத் தொடர்ந்து நாயக்கர் ஆட்சியும் நடைபெற்றன. எனவே குமாரகம்பண உடையார் துவக்கி வைத்த ஆலயப்பணி நாயக்கர் காலத்தில் தொடர்ந்தது. நாயக்கர்களும், சிற்றரசர்களும்,

பாளையக்காரர்களும் ஆலயங்களையும், அரண்மனைகளையும், நகரங்களையும் எழுப்பினர். ஆலயங்கள் இந்தியக் கட்டடக் கலையிலும் சிற்பக்கலையிலும் எழுந்தபோது, அரண்மனைகள் இந்தோசாரசானியக் கட்டடக்கலையின் அடிப்படையில் எழுந்தன.

ஆலயங்கள் அரசர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டன. விசுவநாத நாயக்கன் காலத்தில் ஒவ்வொரு திருமணத்தின்போதும் ஒரு பதக்கு நெல்லும், இரண்டு பணமும் ஆலயத்துக்களிக்க வேண்டிய வழக்கிருந்தது. ஆலயங்களில் கவனம் செலுத்திய நாயக்கர்கள் ஆலயங்களை இறையகமும், வழிபாட்டு மண்டபமுமல்லாது கலைக்கூடமாகவும் மாற்றினர். கிருட்டிணப்பன் காலத்தில் பாளையங்கோட்டை கிருட்டிணாபுரத்திலும் புதிதாக ஆலயங்கள் எழுப்பப்பட்டன. அவை சிற்பக்கலைச் செறிவுடையவையாக விளங்குகின்றன. நாயக்கர் காலத்துச் சிற்பக்கலைக்குக் கிருட்டிணப்ப நாயக்கனின் ஆலயங்கள் விளக்கமளிக்கின்றன. வீரப்பநாயக்கன் காலத்தில் அரியநாதர் பிரதானி என்ற நிலையில் திருச்சியிலும், அருப்புக்கோட்டையிலும், திருநெல்வேலியிலும் நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ளார். திருச்சியிலும், அருப்புக்கோட்டையிலும் கோட்டைகளும் அரண்மனைகளும் புதிய வடிவில் எழுந்தன. வேதியர் குடியிருப்புக்கள் விரிவடைந்தன. நெல்லைக் கூத்தப்பர் ஆலயம் கலைப்பணியுடன் கம்பீர எழுச்சி கண்டது.

திருமலைநாயக்கன் காலத்தில் தலைநகரம் மதுரைக்கு மாற்றப்பட்டது. மதுரையிலிருந்த ஆலயங்களைப் பழுது நீக்கிப் புதுப்பித்தான். மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் கம்பீர வடிவத்தையும், கவர்ச்சியான கலைப்பணியையும் பெற்றது. திருமலை எழுப்பிய அரண்மனை திருமலையின் பெயரைத் தாங்கி திருமலையைப் போன்று நிர்மாணப் பணியில் ஈடுபட்ட அரசி மங்கம்மாள் காலத்திலும் ஆலயங்கள் பெருகின. இவற்றால் கட்டடக்கலை ஊக்கம் பெற்றது. நாயக்கர் காலத்தில் கொற்கையில் வாழ்ந்து புலவராகப் புகழ்பெற்ற அதிவீரராம பாண்டியன் என்ற சிற்றரசன் தென்காசியில் அழகிய ஆலயத்தை எழுப்பினான்.

## 8.11.2 இலக்கியம்

கி.பி.16ஆம் நூற்றாண்டின் முற்பகுதி முதல் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தமிழ் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம் இடம் பெறுகின்றது. மதுரை நாயக்கர்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாவர். பாளையக்காரர்களுள் பலர் தெலுங்கர் அல்லது கருநாடகக்காரர்களாயிருந்தனர். இவர்களுக்கு முன் ஆட்சி துவக்கி வைத்த இராயர்கள் தெலுங்கு இலக்கியத்துக்கும், சமற்கிருத மொழிக்கும், கல்விக்கும் ஆதரவளித்தவர்களாவர். மொழி பெயர் தேயத்தவரின் ஆட்சி நடைபெற்ற போதும் தமிழ் இலக்கியப்

புலவர்களுக்கு மதுரை நாயக்கர்களும், இராமநாதபுரம் சேதுபதிகளும் உதவியுள்ளனர். சைவ மடங்கள் தமிழ்க் கல்விக்கும் சைவ சமய நூற்களின் படைப்புக்கும் துணைநிற்கின்றன.

சமயம்வழிப் புராணங்களில் கவர்ச்சி பெற்ற காலமிது. புராணக் கதைகளைக் கருவாகக் கொண்டு படைக்கப் பெற்ற நூற்கள் பல. பொற்கொல்லர் தொழிலிலிருந்து புலமை பெற்ற வீரகவிராயர் இனிய இசைகலந்த நடையில் அரிச்சந்திர புராணத்தைப் படைத்துப் படிப்போரின் உள்ளங்களை உருக வைத்தார். அதிவீரராம பாண்டியன் நளனின் துன்பியல் வரலாற்றை விளக்கி நைடதம் என்ற நூலைத் தந்தார். புராணக்கதைகள் அறிஞர் உலகைக் கவர்ந்திருந்த காலகட்டத்தில் இலிங்க புராணம், மகா புராணம், கூர்ம புராணம் முதலிய புராண நூற்களைத் தமிழில் படைத்தான். கரிவலம்வந்த நல்லூர் சிவனைப் போற்றிப் படைத்த பதிற்றுப்பத்து அந்தாதி இலக்கிய வளமும் நயமுமுடைய படைப்பாக விளங்குகின்றது. இந்நூல் குட்டித் திருவாசகம் எனப்படுகின்றது. அதிவீரராம பாண்டியனின் தம்பி வரதுங்க ராம பாண்டியனும் அவனுடைய துணைவியாரும் இலக்கிய ஆர்வமும் புலமையும் உடையவர்களாக விளங்கினர். வரதுங்க பாண்டியனின் நூற்களுள் ஒன்று உடலுறவு இன்ப விளக்க நூலாகிய கொக்கோகமாகும். புராணக்கதைகளில் மயங்கித் துன்பத்தை மறந்து இன்பத்தில் மிதந்து கொண்டிருந்த போக்கின் விளக்கமாக அது அமைந்தது போலும். இவர்கள் நாயக்கர் காலத்தில் வாழ்ந்த பாண்டிய அரசுக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாவர்.

கி.பி 16-ஆம் நூற்றாண்டில் அரிய சைவசித்தாந்த விளக்க நூற்கள் தோன்றின. நாயக்கர் ஆட்சியின் துவக்கக் கட்டத்தில் சூரியனார் மடத்தின் தலைவராக விருந்த சிவாக்கிர யோகிகள் சிவஞான போதத்துக்கும், சிவஞான சித்தியாருக்கும் உரைநூற்களைப் படைத்தனர். திருவண்ணாமலை மடத்தில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் திருவொற்றியூர் புராணமும், பல சமய விளக்க நூற்களும் படைத்தார். இவருடைய சீடர் குரு நமசிவாயப் புலவர் சிதம்பர வெண்பாவும், அண்ணாமலை வெண்பாவும் பிற பல நூற்களும் படைத்தார்.

17-ஆம் நூற்றாண்டில் எல்லப்ப நாவலர், அருணாசலபுராணம், அருணைக்கலம்பகம் போன்ற நூற்களைப் படைத்தார். இவர் தருமபுரம் ஆதீனத்தில் பயின்றவராவார். சைவசித்தாந்தத்தின் உயர்வை நிலைநாட்டிய இவர் ‘சைவ எல்லப்ப நாவலர்’ எனப் புகழப்பட்டார். திருநெல்வேலி மாவட்டத்தில் திருவைகுந்தத்தில் பிறந்த குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம் முதலிய நூற்களைப் படைத்த பின் மதுரைக்குச் சென்றுள்ளார். திருமலை நாயக்கரின் விருப்பப்படி மீனாட்சி அம்மைப் பிள்ளைத்தமிழைப் படைத்துவிட்டுத் தருமபுரம் ஆதீனம் சென்றுள்ளார். சைவ சமயத்தைப் பரப்பும் நோக்குடன் காசியில் அவர் எழுப்பியதே காசித்திருமடம் ஆகும்.

அமிர்த கவிராயர் இராமநாதபுரம் சேதுபதியின் ஆதரவைப் பெற்றவராவார். இவருடைய படைப்புகளில் சிறந்தது ஒருதுறைக் கோவையாகும். ஆழ்வார்திருகரியில் வாழ்ந்த இரத்தினகவிராயர் மச்சபுராணமும், புலவர் ஆற்றுப்படையும் படைத்துள்ளார்.



மன்னர்களின் சமயத்துக்கான ஆதரவு, சமயம் வளர்த்த புராணங்களின் செல்வாக்கு, சைவமடங்களின் தொண்டு ஆகியவை நாயக்கர் காலத்தில் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தத் தூண்டுதலாகவும் துணையாகவுமிருந்தன.

## 8.12 தமிழகத்தில் மாராட்டியர் ஆட்சி

விசயநகரத்தின் வீழ்ச்சிக்குப் பின தக்காணத்திலும் தமிழகத்திலும் மராட்டிய அரசுகள் தோன்றின ஆதிக்கத்தை எதிர்த்துத் தக்காணத்தில் தோன்றிய மராட்டிய அரசு பேராற்றலாக மாறிப் போராட்டப் புயல்களை எழுப்பி இசுலாமியர் அரசுகளை நசுக்கி மிதித்துக் கொண்டு முன்னேறியது. தமிழகத்திலும் மராட்டியர் அடியெடுத்து வைத்தனர்.

தக்காணத்தின் தெற்கில் விசயநகரஅரசு வீழ்ச்சிக்குப் பயணம் செய்து கொண்டிருந்த போது, தக்காணத்து முசுலீம் அரசர்கள் அதன் பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினர். கி.பி1636 முதல் 1661 வரை பீசப்பூர் சுல்தானின் தளபதியாக விளங்கிய சாசி(சிவாசியின் தந்தை) 1659க்கும் 1662க்குமிடையில் கர்நாடகத்தில் புகுந்து, செஞ்சி, தஞ்சை, தேவனாம்பட்டினம், பறங்கிப்பேட்டை முதலியவிடங்களைக் கைப்பற்றிப் பீசப்பூர் அரசுடன் இணைத்தார். தஞ்சை 1659-இல் கைப்பற்றப்பட்டது. அவர் புதியதாகக் கைப்பற்றிய இடங்களில் ஆளுநர் இருக்கைகளாக வைத்திருந்தார். நாயக்க அரசர்களுடன் ஏற்பட்டிருந்த உடன்பாட்டால் அவர் பீசப்பூரின் தெற்கில் கொண்டுவந்து நிர்வாகப் பொறுப்புகளில் அமர்த்தி மராத்திய மொழியை ஆட்சி மொழியாக்கினார்.

சாசியின் மூத்தபுதல்வன் சிவாசி முசுலீம் அரசுகளுக்கு எதிராக மகாராட்டிரத்தில் மராட்டிய அரசை நிறுவிப் புதுமுறைப் போராட்டங்களால் அவர்களைத் திணறடித்தார். எனவே பீசப்பூரின் தூண்டுதலால் சாசி சிவாசியுடன் உடன்பாடு ஏற்படுத்துவதற்காக இரண்டாம் மன்னன் துர்காபாயுடனும் அவன் வழித்தோன்றிய வெங்காசியுடனும் மகாராட்டிரம் சென்றார். தன்னையும் தனது அன்னையையும் புறக்கணித்திருந்த போதிலும் சிவாசி தந்தைக்குச் சிறப்பான வரவேற்பு அளித்தார். கர்நாடகத்திற்குத் திரும்பிய சாசி 1664-இல் குதிரை விபத்தில் காலமானார்.

சாசி தனது ஆட்சிப் பகுதியை வெங்காசிக்கு விட்டுச் சென்றார். பீசப்பூர் சுல்தான் வெங்காசியை கர்நாடகப் பகுதியின் (சாசியின் சாகீருக்கு) ஆளுநராக ஏற்றுக்கொண்டான்.

தஞ்சை நாயக்கன் விசயராகவனுக்கும், மதுரை நாயக்கன் சொக்கநாதனுக்கும் ஏற்பட்ட மோதலின் விளைவாக 1673-இல் விசயராகவன் கொல்லப்பட்டான். நான்கு வயதுச் சிறுவன் செங்கமலதாஸ் நீங்கலாக அவனுடைய உறவினர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். சொக்கநாதன் அங்கே அழகிரியை ஆளுநராக அமர்த்தினான். அழகிரி சொக்கநாதனைப் புறக்கணித்துவிட்டு சுயாட்சியை ஏற்படுத்தினான். அழகிரியின் போக்கை வெறுத்த அவனுடைய ராயசம்(செயலாளர்), நியோகி பிராமணன் ஆன வெங்கண்ணா நாகப்பட்டினத்தில் ஒரு வணிகனிடம் வளர்ந்த இளவரசன் செங்கமலதாசை அழைத்துக் கொண்டு பீசப்பூர் சுல்தானிடம் நிரூபித்தான். அழகிரிக்கு எதிராகப் படை உதவியையும் பெற்றான். எக்கோசியின் (வெங்காசி) தலைமையில் சென்ற பீசப்பூர் படை 1675 - ல் அழகிரியை அய்யம்பேட்டையில் தோற்கடித்துவிட்டுச் செங்கமலதாசைத் தஞ்சையில் அமர்த்தியது. பீசப்பூர் சுல்தான் அடில்ஷா மறைந்தபின்னர் எக்கோசி தஞ்சைமீது படையெடுத்துச் செங்கமலதாசை அகற்றிவிட்டு, 1676-இல் தஞ்சையின் அரசன் ஆனான். இவ்வாறு மராட்டியர்கள் தஞ்சையைப் பெற்று மராட்டிய ஆட்சியைத் துவக்கினர்.

## 8.12.1 சிவாசியின் படையெடுப்பு

வெகுவிரைவில் 1676-77இல், சிவாசி கர்நாடகத்தின் மீது படையெடுத்து முன்னேறினார். சிவாசி தந்தையின் ஆளுகைப் பகுதிக்கு (நாடு) பங்கு கோரி வந்தார் என்றும், வெற்றியுலா நடத்தினார் என்றும், கொள்ளையடிப்பதற்காகக் கர்நாடகத்தில் புகுந்தார் என்றும் கருதுவோர் உள்ளர். சிவாசி தென்பகுதிகளைக் கைப்பற்றித் தனது நாட்டை விரிவு படுத்தும் நோக்குடன் படையெடுத்துள்ளார் என்பதைக் கர்நாடகத்தில் அவர் ஏற்படுத்திய நிர்வாக ஒழுங்குகள் காட்டுகின்றன. சிரிசைலம், திருப்பதி முதலிய இடங்கள் வழிச் சென்று காஞ்சி, செஞ்சி, வேலூர் முதலிய இடங்கள் வழி முன்னேறிய சிவாசி பறங்கிப்பேட்டை, திருவதிகை, தேவனாம்பட்டினம், புவனகிரி ஆகியவற்றையும் கைப்பற்றிக்கொண்டு 1677 சூலையில் கொள்ளிடக்கரையில் திருமழபாடியில் முகாமிட்டார். விசயரங்க சொக்கநாதனுடைய தூதுவன் அங்கேசென்று பெருந்தொகை கொடுத்து மதுரை நாட்டைக் காப்பாற்றினான். சிவாசி வெங்காசியை வரவழைத்து அவனுடைய நாட்டில் ¾ பங்கைக் கேட்டார். வெங்காசி மறுக்கவே அவனைக் கைது செய்ய முயன்றார். வெங்காசி தப்பி ஓடினான். எனவே உடன்பாடு ஏற்படத் தவறியது. சிவாசி தனது வெற்றி உலாவைத் தொடர்ந்து கொள்ளிடத்தின் வடக்குப் பகுதிகளைக் கைப்பற்றி, சாந்தாசியைச் செஞ்சியில் நிர்வாகப் பொறுப்பில் அமர்த்திவிட்டு வடக்கில் திரும்பினார்.

சிவாசி சென்ற பின்னர் வெங்காசி இழந்த பகுதிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டான். சிவாசியின் தளபதிகள் கடும் எதிர்ப்பைக் கொடுத்தனர். சிவாசியின் கட்டளைப்படி வெங்காசியும் இரகுநாதபந்தும் உடன்பாடு செய்து கொண்டனர். அதன்படி தஞ்சையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மட்டும் வெங்காசி பெற்று ஆண்டான். புதிதாக நிறுவப்பட்ட தஞ்சை அரசு ஒருவகையில் காப்பாற்றபப்ட்டது. 1680-இல் சிவாசியின் இறப்பு எக்கோசிக்குத் தஞ்சையில் அச்சமற்ற முழு உரிமையைக் கொடுத்தது. 1698-இல் இராசாராமிடமிருந்து மொகலாயத் தளபதி பறித்துக் கொள்ளும் வரை செஞ்சி தக்காணத்து மராட்டியப் பேரரசின் பகுதியாகத் தொடர்ந்தது.

## 8.12.2 வெங்காசியின் ஆட்சி (1675-1684)

வெங்காசி தந்தையின் குண நலன்களையோ தமையனின் குணநலன்களையோ பெற்றானில்லை. விரும்பியவாறு வாழ்க்கை நடத்திய அவனுடைய நாட்டை 1677-லும் 1680-லும் பெரும் வெள்ளமும் கடலரிப்பும் வாட்டின. இந்நிலையில் அதிக வரிகளிட்டு விவசாயிகளைத் துன்புறுத்தினான் என்றும், கோயில் பொக்கிசத்தில் கைவைத்துப் பிராமணர் எதிர்ப்பைத் தூண்டினான் என்றும் மராட்டியர் வரலாறு காட்டுகின்றது. கி.பி1684-ல் வெங்காசி மறைந்ததும் அவனுடைய புதல்வன் சாசி தஞ்சை அரசன் ஆனான்.

## 8.12.3 சாசி(1684-1712)

வெங்காசிக்குப் பின் தஞ்சையை ஆண்ட சாசி தஞ்சை மராட்டியர் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றான். இவன் காலத்தில் தமிழகத்தில் அரசியல் நிலை சிக்கல் நிரம்பிக் கொந்தளிப்பில் இருந்தது. மதுரை நாயக்கர் அரசின் பலவீனத்தைப் பயன்படுத்தி அந்தப் பகுதிகள் பலவற்றை இராமநாதபுரம் சேதுபதி, மைசூர் உடையார் ஆகியவர்களுடன் தஞ்சை மராட்டிய மன்னனும் கைப்பற்றிக் கொண்டான்.

சிவாசிக்குப் பின் தக்காணத்தில் மொகலாயர்கள் வலிமை பெற்ற மராட்டியர்களை ஒடுக்கினர். மராட்டியர்கள் அவர்களுடைய ஆளுகை மண்டலமாகிய செஞ்சியை இருக்கையாக்கினர். இராசாராம் செஞ்சியில் தஞ்சம் புகுந்த பின் செஞ்சியைக் கைப்பற்றுவதும் இராசாராமை ஒழித்துக் கட்டுவதும் ஔரங்கசீப்பின் நோக்கமாக இருந்தது. எனவே அவர்கள் செஞ்சியைக் குறி வைத்தனர் என்றாலும் தஞ்சை மொகலாயர் தாக்குதலிலிருந்து தப்பவில்லை. இராசாராமுக்குத் தஞ்சை மறைமுகமாக உதவியது. தஞ்சையும் பிறநாடுகளும் மதுரைக்குத் தொல்லை கொடுத்தன. எனவே இராணிமங்கம்மாள் மொகலாயர் துணையை நாடினார். மொகலாயர் தளபதி கல்பிர்க்கர்கான் தஞ்சை அரசனைப் பணிய வைத்து, அவன் கைப்பற்றிய பகுதிகளை மதுரைக்குத் திருப்பிக் கொடுக்கச் செய்தான். சாசியிடமிருந்து பெருந்தொகை திறையாகப்

பெற்றான். சேதுபதியின் துணையுடன், தஞ்சைக்குவிட்டுக் கொடுத்த திருக்காட்டுப்பள்ளியை மீட்க முயன்றான். திருக்காட்டுப்பள்ளி கல்லணைப் பாசனத்தின் தலைமையாகவும், தஞ்சையின் பாசன வசதியின் உயிரோட்டமாகவும் இருந்தது. கி.பி.1709-இல் மங்கம்மாளுடன் போராடி இறுதியில் உடன்பாட்டில் முடித்துக் கொண்டான். சேதுபதியை மங்கம்மாள் தண்டிக்க முயன்ற போது தஞ்சை அரசன் சேதுபதிக்கு எதிராக நின்றதால் 1709-இல் சேதுபதி தஞ்சைமீது படையெடுத்து அறந்தாங்கியைக் கைப்பற்றினான்.

இடைவிடாப் போர்களிலிருந்தும் சாசியின் அரசிருக்கை பண்பாட்டுப் பணியில் தயங்காது முன்னேறியது. தஞ்சை அரண்மனை அழகிய சித்திர மாளிகைகளைப்பெற்றும், சத்திரங்களையும் சாவடிகளையும் பெற்றும் விரிவடைந்தது. சாசி மருத்துவமனைகளை எழுப்பினான். ஐதாரபாத்திலும் அரேபியாவிலிருந்தும் மருத்துவர்களை வரவழைத்தான். நீதி நிர்வாகத்தைச் சீர்படுத்திய அவன் உரிமைக் குற்றவியல் நீதிமன்றங்களை ஏற்படுத்தினான்.

தஞ்சை சமயப் பொறைக்குச் சிறந்து விளங்கியது என அயல்நாட்டார் சான்றுகள் காட்டுகின்றன.

## 8.12.4 முதலாம் சரபோசி மன்னர்(1712-1728)

சாசி தனது 40ஆவது வயதில் மடிந்தான் அவனுக்குக் குழந்தைகள் கிடையாது. எனவே அவனுடைய தம்பி சரபோசி தஞ்சையில் அரசன் ஆனான். இளைய உடன்பிறப்பான துக்காசி இணையரசன் ஆனான்.

இராமநாதபுரம் கிழவன் சேதுபதி விசய இரகுநாதனின் மறைவுக்குப்பின் எழுந்த அரசுரிமைப் போட்டியில் முதலில் பவானி சங்கருக்கும், பின்னர் சசிவர்ணத் தேவருக்கும் உதவினான் சரபோசி. இராமநாதபுரத்தை ஐந்தாகக் கூறிட்டு அதன் சிதைவுக்கும், சிவகங்கையின் தோற்றத்துக்கும் காரணமானான். பாம்பாற்றுப் பகுதியைத் தஞ்சையுடன் இணைத்தான்.

சாசியின் கலையார்வத்தைப் பெற்ற சரபோசி புலவர்களைப் போற்றுவதிலும் கோயிற்பணி செய்வதிலும் விருப்புடையவனாக விளங்கினான்.

## 8.12.5 துக்காசி

முதலாம் சரபோசிக்கும் வாரிசில்லாததால் அவனுடைய தம்பி துக்காசி பட்டம் பெற்று 1728 முதல் 1736 வரை ஆண்டான். இவனுடைய இன்ப வாழ்வின் விளைவாக தஞ்சை துன்பத்தில் ஆழ்ந்தது.

கர்நாடக நவாபின் முன்னேற்றத்தால் 1732-இல் தஞ்சை திடீர்த் தாக்குதலுக்குள்ளாகித் திறை செலுத்த இசைந்தது. இராமநாதபுரத்திலும் புதுக்கோட்டையிலுமிருந்த அரசியல் நிலைகளைப் பயன்படுத்தி இருநாடுகளுக்கும் பெரும் தொல்லைகளைக் கொடுத்தான் துக்காசி. சேதுபதியும் தொண்டைமானும் மதுரை நாயக்கர் படையையும், கர்நாடக நவாபின் படையையும் துணைக்கு அழைத்துத் தஞ்சைக்கு எதிராக ஏவினர். தஞ்சையின் இருபுறங்களிலிருந்தும் அவர்கள் தாக்கினர். முசுலீம் படை தஞ்சையைக் கடுமையாகத் தாக்கித் தோற்கடித்தது.

துக்காசியின் மரணத்துக்குப்பின் (1736) தஞ்சையில் வாரிசுரிமைப் போட்டி துவங்கியது. சந்தாசாகிப்பின் தாக்குதல் தஞ்சையை முடமாக்கியது. அவர் 1736-இல் திருச்சியைக் கைப்பற்றியதும். தஞ்சைக்குப் பேராபத்தாக முடிந்தது. 1739 வரை தஞ்சையில் குழப்பநிலை உருவாகியது. இதனைப் பிரஞ்சுக் கம்பெனியாரும், சந்தாசாகிப்பும் முதலாக்கினர்.

## 8.12.6 பிரதாபசிங் (1739-1763)

கர்நாடகத்தில் அரசியல் சூதாட்டங்களும், ஆங்கிலேயர் பிரெஞ்சுப் போட்டிகளும் பேயாட்டமாடிய காலத்தில் தஞ்சை அரசிருக்கையைப் பெற்ற பிரதாபசிங் திறமையும் அரசியல் நுட்பமுடையவனாகவும், மக்கள் ஆதரவைப் பெற்றவனாகவும் விளங்கினான். தஞ்சையை அழியாமல் காத்தான்.

பிரதாபசிங், நவாபுக்குப் பணிய மறுத்தால் தஞ்சையைக் கைப்பற்றிவிட்டு பிரதாபசிங்குக்கு ஓய்வு ஊதியம் கொடுத்து, ஓய்வு பெறச் செய்தான். தஞ்சை மராட்டிய அரசுக்கு எதிராகக் கர்நாடக் நவாபு ஏற்படுத்திக் கொண்டிருந்த கொடுமைகளைக் கண்ணுற்ற மராட்டிய மன்னன் சாகு ஒரு படையெடுப்புப் பெருவெள்ளத்தை கர்நாடகத்தின்மீது திருப்பிவிட்டான். 50 ஆயிரம் வீரர்களுடன் வந்த மராட்டியப் படை கர்நாடகத்திலிருந்த நவாபு ஆட்சியைத் தகர்த்தது. தோசுதுஅலி செத்தான்; திருச்சியிலிருந்த ஆளுநர் சந்தாசாகிப் சிறைபிடிக்கப்பட்டுச் சதாராவுக்கு கொண்டு செல்லப்பட்டான்; பிரதாபசிங் தஞ்சை மன்னன் ஆனான்; இந்நிகழ்ச்சி தஞ்சை அரசுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. என்றாலும் ஐதராபாது நிசாமின் தலையீடும், பிரஞ்சுக்காரர்களின் தலையீடும் தஞ்சைக்குச் சோதனையாகவும் பிரதாபசிங்குக்கு அச்சுறுத்தல்களாகவும் அமைந்தன. எனவே, சந்தாசாகிப்-பிரஞ்சு-முசபர்சிங் கூட்டுக்கு எதிராக ஆங்கிலேயர் கூட்டில் சேர்ந்தான். ஆங்கிலேயர் நட்பைப் பெற்றான். கர்நாடகக் கொந்தளிப்பு தணிந்த பின்னர் தஞ்சை ஆங்கிலேயர் அரவணைப்புக்குள்ளியிருந்தது. பிரதாபசிங் இறக்கும்வரை தஞ்சையில் ஒருமைப்பாடும் விடுதலையும் பேணிக்காக்கப்பட்டிருந்தன.

பிரதாபசிங் எல்லைத் தகராறு காரணமாக இராமநாதபுரத்துடனும் புதுக்கோட்டையுடனுமான பகையை வளர்த்துக் கொண்டிருந்தான்.



## 8.12.7 துல்சாசி(1763-1787)



1763-இல் பிரதாபசிங் தனது இறப்புடன் தஞ்சையின் ஒருமைப்பாட்டையும் விடுதலையையும் அழைத்துச் சென்றான். மைசூர், கர்நாடக ஆட்சியாளர்களின் படையெடுப்புக்களாலும், கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் சூதாட்டங்களாலும் தஞ்சை அரசு தனது வலிமையை இழந்தது.

இவனுடைய ஆட்சி துவங்கியபோது கர்நாடகத்தில் ஐதர் அலியின் படையெடுப்பு ஏற்பட்டது. ஆங்கிலேயர் வேண்டுதல்களைப் புறக்கணித்துக் கொண்டு துல்சாசி ஒதுங்கி இருந்தான். என்றாலும் ஆங்கிலத் தளபதி கரூரைக் கைப்பற்ற அவன் அளித்த உதவிக்குப் பழிவாங்குவதாக1767-ல் ஐதர் அலி போர் நட்டத்துக்கு 40 இலட்சம் ரூபாய் கேட்டான். கொடுக்கத் தவறினால் நாட்டை எரித்துச் சாம்பலாக்குவேன்; குடிமக்கள் அனைவரையும், பிராமணர்களையும் வெட்டி வீசுவேன்' என்று எச்சரித்தான். இதைக் கேட்டு நடுங்கிய துல்சாசி ஐதருக்கு நாலு இலட்சம் ரூபாயும், நாலு யானைகளையும் கொடுத்து அமைதியை வாங்கினான். தஞ்சை காப்பாற்றப்பட்டது.

இராமநாதபுரத்துக்கும் தஞ்சைக்கும் எல்லைத் தகராறால் பகைமை பெருகியது. எனவே தஞ்சைப் படை இராமநாதபுரத்தில் புகுந்து பல பகுதிகளைக் கைப்பற்றியதுடன், வெற்றிவாகை சூடி, பொன்னும் பொருளும் கவர்ந்து வந்தது. நவாபின் துணையை நாடிய சேதுபதிக்கு அவன் உதவி செய்யவில்லை எனினும் கர்னாடக நவாபு 1773-இல் மறுமுறையும் வேறு காரணங்களைக் கூறிக்கொண்டு தொண்டைமானையும் ஏவிவிட்டு, ஆங்கிலேயர் துணையுடன் தஞ்சையைத் தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டான். மூன்றாண்டு நவாபின் ஆட்சியில் தஞ்சை மக்கள் பெரும் துன்புறுத்தல்களுக்குள்ளானார்கள். 57 1/2 இலட்சமாகவிருந்த வரியை நவாபு 85 இலட்சமாக உயர்த்தி மக்களின் துன்பத்தைப் பெருக்கினான். பொறுமையைச் சோதித்தான்.

இயக்குநர் மன்றத்தின் ஒப்புதலின்றி சென்னை ஆளுநர் தஞ்சைக்கு எதிராக நடந்து கொண்ட அக்கிரமத்தை அறிந்து தஞ்சை அரசனுக்குப் பதவி மீட்பு நடத்தும்படி இயக்குநர் மன்றம் சென்னை நிர்வாகத்துக்குக் கட்டளையிட்டது. எனவே, கர்நாடக நவாபின் கோன்மையை புறக்கணித்துக் கொண்டு கம்பெனியின் சென்னை ஆளுநர் நேரில் தஞ்சைக்குச் சென்று துல்சாசியை மறுமுறையும் தஞ்சை அரசனாக முடிசூட்டி வைத்தான். தஞ்சை அரசன் கிரீடத்தைப் பெற்றான். ஆனால் அதிகாரத்தை இழந்தான். பாவம் அம்மன்னன் உணரவில்லை. அவன் வாயார ஆங்கில ஆளுநரைப் பாராட்டியதுமின்றி,

நன்றிக்கடனாக நாகூர் உடன்பாட்டின்படி 277 கிராமங்களையும் கொடையாக வழங்கினான்



**குறிப்பு**

தஞ்சை அரசன் படையை வைக்கும் உரிமையை இழந்தான். தஞ்சையில் ஆங்கிலப்படை நிறுத்தப்பட்டது. அதன் செலவை, மன்னன் ஏற்றான். தஞ்சை அரசன் ஆங்கிலேயரின் கைப்பாவையானான். 1751-இல் கம்பெனியாருக்கு மேதகையீராக இருந்த தஞ்சையரசன் 1776-இல் கம்பெனியாரின் குறுநில மன்னன் நிலைக்குத் தாழ்ந்தான். சில ஆண்டுகளில் (1781) ஹைதரலியின் படையெடுப்பாலும், பஞ்சத்தின் கொடுமையாலும் தஞ்சை மக்கள் மேலும் சோதனைகளுக்குள்ளானார்கள். வாழ்நாள் முழுவதும் பல சோதனைகளால் வேதனைப்பட்ட துல்சாசி 1787-ல் உலகைவிட்டுச் சென்றான்.

## 8.12.8 அமர்சிங்கனும்(1767-1798) சரபோசியும்

துல்சாசியின் ஏற்பு மகன், சரபோசி சிறுவனாக இருந்தான். எனவே மன்னன் பிரதாபசிங்குக்கு இடங்கைக் குல மனைவிவழித் தோன்றிய இராமசாமி என்ற அமர்சிங் பகர் ஆளுநராக அமர்த்தப்பட்டன. பகர் ஆளுநர் பதவிக்கு வருவதைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் 1787-ல் ஒரு உடன்பாட்டைச் செய்து மேலும் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றனர். பகர் ஆளுநரைக் கம்பெனியின் வரிவசூல் காரியகர்த்தர் நிலைக்குத் தாழ்த்தினர். கம்பெனியின் கட்டாயத்தின் பேரில் கடின வரி வசூலும், கம்பெனி அதிகாரிகளின் கெடுபிடியும் ஏற்பட்டன. வரிக் கொடுமையால் மக்கள் ஊரைவிட்டு வெளியேறும் நிலை உருவாகியது. தங்களுடைய மடமையை உணர்ந்த கம்பெனியார் 1792-ல் மீண்டும் உடன்பாட்டைச் செய்து வரியைக் குறைத்தனர் என்றாலும் அதிகாரங்கள் இழந்த அமர்சிங்கன் பெயரளவில் மட்டும் பதில் ஆளுநராகத் தொடர்ந்தான்.

## 8.12.9 உரிமைப் போட்டி

பதில் ஆளுநர் பொறுப்பிலிருந்த அமர்சிங்கனுக்கு அரசபதவி மீது கவர்ச்சி ஏற்பட்டது. துல்சாசியின் புதல்வனான அவனைக் கீழ்க் குலத்துத் தொடர்பைக் காட்டி அரசுரிமை மறுக்கப்பட்டிருந்தது. (தாயார் இடங்கைக் குலத்தவன்) தனது உரிமையைப் புறக்கணித்துவிட்டுச் சரபோசியை மகவேற்பு எடுத்தது. ஏற்புடையதல்லவென்று வாதிட்டான். ஆளுநர் ஆர்ச்சிபால்டு காம்பல் 12 பண்டிதர்களின் துணையுடன் நடத்திய விசாரணையில் மகவேற்பு முறையற்றது என முடிவாக்கப்பட்டது. அமர்சிங்கனுக்கு அரச பதவி உறுதி செய்யப்பட்டது. சரபோசியின் உரிமைகளும் உடன்பாட்டின்படி பாதுகாக்கப்பட்டன. அமர்சிங் பொறுப்பை அதிகாரிகளிடம் ஒப்படைத்தான் அவனுடைய பொறுப்பற்ற ஆட்சியில் கடன் பெருகியது.

நீதி கைவிடப்பட்டது. மக்கள் பொறுக்க முடியாத துயருக்குள்ளானார்கள். அவர்கள் கிராமங்களைவிட்டு வெளியேறினர் கம்பெனியாரிடம் புகாரும் கொடுத்தனர்.

சரபோசி கவாட்ஸ் பாதிரியாரின் பாதுகாவலில் இருந்தான். காலம் செல்லச் செல்ல அமர்சிங் சரபோசயின் உரிமைகளை மீறினான். அவனுக்கு எதிராகப் பொருத்தமற்ற குற்றச்சாட்டுகளையும் எழுப்பினான். சரபோசியின் நிலமையைக் கண்டு வருந்திய கவார்ட்ஸ் பாதிரியார் சரபோசியின் உரிமையில் மறுபரிசீலனை செய்து, நீதி வழங்கும்படி கவர்னர் சனரல் காரன் வாலிசை வேண்டினார். அதன் பேரில் இயக்குநர் மன்றம் வழக்கை மறு விசாரணைக்கு எடுத்தது. அமர்சிங்கனைப் பதவி நீக்கம் செய்யவும், சரபோசிக்கு அரசுப் பதவி யளிக்கவும் கட்டளையிட்டது. 1798ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி சரபோசி தஞ்சை அரசன் ஆக்கப்பட்டான்.

## 8.13 இரண்டாம் சரபோசியின் ஆட்சி (1798-1833)

1798-ஆம் ஆண்டு கம்பெனியாருடன் உடன்பாடு செய்து தற்காலிகமாகச் சென்னையை கம்பெனியாரின் இருக்கையாக மாற்றி ஆட்சி செய்யவும். கம்பெனியாரின் விசாரணைக் குழுவின் முடிவை செய்யவும். தஞ்சையில் 1798சூன் மாதத்தில் ஆட்சியைத் துவக்கினான் இரண்டாம் சரபோசி. அரசபதவியைப் பெற்ற சரபோசி அதிகாரத்தைப் பெறவில்லை. 1798-ல் வெல்லெஸ்லியுடன் ஒப்பந்தம் செய்து ஓய்வு ஊதியம் பெற்றுத் தஞ்சை கோட்டையையும் வல்லத்தையும் வைத்துக் கொண்டு தஞ்சை நாட்டின் ஆட்சியை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தான். தஞ்சை, சென்னை, மாகாணத்துடன் இணைந்தது சரபோசியும், அமர்சிங்கனும், குடும்பத்தாரும் ஓய்வு ஊதியம் பெற்றனர். தஞ்சைக் கோட்டையிலிருந்த ஆங்கிலப்படை அமைக்கப்பட்டது. சரபோசி விரும்பும் படையை வைத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றான். சரபோசியும் அவனுடைய புதல்வன் சிவாசியும் மன்னர் என்ற பெயரை மட்டும் வைத்துக் கொண்டு தஞ்சைக் கோட்டைக்குள்ளிருந்தனர்.

### 8.13.1 சரபோசியின் சாதனைகள்

ஓய்வு பெற்றுத் தஞ்சை அரண்மனையில் பதுங்கிய சரபோசி ஓய்வு ஊதியத்தை வைத்துக் கொண்டு ஓய்வுக் காலத்தைக் கழிக்க ஆடம்பரத்தில் மூழ்கவில்லை. சுவார்ட்ஸ் பாதிரியாரின் அரவணைப்பில் வளர்ந்த நற்குணம் படைத்த அந்த இளவரசன் ஆங்கில இலக்கியத்தில் பற்றும் புலமையும் பெற்றிருந்தான். அவன் அறிவைப் பெருக்க பெருக்க அவனுக்கு அறிவுப் பசி எடுத்தது. அவன் பல துறைகளை நாடினான். பழைய ஆவணங்களையும் புத்தகங்களையும் திரட்டினான். கிட்டியவற்றைச் சரசுவதி மகால் நூலகத்தில் சேமித்தான். வேதாந்தம், காவியம், இலக்கியம், இசை, நடனம், கட்டடக்கலை, வான இயல்,

மருத்துவம் முதலிய பல்துறைகளைச் சார்ந்த 2200 சுவடிக்குமேல் அங்கே குவிந்தன. பெரும்பாலும் அவை சமற்கிருத மொழியில் படைக்கப் பெற்றிருந்தன. பிறமொழிகளிலு மிருந்தன. நாயக்கர் காலத்திலும், மாராட்டியர் ஆட்சிக் காலத்திலும் இயற்றப்பட்ட ஓலைச் சுவடிகளையும் பெற்றிருந்த சரசுவதி மகால் ஒரு பல்துறை ஆய்வுக் கூடமாக விளங்கியது. சரபோசி மன்னன் மருத்துவ ஆய்வில் மிகுதியாகக் கவனம் செலுத்தினான். அதன் விளைவாகத் தற்காலத்துக்குச் சரபோசி மருத்துவ நூற்கள் கிட்டுகின்றன. இந்துக்களுக்கும், கிறித்தவர்களுக்கும், இசுலாமியர்களுக்கும் அங்கே உயர் கல்வியுடன் ஆய்வு நடத்தும் கல்வி நிலையம் இயங்கியது.

கி.பி. 1826-ல் ஈபர் பாதிரியாருடன் சரசுவதி மகாலைப் பார்வையிட்ட இராபின்சன் அந்த ஆய்வுக் கூடத்தின் விளக்கம் வைக்கப்பட்டிருந்தது. அழகிய நூலகத்தில் மூன்று வரிசையாகத் தூண்கள் காணப்பட்டன. ஒரு புறத்தில் சாசி முதல் சிவாசி ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளிலான நூற்களைக் கொண்ட 10 அலமாரிகள், மராட்டிய சமற்கிருதச் சுவடிகளைக் கொண்ட இரண்டு அலமாரிகள் ஆகியவற்றை இராபின்சன் அங்கே கண்டார். நூலகத்தை அடுத்த அறையில் காற்றுப் பம்பு, மின் இயந்திரம், தந்த எலும்புக் கூடு, வான இயல் கருவிகள், சரபோசி மன்னன் நீண்ட காலமாக விரும்பிப் படித்துக் கொண்டிருந்த மருத்துவ நூற்களைத் தாங்கிய பல அலமாரிகள், சேர்த்து வைக்கப்பட்ட நாணயங்கள், ஓவியப் பூக்கள், உயிரியல் பொருட்டான ஓவியங்கள் முதலியவற்றை அவர் கண்டார்.

தஞ்சை சரசுவதி மகால் சரபோசி மன்னனின் சாதனைக்கு விளக்கமாகும். இன்பத்தில் வாழும் வசதிகளைப் பெற்றிருந்தும் ஆய்வுத் துன்பங்களை ஏற்று அரும்பணியாற்றிய அந்த அறிஞனின் புகழைச் சரசுவதி மகால் இறவாப் புகழாக்குகின்றது.

கி.பி.1805-ல் தஞ்சையில் சரபோசி மன்னன் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினான். தேவநாகரி எழுத்துக்களில் அச்சிடும் தொழில் அதில் நடைபெற்றது. பழஞ்சுவடி ஆய்வு மட்டும் அல்லாது சரபோசி அறப்பணிகளும் ஆலயப் பணிகளும் செய்துள்ளான். முகத்தம்மாள் பெயரில் இராமேசுவரம் சாலையில் ஒரு குளமும் ஒரத்தநாட்டில் ஒரு அன்னச்சத்திரமும் ஏற்படுத்தினான்.

## 8.13.2 சிவாசியும் (1833-1855) மராட்டியராட்சியின் முடிவும்

சரபோசியின் ஒரே மகன் சிவாசி ஈபர் பாதிரியாரைக் காப்பாளராகப் பெற்றிருந்து அவர்தம் வழியிலும் தனி வழியிலும் வளர்ந்தான். தாயாரின் செல்லப்பிள்ளையல்லவா! திருத்தமுடியாத அவனைச் சரபோசி கைவிட்டுவிட்டதால் உயர்கல்வி பெறவில்லை. உடல் ஆற்றலும், உள்ள ஆற்றலும் இல்லாது, அண்டியவர்களுக்கு வாரி

வழங்கி வாழ்ந்த அவனுடைய ஆட்சி 1855-இல் முடிவுற்றது. அவனுக்கு ஆண் வாரிசு இல்லாததால் 1856-இல் தஞ்சை ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

குறிப்பு

## 8.14 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

- விசய நகரத்தின் தோற்றம் குறித்து விளக்குக.
- குமார கம்பணனின் ஆட்சி முறையை விளக்குக.
- மதுரை நாயக்கர் பற்றி விவரிக்க.
- பாளையப்பட்டு ஆட்சிமுறை பற்றி விளக்குக.
- திருமலை நாயக்கர் வளர்த்த கலை வளர்ச்சியை விவரிக்க.

## 8.15 தொகுத்துக் காண்போம்

- விசய நகர மன்னர்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- நாயக்க மன்னர்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- நாயக்கர் கட்டடக்கலை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- சிவாசியின் படையெடுப்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 8.16 மேலும் அறிந்துகொள்ள

கே.கே.பிள்ளை - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்

K.V.Raman, Architecture in the vijayanagara Period.

# கூறு - 9

# ஆங்கிலேயர் ஆட்சி தமிழகத்தில் வேரூன்றல் - ஆங்கிலேயர் ஆட்சியில் சமூகநிலை, கல்வி நிலை, பொருளாதார நிலை – ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்த புலித்தேவன், கட்டபொம்மன் - மருது சகோதரர்கள் - வேலூர்க்கலகம்.

## 9:1 முன்னுரை

1749-இல் தஞ்சை பிரதாப்சிங்குக்கு எதிராகத் தோன்றிய அரசுரிமைப் போட்டியை ஆங்கிலேயர் பயன்படுத்தி கொள்ளிடத்தில்

கழிமுகப் பகுதியான தேவிகோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். இதனை அறிந்த சந்தா சாகிப்பு தஞ்சைப் போரை நிறுத்தினார். இதனைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் கடலூரைச் சார்ந்த திருவந்திபுரத்தைக் கைப்பற்றினார். தமிழகத்தில் ஏற்பட்ட அரசுரிமைப் போட்டிகள் அயலார் ஆதிக்கத்தை வரவழைத்தன. இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் செல்வாக்கு ஊடுருவலாயிற்று.

## 9:2 குறிக்கோள்கள்

- ஆங்கிலேயர் ஆற்காடு, தஞ்சை பகுதிகளைக் கையாண்ட முறையைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆங்கில ஆட்சியில் கல்வித்துறை, பொருளாதாரத்துறை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆங்கிலேயர்க்கு எதிராகப் போராடிய புலித்தேவர், கட்டபொம்மன், மருது சகோதரர்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 9.3 ஆங்கிலேயர் ஆட்சி தமிழகத்தில் வேரூன்றல்

டூப்ளே காலம் கருதிப் படையை அனுப்பி, விழுப்புரம், செஞ்சி ஆகியவிடங்களைக் கைப்பற்றிவிட்டு ஆற்காட்டுக்கு முன்னேறினார். காலம் தாழ்ந்து விழிப்படைந்த நாசர்சங் 16-12-1750 இரவில் ஏற்பட்ட திடீர்த் தாக்குதலுக்குப் பலியானான். அங்கே கைதியாக உடனிருந்த முசபர்சங் தக்காணத்தின் சுபேதார் ஆக்கப்பட்டான். நியாயம் இப்பொழுது முசபர்சங் பக்கம் சாய்ந்தது. கர்நாடகத்தின் உண்மையான நவாபாகச் சந்தாசாகிப்பை அவன் ஏற்றான். முசபர்சங் புதுசேரிக்குச் சென்று டூப்ளேயின் மரியாதைகளைப் பெற்று மகிழ்ந்து, புதுச்சேரியைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும், ஒரிசாக் கடற்கரையில் நிசாம் பட்டணத்தையும் பிரஞ்சுக்காரர்களுக்குவிட்டுக் கொடுத்தான். முசபர்சங் பிரெஞ்சுப் படையினரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு தனது தலைநகருக்குச் சென்றான். தக்காணத்துச் சுபேதாருக்குப் பெற்றுக் கொடுத்த வெற்றியும் அதனால் ஏற்பட்ட நெருங்கிய உறவும் பிரெஞ்சுக்காரர்களின் நிலையை உயர்த்திவிட்டது என்றும் கர்னாடகப் பிரச்சினைகளும் முடிவாகிவிட்டன என்றும் முகமது அலியும் ஆங்கிலேயர்களும் சுபேதாரிடம் சரண் அடைவர் என்றும் டூப்ளே தப்புக்கணக்கிட்டார்.

இதற்கிடையில் 1750 செப்டம்பரில் சாண்டேசு என்பார் தாவீது கோட்டையில் கவர்னர் ஆக்கப்பட்டார். வாய்வீச்சு வீரன் அல்லாது செயல் வீரராக விளங்கிய அவர் டூப்ளேயின் செல்வாக்கை முறியடிக்க முகமதலிக்கு ஊக்கத்தையும் உதவியையும் அளித்தார். முகமதலி டூப்ளேயுடனான சமரச முயற்சியைவிட்டுவிட்டுப் போருக்குத் தயாரானான். நிலைமையைப் புரிந்து கொண்ட டூப்ளே திருச்சியைக் கைப்பற்றுவதற்காகப் படையை அனுப்பி முற்றுகையிடச் செய்தார்.

பிரஞ்சுப் படையினரின் முற்றுகை நீடித்துக் கொண்டே சென்றது. முகமதலியின் துணைக்கு ஆங்கிலேயர்களுடன் மைசூர், தஞ்சை அரசர்களும், மராட்டிய ஆளுநர் முராரிராவும் நின்றனர். இருதரப்புப் படைகளும் மோதின. முகமதலியின் உதவிக்காக கிளைவின் தலைமையில் வங்கத்திலிருந்து வந்த ஆங்கிலப்படை சந்தாசாகிப்பின் கவனத்தைத் திருப்புவதற்காக அவனுடைய தலைநகரான ஆற்காட்டை முற்றுகையிட்டு அதைக் கைப்பற்றியது. சந்தாசாகிப்பு இக்கட்டான நிலையில் மாட்டினான். தனது தலைநகரை மீட்பதற்குத் திருச்சியிலிருந்து ஒரு படைப்பிரிவை ஆற்காட்டுக்கு அனுப்பினான். ஆற்காட்டுக்குச் சென்ற அப்படையை கி.பி.1751-ல் கிளைவ் புறமுதுகு காட்டச் செய்தார். கிளைவின் இப்புதிய சாதனை அவருடைய புகழுக்கும், ஆங்கிலேயர்களின் வலிமைக்கும் வழி வகுத்தது. பிரஞ்சுக்காரர்களின் வரலாற்றின் திருப்பத்துக்கும் அது அறிகுறியாகும். ஆங்கிலக் கூட்டுப்படையினர் பிரஞ்சுக்காரர்களை ஆரணியிலும் காவிரிப்பாக்கத்திலும் தோற்கடித்தனர். பிரெஞ்சுத் தளபதி அதிர்ச்சி அடைந்தார். அவர் செயல் அற்றவர் ஆனார். கிளைவின் தலைமையில் ஆங்கிலப்படை, உதவிக்காகத் திருச்சிக்கு விரைந்தது. நிலைகுலைந்த பிரஞ்சுத் தளபதி படையைச் சீரங்கம் தீவில் செலுத்தி ஒளிந்தார். அவரைக் காப்பாற்ற டூப்ளே எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை. வாலிகொண்டபுரத்தில் அவர் தனது படையுடன் சரண் அடைந்தார். எதிரிகளின் தயவை நம்பிய சந்தாசாகிப்பும் சரண் அடைந்தான். அவன் தலை வெட்டி வீழ்த்தப்பட்டது. வலிமைக்கு முன் உரிமை செத்தது. டூப்ளேயின் திட்டங்கள் தோற்றன. அவருடைய மனக்கோட்டைகள் உடைந்தன. பிரஞ்சுக்காரர்களுக்குப் புதுச்சேரியும் செஞ்சியும் மிஞ்சின.

டூப்ளே தோல்வியை ஒப்புக் கொள்ளாது சூழ்ச்சிகளைப் பயன்படுத்தித் துணை பலம் திரட்டிப் போராட்டத்தைத் தொடர்ந்தார். தஞ்சாவூர் அரசனை ஆங்கிலேயர் கூட்டிலிருந்து விலக்கினார். மைசூர் மன்னனையும், மராட்டியத் தலைவன் முராரியையும் அவர் வலையில் சிக்க வைத்தார்.

## 9.3.1 நஞ்சராசன் படையெடுப்பு

முகமதலிக்கு அளித்த உதவிக்குக் கைமாறாக மதுரையிலும், திருச்சியிலும் உரிமை கோரி நஞ்சராசன் படையெடுத்தான். நஞ்சராசன் திருச்சிமீது பயனற்ற பல தாக்குதல்களை நடத்தினான். இப்போது நஞ்சராசன் பக்கம் நின்று பிரஞ்சுக்காரர்களும், முகமதலி பக்கம் நின்று ஆங்கிலேயர்களும் வலிமைச் சோதனை நடத்தினர். டூப்ளேயின் முயற்சிகள் தோல்வியடைந்தன.

கர்நாடகத்தில் முகமது அலி தனது உரிமையை நிலைநாட்டிக் கொண்டான். அங்கே ஆங்கிலேயர்களின் செல்வாக்கு எதிர்ப்பற்று நின்றது. ஐதராபாதில் முசபர்சங் கொல்லப்பட்டு சலபத்சங் கபேதார்

பதவியைப் பெற்றிருந்தான். ஐதராபாத்தில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு இருந்தது. இந்நிலையில் டூப்ளே தாய்நாட்டுக்கு அழைக்கப்பட்டார். அவர் நாடு திரும்பிய பின்னர் ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் உடன்படிக்கை செய்ய அனுமதி பெற்றனர். இவ்வமைதி நீடிக்கவில்லை.



குறிப்பு

## 9.3.2 மூன்றாம் கர்நாடகப் போர்

கர்நாடக வெற்றிக்குப்பின் இராபர்ட் கிளைவ் தாய்நாடு சென்றுவிட்டு கி.பி.1775-இல் இந்தியா திரும்பினார். தக்காணத்தில் பிரஞ்சு தளபதி புசி அடைந்திருந்த செல்வாக்கு ஆங்கிலேயர்களை உறுத்தியது. இராபர்ட் கிளைவ் தாவீது கோட்டையில் துணை ஆளுநர் பதவியில் அமர்த்தப்பட்டார்.

ஐரோப்பாவில் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஏழாண்டுப் போர்(1756-63)ஏற்பட்டது. அதன் தொடர்பால் இந்தியாவில் இருவரும் மோதிக் கொண்டனர். இவ்வமயம் இந்தியாவில் ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் இருபிரதேசங்களில் போட்டியிட்டு மோதினர். இ∴து இறுதி வலிமைப் போட்டியாகும். வடக்கில் வங்காளமும் தெற்கில் கர்நாடகமும் போர் முனைகளாயின.

வங்காளத்து நவாபு ஆங்கிலேயருக்குச் சொந்தமான கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்டதால் தாவீது கோட்டையில் இருந்த இராபர்ட் கிளைவ் சென்னையிலிருந்த ஆங்கிலப் படையையும் அழைத்துக் கொண்டு கல்கத்தாவுக்குச் சென்றார். டூப்ளேக்குப் பின் புதுச்சேரியில் பிரஞ்சுக் கவர்னராகவிருந்த லாலி கைப்பற்றினார். அவர் தஞ்சைக்குச் சொந்தமான நாகூர், திருவாரூர் முதலிய இடங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு பொருள் சேர்க்கும் நோக்குடன் தஞ்சாவூரையும் தாக்கிவிட்டுச் சென்னையைத் தாக்கும் வாய்ப்பை நோக்கி இருந்தார். ஐதராபாத்திலிருந்த புசியைத் துணை சேர்த்துக் கொண்டு அவர் நிலையில் மாட்டிக் கொண்டனர். கிளைவ் தனது திறமையைப் பயன்படுத்தி நிலைமையைச் சரிக்கட்டினார்.

ஐதராபாத்திலிருந்து புசி, லாலியின் உதவிக்காகச் சென்னைக்கு சென்றிருந்தார். எனவே கிளைவ் வங்காளத்திலிருந்து ஒரு படையைப் போர்டு என்பவர் தலைமையில் ஐதராபாத்துக்கு அனுப்பினார். அவர் பிரெஞ்சுக்காரர்களைக் தோற்கடித்து வட சர்க்காரைக் கைப்பற்றினார். மேலும் கி.பி.1760-இல் சர் அயர்க்கூட் என்பவர் தலைமையிலான ஆங்கிலப்படை பிரஞ்சுக்காரர்களை வந்தவாசியில் முறியடித்தது. கி.பி.1760 ஏப்ரல் நாலாம் நாளுக்குள் பாண்டிச்சேரி, செஞ்சி ஆகிய எல்லாவற்றையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அயர்கூட்டின் அபாயம் பாண்டிச்சேரியையும் மோதவிருந்தது. அதை உணர்ந்த லாலி மைசூர்ப் படையின் தளபதியாக இருந்தார் என்றாலும், காலநிலையைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்கள் பிரஞ்சுக்காரர்களைப்

பாண்டிச்சேரிக்குள் அடைத்தனர். தரைவழியாகவும் தாக்குதலை முடுக்கினர். திணறடிக்கப்பட்ட பிரஞ்சுக்காரர்கள் கி.பி.1761-இல் புதுச்சேரியையும் செஞ்சியையும், மேற்குக்கரையில் உள்ள மாகியையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டுச் சரணடைந்தனர். பிரஞ்சுக்காரர்கள் முழுமையாக முறியடிக்கப்பட்டனர். எனினும் ஐரோப்பாவில் ஏழு ஆண்டுப் போர்களின் முடிவில் (1763) ஏற்பட்ட பாரிஸ் உடன்பாட்டின்படி புதுச்சேரியையும் சந்திரநாகூரையும் பிரஞ்சுக்காரர்கள் திரும்பப் பெற்றனர்.



### 9.3.3 ஆற்காடு தஞ்சை அரசுகளுடன் ஆங்கிலேயர் கையாண்ட கொள்கை

தமிழகத்தில் ஏற்பட்ட அரசுரிமைப் போட்டிகள் அயலார் ஆதிக்கத்தை வரவழைத்தன. அரசுரிமைப் போட்டிகளின் போதும், உள்போட்டிகளின் மீது தஞ்சை, கர்நாடக அரசுகள் ஆங்கிலேயர் உதவியை நம்பி வரவழைத்தன. ஆங்கிலக் கம்பெனியார்கள் உதவியாளர்களாகவும், நடுவர்களாகவும் சென்றனர். குரங்கின் பங்கீட்டுக் கொள்கையைக் கையாண்டு, உதவிகள் அளித்து வழக்குகளைத் தீர்த்து இறுதியில் இரு அரசுகளுக்கும் முற்றுப்புள்ளியிட்டுத் தமதாக்கினர்.கி.பி.1798 முதல் 1805வரை கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லஸ்லியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். கர்நாடகத்தில் ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட போட்டியின்போது தஞ்சை அரசரையும், கர்நாடக நவாபையும் அரசியல் சூதாட்டத்தில் சூது காய்களாகப் பயன்படுத்தினர். ஆங்கிலேயர் தங்களுடைய நிலையை மாற்றிக் கொண்டு நாட்டரசர்களை வைத்துப் பொம்மலாட்டமாடினர். 19ஆம் நூற்றாண்டில் கிரீடத்துக்காக ஆங்கிலேயர்களின் வாயிலில் மண்டியிட்ட அவல நிலை நாட்டரசர்களுக்கு ஏற்பட்டது.

1736-இல் துக்கோசி மறைந்த பின்னர் தஞ்சையில் அரசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இறுதியில் கசானாபாயிக்கு அரசுரிமை கிட்டியது. விரைவில் சாகுசி என்பவன் அரசுரிமையைப் பறித்துக் கொண்டான். கர்நாடக நவாபு அன்வார் உதீனின் குறுக்கீட்டால் சாகுசி- பிரதாப்சிங் போட்டி ஏற்பட்டது. பிரதாப்சிங் அரசன் ஆனான். எனவே கி.பி.1740-இல் பூனாவில் இருந்த மராட்டியர்களின் உதவியைச் சாகுசி வரவழைத்தான். எனினும் போட்டி ஓயவில்லை. எனவே சாகுசி உதவிக்காக ஐரோப்பியக் கம்பெனியாரின் கதவுகளைத் தட்டினான். அவன் தேவிக்கோட்டையைப் பரிசாகக் காட்டி ஆங்கிலேயர் உதவியை நாடினான். கி.பி.1749-இல் தேவிக்கோட்டையை ஆங்கிலேயர் பெற்றனர் என்றாலும், பிரதாப்சிங் தஞ்சை அரசனாகத் தொடர்ந்தான். சாகுசி ஏமாற்றப்பட்டான். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தனித்திறம் காட்டப்பட்டது. ஆங்கிலேயர்களின் நட்பைப் பெற்ற பிரதாப்சிங் அந்த நட்பில் உறுதியான பற்றுதல் கொண்டிருந்தான்.

கி.பி. 1740-இல் கர்நாடகத்தில் பாய்ந்த மராட்டியப் படையெடுப்பு வெள்ளம் கர்நாடகத்தைக் கலக்கி மறித்தது. ஆற்காட்டு அரசியலில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அதனை அன்வார் உதீன் பயன்படுத்திக் கொண்டான். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும், பிரஞ்சுக் கம்பெனியாரும் அதனைத் தங்களுடைய வலிமைச் சோதனைக்குப் பயன்படுத்தினர். பிரஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற்றிருந்த சந்தாசாகிப்பு 1751-ல் தஞ்சை அரசனின் உதவியையும் நாடினான். ஆனால் பிரதாப்சிங் ஆங்கிலேயர் முகமதலி கூட்டினையே பற்றிக் கொண்டு ஆங்கிலேயர் நட்பினை உறுதிப்படுத்தினான்; முகமது அலிக்கு உதவினான். இரண்டாம் கர்நாடகப் போரில் முகமது அலி ஆங்கிலேயர், தஞ்சை அரசர் துணைகளுடன் கர்நாடகத்தில் அரசுரிமையை மீட்டான். இவ்வாறு ஆங்கிலேயர்கள் தஞ்சையிலும் ஆற்காட்டிலும் நட்பைப் பெற்றுத் தங்களுடைய செல்வாக்கை நிலைநாட்டினர்.

முகமது அலியின் தவறுதல்களால் ஏற்பட்ட நந்திராசன் படையெடுப்பும், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் போட்டியால் எழுந்த மூன்றாம் கர்நாடகப் போரும் நிலைமையைத் திசை திருப்பின. மூன்றாம் கர்நாடகப் போரின்போது தஞ்சை அரசனுக்குப் பிரஞ்சுக்காரர்களைத் தோற்கடிக்கும் ஆற்றலிருந்தது. அவன் கர்நாடக நவாபைவிட ஆற்றல் மிக்கவனாக விளங்கினான் என்றாலும் மூன்றாம் கர்நாடகப் போருக்குப்பின் முகமது அலி தஞ்சையைக் கைப்பற்ற எண்ணினான். ஆங்கிலேயர்கள் நடுவராகச் சென்று நவாபுக்குச் சாதகமாக 1762-63இல் தஞ்சை உடன்பாட்டை ஏற்படுத்தினர். (அதற்குள் பிரதாபசிங்கனும் மறைந்தான்). அதன்படி தஞ்சையில் தங்களது மேலாண்மை ஆதிக்கத்தைச் செலுத்தினர். பிரதாப்சிங் நவாபுக்குக் கொடுத்த திறைவழி ஆங்கிலேயர்களுக்குப் பண உதவி கிட்டியது. ஆங்கிலேயர்களுக்குத் தேவிக்கோட்டை உறுதி செய்யப்பட்டது. தஞ்சை அரசன் ஆங்கிலேயர்களின் பாதுகாவலில் வந்தான். ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் தஞ்சையில் பரவியது.

முகமதலியின் பேராசை 1763-க்குப் பின்னரும் குறையவில்லை. காவிரிப்பாசனத்தில் குறுக்கிட்டான். தஞ்சையைத் தாக்குவதற்காக ஆங்கிலேயர்களின் துணையை நாடினான். தக்காணத்து மராட்டியர்களைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேயர் முதலில் தயங்கினர் என்றாலும் கர்நாடகத்தில் அமைதி காக்க வேண்டியது தங்களுடைய பொறுப்பு எனக் கூறினர். நவாபுடன் சேர்ந்து தஞ்சைமீது படையெடுத்தனர். வெற்றி கிட்டா நிலையில் உடன்பாடு செய்து கொண்டனர். ஆங்கிலேயர்கள் தஞ்சையில் படைப்பாதுகாவல் உரிமைகளையும் வாணிபச் சலுகைகளையும் பெற்றனர்.

தஞ்சை அரசன் டச்சுக்காரர்களுடன் தொடர்பு கொண்டுள்ளான் என்று காரணம் காட்டித் தஞ்சையைக் கைப்பற்ற நவாபு ஆங்கிலேயர் துணையை மறுமுறையும் நாடினான். அவர்களுக்குப் பணமும் பரிசும் காட்டினான். எரியும் வீட்டில் பிடுங்குவது இலாபம் எனக் கருதி

ஆங்கிலேயர் நவாபின் உதவிக்குச் சென்றனர். தஞ்சைமீது படையெடுத்து வெற்றிகண்டு அரசன் துல்சாசியைப் பதவி நீக்கம் செய்து, அரசனையும் குடும்பத்தாரையும் கைதியாக்கினர். தஞ்சை நவாபின் ஆட்சிக்குட்பட்டது. ஆங்கிலேயர்களுக்கு அவாவூட்டக் காட்டிய பணம் கிட்டியது எனினும் நவாபின் வலிமையைப் பெருக்கிய ஆங்கிலேயர் அரசு தந்திரத்தில் தவறினர்.

ஆங்கிலக் கம்பெனியார்கள் தங்கள் தவற்றை உணர்ந்தனர். துல்சாசி பதவி நீக்கப்பட்ட அநியாயத்தை இயக்குநர் மன்றம் அறிய வந்து, அதிர்ச்சி அடைந்தது. சென்னை ஆளுநருக்குக் கண்டனம் தெரிவித்ததுடன் தஞ்சை அரசனைப் பதவியில் அமர்த்தவும் கட்டளையிட்டது. எனவே சென்னைக் கம்பெனி நிர்வாகம் தஞ்சை நவாபுக்கிருந்த இறைமாட்சி அதிகாரத்தைப் புறக்கணித்துவிட்டு எதிர்ப்பின்றி, துல்சாசிக்குப் பதவி மீட்பு செய்தது. துல்சாசி கிரீடத்தைப் பெற்றான். ஆனால் உரிமைகளைப் பெறவில்லை. தஞ்சையில் ஆங்கிலப்படை நிறுத்தப்பட்டது. தஞ்சை அரசர் நிலைமை சிற்றரசு நிலைக்குத் தாழ்ந்தது. நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்ட ஆங்கிலேயர் நாகூரையும், 277 கிராமங்களையும் பெற்றனர். தஞ்சைமீது நவாபுக்கு இருந்த இறைமாட்சி உரிமையைப் (கோன்மை) பெயரளவுக்கு ஆக்கினர்.

கர்நாடகத்தில் வீம்பைக் காட்டிக்கொண்டிருந்த முகமது அலி இரண்டாம் மைசூர்ப் போர் (1780-84) துவங்கியதும் திணறினான். அவன் ஆங்கிலேயர்களின் துணையை நாடினான். அவர்களும் உதவினர். ஆனால் 1787-இல் கர்நாடக ஒப்பந்தம் ஆங்கிலேயர்களின் அதிகாரத்தைப் பெருக்கியது.

1787-இல் துல்சாசி மறைந்ததும் பகர் ஆளுநர் அமர்சிங்கனுக்கும் ஏற்பு மகன் சரபோசிக்கும் உரிமைப் போட்டி ஏற்பட்டது. அமர்சிங்கனின் கவர்ச்சிப் பொருட்களால் கவரப்பட்ட கம்பெனியார் சரபோசியைப் புறக்கணித்தனர். அமர்சிங்கனுக்கு உதவி, இரு உடன்படிக்கைகளைத் திணித்து உரிமைகளைப் பெருக்கிக் கொண்டனர் மன்னரின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன.

மூன்றாம் மைசூர்ப் போரின் முடிவில் 1792-இல் முகமதலியுடன் ஆங்கிலேயர் ஒப்பந்தம் செய்து நவாபின் உரிமைகளைப் பறித்துக் கொண்டனர். 1792-இல் கர்நாடக ஒப்பந்தம் இருவாய்க்கூருடைய கத்தி போன்றதாகும். முகமதலி இருதலைக் கொள்ளி எறும்பின் தலைமையில் சிக்கினான். கர்நாடகத்தின் மீது ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. (திப்புவுடன் உடன்பாடு செய்து திண்டுக்கல்லையும், பாரா மஹாலையும் ஆங்கிலேயர் பெற்றனர்). வெல்லசலியின் நாடு சேர்க்கும் கொள்கை இரு அரசுகளையும் ஆங்கிலேயர் இணைத்துக் கொள்ள வழிவகுத்தது.

## 9.4 ஆங்கிலேயா் ஆட்சியில் சமூகநிலை - கல்வி நிலை - பொருளாதார நிலை



**கி.பி.** 1498 ஆம் ஆண்டில் வாசுகோடகாமா தன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு இந்தியாவுக்கு வரும் வழியைக் கண்டது முதல், பல ஐரோப்பிய நாட்டினரும் ஒருவா் பின் ஒருவராக இங்கே வரத் தலைப்பட்டனா். அவா்களிடையே ஏற்பட்ட வணிகப் போட்டியில் இறுதியாக வெற்றி கண்ட ஆங்கிலேயா் விரைவில் நாடாளும் பெருநிலையையும் அடைந்தனா். கிழக்கிந்திய வணிகக் கழகத்தின் ஆளுகையிலும் பின்னா் ஆங்கில அரசின் நேராட்சியிலும் இந்தியப் பெருநாடு இருந்ததன் விளைவாக இந்தியா முழுவதிலும் அதன் செல்வாக்கு ஊடுருவலாயிற்று. சமூகம், பொருளாதாரம், சமயம், கல்வி போன்ற அனைத்துத் துறைகளிலும் ஆங்கிலேயரின் செல்வாக்கு ஏற்படலாயிற்று.

### 9.4.1 சமுதாயத் துறை

எண்ணற்ற சமயங்கள் கொண்ட இந்தியாவில் கிறித்தவ சமயமும் இடம்பெற்றது. ஐரோப்பியா் தமிழ்ப் பெண்களோடு கொண்ட உறவினால் "ஆங்கில இந்தியா்" என்னும் புது வகுப்பாா் தோன்ற இடமேற்பட்டது. 1850இல் ஏற்பட்ட இனத்தடைச் சட்டம் சமயம் மாறியோருக்குப் பாதுகாப்பளித்தது. 1856இல் இந்து விதவைகள் மறுமணம் செய்து கொள்ள உரிமையளிக்கும் சட்டம் நிறைவேறியது. 1876-78 ஆண்டுகளில் பல்லாயிரம் மக்களின் உயிரைக் குடித்த கொடும் பஞ்சத்தினைப் பல நிருமாணப் பணிகள் மூலம் அரசு ஒழித்தது. இப்பணிகளில் ஒன்றே பக்கிங்காம் கால்வாய் வெட்டப்பட்டதாகும். கிராமங்களில் வரி வாங்கும் உரிமை படைத்திருந்த அதிகாரிகள் செய்த கொடுமைகளிலிருந்து மக்களை விடுவித்தனா்.

### 9.4.2 கல்வித்துறை

முறையான கல்வி நிலையங்கள் ஏற்பட்டன. குறிப்பாகக் கிறித்துவப் பாதிரிமாா்கள் செய்த கல்விப் பணியில் அறிவியல்,வரலாறு தத்துவம் போன்ற பல துறையறிவும் மக்கட்குக் கிடைத்தது. மாநிலக் கல்லூரி உருவாயிற்று. பொறியியல் ஆகியவை கற்பிக்கப்பட்டதோடு இளங்கலைப்பட்டமும் அளிக்க இடமிருந்தது. பொறியியற் கல்லூரி (1834) மருத்துவக் கல்லூரி (1835) கிறித்துவக் கல்லூரி (1837) ஓவியக் கல்லூரி (1850) பச்சையப்பன் கல்லூரி (1841) ஆகியவை அடுத்தடுத்து உருவாயின. 1866-இல் பெண்கள் பள்ளிகள் திறக்கப்பட்டன.

ஆங்கிலக்கல்வி, பரந்த வெளியுலகத் தொடா்பையும், புதிதாக ஐரோப்பாவில் வளா்ந்து வந்த அறிவியல் தொடா்பையும் தமிழா்கட்கு ஏற்படுத்திற்று. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பிரெஞ்சுக்

கோட்பாடுகள் இங்கே புதிய எழுச்சியை ஊட்டின, பகுத்தறிவோடு எதனையும் பார்க்கத் தலைப்பட்டனர்.



உயர் கல்விக்கே முதலிடம் கொடுத்த அவர்கள் கல்வியைப் பரவலாக்க முன்வரவில்லை. இந்த நடுத்தர மக்கள் ஆங்கிலத்தின் வாயிலாக ஆட்சியாளரிடமும் தாய்மொழி வாயிலாக மக்களிடத்தும் தொடர்பு கொண்டனர். இதனால் தேசிய உணர்வு வளர்ந்தது. விடுதலைப் போராட்டம் வெற்றிபெற ஆங்கிலக் கல்வியே அடிப்படையாகும்.



## 9.4.3 பொருளாதாரத்துறை

பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு இயந்திரங்கள் கொணரப்பட்டன: தொழிற்சாலைகள் பெருகியமையால் கிராம மக்கள் நூற்றுக்கணக்கில் நகரங்களை நோக்கிச் சென்றனர். இதனால் புதிதாக ஆலைத் தொழிலாளர் என்னும் பிரிவினர் ஏற்பட்டனர்.

நாட்டின் தலைமைத் தொழிலான உழவு செழிக்கும் வண்ணம் மேட்டூர், பாபநாசம் அணைக் கட்டுகளும் ஆறுகளும், கால்வாய்களும் சீர்மை பெற்றன. காவிரிப் பகுதியில் மேலணையும் கீழணையும் கட்டப்பட்டன.

திருநெல்வேலி போன்ற இடங்களில் பருத்தி பயிரிடப்பட்டது. காப்பி, தேயிலை, உற்பத்தியும் பெருகிற்று. உயர்வகைப் பருத்திகள் வெளிநாட்டினின்றும் கொண்டு வரப்பட்டன. இதனால் துணி உற்பத்தி வளர்ந்தது. இதன் விளைவாகப் பணப்பயிர் பயிரிடும் நிலை உருவாயிற்று. வரியை அரசே ‘ரயத்து வாரி’ முறையில் கணக்கிட்டு வாங்கியதால் கிராம சபைகள் நலிவுற இடமேற்பட்டது.

பாளையக்காரர்களின் கையிலிருந்து நீதி நிருவாகத்தையும் படையுரிமையையும் அரசு விடுவித்துத் தானே பொறுப்பேற்றது. ஊருக்கொரு வரி, சாதிக்கு ஒரு வரியென்ற பழைய நிலையை மாற்றி ஒருமைப்பாடு கண்டது குறிப்பிடத்தக்கது.

## 9.5 ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்த புலித்தேவன்

தமிழக விடுதலைப் போரை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆங்கிலேயே எதிர்ப்பில் முதலாவதாக ஈடுபட்டவர் பூலித்தேவர் எனப்படும் புலித்தேவர் ஆவார். அவரே ஆங்கிலேயரை எதிர்த்து நின்ற முதல் விடுதலை வீரர் என்பர் வரலாற்று ஆசிரியர்கள். பாளையக்காரர்கள் மேலைப்பிரிவினர், கீழைப் பிரிவினர் என இரு பிரிவினராக விளங்கினர். மேலைப் பிரிவு பாளையங்களில் புலித்தேவரின் நெற்கட்டான் சேவல் குறிப்பிடத்தக்கது.

கால்டுவெல் பாதிரியார் புலித்தேவா் ஆங்கிலேயருக்கும், நவாபுவிற்கும் அடங்கிக் கப்பம் செலுத்த மறுத்தார் என்று குறிப்பிட்டுள்ளார். புலித்தேவரைப் பணிய வைக்க ஆங்கிலேய கா்னல் ஹெரான் என்பவா் முயன்றார். புலித்தேவருக்கு எதிராகப் படை எடுத்துச் செல்லும்படி நவாபின் பிரதிநிதி மாபூஸ்கான் ஹெரானைத் தூண்டினார். ஹெரான் தம்மை வந்து சந்திக்கும்படி புலித்தேவருக்கு ஆணையிட்டார். புலித்தேவரோ சந்திக்க மறுத்ததோடு திறையும் செலுத்த மறுத்துவிட்டார்.

புலித்தேவரோடு போரிடுவதற்காக ஆங்கிலப்படை திருநெல்வேலி நோக்கிச் சென்றது. நெல்லை சென்ற படை புலித்தேவரின் வலிமையின் முன் நிற்க முடியவில்லை. நவாபு முகமது அலி ஆங்கிலப் படையுடன் தமது படைகளையும் சோ்த்து மாபூஸ்கான் தலைமையில் புலித்தேவா் மீது போா் தொடுத்தார். இப்போரிலும் நவாபு படை தோல்வியடைந்தது. இதன்பின் புலித்தேவா் மேலைப் பாளையக்காரா்களை ஒன்று திரட்டிய பொழுது சிவகிரிப்பாளையம் தவிர மற்ற பாளையங்கள் இணைந்தன. கீழைப் பாளையக்காரா்களில் எட்டயபுரமும் பாஞ்சாலங்குறிச்சியும் இவா் அணியில் சேரவில்லை.

புலித்தேவரும் அவருடைய கூட்டணியினரும் மதுரையையும் திருநெல்வேலியையும் ஒரே நேரத்தில் தாக்குவது என்று முடிவு செய்தனா். 1757-இல் பெற்ற திருநெல்வேலி வெற்றி சிறிது காலமே நிலைத்தது.

1759-இல் புலித்தேவரின் நெற்கட்டான் சேவல் தாக்குதலுக்கு ஆளாயிற்று. வாசுதேவநல்லூா் முற்றுகையிடப்பட்டது. புலித்தேவருக்கு எதிராகத் திருவாங்கூா், சேத்தூா், ஊத்துமலை, சுரண்டை ஆகிய பாளையக்காரா்கள் ஒன்று சோ்ந்தனா். யூசுப்கான் புலித்தேவரை அந்த நல்லூா் என்னும் இடத்தில் தோற்கடித்தார். நெற்கட்டான் சேவல், வாசுதேவநல்லூா் பனையூா் ஆகியவை யூசுப்கானின் கீழ் வீழ்ந்தன.

1764 வரை யூசுப்கான் ஆட்சி செலுத்தினார். அவா் மறைவிற்குபின் புலித்தேவா் தன் பாளையத்தில் அமா்ந்தார். கடலாடியில் தன் இறுதி வாழ்நாளைக் கழித்தார் என்று கருதப்படுகிறது.

## 9.6 வீரபாண்டிய கட்ட பொம்மன்

கட்டபொம்மன் 1790 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாள் பாஞ்சாலக் குறிச்சியில் ஆட்சியில் அமா்ந்தார். கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்ப்பதற்குரிய காரணங்கள் பின் வருமாறு

1) பாஞ்சாலக் குறிச்சி விடுதலை வேட்கைப் பாளையமாகும். ஆகவே அதை ஆட்சி செய்து வந்த கட்டபொம்மன் இயல்பிலேயே விடுதலை

உணர்வு கொண்டிருந்தார் அதனால் அவர் ஆங்கிலேயருக்கு அடி பணியவில்லை



(2) கட்ட பொம்மன் மருது பாண்டியர் கூட்டிணைப்பால் இணைந்தார் மருது பாண்டியர் அப்போது சிவகங்கையில் ஆங்கிலேயரை எதிர்த்து வந்தனர். அவர்களது நட்பு இவருக்குப் பலமாக இருந்ததால் ஆங்கிலேயரை எதிர்க்க முற்பட்டார்.

**குறிப்பு**

(3) கலெக்டர் ஜாக்சனின் அடாவடிச் செயல்கள், அத்து மீறல்கள் கட்ட பொம்மனைத் தட்டிவிட்டது போல அமைந்துவிட்டது. இது தூங்கும் புலியினை இடறுவது போலாகும். ஆகவே அவர் ஆங்கிலேயரை எதிர்க்கலானார்.

(4) ஆங்கிலேயரின் வரிவிதிப்பு முறையும், அதை வசூல் செய்யும் விதமும் பாளையங்களை பயங்கர சூழலில் கொண்டு போய்விட்டது. அதை எதிர்த்துப் பாளையக்காரர்களின் தலைவனான கட்டபொம்மன் ஆர்ப்பரிக்கலானார்.

(5) கட்ட பொம்மன் தன் தாயக மக்கள் கட்டும் வரிப் பணம் குறிப்பாக நிலவரி மாற்றானான ஆங்கிலேயரிடம் போகக் கூடாதென்று முழு மூச்சாக எதிக்கலானார். ஆங்கிலேயர் அதை ஒப்புக் கொள்ளவில்லை.

(6) குறிப்பாக ஆங்கிலேய அதிகாரிகள் கட்டபொம்மனை சட்டங்கள் கொண்டு அவமானப்படுத்தினர். தன் மானம் கொண்ட அம்மாவீரனால் அவர்களது தரக் குறைவான நடவடிக்கைகளை தட்டிக் கேட்காமல் இருக்க முடியவில்லை. எனவே அவர் ஆங்கிலேயரை அடித்தளத்திலேயே எதிர்க்கலானார்.

## 9.6.1 மக்காலேயின் படையெடுப்பு

எழுச்சி கொண்ட வீரர்களை வீழ்ச்சியடையச் செய்ய வேண்டும் என மக்காலே என்பாரின் தலைமையில் ஒருபடை கடையநல்லூர் வந்து சேர்ந்தது. ஊமைத்துரையின் படைகள் அப்படையினைத் தாக்கின. மக்காலே தாக்குப் பிடிக்க முடியாமல் மறுநாளே பாளையங் கோட்டைக்குப் பின் வாங்கினார். ஆங்கிலேயர் தங்களை வலிவுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டி மேலும் படைகளை வரவழைத்தனர். எனினும் மக்காலே 1801 ஆம் ஆண்டு மார்ச் இறுதியிலும் ஏப்ரல் ஆரம்பத்திலும் நடைபெற்ற மற்றொரு போரிலும் தோல்வியே கண்டார்.

## 9.6.2 அக்னு படையெடுப்பு

அக்னு என்பாரின் தலைமையில் பெரும்படையொன்று அவர்களை அடக்க 1801-ஆம் ஆண்டு மேத் திங்களில் அனுப்பப்பட்டது. போர்

கடுமையாக நடைபெற்றது. அந்தப் பாஞ்சாலங் குறிச்சிப் போரில் ஊமைத்துரை படுகாயம் முற்றார். அதனால் அவர் சிவகங்கை நோக்கிப் பின்வாங்க நேர்ந்தது.

படுகாயமுற்ற அவர் வழியில் மயங்கி விழுந்துவிட்டார். ஆங்கிலப்படை பின் தொடர்ந்து வந்தது. மயங்கிய அவர் மேல் துணியினை மூடிப் பெரியம்மையால் இறந்து போன இளைஞன் எனக் கூறி கிராமப்புற மகளிர் சிலர் அவரைக் காப்பாற்றினார்கள்.

அதன் பின்னர் மருது பாண்டியர் அவரைச் சிறுவயலுக்கு அழைத்துச் சென்று மருத்துவ சிகிச்சை அளித்தனர். குணம் அடைந்தவுடன் அவர்களுடன் சேர்ந்து கொண்டு ஊமைத்துரை விடுதலைப் போரில் ஈடுபட்டார்.

## 9.6.3 தூக்கிலிடப்படுதல்

இச்சமயத்தில் போர்க்களங்கள் பல கண்ட கோபால நாயக்கர் விருப்பாட்சி என்ற பாளையத்தின் தலைசிறந்த வீரராக விளங்கினார். அவர் மருது சகோதரர்களோடு சேர்ந்து கொண்டு விடுதலைப் போரில் இறங்கினார். ஊமைத்துரை அவரது படையில் தலைமையையேற்றார். ஊமைத்துரை ஆங்கிலப்படையை போர்க்களத்தில் சந்தித்தானர். அதில் தோல்வியினைத் தழுவிப் பின்வாங்கலானார். இறுதியில் வத்தலக்குண்டு என்ற இடத்தில் அவரும் அவரது வீரர்கள் சிலரும் ஆங்கிலேயரால் சிறைப்படுத்தப்பட்டனர். 1801-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் 16ஆம் நாளில் பாஞ்சாலங்குறிச்சியில் ஊமைத்துரையும் , செவத்தையாவும் தூக்கிலிடப்பட்டனர். இவ்வாறு வீரபாண்டியனின் வீரத்தம்பி சாகசங்கள் பல செய்து, ஆங்கிலேயரின் படைகளுக்குப் பல தொல்லைகள் தந்து இறுதியில் தூக்குக் கயிற்றில் தொங்கியது வீரஉணர்ச்சிமிக்க வரலாற்று நிகழ்ச்சியாகும்.

## 9.7 மருதுபாண்டியர்

ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போரில் வீறுகொண்டு எழுந்த மற்றொரு குடும்பம் சிவகங்கையின் மருது பாண்டியரின் குடும்பமாகும். இவர்கள் வெள்ளை மருது, சின்ன மருது என்ற இருசகோதரர்கள் ஆவர். வெள்ளை மருதுவைப் பெரிய மருது என்றும் அழைப்பர். பொதுவாக இவ்விருவரும் மருது சகோதரர்கள் என்றும், மருது பாண்டியர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இப்பெயர் அவர்களது குலதெய்வமாகிய மருதப்ப சுவாமியின் நினைவாக இடப்பட்டதாகும்.

## 9.7.1 கூட்டிணைப்பு

இராமநாதபுரம் பகுதியினைச் சேர்ந்த வேலுநாச்சியார் முத்துக்கருப்பத் தேவர், சிங்கம் செட்டி போன்றோரும், சிவபேரிப் மாப்பிள்ளை வன்னியனும் இணைந்து மருது சகோதரர்கள் தலைமையினை ஏற்கலானார்கள். பின்னர் தஞ்சை ஞானமுத்துவும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார். வீரபாண்டிய கட்டபொம்மனும் மருது சகோதரர்களின் உதவியினைப் பெறலானான். இவ்வாறு மருது பாண்டியர்கள் கூட்டிணைப்பை ஏற்படுத்தினார்கள்.

## 9.7.2 ஆங்கிலேயருடன் போரின் ஈடுபடுதல்

பாஞ்சாலக்குறிச்சியின் போருக்குப் பின்னர் முத்து வெள்ளை நாயக்கரும் (விருப்பாட்சி கோப நாயக்கரின் மைந்தன்) அங்கு வந்து சேர்ந்து கொண்டார். இவ்வாறு அது புரட்சியாளர்களின் புகலிடமாக மாறியது.

## 9.7.3 திருச்சிராப்பள்ளி அறிக்கை

மருது பாண்டியர் ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போரில் பாரத மக்கள் எல்லோரும் ஈடுபட வேண்டும் என்ற நோக்கில் 1801 ஆம் ஆண்டு "திருச்சிராப்பள்ளி அறிக்கை" என்பதை வெளியிட்டனர். அதில் குறிப்பிடப்பெற்றவை

(1) எல்லா மக்களும் விடுதலைப் போரில் ஈடுபட வேண்டும். இவ்வறிக்கையை ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். படித்ததை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

(2) ஆங்கிலேயருக்கு அடிவருடியாக இருக்கும் ஆற்காட்டு நவாபைச் சாடியது.

(3) ஆங்கிலேயரைச் சுற்றி துதிபாடிக் கொண்டிருக்கும் அதிகார சிற்றரசர்களைக் கடுமையாக கண்டித்தது.

(4) அன்னியர் வரவால் நாடு வளம் சுருங்கி, நலம் கெட்டுப் போனதை எடுத்துக்காட்டி தூங்கும் மக்களைத் தட்டி எழுப்பியது.

## 9.7.4 அறிக்கையின் விளைவுகள்

(1)அப்பேரறிக்கையின் விளைவாக நாட்டுப்பற்றுக் கொண்ட நல்லோர்கள் கிளர்ந்தெழுந்தனர்.



(2)திருப்பத்தூர், திருப்புவனம், திருச்சுழி, பந்தல் குடி ஆகிய இடங்களில் கிளர்ச்சிகள் நடைபெற்றன. அதன் விளைவாக அப்பகுதிகள்

கிளர்ச்சியாளர்கள் வசமாயின. கர்னல் அக்னு தலைமையில் செயல்பட்ட அப்படை கடுமையான போருக்குப்பின் அப்பகுதிகளை மீட்டது.

(3) காளையார் கோயிலில் கடும்போர் ஏற்பட்டது. ஆங்கிலப் படை அங்குலம் அங்குலமாக முன்னேறியது எனினும் மருதுபாண்டியரின் கொரில்லாத்தாக்குதலுக்குமுன் அது தாக்குப் பிடிக்காமல் தத்தளித்துப் பின்வாங்கியது.

## 9.7.5 ஆங்கிலேயரின் சூழ்ச்சி

வெள்ளையர் வெற்றி பெறுவது கடினம் எனக் கருதி, சிவகங்கை அரச குடும்பத்தைச் சேர்ந்த உடையத் தேவரை அப்பகுதியின் மன்னராக்குவதாகக் கூறி கிளர்ச்சியாளர்களை கலங்க வைத்துப் பிளவினை ஏற்படுத்தினார். இதைக் கேட்டவுடன் மருதுபாண்டியர் ஆதரவாளர்கள் பிளவுபட்டனர். ஆங்கிலேயர் வலிவு பெற்றனர்.

## 9.7.6 மருது பாண்டியரின் முடிவு

ஆங்கிலேயரின் பெரும்படை வீறு கொண்டு எழுந்து சோழபுரம், மேலூர் சிங்கம்புணரி வழியாக காளையார் கோவில் நோக்கிப் புறப்பட்டது. அப்போது காளையார் கோயில் கோட்டையினை ஆங்கிலத் தளபதிகளான கர்னல் அக்னு செப்பார்ட் மெக்காலே, பிளாக்பர்ன் ஆகியோர் கடுமையாகத் தாக்கினர். பேரழிவு ஏற்பட்டது. இறுதியாக அக்கோட்டையினை 1801 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அவர்கள் கைப்பற்றினர்.

இச்சூழ்நிலையில்தான் ஊமைத்துரை, செவத்தையா, முத்து வெள்ளை நாயக்கர் ஆகியோர் திண்டுக்கல் நோக்கி ஓடினர்.

அப்போது மருதுபாண்டியர் சிங்கம்புணரிக்குச் சென்றனர். அதே ஆண்டு அதே திங்கள் 19 ஆம் நாள் சோழபுரத்தில் அவர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இறுதிப்போர் ஏற்பட்டது. மருது சகோதரர்கள் ஆங்கிலேயரிடம் கைதிகளாயினர். அதே திங்கள் 24ஆம் நாள் அவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்கள். நாடு விடுதலை பெறப் போராடிய முதல் சுதந்திரப் போராட்ட வீரர்களாக மருதிருவர் வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். இவ்வாறு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை அறவே வெறுத்துப் போர்க்கோலம் பூண்ட புரட்சிப் புயல்கள் மரணத்தை தழுவினார்கள்.

## 9.8 வேலூர்க் கலகம், (1806)

1806-இல் சென்னையின் ஆளுநராகப் பெண்டிங்க் பிரபு இருந்தபோது, வேலூரில் இருந்த சிப்பாய்கள் ஆங்கிலேயர்களை

எதிர்த்துக் கிளர்ச்சிகளில் இறங்கினர். கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து ஆங்கில அதிகாரிகளிடையேயும் வரலாற்று ஆசிரியர்களிடையேயும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆங்கிலப்படைத் தளபதி சான் கிரேடாக், ஆளுநரின் அனுமதி பெற்று, இராணுவத்தில் சிப்பாய்களின் நடைமுறைக்குச் சில ஒழுக்க விதிகளைப் பிறப்பித்தான். படைவீரர்கள் தம் தாடியைக் களைந்து விடவேண்டும். மீசையை ஒரு குறிப்பிட்ட முறையில் முறுக்கிவிட்டுக் கொள்ள வேண்டும். நெற்றியில் திருநீறு, நாமம் போட்டுக் கொள்ளக்கூடாது என்ற விதிமுறைகள் பிறப்பிக்கப்பட்டன. அத்துடன், ஆங்கிலத் தளபதி அக்னூ என்பவனின் மேற்பார்வையில் ஐரோப்பியர்களின் தொப்பியைப் போன்று தயாரிக்கப்பட்ட புதிய தொப்பியையும் அணியும்படி சிப்பாய்கள் வலியுறுத்தப்பட்டனர். அந்தச் சமயத்தில் வேலூரில் கிறித்துவப் பாதிரியார்களின் சமயப்பணி தீவிரமாக இருந்தமையால், சிப்பாய்கள் புதிய விதிகள் தங்களைக் கிறித்தவராக்கும் நடவடிக்கைகள் என்று அஞ்சினர்: வேலூரில் குடியேறியிருந்த மூவாயிரத்துக்கு மேற்பட்ட திப்புசுல்தானின் ஆதாரவாளர்களும், படைவீரர்களின் ஐயத்தை மேலும் வளர்த்தனர். வேலூர்க் கோட்டைக்குள் சிறைவைக்கப்பட்டிருந்த திப்புவின் மைந்தர்களும் உறவினர்களும், சிப்பாய்களுடன் தொடர்பு கொண்டு கிளர்ச்சியில் இறங்கும்படித் தூண்டினர். குறைவான ஊதியத்தாலும் கொடுமையான நடத்தைகளாலும் வெறுப்புற்றுக் கிளர்ச்சியில் குதித்த வீரர்களுக்குத் திப்புவின் மகன் முசுதின் தலைமையேற்றான். திப்புவின் மக்கள்தான் கிளர்ச்சியைத் தூண்டினர் என்று சான்கிரேடாக்கும் புதிய தலைப்பாகை விதிகள்தான் கிளர்ச்சியைத் தூண்டின என்று சர் தாமசுமன்றோவும் கருதினர்.

## 9.8.1 கலகத்தின்போக்கு

1806, மே மாதம், ஆறாம் நாள் புதிய தொப்பிகள் வேலூர் வந்து சேர்ந்தன நான்காவது படைப்பிரிவைச் சேர்ந்த 29 சிப்பாய்கள், புதிய தொப்பிகளை அணிய மறுத்துத் தலையில் துண்டைக் கட்டிக் கொண்டு அணி வகுப்பிற்கு வந்தனர். மாலை அணிவகுப்பில் துப்பாக்கி எடுக்க மறுத்த அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்பட்டனர். அடுத்த மாதம் வாலாசாபாத்திலிருந்த சிப்பாய்களும், புதிய தொப்பிகளை அணிய மறுத்துக் கலகம் செய்தனர். கலகங்கள் அதிகமாவதைக் கண்ட ஆளுநர் பெண்டிங்பிரபு இந்து முசுலீம் அறிஞர்களைக் கலந்தாலோசித்து, புதிய தொப்பி அணிவதனால் மத உணர்வுகளுக்குப் பாதிப்பில்லை என்ற முடிவிற்கு வந்தான். எனவே புதிய விதிகளை மீறும் சிப்பாய்கள் கடுமையான தண்டனைக் குள்ளாவார்கள் என்றும் எச்சரித்தான். இந்த அச்சுறுத்தலினால் அப்போதைக்குக் கலகம் அடங்கியது போலிருந்தாலும் சிப்பாய்களின் மனம் எரிமலையெனக் குமுறிக் கொண்டேயிருந்தது.

சூலை 12-ஆம் நாள் இரவு கிளர்ச்சி செய்து கோட்டையைக் கைப்பற்றுவது எனச் சிப்பாய்கள் முடிவெடுத்திருந்தனர். ஆயினும் சமேதார் ஒருவனின் பொறுமையற்ற செயலால் அதற்கு முன்னரே கலகம் வெடித்துக் கிளம்பியது. 10-ஆம் நாள் அதிகாலை மூன்று மணிக்குத் துவங்கினர். 69-ஆவது படைப்பிரிவு இருந்த முகாமைத் தாக்கி, அங்கே இருந்த ஐரோப்பியர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். 67-ஆவது படைப்பிரிவையும் சிப்பாய்கள் சூழ்ந்து கொண்டு தாக்கினர். உயிருக்குப் பயந்த ஆங்கிலேயர்கள், நட்புணர்வு கொண்ட இந்தியர்களின் உதவியுடன் தப்பிக் கைதிகள் அனைவரையும் விடுவித்தனர். கோட்டைக் கொடிக் கம்பத்தில், திப்புவின் கொடி ஏற்றப்பட்டது.

இதற்கிடையே ஆர்க்காட்டில் வேலூர் கலகம் பற்றிய தகவல்கள் கிடைத்ததும், கர்னல் கில்லெசுபி தலைமையில் ஓர் ஆங்கிலப் படைமின்னல் வேகத்தில் புறப்பட்டு வந்து வேலூரைத் தாக்கியது. ஆங்கிலேயர்கள் பீரங்கிகளைக் கொண்டு நடத்திய கடுமையான சண்டையில் 113 ஐரோப்பியர்களும் 350 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர். 500-க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர். எட்டு மணி நேரத்திற்குள்ளாக, ஆங்கிலேயர் பறிகொடுத்த கோட்டையை மீண்டும் கைப்பற்றினர்.

## 9.8.2 விளைவுகள்

திப்புவின் மக்கள் கலகத்தைத் தூண்டிவிட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டு கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டனர். புதிய ஒழுங்குமுறை விதிகள் நீக்கப்பட்டன. ஆளுநர் பெண்டிங் பிரபுவும், கர்னல் சான்கிரடோக்கும் பதவிநீக்கம் செய்யப்பட்டனர்.

## 9.9 தொகுத்துக் காண்போம்

- ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்த புலித்தேவன், கட்டபொம்மன், மருது சகோதரர்கள் இவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- வேலூர்க் கலகம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்

## 9.10 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. ஆங்கிலேயர் ஆட்சியில் சமூக நிலை, கல்வி நிலை குறித்து விவரிக்க.
2. புலித்தேவன் குறித்து விளக்குக.
3. ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்த கட்டப்பொம்மன் பற்றி விளக்குக.
4. வேலூர்க் கலகம் குறித்து விளக்குக.

## 9.11 மேலும் அறிந்துகொள்ள

கே.கே.பிள்ளை - தென் இந்திய வரலாறு
வே.தி.செல்லம் - தமிழக வரலாறும் பண்பாடும்

குறிப்பு

# கூறு-10

## இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களின் பங்கு ஒத்துழையாமை இயக்கம் -உப்புச் சத்தியாகிரகம் - வெள்ளையனே வெளியேறு இயக்கம் காங்கிரசு –நீதிக்கட்சி – சுயமரியாதை – திராவிட இயக்கங்களின் விடுதலைப் போராட்டப் பணி

## 10:1 முன்னுரை

ஆங்கிலேயரை எதிர்த்து இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட வீர வரலாற்றிலும் விடுதலை இயக்கத்திற்கு மூலகாரணமாய் விளங்கிய தேசிய காங்கிரசைத் தொடங்கிய வரலாற்றிலும் தமிழகமே முதன்மை இடத்தைப் பெறுகிறது. தமிழ் நாட்டில் தேசிய உணர்வினை மக்களுக்கு ஊட்டிய பெருமை தெருக்கூத்துக் கலைஞர்களையே சாரும். இந்தியா ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பிரிட்டனுக்கு அடிமைப்பட்டிருந்த காலம் சுமார் இருநூறு ஆண்டு காலமாகும். தமிழகத்தில் 1905 - முதல் 1912 - வரை பல தலைவர்கள் தலைமையில் விடுதலை இயக்கம் புரட்சிப் பாதையில் முன்னேறியது.

## 10.2 குறிக்கோள்கள்

- இந்திய விடுதலைப் பேராட்டத்தில் தமிழ் மக்களின் பங்கைத் தெரிந்து கொள்வீர்கள்
- காந்தியடிகள் விடுதலைக்காக நிகழ்த்திய உப்புச் சத்தியாகிரகம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
- நீதிக்கட்சி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்

## 10.3 இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு, இந்திய நாட்டின் விடுதலைக்காக போரிட்ட வீர வரலாற்றிலும் விடுதலை இயக்கத்திற்கு மூலகாரணமாய் விளங்கிய தேசிய காங்கிரசைத் தொடங்கிய

வரலாற்றிலும் தமிழகமே முதன்மை இடத்தைப் பெறுகிறது. சென்ற நூற்றாண்டில் தான் தேசிய உணர்வு கொழுந்து விட்டெரிந்து அன்னிய ஆதிக்கத்தை அழித்து நாடு சுதந்திரம் பெற வைத்தது. எனினும், அதற்கு முன்னரே தமிழகத்தில் பலர் உரிமை வேட்கை கொண்டு அன்னிய ஆதிக்கத்தை அழித்து அடிமைத்தனத்தை தகர்த்தெரிய முன் வந்ததை வரலாற்றின் வாயிலாக அறிய முடியும். 19,20-ம் நூற்றாண்டுகளில் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை முதலிய வீர மறவர்களின் தலைமையில் தமிழகம் ஒருங்கு திரண்டு வணிகம் செய்ய வந்து ஆட்சியாளர்களாக மாறிய பிரிட்டிஷ் ஏதேச்சதிகாரிகளை வெளியேற்ற, போரிட்ட வீரச் செயல்கள் இந்திய விடுதலை போராட்டத்தின் தொடக்க கட்டமாக அமையுமெனலாம்.

1857-ல் இந்தியப் படை வீரர்கள் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடுவதற்கு ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே, அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்து முதன் முதலில் இராணுவப் புரட்சி செய்த பெருமையைத் தமிழ்நாட்டுப் படைவீரர்கள் பெறுகின்றனர். இதற்குச் சான்றாக 1806-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10-ம் நாள் வேலூரில் சிப்பாய்கள் செய்த கலகம் இந்திய வரலாற்று ஏடுகளில் முழுமையான இடம் பெறாவிட்டாலும், இது 1857-ல் எழுந்த பெரும் புரட்சிக்கான ஒத்திகையென தற்கால வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவது சாலப் பொருந்தும். திட்டமிட்டுப் போரிடாததால் வேலூர்ப் புரட்சி தோல்வியடைந்தாலும், இதே போன்றே மற்றொரு புரட்சி 1808-ம் ஆண்டில் வேலூரிலேயே ஏற்பட்டது. இது தமிழக மக்களின் வீர உணர்வு எத்தகையதென்பதை கட்டக் கூடியதாயுள்ளது.

இதனால் தான் வேலூர்ச் சிப்பாய் கலகம் என்னும் கூற்றை அடியோடு மறுத்து. இது ஒரு சிப்பாய் கலகமா? இல்லவே இல்லை. வஞ்சம் தீர்க்கவே மூண்ட போர். ஆங்கிலேயரின் அடிமைத் தனத்தை, உடைத்தெறியத் தொடங்கிய முதல் தேசியப் போர், தங்களை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயரைக் கொன்று குவித்த விந்தைப் போரேயன்றி வேறில்லை என்பர் ரூசல். இங்ஙனம் வாழையடி வாழையாக சுதந்திர உணர்வோடு வாழ்ந்து வந்து தமிழகம் தவறவில்லை. “வாழய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்! வாழிய பாரத மணித் திருநாடு!” என்று முழங்கிக் கொண்டே தமிழ்நாடு தன்னை விடுதலை வேள்வியில் ஈடுபடுத்திக் கொண்டது.

## 10.3.1 விடுதலைப் போரில் தமிழகக் கலைஞர்களின் பங்கு

தமிழ் நாட்டில் தேசிய உணர்வினை மக்களுக்கு ஊட்டிய பெருமை முதன் முதலாகத் தெருக்கூத்துக் கலைஞர்களையே சாரும். ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டுத் தூக்கு மேடையேறிய வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாற்றைக் கட்டபொம்மன் கதை என்ற பெயரால் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய

மாவட்டங்களில் உள்ள பட்டி, தொட்டிகளிலெல்லாம் ஊர், பெயர் தெரியாத நூற்றுக்கணக்கான தெருக்கூத்துக் கலைஞர்கள் திறந்த வெளி மேடையில் கூத்திட்டு மக்களுடைய சுதந்திரக் கனலை எரியூட்டி வளர்த்து வந்தனர்.

வெள்ளைக்காரனின் நொள்ளைக் காசுக்காகத் தேசத் துரோகிஆகிவிடாதே என்று வலியுறுத்தும் பாடல்கள் தெருக்கூத்துக் கலைஞர்களால் நாடு தோறும் கிராமம் கிராமமாகச் சென்று பாடப்பெற்றது. இச்சுதந்திர உணர்ச்சி தான் பிற்காலத்தில் வீரவாஞ்சிநாதன், மாடசாமி, வேலுநாச்சி, நீலகண்டசிவம், சுப்பிரமணிய சிவா,, வ.வே.ஐயர், தேசியகவி பாரதி, வ.உ.சிதம்பரம் பிள்ளை போன்ற புரட்சி வீரர்களைத் தோற்றுவித்தது.

வரிகேட்கும் வெள்ளைக்காரனுக்கு வரி கொடுக்க மறுத்த ஏழை உழவன் பாடுவதைப் போன்று தெருக்கூத்துக் கலைஞர்கள் பாடினர்.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டான் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி
காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்
யாரோ ஒழைச்சிப் பாடுபட்டால் - இவன்
யாரு வந்து வரி கேக்குறது - இங்கே
நேரா வரட்டும் பாத்துக்கிறேன்
சங்கை நெறிச்சி உசிர மாய்ச்சிடுறேன்

எத்தகைய கோழையினருக்கும் விடுதலை உணர்வினை உண்டாக்கச் செய்திடும் இத்தெருக்கூத்துக் கலைஞர்களின் இத்தகைய நாட்டுப் பாடல்கள் அறிவில் சிறந்த அறிஞர்களாலும், நாவன்மைமிக்க நாவலர்களாலும் வளர்த்திட முடியாத நாட்டுப் பற்றினை இக்கலைஞர்கள் தங்கள் ஆடலாலும் பாடலாலும் மக்களிடத்தே வளர்த்திட்ட சாதனையைப் புரிந்தவர்களாவர்.

1919,1920-ம் ஆண்டுகளில் இந்திய விடுதலைப் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டது. இத்தருணத்தில் நாடகக் கலைஞர்களும் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தங்கள் பங்கை ஆற்றியுள்ளனர்.

ஆரிய சபா, கதரின் வெற்றி, தேசியக் கொடி, பதி பக்தி, வீர சிவாஜி, திலகர் - காந்தி தரிசனம், பாணபுரத்து வீரன், கவியின் கனவு, மனோகரன் போன்ற பல தேச பக்தி நாடகங்களை எழுதிய நாடக ஆசிரியர்கள். அதில் நடித்த நாடகக் கலைஞர்கள் போன்றோர் நாட்டு விடுதலைக்குத் தமது நாடகங்களின் மூலம் பங்களிப்புச் செய்தனர். முதல் தேசிய நாடகம் வெளிப்போந்த காலத்தில் நாடகம் முழுவதும்

இசைப் பாடல்கள் நிறைந்தனவாகவும், இடையிடையே சிறிது உரைநடை கலந்தனவாகவும் இருக்கும். உரையாடல்களை விடப் பாடல்களையே மக்கள் பெரிதும் விரும் ரசித்ததால், தேசிய உணர்வைப் பாடல்களில் குழைத்திட தேசிய நாடகக் கவிஞர்கள் புறப்பட்டனர். தேசியப் பாடல்களை இயற்றித் தந்த நாடகக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மதுரை பாஸ்கரதாஸ், ராஜா சண்முகதாஸ், சந்தானகிருஷ்ண நாயுடு, வீரநாதக் கோனார், எசக்கி முத்து வாத்தியார் போன்றோர் ஆவர்.

**அஞ்சா நெஞ்சன் விஸ்வநாததாஸ்**

சிறைக் கூடத்திற்கும், சிவப்புத் தொப்பிகளின் அடிதடிகளுக்கும் அஞ்சாமல் மேடைகள் தோறும் தேசியப் பாடல்களைப் பாடி மக்களைத் தட்டியெழுப்பியவர்களில் குறிப்பிடத்தக்க நாடகக் கலைஞர் விஸ்வநாததாசாவார். 1930-ம் ஆண்டு திருநெல்வேலியில் நாடக மேடையொன்றில் விடுதலைப் போராட்டப் பாடல்களைப் பாடிய போது கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

**மன்னார்குடி நடராஜப்பிள்ளை**

உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது தென்னாட்டில் இராஜாஜி வேதாரண்யத்தில் உப்புக் காய்ச்சச் சென்ற பொழுது இவரும் அதில் கலந்து கொண்டு சிறைத் தண்டனை பெற்றார். இவர் இறுதி வரை தேசிய நாடக மேடையில் ஈடுபட்டு இயற்கை எய்தியவர்.

**கே.பி.ஜானகியம்மாள்**

நாடக மேடையின் மூலமாக நாட்டுக்குத் தொண்டாற்றியவர். தொடக்கத்தில் கள்ளுக்கடை மறியில், அந்நிய நாட்டுத் துணி விலக்குப் போராட்டம் ஆகியவற்றிலும் ஈடுபட்டவர். 1942-ம் ஆண்டு ஆகஸ்டு புரட்சியின் போது இவர் பாதுகாப்புக் கைதியாக பல ஆண்டுகள் சிறையிலிருந்தார்.

**கே.பி.சுந்தரம்பாள்**

1930-ம் ஆண்டில் மகாத்மா சிறை சென்ற போது நாட்டின் பல பகுதிகளிலும் சென்று “சிறைவாயதனில் அழுதாள் பாரதமாதா”. “காந்தியோ பரம ஏழை சந்யாசி” போன்ற தேசிய உணர்ச்சியூட்டும் பாடல்களால் மக்களின் விடுதலை உணர்ச்சியைத் தட்டியெழுப்பி வந்தார். இவர்கள் மட்டுமின்றி தோட்டி, எம்.எம்.சீனிவாசலு நாயுடு, கே.எஸ்.அனந்த நாராயண ஐயர், எம்.எஸ்.ராஜம், எம்.ஆர்.கமலவேணி, எஸ்.வி.வாசுதேவ நாயர் போன்றோரும் நாடகத்தின் மூலம் விடுதலைக்குப் பணி ஆற்றியவர்கள் ஆவர்.

**கே.டி.நடராஜ பிள்ளை**

சிறந்த ஆர்மோனியக் கலைஞரான இவர் தேசியப் பாடல்களை உணர்ச்சியுறப் பாடி மக்கள் தேசியக் கனலை வளர்த்தவர்.

தேசிய விடுதலைப் பாடல்களைத் தவிர வேறெதுவும் பாடுவது இல்லை என்பதை நோன்பாகக் கொண்ட பல கலைஞர்களும் அக்காலத்தில் இருந்தனர்.விடுதலைப் போராட்டத்தில் மக்களையும் பங்கு பெறச் செய்ததில் முதலிடம் வகிப்பவர்கள் தெருக்கூத்து, நாடக, ஆர்மோனியக் கலைஞர்கள் ஆவர்.

**பாரதியார்**

இந்திய விடுதலைக்காகப் பாடிய கவிஞர்களில் முன்னே நிற்பவர் முண்டாசுக் கவிஞர், சி.சுப்பிரமணிய பாரதி ஆவர்.

நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல் என்று வாழ்ந்து மறைந்தவர். பாட்டுத் திறந்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வந்த பாரதி.

“வந்தே மாதரம் என்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்
ஆயிரம் உண்டிங்கு ஜாதி – எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி”

என்று நிமிர்ந்து நின்று பாடினான். சுதந்திரமில்லா நாட்டில் வாழ்வதை விடச் சுடுகாட்டில் வாழ்வது மேல் என்று துணிந்தான் பாரதி. அதனால் எத்தனைத் துன்பங்களையும் ஏற்கத் தயாரானான். தொல்லைகள் வந்துற்ற போதும், சுதந்திர தேவியை மறவாத மனத்தினனானான். சுதந்திரமில்லா நாட்டில் எல்லாமிருந்தும் ஏதுமில்லாத நினைவே எழும்.

வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? என்றும்
ஆரமு துண்ணுதற்கு ஆசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ?
..............................
கண்ணினை விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டி சிரியாரோ?

சுதந்திர தாகத்தால் தவிக்கும் உள்ளம் இந்திய திருநாடு விடுதலை பெற்று, எல்லோரும் சமம் என்ற நிலை வரும் நாள் எந்நாளோ? என்று ஏங்குகிறது பாரதியின் உள்ளம். சுதந்திரக் கனவு

பகற்கனவாகிவிடுமோ? கானல் நீராகிவிடுமோ? என்று சுதந்திர தாகத்தால் தவிக்கிறது பாரதியின் உள்ளம்.



என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்று எமதன்னை கைவிலங்குகள் போகும்?
என்றெமது இன்னல் தீர்த்து பொய் யாகும்?

என்று விடுதலை கிட்டும் முன்பே அதற்கான நம்பிக்கையை ஊட்டியவன். எளிமையும், வேகமும் கொண்ட இவரது பாடல்கள் பொது மக்கள் நடுவே புதிய உணர்வோட்டத்தையும், விழிப்பையும் உருவாக்கின.

**பாரதிதாசன்**

பாரதியாரைப் போன்றே பாரதிதாசனாரும் தேசியக் கவியாகத் திகழ்ந்தார். வீரமூட்டும் பல பாடல்களை எழுதிய பாவேந்தர் ‘தொண்டரைச் சேர்த்தல்’ என்ற பாடலில் வீர ஆவேசக் குரல் எழுப்பினார்.

என்றைக்குச் சுதந்திரம் வருமோ – ஏழை
இந்தியர் துயரங்கள் அறுமோ?

என்று ஏங்கிக் கொண்டிருந்த ஜீவாவின் வாழ்வில் அவர் கண்ணெதிரே சுதந்திரம் வந்துவிட்டது. தேசத்திற்காக அவர் ஆற்றிய பணியின் விளைவைக் கண்டு மகிழ்ந்தவர் ஜீவா.

**திரு.வி.கலியாண சுந்தரனார்**

இனிய எளிய சொற்களால் எழுதும் ஆற்றல் வாய்ந்த திரு.வி.க அவர்கள் வந்தே மாதரம் என்ற சொல்லின் சிறப்பை உணர்ந்து அதை மக்களுக்கு உணர்த்திட

“வந்தே மாதரம் என்போமே
வாழ்க்கைப் பிணிகள் பின்போமே
வந்தே மாதர மந்திரமே
வாழ்த்த வாழ்த்த சுதந்திரமே”

என்றுரைத்தார். இதைப் போன்று தேசியப் பாடல்கள் மூலம் திரு.வி.க.மக்களின் மனச் சான்றினை மலரச் செய்தார்.

**சது.சு.யோகியாரும், சுத்தானந்த பாரதியாரும்**



"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கேற்ப பள்ளியில் பயிலும் காலத்திலேயே நாட்டுப்பற்று மிக்க பாடல்களைப் பாடியவர் சது.சு.யோகியார். கவியோகி சுத்தானந்தர் 1910 முதல் 1945 வரை எண்ணற்றப் பாடல்களைப் பாடிக் குவித்தவர். விடுதலைப் போருக்குத் தயாராகும்படி இந்தியர்களைப் பார்த்து அவர் பாடிய



ஏறுபோலத் தலைநிமிர் - இந்தியாவின் சிங்கமே
வீறுகொண்டு நட நட —விடுதலைக்கு விடுதலை
நெஞ்சமுண்டு நீதியுண்டு — நிகரில்லா வீறுமுண்டு
அஞ்சிலேம் கெஞ்சிலேம் - அமர்முறுக்கி வெல்லுவோம்

என்ற பாடல் குறிப்பிடத்தக்கது.

**பண்டிதை அசலாம்பிகை அம்மையார்**

தமிழ் நாட்டில் முன்னாளில் வாழ்ந்த வெள்ளி வீதியார், ஔவையார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்று இந்நாளில் வாழ்ந்தவர் பண்டிதை அசலாம்பிகை அம்மையார் ஆவார். இவர் நேரடியாகச் சுதந்திரத்திற்காகப் பாடவில்லை எனினும் காந்தியடிகளின் வாழ்க்கையைக் காந்தி புராணமாகப் பாடியதன் வாயிலாக நூலைப் படித்தவர்களிடம் ஓர் எழுச்சியை உண்டாக்கினார். பாஞ்சாலத்தில் ஆங்கிலேய ஆட்சி நடத்திய அடக்குமுறைக் கொடுமைகளை

"அப்பகல் ஒரு பாஞ்சாலி அருந்துகி லுரிந்தா ளென்றும்
மெய்பழங் கதையே மீண்டும் உவமை யோதத்
துப்பிளங் கனிவாய் மாதர் துடித்துளம் பதறு மாறும்
செப்பரு மானக் கேடாம் செயல்பல புரிந்திட்டாரோ"

என்று உள்ளம் நொந்து பாடுகிறார். விடுதலைப் போராட்ட உணர்வுக்கு உறுதுணையாகப் பண்டிதை அசலாம்பிகை அம்மையார் அளித்த இலக்கிய நன்கொடை "காந்தி புராணம்" ஆகும்.

## 10.4 வேதாரண்யம் உப்புச்சத்தியாகிரகம்

இந்தியா ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பிரிட்டனுக்கு அடிமைப்பட்டிருந்த காலம் சுமார் இருநூறு ஆண்டு காலமாகும். அதில் சரியாக ஒன்றரை நூற்றாண்டு காலம் தனது விடுதலைக்காகப் போராடியிருக்கிறது. அந்த விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்திலே காந்தியடிகள் தலைமையேற்றார். அவரது தலைமையின்

குறிப்பு

கீழ் உலக வரலாறு காணாத வகையிலே சத்தியம் அகிம்சை ஆகிய தருமங்களை ஏற்று ஒத்துழையாமை இயக்கம், சத்தியாகிரகம் ஆகிய நடைமுறைகளைக் கடைப்பிடித்து நாட்டின் விடுதலைக்காகப் போராடினார். அவற்றுள் உப்புச் சத்தியாகிரகப் போர் குறிப்பிடத்தக்கது.

1930 பிப்ரவரி 14,15,16 ஆகிய தேதிகளிலே சபர்மதியில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. இந்தக் கூட்டத்திலே உப்பு வரியை எதிர்த்துப் போர் தொடங்க முடிவெடுத்தார் காந்திஜி. தாம் தொடங்க இருக்கும் போராட்டம் பற்றி வைசிராய் லார்டு இர்வினுக்குக் காந்திஜி கடிதம் எழுதினார். அதற்கு இர்வின் பதில் தராததால் உப்புச் சட்டத்தை மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் சபர்மதி ஆசிரமத்தைச் சார்ந்த சில பேர்களைத் தேர்ந்தெடுத்து "தண்டி" என்னும் உப்பளப் பகுதிக்குக் கால் நடையாக யாத்திரை செய்யக் காந்தியடிகள் தீர்மானித்தார். மக்கள் அவரது இச்செயலுக்கு ஆதரவளித்தனர். யாத்திரையில் பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்றி உப்புச் சத்தியாக்கிரகப் போரின் முக்கியத்துவத்தைக் கூறினார்.

காந்தியடிகள் ஏப்ரல் 6-ந் தேதி அரசு உப்பளத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த உப்பை அள்ளி சட்டத்தை மீறினார். அரசாங்கம் காந்தியடிகளைக் கைது செய்து ஏரவாடா சிறையில் அடைத்தது.

## 10.5 ஒத்துழையாமை இயக்கம்

1907 சூரத் மாநாட்டில் காங்கிரசு இரண்டாகப் பிளவுற்ற பின்னர் தமிழ்நாட்டில் கோகலேயின் ஆதரவாளர்கள் சீனிவாச சாசுதிரியின் தலைமையில் இயங்கினர்; திலகரின் ஆதரவாளர்களான வ.உ.சி சுப்பிரமணிய சிவா, பாரதியார் ஆகியோரின் இடிமுழக்கங்களுக்கு முன்னால் தமிழகத்தில் மிதவாதிகளின் குரல் எடுபடாமற் போனது காந்தியடிகளின் வருகையுடன் விடுதலை இயக்கத்தில் புதிய வேகம் பிறந்தது. 1919-ல் கொண்டு வரப்பட்ட மாண்டேகு செம்சுபோர்டு சீர்திருத்தங்களையும், ரௌலட் சட்டத்தையும் காந்தியடிகள் எதிர்த்தார். 1920-ல் சேலம் விசயராகவாச்சாரியார் தலைமையில் நாக்பூரில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில், காந்தியடிகள் கொண்டு வந்த ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் சத்திய மூர்த்தி, 'இந்து' ஆசிரியர் கசுதூரி அரங்க ஐயங்கார் போன்றோர் காந்தியடிகளை எதிர்த்தனர். சுயராச்சிய கட்சியைத் தோற்றுவித்த மோதிலால் நேருவுடன் சேர்ந்து கொண்டு தேர்தலில் போட்டியிட முடிவு செய்தனர். இராசகோபாலாச்சாரியார். பெரியார், டாக்டர் வரதராசுலு நாயுடு போன்றோர் தேர்தலில் காங்கிரசு போட்டியிடுவதை முழு மூச்சாக எதிர்த்தனர். 1923 தேர்தலில் போட்டியிட்ட சுயராச்சியக்கட்சி 11 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி அமைச்சரவை அமைத்தது.

காங்கிரசின் பொதுச் செயலாளர்களில் ஒருவராய் இருந்த இராசகோபாலச்சாரியார் தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்திற்குத் தலைமைத் தாங்கினார். பலர் அரசின் தடையை மீறிக் கைதாகினார். 1922, ஜனவரி 13-ஆம் நாள் வேல்சு இளவரசன் சென்னை வருகை தந்த போது, அறப்போராட்டம் தீவிரமாகியது. சென்னையில் முழுக் கடையடைப்பு நடைபெற்றது. வேல்சு இளவரசன் சென்ற இடங்களில் எல்லாம் அவனை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்நிலையில் சௌரிசௌராவில் நடந்த படுகொலைகளின் காரணத்தால் காந்தியடிகள் அறப்போராட்டத்தை விலக்கிக் கொண்டார்.

## 10.6 தமிழகத்தில் உப்புச் சத்தியாகிரகம்

மார்ச் 22-ம் தேதி அனைத்து இந்திய காங்கிரஸ் கமிட்டி மகாத்மாவைப் பின்பற்றி விடுதலைப் போரில் ஈடுபடுமாறு தேச மக்களுக்கு அழைப்புவிடுத்தது. தமிழகத்தில் ராஜாஜி தலைமையில் உப்புச் சத்தியாகிரகப் போர் தொடங்கியது.

### 10.6.1 தாரன் போட்ட தடையுத்தரவு

உப்புச் சத்தியாகிரகம் தொடங்கிய போது திரு.தாரன் என்ற ஆங்கிலேயர் தஞ்சை மாவட்டத்தின் ஆட்சியாளராக இருந்தார். இவர் தஞ்சை மாவட்டம் முழுவதும் தடையுத்தரவு பிறப்பித்தார். சத்தியாகிரகப் படையினரை வரவேற்பதோ, விருந்தளிப்பதோ வேறு வகைகளில் உதவிகள் புரிவதோ கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாகும் என்று ஆணையிட்டார். ஏப்ரல் 13-ஆம் நாள் சத்தியாகிரகப் படை புறப்பட்டு கிராமம் கிராமமாகச் செல்லத் தொடங்கியதும் கலெக்டரின் ஆணையை மக்கள் மறந்தனர். ஒவ்வொரு ஊரிலும் மக்கள் இவர்களை மிகச் சிறப்பாக வரவேற்றனர்.

தஞ்சையிலும், குடந்தையிலும் பல்லாயிரக் கணக்கில் தமிழர் கூடி, சத்தியாகிரகப் படையினரை வரவேற்றுப் பொதுக்கூட்டங்கள் நடத்தினர். இக்கூட்டங்களில் இராசாசி சொற்பொழிவாற்றினார். திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை, திருச்சி டி.எஸ்.எஸ்.ராசன் வேதரத்தினம் பிள்ளை போன்றோரும் ராசாசியுடன் சேர்ந்து வேதாரண்யத்தை அடைந்தனர். ஏப்ரல் 29-ம் தேதியன்று ராசாசியும் அவருடன் சென்றவர்களும் ஒருநாள் உண்ணா நோன்பைக் கடைபிடித்தனர். ஏப்ரல் 30-ந் தேதி 16 சத்தியாகிரகிகளுடன் இராசாசி அகஸ்தியம் பள்ளியிலுள்ள உப்பளத்தை அடைந்து சட்டத்தை மீறி உப்பை அள்ளினார்.

இராசாசி மீது உப்பு வரிச்சட்டம் 74-வது பிரிவின்படியும், இ.பி.கோ 146-ஆவது பிரிவின்படியும் இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டன.

வேதாரண்யத்தில் நடந்ததைத் தொடர்ந்து ஒரு மாத காலம் நாள்தோறும் அரசாங்க உப்பளத்தில் பிரவேசித்து உப்பை அள்ளும் சட்ட மறுப்பில் சத்தியாகிரகிகள் ஈடுபட்டனர். இச்சத்தியாகிரகிகள் ஒருவர் பின் ஒருவராகக் கைதாகி சிறைத் தண்டனை பெற்றனர்.



குறிப்பு

## 10.6.2 தடியடி தர்பார்

24.04.1930-ம் நாளன்று சென்னை ஐகோர்ட் கடற்கரையில் உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்றது. ஐந்து சத்தியாகிரகிகள் சட்டத்தை மீறி உப்புக் காய்ச்சினர். டாக்டர் நடராசன், செல்வி துர்கா பாய் ஆகியோரின் தலைமையில் கடற்கரையை நோக்கித் தெற்குத் திசையிலிருந்து ஊர்வலமாக வந்தனர். அந்த ஊர்வலத்தைக் கலைப்பதற்குக் குதிரைப் படையினர் பயன்படுத்தப்பட்டனர்.

## 10.6.3 சோழலிங்கபுரத்தில் சத்தியாகிரகம்

சென்னைக்கு நான்கு கல் தொலைவிலுள்ள சோழலிங்கபுரம் என்னும் சிற்றூரிலே உப்புக்குழி ஒன்று இருந்தது. அந்த இடத்திலேயும் சத்தியாகிரகிகள் சட்டத்தை மீறி உப்புக் காய்ச்சிச் சிறை புகுந்தனர். மதுரை மாநகரில் ஒரே நாளில் பட்டாபிரமாய்யா, என்.எம்.சுப்புராமன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். விருதுநகரில் காமராசரும், கே.எஸ்.முத்துச்சாமியும் உப்புக் காய்ச்ச்சியதற்காக இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை பெற்றனர்.

தமிழகத்தில் மேல் மட்டத்திலுள்ளவர்கள் இதனை எதிர்த்தாலும், அடித்தட்டிலுள்ள மக்கள், காங்கிரஸ் ஊழியர்கள் போன்றோர் காந்தியின் மீதும், உப்புச் சத்தியாகிரகத்தின் மீதும் நம்பிக்கை வைத்து ஆதரவு அளித்தால் இராசாசி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார். சுதந்திரச் சங்கு என்னும் வார இதழ்களும் விடுதலைப் போருக்கு ஆதரவு தெரிவித்துச் செய்திகள் வெளியிட்டன. இவ்வாறு ஏப்ரல் 6-ம்தேதி தொடங்கப்பட்ட உப்புச் சத்தியாகிரகம் மே29-ல் முடிவடைந்தது. விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக 1930-ம் ஆண்டு இந்திய வைசிராய் பத்து அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தார். இத்தச் சட்டங்களின் விளைவாக உப்புச் சத்தியாகிரகம் சட்ட மறுப்பாக மாறி அன்னியத் துணிக்கடை மறியல் என்ற நிலையில் தீவிரமாகியது.

## 10.7 வெள்ளையனே வெளியேறு இயக்கம் - காங்கிரசு

1939-ல் துவங்கிய இரண்டாம் உலகப்போரில், இந்தியரைக் கேட்காமல் இங்கிலாந்து இந்தியாவையும் போரில் ஈடுபடுத்தியதை எதிர்த்து காங்கிரசு அமைச்சரவைகள் பதவிவிலகின; சென்னையில் இராசகோபாலாச்சரி அமைச்சரவையும் பதவி விலகியது. சுபாசு சந்திரபோசின் போர் முழக்கங்களைத் தமிழ்நாட்டில்

முத்துராமலிங்கத்தேவர் முழங்கினார். இந்நிலையில் 1942-ல் காங்கிரசு 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் துவங்கியது. நாடெங்கிலும் காங்கிரசுத் தலைவர்களும், தொண்டர்களும் பல்லாயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடே தீப்பற்றி எரிந்தது. அரசாங்க அலுவலகங்கள் தாக்கப்பட்டன. அஞ்சல் நிலையங்கள் கொளுத்தப்பட்டன. இரயில் நிலையங்கள் சூறையாடப்பட்டன. தண்டவாளங்கள் பெயர்த்து எறியப்பட்டன. அரசாங்க வண்டிகளும், காவல் வண்டிகளும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. காவல் நிலையங்கள் தாக்கப்பட்டன. கலவரத்தை அடக்க அரசாங்கம் இராணுவத்தை வரவழைத்து நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும், தடியடிகளிலும் காயமுற்றவர்கள் மற்றும் இறந்தவர்கள் எண்ணிக்கை ஏராளம். சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், இராமநாதபுரம், தேவகோட்டை, மதுரை ஆகிய ஊர்கள் கலவரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

## 10.8 நீதிக்கட்சி

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழகம் புதுமையான திருப்ப நிலையில் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி புதிய நிர்வாகத்தை அளித்தது; புதிய கல்விமுறையை வழங்கியது; பெருக்கியது; புதிய சமய நிலையை உருவாக்கியது: சமூக அமைப்புக்குப் புது விளக்கமளிக்கச் செய்தது (சரிசமன் நிலை)எனவே சாமானியர்களிடத்தில் புது விழிப்புடன் எழுந்த உரிமைக் குரல்கள், உரிமைகள் பெறச் சமூக அமைப்புக்கள் தோன்றக் காரணமாக இருந்தன. 1892-லேயே ஆதிதிராவிடர் அமைப்பு தோன்றியது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் உரிமைக்குரல் மாகாணத்தில் ஆந்திரப்பகுதி மக்கள் தங்கள் உரிமைகளுக்குக் குரல் எழுப்பினர். மேல்நாட்டு முறையில் கல்வி பயின்று பொதுவாழ்விலும், சமூகப் பணியிலும் ஈடுபட்டிருந்த டாக்டர் டி.எம்.நாயர் தியாகராசச் செட்டியார், கேசவப்பிள்ளை, நடேச முதலியார் போன்றோர் சாமானியர் உரிமைகளுக்காகவும் சிறுபான்மையினர் (வைதீக) ஆதிக்கத்துக்கு எதிராகவும் இயக்கங்களில் ஈடுபட்டனர். அன்னிபெசன்ட் அம்மையாரின் இயக்கத்துடன் வைதீகர் தொடர்பு பெருகியிருந்தது. தன்னாட்சி வருமேயானால் ஆட்சி ஆங்கிலேயர்களிடமிருந்து வைதீகர்களிடத்தில் மாறுமேயொழிய அது ஒரு முழு மக்களாட்சியாகாது என்று சாமானியர்களின் தலைவர்கள் அஞ்சினர். 1912-ல் ஒரு திராவிடர் அமைப்பு சென்னையில் தோன்றியது. அமைப்புகள் பல வடிவங்கள் கொண்டன. இறுதியில் 1916 டிசம்பரில் தென்னிந்தியர் நல உரிமைக் கழகம் உருவாகியது. பின் நீதிக்கட்சி என்ற பெயருடன் இயங்கியது.

சாதிக் கொடுமைகளை எதிர்க்கவும், சாமானியர்களின் சமூக அரசியல் உரிமைகளைக் காக்கவும், இந்திய தேசிய இயக்கத்திலும் வெளியிலும் தொண்டர்கள் அணி திரண்டனர். பொது

மக்கள் சமூகக் கொடுமைக்களுக்குள்ளாக்கப்பட்டிருந்தனர். அவற்றை எடுத்தெறியும் உணர்ச்சி அவர்களுக்கு எழுந்தது.

பொது மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகத் தேசிய இயக்கத் தொண்டர்களும், தன்னாட்சி இயக்கத்தைச் சார்ந்தவர்களும், வேதியர் எதிர்ப்பு இயக்கத்தாரும் தமிழ் மொழியின் துணையை நாடினர். வைதீகர் ஆதிக்கத்தாலும், சாதிக் கொடுமையாலும் புண்பட்டிருந்த மக்களிடத்தில் தமிழ்வார்வமும், இளைஞர்களிடத்தில் தனித் தமிழ்ப் பற்றும் ஏற்பட்டன.

ஆகஸ்டு 20, 1917-ல் பிரிட்டிஷ் சாமானியர் அவையில் இந்தியச் செயலாளராகவிருந்த மாண்டேகுவின் அறிக்கை தன்னாட்சி இயக்கத்தின் வெற்றிக்குப் பச்சைக்கொடி காட்டியது. எனவே நீதிக்கட்சியைச் சார்ந்தவர்கள் தமிழகத்தின் நிலைமையை வலியுறுத்தினர். பெசன்ட் அம்மையார் வகுப்புவாதக் கொள்கையை எதிர்த்தார். சாமானியர் தொண்டில் ஈடுபட்டிருந்த டாக்டர் டி.எம்.நாயர். பேராசிரியர் கந்தசாமி போன்றோர் இனவாரி சார்பாளர் முறைக்காக இயன்ற அளவு முயன்றனர். டாக்டர் டி.எம்.நாயர் பிரிட்டிஷ் பாராளுமன்றம்வரை சென்று வாதாடினார். தமிழகத்து அரசியல் குழப்பத்தில் சமரசம் காண மாண்டேகு பிரபு தமிழகம் வந்தார். இறுதியில் தன்னாட்சி இரட்டையாட்சியாக மாறியது. இரட்டையாட்சி வகுத்த பொறுப்பாட்சியை நீதிக்கட்சி வரவேற்றது. அரசியல் அமைப்பு சார்ந்த மக்களாட்சி ஏற்படுத்துதல், அரசியல் விடுதலைக்குரிய பயிற்சியளித்தல், சிலரின் மறைமுகக் கொடும் ஆட்சியை ஒழித்தல், மேல்மட்டக் கல்வி முறையையும் அதனால் போட்டித் தேர்வில் ஏற்பட்டிருந்த ஊழலையும் நீக்குதல், கிராமங்களைத் தழுவிய அடிப்படைப் பொதுக் கல்வி ஏற்படச் செய்தல்; கிராமங்களின் விழிப்பு, மறுமலர்ச்சி தொழிலைச் சுதேசமயமாக்குதல் என்ற அடிப்படையில் செயலாற்றியது. விரைவில் பனகல் அரசரின் தலைமையில் நீதிக்கட்சியை அனைத்திந்திய அரசியல் கட்சியாக மாற்றினர். காந்தியடிகளின் தலைமையிலான காங்கிரசின் போராட்டப் போக்கையும் மறுத்தனர். சுயாட்சி பெறுமுன் நாட்டைச் சவக்குழியாக்கக் கூடாது என்று அவர்கள் அஞ்சினர் என்றாலும் காந்தியடிகளின் சிறந்த குணங்களை அவர்கள் பாராட்டாமலில்லை. தீவிரமடைந்து கொண்டிருந்த நீதிக் கட்சி இயக்கத்தின் முதுகெலும்பாக விளங்கிய டி.எம் நாயர் 1919-ல் சாமானியர் உரிமைகோரி இலண்டன் சென்றிருந்த போது எதிர்பாராவண்ணம் காலமனார். நீதிக்கட்சிக்கு இது பேரிழப்பாகியது.

## 10.8.1 ஆட்சிப் பொறுப்பில் நீதிக்கட்சி

1919-ல் மாண்டேகு ஜேம்ஸ் போர்டு சீர்திருத்தம் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. மாநிலங்களுக்குப் பொறுப்பாட்சியென்ற பெயரில் இரட்டையாட்சி வழங்கப்பட்டது. பேரவை

(காங்கிரஸ்) இரட்டையாட்சிக்கு ஒத்துழைப்புத் தர மறுத்தது வைதீகர்களின், அரசியல், சமூக, நிர்வாக ஆதிக்கத்தை முறியடிக்கத் தகுந்த வாய்ப்பெனக் கருதி இரட்டையாட்சி வடிவில் வந்த பொறுப்பாட்சியை நீதிக்கட்சி ஏற்றது. 1920-ல் நடைபெற்ற தேர்தலில் வைதீகர் ஆதிக்கத்திலிருந்து தன்னாட்சி கட்சியை தோற்கடித்துவிட்டு வலிமையான பெரும்பான்மையைப் பெற்றது. சுப்பராயலு ரெட்டியர் தலைமையிலான அமைச்சரவை பதவி ஏற்றது. வளர்ச்சித்திட்ட அமைச்சரையும், தலசுயாட்சி அமைச்சரையும், கல்வி அமைச்சரையும் கொண்டதே அவ்வமைச்சரவை; அன்று வில்லிங்டன் சென்னை ஆளுநராகவிருந்தார். முக்கியத் துறைகளை வைத்தாண்ட அவருடைய ஆலோசனைக்குழு உறுப்பினர்களுள் பெரும்பாலோர் வைதீகர்களாகவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். திராவிடர்களின் நலன்காப்பது, பொதுப்பணியில் இனவாரி இடஒதுக்கீடு, கல்வி விரிவாக்கம், தொழில் மயமாக்குதல், வேளாண்மையை விரிவுபடுத்துதல் போன்ற வாக்குறுதிகளைத் தேர்தல் அறிக்கை மூலம் முன்வைத்திருந்தனர். முதல் உலகப் போரால் பொருளாதாரச் சோர்வு ஏற்பட்டிருந்த காலத்தில், கவர்ச்சியான சீர்திருத்தச் சட்டங்கள் பலவற்றை நிறைவேற்றினர். 1923-ல் நடைபெற்ற தேர்தலில் பேரவையின் உட்பிரிவுக் கட்சியாகிய சுயராச்சியக் கட்சியை தோற்கடித்து வெற்றி கண்டனர். இம்முறை பனகல் அரசரின் தலைமையில் அமைச்சரவை உருவாகிச் செயல்பட்டது. எதிர்பார்த்த ஆர்வத்தில் செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்த இயலவில்லை. கட்சிக்குள் உட்பூசல் எழத் தொடங்கியது. எனவே 1926 தேர்தலில் தோல்வி கண்டது. இம்முறை சுயேச்சையாக நின்ற சுப்புராயன் சுயராஜ்யக் கட்சியின் ஆதரவுடன் அமைச்சரைவையை, ஏற்படுத்தினார். 1927 முதல் நீதிக்கட்சிக் கொள்கையை மாற்றி, மாநில சுயாட்சி கோரத் தொடங்கியது. 1930-ல் நடைபெற்ற தேர்தலில் பிற கட்சியினர் கலந்து கொள்ளாததால் நீதிக்கட்சியினருக்கு வெற்றி எளிதில் உறுதியாகியது. முனுசாமி நாயுடு தலைமையில் அமைச்சரவை அமைத்துப் பதவிக்கு வந்தனர். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகவும் விறுவிறுப்பும், திருப்புமுனையும் ஏற்பட்ட சட்டமறுப்பு இயக்கத்தை 1932-ல் துவக்கினர். சிக்கலான இந்தக் காலகட்டத்தில் (1932) பொப்பிலி அரசர் முதலமைச்சர் பதவி ஏற்றார். பதவியில் நீடிக்க நீடிக்க வலுவை இழந்து கொண்டே சென்றனர். 1934லும் பொப்பிலி அரசர் அமைச்சரவை அமைத்தார். 1935-ஆம் ஆண்டு இந்தியச் சட்டம் மாநில சுயாட்சி செயலில் வரத்தொடங்கிய 1937 - வரை நீதிக்கட்சியினர் இழந்த வலிமையுடன் பதவியில் நீடித்தனர்.

## 10.8.2 நீதிக்கட்சியினரின் சாதனைகள்

நீதிக்கட்சியினரின் பதவிக்காலத்தில் பல நல்ல சட்டங்கள் இயற்றினர். ஆங்கிலோ இந்திய அரசு அதிகப்படியான வரிவிதித்து(மெஸ்டன் அறிக்கைப்படி வங்காளம் $6^{1/2}$ % நிதி,

சென்னை35%) கறவைமாடாகிச் சுரண்டுவதைத் தடுத்தனர். 1921-ல் நீதிக்கட்சியினர் இயற்றிய இனவாரி ஒதுக்கீட்டுச் சட்டம் ஒரு இனத்தாரின் ஏகபோக பதவிக் குத்தகையை ஒழித்தது. உயர் பதவிகளுக்கு நேரடித் தேர்வுமுறையைப் புகுத்தி, நீடித்த காலப் பதவிப் பலனால் கிட்டவேண்டிய உயர்பதவிகள் எளிதில் எல்லா இனத்தாருக்கும் கிடைக்குமாறு பரவலாக்கப்பட்டன. பணித்தேர்வு முறையில் ஏற்படுத்திய பணியாளர் தேர்வுக்குழுமத்தை உருவாக்கினர். (1929-ல் தேர்வாண்மைக்குழுவாக மாறியது). இதனால் பணித்தேர்வு முறையில் மலிவாக விருந்த இனச்சலுகை, தனிப்பாசச்சலுகை, உறவுச்சலுகை போன்ற ஒழுங்கீனங்கள் தவிர்க்கப்பட்டன. கல்லூரிச் சேர்க்கைக்கு உருவாக்கி ஒரு இனத்தாரின் ஏகபோகக் கல்வியுரிமை முறியடிக்கப்பட்டுக் கல்வி பயன் பரவலாக்கப்பட்டது. எளியோர் கல்வி பெறக் கட்டணச் சலுகையும், நிதிஉதவியும் கிட்டின. பேரூர்களுக்கும் சிற்றூர்களுக்கும் கல்வி எட்டத் துவக்கப்பள்ளிச் சட்டம் இயற்றப்பட்டது. மத்திய உணவுத் திட்டமும் வகுக்கப்பட்டத. இயற்றப்பட்ட பல்கலைக்கழகச் சட்டங்களால் 1925-இல் ஆந்திரா பல்கலைக்கழகமும், 1928-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் உருவாகின. உயர்கல்வி விரிவடைய இவை உதவின. 1922-இல் இயற்றப்பட்ட தொழிற் சட்டம் தொழில் விரிவாக்கம், தொழில் வளர்ச்சி, தொழில் நுட்ப ஆய்வு முதலியவற்றுக்கும் உதவும் நோக்குடையதாக அமைந்தது. மருத்துவ வசதியை விரிவாக்கியதுடன் நாட்டு மருத்துவம் ஊக்குவிக்கப்பட்டது. ஏழைகள் வீட்டுமனை வசதிபெறப் புறம்போக்கு நிலங்கள் பட்டா செய்து கொடுக்கப்பட்டன. இந்து ஆலயங்களிலும் மடங்களிலும் குவிந்த செல்வத்தைக் கண்காணிக்க 1926-ல் அறக்கட்டளைச் சட்டமியற்றினர். இதனால் ஆலயக்குழுக்கள் உருவாகின. இந்து ஆலயங்களுடன் இணைந்திருந்து தீய சமூக விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த தேவதாசி முறையை ஒழிக்கச் சட்டமியற்றினர். பெண் வாக்குரிமைச் சட்டமும் பாராட்டுக்குரியது(1921). நீதிக்கட்சி ஆட்சியாளர்களின் சட்டங்கள் பல காலத் தேவைக்கு கட்டாயமானவையாகவும் சமூகத் தேவைக்கு ஏற்றவையாகவும் இருந்தன.

## 10.8.3 நீதிக்கட்சியின் வீழ்ச்சி

முதல் உலகப் போரின் பின்விளைவுகளால் உலக அளவில் பொருளாதாரப் பலவீனமடைந்திருந்த நெருக்கடி காலத்தில் நீதிக் கட்சியினர், சாமானியர் நலன்நாடி மக்களைக் கவர முனைந்தனர். ஆனால் தோல்விகண்டனர். அதற்கு அடிப்படைக் காரணங்களிருந்தன. நீதிக்கட்சியின் வரலாற்றின் துவக்க காலத்தில் ஏற்பட்ட சில தலைவர்களின் மறைவு இயக்கத்தில் பலவீனமேற்படுத்தியது. சென்னை மாநிலத்தின் மக்கள் தொகை அமைப்பு, வேற்றுமை உணர்வை வளர்ப்பதாகவும், வேற்றுமையைப் பெருக்குவதாகமிருந்தது. கட்சிக்குள் எழுந்த உட்பூசல்கள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் உள்ளுருக்கு நோய்களாயின. நிர்வாகத்திலிருந்தவர்கள் ஓய்வு நேரங்களை

மேல்நாட்டுப்பாணிப் பொழுதுபோக்குகளிலும் செலவிட்டவர்கள் கட்சியின் சீரமைப்புப் பணியையும் மக்கள் தொடர்பையும் மறந்தனர். பணியுரிமைகளும், கல்வியுரிமைகளும் பரந்த சமூகத்துக்கு விரிவாக்கப்பட்டதால், நலன்கருதிப் பேரவையிலும் பிறவிடங்களிலுமிருந்து நீதிக்கட்சி இயக்கத்துடன் இணைந்தவர்கள் தன்னலமுனைப்பில் சிக்கித் தடுமாறினர். தேசிய இயக்கத்தின் வலிமையும் தாக்கமும் நீதிக்கட்சியை நசுக்கியது. விடுதலை இயக்கம் தீவிரமடைந்த காலகட்டத்தில் நீதிக்கட்சியினர் ஆங்கில அரசுடன் ஒதுக்கப்பட்ட தொகுதியின் நிர்வாகப் பொறுப்பிலிருந்தனர். ஆங்கில நிர்வாகம் பொறுப்பாட்சியென்ற பெயரில் இரட்டையாட்சிக்காக நடத்திய தேர்வுகளில் எல்லாம் கலந்தனர். பெரும்பான்மை பெற்றும், சிலகாலங்களில் பெரும்பான்மை பெறாநிலையிலும் பதவி ஏற்றனர். எனவே ஆங்கிலேயருக்குத் துணை நின்றவர்கள் என்ற குற்றச்சாட்டும், பதவியில் ஒட்டியிருந்தவர்கள் என்ற குற்றச் சாட்டும் அவர்களைத் தாக்கின. 1926 - முதல் நீதிக் கட்சி வீழ்ச்சிப்பாதையில் விரைந்தது. 1935-இல் ஆர்.ஆர் இராமசாமியார் நடத்திய மீட்பு முயற்சி காலம் கடந்த பணியாக விளங்கியது. நீதிக்கட்சி வரலாற்றின் அந்திநேரத்தில் பி.டி.இராசன் வீழ்ச்சிக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். 1937-இல் அடைந்த முழுத்தோல்விக்குப் பின் கட்சியின் சிதைவு முழுமையாகியது. திராவிட இனக்கொள்கைச் சார்பாலும், தன்மான இயக்கம் மூலமாகப் பெரியார் பெற்றிருந்த செல்வாக்காலும் சிதைந்த கட்சியில் எஞ்சி நின்றவர்கள் தலைமையைப் பெரியாரிடம் ஒப்படைத்தனர். தென்னிந்திய நல உரிமைக் கழகமும், தன்மான இயக்கமும் ஒன்றாக இணைந்த அரசியலில் முழு சுயாட்சி, கூட்டாண்மை அரசியல் என்ற கொள்கைளுடனும் சமூகத்தில் சுயமரியாதை, விஞ்ஞான நோக்கு, பகுத்தறிவு என்ற அடிப்படைகளிலும் திராவிடர் இயக்கம் தொடர்ந்தது.

## 10.9 சுயமரியாதை

19-ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான நோக்கு, சமத்துவம் நாடும் முற்போக்குச் சமூகம் என்ற அடிப்படையில் அரும்பிய சீர்திருத்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. கண் எதிரே நடைபெற்றுக் கொண்டிருந்த சமூக அநீதிகள், காலம் கடந்து வாழ்ந்து கொண்டிருந்த சாதிக்கொடுமைகள், அறியாமை வளர்த்துக் கொண்டிருந்த மூட நம்பிக்கைகள் முதலியவை உரப்படும் வண்ணம் வரலாற்று நிகழ்வுகள் இயங்கின அடிமட்டம் சலுகைக்களுக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் விழித்து நோக்கியது. அயோத்திதாசப் பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன் போன்றோர் அடிமட்டத்தைச் சமூக அநீதிகளிலிருந்து காப்பாற்ற முனைந்தனர் பலன். இலவுகாத்த கிளி போன்று ஏமாற்றிக் கொண்டிருந்தது. இருபதாம் நூற்றாண்டு பிறந்தபின்னரும் நடைமுறையில் பண்பாட்டு உயர்வுக் கொள்கை, நிர்வாகம் வழங்கிய கல்விவாய்ப்பு, பணிச்சலுகை முதலியன சமூகத்தின்

மேல்மட்டத்தினரின் நிலையைப் பாதுகாத்து உறுதி செய்து, தன்முனைப்பை வளர்க்கத் தூண்டின. வங்கத்தில் வணிகப் பிரிவினரும், அறிவர்களும், வடமேற்கு மாநிலத்தில் இராசபுத்திரர்களும், இசுலாமியர்களும், பம்பாய் மாநிலத்தில் பார்சிகளும், சமணர்களும் மட்டுப்படுத்தியதைப் போன்ற, மட்டுப்படுத்தும் சத்திகள் இன்மையால் வைதீகர்களின் ஆதிக்கம் சென்னை மாநிலத்தில் மேலோங்கியிருந்தது. இதனைப் பயன்படுத்தி நிலவிய ஞான சங்கத்தார் மறைபொருட் கோட்பாட்டு விளக்கத்துக்காக வைதீகப் பண்பாட்டைக் கருப்பொருளாகவும் மூலதனமாகவும் வைத்துத் தமிழகத்தில் பணியாற்றி 'இன' தன்முனைப்பையும், வைதீகப் பண்பாட்டுத் தன்முனைப்பையும் வளர்க்கக் காரணமாயினர்.

தமிழகத்தில் சமூகத் தீமைகளாலும் சாதித் தீமைகளாலும் நசுக்கித் தீர்வு காணாது. தவித்த பெரும்பாலோர் திராவிடப் பண்பாடு தொடர்பானவர் என்ற வரலாற்று உண்மையை அறிவர்கள். ஆய்வு மூலமும், பேனாமூலமும் உணர்த்தினர். 1856-இல் இராபர்ட் கால்டுவெல் திராவிடர் இன அடிப்படை ஒற்றுமையையும், திராவிடர் மொழி அடிப்படைகளையும் வெளிச்சத்துக்குக் கொணர்ந்தார். 1904 - வரை வெளிவந்த நூற்கள் இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் கிடந்த திரையை அகற்றின. இதில் பதிப்புச் செம்மல் தாமோதரனார், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, கனகசபை ஆகியோரின் பணி மேலோங்கியது. 1901 முதல் தமிழ் மறுமலர்ச்சி தீவிரம் பெற்றது. சாதித் தீமைகளால் பிரிக்கப்பட்டிருந்த இவ்வினத்தார் சாதி அமைப்புக்கள்வழி நலம் பேண முனைந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மனித இனநலக் கோட்பாடு சார்ந்த தமிழ் இலக்கியம், பழைய மரபுகளை இலக்கியத்திலும் சமூகத்திலும் தாக்கியது. மேனாட்டுப் பண்பாட்டுத்தாக்கம் தமிழ் இலக்கியத்தில் தாவியது. அரசியலில் பண்பாட்டுணர்வும் கலந்தது. பண்பாட்டுணர்வில் பண்பாட்டு வேற்றுமை வளர்ந்தது. சீர்திருத்த உணர்வுடன் பண்பாட்டு விடுதலை உணர்வு விரும்பித் தனித்தமிழ் சிந்தனையோட்டம் படர்ந்தது.

பண்பாட்டுத் தாக்கங்களும், பண்பாட்டுச்சிந்தனைத் தாக்கங்களும் கண் எதிரே நிகழ்ந்த சாதியத் தீமைகளும், விடுதலை உணர்வும் சாதிக் கொடுமைகளுக்கெதிரான குரல்களை எழுப்பத் தூண்டின; தன்மான உணர்வு அரும்பியது.

தன்மான இயக்கத்தின் தந்தையாகிய பெரியார் ஈ.வே இராமாசாமி (1879-1973) துவக்கத்திலேயே தீவிர சமூகச் சிந்தனைவாதியாக விளங்கினார். சமய வாழ்வுடன் இணைந்து இருந்ததால் யோகப் பயிற்சி, காசிப் பயணம் முதலியன நடத்தியுள்ளார். 1905-ல் காசிப் பயணத்திற்குப்பின் சமய நோக்கில் திருப்பம் ஏற்பட்டது. சமதர்ம சமூகச் சிந்தனை யோட்டத்துடன் பேரவைப் பணியிலீடுபட்டுள்ளார்.

ஈரோட்டில் பொதுநலப்பணி மதிப்பு நடுவர் பணி முதலியவற்றால் சிறந்த பட்டறிவு கொண்டிருந்தார். காந்தியடிகளுடனான தொடர்பு பெரியாரின் வாழ்வைத் திருப்பியது. 1920-ல் பேராயக்கட்சியில் இணைந்தார். எளிமை நாட்டம் அரும்பியது. காந்தீய இயக்கத்தில் ஒன்றிக் கலந்தார். கதர், கள்ளுக்கடை எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, சாமானியர் விடுதலை, நாட்டு விடுதலை முதலியவை வழி சமுதாய மாற்றத்தைக் கனவுகண்டார். பேராயக் கட்சியில் உயர் நிலையை எட்டி விடுதலை இயக்கத்தையும் பெருவாரி மக்களின் மேம்பாட்டு இயக்கத்தையும் தீவிரமாக்கினார். அரசின் சலுகைகள் பெறவும், தேர்தலில் அடிமட்டத்துக்குப் பயன் எட்டவும் இனவாரி ஒதுக்கீடு ஒன்றுதான் வழி என்று உறுதியாக நம்பினார். 1920 முதல் 1925 வரை ஆண்டுதோறும் நடைபெற்று வந்த பேராய மாநாடுகளில் இனவாரி ஒதுக்கீடு கோரிக்கையை வைத்து வெற்றிகிட்டா நிலை தொடருவதையும், சிறுபான்மை மேற்குடியின் பிடிவாதத்தையும் வெறுத்தார். 1925-இல் வைக்கத்தில் நடைபெற்ற ஆலய வீதிபுகும் உரிமைப் போராட்டத்திலும், தலைமை ஏற்று, காந்தியடிகள் கலந்த பேச்சுவார்த்தையின் முடிவு முழுப் பலனை அடையாது தோல்வியாகியது. தோல்விக்குக் காரணம் காந்தியடிகளே எனக் குற்றம் சாட்டினார். பெரியார்.

சேரன்மாதேவி குருகுலக் கல்வி நிலையத்தை பேராய நிதி உதவியுடன் தேசத்தொண்டர் வா.வே.சு ஐயர் நடத்தி வந்தார். அங்கேயும் தீண்டாமை பாராட்டப்பட்டதைதிரு.வி கல்யாண சுந்தரானார் பேராயக் கூட்டத்தில் எழுப்பினார். பேராயக் கட்சியிலிருந்த சிறுபான்மைப் பழமைவாதிகள் தீண்டாமைக் கொடுமைக்கும், சமூக அநீதிகளுக்கும் துணைநின்றனர்; வெங்கலூருக்கு வந்திருந்த காந்தியடிகளிடம் சென்று பெரியார் புகார் கொடுத்தும். பலன் கிடைக்காநிலையில் மனம் நொந்து திரும்பினார். பேராயக் கட்சியைவிட்டு 1926க்குள் வெளியேறினார். 1926-ல் குடியரசுப் பத்திரிகையை துவக்கினார்; தமிழர்கள் தன்மானத்துடன் வாழவேண்டுமென்று புதிய பாதையில் பயணமானார்; தன்மான இயக்கத்தின் முதல் மாநில மாநாடு 1929-ல் செங்கற்பேட்டையில் நடைபெற்றது. விழாவை அன்றையத் தமிழக முதல்வர் துவக்கி வைத்தார். விழாவுக்கு சௌந்தரபாண்டியனார் தலைமை ஏற்று இந்திய மரபுத் தீமைகளைச் சுட்டிக் காட்டினார்; தர்மசாத்திர நூற்களின் போலித்தனங்களைக் களைய வேண்டிய கட்டாயத்தை விளக்கி வழிகாட்டினார். இம்மாநாட்டில் பங்கேற்ற தீர்மானங்கள் ஆகியவை மரபுத்தீமைகளை ஒழிக்கும் நோக்கிலும், விஞ்ஞான அடிப்படையிலான பகுத்தறிவுச் சமுதாய அமைப்பிலும் குறிக்கோள்களைக் கோடிட்டுக் காட்டின. திராவிடச் சமுதாயம் சுயமரியாதையுடன் மேம்பாடடைய வழிவகுக்கப்பட்டது. 1930-ல் ஈரோட்டு மாநாட்டில் சுயமரியாதைக் கருத்துக்களையும், கொள்கைகளையும் வகுத்துத் தொகுத்தனர். அதுவே தன்மான இயக்கச் சாசனமும் ஈரோட்டுச் சாசனமுமாகியது.

அக்காலத்தில் அரசியலையும், நிர்வாகத்தையும் இணைந்தியக்கிய நீதிக்கட்சியினர் (தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தார்) சமூக பொருளாதார நீதி தொடர்பாக பலர் தலைமையிலான பேரவை இயக்கம் சூறாவளியாக மாறியதால் நீதிக்கட்சியை உலுக்கியது. பலவீனப்படுத்தியது.

தன்மான இயக்கம் நீதிக்கட்சியினருக்கு ஆதரவளித்த வண்ணம் திராவிடர் நலம் பேணும் பணியைத் துரிதப்படுத்தி விரிவுபடுத்தியது. பெரியார் வெளிநாடுகளுக்குச் சென்று வந்த பின்னர், பொருளாதார சமதர்மத் திட்டங்களையும் இணைத்தார். ம.சிங்காரவேலரின் துணை பெரிதும் உதவியது.

தன்மான இயக்கம் தீவிரம் பெற்றது 1932க்குப் பின் கல்விபெற்ற இளம் தலைமுறையினர் செயல் வீரர்களானார்கள். மகளிரணி, இளைஞரணி, என வகுத்து, தீண்டாமை ஒழிப்பு, விதவை மறுமணம், பெயர் மாற்றங்கள் எனத் தமிழகம் முழுவதும் பரப்பிக் கொண்டிருந்தனர்.

தன்மான இயக்கத்தின் மகாசாசனமாகிய ஈரோட்டுத் திட்டத்தை பேரவையினருக்கும் நீதிக்கட்சியினருக்கும் பெரியார் அளித்தார். 1934-இல் நீதிக்கட்சியினர் ஏற்றனர். தன்மான இயக்கத்தார் உதவியும் 1934 தேர்தலில் நீதிக்கட்சியினரால் வெற்றிகாணமுடியவில்லை. 1935 இந்தியச் சட்டப்படி வந்த 1937 தேர்தலிலும் அவர்கள் தோல்வியடைந்தனர். பேரவையினர் இராசகோபாலாச்சாரியார் தலைமையில் நிர்வாகப் பொறுப்பேற்றனர். நிர்வாகப் பொறுப்பில் புகுந்த பேரவையினரின் இந்தியக் கொள்கையால் போராடி பெரியார் சிறை சென்றார். திராவிட இனத்தாரின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கிய தென்னிந்திய நலக் கழகத்தால் பொறுப்பையும் பணியையும் சிறைக்குள்ளிருந்த பெரியாரிடம் சிறைக்கு வெளியிலிருந்தவர்கள் ஒப்டைத்துவிட்டுச் சிலர் மெல்ல மெல்ல வரலாற்றின் காலத்திரைக்குள் சென்று மறைந்தனர். பலர் தன்மான இயக்கத்தில் ஒன்றினர். தென்னிந்திய நலச் சங்கப் பொறுப்பையும் ஏற்று, தன்மான இயக்கத்தார் சாமானியர் நலனில் கருத்தூன்றி இயங்கினர்.

அரசியலை மையமாக வைத்துச் சுழன்ற முதல் திராவிடர் இயக்கம் தோல்வி கண்டது. சமூகப்பணியை மையமாகக் கொண்டியங்க திராவிடர் இயக்கம் பெரியார் தலைமையில் சுயமரியாதை இயக்கமாக வெற்றி கண்டது. 1937-ல் பேரவை அரசின் இந்திக் கொள்கையின் தூண்டுதல் திராவிடர்களுக்குத் திராவிட இனத்தாரின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கிய தென்னிந்திய நலக் கழகத்தால் பொறுப்பையும் பணியையும் சிறைக்குள்ளிருந்த பெரியாரிடம் சிறைக்கு வெளியிலிருந்தவர்கள் ஒப்படைத்துவிட்டுச் சிலர் மெல்ல மெல்ல இயக்கத்தில் ஒன்றினர். தென்னிந்திய நலச் சங்கப் பொறுப்பையும்

ஏற்று, தன்மான இயக்கத்தார் சாமானியர் நலனில் கருத்தூன்றி இயங்கினர்.



அரசியலை மையமாக வைத்துச் சுழன்ற முதல் திராவிடர் இயக்கம் தோல்வி கண்டது. சமூகப்பணியை மையமாகக் கொண்டியங்க திராவிடர் இயக்கம் பெரியார் தலைமையில் சுயமரியாதை இயக்கமாக வெற்றி கண்டது. 1937-ல் பேரவை அரசின் இந்திக் கொள்கையின் தூண்டுதல் திராவிடர்களுக்குத் திராவிட நாடு என்ற கொள்கை உருவாகும். சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது. 1940-ல் அது வடிவம் பெற்றது. 1944 சேலம் மாநாட்டுடன் திராவிடர் கழகம் என்ற பெயர் மாற்றம் பெற்றது அறிஞர் அண்ணா திராவிடர் கழகக் கொள்கைக்கு வடிவம் தந்தார். மாநாட்டில் அது இயற்றப்பட்டது. மைய அரசின் ஆதிக்கமில்லாத கூட்டாட்சியில் திராவிடநாடு அமைத்தல், வருணாசிரமத்தை மறுத்தல், சாதிப்பெயரை இணைக்காமலிருத்தல், தீண்டாமை ஒழித்தல், கோயில் பணத்தை சமூக நலத்துக்குப் பயன்படுத்துதல், மகளிருக்குச் சொத்துரிமை, கலப்புமணம், பதிவுத் திருமணம், விதவை மறுமணம், ஊக்கப்படுத்துதல் போன்றவை அடங்கின. ஒட்டுமாஞ்செடி மாதிரி அ∴து பூத்துக் குலுங்கி வளர்ந்தது. செயலில் விறுவிறுப்பும் பணியில் விரிவாக்கமும் ஏற்பட்டுத் திராவிடர் எழுத்தாளர் கழகம், திராவிடர் மாணவர் கழகம் என்ற பிரிவுகள் துவங்கிக் கல்வி நாட்டமுடைய இளம் தலைமுறையினரைக் கவர்ந்தது. திராவிடர் மாணவர் கழகத்தைத் தென்னாட்டில் ஆற்றல்மிக்க இயக்கமாக்கிட 1946-ல் முழுநேரத் தொண்டர்கள் கொண்ட கருஞ்சட்டைப்படை உருவாகியது. 1949-ல் ஏற்பட்ட பிளவு திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியது. திராவிட முன்னேற்றக் கழகத்தார் சொல்லாற்றல் கவர்ச்சியுடனும், எழுத்தாற்றல் வேகத்துடனும், செயலாற்றல் விறுவிறுப்புடனும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முழுக்கங்களுடனும் திராவிட இயக்கப் பணியிலீடுபட்டனர்.

**குறிப்பு**

திராவிடர் கழகம் தாய்க்கழகமாகப் பெரியார் தலைமையில் சமூகச் சீர்திருத்த இயக்கப் பணியைத் தீவிரப்படுத்தியது. கடவுள், சமயம், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் இவை தொடர்பான நடைமுறைகள், சமூகத்தில் மலிந்து கிடந்த மூட நம்பிக்கைகள் முதலியவை திராவிடர்களின் தாழ்வுக்குக் காரணமெனக் கூறி எதிரான ஏவுகணைகள் தொடுக்கப்பட்டன. தீண்டாமை ஒழிப்பில் நேரடி நடவடிக்கைகளிலிறங்கிக் கழகத்தின் செயலில் விரிவும் வேகமும் ஏற்படுத்தப்பட்டது. சமூகச் சீர்திருத்த ஆக்கப் பணிகளுள் பெண்ணுரிமை, மகளிர் கல்வி, விருப்ப மணம், விதவை மறுமணம், அனாதை இல்லம், கருணை இல்லம் போன்றவைகளும் கவன ஈர்ப்பைப் பெற்றன.

1952-ல் சுயமரியாதைக் கொள்கையைப் பரப்புவதற்கென்று அமைப்பும் உருவாக்கப்பட்டது. அரசியல் விழிப்பு, பயனுள்ள கல்வி வழங்கல், பகுத்தறிவுக்கும் தன்மானத்துக்கும் முரணிய சமூகத்தடைகள்

அறுத்தல், பழைய சமூக அமைப்பை மாற்றுதல், இனிய புதிய சமூகம் உருவாக்கல், திருமணச்சடங்குகள் ஒழித்தல், விருப்புமணமும், கலப்புமணமும் பெருகச் செய்தல், விதவை மறுமணத்துக்கு ஊக்கமளித்தல் அனாதைகளுக்கும் கைம்பெண்டிருக்கும் இல்லங்கள் பெருகச் செய்தல் முதலிய குறிக்கோளுடன் இந்த நிறுவனம் பணியைத் தொடங்கியது.

## 10.10 மற்ற இயக்கங்களின் விடுதலைப் போராட்டப் பணி

இருபதாம் நூற்றாண்டின் துவக்கம் விடுதலை இயக்கத்தில் பெரும் திருப்பத்தைக் கண்டது. தமிழகத்தில் ஆங்கிலேயர் ஆதிக்க எதிர்ப்புடன், வேதியர் ஆதிக்க எதிர்ப்பும் தொடங்கியது. 1905-ல் கர்சன் பிரபுவின் வங்கப் பிரிவினை விடுதலை வேட்கையாகிய நெருப்பில் எரிபொருளாகியது. தமிழகத்தில் 1905 முதல் 1912 வரை பல தலைவர்கள் முதன்மையிலும் விடுதலை இயக்கம் புரட்சிப் பாதையில் முன்னேறியது.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பெரும்பாலும் சுப்பிரமணிய பாரதியாரும் சுப்பிரமணிய சிவாவும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரும் தீவிரவாதிகளாக விளங்கினர். தேசபக்தர்களாகிய டாக்டர் டி.எம்.நாயர் , பி.தியாகராசச் செட்டியர், கேசவப் பிள்ளை முதலியார் வைதிகர் ஆதீக்க எதிர்ப்பு அணியிலும் இருந்தனர். இக்காலத்தில் சென்னை மயிலாப்பூரில் திவ்விய ஞான சங்கப் பணியில் ஈடுபட்டிருந்த நலப்பணியுடன் தீவிர அரசியலில் தலைமை தாங்கிச் சென்னையில் தன்னாட்சி இயக்கத்தைப் பின்னாளில் அதிகாரப் பூர்வமாகத் துவக்கினார். வடக்கில் பிபின்சந்திரபாலர் புரட்சிக் குரல் எழுப்பிய போது சென்னையில் 1905-ல் பாரதியார் பொது மேடைகள் வழியாகவும், பேனா முனை மூலமாகவும் தேசிய உணர்ச்சியைத் தூண்டிக் கொண்டிருந்தார். 1906 முதல் பி.பின் சந்திர பாலரின் 'வந்தேமாதரம்' (அன்னைக்கு வணக்கம்) போர்க் குரலாகியது. 1905-இல் பிபின்சந்திரரின் சென்னைப் பயணம் தீவிரவாதத்துக்குத் தூண்டுதலாக அமைந்தது.

வங்கப் பிரிவினை அரசியல் பூகம்பத்தைத் தோற்றுவித்தது. வடக்கில் திலகரின் தீவிரவாதம் அரசியல் வானில் மையம் கொண்டது. 1907 சூரத்துப் பேரவைக் கூட்டத்தில் தீவிரவாதமும், மிதவாதமும் ஒன்றோடொன்று மோதின. காலில் கிடந்த காலணிகள் தலைவர் இருக்கையை 'முத்தமிடப் பறந்த' காட்சிகள், அமருவதற்கிருந்த நாற்காலிகள் தலைவர்களின் தலைக்கு மேல் நடனமாடும் காட்சிகள்' ஆகிய அத்துமீறிய நிகழ்ச்சிக்களுக்குள் வ.உ.சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும் அவர்களுடன் சென்ற தமிழர்படையினரும், திலகருக்குக் கைகொடுத்து உதவினர். தீவிர வழி வெற்றி கண்டது. 1908-ல் வங்கத்தில் பாரிசாலில் வீரர்களும் படையினர்களும் போராடினர்.

வங்கத்தில் வெளிநாட்டுத் துணிகள் எரிக்கப்பட்டன. அன்று தூத்துக்குடியில் அயலார் கப்பல் ஆதிக்கத்தை வ.உ.சி. தலைமையில் எதிர்த்தனர். அது போராட்டமாகவே மாறியது. தொழிலாளர் உரிமைக்குரலும் அங்கே எழுப்பப்பட்டது. இந்தியா வெங்கிலும் ஒரே எழுச்சி,அடக்கு முறைகள்; ‘இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்’ என்ற நிலை!

குறிப்பு

**“வந்தே மாதரம் என்றுயிர் போம் வரை**
**வாழ்த்துவோம் முடிதாழ்த்து வோம்” — என்றும்**
**“நாங்கள் முப்பதுகோடி ஜனங்களும்**
**நாய்களோ பன்றிச் சேய்களோ?” — என்றும்**
**“சதையைத் துண்டு துண்டாக்கினும் உன்னெண்ணம்**
**சாயுமோ ஜீவன் ஓயுமோ” என்றும்**

இதைப் போன்று சிறுவர் முதல் முதியோர் வரையிலுள்ள மக்களின் உள்ளங்களைத் தொட்டு உணர்ச்சிகளை எழுப்பிடும் வகையில் பாரதியார் தனது புலமையைப் பயன்படுத்தினார்.

**“சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே -இதைத்**
**தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே”**

என்ற முழக்கங்களால் சட்டம் பாரதியாரைத் துரத்தியது. அவர் புதுவையில் புகுந்தார். பிபின்சந்திரரின் விடுதலையன்று பெரும் கொந்தளிப்பு வரும் என்று அஞ்சிய அரசு, கூட்டங்கள் நடத்தத் தடை விதித்திருந்தது. வ.உ.சிதம்பரனாரும், சுப்பிரமணி சிவாவும், திருநெல்வேலியில் தடையை மீறினார்கள். பொது மக்களைத் தட்டி எழுப்பினர். “சுதந்திரம் நமது குறிக்கோள் எப்பாடுபட்டேனும் நாம் அதை அடைந்தே தீருவோம். சுதந்திரம் இன்றி நாம் உயிர் வாழக்கூடாது என உறுதி செய்வோம். அடிமை வாழ்வை உடைப்போம். மரணத்தைக் கண்டு பயப்படுபவன் மனிதன் அல்லன். சட்டம் என்ற விலங்கு கட்டப்பட்டிருக்கிறது. ஒன்றுபட்ட ஐக்கிய சக்தியில் அதைத் தகர்ப்போம். பூரண சுதந்திரம் கிடைக்கும் வரை போராடுவோம்” என்ற அறைகூவலை எழுப்பினர். விளைவு வ.உ. சிதம்பரனார், சிவா ஆகிய இருவரும் சிறை சென்றனர். முறையீட்டின் பேரில் தண்டனை குறைக்கப்பட்டது, என்றாலும் தேசத்தின் விடுதலைக்காக, எதிர்கால சமூகத்தின் நல்வாழ்வுக்காக அந்தத் தேசபக்தர் சிறையில் மண் சுமந்து, கல்லுடைத்துச் செக்கிழுத்துச் சிறைக்கோட்டத்திலிருந்தே, “சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்து துஞ்சிடோம்” என்று குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். புரட்சிக்கவி பாரதியார் பாண்டிச்சேரிக்குச் செல்லவேண்டி வந்தது. அரசியல் பூசல்களின் காரணமாகத் தீவிரவாதியான வ.உ.சிதம்பரனார் 1912-ல் விடுதலை பெற்றதும்

அரசியலிலிருந்து விலகினார். ஆனாலும் தேசத் தொண்டிலிருந்து விலகவில்லை.



தீவிரவாதியான வ.வே.சு ஐயர் 1910-இல் தனது அரசியல் வாழ்க்கையை இலண்டனில் துவக்கினார். காந்தியடிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். வீரசாவர்க்கரின் 1857 சுதந்திரப் போராட்டம் என்ற நூலை மொழி பெயர்த்துத் தடையை மீறி உலகு எங்கும் அனுப்பினார். “தியாகப் பலிக்கு ஆயத்தமாகுங்கள். பாரதமாதா அழைக்கின்றாள். 1857 திரும்புகிறது” என்ற துண்டுப் பிரசுரங்களுடன் புத்தகங்கள் தாங்கிய பெட்டி புதுவையை அடைந்தது. ருசியாவுக்குச் சென்று வெடிகுண்டு தயாரிக்கும் முறையையும் கற்றுக் கொண்டு அந்த வீரர் தமிழகத்தில் விடுதலைப் போராட்டத்தில் குதித்தார்.

தீவிரப் போராட்டம் பல வடிவங்கள் பெற்றது. 1911சூன் மாதம் வரை ஆஷ்துரை நடத்திய கொடுமைகள் வரலாற்றில் வராது பதுங்கிக் கிடக்கின்றன. தலைவர்களின் தண்டனைகளாலும், கொடூரச் செயல்களாலும் வ.உ. சிதம்பரானாரின் சீடர்கள் ஒன்று திரண்டனர். அவர்களை ஆத்திரமூட்டும் வகையில் சந்தைகளில் கூடும் மக்களைத் திகிலடையச் செய்ய குதிரைப் படையை அனுப்பி அலறடித்துக் கொண்டிருந்தான் ஆஷ்துரை. அதன் முடிவு17-06-1911-ல் மணியாச்சி புகைவண்டி நிலையத்தில் வாஞ்சிநாதன் ஆஷ்துரையைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டுத் தன் உயிரையும் போக்கியதில் சென்று நின்றது.

## 10.10.1 தமிழகத்தில் சுயாட்சி இயக்க காலம்

1912-ல் வ.உ.சிதம்பரனார் தீவிர அரசியலைவிட்டு ஓய்வு பெற்றார். 1913-ல் அன்னிபெசண்ட் அம்மையார் அரசியலில் முழு நேரப் பணிக்கு இறங்கினார். தீவிரவாதம் தொடர்ந்தது. 1913 முதல் 1919 வரை தமிழகத்தில் விடுதலை இயக்கத்தில் அன்னிபெசண்ட் அம்மையாரின் தலைமை ஓங்கியது. 1916-ல் நீதிக்கட்சியைத் தோற்றுவித்துத் தங்களுடைய உரிமைக் குரலைப் பிரிட்டன் பாராளுமன்றம் வரை சென்று எழுப்பினர். திரு.வி.கல்யாணசுந்தரனார், கேசவப்பிள்ளை போன்றோர் பத்திரிகைகளின் துணையுடன் தேசிய இயக்கத்திலும், தொழிலாளர் நல இயக்கத்திலும் ஈடுபட்டனர். டாக்டர் வரதராசுலு நாயுடு, பெரியார் ஈ.வே.ரா போன்றோர் தேசிய இயக்கப் பணியுடன் சமூகப்புரட்சிப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தனர். ஓய்வு பெற்ற நீதிபதியும் இந்தியப் பேரவையை நிறுவியவர்களுள் ஒருவருமான டாக்டர் சுப்பிரமணிய ஐயர் அன்னிபெசண்ட் அம்மையாரின் விடுதலைக்காக அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் துணையை நாடினார். விடுதலைப்போரை இங்கிலாந்து மக்களின் கவனத்துக்கும் அமெரிக்கா கவனத்துக்கும் கொண்டு சென்ற பெருமை தமிழகத்துக்கும் உண்டு. 1913-ல் விசயராகவாச்சாரியார் மத்திய சட்டசபையில் குடிமக்கள் உரிமை பறிமுதல் சட்டத்தை முழு மூச்சுடன் எதிர்த்ததும், 1919-ல் பேரவையில்

குடிமக்களின் உரிமைகளின் தொகுதியை ஏற்கச் செய்ததும் பிற முக்கிய சாதனைகளாகும். 1918-ல் இந்தியச் செயலாளராக விருந்த மாண்டேகு தமிழகத்துக்கு வந்து அரசியல் சமரச முயற்சிகளில் ஈடுபட்டதுடன், டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார், சரோஜினி அம்மையார் தலைமையில் நடைபெற்ற தமிழ் மாநில மாநாட்டில் டாக்டர் பெசண்ட் அம்மையார் இரண்டாம் உலகப் போரில் திணறிக் கொண்டிருந்த இங்கிலாந்துக்கு இந்தியர்களை உதவும்படி வேண்டினார். இதைத் தேசபக்தர்கள் வரவேற்கவில்லை. "இந்தியாவுக்குச் சுயராச்சியம் கொடுத்தாலொழிய நாம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு உதவி செய்யக் கூடாது" என்ற குரலைச் சத்தியமூர்த்தி எழுப்பினார். சிறையிலிருந்து வெளிவந்த டாக்டர் பெசண்ட் அம்மையாரின் புகழ் மாலை வானம் நோக்கியது. காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்துடன் விடிவானில் தோன்றினார்.

காந்தீய சகாப்தம் துவங்குவதற்குள் தேசிய இயக்கம் பல கிளைகளாகப் பிரிந்தவாறு செயல்பட்டது. சீனிவாச சாஸ்திரியார், வெங்கடராம சாஸ்திரியார், சி.பி.இராமசாமி ஐயர் முதலியவர்கள் ஆதரவில் மிதவாதம் இயங்கியது. சீனிவாச ஐயங்கார். இராமசாமி ஐயங்கார், டாக்டர் வரதராசுலு நாயுடு, சத்தியமூர்த்தி, திரு.வி.க பெரியார் ஈ.வி.ஆர் முதலியோர் தீவிரவாதக் குழாமிலிருந்தனர். புரட்சிக்கவி பாரதியாரும் தாம் இறக்கும் வரை புரட்சிப் பாதையில் தனி வழி செல்லத் தயங்கவில்லை. நீதிக்கட்சியினர் தேசியப் பேரவையின் போக்குக்கு மாறுபட்ட வழியில் செயல்பட்டனர். காந்தீய சகாப்தத்தின் துவக்கத்தில் அவர்கள் தமிழகத்தில் வெற்றி நடையிட்டுக் கொண்டிருந்தனர். படிப்படியாக நீதிக்கட்சியிலிருந்து பலர் பேரவைக்கு மாறி பேரவையை மக்கள் இயக்கமான மாற்ற உதவினர்.

## 10.10.2 சத்தியாக்கிரக இயக்க காலம்

1919-க்குப் பின் தமிழகத்து அரசியலில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. அனைத்திந்திய இயக்கத்துடன் விறுவிறுப்புப் பெற்று முன்னேறியது. 1919-ல் காந்தியடிகள் சென்னைக்கு வந்து தனது ஒத்துழையாமை இயக்கத்துக்கு ஆதரவைப் பெற்றார். ஒத்துழையாமை இயக்கம் சென்னையிலேயே பிறந்தது எனலாம். இக்காலத்தில் பாரதியார் காந்தியடிகளைச் சந்தித்தார். 1920-இல் விஜய ராசவாச்சாரியாரின் தலைமையில் நாகப்பூரில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் தளபதி ஆனார். பேரவையின் பொதுச் செயலாளர்களுள் ஒருவரான இராசகோபாலச்சாரியார், காந்தியடிகளுடன் இணைந்து செயல்பட்டுத் தமிழகத்தில் காந்தியடிகளின் தளபதியாக விளங்கினார். 1921-ல் இராசகோபாலாச்சாரியர் அரசின் தடையை மீறி வேலூரில் சாத்வீகப் போராட்டத்தைத் துவக்கினார். அரசின் முதன்மை வழக்கறிஞர்

பதவியைப் புறக்கணித்துவிட்டு 1920-ல் தேசியப் பேரவையில் சேர்ந்த சீனிவாச ஐயங்கார் இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளின் தேசிய இயக்கத்தின் ஒப்பற்ற தலைவராக விளங்கினார். ஒத்துழையாமை இயக்கம் துவங்கியதும் போராட்ட ஆவேசம் அத்துமீறல்களைத் தூண்டமாலில்லை. ஒத்துழையாமை இயக்கத்தை ஒடுக்க அரசு தனது மூர்க்கத்தனமானவலிமை அத்தனையையும் பயன்படுத்தியது. 20,000 தொண்டர்களுக்கு மேல் சிறை சென்றனர். மலபாரில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது, என்றாலும் ஒத்துழையாமை இயக்கம் வெற்றிகொண்டது.

இக்காலத்தில் நீதிக்கட்சி இரட்டையாட்சி வகுத்த பொறுப்பாட்சியை, சட்டவரன்முறை வகுத்த விடுதலை, கிராம மறுமலர்ச்சி என்ற அடிப்படையில் செயல்படுத்திக் கொண்டிருந்தது. சுயராச்சியக் கொள்கைக்காகப் பேரவையில் ஒரு சாரார் சி.ஆர் தாஸ் தலைமையில் பிரிந்து சென்றனர். சமூகப் பிரச்சினைகளின் தலைவர்கள் பேரவையைவிட்டு வெளியேறினர். 1925 வைக்கம் போராட்டத்துக்குப்பின் பேரவையைவிட்டு வெளியேறிய பெரியார் சாமானியர் உரிமைகளுக்காகத் தன்மான இயக்கத்தில் ஈடுபட்டார். 1926-இல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சியினர் தோற்றனர். சுயராச்சியக் கட்சியினர் வெற்றிகண்டு பி.சுப்புராயன் தலைமையிலான அமைச்சரவை இரட்டையாட்சி வகுத்த பொறுப்பாட்சியை ஏற்றது. 1927-இல் சென்னையில் நடைபெற்ற பேரவை மாநாடு டொமினியன் அந்தஸ்து கொள்கையைக் கைவிடத் தீர்மானித்தது. அவ்வாண்டு காமராசர், சென்னையில் நேரு தலைமையிலான இந்தியக் குடியரசு நிறுவனத்தின் கிளையை நிறுவினார். 1918-ன் சட்டம் வகுத்த பொறுப்பாட்சியின் செயல்பாடு, சார்பாளர் நிறுவனங்களை விரிவுபடுத்துதல், நிர்வாகச் சீரமைப்பு, கல்விச் சீரமைப்பு முதலியவை பற்றி, அறிக்கை தயாரிக்கும் பொருட்டு வெள்ளையர் அடங்கிய குழு ஒன்று சர் ஜான் சைமன் தலைமையில் 1928-இல் இந்தியா வந்தது. இதை நீதிக் கட்சியினரும், முஸ்லிம் அமைப்புகளும் வரவேற்றன. இது வெறும் கண்துடைப்பெனக் கருதி தேசியப் பேரவை புறக்கணித்து எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியது. சுய நிர்ணயத்தைப் பொருட்படுத்தாமல் நியமிக்கப்பட்ட சைமன் குழுவினை ஒவ்வொரு படியிலும் எதிர்ப்பது எனப் பேரவையின் சென்னைப் பிரிவு தீர்மானித்தது. சத்தியமூர்த்தி தலைமையில் புறக்கணிப்புப் பேராட்டம் சூடுபிடித்தது. நகரம் நடுங்கியது; அடக்குமுறை அத்துமீறியது;கம்படியும், குண்டடியும், நேர் வழக்குகளும் பொய் வழக்குகளும் பெருக்கெடுத்தன. சென்னையில் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற போதிலும் புறக்கணிப்பு இயக்கத்தை வெற்றியுடன் நடத்திக் காட்டினர், பேரவையினர்.

**சட்டமறுப்பு, சட்டசபைப் புகல் காலம்**

1930-ல் காந்தியடிகள் உப்பு சாத்வீகப் போராட்டத்தை துவக்கினார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தண்டி யாத்திரையைக் காந்தியடிகள் நடத்தினார். தமிழகத்தில் இராசகோபாலாச்சாரியர் தலைமையில் திருமறைக்காடு (வேதாரண்யம்) யாத்திரை நடைபெற்றது.

எத்துணை இன்னல்களையும் எதிர்த்து நின்று இறுதிவரை போராடுவோம் என்ற உறுதிமொழி எடுத்துக்கொண்டு ஓமந்தூர் இராமசாமி ரொட்டியார், ஓவி அழகேசன், சர்தார் வேதரத்தினம், பம்பாய் தமிழ் பிரதிநிதி சுப்பிரமணியம் ஆகியோரை உள்ளிட்ட நூறு தொண்டர்கள் தயாரானார்கள். திருச்சியிலிருந்து திருமறைக்காடு நோக்கிப் புறப்பட்ட போராட்ட வீரர்களை வழிநெடுகிலும் மேளதாளங்களுடன் வரவேற்றனர் தஞ்சை ஆளுநரின் எச்சரிக்கை பிசுபிசுத்தது. "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்ற நாமக்கல் இராமலிங்களாரின் பாடலை முழக்கியவாறு திருமறைக்காட்டை (வேதாரண்யம்) அடைந்ததும், இராச கோபாலாச்சாரியார் கைது செய்யப்பட்டு பெல்லாரிக்கு அனுப்பப்பட்டார். தமிழகத்தில் போராட்டம் வெற்றிகண்டது.

குறிப்பு

போராட்டத்தின் வெற்றியைக் கண்டு பொறுக்கமுடியாத அரசு, தொண்டர்களைப் பழிவாங்கத் தொடங்கியது. தொண்டர்களின் மீது ஆளுநர் கொலை, சதி வழக்கும், வெடிகுண்டு வழக்கும் தொடுக்கப்பட்டது. வ.உ.சிதம்பரனார் வழக்காடி காமராசரையும், பிற தொண்டர்களையும் காப்பாற்றினார்.

10-01-1932 சட்டமறுப்பு நாள். தொண்டர்கள் காங்கிரஸ் கொடியை ஆயுதமாக ஏந்திப் போராட்டக் களத்தில் இறங்கினர். திருப்பூரில் குமாரசாமி தொண்டர்களுடன் முன்னணியில் கொடியேந்தி வந்தேமாதரம் முழங்கிக் கொண்டு முன்னேறினார். அவர்களிடமிருந்து காவலர்கள் கொடியைப் பறிக்க முற்பட்டனர். ஆனால் தொண்டர்கள் கீழே விழுந்த பின்னரே காவலர்களால் கொடியைப் பறிக்க முடிந்தது. கொடியைக் காக்க குமரன் தன் இன்னுயிரை ஈந்தான். தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் சிறையிலடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளானார்கள். சாத்வீகப் போராளிகளின் தலைவரான காமராசரை, குண்டு வீசியதாகப் பொய் வழக்கிட்டுச் சிறைப்பிடித்தனர். பிரபல தேசபக்தரான சார்சு சோசப் போன்ற வழக்கறிஞர்கள். அரசாங்கத்தை எதிர்த்துத் தொண்டர்களுக்காக வாதிட்டனர்; வழக்காடினர்; வெற்றியும் கண்டனர்.

1934-இல் சட்ட மறுப்பு இயக்கம் கைவிடப்பட்டது. சட்டசபைப் புகல் இயக்கத்தைக் காங்கிரஸ் ஏற்றது. அன்று அரசுடன் நேருக்கு நேராகப் பேரவை போராடிக் கொண்டிருந்தது. அரசின் எச்சரிக்கைகள், எதிர்கட்சியின் எதிர்ப்பு ஆகியவற்றை முறியடித்துக்கொண்டு தல சுயாட்சி மாநிலங்களுக்குத் தன்னாட்சி கிட்டியது. சென்னை மாநிலத்தை பயன்படுத்திப் பேரவையை முறியடிக்க அரசு கங்கணம் கட்டியது. தொண்டர்களின் அயராத உழைப்பு, நாவன்மை பெற்ற சத்திய மூர்த்தியின் ஊர் ஊராக உள்ள முழக்கங்கள் ஆகியவற்றின் விளைவு 1937-இல் பிற மாநிலங்கள் வெற்றிகாணத் தமிழகம் முன்னோடியாக நின்றது. இராசகோபாலாச்சாரியர் தலைமையில் அமைச்சரவை தன்னாட்சியைத் துவங்கியது. இக்காலங்களில் சத்தியமூர்த்தி, முத்துரங்கமுதலியார் போன்றோரின் இணையற்ற தொண்டும், காமராசர்

உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தொண்டர்களின் தியாகங்களும் வெற்றிப் பயணத்துக்கு உதவின.

1939-இல் துவங்க இருந்த போரின் மணம் 1938 லேயே வீசியது. போராடி வெற்றி பெற மாவீரன் போஸ் தலைமையில் முன்னணிக்கட்சி முன்னேறியது. தமிழகத்து வீரர்களும் அதில் குதித்தனர். பேரவை அன்பு நெறியையும், சாத்வீக வழியையும் கைவிடாது. ஆங்கிலேயர்களை எதிர்த்து முன்னேறியது. 1939-இல் இரண்டாம் உலகப் போர் துவங்கியதும் அமைச்சரவை வெளியேற வேண்டியதாயிற்று. மிக இக்கட்டான நிலை. காங்கிரசின் தமிழக் கிளையின் தலைமை, தலைவர் காமராசரிடம் சேர்ந்தது. 1941-க்குப் பின் தலைமை மேலும் குழப்பமாகியது. உலகத்தின் கீழ்த்திசைப் போர் முனையில் சப்பான் மின்னல் தாக்குதல்களுடன் முன்னேறியது. தென் கிழக்காசிரியா வீழ்ந்து கொண்டிருந்தது. அங்கே ஐரோப்பியர்கள் கறுப்பர்களைக் கைவண்டிகள் இழுக்கக் கட்டாயப்படுத்தினர். மலேயாவும், பர்மாவும் சப்பானின் காலடிக்குள் சென்றன. இந்தியா வெளித்தாக்குதல் பேராபத்தில் மாட்டியது. பிரிட்டன் இந்தியாவைவிட்டு வெளியேறுமானால் அயலார் படையெடுப்பு அபாயம் தவிர்க்கப்படும் என்று தேசத் தலைவர்கள் கருதினர். ஆங்கிலேயர் உடன்படுவதாக இல்லை. எனவே 1942-இல் வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டத்தை இன்றியமையாததாக்கினார். காந்தியடிகள் பேரவை பம்பாயில் கூடிப் போராட்டத் திட்டங்களை வகுத்தது. 1942 ஆகஸ்டு மாதத்தில் பம்பாயிலும், புகைவண்டிகளிலும் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். தென்னகத் தலைவர்களுள் தலைவர் காமராசரும் சஞ்சீவரெட்டியவர்களும் தப்பினர். சென்னை மாகாணப் பேரவைத் தலைவர் என்ற முறையில் தலைவர் காமராசர் போலீசாரின் கையில் சிக்காது மறைந்து தமிழகம் முழுவதிலும் போராட்ட ஏற்பாடுகளைச் செய்து முடித்துவிட்டு விருதுநகரை அடைந்ததும் கைதானார். இவ்வமயம் இராசகோபாலாச்சாரியார் பேரவையிலிருந்து வெளியேறிப் போராட்டத்திலிருந் விலகியிருந்தார்.

விடுதலை இயக்கத்தில் பத்திரிகைகளும் சினிமா கலையரங்கங்களும் நாடகமேடைகளும் ஒத்துழைத்தன; மக்களின் உணர்வுகளைத் தட்டியெடுப்பத் துணை நின்றன. 1942-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் சோதனைக் கட்டமாகியது தமிழகம் ஒட்டுமொத்தமாகப் போராட்ட அலையில் மிதந்தது. விடுதலைப் போராட்டத் தொண்டர்களும் தொழிலாளர்களும், மாணவர்களும், பொதுமக்களும் பங்கேற்றனர். எல்லா நகரங்களிலும் போராட்டம் அத்து மீறியது. மதுரையிலும் இராமநாதபுரம் மாவட்ட நகரங்களிலும், கோயமுத்தூர் பகுதியிலும் பெருங்கலவரமாக மாறியது. பொது அலுவலகங்கள் பல தீக்கரையாயின. சானூர் விமான நிலையம் நொறுக்கப்பட்டது. சரக்குப் புகைவண்டிகளும் தடம் புரண்டன. விடுதலை வேட்கைப்புயலில் அரசு இயந்திரம் தடுமாறியது. இராணுவம்



**குறிப்பு**

வரவழைக்கப்பட்டது. தரைமூலமும் ஆகாயம் மூலமும் தாக்கினர். கம்படிக்கும், குண்டடிக்கும் மக்கள் பலியாயினர். நேர் வழக்காலும் பொய்வழக்காலும் இருபாலரும் இழுத்துச் செல்லப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டனர். 538 முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட ஒரே நாள் போராட்டத்தில் அரசு கணக்குப்படி ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தாய்நாட்டு விடுதலைக்காக உயிர்க் காணிக்கை வைத்தனர். போராட்டம் வெற்றி கண்டது.

அரசின் அடக்குமுறைகளை எதிர்த்து இயக்கம் தொடா்ந்தது. வலுப்பெற்றது. காமராசா் இயக்கத்துக்குத் தலைமை தாங்கினார். தொழிலாளிகளும் கவரப்பட்டனர். விடுதலை அரும்பத் தொடங்கியது. முன்னேற்பாடாக 1945-ல் தேர்தல் நடைபெற்றது பேரவையினர் பெரும் வெற்றி கண்டனர். ஆந்திர சிங்கம் பிரகாசம் தலைமையில் இடைக்கால அரசாங்கம், விடுதலைக்கு முன் உருவாகியது. 1947-ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றதுடன் அதன் அங்கமாகத் தமிழகமும் விடுதலையை விழாக்கோலமாக்கியது.

## 10.11 தொகுத்துக் காண்போம்

- இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களின் பங்குப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- உப்பு சத்தியாக்கிரகம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கங்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 10.12 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களின் பங்கு குறித்து விளக்குக.
2. நீதிக்கட்சியின் இந்திய விடுதலைப் போராட்டப் பங்களிப்பு குறித்து விளக்குக.
3. சுயமரியாதை இயக்கம் குறித்து விவரிக்க.
4. திராவிட இயக்கங்களின் விடுதலைப் போராட்டப் பணி குறித்து விளக்குக.
5.

## 10.13 மேலும் அறிந்துகொள்ள

கே.கே.பிள்ளை - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்

அ.இராமசாமி - தமிழ்நாட்டு வரலா

குறிப்பு

# கூறு:11
# தமிழ்ப் பண்பாட்டில் சமணம், பௌத்தம், இசுலாம் கிறித்தவம்

## 11:1 முன்னுரை

தமிழகத்திலுள்ள நீதிநூல்களில் பலவற்றைத் தந்த பெருமைக்குரியது சமணசமயம். வேற்றுமை பாராட்டாது மக்களுக்குத் தொண்டு புரிந்த சமயம் பௌத்தம். தமிழ் நாட்டு மக்களில் தமிழையும் உருதுவையும் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இசுலாம் சமயத்தினார். இந்து சமயத்தின் குறைபாடுகளும் அரசியல் செல்வாக்கும் இச்சமய வளர்ச்சிக்குவித்திட்டது. பிற்காலத்தில் ஆங்கிலேயர் உலகில் குடியேற்ற ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு முன் ஐரோப்பாவிலிருந்து அடுத்தடுத்து வந்த கிறித்தவ சமயத் துறவிகளின் தன்னலமற்ற தொண்டின் விளைவாகவே தமிழகத்தில் பரவிற்று என்பதை இப்பகுதியின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

## 11:2 குறிக்கோள்கள்

1. சமண சமயத்தை வலியுறுத்தும் நூல்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
2. புத்த சமயம் பெற்ற செல்வாக்கு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
3. கிறித்தவ சமயம் வளரப் பாடுபட்ட வீரமாமுனிவர், சீகன் பால்கு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 11.3 சமணரின் தமிழ்த்தொண்டு

தமிழிலுள்ள நீதி நூல்களில் தலைசிறந்தது திருக்குறளாகும். திருவள்ளுவரது சமயம் இன்னதெனத் துணிய இயலவில்லை என்றாலும் சமணர்கள் போற்றிய கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, கள்ளாமை முதலிய அறங்கள் வள்ளுவரால் கூறப்பட்டுள்ளன. புலாலையும் கள்ளையும் பண்டைச் சான்றோர் கடிந்தாலரல்லர். சமண சமயச் செல்வாக்கினாலேயே இக்கொள்கைகள் வேரூன்றின எனலாம். எனவே சமண சமயக் கொள்கைகள் சிலவற்றை வள்ளுவர் ஏற்றுக்கொண்டார் என்றால் அது தவறாகாது. வள்ளுவத்தை வளப்படுத்தியதில் சமண சமயத்துக்கும் பங்குண்டு எனலாம்.

வள்ளுவத்துக்கு அடுத்த நிலையில் போற்றப்படும் அறநூல் 400 வெண்பாக்களையுடைய நாலடியாராகும். இந்நூலை சமண முனிவர் பலர் எழுதினர் என்பர். இதன்கண் சமண சமயத்தின் கொள்கைகள் பலவும் அழகாக வலியுறுத்தப்படுகின்றன. திருவள்ளுவர் போலவே

எல்லார்க்கும் ஒத்த அடிப்படை அறங்களை இந்நூலும் கூறுகின்றது. தமிழில் வழங்கும் சிறந்த பழமொழிகளில் நானூற்றினைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வெண்பாவைப் பாடி 400 வெண்பாக்களடங்கிய பழமொழி என்ற நூலை இயற்றினார். முன்றுரை அரையனார் என்ற சமணப் பெரியார்.

கணிமேதையார் என்பவர் ஏலாதி என்ற நூலை இயற்றினார். இந்நூலின் செய்யுள் ஒவ்வொன்றிலும் ஆறு அறங்கள் கூறப்படும். இவ்வாசிரியர் சமணர் என்பது இதிலுள்ள வாழத்துச் செய்யுளான் அறியலாம். 226 வெண்பாக்களைக் கொண்டு விளங்குவது அறநெறிச்சாரமாகும். இதன் ஆசரியர் முனைப்பாடியார் “தாமரைப்பூவின்மேற் சென்றான். புகழடியை நாவாற்றுதித்து”:, “சிவன்றானும் நின்றுகால் சீக்கும் நிழல் பிண்டிக்கீழ்”:, “நின்ற முக்குடையான் வேந்து” என்னும் தொடர்களால் இவர் சமணர் என்பது விளங்கும். எனவே சமணரால் தமிழில் அறநூல்கள் பல்கின என்றுணரலாம்.

பதினெண்கீழ்க் கணக்கிடலங்கிய திணைமாலை நூற்றைம்பதைப் பாடிய புலவர் ஏலாதி ஆசிரியராகிய கணிமேதையாரே யாவார். ஐம்பெருங்காப்பியங்களில் தலைசிறந்தது சிலம்பாகும். ஆசிரியர் இளங்கோவடிகள் சமண நெறியானரென்பதே பலர் கருத்து சமணக் கொள்கைகள் பல இந்நூலில் இடம்பெற்றுள்ளமை அறிஞர் அறிந்ததே. தமிழரது நாகரிகத்தை உலகறியச் செய்யும் இம்முதற்காப்பியத்தைத் தந்த பெருமை சமணத்துக்கேயுரியது.

ஐம்பெருங் காப்பியங்களிலொன்றான சீவக சிந்தாமணியும் சமணரின் கொடையே. விருத்த யாப்பிலெழுந்த முதற்காப்பியம் இதுவே. இந்நூலே கம்பருக்கும், சேக்கிழாருக்கும் முன்னோடியாக விளங்கியது. பல்வேறு சந்தங்களைத் தன்னகத்தே கொண்ட ஒப்பில்லாப் பேரிலக்கியமாக சிந்தாமணி தமிழுக்குக் கிடைத்த அருஞ்செல்வமாகும். சோழர் காலத்திலேற்பட்ட காப்பியங்களில் குண்டலகேசியும், வளையாபதியும் சமணர் இயற்றியனவே. எனவே ஐம்பெருங்காப்பியங்களில் நான்கு சமணரது கொடையாகும்.

உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், நீலகேசி, சூளாமணி ஆகிய ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்களாகும். இவை சமணர் இயற்றியனவே.

வாமனாச்சாரியரின் மேருமந்தர புராணம் 12 சருக்கங்கள் கொண்ட நூலாகும். சமணரது புராணங்களில் மணிப்பிரவான் நடையிலமைந்த ஸ்ரீ புராணம் தீர்த்தங்கரர்களின் வரலாற்றைக் கூறும் நூலாகும்.

நிகண்டுகளை முதலில் தோற்றிய பெருமையும் சமணரைச் சேரும். திவாகர நிகண்டும். சூடாமணி நிகண்டும், பிங்கல நிகண்டும்,

சமணப் பெரியார்கள் இயற்றியன. தமிழிலுள்ள மிகப் பழைமையான நூல் தொல்காப்பியமாகும். இதுவே தமிழரின் நாகரிகப் பழமையையும் பெருமையையும் காட்டி நிற்பது. தொல்காப்பியரைச் சிலர் சமணர் என்பர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ச.யைாபுரிப்பிள்ளையாவார்.

இது நிறுவப்படுமானால் சமணரின் தொண்டு மேலும் உயர்ந்துவிடுகிறது. தொல்காப்பியத்திற்குப் பிறகு மொழியில் தோன்றிய மாற்றங்களையெல்லாம் உள்ளடக்கி. கி.பி.13ஆம் நூற்றாண்டில் நன்னூலை இயற்றிய பெருமை சமணராகிய பவணந்தியைச் சாரும். இன்று இதுவே பயில வழங்குகிறது. சின்னூல் என வழங்கும் நேமிநாதம். குணவீர பண்டிதர் என்ற சமணருடைய படைப்பாகும். தொல்காப்பியத்தில் கூறப்படும் அகப்பொருள் கருத்துக்களை எளிமைப்படுத்தி எழுதப்பட்ட நூலே நம்பியகப் பொருளாகும். இதன் ஆசிரியர் நாற்கவிராச நம்பியென்னும் சமணராவார். தொல்காப்பியருக்குப் பிறகு யாப்பில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டன. பாவினங்கள் பல உருவாய்விட்டன. அவைகளையெல்லாம் தழுவிய புதுயாப்பு நூல் தேவையென்றுணர்ந்து அமிர்த சாகரர் என்னும் சமணர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகையென்னும் இரு நூல்களை இயற்றியருளினார். எனவே, இலக்கண வளர்ச்சியில் முன்னிற்போரும் சமணர்களே.

தொல்காப்பியத்திற்கு முதன் முதல் உரையை எழுதியவர் இளம்பூரணர் என்ற சமணராவார். இவரைத் தொடர்ந்து பல உரையாசிரியர் உரையெழுதினார். பிற்கால உரையாசிரியர் அனைவரும் இவரைப் பெரிதும் மதித்தனர் என்பதனை அவர்கள் உரைகளால் அறியலாம். யாப்பருங்கலக் காரிகைக்கு நூலாசிரியரின் மாணவராகிய குணசாகரர் அரிய உரை செய்தளித்தார். நாலடியாருக்கு அதிகாரம் வகுத்த பெருமை பதுமனார் என்னும் சமணரைச் சாரும். இன்னும் சங்க நூல்களில் காணப்படும் பல பாக்கள் சமணர்களால் எழுதப்பட்டவையாம். நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார் போன்ற புலவர்கள் அறியப்படுகின்றனர். இதுகாறும் கூறியவற்றால் சமணர் தமிழ்மொழிக்குச் செய்த தொண்டின் அளவினை நன்கு உணரலாம்.

## 11.4 தமிழ்ப் பண்பாட்டில் பௌத்தம்

கௌதம புத்தரால் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட பௌத்த மதம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் காலத்தில் தமிழகம் வந்தது என்பர். அசோகருடைய கிர்னார், பெஷாவர் கற்சாசனங்களின் வழியே இதனை உணர்கின்றோம். கிர்னார் சாசனத்தால் அசோகர் தமிழ்நாட்டிலும் வேறு பல நாடுகளிலும் மனிதர்க்கும் கால்நடைகட்கும் இரு வேறு மருத்துவமுறைகளை நிறுவினார் என அறிகின்றோம். இங்ஙனம் இங்கே வந்த பௌத்தம் ஒரு காலத்தில் நன்கு பரவிற்று. பல்லவர் காலத்தில் (கி.பி.642) இங்கே

வந்த சீன அறிஞர் யுவான் சுவாங்கு பல இடங்களில் அசோகரும் மகேந்திரரும் கட்டிய விகாரங்களும் தூபிகளும் இடிந்து கிடந்ததைத் தாம் கண்டதாகக் கூறுகிறார். பதினாயிரம் பௌத்தத் துறவிகளும் நூறு மடங்களும் இருந்ததாகக் கூறுகிறார். தருமபாலர் காஞ்சியில் இருந்து ஆராய்ச்சிகள் நடத்தினார் என்று இலங்கை நூல்கள் கூறுகின்றன. 'நெட்டி அட்டசுதா' என்னும் நூல் அசோகர் விகாரையில் இருக்கையில் அவரால் எழுதப்பட்டதாம். கி.பி. 5ஆம் நூற்றாண்டில் புத்ததத்தர் எழுதியுள்ளார். இந்திரவிகாரம் புகாரிலிருந்தது. மகேந்திரதேரரே இதனைக் கட்டினார். பல ஊர்களில் பௌத்தச் சின்னங்கள் கிடைக்கின்றன. இச்சின்னங்கள் பௌத்தத்தின் செல்வாக்கினைக் குறிப்பனவாகும். பௌத்தம் சமணத்தோடும் வைதிகத்தோடும் போராடி நலிவுற்றது. இச்சமயத்தினால் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சியைச் சுருக்கமாகக் காண்போம்.

**குறிப்பு**

பௌத்தர்களின் சங்கமே அதன் வளர்ச்சிக்குக் காரணமாகும். தன்னலமில்லாத் துறவிகள் இச்சங்கத்தில் இருந்தனர். தூய ஒழுக்கமுள்ள துறவிகள் ஊரெங்கும் சென்று தொண்டாற்றினர். களப்பிரர் காலத்தின் தொடக்கத்தில் அவர்கட்குச் செல்வாக்கு இருந்தது. அரசரும் வணிகரும் செல்வரும் உதவினர். விகாரைகளும் குகைகளும் அமைத்துக் கொடுத்தனர். அம்மடங்களில் மக்கட்குக் கல்விப் பயிற்சியும் சமயப் போதனையும் நல்கப்பட்டன. நாட்டு மொழியைப் பாராட்டினர். தமிழில் இலக்கிய இலக்கணங்களைச் செய்தனர் இயலாத மக்கட்கு உணவளித்தனர். காணார், கேளார், காலில் முடவர், ஏதிலார் அனைவர்க்கும் உணவிடுவதனைக் கடமையாகக் கொண்டனர். பிணியாளர்க்கு மருத்துவப் பணி செய்தனர். வருண வேறுபாட்டை வெறுத்தனர். நல்லொழுக்கமே உயர்வுக்கு வழிவகுக்கும் என்றனர். மணிமேகலையும் ஆபுத்திரனும் தொண்டினால் உயர்ந்தோர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் கீழோர் என ஒதுக்கப்பட்ட மக்களின் ஆதரவு கிடைத்தது. வேற்றுமை பாராட்டாது மக்களுக்குத் தொண்டு புரிந்த பௌத்த சமயம் நன்கு பரவிட வாய்ப்பேற்பட்டதில் வியப்பொன்றுமில்லை.

இங்ஙனம் வளர்ச்சியுற்ற பௌத்தம் பல்லவர் காலத்துக்கு முன்பே வலியிழக்கத் தொடங்கிற்று. கடவுளை ஏற்காமையொன்றே அதன் அழிவுக்குக் காரணமாயிற்று என்பார் கே.கே. பிள்ளை, சமணர்கள் வைதிகச் சமயத்துடனும் தொடர்பு கொண்டு சில வைதிகக் கொள்கைகளையும் ஏற்றனர். வாசுதேவனையும் பலராமனையும் ஏற்றனர். திருமகளையும் ஏற்றனர். இதனால் சமணரோடு பௌத்தர் போட்டியிட முடியவில்லை. சமணர்க்கும் பௌத்தர்க்கும் இடையே பூசல்கள் ஏற்பட்டன. சமணர் கை ஓங்கிற்று. பௌத்தர்கள் காஞ்சி, புகார் போன்ற பெரிய நகர்களில் மட்டும் தங்கியிருந்தனர். ஆனால் சமணர் நாட்டுப்புறங்கட்கும் ஊடுருவிச் சென்று பணியாற்றினர். இதனால் நாளடைவில் சமணத்தோடு போட்டியிட முடியாது. பௌத்தம்

வலுவிழந்தது. மேலும் மனிதனின் வினைகட்குரிய பலனை அடைவிக்கும் கடவுள் ஒருவர் உண்டு என்ற கடவுட் கோட்பாட்டைப் பௌத்தர் ஏற்கவில்லை. எனவே கடவுள் நம்பிக்கையில் ஊறிய தமிழர் இதனைப் புறக்கணித்தனர் என்பர். எல்லாவற்றுக்கும் மேலாகப் பௌத்த மன்னனான அச்சுதவிக்கிரந்தன் கடுங்கோன் பாண்டியனாலும் சிம்ம விஷ்ணுவாலும் முறியடிக்கப்பட்டது பௌத்தத்தின் அழிவுக்கு வழிகோலிற்று.

## 11.5 தமிழ்ப் பண்பாட்டில் இசுலாம் சமயம்

தமிழ்நாட்டு மக்கள் தொகையில் தமிழையும் உருதுவையும் தாய் மொழியாகக் கொண்ட முகமதியச் சமூகத்தார் கணிசமான அளவில் உள்ளனர். கடலோரப் பகுதிகளிலும் உள்நாட்டிலும் முகமதியர்கள் பெரும்பான்மையாக வாழும் ஊர்கள் பலவாகும். இம்மக்கள் பெரும்பாலும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். கி.பி.14 ஆம் நூற்றாண்டில் தான் முகமதியப் படையெடுப்பு நடந்தது. எனினும் சிந்து மாகாணத்தில் அவர்கள் குடியேற்றுவதற்கு முன்பே அராபிய வணிகர்கள் மலபார் கடற்கரையில் குடியேறினர். மன்னர் ஆதரவோடு தமிழகப் பொருள்களை ஐரோப்பியரிடம் விற்றனர். இவ்வணிகர்களால் தமிழகத்தில் தொடர்ந்து முகமதியக் குடியேற்றம் ஏற்பட்டது. தமிழ்ப் பெண்களை மணந்து கொண்டனர். இந்து-பெர்சியக் கலப்பினமும் இந்து-அராபியக் கலப்பினமும் தோன்ற இடமேற்பட்டது. கோளத்தில் உள்ள 'மாப்பிள்ளைகள்' இவர்களேயாவர். தஞ்சை மாவட்டம் நன்னிலத்தருகே மாப்பிள்ளைக் குப்பம் என்னும் ஊர் உண்டு. இவர்களின் நுழைவினால் தமிழில் அரபு, பெர்சியர் சொற்கள் கலந்தது தவிரப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிடவில்லை என்பர். இசுலாத்தின் செல்வாக்கு தமிழ் நாட்டில் எந்த அளவு நிலை பெற்றுள்ளது என்பதனைச் சுருக்கமாக உரைப்போம்.

கி.பி.14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டில் குலசேகர பாண்டியனின் மக்கள் நடத்திய உரிமைப் போரினைப் பயன்படுத்தி மாலிக்காபூர் பாண்டிய நாட்டின் மேல் பாய்ந்து அளவற்ற செல்வத்தைக் கொள்ளையிட்டுத் திரும்பினார். அடுத்தடுத்து சில படையெடுப்புகள் நடந்தன. 1378 வரையில் அரை நூற்றாண்டு காலம் மதுரையில் முகமதியர் ஆண்டனர். நாயக்க மன்னர்கள் அவர்ளை வீழ்த்தினர் எனினும், பீசப்பூர் சுல்தான்களும், கருநாடக நவாபுகளும் படையெடுத்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகம் போராட்டக் களமாக விளங்கிற்று.

கருநாடக நவாபுகளின் ஆட்சியின் போதும் அதற்கு முன்னும் தமிழகத்தில் முகமதியர் குடியேறினர். இந்துக்கள் பலர் அச்சமயத்தில் சேர்க்கப்பட்டனர். இசுலாம் சமயம் சகோதர நேயத்தைப் போற்றியது. எனவே இந்துக்களால் புறக்கணிக்கப்பட்ட கீழ்ச்சாதி மக்கள் பேரளவில் இச்சமயததைத் தழுவினராம். வங்காளத்தில் இருந்த நிலை

தமிழகத்திலும் இருந்திருக்கக் கூடும். இந்து சமயத்தின் குறைபாடுகளும், அரசியில் செல்வாக்கும் இச்சமய வளர்ச்சிக்கு உதவின எனலாம். முகமதிய ஆட்சியாளர்கள் சமய வெறுப்புக் காட்டினர் என்றும் இந்து சமய நிறுவனங்கட்கு இடையூறு செய்தனர் என்றும் கூறுவர். இந்துக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனராம். பெருங்கோபுரங்கள் இடிக்கப்பட்டனவாம். பல கோயில்களைப் பள்ளி வாசல்களாக மாற்றினராம். சொத்துக்கள் பறிக்கப்பட்டனவென்றும் சமய நெறிகள் தடை செய்யப்பட்டனவென்றும் நூல்கள் பல அழிக்கப்பட்டனவென்றும் கூறுவர். முகமதியர் செய்த அட்டூழியங்களை அ.கி.பரந்தரமனார் தம் 'மதுரை நாயக்கர் வரலாறு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அதனைக் கண்டு உணர்க. இரண்டாம் கம்பணரின் மனைவி எழுதிய மதுரா விஜயம் என்னும் நூலில் முகமதியர் செய்த அழிவு வேலைகளை வருத்தத்தோடு எடுத்துக் கூறியுள்ளார். அ.கி. பரந்தரமனார் நூலில் இதனையும் காணலாம். கவிதைக்கே உரிய மிகை நவிற்சி இதில் உண்டெனினும் கொடுமைகள் இழைக்கப்பட்டமைக்குரிய சான்றாகக் கொள்வதில் தவறில்லை.

இசுலாமியரின் தொடர்பால் தமிழகத்திலேற்பட்ட பண்பாட்டு வளர்ச்சியைக் காண்போம். தமிழகத்தில் உரிய கட்டடக்கலை இடம் பெற்றது. பள்ளிவாசல்கள் எண்ணற்றவை ஏற்பட்டன. நாகூரில் உள்ள ஆண்டவர் கோயில் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். எனினும் வடநாட்டிலுள்ளவாறு பெரிய கட்டடங்கள் இங்கே தோன்ற வில்லை எனலாம். தமிழகத்தின் இசைக்கலை மரபு பழமையானது. அதனோடு இசுலாமிய இசை மரபும் தமிழகத்தில் நுழைந்தது. இந்திய வீணையையும் இரானியத் தம்பூராவையும் இணைத்து, 'சிதார்' என்னும் இசைக் கருவியை இந்திய முசுலீம் கலைஞர்கள் படைத்தனர். இன்னொரு அரிய பண்பாட்டுக்கூறு 'யுனானி' மருத்துவ முறையாகும். தமிழர்கள் இம் முறை மருத்துவத்தால் பயனடைந்து வருகின்றனர்.

இந்திய நாட்டுச் சமய சிந்தனைகள் பலவற்றையும் தமிழர்கள் அறிய வாய்ப்பேற்பட்டது போல் இசுலாமிய சமயச் சிந்தனையையும் தமிழர் அறிய வாய்ப்பு ஏற்பட்டது. திருக்குர்-ஆன் தமிழில் மொழி பெயர்த்து வந்தது. தமிழ்நாட்டு முகமதியச் சான்றோர்கள் தம் சமயக் கோட்பாடுகளைத் தமிழ் நூல்களின் வாயிலாகப் பரப்ப முயன்றனர். இதனால் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது. தமிழ் பண்பாட்டில் இசுலாம் சமயத்தின் செல்வாக்கு மிகத் தெளிவாகத் தெரிவது இலக்கியத் துறையில்தான். இசுலாமிய இலக்கியத்தை நினைக்கும் போது நம் உள்ளத்தில் முதலில் இடம் பெறுவது உமறுப் புலவரின் காவியமான சீறாப்புராணம் தான். கி.பி.17ஆம் நூற்றாண்டில் கீழக்கரையில் வாழ்ந்த சையது காதர் என்பவரின் உதவியால் 5000 செய்யுட்கள் கொண்ட அரிய நூலை உமறுப்புலவர் படைத்தளித்தார். அடுத்த சிறப்புமிக்க நூல் மஸ்தான் சாகிபு என்னும் இசுலாமிய சித்தரின் நூலாகும். தாயுமானவரின் பாடல்களை நினைவூட்டும் இவருடைய பாடல்கள் இனிய

குறிப்பு

இசையமைதியையும் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களையும் கொண்டவையாகும். முகமதியப் புலவர் பலர் எத்துணையோ சிற்றிலக்கியங்களைப் படைத்தனர். கவிக் களஞ்சியப் புலவர், சவ்வாது புலவர், சையது வீரர், சையது இமாம் சேக் அப்துல் காதர் நயினார். குலாம் காதிறு நாவலர் அந்தாதி, திரிபு அந்தாதி பிள்ளைத் தமிழ், மாலை, சிந்து, கீர்த்தனை, திருப்புகழ் என்னும் பல இலக்கிய வகைகளையும் படைத்துள்ளமை பாராட்டுக்குரியதாகும். பெரும்புலவர் குலாம் காதிறு நாவலர் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை என்னும் நூலைப் படைத்தார். இது வள்ளல் பாண்டித்துரைத் தேவரைப் புகழ்வது.

இங்குக் கூறப்பட்டவை அனைத்தும் தமிழ் மரபு தழுவிய நூல்களாகும். இசுலாமியருக்கே சிறப்பாக உரிய இலக்கிய வகைகள் பலவற்றை இப்புலவர்கள் இயற்றியுள்ளனர். அவற்றில் குறிப்பிடத்தக்கவை படைப்போர். கிஸ்ஸா, மசாலா, நாமா என்பனவாகும். பழித்தல் முறையில் பாடும் 'ஏசல்' என்பதொன்றும் உண்டு. இந்நூல்கள் பற்றிய விரிவான செய்திகளை இலக்கிய வரலாற்று நூல்களில் கண்டு கொள்க.

இசுலாம் சமய ஒழுக்க நூல்கள் சிலவும் தோன்றியுள்ளன. மகால் பெரிய நிகு என்பவர் ஆசாரக் கோவை' பாடினார். பீர் முகம்மது என்பவர் முசுலீம்களின் ஒழுக்கம், வழக்கம்,சட்டம் ஆகியவை பற்றிய ஒரு நூலை இயற்றியுள்ளார். அரபு பாரசீகம் ஆகிய மொழிகளிலிருந்து வந்த நூல்கள் பல மொழிபெயர்க்கப்பட்டன. 'முசுலீம் அத்துவைத மூலமொழி' என்னும் நூலை அப்துல் ரகுமான் என்பவர் எழுதியுள்ளார். 'அவுபநவாசு' என்னும் நூல் அரசவைக் கோமாளி பற்றிய கதை நூலாகும். இதன் ஆசிரியர் மீரான் சாகிபு சாகுல் அமீது லப்பை என்பவர் 'மௌலாளா ரூமி ஜீவிய சரித்திரம்' என்னும் நூலின் ஆசிரியர். இந்நூல்கள் முகம்மதியரின் வழக்க ஒழுக்கங்களையும் பெரியவர்களின் வரலாறுகளையும் தமிழர் அறிய உதவின.

இசுலாமியர்களின் தொடர்பினால் தமிழில் கலந்துள்ள உருது, பாரசிக, அராபியச் சொற்கள் எண்ணற்றவை. அவை நம் பேச்சிலும், எழுத்திலும் நிலைத்துவிட்டன. அவை கிட்டத்தட்ட 5000 எனக் கணக்கிட்டுள்ளனர். 961 உருதுச்சொற்கள் கலந்துள்ளனவாம். அவற்றுள் சில வருமாறு: அக்கப்போர், அக்கரகாரம், அக்கு, அசல், ஆசாமி, அண்டா, அரை, அபினி, அம்பர், அம்பாரி, அமுல், அலாதி, இந்துஸ்தான், ராஜீ, ராஜினாமா, ராத்தல், ராட்டினம், லங்கோடு, இனாம், ஊதா, ஊதுவத்தி, ஜவேஜி, அவுட்டுகச்சா, கச்சேரி, கஜானா, கசகசா, கசாப்பு, கெடுபிடி, கைலி, கிராக்கி, குத்தகை, சந்தா, சப்பரம், சராசரி, சமான் என்பனவாகும். (தெ.பொ.மீ.தமிழும் பிற பண்பாடும் பக்.77-78).

பாரசீகச் சொற்கள் 65 கலந்துள்ளன என்பர். சுபாதார், முதலாம் என்பவை அராபி. 'துப்பாக்கி' என்பது துருக்கியிலிருந்து பாரசீகம் வழியே வந்தது. சிப்பந்தி, தவாலி, தம்பிடித்தல், தர்கா, நாஸ்தா, மஜா, மாலீசு, லுங்கி, ஜமுக்காளம், சால்வை, ஜோக்கு, சர்க்கார், சுமார் ஆகியவை தமிழாகவே ஆகிவிட்டன. கிஸ்தி, ரயத்து, வக்கீல், ஜப்தி, கஞ்சரா, தண்டோரா, ஜில்லா, தாலுக்கா, மாகாணம், ஜமாபந்தி, பூந்தி, மிட்டாய், சர்பத், அத்தர், பத்தி, அண்டா, கூஜா, உஷார், ஜாஸ்தி, பலே, பேஷ், சவுடால் போன்ற சொற்கள் அன்றாட வழக்கில் நிலைபெற்றுவிட்டன.

புலவு என்னும் பிரியாணியும் சர்பத்தும் முகமதியர் தொடர்பால் இடம்பெற்றவை எனலாம். அத்தர், பன்னீர் போன்ற மணப் பொருள்களை மிகுதியாகப் பயன்படுத்தும் வழக்கும் இத்தகையதே. இன்னும் நன்கு ஆராய்ந்து பார்த்தால் முகமதியர் செல்வாக்கினை மேலும் காணக்கூடும். வட நாட்டில் நிகழ்ந்தவாறு இந்து- முஸ்லீம் கலவரங்களும் கொலை கொள்ளைகளும் தமிழகத்தில் நிகழாதது குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழரின் சகிப்புத் தன்மைக்கு இது சான்றாகும்.

இசுலாம் சமயம் இந்து சமூகத்தில் செலுத்திய செல்வாக்குப் பற்றி ஆராய்ந்த திரு. சோப்ரா என்பவர் இந்திய சமூகத்தின் அடிப்படைத் தன்மையை அதனால் மாற்ற முடியவில்லை என்கிறார். எனினும் இசுலாத்தின் சகோரத்துவமும், சமத்துவ உணர்வும், ஒரே கடவுட் கோட்பாடும் கடவுளிடம் முழுமையாகச் சரண் புகுதலும் இந்தியச் சிந்தனையாளரிடத்தும், சீர்திருத்தக்காரரிடத்தும் அழுத்தமாகப் பதிந்தனவாம். சாதியையும் பல கடவுள் வழிபாட்டையும் கண்டிக்கும் நிலை தென்னகத்தில் மீண்டும் புதுப்பிக்கும் முயற்சி ஏற்பட்டதென்கிறார். இராமனுசரின் மாணாக்கர் இராமானந்தர். எல்லாச் சாதியரையும் மாணாக்கராக ஏற்றதும். தமிழ்நாட்டுச் சித்தர்கள் தீவிர சீர்திருத்தக்காரர்களாக விளங்கியதும் இசுலாத்தின் செல்வாக்கினால்தான் என்பர். எனினும் உபநிடதங்களின் செல்வாக்கே இவை என்பர் சிலர். ஒரு கடவுட் கோட்பாடு, உணர்ச்சி வயப்பட்ட வழிபாடு, சரணாகதி, சமயகுருவை வழி படுதல் என்பவை நாளாக நாளாக வளர்ந்ததும், சாதிக் கட்டுப்பாடுகள் தளர்ந்ததும், சடங்குகளை வெறுத்ததும் இசுலாத்தின் செல்வாக்கால் ஏற்பட்டவை என்பார் கூற்றை மறுத்து இவையனைத்தும் இந்து சமயத்துக்குள்ளேயே தோன்றிய வரலாற்று நிகழ்ச்சிகள் என்று கூறுவதும் பொருத்தமே என்பார் அறிஞர் நீலகண்ட சாஸ்திரி இசுலாத்தின் கொள்கைகளை அறியத் தலைப்பட்டதால் வைணவத்தின் கொள்கைகளும் அமைப்பு முறைகளும் தெளிவும் வரையறையும் பெற்றன என்ற எலியட்டின் கருத்தை ஏற்கின்றார்.

இதுவரையில் கூறியவற்றால் இசுலாம் சமயம் பிற சமயங்கள் போலவே கலை, சமயம், இலக்கியம், மருத்துவம் போன்ற பல துறைகளிலும் தன் அடிச்சுவட்டைப் பதித்துள்ளது என்று உணரலாம்.

## 11.6 கிறித்தவ சமயத்தின் பண்பாட்டுக் கொடை



உலகச் சமயங்களில் கிறித்தவச் சமயம்போல் உலகளாவிய நிலையில் ஆழமாக வேர்விட்டு அகலக் கிளை பரப்பியது வேறு எதுவும் இல்லை. பிற்காலத்தில் ஆங்கிலேயர் உலகில் குடியேற்ற ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு முன் ஐரோப்பாவிலிருந்து அடுத்தடுத்து வந்து கிறித்தவ சமயத் துறவிகளின் தன்னலமற்ற தொண்டின் விளைவாகவே இந்நெறி தமிழகத்தில் பரவிற்று தமிழகம் போந்த முதல் கிறித்தவத் தொண்டர் தோமய்யர் எனப்படுவார். இவர் மேலைக் கடற்கரையிலுள்ள கொடுங்கோளூரில் வந்து இறங்கிச் சேர நாட்டின் பகுதிகளிலும் பின்னால் கொற்கையை ஒட்டிய பகுதியிலும் தொண்டாற்றினார் என்பர். பன்னெடுங்காலமாக இசுலாமியர் தமிழ்நாட்டுடன் வாணிகம் செய்தனர். ஐரோப்பியர்க்கும் இசுலாமியர்க்கும் வணிகப் போட்டி இருந்தது. போர்ச்சுகல் நாட்டுக் கொலம்பஸ். இந்தியாவைக் கண்டறிய முயன்று தோற்றார். அதன்பின் 1498 இல் வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டை வந்தடைந்தார். மன்னர் ஒப்புதலுடன் போர்ச்சுக்கீசியர் வணிகம் செய்தனர். இவர்கள் கிறித்தவ நெறியைப் பரப்பவும் முயன்றனர். புனித சவேரியார், இரபர்ட் டி நொபிலி, ஜான் பிரிட்டோ, வீரமா முனிவர் ஆகியோர் தம் திருப்பணியைச் செய்தனர். இவர் தம் பணி ஒரு நூற்றாண்டுக் காலம் நடந்தது. இவர்களை அடுத்து ஆலந்து நாட்டார் வந்து தம் கிழக்கிந்திய வர்த்தகச் சங்கத்தை நிறுவினர். 17 ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர் கை ஓங்கிற்று. இவர்கள் கட்டாய மத மாற்றத்தில் ஈடுபட்டனர் என்பர். டச்சுக்காரர்களுக்குப் பின் ஆங்கிலேயரின் கிழக்கு இந்திய வணிக சங்கத்தை கி.பி.1600இல் நிறுவினர். இவர்கட்குப் பின் டென்மார்க்கைச் சேர்ந்த டேனிஷ்காரர்கள் 1620 இல் தரங்கம்பாடியிலும் பழவேற்காட்டிலும் இருந்து வாணிகம் செய்து பின் தம் குழுமத்தை ஆங்கிலேயர்க்கு விற்றனர். இவர்களும் சமயப் பரப்பில் ஈடுபட்டனர். பிரான்சு நாட்டினர் வந்து பிரஞ்சு இந்திய வர்த்தகக் கழகத்தை 1664இல் நிறுவினர். புதுச்சேரி இவர்களின் தலைமையிடமாயிற்று. டியூப்ளே தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினார். இங்ஙனம் ஐரோப்பியர்கள் தம் சமயத்தைத் தமிழ்நாட்டில் பரப்பினர்.

அடக்கமும் அயராத உழைப்பும் கிறித்தவ நெறி மீது ஆழ்ந்த ஈடுபாடும் கொண்ட இர.ஆரோக்கியசாமி, அரிதில் முயன்று எழுதி வெளியிட்ட கிறித்தவ இலக்கிய வரலாறு என்னும் அரிய நூலில் தமிழ் மண்ணில் சமயம் பரப்பிய 37 துறவிகள் பற்றிய வரலாற்றையும் அவர்தம் பணிகளையும் விளக்கியுள்ளார். இவர்களுள் 111 கவிஞர்களும், பிற துறைகளில் தொண்டாற்றிய 120 அறிஞர்களும் அடங்குவர்.

## 11.6.1 வீரமாமுனிவர் 1680-1747:

குறிப்பு

1680இல் இத்தாலியில் பிறந்தவர் இம்மாமேதை. 1710 இல் இவர் கோவாவுக்கு வந்தார். மதுரைப் பகுதியில் மறவர் நாட்டின பல ஊர்களுக்குக் கிறித்தவத் துறவிகள் பயணம் செய்தனர். முனிவர் தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம் ஆகியவற்றை நன்கு கற்றவர்.

தென்னார்காடு மாவட்டத்தில் கோணான் குப்பம் என்ற ஊரில் முத்துசாமி ஆச்சிராயன் என்னும் பாளையக்காரர் உதவி இவருக்குக் கிடைத்தது. அது கொண்டு அங்கு மரியன்னைக்குக் கோயில் கட்டினார். உலகக் காப்பியங்கள் பலவற்றிலும் பயிற்சியுடைய இவர். கம்பராமாயணத்திலும், சீவக சிந்தாமணியிலும் ஈடுபாடு கொண்டார். இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையான யோசேப்பைப் பாட்டுடைத் தலைவராக வைத்துத் தேம்பாவணி என்னும் காப்பியத்தைப் படைத்துச் சாதனை செய்தார். மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து விருத்தங்களைத் தொண்ணூறு சந்தங்களில் இயற்றினார் என முனைவர் ஆரோக்கியசாமி குறிப்பிடுகின்றார். இக்காப்பியத்தைத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கியத்தை படைத்த கால்டுவல் இந்நூலைப் பெரிதும் பாராட்டியுள்ளார்.

முனிவர் சிற்றிலக்கியங்கள் பலவற்றை இயற்றினார். திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல மாலை, அடைக்கல நாயகி வெண்கலிப்பா, தேவாரம் ஆகியவை இவர் அளித்த கொடைகள். ஏலாக்குறிச்சியை இவர் திருக்காவலூர் எனப் பெயரிட்டு, அடைக்கல மாதாவுக்கு கோயில் எழுப்பிக் கலம்பகம் பாடிப் பரவினார்.

இவர் படைத்த உரைநடை நூல்கள் பல. அவற்றுள் பரமார்த்த குருவின் கதை மிகப் புகழ்மிக்கது. இதுவே தமிழில் எழுந்த முதல் உரைநடைச் சிறுகதை என்பர். இது 54 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளதாகப் பேராசிரியர் ஆரோக்கியசாமி குறிப்பிடுகின்றார்.

பல அகராதிகளைத் தமிழுக்குத் தந்த பெருமை இவருக்கு உண்டு. சதுரகராதி தமிழ் இலத்தீன் அகராதி, என்பன அவை. இவரே தமிழ் அகராதித் துறையின் தந்தை. பன்மொழி அகராதிக்கு வித்திட்டவரும் இவரே.

இம்முனிவர் பெருமான் பல இலக்கணங்களை வழங்கினார். கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், இலக்கணத் திறவுகோல் என்பவை அவை. தொன்னூல் விளக்கம் தவிரப் பிற மூன்றும் மேனாட்டார் தமிழ் கற்பதற்கு உதவியாக இலத்தீன் மொழியில் எழுதப்பட்டவை. இவற்றுக்கு இம்முனிவர் விளக்கமும் வரைந்துள்ளார்.

தமிழ் எழுத்தில் சீர்திருத்தம் செய்த முதல் அறிஞர் இவர். 'எ' என்பதன் நெடிலுக்கு 'ஏ' என்றும் ஓகரத்தின் நெடிலுக்கு 'ஓ' என்றும் உருவம் தந்தார்.



**குறிப்பு**

உலகப் பொதுமறையை உலகம் அறியும் வகையில் இலத்தீன் மொழியில் தந்த பெருமை இவர்க்குண்டு. அறத்துப்பாலும் பொருட்பாலும் இவரால் மொழிபெயர்க்கப்பட்டன. இவரைப் பின்பற்றிப் பிற்காலத்தில் பலர் இம்முயற்சியில் ஈடுபட்டனர்.

இவர் மருத்துவத் துறைக்கும் உதவியுள்ளார். இரணவாகடம், அநுபோக வைத்திய சிகாமணி, நச காண்டம் என்பன அவர் படைத்தவை. தமிழக அரசு இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழ் முனிவரான இப்பெருமகனார்க்குத் திருவுருவம் நிறுவிப் பாராட்டியமை குறிப்படத்தக்கது.

## 11.6.2 சீகன் பால்கு 1663-1719

செருமனி நாட்டிலிருந்து 1683-இல் பிறந்த இவர் தாம் குரு பட்டம் எய்திய பின் 1700 இல் தரங்கம்பாடிக்கு வந்தார். தமிழைத் தாய்மொழி போல் கையாளவும் பல நூல்களைத் தமிழில் படைக்கவும் வல்லவராகத் திகழ்ந்தவர் இவர். தமிழில் வழக்கொழிந்த சொற்களையும் வழக்கிலிருந்த சொற்களையும் தொகுத்து 20,000 சொற்கள் அடங்கிய அகராதியைப் படைத்தார். மேலும் முயன்று சமயம், தத்துவம், மருத்துவம், மொழியியல், வரலாறு தொடர்பான சொற்களையும் சேர்த்து அவ்வகராதியை 40,000 சொற்கள் கொண்டதாக ஆக்கினார். இவர் செய்த அரும்பணி தரங்கம்பாடியில் அச்சுப் பொறியமைத்துத் தமிழ் நூல்களை அச்சு வாகனம் ஏற்றியதாகும். இதற்கெனத் தாள் உற்பத்திக்கு ஓர் ஆலை நிறுவினார். நீதி வெண்பா, கொன்றை வேந்தன் ஆகியவற்றிலிருந்து பாடல்களைத் தொகுத்து நூலாக்கினார். தமிழ் செருமனி அகராதி முதலான பலவற்றை இயற்றினார்.

## 11:7 தொகுத்துக் காண்போம்

1. சமண சமயத்தின் இலக்கியப் பணி குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
2. தமிழர் பண்பாட்டில் பௌத்த சமயம் பெற்ற இடம் குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
3. கிறித்தவ சமயத்தினரின் தமிழ்த் தொண்டு குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.

## 11:8 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. சமண சமயக் கொள்கைகள் யாவை?
2. இசுலாம் சமய இலக்கியங்கள் குறித்து விளக்குக.
3. வீரமா முனிவரின் தமிழ்த் தொண்டு குறித்து விளக்குக?

குறிப்பு

## 11.9 மேலும் அறிந்துகொள்ள

கே.கே.பிள்ளை - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்

அ.தட்சிணாமூர்த்தி - தமிழர் நாகரிகமும் பண்பாடும்

# கூறு:12

# தமிழகக் கலைகள் - கட்டடக்கலை - சிற்பக்கலை - இசைக்கலை - ஓவியக்கலை - மருத்துவக் கலை - நாடகக் கலை.

## 12:1 முன்னுரை

கலைகள் தமிழர் பண்பாட்டைப் பெரிதும் பறைசாற்றி நிற்பவை. தமிழகத்தில் சிறப்புற்றிருந்த கலைகளாக கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நாடகக் கலை, மருத்துவக்கலை போன்றவை விளங்குகின்றன.

## 12.2 குறிக்கோள்கள்

1. தமிழகக்கலைகள் யாவை என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
2. ஓவியக்கலை பண்டைக் காலத்தில் சிறப்பு பெற்றிருந்தமை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
3. நாடகக்கலையின் சிறப்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 12.3 தமிழகக் கலைகள்

மனிதன் மிகப் பழைய காலத்திலேயே காட்டு மிராண்டியாக வாழ்ந்தான். மனிதன் நாகரிகம் பெறுவதற்குப் பேருதவியாக இருந்தவை அவன் சிறிது சிறிதாகக் கற்றுக்கொண்ட பல வகையான தொழில்களேயாகும். மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம். பண்டைக்காலத்திலே நமது நாட்டில் அறுபத்துநான்கு கலைகள் இருந்தன என்று மணிமேகலை

முதலிய நூல்கள் கூறுகின்றன. அக்காலத்தில் அறுபத்துநான்கு கலைகள் இருந்தன என்றால், பல துறையிலும் நாகரிகம் பெருகியுள்ள இந்தக் காலத்திலே, கலைகளின் எண்ணிக்கை மிகமிப் பெருகியிருக்கிறது என்பதில் ஐயம் இல்லை.



நாகரிக மக்கள் நிறைமனம் (திருப்தி) அடைவதற்குத் துணையா யிருப்பவை அழகுக் கலைகள் தான். அழகுக் கலைகள் மனிதனுடைய மனத்திற்கு அழகையும் இன்பத்தையும் அளிக்கின்றன. அழகுக் கலைகளின் வாயிலாக மனிதன் நிறைமனம் அடைகிறான்.

அழகுக் கலையை விரும்பாத மனிதனை அறிவு நிரம்பாத விலங்கு என்றே கூற வேண்டும் அவனை முழு நாகரிகம் பெற்றவன் என்று கூறமுடியாது.

அழகுக் கலைகள் எத்தனை? அழகுக் கலைகள் ஐந்து. அவை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக் கலை, கூத்துக்கலை (நடனம்), காவியக்கலை, நாடகக் கலை என ஏழாகக் கூறப்படும்.

## 12.4 கட்டடக் கலை

அழகுக் கலைகளில் முதலாவதாகிய கட்டடக் கலையை ஆராய்வோம். வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள் முதலியவை கட்டடங்களே. ஆனால் நாம் இங்கு ஆராயப் புகுவது கோயில் கட்டடங்களை மட்டுமே முதலில் கோயில் கட்டடங்கள் நமது நாட்டில் எந்தெந்தப் பொருள்களால் அமைக்கப்பட்டன என்பதை ஆராய்வோம்.

மிகப் பழைய காலத்திலே நமது நாட்டுக் கோயில் கட்டடங்கள் மரத்தினால் அமைக்கப்பட்டன. அதன் பிறகு செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலும் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. அதற்குப் பின்னர் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. கடைசியாகக் கருங்கற்களைக் கொண்டு கற்றளிகள் அமைக்கப்பட்டன. கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படுவது கற்றளி எனப்படும்.

### 12.4.1 மரக்கோயில்கள்:

பழங்காலத்திலே கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டன என்று கூறினோம். மரத்தைத் தகுந்தபடி செதுக்கிக் கட்டடம் அமைப்பது எளிமையானது. பண்டைத் தமிழகமான இப்போதை மலையாள நாட்டின் சில இடங்களில் இன்றும் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். சிதம்பரத்தின் சபாநாதர் மண்டபம் இப்போதும் மரத்தினாலேயே அமைக்கப் பெற்றிருக்கிறது. சிதம்பரத்தில் ஊர்த்துவத்தாண்ட மூர்த்தி ஆலயம் பிற்காலத்தில் கருங்கல்லினால் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். கல்லினால் கட்டப்பட்டாலும்,

அதன் தூண்கள், கூரை(விதானம்)முதலிய அமைப்புகள் மரத்தினால் அமைக்கப்பட்டது போலவே காணப்படுகின்றன. சிதரம்பரக் கோயிலின் பழைய கட்டடங்கள் எல்லாம் மரத்தினாலே அமைக்கப்பட்டிருந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. முற்காலத்தில் மரத்தினாலே கோயில் கட்டடங்கள் கட்டப்பட்டன என்பதற்குச் சான்று, பிற்காலத்தில் கல்லினால் அமைக்கப்பட்ட கோயில் கட்டடங்களிலே, மரத்தைச் செதுக்கி அமைக்கப்பட்டது போன்ற அமைப்புகள் காணப்படுவதுதான்.

**குறிப்பு**

மரக்கட்டடங்கள் வெயிலினாலும் மழையினாலும் தாக்குண்டு விரைவில் பழுதுபட்டு அழிந்துவிடும் தன்மையன. முக்கியமாக மேல் பகுதியாகிய கூரை விரைவில் பழுதடைந்தது. ஆகவே மரக்கூரைகள் பழுதுபடாதபடி அவற்றின்மேல் செம்புத் தகடுகளை வேய்வது பண்டைக்காலத்து வழக்கம். செம்புத்தகடு வேய்ந்த கூரை விரைவில் பழுதடையாது. முற்காலத்தில் சிதம்பரம் முதலிய கோயில்களின் கூரைகளில் சில அரசர்கள் செம்புத் தகடுகளையும் பொற்றகடுகளையும் வேய்ந்தார்கள் என்று கூறப்படுகின்றது. அக்காலத்தில் மரத்தினால் கட்டடம் அமைக்கப்பட்டிருந்த படியினால் அவை விரைவில் பழுதாகாதபடி செம்புத் தகடுகளையும் பொற்றகடுகளையும் அரசர்கள் கூரையாக வேய்ந்தார்கள்.

### 12.4.2 செங்கல் கட்டடங்கள்:

மரக்கட்டடம் விரைவில் பழுதடைவதோடு எளிதில் தீப்பிடித்துக் கொள்ளும். ஆகவே, பிற்காலத்தில், செங்கல்லினாலும், சுண்ணாம்பினாலும் கோயில்களைக் கட்டத் தொடங்கினார்கள். செங்கற் கோயில்கள், மரக் கோயில்களை விட உறுதியாகவும் நெடுநாள் நீடித்திருக்கக் கூடியனவுமாக இருந்தன. இவையும் சில நூற்றாண்டு வரையில்தான் நீடித்திருந்தன. செங்கற் கட்டடங்கள், ஏறக்குறைய 200 அல்லது 300 ஆண்டுகளுக்குமேல் நிலைபெறுவதில்லை. கி.பி. 600-க்கு முற்பட்ட காலத்திலே இருந்த நமது நாட்டுக் கோயில் கட்டடங்கள் எல்லாம் செங்கற் கட்டடங்களே.

சங்க காலத்திலே கட்டப்பட்ட கோயில்கள், செங்கற் கட்டடங்களையும் மரவிட்டங்களையும் கொண்டு அமைக்கப்பட்டு சுவர்மேல் வண்ணம் பூசப் பெற்றிருந்தன. இத்தகைய செங்கல் கட்டடக் கோயில்கள் அவ்வப்போது செப்பனிடாமற் போனால் அவை சிதைந்து அழிந்துவிடும். கடியலூர் உருத்தரங் கண்ணனார் என்னும் சங்கப் புலவர். இடிந்து சிதைந்துபோன செங்கற்கட்டடக் கோயில் ஒன்றைக் கூறுகிறார். அச் செய்யுள் பகுதி இது.

**"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென**
**மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து**

**எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று**

**ஒழுகு பலி மறந்த மெழுகாப் புன்றிணை"**

(அகநானூறு 167, கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது)



குறிப்பு

கடைச்சங்க காலத்தின் பிறகு இருந்த சோழன் செங்கணான், சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் ஆக எழுபதுக்கு மேற்பட்ட கோயில்களைக் கட்டினான். இதனை,

**"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ ளீசற்கு**

**எழில்மாடம் எழுபது செய் துலக மாண்ட**

**திருக்குலத்து வளச் சோழன்---------"**

என்று செங்கட் சோழனைப் பற்றித் திருமங்கையாழ்வார் கூறுவதிலிருந்து அறியலாம். மேலும்,

**"பெருக்காறு சடைக் கணிந்த பெம்மான் சேரும்**

**பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்"**

என்று திருநாவுக்கரசர் கூறுவதும் சோழன் செங்கணான் அமைத்த பெருங்கோயில்களையேயாகும். சோழன் செங்கணான் அமைத்த பெருங்கோயில் எழுபத்தெட்டும் செங்கற் கட்டடங்களே. ஏனென்றால், கற்றளிகள். அதாவது கருங்கற் செங்கற் கட்டடங்கள் ஆகையினாலே அவை இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் நிலைபெற்றிருக்க இடமில்லை.

### 12.4.3 குகைக் கோயில்கள்:

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொண்டை நாட்டையும் சோழ நாட்டையும் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசன் அரசாண்டான். இவன் ஏறக்குறைய கி.பி.600 முதல் 630 வரையில் ஆட்சி செய்தான். இவன் காலத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் இருந்தார். இவ்வரசன் கோயில் கட்டட அமைப்பில் புதிய முறையை ஏற்படுத்தினான். பெரிய கற்பாறைகளைக் குடைந்து அழகான "குகைக் கோயில்" களை (பாறைக் கோயில்களை) அமைத்தான். பாறையைச் செதுக்கித் தூண்களையும் முன்மண்டபத்தையும் அதற்குள் திருவுண்ணாழிகையையும் (கருப்பக் கிருகத்தையும்) அமைக்கும் புத்தம் புதிய முறையை இவன் உண்டாக்கினான்.

மகேந்திரவர்மன் கற்பாறைகளைக் குடைந்து அமைத்த குகைக் கோயில்களில் ஒன்று மண்டகப்பட்டு என்னும் ஊரில் இருக்கிறது. இவ்வூர், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம் தாலுகாவில் உள்ள விழுப்புரம் இரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே 13-மைல் தூரத்தில்

குறிப்பு

இருக்கிறது. இவ்வூருக்கு மேற்கில் 1/2 மைல் தூரத்தில் சிறு பாறைக் குன்றின் வடக்குப் பக்கத்தில் இந்தக் குகைக் கோயில் அமைந்திருக்கிறது. இக்குகைக் கோயிலில் இருக்கிற வடமொழிச் சாசனம் ஒன்று இவ்வாறு கூறுகிறது.

"செங்கல் சுண்ணம் மரம் உலோகம் முதலியவை இல்லாமலே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் என்னும் அரசனால் இக்கோயில் அமைக்கப்பட்டது".

இந்தச் சாசனத்தின் கருத்து என்னவென்றால், செங்கல் சுண்ணாம்பு மரம் உலோகம் முதலியவற்றைக் கொண்டு கோயில் கட்டடங்களை அமைக்கும் பழைய முறையை மாற்ற அப்பொருள்கள் இல்லாமலே மும்மூர்த்திகளுக்குப் பாறையில் கோயில் அமைத்தான் விசித்திர சித்தன் (விசித்திர சித்தன் என்பது மகேந்திரவர்மனுடைய சிறப்புப் பெயராகும்) என்னும் அரசன் என்பது.

மகேந்திரவர்மன் காலத்துக்கு முன்னே, நமது நாட்டுக் கோயில் கட்டடங்கள் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலிய பொருள்களைக் கொண்டு உண்டாக்கப்பட்டன என்பதும், இவ்வரசன் காலத்தில்தான் பாறைகளைச் செதுக்கி உண்டாக்கப்படும் புதிதாகச் சமைக்கப்பட்ட குகைக்கோயில்கள் என்பதும் இதனால் தெரிகின்றன.

குகைக் கோயிலை அமைக்கும் புதிய முறையை ஏற்படுத்திக் கட்டடக் கலையில் ஒரு புரட்சியை உண்டாக்கிய மகேந்திரவர்மன் பல குகைக் கோயில்களை அமைத்திருக்கிறான். சென்னைக்கு அடுத்த பல்லாவரத்திலும், காஞ்சிபுரத்துக்கு அடுத்த மகாபலிபுரத்திலும், திருச்சிராப்பள்ளி மலையிலும், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, சீயமங்கலம், மேலைச்சேரி, வல்லம், மாமண்டூர், தளவானூர், சித்தன்னவாசல் முதலிய ஊர்களிலும் இவ்வரசன் அமைத்த குகைக்கோயில்கள் உள்ளன. (இந்நூலாசிரியர் எழுதியுள்ள மகேந்திரவர்மன் என்னும் நூல் காண்க)

மகேந்திரவர்மனுக்குப் பிறகு, அவன் மகன் மாமல்லனான நரசிம்மவர்மனும், அவனுக்குப் பின்னர் பரமேசுவரவர்மன் முதலியவர்களும் மாமல்லபுரம் (மகாபலிபுரம்) சாளுவன்குப்பம் முதலிய இடங்களில் குகைக் கோயில்களையும் "இரதக்" கோயில்களையும் பாறைகளில் அமைத்தார்கள்.

கருங்கற் பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட இக்குகைக் கோயில்களில், மரத்தில் செய்யப்பட்ட மரவேலை போன்ற சில அமைப்புகள் காணப்படுகின்றன. இந்த அமைப்புகள், பண்டைக்காலத்தில் மரங்களினால் கோயில்கள் கட்டப்பட்டன என்பதைக் காட்டுகின்றன.

## 12.4.4 கற்றளிகள்

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்ட இரண்டாம் நரசிம்மவர்மன் ஆன இராஜசிம்மன் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது. கற்றளி என்றால் கற்கோயில் என்பது பொருள். கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கோயில் கட்டடங்களுக்குக் கற்றளி என்பது பெயர். சுண்ணாம்பு சேர்க்காமலே இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

மகாபலிபுரத்தில் கடற்கரையோரமாக உள்ள கற்றளியும் காஞ்சிபுரத்தில் கயிலாசநாதர் கோயில் என்று இப்போது பெயர் வழங்கப்படும். இராஜசிம்மேச்சரம் என்னும் கற்றளியும், பனைமலை என்னும் ஊரிலுள்ள கற்கோயிலும் முதன் முதல் அமைக்கப்பட்ட கற்றளிகளாகும். இக்கற்றளிகள் உண்டாக்கப்பட்டு ஏறக்குறைய 1200 ஆண்டுகளாகியும் அவை இப்போதும் உள்ளன.

செங்கற் கோயில்களைவிட கற்றளிகள் பல காலம் நிலை நிற்பவை. கி.பி.8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, பல அரசர்கள் கட்டிய கோயில்களில் பெரும்பாலனவும் கற்றளிகளே. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் சோழர்கள் பல்லவ அரசரை வென்று சிறப்படைந்தார்கள். இச் சோழர்களுக்குப் பிற்காலச் சோழர் என்பது பெயர். இச்சோழர்கள் புதிதாகப் பல கோயில்களைக் கற்றளியாகக் கட்டினார்கள். மேலும், பழைய செங்கற் கட்டடக் கோயில்களை இடித்துவிட்டு அக்கோயில்களைக் கற்றளியாகக் கட்டினார்கள். இச் செய்திகளை நாம் சாசனங்களிலிருந்து தெரிந்துகொள்கிறோம்.

இதுவரையில் கோயில் கட்டடங்களை எந்தெந்தப் பொருள்களால் அமைத்தார்கள் என்பதைக் கண்டோம். இனி நமது நாட்டுக் கோயில் அமைப்புகளையும் அவற்றின் விதங்களைப் பற்றியும் ஆராய்வோம்.

## 12.4.5 மூன்றுவகைப் பிரிவுகள்

பாரத(இந்திய) நாட்டுக் கட்டடங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவை நாகரம், வேசரம், திராவிடம் என்பன.

இவற்றில் நாகரம் என்பது வடஇந்தியக் கட்டடக்கலை. இது நருமதை ஆற்றுக்கு வடக்கே வட இந்தியாவில் அமைக்கப்பட்டவை. அடி முதல் முடி வரையில் நான்கு பட்டையாக (சதுரமாக) அமைக்கப்படுவது இது. இது தமிழ்நாட்டில் இடம் பெறவில்லை.

இரண்டாவதான வேசரம் என்னும் பெயருள்ள கட்டடவகை. பண்டைக்காலத்தில் பெரிதும் பௌத்த மதத்தாரால் வளர்ச்சி அடைந்ததாகத் தோன்றுகிறது. இந்த வேசரக் கட்டடங்கள், தரை

அமைப்பிலும் உடல்(கட்டட) அமைப்பிலும், விமான (கூரை) அமைப்பிலும் வட்டவடிமாக அல்லது நீண்ட அரைவட்ட வடிவமாக இருக்கும். இந்தக் கட்டட அமைப்பு முறை, தமிழ்நாட்டுக் கோயில் கட்டட அமைப்பு சிலவற்றில் இடம்பெற்றுள்ளன. இதைப் பற்றிப் பின்னா் அதற்குரிய இடத்தில் கூறுவோம்.

மூன்றாவது பிரிவான தென்இந்தியக் கோயில் கட்டடங்களாகும். இவை வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் காணப்படுகின்றன. திராவிடக் கோயில் கட்டடவகையில் தமிழா் சாளுக்கியா் ஹொய்சாளா் முதலிய பிரிவுகள் உள்ளன.

தமிழ் நாட்டுக் கோயில்களிலும் பல்லவா் காலத்துக் கோயில்கள், (பிற்காலச்) சோழா் காலத்துக் கோயில்கள், பாண்டியா் காலத்துக் கோயில்கள், விஜயநகர அரசா் காலத்துக் கோயில்கள் என்று உட்பிரிவுகள் உள்ளன. அப்பிரிவுகளைத் தூண்கள் கூடுகள் முதலிய அமைப்புகளிலிருந்து கண்டு கொள்ளலாம்.

**கோயில்களின் தரையமைப்பு:**

பொதுவாகப் பெருமாள் கோயிலும் சிவன் கோயிலும் எப்போதும் கிழக்கு அல்லது மேற்கு நோக்கியிருக்கும். சில கோயில்கள் தெற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் அபூர்வமாக இருப்பதுண்டு. பொதுவாகக் கிழக்கு அல்லது மேற்கு நோக்கியே கோயில்களை அமைப்பது வழக்கம்.

கோயில் கட்டடத்தின் தரையமைப்பு, அகநாழிகையை (கருப்பக்கிருகத்தை)யும் அதன் முன்புறத்தில் சிறுமண்டபத்தையும் உடையது. கருப்பக்கிருகத்தைச் சார்ந்த மண்டபத்திற்கு இடைநாழிகை (அா்த்த மண்டபம்) என்பது பெயா். அகநாழிகை (கருப்பக்கிருகம்) பெரும்பாலும் சதுரமான அமைப்புடையது. சில அகநாழிகைகள் நீண்ட சதுரமாகவும் சில அகநாழிகைகள் நீண்ட அரை வட்டமாகவும் அமைந்திருக்கும். மிகச் சில வட்டவடிமாக இருக்கும்.

காஞ்சிபுரத்துக் கயிலாச நாதர் கோயிலிலும், பனைமலைக் கோயிலிலும், கருவறையைச் சார்ந்து சில வேறு கருவறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் விதிவிலக்காக, அபூர்வமாக ஏற்பட்டவை.

பல்லவ அரசா் காலம் வரையில், திருவுண்ணாழிகையும் இடைநாழிகையும் (கருவறையும் அா்த்த மண்டபமும்) ஆகிய கட்டடங்களே அமைக்கப்பட்டன. இவற்றைச் சூழ்ந்து வேறு மண்டபங்கள் அமைக்கப்படவில்லை.

1. திருவுண்ணாழிகை(அகநாழிகை)யும் இடைநாழிகையும், சதுர அமைப்பு, திருவுண்ணாழிகைக்குக் கருப்பக்கிருகம் என்றும் இடைநாழிக்கு அர்த்த மண்டபம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

2. வட்ட வடிவமான அகநாழிகையை, காஞ்சிபுரத்துக் சுரகரீசுவரர் கோயிலும் புதுக்கோட்டையைச் சேர்ந்த நார்த்தா மலை, மேல்மலையில் உள்ள விஜயாலய சோழீசுவரமும், மதுரையை அடுத்த கள்ளழகர் கோயிலும் கொண்டுள்ளன.

3. பாறைக் கோயிலின் தரையமைப்பு, மகேந்திரவர்மன் காலத்துக்

குகைக்கோயில்கள் அனைத்திலும் பொதுவான அமைப்பாக உள்ளது.

4. நீண்ட சதுரமுள்ள அகநாழிகை அமைப்பு மாமல்லபுரத்துக் கணேச ரதம் முதலியவற்றில் காணப்படுகின்றது..

5. தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் அருகில் உள்ள பனைமலையில் பல்லவர் காலத்துக் கோயில் தரையமைப்பு உள்ளது மத்தியில் உள்ள அகநாழிகையைச் சூழ்ந்து நாற்புறமும் அகநாழிகைகள் காணப்பெறுகின்றன.

6. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் (இராஜ சிம்மேசுவரம்) தரையமைப்பு, மத்தியில் உள்ள அக நாழிகையைச் சூழ்ந்து வேறு அகநாழிகைகள் அமைந்துள்ளன.

பல்லவ அரசர் காலம் வரையில், திருவுண்ணாழிகையும் இடைநாழிகையும் (கருவறையும் அர்த்தமண்டபமும்) ஆகிய கட்டடங்களே அமைப்பட்டன. இவற்றைச் சூழ்ந்து வேறு மண்டபங்கள் பெரும்பாலும் அமைக்கப்படவில்லை.

கி.பி.10-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, சோழ அரசர்கள் கருவறையைச் சுற்றிலும் மண்டபங்களை அமைத்தனர். அன்றியும் அர்த்த மண்டபத்துக்கு முன்பு, இன்னொரு மகா மண்டபத்தையும் அமைத்தனர். ஏனென்றால் 10-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு நாயன்மார்கள், ஆழ்வார்கள, முதலிய மூர்த்தங்களை அமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவ்வாறு அகநாழிகையைச் சூழ்ந்து சுற்று மண்டபங்களை அமைத்தபடியினாலே அம்மண்டபங்கள், மத்திய கோயிலின் பார்வையையும் அழகையும் மறைத்துவிட்டன சில இடங்களில் மத்திய கோயிலின் விமானம் தெரியாதபடி மறைத்துவிட்டன. அன்றியும், கோயிலுக்குள் வெளிச்சம் புகாதபடி செய்துபட்டப் பகலிலும் கோயிலில் இருள் நிறைந்துவிட்டது. நமது கோயில்களில் பட்டப்பகலிலும் இருள் சூழ்ந்திருப்பதன் காரணம். இந்த மண்டபங்களே ஆகும்.

## 12.4.6 மாடக் கோயில்கள்:

குறிப்பு

மாடக் கோயில்கள் என்றால், மாடிபோல் அமைந்த கோயில்கள் என்பது பொருள். ஒன்றின்மேல் ஒன்றாக ஒன்பது நிலைகளையுடைய மாடக்கோயில்களைச் சிறப்பாக நூல்கள் கூறுகின்றன. இக்காலத்தில் இரண்டு நிலை, மூன்று நிலையுள்ள மாடக்கோயில்கள்தான் இருக்கின்றன. மாடக்கோயில்கள் பல்லவர் காலத்துக்கு முன்பே- அதாவது கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இருந்தன. ஆனால், அக்காலத்து மாடக்கோயில்கள் செங்கல்லினால் அமைக்கப்பட்டவை. ஆகவே அவை இக்காலத்தில் நிலை பெற்றிருக்கவில்லை. அக்காலத்திலேயே அழிந்துவிட்டன.

சீகாழிக்கு கிழக்கே ஐந்து மைலில் உள்ள திருநாங்கூர் திருமணி மாடக்கோயிலைத் திருமங்கை ஆழ்வார் தமது பெரிய திருமொழியில் கூறுகிறார். இன்னொரு மாடக் கோயிலாகிய திருநறையூர் மாடக் கோயிலையும் திருமங்கை ஆழ்வார் குறிப்பிடுகிறார். அதனைச் சோழன் செங்கணான் கட்டியதாகவும் கூறுகிறார்.

**“செம்பியன் கோச் செங்கணான் சேர்ந்த கோயில்**
**திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே”**

என்று அவர் கூறியது காண்க. திருநறையூருக்கு இப்போது நாச்சியார் கோயில் என்று பெயர் கூறுகிறார்கள்.

திருவைகல் என்னும் ஊரில் இருந்த ஒரு மாடக் கோயிலைத் திருஞானசம்பந்தர் கூறுகிறார். திருவைகல் மாடக்கோயில் என்பதே அக்கோயிலின் பெயராக இருந்தது. அதனைக் கட்டியவரும் செங்கட் சோழன் என்று ஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் கூறுகிறார்.

இந்த மாடக் கோயில்களைச் சோழன் செங்கணான் கட்டியதாக ஆழ்வாரும் நாயனாரும் கூறுகிறபடியினாலே இவை கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்கு முன்னே கட்டப்பட்டவை என்றும், இவை செங்கல்லினால் கட்டப்பட்டவை என்றும் தெரிகின்றது. ஆனால், இந்த மாடக் கோயில்கள் எத்தனை நிலையைக் (மாடிகளை) கொண்டிருந்தன என்பது தெரியவில்லை. மூன்று நிலை மாடக் கோயில்களாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

**மாமல்லபுரத்து மாடக் கோயில்கள்:**

கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்த செங்கற் கட்டடங்களாலான மாடக் கோயில்களின் மாதிரியைப் பல்லவ அரசனான நரசிம்ம வர்மன் (மாமல்லன்) மாமல்லபுரமாகிய மகாபலிபுரத்திலே

கருங்கல்லினால் அமைத்திருக்கிறான். அவை இரண்டு நிலை, மூன்று நிலையுள்ள மாடக் கோயில்களின் மாதிரி ஆகும்.



அர்ச்சுனன் இரதம் என்று இப்போது தவறாகப் பெயர் வழங்கப்படுகிற கோயில், இரண்டு நிலை (இரண்டடுக்கு) மாடக் கோயிலின் அமைப்பு ஆகும். தருமராஜ இரதம் என்று தவறாகப் பெயர் வழங்குகிற இன்னொரு மாடக்கோயில், மூன்று நிலையுள்ள மாடக்கோயிலின் அமைப்பு ஆகும். (தருமராஜ இரதம் என்பதற்குப் பழைய பெயர் அத்யந்தகாம பல்லவேச்சரம் என்பது) சகாதேவ இரதம் என்பதும் மூன்று நிலையுடைய மாடக்கோயிலின் அமைப்பு ஆகும். இந்த மாடக்கோயிலின் அமைப்பைக் கருங்கற் பாறையில் அமைந்த காலம் கி.பி.7-ஆம் நூற்றாண்டின் மத்தியக் காலம் ஆகும். இவை பழைய செங்கற்கட்டடங்களாலான மாடக் கோயில்களின் மாதிரி உருவ அமைப்பாகும்.

**வேறு மாடக் கோயில்கள்**

கற்றளியாக அமைக்கப்பட்டு இப்போதும் வழிபாட்டில் உள்ள மாடக் கோயில்கள் இரண்டு ஆகும். அவை காஞ்சிபுரத்தில் உள்ள பரமேச்சுர விண்ணகரமும், உத்திரமேரூர் சுந்தரவரதப் பெருமாள் ஆலயமும் ஆகும். காஞ்சிபுரத்துப் பரமேச்சுர விண்ணகரத்தை இப்போது வைகுண்டப் பெருமாள் கோயில் என்று கூறுவார்கள். இக்கோயிலைப் பரமேசுவர வர்மன் என்னும் பல்லவ அரசன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டினான். இதனைத் திருமங்கை யாழ்வார் பாடியிருக்கிறார். இது மூன்று நிலையுள்ள மாடக்கோயில். ஆனால் இரண்டாவது மாடிக்கு மட்டும் படிகள் உள்ளன. மூன்றாவது மாடிக்குப் படிகள் இல்லை. பண்டைக்காலத்தில் மாடிப்படிகள் அமைந்திருந்தன போலும். இப்போது மரப்படிகளும் இல்லை. இது மூன்று நிலை மாடக்கோயில் ஆகும்.

உத்திரமேரூர் மாடக் கோயிலும் மூன்று நிலை மாடக் கோயிலாகும். இதனைக் கட்டியவன் நந்திவர்மன் பல்லவமல்லன் என்னும் பல்லவ அரசன் இவன். கி.பி. 730 முதல் 795 வரையில் அரசாண்டான். எனவே, இக்கோயில் கி.பி.8-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கட்டப்பட்டதாகும். இக் கோயிலைக் கட்டிய பல்லவனுடைய உருவச் சிற்பமும் இக் கோயிலில் இருக்கிறது.

## 12.4.7 கோயில் அமைப்பும் உறுப்புகளும்

கோயில் கட்டட அமைப்பைப் பற்றியும் அவற்றின் உறுப்புகளைப் பற்றியும் ஆகம நூல்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் கட்டடக் கலையின் பொதுவான

செய்திகளை மேலோட்டமாகக் கூறவில்லை. முக்கியமான சிலவற்றைச் சுருக்கமாகக் கூறுவோம்.



கோயில் கட்டிடத்தில் ஆறு உறுப்புகள் உண்டு. அவையாவன: 1.அடி 2. உடல் 3. தோள் 4. கழுத்து 5. தலை 6. முடி

இந்தப் பெயர்களுக்குச் சிற்ப நூலில் வேறு பெயர்கள் கூறப்படுகின்றன. அப்பெயர்களாவன:

**குறிப்பு**

1.அதிஷ்டானம் 2. பாதம் 3. மஞ்சம் 4. கண்டம் 5. பண்டிகை 6.ஸ்தூபி இவற்றை விளக்குவோம்.

1. அடி அல்லது தரை அமைப்பு இதற்கு அதிஷ்டானம், மசூரகம், ஆதாரம், தலம், பூமி முதலிய பெயர்கள் உண்டு.

2. உடல் அல்லது திருவுண்ணாழிகை. இதற்குக் கால் பாதம், ஸ்தம்பம், கம்பம் முதலிய பெயர்கள் சிற்பநூலில் கூறப்படுகின்றன. இப்பெயர்கள் கருவறையின் சுவர்களைக் குறிக்கின்றன. (கருவறைக்குத் திருவுண்ணாழிகை என்பது பழைய பெயர்)

3. தோள் அல்லது தளவரிசை இதற்குப் பிரஸ்தரம், மஞ்சம், கபோதம் முதலிய பெயர்கள் உள்ளன.

4. கழுத்து இதற்குக் கண்டம், களம், கர்ணம் முதலிய பெயர்கள் உண்டு.

5. தலை அல்லது கூரை, இதற்குப் பண்டிகை, சிகரம்,மஸ்தம், சிரம் முதலிய பெயர்கள் உள்ளன.

6. முடி அல்லது கலசம், இதற்கு ஸ்தூபி, சிகை, குளம் முதலிய பெயர்கள் உண்டு கோயில் கட்டடத்தில் அமைய வேண்டிய இந்த ஆறு உறுப்புகளுக்கும் சில அளவுகள் உள்ளன. அந்த அளவுகளாவன:

1. அடி அல்லது அதிட்டானத்தின் உயரம் 1 பங்கு
2. உடல் அல்லது பாதத்தின் உயரம் 2 பங்கு
3. தோள் அல்லது மஞ்சத்தின் உயரம் 1 பங்கு
4. கழுத்து அல்லது கண்டத்தின உயரம் 1 பங்கு
5. தலை அல்லது பண்டிகையின் உயரம் 2 பங்கு
6. முடி அல்லது ஸ்தூபியின் உயரம் 1 பங்கு

இந்த அளவு ஒரு நிலையையுடைய சாதாரணக் கோயில்களுக்காகும்.

இரண்டு நிலைக்கோயிலின் அமைப்பு: 1. தரை 2.சுவர் 3. தளவரிசை 4. சுவர் 5. தளவரிசை 6. கழுத்து 7. கூரை 8.கலசம் என அமையும்.

மூன்று நிலை மாடக் கோயிலின் அமைப்பு 1.தரை 2.சுவர் 3. தளவரிசை 4. சுவர் 5. தளவரிசை 6.சுவர் 7. தளவரிசை 8. கழுத்து 9. கூரை 10. கலசம் என இவ்வாறு அமையும்.

கோயில் கட்டடங்கள் கட்டப்படும் பொருள்களைக் கொண்டு அவை மூன்று பெயர்களைப் பெறுகின்றன. அவை சுத்தம், மிஸ்ரம், சங்கீர்ணம் என்பன. முழுவதும் மரத்தினாலோ செங்கல்லினாலோ அல்லது கருங்கல்லினாலோ கட்டப்பட்ட கோயில்களுக்குச் சுத்த கட்டடம் என்றும், இரண்டு பொருள்களைக் கலந்து அமைக்கப்பட்ட கோயில்களுக்கு மிஸ்ர கட்டடம் என்றும், இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களால் கட்டப்பட்ட கோயில்களுக்குச் சங்கீர்ணம் என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன.

## 12.5 கோயிலின் வகைகள்:

கடவுள் அல்லது தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் திருவுண்ணாழிகைக்கு விமானம் என்பது பெயர். இந்த விமானங்களின் அமைப்பைக் கொண்டு இவற்றிற்கு வெவ்வேறு பெயர் கூறுவர். முக்கியமாகக் கூரையின் அமைப்பைக் கொண்டு அவற்றுக்கு வெவ்வேறு பெயர்களைக் கூறுகிறார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் தமது திருஅடைவு திருத்தாண்டகத்தின் 5-ஆம் செய்யுளில், கோயில் கட்டட வகைகளின் பெயர்களைக் கூறுகிறார்.

> **“பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
> **பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்**
> **கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்**
> **கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்**
> **இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்**
> **திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து**
> **தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே”**

இப்பாடலிலே, சோழன் செங்கணான் கட்டிய எழுபத்தெட்டுக் கோயில்களைக் கூறிய பின்னர். கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்று ஆறு வகையான கோயில்களைக் கூறுகிறார்.

சிற்ப நூல்கள் விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிலாசம், ஸ்கந்த காந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிருஷ்டம், கேசரம் என்னும் ஏழுவிதமான கோயில்களைக் கூறுகின்றன. காமிகாகமமும் இப்பெயர்களைக் கூறுகிறது.

திருநாவுக்கரசு சுவாமிகள் தமிழ்ப் பெயரால் கூறுகவதையே சிற்ப நூல்கள் வடமொழிப் பெயரினால் கூறுகின்றன. பெயர் வேற்றுமையே தவிர பொருள் வேற்றுமை இல்லை. எந்தெந்தக் கோயில்களுக்கு எந்தெந்தப் பெயர் என்பதற்குச் சிற்ப நூல்களில் விளக்கம் கூறப்படுகின்றது. ஆனால், திருநாவுக்கரசர் கூறுகிற பெயர்களுக்கு விளக்கம் இப்போது தெரியாதபடியினாலே அவை எந்தெந்தக் கோயில்களின் பெயர்கள் என்பது தெரியவில்லை.

## 12.5.1 ஆலக்கோயில்:

திருநாவுக்கரசர் கூறிய கோயிலை ஆராய்வோம். ஆலக்கோயில் என்பது ஆனைக் கோயில் என்பதன் மரூஉ. சிலர் ஆலமரத்தினால் கட்டப்பட்ட கோயில் என்று கருதுகிறார்கள். இது தவறு. ஆலமரம், கட்டடம் கட்டுவதற்கு ஏற்ற உறுதியான மரம் இல்லை. ஆலமரத்தினால் கட்டடம் கட்டும் வழக்கம் இல்லை. வேறு சிலர், ஆலமரத்தின் கீழ் அமைந்த கோயில் என்று கருதுகிறார்கள். இதுவும் தவறு. ஆலக்கோயில் என்பது கோயில் கட்டட வகைகளில் ஒன்றென்பது தெளிவானது.

ஆலக்கோயில் கட்டடம், மேலே கூறியது போல ஆணைக்கோயில் வடிவமாக இருக்கும் சிற்ப சாத்திரங்களில் இக்கோயில் கஜபிருஷ்ட விமானக் கோயில் என்றும் ஹஸ்தி பிருஷ்டவிமானக் கோவில் என்றும் கூறப்படுகிறது. கஜம், ஹஸ்தி என்னும் சொற்களுக்கு யானை என்பது பொருள். யானையின் முதுகுபோன்று இந்தக் கோயிலின் கூரை அமைந்திருப்பதனால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. தமிழிலே இது யானைக் கோயில் என்று வழங்கப்பட்டுப் பிறகு ஆலக்கோயில் என்று மருவிற் சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கச்சூர் ஆலக்கோயிலைக் கூறுகிறார்.

திருவெற்றியூர், வடதிருமுல்லைவாயில், திருவேற்காடு திருக்கழுக்குன்றத்துப் பக்தவச்சல ஈசுவரர் கோயில் முதலியவை ஆலக்கோயில் எனப்படும். கஜபிருஷ்ட விமானக் கோயில்கள் ஆகும். மகாபலிபுரத்து சகாதேவரதம் என்னும் கோயிலும் மூன்று நிலையுள்ள மாடக் கோயிலாக அமைந்த ஆலக்கோயிலாகும்.

## 12.5.2 இளங்கோயில்



இளங்கோயில் - சிலர் இதனைப் பாலாலயம் என்று கூறுவர். பழைய கோயிலைப் புதுப்பிக்கிறபோது, கோயில் திருப்பணி முடிகிற

வரையில், அக்கோயில் மூலவிக்கிரகத்தைத் தற்காலிமாக அமைக்கப்பட்ட சிறு கட்டடத்தில் வைத்திருப்பார்கள். இந்தத் தற்காலிகமான ஆலயத்திற்குப் பாலாலயம் என்பது பெயர். ஆனால், திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுகிற இளங்கோயில் பாலாலயம் அன்று. கோயில் கட்டட வகைகளில் ஒன்றைத்தான் இளங்கோயில் என்று கூறுகிறார். சிலர், இளங்கோயில் என்பது முருகன் கோயிலுக்குப் பெயர் என்று கூறுவர். இதுவும் சரியன்று.

இளங்கோயில் பற்றித் தேவாரத்திலும் சாசனங்களிலும் கூறப்படுகிறது. சோழ நாட்டு மீயச்சூர் கோயில் இளங்கோயில் என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார். மீயச்சூர் என்பது இப்போது பேரளம் என்று வழங்கப்படுகிறது. “கடம்பூர் இளங்கோயிலும் கயிலாய நாதனையே காணலாமே” என்று கூறுகிறார். ஆகவே, கடம்பூர் கோயிலும் இளங்கோயில் எனத் தெரிகிறது. கடம்பூர்க் கோயிலில் கரக்கோயிலும் உண்டு. கடம்பூர் கரக் கோயிலைத் திருநாவுக்கரசரே வேறு இடத்தில் கூறுகிறார். (கடம்பூர்க் கோயிலிலே கரக்கோயில், இளங்கோயில் என்னும் இரண்டு வகையான கட்டடங்களும் உள்ளன.)

பூதத்தாழ்வார் தமது இரண்டாந் திருவந்தாதியில் (செய்யுள்54) வெள்ளத்திளங் கோயிலைக் கூறுகிறார். இராஜராஜன் -1 காலத்துச் சாசனம் ஒன்று கடம்பூர் இளங்கோயிலைக் குறிப்பிடுகிறது. (S.I.I.Vol.II No.66) திருச்சி மாவட்டம் குளித்தலை தாலுகா இரத்தினகிரி என்னும் ஊரில் உள்ள சாசனம் பாண்டியன் ஜடாவர்மன் ஆன திரிபுவன சக்கரவர்த்தி சுந்தர பாண்டியத் தேவர் I (கி.பி1254-1264) காலத்தில் எழுதப்பட்டது. இதில் திருவாலீசுரமுடைய நாயனார், திருக்கயிலாயமுடைய நாயனார் என்னும் இரண்டு கோயில்களும் இளங்கோயில்கள் என்று கூறப்படுகின்றன.

சித்தூர் மாவட்டம் சந்திரகிரி தாலுகா திருச்சோகினூரில் இருந்த ஒரு கோயில் இளங்கோயில் என்று பெயர் பெற்றிருந்தது. இக்கோயிலில் இருந்த கடவுளுக்குக் திருஇளங்கோயில் பெருமானடிகள் என்று பெயர் இருந்தது. இக்கோயில் சில காலத்துக்கு முன்னர் இடிக்கப்பட்டது.

நெல்லூர் மாவட்டம் நெல்லூரில் உள்ள ஒரு வடமொழிச் சாசனம் எளங்கோயில் ஒன்றைக் கூறுகிறது. இளங்கோயிலைத் தான் இந்த வடமொழிச் சாசனம் எளங்கோயில் என்று கூறுகிறது. சிலர் கருதுவதுபோல் இளங்கோயில் பாலாலயமாக இருந்தால் இந்த வடமொழிச் சாசனம் வடமொழிச் சொல்லாகிய பாலாலயம் என்பதையே கூறியிருக்கும். ஆனால் இளங்கோயில் என்று கூறுகிறபடியால், இளங்கோயில் பாலாலயம் அன்று என்பதும், கோயில் அமைப்பில் ஒருவகையானது என்றும் ஐயமறத் தெரிகிறது.

தமிழில் இளங்கோயில் என்று கூறப்படுவதும் சிற்ப நூல்களில் ஸ்ரீகரக் கோயில் என்று கூறப்படுவதும் ஒரே விதமான கட்டடம் என்று



**குறிப்பு**

தோன்றுகிறது. ஸ்ரீகரம் என்னும் கட்டடம் நான்கு பட்டையான விமானத்தை (சிகரத்தை) உடையது என்று காமிகாகமமும் சிற்ப நூல்களும் கூறுகின்றன. மகாபலிபுரத்துத் திரௌபதையம்மன் இரதம் என்று இப்போது தவறாகப் பெயர் வழங்கப்படுகிற கொற்றவை கோயில் ஸ்ரீகரம் என்னும் அமைப்புடையது. இளங்கோயில் என்பதும் இதுவாக இருக்கக்கூடும்.



### 12.5.3 கரக்கோயில்

திருக்கடம்பூர் கோயில் அமைப்பு கரக்கோயில் அமைப்பு என்று திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில் கூறியிருக்கிறார். (திருக்கடம்பூர் கோயிலில் இளங்கோயிலும் ஒன்று உண்டு). சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கடம்பூர் கரக்கோயிலைக் குறிப்பிடுகிறார். (திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும் 5-ஆம் பாட்டு).

கரக்கோயிலைக் கற்கோயில் என்னும் சொல்லின் திரிபு என்று சிலர் கருதுவது தவறு. கரக்கோயில் என்பது கோயில் வகையில் ஒரு விதத்தைக் குறிக்கிறது.

விஜயம் என்று சிற்ப நூல்கள் கூறுகிற கட்டட அமைப்பு சுரக்கோயிலாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. வட்டமான விமானத்தை (சிகரத்தை) உடைய கோயில் கட்டடத்திற்கு விஜயம் என்று சிற்ப நூல்கள் பெயர் கூறுகின்றன.

### 12.5.4 ஞாழற் கோயில்

ஞாழற் கோயில் என்பதைக் குங்கும மரத்தினால் அமைக்கப்பட்ட கோயில் என்று சிலர் கூறுவர். இது தவறு. ஞாழல் என்று குங்கும மரத்திற்கும் பெயர் உண்டு. ஆனால் ஞாழல் மரத்தினால் அமைக்கப்பட்ட கோயிலை ஞாழற் கோயில் என்று கூறுவது தவறு. அப்படியானால், ஏனைய மரங்களினாலே அமைக்கப்பட்ட கோயில்களுக்கு அந்தந்த மரங்களின் பெயர் அமைய வேண்டுமல்லவா? அப்படிப் பெயர் இல்லாதபடியினாலே ஞாழல் மரத்தினாலே கட்டப்பட்டது என்று கூறுவது தவறு. ஞாழற்கோயில் என்பது கோயில் வகையில் ஒருவகையாகும்.

இந்தக் கோயிலின் அமைப்பு எப்படியிருக்கும் என்று இப்போது கண்டறிய முடியவில்லை.

### 12.5.5 கொகுடிக் கோயில்

கொகுடி என்பது ஒரு மரத்தின் பெயர் என்றும் அம்மரத்தினால் அமைக்கப்பட்ட கோயிலுக்குக் கொகுடிக் கோயில் என்று பெயர்

உண்டாயிற்றென்றும் சிலர் கூறுவர். இதுவும் தவறு "கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்" என்று கூறுகிறார் திருநாவுக்கரசர். சுந்தரரும் திருக்கருப்பறியலூர் பதிகத்தில் இக்கொகுடிக் கோயிலைக் குறிப்பிடுகிறார். ஞானசம்பந்தரும்,

**"குற்றமறியாத பெருமான் கொகுடிக் கோயில்**
**கற்றென விருப்பது கருப்பறிய லூரே"**

என்று கூறுவர்.

இந்தக் கோயிலின் விமான (சிகர) அமைப்பு எப்படியிருந்ததென்று திட்டமாகச் சொல்வதற்கில்லை. ஆயினும் ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம் என்று சிற்ப நூல்கள் கூறுகிற கட்டடங்களில் ஒன்றாகக் கொகுடிக் கோயில் இருக்கக்கூடும் என்று ஊகிக்கலாம். வட்டமான சிகரத்தையுடையது விஜயம் என்று பெயர் பெறும் என்பதை மேலே (கரக்கோயில்)கூறினோம். அந்த வட்டமான சிகரம் கர்ணகூடத்துடன் அமையப் பெற்றால் ஸ்ரீபோகம் எனப் பெயர் பெறும் என்றும் அதுவே நடுவில் பத்ரவரிசையுடன் கூடியதானால் ஸ்ரீவிசாலம் எனப் பெயர் பெறும் என்றும் காமிகாகமம் (ஏகபூமியாதி விதி படலம்) கூறுகிறது. கொகுடிக் கோயில் என்பது ஸ்ரீபோகம், அல்லது ஸ்ரீவிசாலமாக இருக்கக்கூடும் என்று கருதலாம்.

## 12.5.6 மணிக்கோயில்

மணிக்கோயிலின் அமைப்பைப் பற்றியும் நமக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆயினும், எட்டுப் பட்டை அல்லது ஆறுபட்டையான சிகரத்தையுடைய கோயிலாக இருக்கக்கூடும் என்று ஊகிக்கலாம். சிற்ப நூல்கள் ஸ்கந்த காந்தம் என்று கூறுகிற விமானக் கோயிலே மணிக்கோயில் என்று கருதுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

எட்டுப் பட்டையையுடைய சிகரத்தையும் கழுத்தையும் உடையது. ஸ்கந்த காந்தம் என்று காமிகாகமம் கூறுகிறது. ஆறு பட்டையையுடைய சிகரத்தையும் கழுத்தையும் உடையது. ஸ்கந்த காந்தம் என்று பாடபேதத்தையும் காமிகாகமம் கூறுகிறது (60-ஆவது ஏகபூமியாதி விதி படலம்)

நமது நாட்டில் ஆறுபட்டையுள்ள சிகரக் கோயில்கள் அதிகமாகக் காணப்படவில்லை. எட்டுப் பட்டையுள்ள சிகரக் கோயில்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மணிக்கோயில் என்பது ஆறு, அல்லது எட்டுப்பட்டையான சிகரமுள்ள கோயிலாகக் இருக்கக்கூடும்.

திருநாவுக்கரசர் கூறிய கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக் கோயில் என்னும் கோயில் வகைகளையும், ஒருவாறு பொருத்திக் கூறினோம். இவற்றில்

ஆலக்கோயிலும் ஹஸ்திபிருஷ்டம் என்னும் கோயில் வகைகளையும் பொருத்திக் கூறினோம். இவற்றில் ஆலக்கோயிலும் ஹஸ்திபிருஷ்டமும் ஒன்றே என்பதிலும் இளங்கோயிலும் ஸ்ரீகரமும் ஒன்றே என்பதிலும் ஐயப்பாடு ஒன்றும் இல்லை. ஆனால் ஏனைய பொருத்தங்கள் முடிந்த முடிபு அல்ல. இவற்றைப் பற்றி சிற்ப சாஸ்திரிகள் ஆராய்ந்து முடிவு கூற வேண்டும்.

குறிப்பு

**உயரமான கோயில்கள்**

மிக உயரமான விமானத்தை உடையது தஞ்சாவூர் பெரிய கோயில். இராஜராஜ சோழன் - I இதைக் கி.பி.1000-இல் கட்டினான். இது 190 அடி உயரம் உள்ளது. இதைப் போன்ற அமைப்பும் உயரமும் உடையது கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள கோயில். இது கி.பி.1025-இல் கட்டப்பட்டது. மற்றொரு உயரமான கோயில் திரிபுவனத்துக் கம்பஹரேசுவரர் கோயில். இவை சோழர்களால் கட்டப்பட்டவை இவையே மிக உயரமான கோயில்கள். பிற்காலத்துக் கோயில்கள் இவ்வளவு உயரமாகக் கட்டப்படவில்லை.

**காலப் பகுப்பு**

திராவிடக் கட்டடக் கலையைப் பழைய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், விஜயநகர அரசர் காலம் என்று ஐந்து காலப் பகுதியாகப் பிரித்துக் கூறுவர்.

பழைய காலம் என்பது கி.பி. 600-க்கு முற்பட்ட காலம் இந்தக் காலத்தில் கோயில் கட்டட அமைப்புகள் முழுவதும் அமையப்பெற்று மரத்தினாலும் செங்கற்களினாலும் அமைக்கப்பட்டன.

பல்லவர் காலக் கட்டடம் என்பது கி.பி.600 முதல் 900 வரையில் உள்ள காலம். இந்தக் காலத்தில் கற்றளிகள் (செங்கற்களுக்குப் பதிலாகக் கருங்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பட்ட கோயில் கட்டடங்கள்) ஏற்பட்டன.

சோழர் காலம் என்பது, பிற்காலச் சோழர் காலம். கி.பி. 900 முதல் 1300 வரையில் உள்ள காலம். இந்தக்காலத்தில் சோழ அரசர்கள் புதிதாகக் கற்றளிகளை அமைத்ததோடு பழைய செங்கற் கோயில்களை இடித்து அக்கோயில்களைக் கற்றளியாகப் புதுப்பித்தார்கள். அன்றியும். ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்ட காலமும் இதுவே. மேலும், சிவன் கோயில்களிலே அம்மன் சந்நிதிகள் தனியாகக் கட்டப்பட்ட காலமும் இதுவே. சோழர் காலத்துக்கு முன்பு. சிவன் கோயில்களில் அம்மனுக்கென்று தனியாகக் கருவறை இருந்ததை சாசனங்களில் இருந்து அறிகிறோம்.

பாண்டியர் கட்டடக்காலம் என்பது கி.பி.1300 முதல் 1500 வரையில் உள்ள காலம்.

விஜயநகர அரசர் கட்டடக் காலம் என்பது கி.பி. 1500 முதல் 1700 வரையில் உள்ள காலம்.

கட்டடக் கலையைப் பற்றி பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர காலம் என்று சொல்லும்போது, இந்தக் காலங்களில் கோயில் கட்டடங்களில் வெவ்வேறு மாறுதல்கள் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால், தூண்கள், கர்ணகூடு, கோஷ்டபஞ்சரம் முதலிய உறுப்புகளில் அந்தந்தக் காலத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. இந்த மாறுதல்களைக் கொண்டுதான் மேற்சொன்னபடி காலத்தைப் பிரித்திருக்கிறார்கள்.

குகைக் கோயில்களும் பாறைக் கோயில்களும் கி.பி.600-இல் இருந்து 850 வரையில் தமிழ்நாட்டிலே முதன் முதல் அமைத்தவன் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசன். அவனுக்குப் பிறகு அவன் மகன் நரசிம்ம வர்மனான மாமல்லன், மாமல்லபுரத்தில் (மகாபலிபுரத்தில்) குகைக் கோயில்களையும் இரதக் கோயில்கள் என்னும் பாறைக் கோயில்களையும் அமைத்தான். அவனுக்குப் பிறகு வந்த பல்லவ அரசர்கள் சாளுவன்குப்பம் முதலிய இடங்களில் குகைக்கோயில் அமைத்தார்கள். பிறகு புதுக்கோட்டையிலும் பாண்டிய நாட்டிலும் குகைக்கோயில்கள் அமைக்கப்பட்டன. கி.பி.850-க்குப் பிறகு குகைக்கோயில்கள் அமைக்கும் வழக்கம் மறைந்துவிட்டது.

கி.பி.1000க்குப் பிறகு அரசாண்ட சோழ, பாண்டிய, விஜயநகர அரசர்கள் குகைக்கோயிலை அமைக்கவில்லை. அவர்கள் கற்றளிகளைத்தான் அமைத்தார்கள்.

**சுவர் உறுப்புகள்**

இனி, திருவுண்ணாழிகை (கருவறை)யின் சுவரில் வெளிப்புறத்தில் அமைக்கப்படும். உறுப்புகளைப் பற்றிக் கூறுவோம். கருவறைக்கு முன்புறத்தில் அதைச் சார்ந்து சிறு மண்டபம் ஒன்று உண்டு. இதற்கு அர்த்தமண்டபம் என்பது பெயர். அர்த்த மண்டம் கருவறையின் ஒரு பகுதியேயாகும். அர்த்த மண்டபத்தின் வாயிலில் இருபுறத்திலும் துவாரபாலகர் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

திருவுண்ணாழிகை (கருவறை)யின் சுவரில் வெளிப்புறத்திலும் அர்த்த மண்டபச் சுவரின் இடைநாழிகையின் வெளிப்புறத்திலும் கோஷ்ட பஞ்சரம், கும்ப பஞ்சரம் என்னும் உறுப்புகள் அமைக்கப்படுவது வழக்கம். கருவறையின் வெளிப்புறச் சுவர்களில், பின்புறச் சுவரில் ஒன்றும் வலப்புற இடப்புறச் சுவர்களில் ஒவ்வொன்றும் ஆக மூன்று கோஷ்ட பஞ்சரங்களும், கருவறையைச் சேர்ந்துள்ள அர்த்த

மண்டபத்தின் வலப்புற இடப்புறச் சுவர்களின் வெளிப்புறத்தில் ஒவ்வொன்றும் ஆக இரண்டு கோஷ்ட பஞ்சரங்களும் ஆக ஐந்து கோஷ்ட பஞ்சரங்கள் அமைக்கப்படும்.



கோஷ்ட பஞ்சரம் என்பது சிற்பவேலைகள் அமைந்த மாடங்கள் ஆகும். கோஷ்ட பஞ்சரம் என்னும் இம்மாடங்களிலே

கணபதி, தட்சிணாமூர்த்தி, இலிங்ககோத்பவமூர்த்தி, பிரம்மன், நாராயணி(கொற்றவை) உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும். கோஷ்ட பஞ்சரங்களிலே இந்தத் தெய்வ உருவங்களை அமைக்கும் வழக்கம் சோழர் காலத்திலே கி.பி.10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், பல்லவர் காலத்துக் கோயில்களிலே கோஷ்ட பஞ்சரங்களில் இத்தெய்வ உருவங்கள் அமைக்கப்படவில்லை.

கோஷ்ட பஞ்சரங்களுக்கு இடையிடையே கும்ப பஞ்சரம் என்பது அடியில் குடம் போன்றும் மேலே குறிப்பிட்ட சிற்ப வேலையமைந்ததும் ஆன சிற்பவேலையாகும்.

பண்டைக் காலத்திலே அதாவது பல்லவர் காலம் வரையில் (கி.பி.10ஆம் நூற்றாண்டுக்கு முன்பு) திருமால், சிவபெருமான், கொற்றவை முதலிய தெய்வங்களுக்குத் தனித்தனியே கோயில்கள் இருந்தன. திருவுண்ணாழிகை(கருவறை)யும் அதைச் சார்ந்து அர்த்த மண்டபமும் மட்டும் அக்காலத்தில் இருந்தன. வேறு மண்டபங்களோ துணைக் கோயில்களோ அக்காலத்தில் இல்லை.

பிற்காலத்திலே, அர்த்த மண்டபத்தைச் சார்ந்தாற்போல் கோயில் முன்புறத்திலே முகமண்டம் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

**பரிவார ஆலயங்கள்:**

கி.பி.10 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, பிற்காலச் சோழர் ஆட்சியில், சிவன் கோயில்களில் அம்மனுக்கென்று தனி ஆலயங்கள் கட்டப்பட்டன. இக்காலத்துக்கு முன்பு சிவன் கோயில்களிலே அம்மனுக்கென்று தனி ஆலயங்கள் இருந்ததில்லை. தேவாரத்திலே, அப்பர் சம்பந்தர் சுந்தரர் ஆகிய நாயன்மார்கள் சிவபெருமானையும் தேவியையும் பாடியது உண்மையே. ஆனால், அக்காலத்தில் தேவிக்கென்று சிவன் கோயிலில் தனியாக ஆலயம் இருந்தால், அது சிவபெருமான் ஆலயத்துடன் சேர்ந்து இராமல் தனியாக இருந்தது. உதாரணமாகக் காஞ்சிபுரத்துக் காமாட்சியம்மன் ஆலயத்தைக் கூறலாம். நாயன்மார்கள் இந்தத் தேவி ஆலயத்தைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இந்த ஆலயம் சிவன் கோயிலில் சேராத தனி ஆலயம் என்பதை நினைவில் வைக்க வேண்டும்.



கி.பி.10- ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர், சோழ அரசரால் அம்மன் ஆலயங்கள், சிவன் கோயில்களில் அமைக்கப்பட்டன. அம்மன்

ஆலயங்கள் புதிதாக அமைக்கப்பட்டதைக் கல்வெட்டுச் சாசனங்களினாலும் அறியலாம்.



சோழர்கள் காலத்திலே அடியார், நாயன்மார்களுக்கும் உருவங்கள் அமைக்கப்பட்டன. இந்த அடியார், நாயன்மார் உருவங்கள், திருவுண்ணாழிகையின் வெளிப்புறத்தில் அதைச் சூழ்ந்துள்ள சுற்றாலை மண்டபங்களில் அமைக்கப்பட்டன. இவ்வாறு திருவுண்ணாழிகைக்கு வெளியே சுற்றாலை மண்டபங்கள் அமைக்கப்பட்டபடியால், மூலக் கோயிலின் கட்டட அமைப்பு முழுவதும் மறைக்கப்பட்டுவிட்டது. அன்றியும் சுற்றாலை மண்டபத்தில் சாளரம் அமைக்காதபடியால் பட்டப் பகலிலும் இருள் சூழ்ந்து கொண்டது. மூலக்கோயிலின் அதிஷ்டானத்திலும் (அடிப்புறம்), சுவரிலும் சிற்ப வேலைகள் அமைந்து அப் பகுதிகளே கட்டடத்தில் அழகான பகுதிகளாக விளங்குபவை. அப்பகுதியைச் சுற்றிலும் மண்டபம் அமைத்து மறைத்துவிட்ட தல்லாமல் இருள் சூழும்படியும் செய்துவிட்டார்கள். இப்படிச் செய்தது கோயிலின் அழகையே கெடுத்துவிட்டது. இப்போதுள்ள கோயில்களில் பெரும்பான்மையும் மூலக் கோயிலின் கட்டட அழகு மறைக்கப்பட்டவையே. சுற்றாலை மண்டபங்களால் மறைக்கப்படாத மூலக்கோயில்கள் மிகச் சிலவே இக்காலத்தில் உள்ளன.

பெரிய சிவன் கோயில்களிலே, பிள்ளையார் கோயிலும் முருகன் ஆலயமும் இப்போது காணப்படுகின்றது. இக்கோயில்களும் பிற்காலத்திலே ஏற்பட்டவை. முருகனுக்கும் கணபதிக்கும் தனித்தனியாகப் பண்டைக்காலத்தில் கோயில்கள் இருந்தது உண்மையே. ஆனால், சிவன் கோயிலுக்குள் பரிவார ஆலயங்களாக முருகன், கணபதி, அம்பிகை முதலியவர்களுக்குத் தனித்தனியே பண்டைக்காலத்தில் ஆலயங்கள் இல்லை.

பதினாறுகால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் முதலிய மண்டபங்களும் சோழர் காலத்திலும் அதற்குப் பிற்காலத்திலும் ஏற்பட்டவையே.

கோயில்களின் வாயில்களில் இப்போதுள்ள முகப்புக் கோபுரங்கள் பண்டைக்காலத்தில் இல்லை. இக்கோபுரங்கள் பிற்காலத்திலே விஜயநகர அரசனான கிருஷ்ணதேவர் காலத்திலே ஏற்பட்டவை. இவற்றிற்கு இராயகோபுரம் என்று பெயர் உண்டு. சிவன் கோயில்களிலே சனீசுவரன் கோவில், நவக்கிரகக் கோயில் என்பவை மிகப் பிற்காலத்திலே புதிதாகச் சேர்க்கப்பட்டவை.

**வைணவக் கோயில்:**

பெருமாள் கோயில்களிலும் கி.பி.10-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு "தாயார் சந்நிதி" இருந்ததில்லை. சைவ சமயமும், வைணவ சமயமும் தனித்தனி மதமாகப் பிரிந்த பிறகு, சைவர்கள் சிவன் கோயிலில்

அம்மனுக்குத் தனியாக ஆலயம் அமைத்துக் கொண்டது போல, வைணவர்களும் திருமகளுக்குத் "தாயார் சந்நிதி" அமைத்துக் கொண்டார்கள். அன்றியும் ஆழ்வார்களுக்கும் ஆசாரியர்களுக்கும் மற்றும் தெய்வங்களுக்கும் உருவங்கள் அமைத்து வழிபட்டார்கள். ஆகவே, பெருமாள் கோயில்களிலும் வெவ்வேறு ஆலயங்களும் மண்டபங்களும் புதிதாக அமைக்கப்பட்டன.

திருமால் கோயில்களில், ஆண்டாள் சந்நிதி என்று ஒரு கோயில் உண்டு. ஆண்டாள் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர். ஆனால், இவருக்கு மட்டும் சிறப்பாக ஒவ்வொரு பெருமாள் கோயிலிலும் தனியே ஆலயம் உண்டு. விஜயநகரத்து அரசனான கிருஷ்ண தேவராயன், மிகுந்த வைணவப் பற்றும் ஆண்டாள் பக்தியும் உடையவனாதலின், அவன் வைணவக் கோயில்களில் ஆண்டாள் சந்நிதியைப் புதிதாக அமைத்தான். அவன் காலத்திலும் அதற்குப் பிறகும் ஏற்பட்டவையே ஆண்டாள் சந்நிதிகள்.

மூலக் கோயிலைச் சூழ்ந்து மண்டபங்கள் அமைக்கப்பட்டபடியால் மூலக்கோயிலை அடிமுதல் முடிவரையில் ஒரே சமயத்தில் பார்த்து மகிழ முடியாது. கோயிலுக்கு வெளியே சற்று தூரத்தில் சென்று மூலக் கோயிலின் மேற்பகுதி அடிப்பகுதி இரண்டையும் ஒருமிக்கப் பார்த்தால்தான் அக்கட்டட கலையின் அழகை நன்கு உணரலாம். இவ் வாய்ப்பு வெகுசில கோயில்களிலேதான் அமைந்துள்ளது. ஆனால் பல்லவர் காலத்துக்கோயில்களில் இந்த அழகை முழுவதும் காணலாம்.

## 12.6.1 சிற்பக் கலை

கட்டடக் கலைக்கு அடுத்தபடியாக உள்ளது சிற்பக்கலை. கட்டடக் கலையைவிட சிற்பக் கலை நுட்பமானது. மனிதன் விலங்கு பறவை, மரம், செடி, மலை, கடல் முதலிய இயற்கை உருவங்களையும் கடவுள் தெய்வம் அரக்கர் முதலிய கற்பனை உருவங்களையும், அழகுபட அமைப்பதே சிற்பக் கலையாகும். காவியப் புலவர் கற்பனைகளை அமைத்து நூல் எழுதுவதுபோலவே, சிற்பக் கலைஞரும் (ஓவியப் புலவருங்கூட) தமது கற்பனைகளினாலே பலவகையான சிற்பங்களை அமைக்கிறார்கள்.

சிற்பக் கலைகள், கண்ணையுங் கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு இன்பங்கொடுக்கும் இனிய கலைகள். அவற்றின் அழகும் அமைப்பும் எல்லோருக்கும் உணர்ச்சி கொடுத்து மகிழ்வூட்டுகின்றன. ஆனால், அவற்றில் சிறிது கருத்தூன்றிக் காண வேண்டும். சற்று கலைச்சுவையும் இருக்க வேண்டும். இக்கலையுணர்வு பெற்றோர் அழகிய கலைப்பொருள்களைக் காணுந்தோறும் புதியதோர் இன்ப உலகத்திலே வாழ்கிறார்கள்.

**சிற்பம் அமைக்கும் பொருள்கள்:**

மெழுகு அரக்கு, சுதை, மரம், தந்தம், கல், பஞ்சலோகம் முதலியவைகளினால் சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன.

**"கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்**
**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை**
**பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன"**

என்பது திவாகர நிகண்டு (12ஆவது பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி)

**"வழுவறு மரனும் மண்ணுங் கல்லும்**
**எழுதிய பாவையும் ………"**

என்றும்

**"மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்**
**கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க"**

என்றும் "மணிமேகலை" கூறுகிறது(21ஆவது காதை)

தமது கோயில்களிலே சிற்பக்கலை பெரிதும் இடம் பெற்றிருக்கிறது. சிற்ப உருவங்கள் அமையாத கோயில் கட்டடங்கள் இல்லை. கோயிலின் தரை, சுவர், சிகரம், கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலைகள் முதலிய எல்லா இடங்களிலும் சிற்ப உருவங்கள் அமைந்துள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த மாளிகைகளிலே, சுதையினால் செய்யப்பட்ட சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டிருந்ததை, இந்திர விழாவின்போது அந்நகரத்துக்கு வந்த மக்கள் கண்டு களித்தனர் என்று மணிமேகலை் கூறுகிறது. அப்பகுதி இது.

**"வம்ப மாக்கள் கம்பலை மூதூர்**
**சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்**
**மையறு படிவத்து வானவர் முதலா**
**எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி**
**வெண் சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய**
**கண்கவர் ஓவியங் கண்டு நிற்குநரும்"**

**(மணிமேகலை 2:126-131)**



**குறிப்பு**

## 12.6.2 இரண்டு வகைச் சிற்பம்

சிற்ப உருவங்களை முழு உருவச்சிற்பம் என்றும் புடைப்புச் சிற்பம் என்றும் இரண்டு விதமாகப் பிரிக்கலாம். முழு உருவச் சிற்பம் என்பது, பொருள்களின் முன்புறம் பின்புறம் முதலிய முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவது. புடைப்புச் சிற்பம் என்பது முன்புறம் மட்டும் தெரிய அமைக்கப்படுவது. இவ்விரண்டு விதச் சிற்ப உருவங்களும் கோயில்களிலே அமைக்கப்படுகின்றன.

## 12.6.2 பௌத்த சமணச் சிற்பங்கள்

நமது நாட்டிலே பண்டைக்காலத்திலே (கி.மு.3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.10ஆம் நூற்றாண்டு வரையில்) பௌத்த மதம் நன்றாகச் செழித்திருந்தது. அக்காலத்தில் பௌத்தராக இருந்த தமிழர்கள் புத்தர் உருவத்தையும் பௌத்தத் தெய்வ உருவங்களையும் வழிபட்டார்கள். அவர்களும் ஆதிகாலத்தில் புத்தர் திருவுருவத்தை வைத்து வணங்காமல், பாத பீடிகை, தருமச்சக்கரம் ஆகிய அடையாளங்களை வைத்து வணங்கினார்கள். பிறகு, புத்தருடைய உருவத்தை வைத்து வணங்கினார்கள்.

மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னும் நூல்கள் புத்தர் வணக்கத்தைக் கூறும்போது பாத பீடிகையையும் தரும பீடிகையையும் கூறுகின்றன. ஏனென்றால் அந்தக் காலத்திலே புத்தருடைய உருவம் கற்பிக்கப்பட்டுச் சிற்பிகளால் சிற்ப உருவங்களாகச் செய்யப்படவில்லை. இதனாலே மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள் மிகப் பழமையானவை என்பது தெரிகிறது.

புத்தருடைய உருவம் கற்பிக்கப்பட்ட பிற்காலத்திலே அவ்வுருவத்தை நின்ற கோலமாகவும், இருந்த கோலமாகவும் கிடந்த(படுத்த) கோலமாகவும் சிற்பிகள் அமைத்தார்கள். வைணவர், திருமால் திருவுருவத்தை இவ்வாறே மூன்று விதமாக அமைத்ததை மேலே கூறினோம்.

பௌத்த மதத்தைப் போலவே சமண சமயமும் பண்டைக்காலத்திலே நமது நாட்டிலே சிறப்படைந்திருந்தது. சமண சமயத்தைச் சேர்ந்த தமிழர் அருகக் கடவுளின் உருவத்தையும் தீர்த்தங்கரர்களின் உருவத்தையும் வணங்கினார்கள்.

## 12.7 இசைக்கலை

அழகுக் கலைகளில் நான்காவது இசைக்கலை. இதனை, இசைத்தமிழ் என்றும் கூறுவர். இது காதினால் கேட்டு இன்புறத்தக்க இன்கலை. தமிழர் வளர்த்த இயல், இசை, நாடகம் என்னும்

முத்தமிழ்களில் இதுவும் ஒன்று. ஆகவே இது தமிழர், வளர்த்த கலைகளில் மிகப் பழைமையானது.



**குறிப்பு**

இசைத்தமிழ் இலக்கிய நூல்களையும் இசைத்தமிழ் இலக்கண நூல்களையும் புலவர்கள் பழங்காலத்திலே எழுதியிருந்தார்கள். அவற்றில் சில இப்போது பெயர் தெரியாமலே மறைந்துவிட்டன. மற்றும் சில பெயர் மட்டும் அறியப்படுகின்றன.

**பரிபாடல்**

சங்க காலத்திலே பரிபாடல் என்னும் இசைப்பாடல்கள் பல பாடப்பட்டிருந்தன. பரிபாடல்கள் இசைப்பாடல்கள் என்பதைப் பரிமேலழகர் உரையினால் அறிகிறோம். "பரிபாடல் என்பது இசைப்பாவாலான, இ∴து இசைப் பகுப்பு படைத்த புலவரும் பண்ணுமிட்டே என்று எழுதியிருப்பதனால் அறியலாம். (பரிபாடல், கடவுள் வாழ்த்து உரை. இவ்வுரைப்பகுதி மறைந்துவிட்டது).

"அவையாவன, கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன வென்பது" இது, பேராசிரியர் உரை (தொல்.பொருள்.செய்யுள் 242 உரை)

யாப்பருங்கல விருத்தியுரை காரரும், பரிபாடல் இசைத் தமிழைச் சேர்ந்தது என்று கூறுகிறார். அவர் எழுதுவது:

"செந்துறை மார்க்கம் (இசைப்பாடல்) ஆமாறு நாற்பெரும் பண்ணும் இருபத்தொரு திறனும் ஆகிய இசையெல்லாஞ் செந்துறை--- செந்துறை என்பது பாடற்கேற்பது… செந்துறை விரி மூவகைய: செந்துறையும், செந்துறைச் செந்துறையும், வெண்டுறைச் செந்துறையும் என அவற்றுட் செந்துறைப் பாட்டாவன: பரிபாடலும், மகிழிசையும், காமவின்னிசையும் என்பன

**"தெய்வம் காம**
**மையில் பொருளாம் பரிபாடல்லே**
**மகிழிசை நுண்ணிகை யுரிபெரு மரபிற்**
**காமவின் னிசையே யாற்றிசை யிவற்றைச்**
**செந்துறை யென்று சேர்த்தினர் புலவர்"**

என்றாகலின்'

(யாப்பருங்கலம், ஒழிபியல் உரைமேற்கோள்..)

அன்றியும், இப்போது கிடைத்துள்ள இருபத்தொரு பரிபாடல்களுக்கு, அப்பாடல்களைப் பாடிய புலவர் பெயர்களும் அப்பாட்டுக்குப் பண்வகுத்த இசைப்புலவர் பெயர்களும் பண் பெயரும்

எழுதப்பட்டிருப்பதனாலே, பரிபாடல்கள் இசைப்பாடல்கள் என்பதை ஐயமற உணரலாம். இப்பரிபாடல் இருபத்தொன்றுக்கும் பண் வகுத்த இசைப் புலவர்களின் பெயர்களாவன:



பெட்டனாகனார், கண்ணனாகனார், மருத்துவன் நல்லச்சுதனார், பித்தாமத்தர், நாகனார், நன்னாகனார், நல்லச்சுதனார். தமிழரில் நாகர் என்னும் பிரிவினர் பண்டைக்காலத்தில் இருந்தார்கள் அவர்கள் இசைப் பயிற்சியில் தேர்ந்தவர்களாயிருந்தனர்.

கணக்கற்ற பரிபாடல்கள் முற்காலத்தில் இருந்தன என்றும் அவற்றில் பெரும்பாலும் இப்போது இறந்துபட்டன என்றும் தெரிகின்றன. இறையனார் அகப்பொருள் உரையாசிரியர், தலைச்சங்கத்தைக் கூறுமிடத்தில் அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமென இத் தொடக்கத்தன" என்று கூறுகிறார். பின்னர் கடைச்சங்க காலத்தைக் கூறுமிடத்தில் "அவர்களாற் பாடப்பட்டன. நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடல்களில்" இப்போது உருப்படியாக இருப்பது இருபத்தொரு பரிபாடல்களே. மற்றவை அழிந்துவிட்டன.

## 12.7.1 பரிபாடல் இசை மறைவு

இப்போதுள்ள இசைப்புலவர்கள் பரிபாடல்களைப் பாடுவது இல்லை. அதனை எப்படிப் பாடுவது என்பதையும் இப்போதுள்ளவர் அறியார் போலும், இதுபற்றி முத்தமிழ்ப் புலவர். பேராசிரியர் உயர்திரு விபுலாநந்த அடிகளார் தமது யாழ்நூல் என்னும் இசைத் தமிழ் நூலிலே இவ்வாறு கூறுகிறார்.

"முதலூழி யிறுதிக்கண் கடல்கொண்ட தென் மதுரை யகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும், இறையனாரும், குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும். நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்டோர் தமிழாராய்ந்த காலத்திலே, எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும், முதுகுருகும், களரியா விரையு முள்ளிட்டன புனையப்பட்டனவென அறிகின்றோம். கடைச் சங்கத்துத் தொகுக்கப்பட்ட தொகை நூல்களுள் கிடைத்துள்ளது. கிடைத்த பகுதியினை நோக்கித் தமிழிசையின் வளத்தினையும் பாடலிலமைந்த விழுமிய பொருளினையுங் கண்டு இறும்பூதெய்துகின்றோம். நமக்குக் கிடைத்த ஒரு சில பரிபாடல்களின் நலத்தினை நோக்கித் தலைச்சங்கத்தார் புனையப்பட்டனவென அறிகின்றோம். கடைச் சங்கத்துத் தொகுக்கப்பட்ட தொகை நூல்களுள் ஒன்றாகிய எழுபது பரிபாடலின் ஒரு பகுதி நமக்குக் கிடைத்துள்ளது. நமக்குக் கிடைத்த ஒரு சில பரிபாடல்களின் நலத்தினை நோக்கித் தலைச்சங்கத்தார் புனைந்த எண்ணிறந்த பரிபாடல்கள் எத்துணை

வளஞ்சிறந்தனவோவென வெண்ணி உளமுருகுகின்றோம். பாடற் பின்னாகப் பாடற்றுறையும், பாடினார் பெயரும், பண்ணின் பெயரும், இசை வகுத்தார் பெயரும் தரப்பட்டிருக்கின்றன.நாகனார், பெட்டனாகனார், நன்னாகனார், கண்ணனாகனார் என நின்ற பெயர்களை நோக்குமிடத்து, இசை வகுத்த பாணர் நாககுலத்தினராமோ என எண்ண வேண்டியிருக்கிறது. கேசவனார், நல்லச்சுதனார் என்போர் பாடினோராகவும், இசையினை ஒரு முறைப் பற்றி எழுதியிருத்தல் வேண்டும். அம்முறையும், முறைபற்றிய இசைக் குறிப்பும் நமக்கு கிடைத்தில".(யாழ்நூல், பாயிரவியல் பக்கம்16.)

## 12.7.1 இசைப்பாணர்

பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டிலே இசைக்கலையில் வல்லவராயிருந்தவர் பாணர் என்னும் இனத்தவர். சங்க காலத்திலே பாணர்கள், அரசர் சிற்றரசர் செல்வர் முதலியவர் இல்லங்களுக்குச் சென்று இசைப்பாடல் பாடி வந்தனர். ஆகவே அவர்களால் போற்றப்பட்டார்கள். பாணருக்குப் புரவலர்கள் பொன்னையும் பொருளையும் வழங்கினார்கள். அக்காலத்தில் சமுதாயத்திலே உயர்நிலை பெற்றிருந்த பாணர். சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தாழ்ந்த நிலையையடைந்து தீண்டப்படாதவர் நிலையில் தாழ்த்தப்பட்டனர்.

கி.பி.7-ஆம் 8-ஆம் நூற்றாண்டுகளில் இருந்து பேர்பெற்ற இசைப்பாணர்கள், திருஞான சம்பந்தருடன் இசைப்பண் வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருமால் அடியவரான திருப்பாணாழ்வாரும், வரகுண பாண்டியன் காலத்தில் இருந்த பாணபத்திரரும் ஆவர். கி.பி.10 ஆம் நூற்றாண்டிலே இசைப்பாணர் மரபு அருகிவிட்டது.

தேவாரத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியும் அபயகுலசேகர சோழ மகாராசரும், அத்திருமுறைகளுக்குப் பண் அடைவு தெரியாமல் மயங்கிக் கடைசியில் எருக்கத்தம் புலியூருக்குச் சென்றார்கள். ஏனென்றால் எருக்கத்தம் புலியூரில்தான் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் பரம்பரையினர் வாழ்ந்திருந்தனர். இவர்கள் தேவாரத்திற்குப் பண்ணடைவு அமைக்கச் சென்றபோது, அவ்வூரில் அக்குலத்தில் கொடுத்த பண் அமைப்புகளே இப்போது தேவாரத்தில் காணப்படுகிற பண் அடைவுகள் ஆகும்.

## 12.7.2 சில இசை நூல்கள்

பண்டைக் காலத்திலே இசைத் தமிழ் நூல்கள் இருந்தன. இசைப்பாட்டாகிய பரிபாடல்களையும் முதுநாரை, முதுகுருகு என்னும் நூல்களையும் முதற் சங்க காலத்தில் இயற்றினார்கள் என்று இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது.

அடியார்க்கு நல்லார் "இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை, பெருங்குருகும், தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாகவுள்ள தொன்னூல்களுமிறந்தன. (சிலப்பதிகாரம், உரைப்பாயிரம்) என்று எழுதுகிறார். இவர் கூறுகிற பெருநாரை பெருங்குருகும் இறையனார் அகப்பொருள் உரை கூறுகிற முதுநாரை, முதுகுருகும் ஒன்றுபோலும். இந்நூல்களைப் பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

**குறிப்பு**

இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரத்தில் சிற்றிசை பேரிசை என்னும் இரண்டு இசைத்தமிழ் நூல்கள் கூறப்படுகின்றன.

### 12.7.3 பஞ்ச பாரதீயம்

இந்நூலை நாரதர் என்பவர் இயற்றினார் என்றும் அந்நூல் மறைந்து போயிற்று என்றும் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறுகிறார். (சிலப்பதிகாரம் உரைப்பாயிரம்)

"நாரத வீணை நயந்தெரி பாடல்" (சிலம்பு: கடலாடு காதை) என்றும் "முதுமறைதேர் நாரதனார் முந்தை, முறை நரம்புளர்வார்" என்றும் "குயிலுவருள் நாரதனார் முந்தை முறை நரம்புளர்வார்" என்றும் கூறியது காண்க (சிலம்பு: ஆய்ச்சியர் குரவை, ஒன்றன் பகுதி)

நாரதர் இயற்றிய பஞ்ச பாரதீயத்திலிருந்து இசை இலக்கணச் சூத்திரம் ஒன்றை அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டுகிறார். (வேனிற் காதை-29-30 வரிகளின் உரை)

அச்சூத்திரம் இது.

**இன்னிசை வழிய தன்றி யிசைந்தல்செம் பகைய தாகும்**
**சொன்னமாத் திரையினோங்க விசைத்திடுஞ் சுருதியார்ப்பே**
**மன்னிய விசைவ ராறு மழுங்குதல் கூட மாகும்**
**நன்னுதால் சிதற வுந்த லதிர்வென நாட்டினாரே**
**என்பதனாற் கொள்க. இது பஞ்ச பாரதீயம்.**

### 12.7.4 இசை நுணுக்கம்

அநாகுலன் என்னும் பாண்டியனுடைய மகன் சயந்த குமாரன் என்பவனுக்கு இசை கற்பிப்பதற்காக, சிகண்டி என்னும் முனிவர் இந்நூலை இயற்றினார் என்று அடியார்க்கு நல்லார் கூறுகிறார். (சிலம்பு: உரைப்பாயிரம்).

இசை நுணுக்கத்திலிருந்து நான்கு செய்யுள்களை அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டுகிறார். (சிலம்பு அரங்கேற்றுக்காதை 26-ஆம்

வரி உரையிலும், கடலாடு காதை 35, 36-ஆம் வரி உரையிலும்) அவர் மேற்கோள் காட்டும் செய்யுள்களில் ஒன்று இது:

**"என்னை-**

**செந்துறை வெண்டுறை தேவபா ணிய்யிரண்டும்**

**வந்தன முத்தகமே வண்ணமே - கந்தருவத்**

**தாற்றுவரி கானல் வரிமுரண் மண்டிலமாத்**

**தோற்று மிசையிசைப்பாச் சுட்டு**

என்றார் இசை நுணுக்கமுடைய சிகண்டியாரென்க''

## 12.7.5 பஞ்ச மரபு

இந்த இசைத் தமிழ் இலக்கண நூலைச் செய்தவர் அறிவனார் என்பவர். இந்நூலை அடியார்க்கு நல்லார் தமது உரையில் உரையில் குறிப்பிடுகிறார். இந்நூல் செய்யுள் ஒன்றையும் தமது உரையில் (சிலம்பு, கடலாடு காதை 35ஆம் வரியில் வருகிற "மாயோன் பாணி" என்பதன் உரை) மேற்கோள் காட்டுகிறார்.

அச்செய்யுள் இது:

**"என்னை?**

**செப்பறிய சிந்து திரிபதை சீர்ச்சவலை**

**தப்பொன்று மில்லாச் சமபாத மெய்ப்படியுஞ்**

**செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ண மென்ப**

**பைந்தொடியா யின்னிசையின் பா.**

என்றார் பஞ்சமரபுடைய அறிவனா ரென்னு மாசிரியரென்க"

**பதினாறு படலம்**

இந்த இசைத் தமிழ் நூலைச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் தமது அரும்பத வுரையில் குறிப்பிடுகிறார். அன்றியும் இந்நூலிருந்து ஒரு சூத்திரத்தையும் மேற்கோள் காட்டுகிறார். (சிலம்பு, கானல்வரி "வார்தல் வடித்தல்... செவியினோர்த்து' என்பதன் அரும்பதவுரை)

**"தெருட்ட லென்றது செப்புங் காலை**

**யுருட்டி வருவ தொன்றே மற்ற**

**வொன்றன் பாட்டு மடையொன்ற நோக்கின்**

**வல்லோ ராய்ந்த நூலே யாயினும்**

**வல்லோர் பயிற்றுங் கட்டுரை யாயினும்**
**பாட்டொழிந் துலகினி லொழிந் செய்கையும்**
**வேட்டது கொண்டு விதியுற நாடி"**

எனவரும் இவை, இசைத்தமிழ்ப் பதினாறு படலத்துள் கரணவோத்துட் காண்க"

குறிப்பு

**வாய்ப்பியம்**

இந்நூலை இயற்றியவர் வாய்ப்பியனோர் என்பவர். அவர் பெயரே இந்நூலுக்குப் பெயராயிற்று இந்த நூலையும் இந்நூல் சூத்திரத்தையும் யாப்பருங்கல விருந்தியுரைகாரர் குறிப்பிடுகிறார். இந்நூலிலிருந்து மேற்படி உரையாசிரியர் மேற்கோள் காட்டுகிற சூத்திரங்கள் சிலவற்றைக் காட்டுவோம்.

**"பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென**
**நால்வகைப் பண்ணா நவின்றனர் புலவர்"**

என்றார் வாய்ப்பியனார் விளரி யாழோடைந்து மென்ப. இனிப்பண் சார்பாகத் தோன்றியன திறமாம். என்னை?

**பண்டிசார் வாகப் பரந்தன வெல்லாந்**
**திண்டிற மென்ற திறனறிந் தோரே"**

என்றாராகலின் அத்திறம் இருபத்தொரு வகைய.

**"அராக நேர்திற முறழம்புக் குறுக்கூலி**
**யாசா னைந்தும் பாலையாழ்த் திறனே."**
**நைவளங் காந்தாரம் பஞ்சுரம் படுமலை**
**மருள் வியற் பாற்றுஞ்**
**செந்நிறமெட்டுங் குறிஞ்சியாழ்த் திறனே"**
**நவிர்படு குறிஞ்சி**
**செந்திற நான்கும் மருதயாழித் திறனே"**
**சாதாரி பியந்தை நேர்ந்த திறமே**
**பெயர் திறம் யாமை யாழ்**
**சாதாரி நான்கும் செவ்வழி யாழ்த் திறனே"**

என்றார் வாய்ப்பினார்" (யாப்பருங்கலம், ஒழிபியல் உரை மேற்கோள்)

"இனிச் செந்துறை மார்க்கமும் வெண்டுறை மார்கமும் ஆமாறு: நாற்பெரும் பண்ணும் இருபத்தொரு திறனும் ஆகிய இசையெல்லாம் செந்துறை ஒன்பது மேற்புறமும் பதினோராடலும் என்றிவை யெல்லாம்

வெண்டுறையாகும் என்பது வாய்ப்பியம்" (யாப்பருங்கலம், ஒழிபியல் உரைமேற்கோள்)



## 12.7.6 இந்திர காளியம்

இப்பெயருள்ள இசைத்தமிழ் நூலை, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் கூறுகிறார். "பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியம்" என்று அவர் எழுதுகிறார். இது அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை எழுதுவதற்கு உதவியாக இருந்தது.

**குலோத்துங்கன் இசைநூல்**

சோழ அரசர்களில் புகழ் பெற்றவன் குலோத்துங்க சோழன். இவனுக்கு விசயதரன், சயங்கொண்டான் என்னும் சிறப்புப் பெயர்களுக்கும் உண்டு. இவன் இசைக்கலையில் வல்லவன் என்றும் இசைத்தமிழ் நூல் ஒன்றை இயற்றியவன் என்றும் கலிங்கத்துப்பரணி கூறுகிறது.

**இசைத் தமிழச் செய்யுட்டுறைக் கோவை**

இப்பெயருள்ள இசைத் தமிழ் நூல் ஒன்று இருந்ததென்பதை, யாப்பருங்கலக்காரிகை உரைப்பாயிரத்தினால் அறிகிறோம்.

**அந்நியர் ஆட்சியில் இசைக்கலை**

கி.பி.17,18-ஆம் நூற்றாண்டுகளிலே தமிழ்நாட்டில் அரசியல் நிலையற்றதாகி அந்நியர் ஆட்சியினால் நாட்டில் குழப்பமும் கலகமும் நிலவின. தெலுங்கர்களான நாயக்கச் சிற்றரசர்களும் மகாராஷ்டிரர்களும், முகம்மதியர்களும், பாளையக்காரர்களும் தமிழ்நாட்டில் ஒவ்வொரு பகுதிகளைப் பிடித்துக் கொண்டு அரசாண்டனர். அந்நியராகிய இவர்கள் தமிழர் கலைகளையும் தமிழர் பண்பையும் அறியாதவர்கள். ஆகையால், மற்றக் கலையைப் போற்றாதது போலவே இசைக்கலையையும் போற்றுவில்லை. அக்காலத்திலே தமிழ் இசைவாணர், ஆதரிப்பாரற்றுத் தவித்தனர். தெலுங்குப் பாடல்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. தமிழ் நாட்டிலே தெலுங்குப் பாடல்களுக்கு ஆதிக்கம் உண்டாயிற்று. இந்தப் பழக்கம் 19,20-ஆம் நூற்றாண்டிலேயும் தொடர்ந்து வந்தது.

கி.பி.19,20-ஆம் ஆண்டுகளில் அரசியல் குழப்பங்கள் அடக்கப்பட்டு, நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்து அமைதியும் ஒழுங்கும் நாட்டில் நிலைபெற்ற பிறகும், மராட்டிய மன்னர், தெலுங்கு மன்னர், முகம்மதிய மன்னர்களின் அதிகாரங்கள் அடங்கி ஒழிந்தபின்பும், தமிழ்நாட்டிலே தெலுங்குப் பாடல்கள் பாடும் நிலை இருந்து வந்தது. இதன் காரணம் பரம்பரையாக இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகத்

தெலுங்குப் பாட்டையே பயின்று பாடிவந்த பாடகர், குருட்டுத்தனமாக அப்பாடல்களையே பாடிவந்ததுதான்.

இன்னொரு காரணம், இசையை வயிறு வளர்ப்பதற்காக ஒரு சூழலை உண்டாக்கிக் கொண்டு ஒரு சிறு கூட்டம். தமிழ்ப்பற்று இல்லாமல், தமிழ்ப்பாடல்களைப் பாடாமல் தெலுங்குப் பாடல்களைப் பாடிவந்ததாகும்.

**தமிழிசையின் மறுமலர்ச்சி**

இவ்வாறு தமிழ் இசைப்பாடல்கள் போற்றப்படாமல் இருந்த நிலையை மாற்றித் தமிழ் இசைக்கு மறுமலர்ச்சி யுண்டாக்கிக் கொடுத்தவர் கலைவள்ளல் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள். இம் முயற்சியில் இப்பெரியாருக்குப் பேருதவியாக இருந்தவர் டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்கள்.

இப்பெரியார்களின் சிறந்த உயர்ந்த முயற்சியை எதிர்த்தவர்கள் தெலுங்கரும், மாராட்டியரும், முகம்மதியரும் அல்லர். தமிழர் என்று சொல்லிக் கொண்டு, ஆனால் தமிழ்ப்பற்றுச் சிறிதும் இல்லாமல் எந்தவழியிலாவது வாழ வேண்டும் என்னும் ஒரே கொள்கையுடைய ஒரு சிறுகூட்டந்தான் தமிழ் இசை இயக்கத்தை எதிர்த்துப் பின்னர் அடங்கிவிட்டது.

ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழிசைச் சங்கம் அமைத்தும், தமிழிசைக் கல்லூரி நிறுவியும், இசைத்தமிழ் நூல்களை வெளிப்படுத்தியும் பெருந்தொண்டு செய்தார்கள்.

## 12.8 ஓவியக் கலை

ஓவியத்துக்குச் சித்திரம் என்றும் பெயர் உண்டு. நேர்கோடு, வளைந்த கோடு, கோணக்கோடு முதலிய கோடுகளினாலும், சிவப்பு கறுப்பு மஞ்சள் நீலம் முதலிய நிறங்களினாலும் ஓவியங்கள் எழுதப்படுகின்றன.

## 12.8.1 ஓவியக் கலையின் பழைமை

படம் அல்லது பதாம் என்பது, சித்திரம் எழுதப்பட்ட துணிச்சீலை என்னும் பொருள் உடையது.

ஓவியத்தைப் பற்றிய பல செய்திகள், சிந்தாமணி, பெருங்கதை, மணிமேகலை போன்ற காவியங்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தில் ஓவியக் கலையைப் பற்றி விளக்கும் “ஓவியநூல்” ஒன்று இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

## 12.8.2 சுவர் ஓவியம்

பண்டைக்காலத்தில் அரசருடைய அரண்மனை, பிரபுக்களின் மாளிகை, கோயில், மண்டபம் முதலிய கட்டடங்களின் சுவர்களில் ஓவியங்களை எழுதி அழகுபடுத்தினார்கள். சுவர் ஓவியங்கள்தான் பண்டைக்காலத்தில் பெரிதும் பயின்று வந்தன. ஒவ்வொரு அரசனுடைய அரண்மனையிலும் சித்திர மாடம் என்னும் கட்டடம் தனியே அமைந்திருந்தது. பாண்டியன் நன்மாறன் என்பவன், தனது சித்திரமாடத்திலே தங்கியிருந்த போது அங்கே உயிர் நீத்தான். அதனால் அவன் பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று புறநானூற்றில் கூறப்படுகிறான்.

**“கயங்கண்ட வயங்குடை நகரத்துச்**

**செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து”**

என்று கூறுகிறார்.(மதுரைக் காஞ்சி 484-5.)

“குளிச்சியாற் கயத்தைக் கண்டாற்போன்ற விளங்குதலையுடைய கோயிலிடத்து (அரண்மனையில்) செம்பாற் செய்தால் ஒத்த செவ்விய சுவர்களைச் சித்திரம் எழுதி” என்று இதற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார்.

## 12.8.3 பல்லவர், சோழர்கால ஓவியங்கள்

காஞ்சிபுரத்துக் கயிலாசநாதர் கோயிலிலும், விழுப்புரம் தாலுகாவில் பனைமலைக் கோயிலிலும், தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலிலும், முறையே பல்லவர் காலத்துச் சித்திரமும், சோழர் காலத்துச் சித்திரமும் சுவர்களில் காணப்படுகின்றன. புதுக்கோட்டையைச் சார்ந்த சித்தன்ன வாசல் குகைக்கோயிலிலும் திருநெல்வேலித் திருமலைபுரத்துக் குகைக்கோயிலிலும் பல்லவர் காலத்து ஓவியமும் பாண்டியர் காலத்து ஓவியமும் காணப்படுகின்றன. குகைக் கோயில் சித்திரங்களும் சுவர் ஓவியங்களே. குகையின் பாறைச்சுவரின் மேல் மெல்லியதாகச் சுதை பூசி அதன் மீது ஓவியங்கள் எழுதப்பட்டன. பண்டைக்காலத்தில் முக்கியமான கோயில்களில் ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தன. பிற்காலத்தில் அவை அழிக்கப்பட்டு மறைந்துவிட்டன.

## 12.8.4 தென்னிந்திய ஓவியம்

தென் இந்திய ஓவியங்கள் பண்டைக்காலத்தில் சிறப்புற்றிருந்தன. ஹைதராபாத்து இராச்சியத்தின் வடகோடியில் பரத்பூருக்கு அருகில் உள்ள அஜந்தா மலைக்குகை ஓவியங்களும், காஞ்சி கயிலாசநாதர் கோயில் ஓவியங்களும், பனை மலைக் கோயில் ஓவியங்களும், புதுக்கோட்டை இராச்சியத்தின் சித்தன்ன வாசல் குகைக் கோயில்

ஓவியங்களும், திருமலைபுரம் மலையடிப்பட்டி ஓவியங்களும், இலங்கை சிகிரியாமலை மதிள் ஓவியங்களும் தென்னிந்திய ஓவிய மரபைச் சேர்ந்தவை.

குறிப்பு

நமது நாட்டிலே இப்போதுள்ள சுவர் ஓவியங்கள் மிகச் சிலவே. ஏனென்றால், கி.பி.600க்கு முன்னர் இருந்த கோயில் கட்டடங்கள் எல்லாம் செங்கல் சுண்ணாம்புகளினால் கட்டப் பட்டவை. ஆகவே அக் கட்டடங்கள் விரைவில் அழிந்துவிட்டன. அக்கட்டடங்களோடு சுவர் ஓவியங்களும் அழிந்துவிட்டன. கி.பி.600க்குப் பின் உண்டான குகைக் கோயில்கள், கற்றளிகள் என்னும் கட்டடங்களில் எழுதப்பட்ட ஓவியங்களில் பெரும்பான்மையும் இப்போது அழிந்து விட்டன. ஏனென்றால், நுண்கலைகளில் மிக எளிதாகவும் விரைவாகவும் அழிந்து விடக் கூடியது ஓவியக்கலை. ஆகவே, அவை, பராமரிப்புக் குறைவு காரணமாகவும் காலப் பழைமை காரணமாகவும் அழிந்துவிட்டன.

தமிழ்நாட்டிலே இப்போதுள்ள மிகப் பழைய ஓவியம் சித்தன்னவாசல் குகைக் கோயில் ஓவியமே. அதற்கடுத்தபடியாக உள்ளவை காஞ்சி கயிலாசநாதர் கோயில் மதில் ஓவியங்களும், பனைமலைக் கோயில் ஓவியங்களுமாம். இவை சிதைந்து அழிந்துள்ளன. அதற்குப் பிற்பட்டவை தஞ்சாவூர் பெரிய கோவில் ஓவியங்கள் முதலியவை.

## 12.8.5 சித்தன்னவாசல் ஓவியம்

அன்னவாசல் என்னும் பெயருள்ள ஊர்கள் புதுக்கோட்டையில் சில உள்ளன. அப்பெயருள்ள ஊர்களில் சித்தன்னவாசல் என்பதும் ஒன்று. இது புதுக்கோட்டைக்கு வடமேற்கே பத்து மைலுக்கப்பால் இருக்கிறது. இக்கிராமத்துக்கு அருகிலே மலையின் மேலே சிறு குகைக்கோயில் ஒன்று உண்டு. இது ஜைன சமயக் கோயில். இக்கோயிலை அமைத்தவன் பல்லவ அரசனாகிய முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.600-630) ஆவான். இந்த அரசன் இசைக்கலை நாடகக்கலை சிற்பக்கலை முதலிய கலைகளில் வல்லவன். அன்றியும் சித்திரக் கலையிலும் வல்லவன். இதனால் அவனுக்குச் சேதிகாரி, சங்கீரண ஜாதி, சித்திரகாரப்புலி முதலிய சிறப்புப் பெயர்கள் உண்டு. இந்த அரசன், தசஷிண சித்திரம் என்னும் பழைய ஓவிய நூலுக்கு உரை எழுதினான் என்று இவன் அமைத்த மாமண்டூர் குகைக்கோயில் சாசனம் கூறுகிறது என்பர்.

## 12.8.6 கயிலாசநாதர் ஓவியம்

சித்தன்னவாசல் ஓவியத்துக்குச் சற்றுப் பிற்பட்ட காலத்தது காஞ்சிபுரத்து கயிலாசநாதர்கோயில் சுவர் ஓவியங்கள். கயிலாசநாதர் கோயிலுக்கு இராஜ சிம்மேசுவரம் என்பது பழைய பெயர். ஏனென்றால்

இராஜசிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி.680-700) இக்கோயிலைக் கட்டினான். கற்றளிகளைக் கட்டும் புதிய முறையை உண்டாக்கினவன் இவ்வரசனே. மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலைக் கட்டிய இவன் இக்கயிலாசநாதர் கோயிலிலே சுவர் ஓவியங்களையும் எழுதுவித்தான்.

சில, மங்கலான வர்ணங்களுடன் காணப்படுகின்றன. சில, வர்ணங்கள் முழுவதம் அழிந்து கரிய கோடுகளையுடைய புனையா ஓவியங்களாகக் (Outline Drawing) காணப்படுகின்றன.

## 12.8.7 பனைமலை ஓவியம்

வடஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் தாலுக்காவில் உள்ள பனைமலை என்னும் ஊரில் உள்ள கோயில், கயிலாச நாதர்கோயிலைக் காட்டிய இராஜசிம்ம பல்லவன் கட்டியதாகும். இக் கோயிலிலும் மிக அழகான, ஆனால் சிதைந்து போன, ஓவியம் உண்டு. இப்போது இவ்வோவியத்தில் காணப்படுவது மகுடம் அணிந்த ஒரு பெண்மணியின் உருவம். இப்பெண்மணியின் முடிக்கு மேலே அழகான குடை இருக்கிறது. தூணின் மேல் சாய்த்து நிற்கும் இப் பெண்மணியின் உருவத்தைப் பார்வதி தேவியின் உருவம் என்று கூறுகின்றனர். ஆனால், இது இராணியின் உருவம் போலக் காணப்படுகிறது. இடையிடையே அழிந்துபோன இந்த ஓவியம், இந்நிலையிலும் வெகு அழகாக இருக்கிறது.

## 12.8.8 நாயக்கர் காலத்து ஓவியம்

தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் அரசாண்ட நாயக்கர் மன்னர்களும் சுவர் ஓவியங்களை அமைத்திருக்கிறார்கள். மதுரை நாயக்கர் ஓவியங்கள், மதுரை மீனாட்சியம்மன் கோயில் முதலிய இடங்களில் இருக்கின்றன.

பழைய கோயில்களிலே இன்றும் சில ஓவியங்கள் மறைந்துள்ளன. அவை முற்காலத்து ஓவியங்களும் பிற்காலத்து ஓவியங்களுமாக இருக்கும். பழைய பல்லவர் காலத்துக் கோயில்கள் சிலவற்றில் இடைக்காலத்து ஓவியங்களும் பிற்காலத்து ஓவியங்களும் காணப்பெறுகின்றன. உத்தரமேரூர் மாடக் கோயிலில் சுவர் ஓவியங்கள் உள்ளன.

## 12.9 மருத்துவக் கலை

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பது தமிழரின் பட்டறிவால் உருவான பழமொழியாகும். நோய்களைப் பற்றியும், நோய் தீர்க்கும் முறைகள் பற்றியும் தமிழர் பன்னெடுங் காலத்திற்கு முன்பே

நன்குணர்ந்திருந்தனர் என்பதற்கு இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன. இவற்றின் துணை கொண்டு தமிழ்நாட்டு மருத்துவக் கலையின் வரலாற்றினை ஓரளவு துணியலாம்.

சங்க காலத்தில் மருத்துவ அறிஞர் பலர் வாழ்ந்தனர். அவர்களுள் சிலர் சிறந்த இலக்கியச் செல்வராயும் திகழ்ந்தனர் என்பதற்கு 'மருத்துவன் தாமோதரனார் என்னும் புலவரே சான்றாவார். புலவராய்த் திகழ்ந்தமையால் இன்று அவர் பெயர் மட்டும் அறியப்படுகின்றது. அன்று தமிழகம் முழுவதும் எண்ணற்ற மருத்துவர்கள் இருந்திருக்க வேண்டும். கிறித்துவுக்குச் சில நூற்றாண்டுகட்கு முன்பே தென்னகத்தில் அசோகரால் நிறுவப்பட்ட மருத்துவமனைகள் இங்கு இருந்தன என்பதற்கு அவருடைய கல்வெட்டுக்களே சான்றாகின்றன. மனிதர்க்கு மட்டுமின்றி விலங்குகட்கும் மருத்துவமனைகள் அவரால் நிறுவப்பட்டன. துன்பம் தரும் எதனையும் தமிழர் நோய் என்றனர். கோவூர்கிழார் நீரையும் உணவையும் 'இருமருந்து' எனப்பாராட்டுவார். மனிதனைப் பிணித்து அடிமைப்படுத்துவதைப் 'பிணி' என்று வழங்கிய தமிழரைப் பாராட்டல் வேண்டும். பசிப் பிணியைப் போக்க முன் வந்த வள்ளல்கள் பசிப்பிணி மருத்துவர் என்று பாராட்டப்பட்டனர். சோழன் நலங்கிள்ளி என்னும் மாமன்னன் வள்ளற் பெருமகன் பண்ணனைப் பாராட்டும் வகையில், "பசிப்பிணி மருத்துவனில்லம் அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே" எனப் பாணன் கூற்றில் வைத்துப் பேசுகின்றான்.

காதலும் ஒரு நோயாவதுண்டு. காதலியின் பார்வையே காதலனுக்கு நோய் தரவல்லது. பிணிக்கு மருந்து பிறவென்றாலும் காதல் நோய்க்கு மருந்து காதலியின் அன்புப் பார்வையேயாகும். நோய்த் துன்பத்தையும், அது தீர்க்கும் மருந்தையும் ஒருசேரப் பெற்ற காதலியை வியக்கும் தலைவன்,

**"இருநோக்கு இவளுண்கண் உளது ஒருநோக்கு**
**நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"**

என்றும்

**"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்னோய்க்குத் தானே மருந்து"**

என்றும் பாராட்டுகின்றான். இதனால் வள்ளுவர் காலத்தில் நோய்கள் பற்றியும், மருந்துகள் பற்றியும் தெளிவான அறிவு வளர்ந்திருந்தது என்று அறிகின்றோம். நோயைத் தீர்த்து இன்பமளிப்பதே மருந்து. அதாவது அது நோயை வெல்லும் ஆற்றல் கொண்டது. தீர்வு

காண முடியாத-வெல்ல முடியாத கூற்றுவனை “மருந்தில் கூற்றம்’ எனக் குறித்தனர் புலவர்.



ஓரூரில் யாண்டேனும் ஒரு மருந்து மரம் இருப்பினும் அ∴து அனைவர்க்கும் உதவும். அதன் இலை, பூ, காய், பட்டை, வேர் முதலிய அனைத்தாலும் பிறர்க்குப் பயன்படுகிறது. ஒப்புரவாளன் இத்தகு மருந்து மரத்துக்குச் சமமானவன் என்கிறார் வள்ளுவர்.

**“மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**

**பெருந்தகை யான்கட் படின்?”**

உடல் முழுவதும் புண் பெற்ற மற்றவனுடைய உடல் மக்களால் வெட்டப்பட்ட மரம் போலிருந்ததாக ஒரு புலவர் பாராட்டுகின்றார். “மருந்து கொள் மரத்தின் வாள்வடு மயங்கி”(புறம்:180) என்பது காண்க. மருந்து மரத்தின் பயனாக கொள்வோர் அ∴து சமூகப் பொதுச் சொத்தென்ற உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். அம்மரம் பட்டுப் போமளவிற்கு அம்மரத்திற்கு ஊறு செய்யலாகாது. இக்கருத்தினை ஒரு சான்றோர் “மரம்சா மருந்தும்கொள்ளார் மாந்தர்” என நற்றிணையில் குறித்துள்ளார். (நற்.226:1) மருத்துவன் ஒரு வாணிகனல்லன்: அவன் மனித குலத்தொண்டனாவான். எனவே அவன் தன்பாலுள்ள கலையை மறைத்தலாகாது அங்ஙனம் மறைத்தல் ஒரு கொடிய பாவம் என்பது பண்டைத் தமிழரின் கோட்பாடாகும்.

**“வருந்திய செல்வன் தீர்த்த திறனறி யொருவன்**

**மருந்துறை கோடலின் கொடிதே(கலி.129)**

என்னும் கலித்தொகையடிகள் இதற்குச் சான்றாதல் காண்க. நோயாளி நாவினைக் கட்டுப்படுத்த வேண்டும். மருத்துவன் நோயாளியின் விருப்பத்தையறிய வேண்டாது அவனுக்கு எது நல்லது என ஆராய்ந்து மருந்தளிக்க வேண்டும். நோயாளி கேட்டதைக் கொடாது மருந்தாய்ந்து கொடுத்த ‘அறவோன்’ சங்க இலக்கியத்தில் பேசப்படுகின்றான். (நற்.136) சங்க காலத்தில் போர்கள் அடிக்கடி நடந்தன. புண்பட்ட வீரர்கட்கு அக்காலத்து மருத்துவர்கள் மருந்துகள் பலவற்றைப் பயன்படுத்தி இருக்க வேண்டும். புண்களை ஊசி கொண்டு தைத்தல் வழக்கில் இருந்துள்ளது. சிரல் பெயர்ந்தாற் போல நெடுவள்ளூசி கொண்டு மார்பிலேற்பட்ட புண்ணைத் தைத்தமை பற்றிப் பதிற்றுப்பத்துப் பாடலொன்று குறிப்பதால் அறுவை மருத்துவமும் ஓரளவு வளர்ச்சியுற்றிருந்தமை அறியப்படும்.(42)

### 12.9.1 சோழர் காலம்:

சோழர் காலம் மருத்துவக் கல்விக்குச் சிறப்பளித்த காலமாகும். மன்னர்கள் சிலவிடங்களில் மருத்துவக் கூடங்களை அமைத்திருந்தனர். முதல் இராசேந்திர சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று பண்டாரவாடையில் உள்ளது. இலவச மருத்துவக் கூடம் ஒன்றிருந்ததை இதன் மூலம் அறிகின்றோம். தஞ்சையில் 'சுந்தர சோழ விண்ணகர் ஆதுர சாலை'என்னும் மருத்துவமனை இருந்ததாக இவ்வூரிலுள்ள இன்னொரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. திருமுக்கூடல் என்னும் ஊரிலுள்ள திருமால் கோயிலுள் வீரராசேந்திரன் பதினெட்டுப் படுக்கைகள் கொண்ட மருத்துவக் கூடத்தினை நிறுவி அதற்கு நிவந்த மளித்துள்ளான். அறுவை மருத்துவம் செய்யும் 'சல்லியக் கிரியை என்பான் ஒருவன் இருந்தான். மூலிகைகளைக் கொணர்வதற்கும் இருவர் அமர்த்தப்பட்டனர். மேலும் நோயாளிகளைக் கண்காணித்துதவுதற்குச் செவிலியரும் இருந்துள்ளனர் என்பது எண்ணத்தக்கதாகும். குறிக்கப்பட்ட அறுவை முறை சோழர் காலத்தில் வழக்கிலிருந்தது என்பதனை வீடணன் கூற்றாகக் கம்பர் கூறும்.

**"உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்தததன் உதிரம் போக்கிச்**
**சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினாற் றுயரம் தீர்வர்"**

என்னும் இலக்கியப் பகுதியும் அரண் செய்யும். பல்லவர் காலந்தொட்டே அறுவை முறை வழக்கில் இருந்தது என்பதற்கு வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாத அன்பு கொள்வது நோயாளனின் இயல்பு என்று குலசேகரர் கூறுவது கொண்டு உணரலாம்.

சோழர் காலத்தில் உத்தரமேரூரில் விடநோய் தீர்க்கும் மருத்துவன் ஒருவனுக்கு 'விஷஹரபோகம்' அளிக்கப்பட்டதைக் கல்வெட்டால் அறிகின்றோம். திருவாவடுதுறையில் விக்கிரம சோழன் ஆட்சியின்போது (கி.பி.1121) வெட்டப்பட்ட கல்வெட்டொன்றால் ஒரு மருத்துவமனையில் மாணாக்கர்கள் வியாக்ர பாதரின் அட்டாங்க இருதயத்தையும் சர்க்ககசமிதை என்னும் இன்னொரு நூலையும் கற்றதாக அறிகின்றோம்.

விசய நகர வேந்தர்களின் ஆட்சிக் காலத்தும் இந்த மருத்துவ முறைகள் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்தன. திருவரங்கக் கோயிலில் ஒரு மருத்துவமனையும் தன்வந்திரியார்க்குக் கோயிலும் இருந்ததாக அறிகின்றோம்.

## 12.9.2 மருத்துவ அறிஞர்களும் மருத்துவ நூல்களும்:

தமிழ்நாட்டு மருத்துவம் பச்சிலைகளையும் வேர்களையும் பெரிதும் அடிப்படையாகக் கொண்டது. சித்தர்கள் என்னும் அறிஞர்களே மருத்துவ நெறிகளை வகுத்தனர். பதினெட்டுச் சித்தர்களைத் தமிழகம் அறியும். இவர்களின் பெயரால் பல மருத்துவ நூல்கள் வழங்குகின்றன. இச்சான்றோர்கள் கண்டறிந்த மூலிகைகளை அவ்வற்றிற்குரிய மருத்துவப் பண்புகள் அடிப்படையில் பெயரிட்டழைத்தனர். வாதமடக்கி, வண்டு கொல்லி, கிரந்தி நாயகன், பொன்னாங்கண்ணி என்பவை இதற்குச் சான்றாகும். மஞ்சட்காமாலைக்குத் தமிழ்நாட்டுக் கீழக்காய் நெல்லியே கைகண்ட மருந்தாக இன்றும் கருதப்படுகின்றது. சித்த மருத்துவம் தமிழர்க்கே உரிய அரும்பெருஞ் செல்வமாகும். சித்த மருத்துவத்தில் கசாயம், குளிகை, சூரணம், இலேகியம், செந்தூரம் என்னும் பல மருந்துகள் உண்டு. இம்மருந்துகள் எளிமையானவை பழமையானவை தமிழ்நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவை. இவற்றின் நோக்கம் தடும்பு, தீர்வு, ஆற்றல் மீட்பு, ஆயுள் நீட்சி என்னும் நான்கு என்பர்.

மருத்துவத் துறையின் தலைவராகச் சிவபெருமானே கொள்ளப்படுகிறார். அவரே ஏழு லட்சம் பாடல் கொண்ட நூலை இயற்றியதாகக் கொள்வர். நந்தி, சனகர், சனாதர், சனானந்தர், சணற்குமாரர், திருமூலர், பதஞ்சலி, அகத்தியர், புலத்தியர், புசுண்டர், கருவூரார், தன்வந்திரி, சட்டைமுனி, தேரையர், யூகிமுனி ஆகியோர் பல மருத்துவ நூல்களை இயற்றினர் என்பர்.

மருத்துவ நூல்கள் இரசமணி, மந்திரம், மருந்து என்னும் மூன்றினைக் கூறுகின்றன. உப்பு, தீநீர், பட்டினி, உடற்பொருள், பாராணம், உலோகம், சத்து, இரசக்குளிகை, யோகம் என்னும் பத்து முறைகள் சொல்லப்படுகின்றன. மந்திரம் யோகத்திலும், மணி குளிகையிலும் அடங்கும் மூலிகை சூரணம் இலேகியம், மெழுகு என்னும் இவற்றைக் குறிக்கும். இவற்றுக்கு மக்களுறை' என்றும் பெயருண்டு. கட்டிகட்குத் தைலங்களும், சாராயத்தில் ஊறிய பிற மருந்துகளுமுண்டு. செந்தூரம், உண்மை, செய்நீர், தீநீர், சத்து, மணி முதலியன பஸ்பம் எனப்படும். இம்முறைகள் சித்தர் மருத்துவத்தில் மட்டுமே உண்டு.

உப்புக்கள் 25, பாடாணம் 64, உலோகம் 9, உலோகச் சத்துக்கள் 120, மூலிகைகள் 1008 என்று நூல்கள் கூறுகின்றன. நாடியைப் பார்த்து நோயை அறிவது சித்தர் முறையாகும். இடகலை, பிங்கலை, சுழுமுனை என நாடிகள் மூலிகையாம். வாதம், பித்தம், கோழை எனும் மூன்றின் நிலைகளும் நாடியினால் கண்டறியப்படும். அடுத்துக் கண்ணின் நிறம், நாவின் தன்மை, உடல், மலம், சிறுநீர், ரத்தம் ஆகியவற்றையும் கண்டறிவர். மருந்தினால் மட்டுமன்றி, பார்வை, நீரோதிக்கொடுத்தல், மந்திரம் சபித்தல் முறைகளாலும் நோய் தீர்ப்பதுண்டு, இன்றும் விடம்தீர்க்க மந்திரங்கள் பயன்படுகின்றன.

குறிப்பு

உறுதியான உடம்பில்தான் ஆன்மா செவ்வனம் உறையும் என்பது நம் பெரியவர்கள் கொள்கையாகும். எனவே உடம்பினைச் செம்மையாகப் போற்றுதல் பற்றி வற்புறுத்தியுள்ளனர்.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்படமெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே**

என்றும்,

**தேக யிருந்தல்லோ சித்தெல்லா மாடலாம்**
**தேக மிருந்தக்கால் சேரலாம் பூரணம்**
**தேக மிருந்தக்கால் செயலெல்லாம் பார்க்கலாம்**
**தேக மிருந்தக்கால் சேரலாம் முத்தியே"**

என்றும் திருமூலர் கூறுதல் காண்க.

பல்லவர் காலம் முதல் வடவர் முறைகளும் இங்கு இடம் பெற்றன என முன்னர்க் குறிப்பிட்டோம். சாரகம், சுசுருதம் தன்வந்திரி திகண்டு போன்றவை இங்கு வழங்கின. இவற்றுள் ஒப்புமுறை, எதிர்மறை, கலப்பு முறை என்னும் மூன்றையும் காணமுடியாது. ஆயுர்வேதம் என்பது சித்தர் முறையே இப்பெயருடைய நூல் என்றும் வடமொழியில் எழுதப்பட்டதில்லை என்பர். தன்வந்திரி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டினர். சுசுருதம் இவர் காலத்தவரே. இவருடைய நூலில் 125 அறுவைக் கருவிகள் கூறப்பட்டுள்ளன. சாரகர் அவ்விருவருக்கு முன்னிருந்தவர். இவர் எட்டுப் பெரிய நோய்கள்பற்றியும், அவற்றின் தீர்வு பற்றியும், நோய்களின் வரலாறு உணவு, சிறப்பு மருத்துவம் முதலியவை பற்றியும், பேசியுள்ளார். வாக்குப்பாதர் என்பவர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினர். இவர் எழுதியது அட்டாங்க இருதயமாகும். இவர் அறுவை முறைகள் பற்றி விரிவாகப் பேசுகின்றார். கி.பி.450 காலத்தைச் சேர்ந்த ஏட்டுச்சுவடியொன்று போகர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பூண்டின் மருத்துவப் பண்புகளை அ∴து ஆய்ந்து கூறுகின்றது. கண் நோய்க்கு உரிய மருந்துகளையும் இந்நூல் கூறியுள்ளது.

சித்தருடைய முறையைப் பின்பற்றி பஸ்பம், நாடிபார்த்தல், இப்பொழுது ஆயுர்வேதம், வைத்திய வல்லாதி பூரண சூத்திரம், நாடி நூல், இரத்தினச் சுருக்கம், இரண வைத்தியம், நயனவிதி, சரபேந்திர வைத்தியம் என்னும் நூல்கள் வழக்கிலுள்ளன. தமிழக அரசு பழைய சித்த மருத்துவ முறையினை மீண்டும் தழைக்கச் செய்ய அரும்பாடுபட்டு வருகின்றது. சென்னையில் சித்தமருத்துவ முறையைக் கையாளும் அண்ணா மருத்துவமனை' நிறுவப்பட்டுள்ளது. பட்ட வகுப்பிலும் சித்தர் முறை கற்பிக்கப்படுகிறது. அடையாற்றில் சித்த முறையையொட்டிய நூற்றுக்கணக்கான மருந்துகள் செய்யப்படுகின்றன. ஓய்வுபெற்ற நீதிபதி

திருவாளர் பலராமையா என்பவர் சிறந்த சித்த மருத்துவ அறிஞராக மதிக்கப்படுகின்றார். காலஞ்சென்ற தொழிலறிஞர் ஜி.டி. நாயுடு அவர்கள் இத்துறையில் சிறந்த ஆய்வுகள் நடத்தியுள்ளார். தாம் சென்ற வெளிநாடுகளில் இம்மருந்துகளைப் பரப்பியுள்ளார். அனுபவ மருந்துகள், பாப்பாவுக்குப் பாட்டி வைத்தியம் என்னும் நூல்களை எழுதியுள்ளார். டாக்டர் கதிரேசன் என்பவர் 'கொடியநோயும் தடுப்பு முறைகளும்' என்னும் நூலை எழுதியுள்ளார். இன்னும் பல அறிஞர்கள் தம்தம் நூல்களை வெளியிட்டு வருகின்றனர். ஆங்கில மருத்துவத்தின் செல்வாக்கால் பின்னடைந்துபோன சித்தர் மருத்துவம் மீண்டும் உயிர்பெற்றெழுந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

தமிழ்நாட்டுச் சித்த மருத்துவத்தின் பெருமையைத் தஞ்சை நகருக்கு அண்மையிலுள்ள அம்மாப் பேட்டையைச் சேர்ந்தவரும் காவல்துறை ஆய்வாளருமான சாம்பசிவ மண்ணையார் தொகுத்தளித்த மருத்துவ அகரமுதலியைக் கொண்டு நன்கு அறியலாம்.

Cyclopaedic dictionary of medicine, Chemistry, botony and allied sciences based on Indian medical science என்பது இதன் பெயர். இதில் 80,000 கலைச் சொற்களுக்கு மேல் அடங்கியுள்ளன. அவற்றின் பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. இது 1938 இல் வெளிவந்தது. சர்.ஏ. இலட்சுமண முதலியார், உ.வே.சாமிநாதய்யர், கா.சுப்பிரமணியபிள்ளை, தேவநேயப் பாவாணர் ஜி.டி.நாயுடு முதலான பல அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். 240 பக்கங்களில் அமைந்த இந்நூலின் முன்னுரை சித்தர்கள் பற்றியும், சித்த மருத்துவம் பற்றியும் விளக்குகின்றது. காஞ்சிபுரம் மாவட்டம் காட்டாங்குளத்தூரில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம் பல்கலைக் கழகம் இதனை மறுபதிப்புச் செய்துள்ளது.

## 12.10 நாடகக்கலை

கவின் கலைகளில் நாடகக் கலைக்குத் தனியிடமுண்டு செவிக்கும், கண்ணுக்கும், கருத்துக்கும், ஒரே நேரத்தில் விருந்தளிப்பது நாடகம், நாடகக் கலைஞர் அவ்வை சண்முகம் "நாடகம் கலைக்காக: நாட்டின் நாகரிகக் கண்ணாடி: பாமரர்களின் பல்கலைக் கழகம்: உணர்ச்சியைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும், தூய்மையையும் வெளிப்படுத்தி, மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை" என்பது முற்றும் பொருந்தும். இத்தகைய சிறப்புமிக்க அருங்கலை நம் நாட்டில் பன்னெடுங்காலமாக வளர்ச்சியுற்றுப் படிப்படியே முன்னேறி வந்துள்ளது. அவ்வரலாறு சுவை மிக்கதாகும்.

கி.மு மூன்றாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் தொல்காப்பியம், நாடக வழக்கினையும் உலகியல் வழக்கினையும் குறிப்பிட்டுள்ளது. நச்சினார்க்கினியர் 'புனைந்துரை வகை' என்பார். இளம் பூரணர் "நாடக

வழக்காவது, சுவை பட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்" என்றார். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையர்கள் "தற்காலத்துக் கருத்துப்படி நாடக நூல்கள் பெருவரவினவாகி அவற்றிலுள்ள வழக்கு நன்குணரப்பட்ட பின்னரே இந்தச் சூத்திரம் இயற்றபட்டிருத்தல் வேண்டும்" என்கிறார். அதனால் நாடகத்தின் பழமை நன்குணரப்படும். பரிபாடல் "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" என்கிறது. எனவே, முத்தமிழ் என்ற வழக்கு மிகத் தொன்மையானது என உணரப்படும். தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நாடகக் கலைஞர்கள் வெளிப்படுத்த வேண்டிய நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டு மெய்ப்பாடுகளையும், அவை தோன்றுதற்கு வேண்டும் நிலைக்களன்களையும் குறிப்பிட்டுள்ளது. வேடத்தாங்கி நடிப்போர் பண்டு 'பொருநர்' எனப்பட்டனர். பண்டு பல நாடக இலக்கண நூல்கள் வழங்கியுள்ளன. நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்' என்கிறது மணிமேகலை. "நாடக நன்னூல் நன்கு கடைப்பிடித்து" என்பதும் காண்க. முத்தமிழ் இலக்கணம் அகத்தியமாமாம். முறுவல், சயந்தம், குண நூல், செயிற்றியம், செயன்முறை, மதிவாணனார் நாடகத் தமிழ் என்னும் நூல்களை அடியார்க்கு நல்லார், யாப்பருங்கல உரையாசிரியர், இறையனார் களவியலுரைகாரர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நாடக இலக்கணங்கள் தோன்றுதற்குத் துணை செய்த நாடகங்கள் இருந்திருக்க வேண்டுமென்றோ! அன்று நாடகங்கள் நடிப்பதற்கே எழுதப்பட்டன: படிப்பதற்று அன்று. இக்கலையை வாழ்க்கைக் கருவியாகக் கொண்ட ஒரு பிரிவினர் இருந்தனர். நாடக நூல்கள் அவர்களிடமே இருந்தன. பிற்காலத்தில் அயலவர் ஆட்சி ஏற்பட்டது. முகமதியர் ஆட்சியில் நாடு அமைதியிழந்தது: எங்கணும் பஞ்சமும் நோயும் தலைவிரித்தாடின. கோயில்கள் செல்வாக்கிழந்தன. நாடகக் கலைஞர்கள் புறக்கணிக்கப்பட்டனர். எனவே, அவர்கள் தம் தொழிலைக் கைவிட்டனர். நாடக இலக்கண நூல்களில் சிற்சில பகுதிகளை உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். இவற்றின் வழியே அக்கால நாடகத்தின் இயல்புகளை ஒருவாறு உணரலாம்.

நடிகர் காட்ட வேண்டிய 24 வகையான மெய்ப்பாடுகளைப் பற்றி அடியார்க்கு நல்லார் மேற்கோளுடன் காட்டுகிறார். வெகுண்டோன் அச்சமுற்றோன், களித்தோன், இன்புற்றோன், செத்தோன், தெய்வமுற்றோன், மழையில் நனைந்தோன், பனித்தலைப்பட்டோன் முதலியவர் காட்டத்தரும் 24 அவிநயங்களைக் கூறுகிறார். இனி நாடகத்துக்குரிய வரிக்கூத்துக்கள் பற்றியும் பேசுகிறார். ஒருவர் கூட்டாமல் தானே வந்து தோன்றும் கண்கூடுவரி, நகை முகம் காட்டி வருவென் வந்து போகெனப் போகும் காண்வரி, உண்மை வடிவம் தோன்றாது மாறுவேடமிட்டு வரும் உள்வரி, தலைவனுடன் சேராது தனியே தோன்றும் புறவரி, இருசாரார்க்கும் நடுவே நடுநாயகமாக நடிக்கும் கிளர்வரி, தன்னுடைய மனக்கவலையைச் சுற்றத்தார்க்கு

வெளிப்படுத்தும் தேர்ச்சிவரி, தன் வருத்தத்தைப் பலரும் காண நடிக்கும் காட்சிவரி, மிகத் துன்பமுற்றுப் பிறர் எடுத்துக் கொள்ளுமாறு நடிக்கும் எடுத்துக்கோள் வரி ஆகியவற்றையும், நாடகத்தில் இடம்பெறும் உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல் ஆகியவை பற்றியும் கூறுகிறார்.



**குறிப்பு**

இனி, நாடகம் என்னும் சொல் நாட்டியம் என்னும் பொருளிலேயே பண்டு ஆளப்பட்டது என்பதனைப் பல சான்றுகளால் அறியலாம். ஆடல் மகள் நாடக மகள் என்று கூறப்பட்டால் "நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த விசிவீங்கு இன்னியம்" "பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்". "நாடகம் மேத்தும் நாடகக் கணிகை", "நாடகம் உருப்பசி நல்காளாகி" என்னும் இலக்கியக் குறிப்புக்கள் சான்றாம். நாடகம் கூத்தெனவும் வழங்கப்பட்டது. ஒரு பாடலைப் பாடி அறிய வரும் உணர்ச்சியை அவிநயத்தால் காட்டுவதும் ஒருகதையை எடுத்துக்கொண்டு அதனை ஒருவர் நடித்துக் காட்டுவதுமாகிய இரு கூத்துக்கள் இருத்ததென அறியலாம். கதை தழுவிய கூத்தே நாடகமெனப்பட்டது போலும்,

**"ஆடற் கூத்திகளோடு அவிநயந் தெரிவோர்**

**நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்**

என்பதில் ஆடற் கூத்தும் நாடகமும் வெவ்வேறாகக் கூறப்பட்டுள்ளன.

**"வாயிற் கூத்தும் சேரிப் பாடலும்**

**கோயில் நாடகக் குழுக்களும்"**

என்ற பெருங்கதைக் குறிப்பும் இதனையே கூறிற்றுபோலும் பண்டு நிழற்பாவை கூத்தும், பொம்மலாட்டமும் பயில வழங்கினவாதல் வேண்டும்.

கூத்தும் நாடகமும் நடக்கும் களம் ஆடுகளம் எனப்பட்டது. ஆடுகளத்தின் அமைப்பும், அதில் கையாளப்பட்ட திரைவகைகளும் சிலம்பில் விளக்கப்பட்டுள்ளன.

**"ஊரகத்தாகி உளைமான் பூண்ட**

**தேரகத் தோடும் தெருவுமுகம் நோக்கிக்**

**கோடல் வேண்டும் ஆடரங்கதுவே"**

(சிலம்பு அரங்கேற்று மேற்கோள்)

என்ற குறிப்பால் யாவரும் காணத்தக்க இடத்தில் அரங்குகள் அமைக்கப்பட்டதை அறியலாம். அரங்கம் அளக்கும் அளவு கோல் 24 விரல் அளவிலிருந்து. ஏழு கோல் அகலமும், எட்டுக் கோல் நீளமும்,

ஒரு கோல் உயரமும் உடையதாகவும் உத்தரப் பலகைக்கும் அரங்கின் பலகைக்கும் இடையே நாற்கால் இடைவெளி கொண்டதாகவும் இரண்டு வாயிலுடையதாகவும் அரங்கு இருந்தது. இதில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி எனும் மூவகை எழினிகள் இருந்தனவாம்.

கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் நடிக்கப்பட்ட நாடகங்களின் பெயர்களை அறிகிறோம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஆண்டுதோறும் வைகாசிப் பெருவிழாவில் 'இராசராச விஜயம்' என்னும் நாடகம் நடிக்கப்பட்டது. திருமுதுகுன்றனான விசய ராசேந்திர ஆச்சாரியன் இதற்காக நிவந்தம் பெற்றான். திருப்பாதிரிப் புலியூரில் உள்ள சிவன் கோயில் 'பூம்புலியூர்" நாடகம் நடிக்கப்பட்டது. இதற்கென அழகியபாண்டியன் கூடமெனும் அரங்கம் இருந்தது. முதற் குலோத்துங்கன் பற்றிய 'குலோத்துங்கசோழ சரிதை' என்னும் நாடகம் இருந்ததையும் கல்வெட்டால் அறிகிறோம்.

முகமதியர் ஆண்டபோது நாடு அல்லலுற்றது. கருநாடக நவாபுகளும் ஐரோப்பியரும் நாட்டின் அமைதியைக் குலைத்தனர். எனவே நாடகம் அருகிற்று. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பிறகே நாட்டில் அமைதியேற்பட்டது. பலவகை நாடகங்கள் தோன்றலாயின. நாயக்கர் காலத்திலேயே இசையோடு கலந்த நொண்டி நாடகம், குறவஞ்சி நாடகம், பள்ளு நாடகம் ஆகியவை தோன்றின. திருக்கச்சூர் நொண்டி நாடகம், திருக்குற்றாலக் குறவஞ்சி முக்கூடற்பள்ளு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. 18ஆம் நூற்றாண்டில் சீர்காழி, அருணாச்சலக் கவிராயர் இராமசரிதத்தை நாடகமாக்கினார். கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரிதக் கீர்த்தனையும் குறிப்பிடத்தக்கதாகும். கி.பி 19ஆம் நூற்றாண்டில் நாடகம் நன்கு வளரத் தொடங்கிற்று. மேல் நாட்டு நாடகங்களைப் படைத்ததோடு 'நாடகவியல்' என்னும் இலக்கணத்தையும் எழுதினார். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை செகப்பிரியரின் நாடக அமைப்பினையொட்டித் தமது மனோன்மணீயத்தை இயற்றினார். பல சமயத்தவரும் நாடகம் எழுதினர். குறிப்பிடத்தக்கவை அல்லி பாதுஷா, அப்பாசு நாடகம், ஞானத்தச்சன் முதலியவையாகும்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பம்மல் சம்பந்த முதலியார் நாடகத்தின் தந்தையெனச் சிறப்பிக்கப்படுபவர். இவர் தொண்ணூறு நாடகங்கட்கு மேல் எழுதியுள்ளார். செகப்பிரியர் நாடகங்களை மொழி பெயர்த்துள்ளார். காளிதாசனின் 'மாளவிக்கினிமித்திரம், இரத்தினாவளி' ஆகியவற்றை மொழிபெயர்த்தார். மனோகரா, லீலாவதி, வேதாள உலகம், சபாபதி, கள்ளர் தலைவர் ஆகியவை பல சபையினரால் நடிக்கப்பட்டன. 'நாடக மேடை நினைவுகள்', 'நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி?" என்னும் நூல்களையும் எழுதியுள்ளார். நாடகக் கலைஞராக நடித்ததோடு ஆர்.கே. சண்முகம் செட்டியார். சத்தியமூர்த்தி, சி.பி.இராமசாமி ஐயர்

ஆகியோரையும் நடிக்கச் செய்தார். 'சுகுண விலாச சபை' இவரால் நிறுவப்பட்டதாகும்.



நாடக உலகின் இமயமலையாகப் பாராட்டப்படுபவர் தவத்திரு சங்கரதாசு சுவாமிகளாவார். நாற்பது நாடகங்கட்கு மேல் எழுதிய பெருமை இவருக்குண்டு. அபிமன்யு சுந்தரி, பவளக் கொடி, சீமந்தனி, சதி அநுசுயா, பிரகலாதன், சிறுத்தொண்டர், வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி என்னும் புராண நாடகங்களையும் வடமொழி நாடகமான 'மிருச்சகடி' ஆங்கில நாடகங்களான ரோமியோ ஜுலியத்து, சிம்பலைன் ஆகியவற்றையும் நாடகமாக்கினார். மணிமேகலை, பிரபுலிங்க லீலை ஆகியவற்றையும் நாடகமாக்கினார். இவரது நாடகங்களில் குறுந்தொகை, நற்றிணை, திருக்குறள் ஆகியவற்றின் நறுமணம் கமழும். வெண்பா, கலித்துறை, விருத்தம், சந்தம், வண்ணம், கும்மி முதலிய பலவகையான பாடல்கள் இவற்றில் இடம்பெறும், சமரச சன்மார்க்க நாடக சபையை 1910இல் ஏற்படுத்தினார். மாரியப்ப சுவாமி. கிட்டப்பா ஆகியோர் இதில் இருந்துள்ளனர்.

பல்வேறு நாடக சபைகள் நாளடைவில் உருவாயின. கலியாணராமய்யர், இராமுடுஅய்யர், கோவிந்தசாமி நாயுடு, வள்ளி வைத்தியநாதய்யர், அருந்தநாராயண ஐயர், வேலு நாயர், அரங்கசாமி நாயுடு, முனுசாமி நாயுடு, பாலாமணி, பாலாம்பாள், இராசாம்பாள், சாரதாம்பாள், அரங்கநாயகி, வி.பி.சானகி முதலியோர் பல நாடக சபைகளை நிறுவி இக்கலையை வளர்த்தனர். நவாபு இராசமாணிக்கம் பிள்ளை நாடகவுலகில் என்றும் மறக்க முடியாதவராவார். கும்பகோணம் வாணி விலாச சபை, திருச்சி ரசிகரஞ்சனி சபை, தஞ்சை சுதர்சன சபை, குமரகான சபை, சென்னை, செகரட்டரியேட் சபை ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். நாடகத் துறைகள் புதிய பாதை வகுத்தோர் தஞ்சை நவாப்கோவிந்தசாயிராவ் அவர்கள் என்பார். சம்பந்த முதலியார் கும்பகோணம் நடேச தீட்சிதர் தொடங்கிய கலியாணராமையர் நாடகக் குழுவும் குறிப்பிடத்தக்கதாகும்.

முதலில் புராண சம்பந்தமான நாடகங்களே தோன்றின. பாரத விலாசம், சகுந்தலை விலாசம். மதுரை வீரன் விலாசம், சித்திராங்கி விலாசம், அரிச்சந்திர விலாசம் என அவை அழைக்கப்பட்டன. பிறகு பலவகை நாடகங்களும், சமூக நாடகங்களும் உருவாயின. முதன் முதலாக மேடையில் நடிக்கப்பட்ட சமூக நாடகம் காசி விசுவநாத முதலியாருடைய டம்பாச்சாரி விலாசமாகும். பிரம்மசமாச நாடகம், தாசில்தார் நாடகம் என்பவையும் நடிக்கப்பட்டன. தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் தேசிய உணர்ச்சியூட்டும் பல நாடகங்களை எழுதி அரங்கேற்றினார்.

"கதரின் வெற்றி" யும், நாகபுரிப் போராட்டத்தையொட்டிய "தேசியக்கொடி"யும் புகழ்மிக்கவை. இலாது நாடகம் இலண்டனிலேயே

நடிக்கப்பட்டது. பதிபக்தி, பம்பாய், மெயில், கதர் பக்தி ஆகியவையும் இவருடைய நாடகங்களே. நாடக மறுமலர்ச்சியின் தந்தை திரு.எம்.கந்தசாமி முதலியார். இராஜம்மாள், இராசேந்திரா, சந்திரகந்தா ஆகிய புதினங்களை இவர் நாடகமாக்கினார். காட்சிகளை அமைப்பதில் பெருவெற்றி கண்டவர் "கன்னையா". இவரது தசாவதாரம், ஆண்டாள் பகவத் கீதை ஆகியவை கண்ணையும் கருத்தையும் கவர்வன. அற்புதமான காட்சிகளை மேடையிலே அமைத்து வெற்றி கண்டவர் இவர்.

இருபதாம் நூற்றாண்டு எண்ணற்ற நாடக ஆசிரியர்களைத் தந்தது. திரு.கு.சா.கிருஷ்ணமூர்த்தியின் அந்தமான் கைதி, ப.நீலகண்டனின் முள்ளில் ரோஜா, ஸ்ரீ மங்களகான சபா நடத்திய இழந்த காதல், விதவையின் கண்ணீர் முதலியவை புகழ்மிக்க துன்பியல் நாடகங்களாகும். என்.எஸ்.கே. நாடகக்குழு நாம் இருவர். பைத்தியக்காரன் என்னும் சீர்திருத்த நாடகங்களை நடத்திற்று. நாரண துரைக்கண்ணனின் "உயிரோவியம்" மு.வ.வின் டாக்டர் அல்லி, அரு.இராமநாதனின் 'இராசராசசோழன்' பேரறிஞர் அண்ணாவின் நீதிதேவன் மயக்கம், கலைஞர் கருணாநிதியின் மந்திரி குமாரி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் முதலிய வரலாற்று நாடகங்கள் புகழ்மிக்கவை. ஔவை டி.கே.சண்முகம், அவரது இளவல் டி.கே.பசுவதி ஆகிய இருவரும் நாடகக் கலைக்குப் பெருமை தேடித்தந்தார்கள். அவர்களது இராசராசசோழன் மறக்க முடியாததாகும். மனோகரின் 'இலங்கேசுவரன்', 'துரோணர்' என்னும் நாடகங்கள் மக்களுள்ளத்தில் இடம் பெற்றவை. சகஸ்ரநாமம், என்.எஸ். கிருஷ்ணன், கே.ஆர். இராமசாமி, எஸ். இராசேந்திரன், எம்.ஜி. இராமச்சந்திரன், சிவாஜிகணேசன் ஆகிய திரைக்கலைஞர்கள் நாடக மன்றங்களை வைத்துக் கலை வளர்த்தனர். இன்று ஓரங்க நாடகங்களும், நாட்டிய நாடகங்களும் வானொலி நாடகங்களும் வளர்ந்து வருகின்றன.

தற்காலச் சான்றோர் சிலர் உரைநடையிலும் செய்யுளிலும் பல நாடகங்களைப் படைத்துள்ளனர். புலவர் பழனி அவர்களின் 'அனிச்ச அடி', கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர், பாவலர், பாலசுந்தரனார் அவர்களின் 'புலவர் உள்ளம்', 'புரவலர் உள்ளம்', வேள்எவ்வி' ஆகிய செய்யுள் நாடகங்கள் படிக்கவும் மேடையில் நடிக்கவும் ஏற்றவை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழத்துறைப் பேராசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் 'திருமலை நாயக்கர்' போன்ற நாடகங்களை எழுதியுள்ளார். வள்ளல் நாடகங்கள் சிலவும் இவரால் எழுதப்பட்டன. மேலும் 'நாடகக் கலை' என்னும் திங்களிதழையும் நடத்தினார்.

## 12.11 தொகுத்துக் காண்போம்

1. மரக் கோயில், குகைக் கோயில்கள், மாடக் கோயில்கள் குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
2. ஓவியக் கலை குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
3. பண்டைக் காலத்தில் இசைப்பாணர் இசைக்கலையில் பெற்ற இடம் குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
4. தமிழர்களின் மருத்துவக் கலை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 12.12 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. மாடக் கோயில்கள் குறித்து விளக்குக.
2. தென்னிந்திய ஓவியம் குறித்து விளக்குக.
4. நாடகத்தின் ஆடுகள அமைப்பு, அதில் கையாளப்பட்டுள்ள திரை வகைகள் குறித்து விளக்குக.

## 12.13 மேலும் அறிந்துகொள்ள

மயிலை சீனி.வேங்கடசாமி - தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

கு.சேதுராமன் - தமிழகச் சமூதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு

## கூறு:13

# நாகரிகம் பண்பாடு விளக்கம் தமிழர்களின் அறவாழ்வியல் - விருந்தோம்பால் பண்பாடு

## 13:1முன்னுரை

நாகரிகம் என்பது மக்களின் செம்மைப்படுத்தப்பட்ட வாழ்க்கையைக் குறிக்கும். நகரங்கள் முதன் முதலில் தோன்றியது உழவுத் தொழிற்குச் சிறந்த மருத நிலத்திலேயேயாகும். உழவுத் தொழிலும் நிலையான குடியிருப்பும் ஊர்ப் பெருக்கமும் நாகரிகம் தோன்றுவதற்குப் பெரிதும் துணை செய்தன. இதன் விளைவாகப் பண்பட்ட, அறத்துடன் கூடிய செயல்பாடுகள், விருந்து பேணல் போன்றவை தமிழர்களில் வாழ்வில் பெரிதும் இடம்பெற்றன.

## 13:2 குறிக்கோள்கள்

- நாகரிகம் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

- பண்பாடு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
- தமிழ் நாட்டு அரசர்கள் அறத்தின் வழியே வாழ்ந்தமை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
- தமிழர்களிடம் விருந்தோம்பல் இடம்பெறும் முறை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 13.3 நாகரிகம் பண்பாடு விளக்கம்

**குறிப்பு**

நாகரிகம் என்பது மக்களின் திருந்திய வாழ்க்கை. நாகரிகம் என்னும் சொல் நகரம் என்னும் சொல்லின் திரிபாகும். (நகர் + அகம் = நகரகம், நகரகம் -நகரிகம்- நாகரிகம்) எல்லா நாட்டிலும் மாந்தர் முதல் நகர நிலையிலேயே நாகரிமடைந்துள்ளனர். அதனால் நகரப் பெயரினின்று நாகரிகப் பெயர் தோன்றியுள்ளது. சிற்றூர்கட்கும், நகரங்கட்கும் எவ்வளவோ தொடர்பேற்பட்டுள்ள இக்காலத்தும், நாகரிகமில்லாதவன் நாட்டுப்புறத்தான் என்றும் பட்டிக் காட்டான் என்றும் இழித்துக் கூறப்படுதலையும் நகரப்பதி வாழ்நர் என்னும் சொல் நாகரிகமுள்ளோரைக் குறித்தலையும் இன்றும் காணலாம்.

ஆங்கிலத்திலும், நாகரிகத்தைக் குறிக்கும் இலத்தீனச் சொல் நகரப் பெயரினின்று தோன்றியதே. (L.Civitas city or city –state, CIVIS citizen,L.civills-E. civil-civilize.)

நகரங்கள் ஆற்றங்கரைகளில் தோன்றின உழவுத் தொழிலால் வேளாண்மையும், பக்கத் தொழில்களும், பிறதொழில் செய்வார்க்குப் போதிய உணவும், வாணிகமும் ஏற்பட்டன. நிலையாகக் குடியிருப்பதனால் உழவன் குடியானவன் என்னப் பெற்றான். இல்வாழ்வான் என்று திருவள்ளுவராற் சிறப்பித்துச் சொல்லப் பெற்றவனும் உழவனே. இல்வாழ்வானைக் குறிக்கும் husbondi (house-dweller)என்னும் பழ நார்வேயச் சொல்லினின்று உழு அல்லது பயிர் செய் என்று முன்பு பொருள்பட்ட husband என்னும் ஏவல் வினைச்சொல்லும் உழவனைக் குறிக்கும் husbandman என்னும் பெயர்ச் சொல்லும் உழவுத் தொழிலைக் குறிக்கும் husbandry என்னும் தொழிற் பெயரும், ஆங்கிலத்தில் தோன்றியிருப்பது இங்கு கவனித்தக்கது. நிலையான குடியிருப்பால் ஒழுக்கப் பொறுப்பும், ஊர்ப் பெருக்கமும் ஆட்சியமைப்பும் ஏற்பட்டன. இதனால், மருத நிலமும் உழவுத் தொழிலும் எங்ஙனம் நாகரிகத்தைத் தோற்றுவித்தன என்பது தெளிவாகும்.

நகர் என்னும் சொல், முதன் முதல், ஒரு வளமனையை அல்லது மாளிகையையே குறித்தது.

**நகர் = 1.வளமனை**

**"கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்"** (புறம்.70)

**2. மாளிகை**

**"பாழி யன்ன படியுடை வியனகர்"** (அகம்.15)

மாளிகை அரசனுக்கே சிறப்பாகவுரியதாதலால், நகர் என்னும் சொல் அரண்மனையையும் அரசன் மனை போன்ற இறைவன் கோயிலையும் பின்பு குறிக்கலாயிற்று. இதனை

**"முரைசுகெழு செல்வர் நகர்" (புறம்.127)**

**"நிதிதுஞ்சு வியனகர் (சிலப்.27.200)**

**"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" (புறம்.6)**

என்பன போன்ற அடிகள் விளக்கும்.

சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் மண்டபம் மாளிகை போன்றிருத்தலால், திருத்தக்கத் தேவர், நகர் என்னும் சொல்லை மண்டபம் என்னும் பொருளில் ஆண்டார்.

**"அணிநகர் முன்னினானே" (சீவக.701)**

நகர் என்னும் சொல் மனையைக் குறித்தலாலேயே மனை, இல், குடி என்னும் சொற்கள் போல் இடவாகு பெயராய் மனைவியையும் குறிக்கலாயிற்று.

**"வருவிருந் தோம்பித் தன்னகர் விழையக்கூடி"(கலித்.8)**

மாளிகை முதலில் அரசனுக்கே உரிதாயிருந்ததினாலும், அரசன் வாழும் ஊர் பேரூராயிருந்ததினாலும் நகர் என்னும் சினையாகு பெயராய்க் கோநகரையும் பேரூரையுங் குறித்தது. இன்றும், கூரைவீடுகள் நிறைந்த ஒரு நாட்டுப்புறத்து ஊருடன் காரை வீடுகள் நிறைந்த ஒரு சிற்றூர் அல்லது பேரூரை ஒப்பு நோக்கினால், பின்னது நன்கு விளங்கித் தோன்றும். பண்டைக் காலத்திற் பேரூர்களே காரை வீடுகளைக் கொண்டிருந்தன.

**"நெடுநகர் வினைபுனை நல்லில் (புறம்.23)**

என்பதில், நகர் என்னும் சொல் பேரூரைக் குறித்தது.

நகர் என்னும் சொல், தனி மாளிகையையும் அதனையுடைய பேரூரையுங் குறித்ததினால், இம்மயக்கை நீக்கும் பொருட்டு, பேரூரை மட்டும் குறித்தற்கு இகரவீறு கொண்ட நகரி என்னும் சொல் எழுந்தது. நகரை (மாளிகையை) யுடையது நகரி.

பட்டி என்பது மாட்டுப் பட்டியுள்ள சிற்றூரைக் குறித்தது போன்றே, நகா் என்பதும், மாளிகையுள்ள பேரூரைக் குறித்தது. பதி, என்னும் சொல்லும் வீட்டையும் நகரையும் குறித்தல் காண்க. நகா் என்னும் சொல், அம் என்னும் பெருமைப் பொருட் பின்னொட்டுப் பெற்று நகரம் என்றாகும். அதுவும் தனி மாளிகையையும் பேரூரையும் குறிக்கும். 'அம்' ஈறு பெருமைப் பொருளுணா்த்தலை, இல்லம் நிலையம் மதியம் (முழுநிலா), விளக்கம், முதலிய சொற்களால் அறியலாம்.

**குறிப்பு**

**"மேழிவல னுயா்ந்த வெள்ளை நகரமும்"(சிலப்.14:9)**என்பது சிலப்பதிகாரம். நகா், நகரி, நகரம் என்னும் முச்சொல் வடிவும் முதலில் அரசன் வாழும் தலைநகரையும் அவன் சென்று தங்கும் கோநகரையும் குறித்து. பின்பு எல்லாப் பேரூா்களையும் பொதுப்படச் சுட்டலாயின. அதனால் அரசன் இருக்கும் அல்லது தங்கும் நகரைத் தலை அல்லது கோ என்னும் அடை கொடுத்துக் கூற வேண்டியதாயிற்று.

**கோநகா் எதிா்கொள" (சிலப்.27:255)**

அரசனுக்கும் தெய்வத்திற்கும் ஒருபுடை யொப்புமையிருத்தலால், கோயில் என்னும் சொற்போன்றே கோநகா் என்னும் சொல்லும் இருவா் இருக்கையையும் குறிக்கும்.

**கோயில்-1 அரண்மனை,**

**"கோயில் மன்னனைக் குறுகினள்(சிலப்.27:255)**

(கோ-அரசன்-இல்-வீடு)

**2. தெய்வப் படிமை யிருக்கை**

கோநகா்-கோயில்

**"மாயோன் கோநகா் எட்டும்" (கந்தபு.திருநகரப்.88)**

பெருநகரை நகரம் என்று சொல்லினும் போதும். ஆயின். அவ்விலக்கணம் இன்று அறியப்படாமையால், மாநகா் என்று சொல்ல வேண்டியதாகின்றது.

இங்ஙனம் நாகரிகம் என்ற சொற்கு மூலமான நகா் என்னும் சொல் தூய தமிழாயிருப்பினும் நகர என்னும் வடசொல்லின் திரிபாகச் சென்னைப் பல்கலைக்கழக அகர முதலியில் (அகராதியில்) காட்டப்பட்டுள்ளது. நகா் என்னும் மூல வடிவம் வடமொழியிலில்லை. அதன் திரிபான நகரம் என்னும் வடிவே உள்ளது. நகரி என்னும் வடிவம் வடமொழியில் (நகா் என்று ஈறு நீண்டு) வழங்கினும். அதன் ஈற்றிற்கு அங்குத் தனிப்பொருளில்லை.

நகர் என்னும் சொல்லிற்கு விளங்கிய வெண்மையென்பதே வேர்ப்பொருளென்பதை, வெண்பல்லைக் குறிக்கும் நகார் என்னும் சொல்லையும், மாளிகையின் விளங்கிய தோற்றம் அதன் வெண்சாந்தினால் ஏற்பட்டதென்பதை,

"புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்து" என்னும் புறநானூற்றடியும் (378):

**"வருங்குன்றமொன்றுரித் தோன்தில்லை யம்பல வன்மலயத்**
**திருங்குன்ற வாணர் இளங்கொடி யேயிடர் எய்தலெம்மூர்ப்**
**பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்**
**கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்கும்**
**கனங்குழையே"**

என்னும் திருகோவையார் செய்யுளும் நன்கு விளக்கும்.

## 13.3.1 பண்பாடு என்னும் சொல் விளக்கம்

பண்படுவது பண்பாடு, பண்படுதல் சீர்ப்படுதல், அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்டஅல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும் திருத்திய தமிழைப் 'பண்பட்ட செந்தமிழ்' (தனிப்பாடல்) என்றும், திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட வுள்ள மென்றும், சொல்வது வழக்கம்.

பண் என்னும் பெயர்ச் சொற்கு மூலமான பண்ணுதல் என்னும் வினைச் சொல்லும், சிறப்பாக ஆளப்பெறும்போது பல்வேறு வினைகளைத் திருந்தச் செய்தலையும் பல்வேறு பொருள்களைச் செவ்வையாய் அமைத்தலையும் குறிக்கும்.

**பண்ணுதல்-1. நிலத்தைத் திருத்துதல்**

(பண்ணப்பட்ட மருதநிலம் பண்ணை)

**2. ஊர்தியைக் கருதிப்படுத்துதல்**

"பூதநூல் யானையொடு புனைதேர் பண்ணவும்" (புறம் 12)

**3. சுவடித்தல் (அலங்கரித்தல்)**

**"பட்டமொடிலங்கல் பண்ணி"** (சூளா.கல்யா.14)

**4. இசையைச் சமைத்தல்**

**"பண்ணல் பரிவட்டணை யாராய்தல்"**

(சீவக.657, உரை)

5. **பண் அமைத்தல்**

**"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்"**

**6. சமைத்தல்**



**"பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவிர்"** (மலைபடு.417)

**குறிப்பு**

'செய்' என்னும் வினைச் சொல்லினின்று, திருந்த அல்லது அழகாய்ச் செய்யப் பெற்றது என்னும் இயற்றமிழ்ப்பாட்டின் பெயரும் தோன்றியிருப்பது போன்றே; பண் என்னும் இசைத் தமிழ் அமைப்பின் பெயரும்; தோன்றியுள்ளன.

பண்பாடு பல பொருட்கு உரியதேனும், நிலமும் மக்கள் உள்ளமும் பற்றியே பெருவழக்காகப் பேசப் பெறும். ஆங்கிலத்திலும் (culture) என்னும் பெயர்ச்சொல் சிறப்பாக நிலப் பண்பாட்டையும் உளப் பண்பாட்டையும் குறிப்பது கவனிக்கத்தக்கது. Cultivate என்னும் வினைச்சொல்லும் அங்ஙனமே. இவ்விருவகைப் பண்பாட்டுள்ளும், மக்களைத் தழுவிய உளப்பண்பாடே சிறப்பாகக் கொள்ளவும் சொல்லவும் பெறும்.

உள்ளம் பண்படுவது பெரும்பாலும் கல்வியாலாதலால், பண்பாடு கல்வி மிகுதியையும் குறிக்கும்.

தமிழில் தன்மையைக் குறிக்கும் சொற்களுள், இயல்பு என்பது இயற்கையான தன்மையையும், பண்பு என்பது பண்படுத்தப் பெற்ற நல்ல தன்மையையும் குறிக்கும்.

## 13:4 தமிழ்களிலும் அற வாழ்வியல்

அறம் பற்றி மக்களிடையே மிகப் பழங்காலந்தொட்டே பல கருத்துகள் பரவலாக நிலவி வருகின்றன. விலங்கிலிருந்து வேறுபட்டு மனிதன் தன்னை, மனிதத் தன்மையோடு வெளிப்படுத்திக் கொள்ளப் பயன்படும், துணைபுரியும் கருத்துகள் குணங்கள் எல்லாம் அறம் சார்ந்தவை. அவ்வகையில் அறம் நிலவி வரும் கருத்துகள் அனைத்தும் நாடு, இனம், மொழி, காலம் அனைவருக்கும் பொதுவாக அமைந்துள்ளன. பண்டைத் தமிழர் அறத்தால் உண்டாகும் இன்பத்தில் அசைவிலா நம்பிகை கொண்டவராய், அறத்தால் மட்டுமே வாழ்க்கை உயர்வு பெறும் என்ற எண்ணம் கொண்டவராய்த் திகழ்ந்தனர்.

'ஒரு மனிதன் ஒரு சமூகத்தைச் சேர்ந்து வாழ்வதற்கும், தனியே நின்று தனிமனிதனாக இயங்குவதற்கும், அத்தகைய மனிதனுடைய பண்பு நலன் உருவாக்கிவைக்கும் குறிக்கோள்களுக்கும், நோக்கங்களுக்கும், செல்வாக்குகளுக்கும், நிலையங்களுக்கும், 'அறம்' என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டமாக அறம் விளங்குகிறது.

‘மக்கள் சமுதாயத்தில் இணைந்து மனிதர்களாகத் திகழவும் பிறருக்கு இன்னா நினையாது அறம் நினைந்து வாழவும் தமக்கென்று சில வழிமுறைகளை அனைவரும் ஏற்கும் வகையில் அமைத்துக் கொள்வர். அனைவருக்கும் பயன்படக்கூடியது. அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது எதுவோ அது ஒவ்வொன்றும் அறமாகும். இவ்வாறு சமுதாய ஒழுங்கமைப்பை அடிப்படையாகக் கொண்டு சான்றோர் வகுத்த சில சட்ட திட்டங்களே அறநெறிக் கோட்பாடாகும்.

மாசற்ற இயல்புக்குப் பெயர்தான் சமூகம் ஒழுங்காக இயங்குவதற்பொருட்டு மக்களால் வரையறுத்துக் கொள்ளப்பட்ட மேல்வரிச் சட்டம்தான் அறம்.

## 13.4.1 தமிழ் இலக்கியத்தில் அறம்

தனி மனிதனையும், சமுதாயத்தையும் செந்நெறிப்படுத்தும் ஒழுக்க நெறியாக அறத்தைத் தமிழர் கருதினர். இம்மண்ணுலக வாழ்வு சிறப்பதற்கும், விண்ணுலகம் அடைவதற்கும், மனப்பண்பிற்கும் அறவாழ்வு இன்றியமையாதது என்ற எண்ணம் அவர்களுள் இருந்து வந்தது. எனவே, இலக்கியம் தோன்றிய காலந்தொட்டே அறத்தை வலியுறுத்தவும், கடைப்பிடிக்கவும் புலவர்களும் மக்களும் முனைந்தனர்.

## 13.4.2 அறத்தின் வரைவிலக்கணம்

“ஆறு”, என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்ததே, “அறம்” “ஆறு”, என்னும் அடிச்சொல்லிற்கு, “அறுத்துச்செல்”, “வழியை உண்டாக்கு”, உருவாக்கு”, “துண்டி”, “வேறுபடுத்து”, என்பன போன்ற பல பொருள்கள் உள்ளன. “அம்”, என்னும் தொழிற்பெயர் விகுதி அறுத்தலாகிய தொழிலை உணர்த்துகிறது. இதன்படி, மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழுநிறைவடிவமே அறம் எனலாம்.

தொல்காப்பியத்தில் அறம் கூறும் வகையில் வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்னும் துறைகள் உள்ளன. ஆனால், இதில் சிறப்பாக அகப்பொருள் இலக்கணத்தில். “அறத்தோடு நிற்றல்”, என்னும் துறை அமையப்பெற்றுள்ளது. அகப்பாடல்களில் காணப்படும் காதலர்கள், அகத்திணை மாந்தர்கள் ஒரு வரையறைக்குள்தான் இயங்குவார்கள். வரையறைதாண்டி, மரபுகளை மீறி அவர்கள் ஒழுகுவதில்லை. அது அவர்களுக்கு அறமாகக் கொள்ளப்பட்டது. “காதலர்களில் தலைவி-தோழிக்கும், தோழி- செவிலிக்கும், செவிலி-நற்றாய்க்கும், நற்றாய்-தந்தை, தன்னையர்களுக்கும், தலைவன்-தலைவி காதலை அவரவர் மனநிலைக்கேற்ப நயம்பட எடுத்துரைக்கும் நிகழ்ச்சியே அறத்தோடு நிற்றல்” ஆகும்.

**தமிழர் கண்ட நல்லறம்**

பண்டைத் தமிழர்கள் அறத்தின்பால் அழுந்திய நெஞ்சுடையராவர். புலவருலகமே மக்கள் பின்பற்ற வேண்டிய உயரிய ஒழுக்கங்களை வரையறுத்துக் கூறிற்று. அறத்தின் காவலர்களாகிய அச்சான்றோர்கள் அள்ளி வழங்கிய அறிவுரைகள் சங்க இலக்கியத்துள் மல்கிக் கிடக்கின்றன. அவற்றுள் இன்றியமையாதனவற்றை மட்டும் தொகுத்துக் காண்போம்.

**ஈத்துவக்கும் இன்பம்:**

மக்களின் அடிப்படைத் தேவைகள் உணவும் உடையுமாம். உடையோர் இல்லார்க்கு இவற்றைக் கொடுத்துதவுவது கடன் என வற்புறுத்தினார் புலவர். அத்தகையோரை “பசிப்பிணி மருத்துவர்” எனப் பாராட்டினர். சுவைக்கு இனிதாகிய குய்யுடைய அடிசிலைப் பிறர்க்கு ஈவின்றித் தம் வயிறு அருந்திய சிறு மதியாளரைப் புலவர் உலகம் இழித்தது. ஈகையை அஃதொரு நற்செயல் என்று எண்ணிச் செய்ய வேண்டுமேயன்றிப் புகழும் மறுமைப் பயனும் நோக்கமாகக்கொண்டு செய்யலாகாது என்று கருதினர். “இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வாணிகன் ஆய் அலன்” (புறம்.134) என்று முடமோசியார் பாராட்டுவார். பேகனை, ‘எத்துணையாயினும் ஈதல் நன்றென மறுமை நோக்கின்றோ அன்றே, பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே” என அவர் பாடுவார் (புறம்.141) கொடுத்துக் கொடுத்து வறுமையுற்றவர்களைப் புலவர் உலகம் பாராட்டிற்று. கடையெழு வள்ளல்கள் பற்றிய புகழ்ப் பாடல்கள் அவர்களின் ஈகையைப் பற்றிய கொள்கைக்குச் சான்றாகும். இந்திரர் அமிழ்தமே கிடைப்பினும் பிறரோடு பகுத்துண்ண வேண்டும் என்பார் இளம்பெருவழுதி(புறம்.182)

**யாதுமூரே யாவரும் கேளிர்:**

மனித இனம் முழுவதையும் ஒன்றாகக் காணும் மனம் படைத்திருந்தனர் தமிழர். இத்தகு மனத்தின் செழுமையையே கணியன் பூங்குன்றனாரின் பாடல் காட்டுகின்றது. யாதும் தன்னூரென்றும் யாவரும் தம் கேளிர் என்றும் கருதுவான் நன்மைக்கும் தீமைக்கும் தானே காரணம் என்பான்; நோதலும் தணிதலும் அத்தகையனவே; சாதல் கண்டு அஞ்சான்; அது புதுவதன்று எனச் சாவைப் புன்முறுவலோடு எதிர்கொள்வான்; வாழ்தல் இனிது, என ஒருகால் மகிழ்ந்து வெறுப்புற்ற ஞான்று இன்னாதது என மனம் சலியான்; எல்லாம் முறைவழிய நிகழுமென எண்ணியிருப்பான். பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் செய்யான்(புறம்.192)

**இனிய காண்க:**

வாழ்க்கை இன்பமும் துன்பமும் விரவியது ஓரில்லத்தில் மணமுழவு ஒலிக்கிறது; எதிர்வீட்டில் பிணமுழவு ஒலிக்கின்றது. புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர் கண்ணீர் சிந்திக் கலுழ்கின்றனர். இத்தகு இன்னாத வாழ்விலும் இனிய கண்டு வாழ்தல் மேன்மையாகும். இங்ஙனம் பாடுகிறார் பக்குடுக்கை நன்கணியார் (புறம்.194)

**அல்லது செய்தல் ஓம்புமின்:**

வாழ்நாள் முழுதும் தீமையே செய்து மன்பதையை அலைக்கழிப்பாருண்டு. வாழ்நாள் முடியும் தறுவாயில் தம் செயலுக்காக அண்ணோர் வருந்திப் பயன் ஒன்றுமில்லை. எனவே மூப்பும் பிணியும் பற்றி அலைக்கழிக்கும் முன்பே நல்லது செய்ய முந்த வேண்டும். ஆனால் நல்லது செய்தற்குப் பொருள் வேண்டும். அங்ஙனம் நல்லது செய்ய இயலாவிடினும் அல்லது செய்யாதிருத்தல் நன்று என்பார் இன்னொரு புலவர்(புறம்.195)

**இயல்வது கரவேல்:**

எல்லாரும் எல்லாரையும்போல் பிறர்க்கு உதவ இயலாது. ஆனால் இயன்றவரையில் அறம் இயற்ற இயலுமன்றோ!தன்னால் இயன்றதை இயலும் என்றலும், இயலாததை இயலாது என்றலும் ஏற்கத்தக்கனவே. ஆனால் ஒல்லாததை ஒல்லும் என்றலும், ஒல்லுவதனை இல்லையென மறுத்தலும் விரும்பத்தக்கவையல்ல; அ:.து புகழைக் குறைக்கும் கருவியாகும் என்பார் மூலங்கிழார்(புறம்,196)

**உயர்ந்த வேட்டம்:**

உள்ளுவதெல்லாம் உயர்வாக இருத்தல் வேண்டும் என வற்புறுத்துகின்றான் மாமன்னன் கோப்பெருஞ்சோழன். யானைவேட்டுவன் தன் குறிக்கோளில் உறுதியுடையான் எனில் யானையும் பெறுவான். குறும்பூழ் வேட்டுவன் உறுதியற்றவனெனில் வறுங்கையொடும் வருவான். எனவே உயர்ததையே பெற முயல வேண்டும்; அத்தகு உயர் நோக்கமுடையோர்க்கு நல்வினை துணைபுரியுமெனில் உம்பர் உலகத்து வாழ்வும் கிட்டும்; அது தவறினால் மாறிப் பிறவா நிலையும் கிட்டலாம்: அவ்வாறு மாறிப் பிறவார் என்பார் உளர் எனின் தம் புகழை நிறுத்தி வசையில்லா உடம்பொடு மாய்தல் நன்று என்றான் அம்மன்னன் (புறம்.214)

**வாழிய நிலனே:**

நாட்டின் சிறப்பு மாந்தர் சிறப்பே. மலை வளமும், கழனிவளமும், காட்டு வளமும், கடல் வளமும் நிரம்பிய நாடாகவிருப்பினும் மாந்தர்

*தமிழக வரலாறும் பண்பாடும்*

**குறிப்பு**

மனவளம் இன்றேல் பயனில்லை என்பது தமிழர் துணிபு. எனவே நாடு காடாயினும், நாடாயினும், அவலாயினும், மிசையாயினும் கவலையில்லை. எங்கே மாந்தர் நல்லவரோ அங்கே நாடும் நல்லதாகக் கருதப்படும் என்கிறார் ஔவையார். (புறம்.187).

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்:**

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் மன்னன் இவ்வுலம் நிலைபெற்று வாழ்வதற்குச் சான்றோரே காரணமாவார் என்கிறான். அச்சான்றோர் எத்தகையர்? இந்திரர் அமிழ்தமே கிடைத்தாலும் அதனைப் பிறர்க்கும் பகுத்துண்பர்; புகழ் கிடைக்குமெனின் உயிரும் கொடுப்பர்; பழி வருமெனின் உலகையே பெறுவதாயினும் கொள்ளார்; பிறர் அஞ்சும் பழிக்குத் தாமும் அஞ்சியயொதுங்குவர்; தமக்கென்று எம்முயற்சியும் செய்யார். பிறர் நலத்தின் பொருட்டே முயல்வர்: அத்தகையோர் வாழ்வதாலேயே உலகம் வாழ்கிறது என்கின்றான். (புறம்.182)

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே:**

எத்துணைச் செல்வ வறுமை வேறுபாடுகள் இருப்பினும் அடிப்படையில் மனித இனம் ஒன்றேயாகும். அனைவர்க்கும் பசியுணர்ச்சியும் இன்ப துன்ப உணர்ச்சிகளும் சமமே. உலகம் முழுவதனையும் தான் வயிற்றுணவு தேடி வேட்டையாடும் கல்லாத ஒருவனுக்கும் உயிர் வாழ்வுக்குத் தேவை நாழியுணவும் இரண்டும் ஆடைகளுமே. பிற இன்ப துன்ப உணர்ச்சிகளும் இருசாரர்க்கும் பொதுவே. எனவே செல்வம் பெற்றதன் பயனே பிறர்க்கு ஈதல்தான். அங்ஙனமின்றித் தானே துய்க்க எண்ணினால் இழப்பன பலவாகும். இதனைப் பாடுபவர் செந்நாப்புலவர் நக்கீரராவார்.(புறம்.189)

**எலியும் புலியும்:**

மனிதருள் புலியும் எலியும் உண்டு என்கிறார். சோழன் நல்லுருத்திரன். சில மாந்தர் வஞ்சமுடைய எலிபோலத் தம் செல்வத்தைப் பிறர்க்கு ஈவின்றிப் பதுக்கி வைக்கின்றனர். அவர்களோடு உறவு கொள்ளலாகாது. மாறாகத் தான் தாக்கிய களிற்றிரை இடம் வீழ்ந்தால் உண்ணாது மறுநாள் வரைப் பசித்திருந்து வலம்பட வீழ்த்திய இரையை உண்ணும் புலி போன்ற உயர்ந்த நோக்கமுடையாரோடு உறவுகொள்ள வேண்டும். இதுவே அறிவுடையோர் செய்யத் தகுவதாகும். (புறம்.190)

**நரையில்லா வாழ்வு**

தனி மனிதர்களின் சேர்க்கையே சமுதாயம். சமுதாயத்தின் வாழ்வும், தனிக் குடும்பத்தின் வாழ்வும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. மனிதன் கவலையற்று வாழ வேண்டுமானால் வாய்த்த மனைவி மாண்புடையவளாக விளங்க வேண்டும். மக்கள் அறிவு நிரம்பியவராக

விருக்க வேண்டும்; ஏவல் இளைஞர் குறிப்பறிந்து செயற்படல் வேண்டும்: அரசு, அல்லது கடிந்து நல்லது செய்யவல்லதாக வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் நாட்டில் வாழ வேண்டும். இத்தகு சூழ்நிலை இருந்தால் மனிதன் நரையிலா நல்வாழ்வு வாழ முடியும் என்பது பிசிராந்தையார் கருத்தாகும்.(புறம்.191)

**குறிப்பு**

**நன்றி மறப்பது நன்றன்று:**

செய்நன்றியின் பெருமையுணர்ந்த வள்ளுவர் அதற்கெனத் தனியதிகாரம் வகுத்துள்ளார். துன்பத்துள் துப்பாயவர் தொடர்பினை எழுமை எழுபிறப்பும் உள்ளல் வேண்டும் என்பார் அவர். புறநானூற்றில் ஒரு பாடல் செய்ந்நன்றியைப் பின்வருமாறு வற்புறுத்துகின்றது.

"ஆன்முலை யறுத்த அறனில் லோர்க்கும்
மாணிழைமகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உளவென ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ"

**மென்கண் செல்வம்:**

இன்று இருந்து நாளை முடியும் பொருட் செல்வத்திலும் என்றும் நின்று நிலவும் அறச்செல்வமான அருட்செல்வமே செல்வம் என்று துணிந்த தமிழர். உயர்ந்த யானை, குதிரை, தேர் முதலியனவற்றில் ஏறிச் செல்லும் வாழ்வையும், பட்டமும் பதவியும் பெற்று வாழும் ஆடம்பர வாழ்வையும் செல்வ வாழ்வாகக் கொள்ளாது தன்னை நம்பி வாழ்வோர் துன்பத்திற்கு அஞ்சும் பண்பையே செல்வம் என்று கருதியுள்ளர்.

"கடிய வூர்தலும் நெடிய மொழிதலும்
செல்வமென்று தன் செய்வினைப் பயனே
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே" (நற்றிணை.210)

**மானம்:**

தன்னிலையில் தாழாமையும் தாழின் உயிர் வாழாமையுமே மானமாகும். மானமிழந்து வாழ்தலினும் சாதலே நன்று எனக் கருதிய தமிழரின் வரலாறு விழுமியதாகும். கோப்பெருஞ்சோழன் தன் மக்களாலேயே வெறுக்கப்பட்டபோது வடக்கிருந்து உயிர்விட்டான். பெருஞ்சேரலிரும்பொறை வெண்ணிப் போரில் புறப்புண் ஏற்றமைக்கு நாணி வடக்கிருந்து உயிர்விட்டான். கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானின் வீரர்கள் காலந்தாழ்த்துக் கொடுத்த நீரை உண்ணானாய்

உயிர்விட்டான். இவர்களின் வரலாறு தமிழர் மானத்திற்கு தந்த மதிப்புக்குச் சான்றாகும்.



**மனமே சாட்சி:**



மனச்சாட்சியை விட நெருங்கிய சாட்சி இருக்க முடியாது. தன் மனமறிந்த தீமையைச் செய்வார் பழிக்கத் தக்கோராவர். இதனைக் கலித்தொகை வற்புறுத்துகின்றது.

“கண்டவர் இல்லென உலகத்து உணராதார்
தங்காது தகைவின்றித் தாய்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் அறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை”

**கண்டொன்றும் காணாதொன்றும்:**

நட்புச் செய்துவிட்டு அவர்களைத் தக்க நேரத்தில் கைவிடுதலும் வளமுடைய போது நட்டு வறுமையுற்றபோது நீங்குதலும், நண்பர்களாய் வாழ்ந்து மறையுணர்ந்து அதனைப் பிறர்க்கு வெளிப்படுத்தலும் நன்மக்கட்கு ஆகாப் பண்புகளாகும்.

**“சிறப்புச்செய்து உழையராய்ப் புகழ்போற்றி மற்றவர்**
**புறக்கடையே பழிதூற்றும் புல்லியர்”**
**“செல்வத்துட் சேர்ந்துஅவர் வானுண்டு மற்றவர்**
**ஒல்கிடத்து உலப்பில்லா உணர்வில்லார்”**
**“பொருந்திய கேண்மையின் மறையுணர்ந்து அம்மறை**
**பிரிந்தக்கால் பிறர்க்குரைக்கும் பேதையார் (கலி.25)**

என்னும் கலித்தொகைப் பகுதிகள் குறிப்பிடத்தக்கது. ‘பயனின் மையின் பற்றுவிட் ஒரூஉம்நயனின் மாக்கள்’ என அகநானூறும்(71) இதனை வலியுறுத்தும்.

**தேயும் வாழ்க்கை:**

தீயவர் தாம் செய்யும் தீமையின் பயனாய்த் தேய்ந்தழிவர் என்றும் கருதினர் ஆசிரியனுக்குத் துரோகம் செய்தவர், உதவியார்க்கு உதவாதவர். உறவினர் மனம் வருந்த வாழ்பவர் ஆகியோர் தேய்வர் என்று கலிப்பாட்டொன்று கூறும்.



**“கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண்**
**தப்பித்தான் பொருளேபோல் தமியவே தேயுமால்**

**ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான் மற்றவன்**
**எச்சத்துள் ஆயினும் அஃது எறியாது விடாதேகாண்**
**கேளிர்கள் நெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்**
**தாளில்லான் குடியேபோல் தமியவே தேயுமால்" கவி.149**



**வேறுபல வீறுசால் கொள்கைகள்:**

மனிதன் அறநெறியை உயிராகக் கொள்ள வேண்டும் குறிப்பாக மன்னன் களிறும், புரவியும், தேரும், மறவரும் உடையவனெனினும் அறநெறியே அவனுக்குச் சிறப்புத் தரும்(புறம்.55) என்றும், பொதுவாக அனைவர்க்கும் பயன்படும் பொருள்களைச் சிதைத் தலாகாது என்றும் வற்புறுத்தினர். 'மரம் சா மருந்தும் கொள்ளார்' (நற்.226) என்பது தமிழ்க் கொள்கையாம். பொய்ச்சான்று பகர்வான் கீழிருந்த மரம் போலக் கவின் வாடி" (கலி.34) என்று கூறுதல் காண்க. (39) அலந்ததவர்க்குதவல், புணர்ந்தாரைப் பிரியாமை, பாடறிந்து ஒழுகல், தன்கிளை செறாமை, பேதையார் சொல்லைப் பொறுத்தல், கூறியது மறுக்காமை, மறைபிறர் அறியாமை காத்தல், கண்ணோட்டமின்றிக் குற்றவாளிகளைத் தண்டித்தல் முதலியன அவர்கள் போற்றிய அறங்களாகும். இவை பலவும் கலித்தொகையில் காணத்தக்கனவாகும். (கலி.133)

இந்தியாவில் வாழும் மக்கள் யாவருள்ளும், தமிழ் மக்களே அறவாழ்க்கையின் மீது பெருவேட்கை உள்ளோர் என்றும், இவ்வினத்தவர்க்குத் கடவுளுடைய ஆசிர்வாதம் காத்துக் கொண்டுள்ளது என்றும், இவர்களுக்கு இத்தயை உணர்ச்சியை ஊட்டியவை திருக்குறளும் நாலடியாருமே என்றும் அறிஞர் போப்படிகளார். தம் நாலடியார் மொழிபெயர்ப்புக்கான முன்னுரையில் குறிப்பிட்டார். தமிழினத்தின் இவ்வார்வத்தினைப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பதினொன்று அறம் பற்றியவை என்பது கொண்டு நன்கு உணரக்கூடும். இவற்றுக்குப் பிறகும், தொடர்ந்து அறநூல்கள் அவ்வப்போது வாழ்ந்த சான்றோர்களால் இயற்றப்பட்டுள்ளன.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டினராகப் பெரும்பான்மையோரால் கருதப்படும் ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன். மூதுரை, நல்வழி என்னும் மாபெரும் பெட்டகங்களை அளித்தார். இதே காலத்தில் அருங்கலச் செய்யும் 13 ஆம் நூற்றாண்டில் அறநெறிச்சாரமும், 16-ஆம் நூற்றாண்டில் நறுந்தொகை என்னும் வெற்றி வேற்கையும் தோன்றின. 17 ஆம் நூற்றாண்டில் குமர குருபரரின் நீதிநெறி விளக்கமும் சிவப்பிரகாசரின் நன்னெறியும் தோன்றின. 18,19,20 ஆம் நூற்றாண்டுகளில் கூட வேதநாயகம் பிள்ளையின் நீதி நூலும், பெண்மதிமாலையும், மகாகவி பாரதியின் புதிய ஆத்தி சூடியும் புரட்சிக்கவிஞரின் ஆத்திசூடியும் தோன்றின. இந்நூற்பெருக்கம், போப்படிகளாரின் கருத்துக்குச் சான்றளிக்கின்றது.

## 13:5 விருந்தோம்பல்

சங்ககாலத்தில் விருந்தோம்பல் ஒரு சிறந்த பண்பாடாக விளங்கியது. கணவனுடன் கூடி வாழும் மகளிர்க்குரிய தனி உரிமையாக விளங்கியது. பிரிந்த தலைவனையும் தலைவியையும் ஒன்றிணைக்கும் ஆற்றல் விருந்தோம்பலுக்கு உண்டு. சங்க காலத்தில் விருந்தோம்பல் என்பது முன்பின் அறியாதவர்களுக்குச் செய்வதாக விளங்கியது.

சங்க நாளில் பெரிதும் போற்றப்பட்ட பேரறம் விருந்தோம்பலாகும். தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறுகையில் விருந்தோம்பற் பண்பாட்டையும் சேர்த்துக் கூறுகின்றார். திருவள்ளுவர் விருந்தோம்பலுக்கெனத் தனித்ததோர் அதிகாரம் வகுத்தார். மனிதன் பொருள் தேடி இல்லிருந்து வாழ்வது விருந்தோம்புதற் பொருட்டே என்கிறார். விருந்தோம்பல் என்னும் வேள்வியைச் செய்யாதவர்கள் பொருளைப் பாடுபட்டோம்பி இறுதியில் பற்றற்றுப் போவர் என்கிறார்.

வரக்கூடாத நேரத்தில் விருந்தினர் வரினும் முகம் கோணாது பேணும் பெண்ணை நற்றிணையிற் காண்கிறோம். வினைமுற்றி மீளும் தலைமகன் தன் மனைவியின் இனிய பண்புகளை நினைத்துப் பார்க்கிறான். அப்பண்புகளிற் சிறந்தது விருந்தோம்பற் பண்பே. இதனை

**"அல்லி வாயினும் விருந்துவரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" (நற் 142)** என்னும் அடிகள் விளக்கும்.

கணவனும் மனைவியும் ஊடல் கொண்டிருக்கையில் விருந்தினர் வரின் அவர்கள் ஊடல் தீர்ந்து அவர்களைப் பேணும் கடமையில் ஈடுபடுவர். எனவே விருந்தினர் ஊடல் தீர்க்கும் வாயில்கள் ஆயினர்.

விருந்தினர் வரின் அவர்களைப் பேணுதற்குரிய பொருள் இல்லை எனில் அந்நிலையை நன்மக்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே அத்தகையோர் விருந்தினரைக் காணுதற்கு அஞ்சி ஒளிந்து கொள்வாராம்.

***"விருந்துகண் டொளிக்கும் திருந்தா வாழ்க்கை"* (புறம். 266:11)** என்றும் அடிகள் உரைக்கும்.

கற்பின் செல்வி கண்ணகி கோவலனைப் பிரிந்திருந்தபோது

***"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்***
***துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்***
***விருந்தெதிர் கோடலும்"***

இழந்ததாக வருந்தினாள்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் விருந்தோம்பலைப் பெரிதும் பாராட்டிப் பேசுதல் காணலாம்.



திருக்குறள் ஒழிந்த பிற பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் விருந்தோம்பல் பண்பாட்டை வற்புறுத்தத் தவறவில்லை. அறிவுடைய மாந்தர்க்கு விருந்தின்றி உண்ட பகல் ஒரு நோய்க்குச் சமமானது என்றும் ஒரு கணவனுக்குத் தான் நல்ல விருந்தினரை ஓம்புவதால் நட்பாகிறாள் என்றும் திரிகடுகம் கூறுகின்றது. (44,64) மேலும் பெறுவதற்கு அரிய பொருள்களுள் ஒன்றாக வழி தவறி வந்தடைந்த விருந்தினரைக் குறிப்பிடுகின்றது. (69) ஒருவன் பேணிக் காப்பதற்கு அரியாருள் மழை பெய்யும் நாளில் தன்னை அடைந்த விருந்தினரையும் சேர்த்துக் கூறுகிறது ஒரு செய்யுள்(76)

தம்மிடம் வந்தவர்களுக்குச் செய்யும் சிறப்புக்கள் பற்றி ஆசாரக்கோவை கூறும் கருத்து வருமாறு:

**“முறுவல் இனிதுரை, கால்நீர், மணை பாய்**
**கிடக்கையோடு இவ்வைந்தும் என்பதலைச் சென்றோர்க்கு**
**ஊணொடு செய்யும் சிறப்பு”**

பெண்டிர்க்குரிய சிறப்புகளுள் ஒன்றாக விருந்தோம்பலைக் கூறுகிறது.

ஏலாதி, விருந்தினர்க்குத் தராமல் ஒரு பொருளை மறைத்தலைக் கடிந்து கூறுகின்றது.

நான்மணிக்கடிகை விருந்தினரை விருப்பத்தோடு வரவேற்றுப் பேணல் வேண்டும் என வற்புறுத்துமுகமாக, விருப்பில்லாதார் முன் சென்ற விருந்து செத்தொழியும் என்கிறது.

**“சென்ற விருந்தும் விருப்பிலார் முன்சாம்”**

இன்று உறவினரும் நண்பருமே விருந்தினராகக் கருதப் பெறுவர். ஆனால் பண்டு முன்பின்னறியாதவராய் வீடு தேடி வருவாரே விருந்தினராகக் கொள்ளப்பட்டனர். புதிய இலக்கிய வகையினை “விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே” என்பார் தொல்காப்பியர். விருந்தோம்பலைப் பெரிதாக அன்றைய சமூகம் போற்றியமைக்குக் காரணங்களுண்டு. இன்று போல் அன்று உணவு விடுதிகள் இல்லை பண்டமாற்றே வழக்கிலிருந்தது பழக்கமில்லாதவரிடம் பணம் கொடுத்து உணவு பெறல் இயலாததாகவிருந்தது. உணவுக்கு வேண்டிய பொருள்களைப் போகுமிடமெல்லாம் சுமந்து போதல் அருஞ்சுமையாம். போக்கு வரவுக்குரிய வசதிகள் இல்லாத அந்நாளில்

பெரும்பாலோர்க்குக் கால்நடைப் பயணமே நடக்கக்கூடிய ஒன்றாக இருந்தது.

**குறிப்பு**

எனவே பெரும்பான்மையான மக்கள் உணவுக்காகச் செல்லும் ஊரையே நம்பியிருந்தனர்.இத்தகு சமூகத்தில் விருந்தோம்பலை ஒரு தனியறமாகப் போற்றியது வியப்பன்று. குடும்பத்தார்க்கு நாட்டின் உறவையும் அறிவையும் வளர்த்துத் தந்ததோடு, மக்கட்குள் உட்பிணைப்பையும் அன்பையும் வளர்த்துப் போற்றியது விருந்தோம்பல். இவ்வறத்தால் புது முகங்களைக் கண்டு முகம் மலர்ந்தும் இன்புற்றும் நாட்டுச் செய்திகளைப் பெற்று அறிவு பெற்றும் வாழும்பேறு அக்காலத்தவர்க்கு இருந்தது. அதனால் வாழ்க்கைக்கு அடிப்படையான அன்பையும் அறிவையும் வளர்க்கும் வாயிலாக விருந்தோம்புதல் விளங்கியது. 'ஓவச்செய்தி' எனும் தம் நூலில் அறிஞர் மு.வரதராசனார் இவ்விளக்கத்தைத் தந்துள்ளார். இதனால்தான் இவ்வறத்தைப் பிற்காலத்து நூல்களும் வழிவழியே போற்றியுரைக்கலாயின. இத்தமிழ்ப் பண்பாட்டினை கல்வியிற் பெரிய கம்பர் சீதையின் வாயிலாக விளக்குவார். அசோக வனத்தில் சிறையிருந்த செல்வி, தானில்லாதபோது இராமன் உறத்தக்க துன்பங்களை எண்ணி வருந்தும்போது, விருந்தினர் வரின் இராமன் என் செய்வானோ என எண்ணியதாகக் கூறுகின்றார்.

**அருந்த மெல்லடகு ஆரிட வருந்துமென்று அழுங்கும்**
**விருந்து கண்டபோ தென்னுறமோ வென்றுவிம்மும்**
**மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்**
**இருந்த மாநிலம் செல்லரித்திடவும் ஆண்டெழாதாள்"**

சேக்கிழார் பெரிய புராணத்தில் இளையான்குடி மாறனாரின் விருந்தோம்பற் பண்பினை விரித்துரைக்கக் காணலாம். மாரிக் காலத்து இரவில் வந்த சிவனடியார்க்கு வயலில் விதைத்த நீள்வேருடன் பறித்துக் கறிசமைத்தும் உணவு படைத்த அவர் திருநாவுக்கரசு இறந்ததையும் மறைத்து அப்பூதியடிகள் அப்பர்க்கு உணவு படைக்க முந்தினார். இங்ஙனமே ஏயர்கோன் மனைவியார் வரவேற்றார். சோழர் காலத்தில் கலிங்கத்துப் பரணி பாடிய செயங்கொண்டார் இறந்த வீரர்களைக் கழுகுகளும் பருந்துகளும் கொத்தியுண்ட போதும் முகமலர்ந்து கிடந்தனர் எனக் கூறவந்த விடத்திலே,

**"விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண**
**மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்**

**பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்**

**பதுமமுகம் மலர்வாரைக் காண்மின் காண்மின்''**



குறிப்பு

எனப் பாடியுள்ளார்.

சங்க காலச் சான்றோர் வற்புறுத்திய விருந்தோம்பற் பண்பாடு. தமிழர் வரலாற்றில் தொடர்ச்சியாகச் சான்றோரால் மீண்டும் மீண்டும் வற்புறுத்தப்படுதலைக் காண இயலும்.

## 13:6 தொகுத்துக் காண்போம்

- நாகரிகம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- பண்பாடு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- தமிழர்களின் அறவாழ்வியல் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- விருந்தோம்பல் பெறும் சிறப்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 13.7 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. நாகரிகம் என்றால் என்ன?
2. பண்பாடு விளக்கம் தருக?
3. சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல் இடம் பெறும் முறையை விவரிக்க.

## 13.8 மேலும் அறிந்துகொள்ள

ஞா.தேவநேயப்பாவாணர் - பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்

அ.தட்சிணாமுர்த்தி - தமிழர் நாகரிகமும் பண்பாடும்

# கூறு-14

# ஆற்றங்கரைப் பண்பாடு –வைகை- காவிரி – பொருநை ஆற்று நாகரிகங்கள்

## 14:1 முன்னுரை

சமுதாயம் வளர்ச்சியுற மனிதன் நானிலத்தில் நடுநிலமாயிருக்கும் ஆறுகள் ஓடும் பகுதியைத் தனது விருப்பத்திற்குரிய இருப்பிடமாகக்

கொண்டான். மன்னனைத் தலைவனாகக் கொண்ட கூட்டு வாழ்க்கைக்கு ஆற்றங்கரை நகரங்கள் பெரிதும் துணைநின்றன. கூட்டத்தார் அனைவர்க்கும் குறையிலா நலம் உண்டாகும் வண்ணம் வாழ்வு நெறி அமைந்தது. ஒருவகைக் கட்டுப்பாடு மக்களிடையே உருவாகியது. அப்படியொரு கட்டுப்பாட்டு நெறியினை மனிதன் கடைப்பிடித்து ஒழுகியதைத்தான் நாகரிகம் என்கிறோம். தமிழகத்தின் நாகரிகம் ஆற்றங்கரையில் விளங்கிய நகரங்களின் அடிப்படையில் தோன்றின.

குறிப்பு

## 14:2 குறிக்கோள்கள்

- ஆற்றங்கரை நாகரிகம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- வைகைக்கரை நாகரிகம் தொன்மையான நாகரிகங்களில் சிறந்தது என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.
- பொருநைக்கரை நாகரிகம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 14.3 ஆற்றங்கரைப் பண்பாடு

உலகத்தில் நகரமும் அதனோடு இயைந்த நாகரிகமும் ஆற்றங்கரையில் தோன்றின. தமிழ் இலக்கிய இலக்கண நூல்களும் இதனைத் தொன்மைக் காலத்தில் வரையறுத்துள்ளன. .மாந்தன் மலையாம் குறிஞ்சியில் தோன்றினான். மலைமேல் நீர் சுரந்து ஊறி வரி வரியாக ஓடி. ஒன்று கூடிய நீரோட்டம் அருவியாய் அடியில் விழுந்தது. நீரின் வரி ஒட்டத்தைக் கண்ட மாந்தன், அந்த ஓட்டத்தைக் கண்டவாறே வந்தான். விழுந்த அருவி கீழே ஆறாக ஓடுவதைக் கண்டான். அந்த நீரோட்ட வழியே, வழியாக நடந்தான். காடாம் முல்லையைக் கடந்தான். மருதமாம் ஆற்றங்கரையில் நிலத்தைக்கண்டு தங்க நிலத்தைச் செப்பம் செய்தான். கூடி வாழ்ந்ததில் ஊர் உருவாயிற்று.செப்பமான அமைப்பில் நகர் பிறந்தது. நகரின் ஒழுங்கும் முறையும் அழகும் அமைப்பும் கொண்ட பழக்க வழக்கம் நாகரிகத்தை உருவாக்கியது. ஆற்றங்கரைகளே நாகரிகம் உருவாகக் காரணமாயிற்று.

ஆற்றங்கரை நாகரிகத்தையே உலகில் சிறப்பித்துச் சொல்லுவர். அகழ் ஆய்வாளரும், வரலாற்று ஆய்வாளரும் உலகத்தில் தோன்றிய ஆற்றங்கரை நாகரிகத்தைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்:

இந்தியா - சிந்து ஆற்றங்கரை நாகரிகம்; எகிப்து - நைல் ஆற்றங்கரை நாகரிகம்; மெசப்படோமியா யூப்ரடீசு - டைக்கிரீசு ஆற்றங்கரை நாகரிகம், இவை மூன்றுக்குள் குறிப்பிடத்தக்க தொன்மையும் சிறப்பும் கொண்டதாகச் சிந்தாற்று நாகரிகத்தையே குறிப்பிடுவர். ஆனால் அகழ்வு ஆய்வாளரும் வரலாற்று ஆய்வாளரும் தமிழகத்தைக் கணக்கில் எடுத்து ஆராய்ச்சி மேற் கொள்ளவில்லை இன்று வைகை நதியை ஒட்டி நடத்தப்பட்ட அகழ்வாய்வு உலக

நாகரிகங்களின் முன்னனியில் தமிழர் நாகரிகம் உள்ளதைப் பறை சாற்றுகிறது.



## 14.4 வைகைக் கரை நாகரிகம்

ஒரு நாட்டின் பெருமையினையும் நாகரிக மேம்பாட்டினையும் உலகுக்கு உணர்த்துவன நகரங்களே ஆகும். அவற்றுள்ளும் தலை நகராய் ஆற்றங்கரையில் அமைந்த நகரங்களும் வளநகராய்க் கடல் வையை பற்றிய செய்திகள் பரிபாடலிலும், பரிபாடல் திரட்டிலும் ஏறத்தாழ அறுபதுக்கு மேற்பட்ட இடங்களில் சுட்டப் பெறுகின்றன.

வைகை மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள மேகமலைத் தொடர்களில் ஊற்றெடுத்து பல்வேறு சிற்றாறுகளையும் தன்னகத்தே கொண்டு வைகை எனும் பெயரோடு தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களை வளப்படுத்துவதற்கென்றே பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது.

வைகை நதி பண்டையப் பாண்டிய மண்டலத்தில் தோன்றி பாண்டிய மண்டலத்திலேயே தன் பயணத்தை நிறைவு செய்வது குறிப்பிடத்தக்கது.

### 14.4.1 இலக்கியங்களில் வைகை

வைகை ஆறு சங்க இலக்கியங்களில் வையை என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை வையைப் புனல், நெரிதரூஉம் வையைப் புனல், மாணிழை வையை, தாவுநீர் வையை, நறுநீர் வையை, அந்தண் புனல் வையை, தேனிமிர் வையை வளங்கெழு வையை, தென்னவன் வையை, பூமலி வையை, தீம்புனல் வையை, காமரு வையை என்பன போன்ற தொடர்கள் விளக்கும்.

சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடல் வைகை குறித்துப் பலவாறு புகழ்ந்து பாடுகிறது. சற்றேறக்குறைய எழுபதுக்கு மேலான இடங்களில் வைகையை வையை என்று குறிப்பிட்டுக் கூறுகிறது. குறிப்பாக மதுரை மக்களின் வைகை சார்ந்த வாழ்வியலைப் பரிபாடல் மிக அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

மாங்குடி மருதனார் வையை ஆற்றின் சிறப்பினை, "வையை இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கிறது. முகில் உலாவும் மலை போன்றுயர்ந்த மாளிகைகளின் வாயில்களில் எப்போது பார்த்தாலும் மக்களும் மாவும் உலாவிக் கொண்டே இருக்கின்றனர். அஃது எப்படி இருக்கிறதென்றால் இடையறாத ஓட்டத்தையுடைய வையை யாற்றினைப் போன்றுள்ளது" என்கிறார். (பரி. 20)

மேலும் பூந் தாதுக்கள் சூழ்ந்த கோங்கம் பூவும் பிற பூக்களும் பரந்து மாலை ஒழுகினாற்போன்று ஓடும் பெருநீர் நன்றாக வருதலையுடையதாக விளங்கும் அறலையுடைய வையைப் பேரியாற்றின் துறைகள் தோறும், துறைகள் தோறும், பலவாய் வேறுபட்ட பூக்களையுடைய பூந்தோட்டங்கள் சூழ்ந்திருத்தலையும், அப்பூந்தோட்டங்களின் சூழலிலே பெரும்பாணர் குடியிருப்பு அமைந்திருத்தலையும்" (மதுரைக்காஞ்சி.338-342) குறிப்பிடுகின்றார். இதன்மூலம், வையை ஆற்றின் நெடுகிலும் பல துறைகள் மக்கள் வாழ்வதற்குரிய இனிய சூழலோடு அமைந்திருந்தன என்று தெரிகிறது.

வையையாறு வற்றாத நீர்வளமும், வளம்நிறைந்த அதன் கரைகளில் ஓங்கியுயர்ந்த மருதமரங்கள் சூழ்ந்த சோலைகள் அழகுடன் விளங்கிக் கண்பார்க்கும் காட்சியதாயும் அமைந்திருந்த பான்மை,

**"வருபுனல் வையை வார்மணல் அகன்றுறைத்**

**திருமரு தோங்கிய விரிமலர்க் காவின் (அகநா.36:9-10)**

என்ற அகப்பாட்டின் அடிகளால் தெளிவாகக் கூறப்படுகிறது.

மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார் என்னும் புலவரும் மதுரைப் பேராலவாயர் என்னும் புலவரும் வையைப் பேராற்றில் புனலாடும் காட்சியினை முறையே,

**"மையெழில் உண்கண் மடந்தையோடு வையை ஏர்தரு**

**புதுப்புனல் உரிதினி னுகர்ந்து" (அகநா.256:10-11)**

**"பெருநீா் வையை அவளோடு ஆடி" (அகநா.296:5)**

என்ற அகப்பாடல்களில் தெரிவித்துள்ளனர்.

இளங்கோவடிகளும் வையை என்னும் அழகிய ஆற்றிளை,

**"உலகுபுரந் தூட்டு முயர்பே ரொழுக்கத்துப்**

**புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி**

**வையை யென்ற பொய்யாக் குலக்கொடி" (சிலம்பு.13:168-170)**

என்று பாராட்டுகிறார். இவ்வடிகளுக்கு "உலகைப் பாதுகாத்ததற்குப் பல பொருள்களையும் விளைத்து நுகர்வித்தலான் மிக்க பெரிய ஒழுக்கத்தினையு முடையாள்; புலவர் நாவிற் புகழ் பொருந்திய பூங்கொடியாள் வையையென்று பெயர் கூறப்படுவாள்; பருவம் பொய்யாமையானும் வேற்றுவேந்து அணுகாமை யானும் தென்னர் குலக் கொடியாயுள்ளாள்" என்று அரும்பதவுரைகாரர் உரைகூறி மகிழ்கின்றார்.

வேறு பல இடங்களிலும் வையை நீரைப் பாராட்டிப் பேசுகிறார் இளங்கோவடிகள்.

பரிபாடல், அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், மட்டுமன்றி பரிபாடல் திரட்டு, கலித்தொகை, திருவிளையாடற்புராணம் போன்ற தமிழ் இலக்கிய நூல்களும் வைகையைப் பற்றிப் பாடி மகிழ்கின்றன.

கி.பி.12ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் மற்றும் புகழேந்திப்புலவரால் பாடப்பட்ட ஒரு பாடல், வைகை ஆற்றின் நீர் கடலுக்குள் சென்று கலக்காமலேயே நிறைவு பெறுவதை,

**“நாரியிடப் பாகருக்கு நஞ்சளித்த பாவியென்று**
**வாரியிடம் புகுதாத வைகையே - வாரி**
**இடத்தும் புறத்தும் இருகரையும் பாய்ந்து**
**நடத்தும் தமிழ்ப்பாண்டி நாடு”**

என்று பாடுகிறது.

### 14.4.2 கடவுளாக ஆறுகள்:

ஆறு போன்ற நீர்நிலைகளுக்கும் முதன்மை அளித்து அவற்றைத் தெய்வ நிலைக்கு உயர்த்திய பண்பாட்டு மரபு. உலக நாகரிகங்களில் தமிழிலக்கியங்களில்தான் மிகுதியாகக் காணப்படுகிறது. பழந்தமிழகப் புலவர்களில் ஒருவரான குடபுலவியனார் உணவு குறித்து வரையறுக்கும்போது, ‘உணவெனப்படுவது நிலத்தோடு நீரே’ என்கிறார். அதே போன்று, மக்களின் வாழ்வியலைக் கட்டமைத்தவை மழையும், ஆறும், தண்ணீரும், தண்ணீர் சார்ந்த பிறகூறுகளுமே ஆகும். அது போன்றே வையையும் தெய்வமெனக் கருதி வணங்கப்பட்டு, பெண்ணாகவே உருவகப்படுத்தப்பட்டது.

### 14.4.3 வைகைக் கரையின் விழாக்களும், சடங்குகளும்

விழாக்கள் ஓர் இனத்தை உயிர்ப்போடு வைத்திருக்கும் உன்னதமாக நிகழ்வாகும். அவ்விழாக்கள், மொழி, பண்பாடு, வாழ்வியல், நாகரிகம், மரபு சார்ந்த கூறுகளோடு அமைந்திருப்பின் கூடுதல் மதிப்பினைப் பெறும். அந்த வகையில் பண்டைய தமிழர் மரபில் விழாக்கள் அனைத்தும் சமூக இயங்கியலை ஒட்டியே நமது முன்னோர்களால் அமைக்கப்பட்டிருந்தன.

## 14.4.4 புனலாட்டுவிழா:

நதி நீரில் குளித்து மகிழ்வதையே புனலாட்டு அல்லது புனலாடுதல் என்றழைத்தனர். இவ்வழக்கு நீராடல் எனவும் வழங்கப்பெறும். தமிழகத்தின் அனைத்து ஆறுகளிலும் இதுபோன்ற புனலாட்டு நிகழ்வு பண்டைய காலத்தில் சிறப்புற்று விளங்கியது. ஆறுகளில் மட்டுமன்றி கடலிலும் இத்தகைய புனலாட்டு நிகழ்ந்திருக்கிறது. பருவங்களில் மாறுதல் விளைந்து ஆறுகளில் வெள்ளம் பெருகும் காலத்தில் அதனைக் கொண்டாடி வரவேற்பதற்காக நதியோரங்களில் அமைந்த கிராமங்கள், சிற்றூர்கள், நகரப்பகுதியிலுள்ள மாந்தர் அனைவரும் புதுப்புனலில் நீராடி இச்சடங்கினை நிகழ்த்துவர். தங்கள் வாழ்வியலின் அடிநாதமாய்த் திகழும் தண்ணீரை வாழ்த்தி வழிபடுவதோடல்லாமல், வணங்கி வரம் வேண்டுவதும் இந்நிகழ்வின் ஒரு பகுதியாகும். வளமைச் சடங்குகளில் ஒன்றாகப் புனலாடுதலையும் நோக்குதல் காணப்படுகிறது. பண்டைய காலத்தில் மார்கழி நோன்பின் மற்றொரு நிகழ்வாகத் திகழ்ந்த தைந்நீராடல் குறித்து பரிபாடலில் காணலாம். அதிகாலையில் இப்புனலாட்டு நிகழ்வினை மகளிர் ஒன்றிணைந்து மேற்கொள்ள வலியுறுத்தி பறையறிவித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது

## 14.4.5 வைகைக்கு ஆராதணை

அதே போன்று வைகையைத் தெய்வமாகக் கருதி அதற்குப் படையல் அளித்தலும் பண்டைய மதுரை மக்களின் வழக்கமாக இருந்துள்ளது.

**வையை நினக்கு மடை வாய்த்தன்று' (பரி.11:8)**

என்பது மகளிர் தைந்நீராடல் நோன்பில் நதிக்குப் படைக்கும் படையலைக் குறிக்கும்.

**'தைஇய மகளிர்தம் ஆயமொடு அமர்ந்து ஆடும்**
**வையை வார் உயர் எக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல்'**
**(கலி.27 19-201)**

மகளிர் தம் சுற்றத்தாரோடு நிகழ்த்தும் தைந்நீராடல் போன்று, இப்பாவை நோன்பிலும், வண்டல் விளையாட்டு அறிந்த பாவையை, நீர்த்துறைக்கு அருகே அழைத்துச் சென்று, கொம்பு எனும் இசைக்கருவி முழங்கக் குரவைக் கூத்தாடுதலும் நிகழ்ந்திருக்கிறது.

வைகை அணையிலிருந்து நீர் திறக்கும் நாளில் அரசு அலுவலர்கள் அல்லது அமைச்சர்கள் மதகிலிருந்து வெளிப்படும் நீரில் மலர் தூவி ஆராதனை செய்யும் வழக்கம் இன்றைக்கும்

நடைமுறையிலிருக்கிறது. அதேபோன்று குறிப்பிட்ட இடங்களில், கால்வாய்களிலோ அல்லது ஆற்றின் பாலங்களிலிருந்தோ மக்கள் ஒன்று கூடி மலா் தூவி, புதுவெள்ளத்தை வரவேற்று மகிழ்கின்றனா். இது பண்டைய வழக்கத்தின் தொடா்ச்சியே.

## 14.4.6 பழங்காலக் காசுகள்

வைகையாற்றங்கரையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மனிதா்கள் வாழ்ந்துள்ளனா். ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இடைக்கற்கால மனிதா்கள் பயன்படுத்திய கருவிகள் மதுரைக்கு அருகில் உள்ள துவரிமானில் கிடைத்துள்ளன. மதுரையை ஒட்டி ஓடும் வையை ஆற்றங்கரையில் இராபா்ட் புரூஸ்புட் என்ற ஆய்வாளரால் கற்காலக் கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன. மதுரையிலும், அதன் எதிர்புறமுள்ள ஊா்ப் பகுதிகளிலும் சங்க காலத்தினைச் சாா்ந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முதுமக்கள் தாழிகளும் கருப்பு சிவப்பு மண் பானையோடுகளும் கிடைத்துள்ளன. மதுரை கி.மு.3-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அரசியல், சமயம், வணிகம் ஆகியவற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகவும் பாண்டியரின் தலைநகரமாகவும் விளங்கியமையால், மதுரையைச் சாா்ந்த வைகையாற்றில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பழங்கால நாணயங்கள் கிடைத்துள்ளன. ரோமானியரின் தங்க நாணயங்களும், சங்ககாலப் பாண்டியா் நாணயங்களும் மௌரியா் காலத்து வடநாட்டு முத்திரை குத்தப்பட்ட வெள்ளிக்காசுகளும் ஆந்திர மாநிலத்தை ஆண்ட சாதவாகனா் காசுகளும் மதுரையைச் சாா்ந்த வைகையாற்றில் கிடைத்துள்ளன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சாா்ந்த பெருவழுதி என்று பெயா். பொறித்த சங்காலப் பாண்டியா் காசுகள் வைகை ஆற்றில் கிடைத்துள்ளன. சங்ககாலம் தொட்டு அண்மைக் காலம் வரையுள்ள காசுகள் வைகையாற்றில் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் வைகைக் கரையில் கீழடி என்னும் இடத்தில் நிகழ்த்தப்பட்ட ஆய்வில் இதுவரை 5200 பொருட்கள் கிடைத்துள்ளன. அவற்றுள்பல பானைகளும் யானைத்தந்தங்களினால் ஆன சீப்புகள், தாயக் கட்டைகள் மற்றும் சதுரங்கக் காய்கள் ஆபரணங்கள் போன்றவை. அவற்றுள் மிக முக்கியமானது வைகையின் இறுதியில் அமைந்துள்ள அழகா் குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பானையில் கிரேக்கக் கப்பலின் மாதிரி வரையப் பட்டிருப்பதே.

ஒரு கப்பலின் மாதிரியை வரைவதற்கு அவா்கள் அந்தக் கப்பலினை க்கண்டிப்பாக ப்பாா்த்து இருக்க வேண்டும். எனவே அங்கு ஒரு துறைமுகம் இருந்ததற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இதற்குச் சான்றாக ஐரோப்பிய வரலாற்று ஆய்வாளா் தாலமி தனது குறிப்பில் அருகுரு துறைமுகம் எனக் குறிப்பிட்டுள்ளாா் அதுவே அருகா்குளம் எனப்பட்டது பின்னாளில் அதுவே திரிந்து அழகா் குளம்

எனப் பெயர் பெற்றது. வைகைக்கரை நாகரிகமானது சிந்து சமவெளி நாகரிகத்தை விடத் தொன்மையானதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்



## 14.5 காவிரிக் கரை நாகரிகம்

வரலாற்றுச் சிறப்புமிக்க காவிரியாறு **'தென்னாட்டுக் கங்கை'** எனப் போற்றப்படுவதாகும். இது கருநாடக மாநிலத்தில் குடகு நாட்டில் சைய மலையில் தோன்றுகிறது. இந்த மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகும். கருநாடக மாநிலத்தின் தென்பகுதியில் பாய்ந்து அதனை வளமாக்கும் காவிரி அங்குக் கட்டப்பட்டுள்ள கண்ணம்பாடி எனும் அணையைத் தாண்டி சிவ சமுத்திரம் அருவியாகக் காட்சியளித்துப் பின்னர், தமிழ்நாட்டைத் தொடுகிறது. கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு எல்லையாக ஓடித் (தகடூர்) தருமபுரி மாவட்டத்தையடைந்து, தருமபுரியிலிருந்து 48 கி.மீ. தொலைவில் தோராயமாக 22 மீட்டர் உயரத்திலிருந்து ஓர் அருவியாக விழுகிறது. இந்த அருவிக்கு **'ஓகேனக்கல் அருவி'** என்பது பெயர். பின்னர், காவிரியாறு சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரையடையும்போது அதன் குறுக்கே மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணைக்கட்டிலிருந்துதான் தமிழ்நாட்டிற்கு வேண்டிய மின்சாரம் உருவாக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்திலிருந்து காவிரி, திருச்சி மாவட்டத்தை அடையும்முன் இதனுடன் பவானி, நொய்யல், திருமணிமுத்தாறு ஆகிய துணையாறுகள் கலக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் புகுந்தவுடன் ஆன்பொருநை (அமராவதி) எனும் துணையாறு கலக்கிறது. தென்கிழக்கில் காவிரி என்றும், வடகிழக்கில் கொள்ளிடம் என்றும் இ∴து அறியப்படுகிறது. இவற்றின் இடையிட்ட தீவில்தான் **'திருவரங்கம் (ஸ்ரீரங்கம்)** எனும் பெயர் பெற்ற வைணவத் தலம் உள்ளது.

கொள்ளிடத்தின் குறுக்கே கட்டப்பட்ட அணைக்கு **மேலணை** என்று பெயர். காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்குக் கல்லணை என்று பெயர். இதனைக் கரிகாற்சோழன் கட்டினான் என்பது வரலாறு. இக் கல்லணையைத் தாண்டியதும் காவிரி பல சிற்றாறுகளாய்ப் பிரிகிறது. அதில் முதன்மையானது வெண்ணாறு, அதிலிருந்து பிரிவது குடமுருட்டியாறு, வெட்டாறு, அரிசிலாறு, வீரசோமன் ஆறு, திருமலைராசன் ஆறு ஆகியவை ஆகும். இவை யாவும் தஞ்சை மாவட்டத்தில் பாய்கின்றன. தரங்கம்பாடி எனும் ஊருக்கருகில் காவிரி கடலுடன் கலக்கிறது. தமிழ்நாட்டில் ஓடும் ஆறுகளில் காவிரியாறு மிகவும் நீளமானது. இதன் நீளம் தோராயமாக 720 கி.மீ. ஆகும். இது கடலுடன் கலக்குமிடத்தில் சோழர்களின் பண்டைய கோநகரான பூம்புகார் அமைந்திருந்தது. இன்று அகழ்வாய்வின் பயனாக இப் பட்டினத்தின் அமைப்பும் அது கடல் வழியாக உரோமாபுரி முதலிய மேலை நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பும் விளக்கப்பட்டுள்ளன. பூம்புகார்

மட்டுமன்றி வளமிக்க நகரங்கள் பலவும் இவ்வாற்றின் கரையில் இருந்தன என்பதை அறிய முடிகிறது.



## 14.5.1 இலக்கியங்களில் காவிரி

குடமலையில் பிறந்த காவிரி குணக்கு நோக்கி விரைந்து, பல் வேறு இடங்களில் வளைந்து, நெளிந்து, விரிந்து பல கிளைகளாகப் பிரிந்து, குறைந்து, இறுதியாகக் கடலில் கலக்கின்றது. இக்காவிரி கிழக்கு நோக்கிப் பாய்ந்து செல்லும் பான்மையினை,

**“சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகும்**

**அந்தண் காவிரி”** (அகநா.76:11-12) என்று அகநானூறும்,

**“செங்குணக் கொழுகும் கலுழி மலர்நிறைக்**

**காவிரி” (பதிற்று.50:5-6)** என்று பதிற்றுப்பத்தும் குறிக்கின்றன. செங்குணக்கு ஒழுகும் என்பதற்கு நேர்கிழக்கே ஓடும் என்று பொருளமைகிறது. எனவே, மேற்கு மலையில் பிறந்து கிழக்குக் கடல் நோக்கிப் பாயும் ஆறு காவிரியாறு என்று சங்கப் புலவர்கள் காவிரியின் போக்கைப் பற்றிச் சரியாகக் குறித்துள்ளமையை அறிகிறோம்.

## 14.5.2 காவிரியும் சோழநாடும்

காவிரி பல நாடுகளின் வழியாகப் பாய்ந்து வந்தாலும் சோழ நாடே அதனால் முழு நன்மையைப் பெறுவதால் ‘காவிரி சோழ நாட்டுக்கே தனி உரிமை உடையது’’ என்று புலவர் காவிரியாற்றினைப் போற்றினார். ‘‘இக்காவிரி குடமலைப் பிறந்து சேரநாட்டு எல்லைப்பகுதியுள் பாய்ந்து வருதல் பற்றிச் சேரற்கு உரியதாயினும் அதன் மறு பாகத்தையுடைய சோழர்க்கே அஃது உரிமையாக வழங்கப்பட்டது என்ற கருத்தும் உன்னற்பாலது.

‘‘கோடை வெப்பத்தின் காரணமாகக் கஞ்சங்குல்லை தீய்ந்து போகவும், மரங்களின் கொம்புகளைத் தீயுண்ணவும், மலைகளில் அருவிகள் இல்லையாகவும், முகில்கள் கடல்நீரை முகக்க மறப்பினும் மழை வளமில்லாது பெரிது பஞ்சமே ஏற்படினும், காவிரி தன் வளம் சுரத்தலில் தவறாது. காவிரியின் வளத்தால் சோழநாட்டில் வயல்வளம் சிறந்துள்ளது: உழவர்கள் செம்மையாகத் தங்கள் கடமைகளை முடித்து நெல்லை மலையெனக் குவிக்கிறார்கள்: அவர்தம் இல்லங்களில் உள்ள நெற்குதிர்களில் நெல் நிரம்பி உள்ளன. இவ்வாறு சோழநாட்டில் காவிரியின் அருளால் ஒரு வேலி நிலம் ஆயிரம் கலமாக விளைகிறது

என்று முடத்தாமக் கண்ணியார் தம் பாடலுள் காவிரியின் கொடையால் சோழநாடு பெற்ற வளத்தைப் பாராட்டுகின்றார். கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாராட்டும்போது.

**குறிப்பு**

**"வசையில் புகழ் வயங்குவெண்மீன்**
**திசைதிரிந்து தெற்கேகினும்**
**தற்பாடிய தளியுணவிற்**
**புட்டேம்பப் புயன்மாறி**
**வான்பொய்ப்பினும் தான் பொய்யா**
**மலைத்தலைய கடற்காவிரி" (பட்டின.1-6)**

என்று பட்டினப்பாலை வாயிலாகக் காவிரியின் பொய்யா வளத்தினையும் போற்றுகின்றார். பட்டினப்பாலையில் காவிரியின் பயன்பெற்ற மருத நிலத்தின் வளம் பலவாறு விரித்துரைக்கப்படுகிறது. காவிரியால் எழிலுற்ற தோட்டங்களும், பூம்பொழில்களும், பொய்கைகளும், ஏரிகளும் தோட்டங்களும், ஏரிகளும் அப்பாடலில் குறிக்கப்படுகின்றன.

காவிரி, அகநானூறு, புறநானூறு முதலான பல இலக்கியங்களில் புலவர்களால் பல்வேறு நிலைகளில் சுட்டிக்காட்டப்பெறுகிறது.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் காவிரியைப் பற்றிக் குறிப்பிட்டு, அதன் பெருமையைப் புகழ்ந்து பேசுகின்றார். இக்குறிப்புகளனைத்தும் காவிரியின் பெருமையை மட்டுமன்றிக் காவிரியின் ஓட்டத்தை நிலவியல் அடிப்படையில் தெளிவுறுத்துவனவாகவும் அமைவதைக் காணமுடிகிறது.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் 'ப∴றுளியாற்று மணலினும் பலகாலம் வாழ்க' என வாழ்த்துகிறார் நெட்டிமையார். அதுபோலவே சோழன் மாவளத்தானைப்பாடும் தாமற் பல்கண்ணனார் "நின் ஆயுள் காவிரி எக்கரிட்ட மணலினும் பலகாலம் நீடிக்கட்டும்" என வாழ்த்துகிறார். இதனால், புலவர்கள் மன்னனை நினைத்தபோதெல்லாம் அவன் மண்ணையும் நினைத்தார்கள்; அம்மண்ணை வளப்படுத்தும். ஆறுகளையும் போற்றினார்கள் என்பது புலப்படுகிறது. நாடு நலம் பெறக் காரணமான ஆறுகளைப் போற்றுவதில், பாராட்டிப் பாடுவதில் புலவர் பெருமக்கள் மனநிறைவு கொண்டார்கள் என்ற உண்மை வெளிப்படுகிறது.

## 14.5.3 காவிரியில் கல்லணை

தமிழக நிலவியல் அமைப்பு வரலாற்றில் பெரும் வியப்பையும் நிறைவினையும் அளிக்கவல்லது இக் கல்லணையாகும். பரந்து விரிந்து விரைந்து செல்லும் ஒரு பேராற்றினை அணையிட்டுத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால் அவ் ஆறு பற்றியும், ஆற்றின் போக்கினையும், அணை கட்டத்தக்க இடம் பற்றியும் மிக நுண்மையாக ஆய்ந்து அறிந்த பின்னரே செயலாற்றி இருக்கவேண்டும். சோழன் கரிகால் பெருவளத்தான் இச்செயலைச் செய்து முடித்தான் என்று அறிகின்றபோது. அவனது நாட்டு நலம் பற்றிய ஆர்வம் புலப் படுகிறது. அவனைப் பற்றிப் பட்டினப்பாலையில்.

**“காடுகொன்று நாடாக்கிக்**

**குளந்தொட்டு வளம்பெருக்கி”**

என்றமைகின்ற அடிகள் அவன் காடு திருத்தி நாடாக்கியதையும் குளம் முதலிய நீர்நிலைகளை அமைத்ததையும் பற்றிக் குறிப்பிடு வதைக் காணலாம்.

கங்கைக் கால்வாய்த் திட்டத்தின் அதிகாரியான பெயிண்ட் சுமித் (Baind Smith) என்பவர் 1853 ஆம் ஆண்டு கல்லணைக்குச் சென்று பார்த்துவிட்டு எழுதிய அறிக்கையில் நவீன பொறியியல் சாதனங்கள் கிடைக்கப்பெறாத காலத்தில் இத்தகைய அரிய சாதனை நிகழ்ந்திருப்பதாகச் சுட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 14.6 பொருநை யாறு

நெல்லை மாவட்டத்தில் தோன்றி வளம் கொழிக்கும் தாமிரபரணி என்றழைக்கப்படும் பெருநையாற்று நாகரிகமே குமரிக் கண்டத்தின் முதல் நாகரிகமாகக் கருதப் பெறுகிறது

“குளிர்நீர்ப் பொருநை சுழி பலவாய்” - சடகோபர் அந்தாதியில் போற்றப்பெறும் பொருநை ஆறு ஊற்றெடுத்த மாவட்டத்திலேயே கடலில் கலப்பதால் ‘தட்சிண கங்கை’ என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது தாமிரபரணி. இந்நதி பாபநாசத்திலிருந்து புன்னைக்காயல் வரை 130 கி.மீ. நீளம் பாய்ந்து வருகிறது. நெல்லைச்சீமையில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவக்காற்று மழைதான் இந்நதியின் நீராதாரமாக அமைந்துள்ளது.

பொருநை நதியில் கல்லிடைக்குறிச்சிக்கு அருகில் உள்ள கன்னடியன் அணைக்கட்டை அடுத்து மணிமுத்தாறு வந்து சேருகிறது.

திருப்புடைமருதூரில் வராக நதியும், கடனாநதியும் இதில் கலக்கின்றன. பச்சையாறு முதலிய சிற்றாறுகளும் இதில் சேருகின்றன. இதன் துணை நதிகள் மணிமுத்தாறு, கருணை, வரநதி, சிற்றாறு ஆகும். பொதிகையிலிருந்து புறப்பட்டு ஐந்து தலைகளாகப் பிரிந்துஇ ஐந்தலைப் பொதிகையாகப் பிரிந்து வளம் சேர்க்கிறது பாய்ந்து வருகிறது. பொருநையாறு, மலையில் மட்டும் 26 கிலோமீட்டர் பயணம் செய்யும் ஆறு. 121 கிலோமீட்டர் என்று மொத்த நீளத்தில் 1,750 ச.கற்கள் பரப்பை வளப்படுத்திப் பாய்கிறது.

பொதியம், தென் பொதியம் என்றெல்லாம் போற்றப்படும் பொதிகை மலையில்தான் தமிழ் பிறந்தது என்பதனை ‘வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!’ எனத் தமிழன்னை போற்றப்படுகிறாள். அந்தப் பொதிய மலையில் தோன்றிக் கடலொடுகலக்கும் ‘தண்பொருநை ஆறு பற்றிய நாகரிகமே முதல் நாகரிகம்’ என்கிறார் நுண்கலை அறிஞர் சாத்தான்குளம் அ.இராகவன்.

உலகின் தொன்மையான நாகரிகங்கள் எனப்படும் சிந்துவெளி நாகரிகம், சுமேரிய நாகரிகம், எகிப்து நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், ஆசிரிய நாகரிகம், போனிசிய நாகரிகம், சீன நாகரிகம், ஜெர்மன் நாகரிகம், கிரேக்க நாகரிகம், உரோம நாகரிகம் என்றெல்லாம் போற்றப்படும் பதினைந்து நாகரிகங்களுள் சிந்துவெளி நாகரிகம் ஏறத்தாழ கி.மு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபோற்றினர். குமரிக் கண்டத்திலிருந்து முகிழ்த்த முதல் நாகரிகம். அதுவே பொருநை நாகரிகம் ஆகும். ஆதிச்சநல்லூர் இரும்புப் பயன்பாடு காலத்தில் தோன்றிய தென்னாட்டு நாகரிகம் என்கிறார் உ.வில்லியம் மெய்யர். ’தென்பாண்டி நாட்டின் செல்வி’, ‘பொதிகையின் குழந்தை’, ‘பொன் நிறத்துப்புனல் பெருகும் பொருநை’, ‘பாணதீர்த்தம்’என்று பலவாறாக அழைக்கப்படும் தாமிரபரணி, சொரிமுத்து அய்யனார் முத்துப்பட்டன் கோயில்களைக் கடந்து வருகின்றது.

## 14.6.1 இலக்கியங்களின் பொருநை

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரபருணியைத் தமிழ்நூல்கள் ‘தண்பொருநை’ என்ற பெயரால் வழங்குகின்றன பொருந்தம் என்பதே ‘பொருநை’ என மருவியது. பொருந்தம் என்பது பொருந்துதல் என்னும் பொருளாக இருக்கலாம் என்கிறது கலைக்களஞ்சியம். மேலும் “தாமிரபருணி மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த பொதிகை என்னும் அகத்திய மலையில் தோன்றி மன்னார்குடாக் கடலில் கலக்கிறது. இந்த ஆற்றின் நீளம் 75 மைல்” என்கிறது கலைக்களஞ்சியம்.

கொற்கை தாமிரபரணியின் வாயிலில் இருந்தது. கடல் கொள்வதற்கு முன் பாண்டியர் ஆட்சி கொற்கையில் இருந்தது என்பர் வித்தியானந்தம் அவர்கள்.



**குறிப்பு**

கொற்கை "தமிழ் பிறந்த பொதிகையில் உதித்து நாட்டை நலப்படுத்திய நல்லாறு. பொருநை, கடலுடன் கலக்கும் இடத்தில், கலமும் நலமும், வங்கமும் துங்கமும் துலங்க வெற்றிக்கொடி பட்டொளி வீசிப் பறந்த பட்டினமாகும்" என்று அ.இராகவன் அவர்கள் குறிப்பிடுவர். மேலும் அவர் "தண்பொருநை வடமொழியில் தாமிரபரணி என்றாயிற்று. இது கிழக்கு நோக்கி வெகுதூரம் சென்றது. இலங்கையை வளப்படுத்தியது. இதனால் இலங்கைக்குத் 'தம்பிரபோன்' என்ற பெயர் எழுந்தது. மெகசுதனீசு இலங்கையைத் தாம்பிரபனே' என்று குறிப்பிடுகின்றார். மேலும் இலங்கை இந்தியாவிலுள்ள ஒரு ஆற்றினால் பிரிக்கப்பட்டுள்ளது, என்றும் மெகசுதனீசு கூறியுள்ளார்" என்று விளக்கம் கூறி, தாமிரபரணியும் பொருநையும் ஒன்று என நிறுவுகிறார் இராகவன் அவர்கள்.

சங்க இலக்கியத்துள் பொருநை அகநானூற்றிலும் புறநானூற்றிலும் மட்டுமே குறிக்கப்பெறுகிறது. அடுத்துச் சிலப்பதிகாரம் பொருநை பற்றிய குறிப்புகளைத் தருகிறது. புறநானூற்றில்,

**"தண்பொருநைப் புனல்பாயும்**
**விண்பொருபுகழ் விறல்வஞ்சி"(புறம்.11:5-6)**

என்று வரும் அடிகளில் பொருநை ஆற்றங்கரையில் வஞ்சி மாநகர் காட்டப்படுகிறது. வேறொரு பாடலில்,

**"புல்லிலை வஞ்சிப் புறமதி லலைக்கும்**
**கல்லென் பொருநை மணலினும்"(புறம்.387:33-34)**

என்று கூறுகிறபோதும் பொருநையாற்றின் கரையில் வஞ்சியே சுட்டப்பெறுகிறது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் கருவூர் முற்றுகையைப் பற்றிப் பாடும் ஆலத்தூர் கிழார் சோழருடைய படைவீரர்கள் சேரனின் காவல்மரங்களைக் குளிர்ந்த ஆன்பொருநையின் வெண்மணல் சிதறுமாறு கோடலி கொண்டு வெட்டினார்கள்" என்று பாடுகிறார். ஈண்டும் சேரர் தலைநகரே பொருநையாற்றங்கரையில் அமைந்திருந்தமை குறிக்கப்பெறுகிறது.

தாமிரபரணி ஆறானது தண்பொருநை என்று பெரிய புராணத்தாலும். 'தண்பொருநல்' 'வண்பொருநல்' என்று திருவாய்மொழியாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்ப இராமாயணம் 'பொன் திணிந்த புனல்பெருகும் ஆறு' என்றும்இ திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் 'பொய்க்காத வளமை தரும்ஆறு'என்றும் கூறுகின்றன. 'தண்பொருத்தம்'

என்று பிங்கல நிகண்டும், ‘தண்பொருநை’யென்று நச்சினார்க்கினியமும். ‘பெண் ஆறு’ என்று புலவர் புராணமும் கூறுகின்றன. ‘பொதியமலைப் பெற்றெடுத்த பொற்கொடி’என்று திருவிளையாடற் புராணம் விளக்குவது சிறப்பிற்குரியதாகும்.

குறிப்பு

வாலிமீகி இராமாயணத்தில் தாமிரபரணியை மகாநதி என்கிறார். வேதவியாசரும் பொருநையின் புனிதத்தை எடுத்துச் சொல்லியுள்ளார். தாமிரபரணியின் 149 புனித குளியல் கட்டங்கள் இன்றைக்கும் இருக்கின்றன. தாமிரபரணிக் கரையில் உள்ள குறுக்குத்துறை சுப்பிரமணியர் கோயில் பாறையில்தான், திருச்செந்தூரில் உள்ள சுப்பிரமணிய சுவாமிகளின் விக்கிரகம் படைக்கப்பட்டது என்று வரலாறுகள் சொல்கின்றன. எல்லா ஆறுகளும் கடலில் மீன்களையும், தவளைகளையும் கொண்டு சேர்க்கும். ஆனால், பொருநையாறு மணிகளையும், முத்துக்களையும் கொண்டு சேர்க்கிறது.

காளிதாசரின் ரகுவம்சத்தில். ‘தாமிரபரணி மேதயை முக்தாசாரம் மகோததே’ எனப்பாடப்பட்டுள்ளது.

தண்பொருநைக் கரையில் தான் தமிழுக்கு இலக்கணம் படைத்த அகத்தியரின் மாணாக்கர்களான அதங்கோட்டாசான், தொல்காப்பியர். செம்பூட்சேய், காக்கைப்பாடினியார், நத்தத்தனார், பனம்பாரனார், அவிநயனார், வாய்ப்பியனார், வாமனார், வையாடிகளார் போன்ற தமிழ்ப் புலவர்கள் ஆசான்கள் வாழ்ந்துள்ளார்கள். சங்ககாலப் புலவர்மாறோக்கத்து நப்பசலையார் மாறமங்கலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும். மாறமங்கலம் பின்னர் மாறோக்கம் என்றாகியிருக்கலாம். கொற்கையின் பக்கத்திலுள்ள பன்னம்பரையில்தான் பனம்பாரனார் வாழ்ந்திருக்கலாம் எனஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## 14.6.2 பாரதியும் தாமிபரணியும்

வரகவி பாரதி பொருநை பற்றி “எத்தனை வருஷங்களாக எத்தனை யுகங்களாக இந்தக் குன்றங்களின் மீதும் சங்கீதக்காரியாகிய தாமிரபரணியின் மீதும் இங்ஙனம் அற்புதமான சூர்யோதயம் நிகழ்ச்சி நடை பெற்று வருகிறதோ !எத்தனை யுகங்களாக இந்தத் தாமிரபரணி இங்கே இடைவிடாமல், ஓயாமல், தீராமல், ஒரே ரசமான பாட்டு பாடிக்கொண்டிருக்கிறாளோ!

தண்ணீரில் காலை வைத்தால் காலைச் சுற்றி மீன்கள்! பாபநாசத்து மீன்கள் அழகுக்கும். தைரியத்துக்கும் கீர்த்தி பெற்றவை. அவை மனிதருக்கு அஞ்சுவதில்லை. அவற்றை இங்கு மீன் வலைஞனேனும் பிறரேனும் பிடிக்கக் கூடாதென்ற சம்பிரதாயமொன்று இருந்து வருகிறது. இங்கே மீன் பிடித்ததாகவும் அவனுக்கு க்கண் தெரியாமல் போய்விட்டதாகவும் ஒருகட்டுக்கதை வழங்கி வருகிறது.

இவற்றுள்ளே பெரும்பான்மையானவை பொன்னிற முடையவை. இலேசான தங்கக் கம்பியியில் ஒரு சிறு வளையம் பண்ணி அதனிடையே நீல ரத்னம் பதித்தது போல் இவற்றின் கண்கள் மிளிர்கின்றன. சோறுபோடத் தொடங்கினால் நீரோட்டத்தை எதிர்த்து இந்த மீன்கள் அணியணியாக வந்து நிற்பதைப் பார்க்கும் போது. எதிரியின் குண்டுகளைக் கருதாமல் அணி வகுத்துநிற்கும் காலாட் படைகளைப் போன்ற தோற்றமுண்டாகின்றது.

பாபநாசத்து ஜலம் மிகவும் இன்பமானது. வாய்க்குத் தேன் போன்ற ருசியுடையது. பல்லாயிரம் கிளைகளாகத் தோன்றி, வரும் வழியிலேயே எண்ணற்ற ஔஷாதிகளைத் தீண்டி வருவதால், இந்த ஜலத்தில் ஸ்நானபானங்கள் செய்வதினின்றும் எல்லாவித நோய்களும் நீங்கிப் போய்விடுமென்று சொல்கிறார்கள். நான்கு புறமும் ஜலமேடை, நடுவே ஒருபாறைத் திட்டின் மீது பளிங்கு போல் வளவளப்பான கல்லைக் கழுவி அதன் மேல்தோசை அல்லது அன்னத்தை வைத்துக்கொண்டு தின்றால் அது வாய்க்கு அமிர்தம்போலிருக்கிறது.”

கல்கி ரா.கிரு‘ணமூர்த்தி அவர்கள் இந்நதியைப் பற்றி “திருநெல்வேலி மக்களின் முக்கால்வாசிப் பேரைத் தினம் அதிகாலையில் தாமிபரணி நதியில் குளித்துக் கொண்டிருக்கக் காணலாம். பொழுது விடிந்து சூரியன் உதயமாவதே காலையில் தாமிரபரணியில் ஸ்நானம் செய்வதற்குத்தான் என்பது திருநெல்வேலியாரின் அசையா நம்பிக்கை” என்று குறிப்பிட்டுள்ளார்.

“திரைபடு பொருநை நித்தம் செவிலி போல் வளர்க்கும்’ என்று பரஞ்சோதி முனிவர் கூறியது போல நெற்பயிரைச் செழிக்கச் செய்வதோடு இன்று வரை... தமிழ் அறிஞர்களை அளித்துக் கல்விப் பயிரை வளர்த்து வற்றாத ஜீவநதியாக மக்களின் உயிரையும் உள்ளத்தையும் துளிர்க்கச்செய்து வருகிறது.” என்பர் - அ.ராகவன்.

வால்மீகி இராமாயணத்தில், ‘ஆற்றல்மிக்க அகத்திய முனிவரது ஆன்மாவின் கருணையால் நீங்கள் முதலைகள் நிறைந்த பெரிய ஆறாம் தாமிரபரணியைக் கடப்பீர்களாக’ என்று இந்நதி குறிக்கப்பட்டுள்ளது. 1915-ம் ஆண்டு நிலவரப்படி அப்போதும் கன்னடியன்கால்வாய் அணைக்கட்டின்மேற்பகுதியிலே முதலைகள் இருந்ததாக ஆங்கில ஆட்சியாளர்கள் கூறியுள்ளமை இக்கருத்தை மெய்ப்பிக்கும். காதலனுடன் விளையாடும் ஒரு நங்கை போல் தனது தெளிந்த நீரோடும். சின்னஞ்சிறிய அழகிய தீவுகளோடும் கவர்ச்சியூட்டும் சந்தனக்காடுகளினூடே மறைந்து சென்று கடலாடுகிறாள். தாமிரபரணி ஆறு, சிவப்புச்சந்தன மரக் காடுகளின் ஊடே பாய்ந்து ஓடுகிறது என்ற கருத்தும் நிலவுகிறது. பொருநை ஆற்றின் கரையில் உள்ள செப்பறையைச் சேர்ந்ததுதான் ராஜவல்லிபுரம். தமிழ்கூறும் நல்லுலகிற்கு எத்தனையோ அறிஞர் பெருமக்களை ஈன்ற ஊர்.

வடநாட்டில் திரிவேணி சங்கமத்திற்கு நிகராகத் தென்னாட்டில் முக்கூடலாகும். பொருநையும், குற்றாலத்திலிருந்து வரும் சிற்றாறும், கழுகுமலையின் அருகே உள்ள ஓர் ஊற்றிலிருந்து எழும் ஓடையாகிய கோதண்டராம நதியும் முக்கூடலில் கலக்கின்றன. ஸ்ரீவல்லபன் முக்கூடலில் ஒரு பெரிய ஏரியைவெட்டினான். அதை ஸ்ரீ வல்லவப் பேரேரி என அழைத்தனர். நாளடைவில் அது பேரேரிஎன்று அழைக்கப்பட்டு, சீவலப்பேரியாகச் சிதைந்தது.

குறிப்பு

## 14:7 தொகுத்துக் காண்போம்

- ஆற்றங்கரை நாகரிகம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- வைகைக் கரை நாகரிகம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- காவிரி ஆறு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- பொருநை நதி நாகரிகம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்

## 14:8 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. ஆற்றங்கரை நாகரிகம் என்றால் என்ன?
2. வைகை நதி நாகரிகத்தைப் பற்றி விவரிக்க.
3. காவிரி யாற்றின் சிறப்பினை விளக்குக.
4. பொருநை நதி நாகரிகம் பற்றி விளக்குக.

## 14.9 மேலும் அறிந்துகொள்ள

சு.வெங்கடேசன் - வைகை நதி நாகரிகம்

அ.இராமசாமி - தமிழ்நாட்டு வரலாறு

# அழகப்பா பல்கலைக்கழகம்

## தொலைதூரக் கல்வி இயக்ககம்

**தமிழக வரலாறு – 31943**

**(மாதிரி வினாத்தாள்)**

குறிப்பு

காலம்: 3மணி மதிப்பெண்: 75

**பகுதி – அ**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க (10X2 =20)**

1. தொல்காப்பியம் குறிப்பிடும் தமிழக எல்லைகள் யாவை?

2. வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுப்புளைச் சுட்டுக.

3. தமிழகத்துக்கு வருகை தந்த அயல்நாட்டுப் பயணிகள் யாவா்?

4. அரசனோடு தொடா்புடைய அவைகள் யாவை?

5. தமிழகத்தில் உரோமானியர் குடியிருப்புகள் அமைந்துள்ள இடம் யாது?

6. திருநாவுக்கரசரின் இயற்பெயர் யாது?

7. திறந்த வெளிக் கலைக் கூடம் என்று அழைக்கப்படும் இடம் யாது?

8. திருத்தொண்டத் தொகை பாடியவர் யார்?

9. இராசராசசோழன் முடிசூடிய ஆண்டு யாது?

10. தமிழகத்தில் உப்புச்சத்யாகிரகம் நடைபெற்ற இடத்தைச் சுட்டுக.

**பகுதி – ஆ**

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடைதருக (5X5=25)**

1. அ. தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் யாவை?

**அல்லது**

ஆ. பழங்கற்காலம் குறித்து நீவிா் அறிவன யாவை?

2. அ. தமிழக வரலாற்றில் களப்பிரர் பெறுமிடம் குறித்து விளக்குக

**அல்லது**

ஆ. பல்லவர் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

3. அ. முதல் இராசராசனின் சிறப்பினை விவரிக்க.

குறிப்பு

**அல்லது**

ஆ. வெளிநாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாடு பற்றியுரைக்க.

4. அ. பாளையப்பட்டு ஆட்சி முறை குறித்து விளக்குக.

**அல்லது**

ஆ. மருது பாண்டியர்களின் விடுதலைப் போராட்டம் குறித்து விளக்குக.

5. அ. வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம் பற்றி எழுதுக.

**அல்லது**

ஆ. தமிழர்களின் அறவாழ்வியல் பற்றி விளக்குக.

**பகுதி - இ**

**எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க (3X10=30)**

1. தமிழகத்தின் தொன்மை பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. சங்க காலக் கல்வி நிலை குறித்து விளக்குக.
3. தமிழ்ப்பண்பாட்டில் சமணத்தின் பங்களிப்பு குறித்து விளக்குக.
4. தமிழர்களின் இசைக்கலை மரபு குறித்துக் கட்டுரைக்க.
5. வைகை நதி நாகரிகம் பற்றி ஒரு கட்டுரை வரைக.